# தமிழ் அகராதிக் கலை

சுந்தர சண்முகனார்

TNSDA
04747

# தமிழ் அகராதிக் கலை

## [ Tamil Lexicography ]

4 JUN 1975
GOVT. OF MADRAS

ஆசிரியர்:
**புலவர் சுந்தர சண்முகனார்**
அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கூடம்,
புதுச்சேரி.

**புதுவைப்**
**பைந்தமிழ்ப் பதிப்பக வெளியீடு**
**1965**

தமிழ் அகராதிக் கலை — முதற் பதிப்பு.
ஆசிரியரின் நாற்பத்து நான்காவது வெளியீடு.
1965

4747
4 JUN 1975

வெளியீடு — உரிமை :
புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்
61-C, வைசியர் தெரு, புதுச்சேரி–1.
[ Pondicherry–1. South India ]

494.81103
சாத்

விலை : ரூ. 8

அமுர்தா பிரிண்டர்ஸ், சென்னை-24.

# அணிந்துரை

உயர்திரு. பேராசிரியர். டாக்டர். மு. வரதராசனர்,
M. A., M, O. L., Ph. D. அவர்கள்,
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை.

தமிழ் அகராதிகளின் வரலாறு பற்றிய நூல் இன்றியமையாதது ஆகும். தமிழில் அகராதிகள் பல தோன்றின; அவற்றுள் மறைந்தவை சில; இருப்பவை சில. எதையுமே செய்யுள் வடிவத்தில் எழுதும் வழக்கம் இருந்த காலத்தில், அகராதிகளும் அவ்வடிவத்தில் தோன்றி வளர்ந்தன; நிகண்டுகள் எனப் பெயர் பெற்று நிலவின. அக்காலத்து அவை மனப்பாடம் செய்து நினைவில் வைத்துப் பயன்படுத்தற்கு உரிய வகையில் அமைந்தன. இன்று நூல்களை வாங்கி நூலகந்தோறும் வீடுதோறும் அடுக்கி வைத்துத் தேவையானபோது பயன்படுத்தும் வகையில் அமைந்து வருகின்றன.

'தமிழ் அகராதிக் கலை' என்னும் இவ்வாராய்ச்சி நூலில், திரு. சுந்தர சண்முகனுர் அவர்கள், அகராதிகளின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி விரிவாக ஆராய்ந்து பற்பல குறிப்புக்களை உதவியுள்ளார். அவர்தம் ஆராய்ச்சி தொல்காப்பியத்திலிருந்து தொடங்குகிறது; சேந்தன் திவாகரம், சூடாமணி நிகண்டு, பிங்கல நிகண்டு முதலிய நிகண்டுகள் பற்றி விரிவாக அமைகிறது; பிற்

காலத்துக் கைலாச நிகண்டு, ஆசிரிய நிகண்டு, தொகை நிகண்டு, பொதிகை நிகண்டு, கந்த சுவாமியம் முதலியன பற்றிக் குறிப்புக்கள் தருகிறது.

நிகண்டுகள் எவ்வெவ்வாறு அமைந்துள்ளன என்பன பற்றி இந்நூலில் போதிய விளக்கங்கள் உள்ளன. அவற்றின் பாகுபாடுகளும் விளக்கப் பட்டுள்ளன. அவற்றிற் கிடையே, ஆங்காங்குச் சில வற்றின் கால ஆராய்ச்சிகளும் காணப்படுகின்றன. முன்னோர்களின் காலத்து ஆண்டுத் தொடக்கம் ஆவணித் திங்களாக இருந்ததை, கழகம் என்னும் சொல்லின் பழம் பொருள் முதலியன பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும் உள்ளன.

மருத்துவத் துறையில் தோன்றிய அகராதிகள் தனியே எடுத்துரைக்கப்பட்டுள்ளன. நிகண்டு என்னும் சொல்லின் பொருள் பற்றிய குறிப்புக்கள் சிந்தனையைத் தூண்டுவன. ககராதிப் பேர்த் தொகுதி, தகராதிப் பேர்த் தொகுதி என்னும் பழைய தலைப்புக் களின் விளக்கம், அகராதி என்னும் சொல்லின் பொருளைத் தெளிவுபடுத்துகிறது.

இந்நூலாசிரியர், புலவர் திரு. சுந்தர சண்முகனாரின் உழைப்பும் ஆராய்ச்சித் திறனும் பாராட்டுக்கு உரியன. தமிழகம் இவ் வரிய நூலை வரவேற்றுப் போற்றுவதாக.

மு. வரதராசன்

## நூன்முகம்

### முதல் பெரிய தொகுப்பு

அகராதிக் கலை ஒரு தனித் துறையாக மேலை மொழிகளில் இதுபோழ்து மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது. தமிழில் தொன்று தொட்டுப் பல்வகை அகராதி நூற்கள் தோன்றினும், எல்லாவற்றையும் பற்றிய விவரங்களைத் தன்னுள் அடக்கிய ஒரு தொகுப்பு நூல் இதுகாறும் தோன்றிலது. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon), கலைக் களஞ்சியம், உயர்திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களின் சில ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆகியவற்றில், ஒரு சில அகராதித் துறை நூற்களைப் பற்றிய விவரங்களைச் சுருங்கிய அளவில் ஒருசேரக் காணலாம். எனக்குத் தெரிந்தவரைக்கும், தமிழ் மொழி தோன்றிய நாள் தொட்டு இந்நாள்வரை தமிழில் எழுதப் பெற்றுக் கிடைத்துள்ள அகராதித் துறை நூற்கள் அனைத்தையும் பற்றிய விவரங்களை இயன்ற அளவு விரிவாகத் தரும் முதல் பெரிய ஆராய்ச்சித் தொகுப்பு நூல் 'தமிழ் அகராதிக் கலை' என்னும் இந்த வெளியீடுதான் என்று கருதுகிறேன். இந்நூல் எழுந்த வரலாறு யானே எதிர்பாராதது :—

### நூல் வரலாறு

புதுச்சேரி பிரெஞ்சு கலைக் கழகத்தின் (French Institute) தமிழ்த் துறைத் தலைவரும் புதுவைக் கல்விக் கழகத்தின் தலைவருமாகிய உயர்திரு. ரா. தேசிகப் பிள்ளை, பி.ஏ., பி.எல். அவர்கள் மூன்றாண்டுகட்குமுன் ஒரு நாள் என்னிடம் வந்து, கல்விக் கழகத்தில் 'நிகண்டு நூற்கள்' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்ற வேண்டும் எனக் கோரினார்கள். பேசுவதாக இசைவு தந்தேன் நான். சொற்பொழிவிற்குப் போதுமான அளவு ஒரு திங்கள் பொழுது இருந்தது.

'நிகண்டு நூற்கள்' என்னும் தலைப்பில் சொற்பொழி வாற்றுவதற்கு வேண்டிய குறிப்புக்களைத் திரட்டத் தொடங்கிய நான், செய்யுள் வடிவில் சொற்கட்குப் பொருள் கூறும் நிகண்டு நூற்களோடு மட்டும் நின்று விடாமல், சொற்களை ஒன்றன்பின் ஒன்றாக அகர வரிசையில் அடுக்கிப் பொருள் கூறும் இக்காலப் பலதுறை அகராதிகளிலுங்கூடக் கண்செலுத்தினேன். ஒரு திங்கள் பொழுது ஓடியாடி அயராது உழைத்து அளவற்ற குறிப்புக்களைத் திரட்டிவிட்டேன்.

அறிவு விருந்து

எனது அடங்காத அறிவுப் பசிக்கு விருந்தாகப் பல்வேறு நிகண்டுகளையும் அகராதிகளையும் அளித்து உதவிய அன்பர்களை இங்கே குறிப்பிடாமல் நன்றி மறந்து விட்டுவிடக் கூடாது. திரு. தேசிகப் பிள்ளையவர்கள், புதுவைத் தமிழறிஞர் திரு. குகா. இராசமாணிக்கம் பிள்ளையவர்கள், புதுவை மாநிலக் கல்வித் துறை இயக்குநர் திரு. ரொலான் பரஞ்சோதியவர்கள், கடலூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளியாசிரியர் திரு. மகாலிங்க ஐயர் அவர்கள், புதுவை தாகூர் கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. அ. பாண்டுரங்கன் அவர்கள், புதுவை சித்த மருத்துவ அறிஞர் திரு. பரமதயாளம் பிள்ளையவர்கள், புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகப் புரவலர் திரு. சிங்கார குமரேசனார் அவர்கள், புதுவை பெத்தி செமினர் உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் திரு. ந. அப்பர் அவர்கள் ஆகியோர், நான் பல நாட்கள் வைத்துப் பயன்படுத்திக் கொள்ளும்படி சிற்சில நிகண்டுகளும் அகராதிகளும் தந்துதவினார்கள். ஏற்கெனவே என்னிடமும் சில நிகண்டுகளும் அகராதிகளும் இருந்தன.

**எய்ப்பினில் வைப்பு**

இவற்றை யெலலாம் வைத்து ஆராய்ந்து கொண்டிருந்த காலே, உயர்திரு. வையாபுரிப் பிள்ளை யவர்கள் உரிச்சொல் நிகண்டைப் பற்றிச் சொல்ல வந்த *ஓரிடத்தில், 'கி.பி. 1840-இல் புதுவை குவெர் னமா அச்சுக்கூடத்தில் துத்தன் துரை என்பவர் உரிச் சொல் நிகண்டைப் பதிப்பித்திருக்கிருர்; அதில் எத் தனை தொகுதிகள் உள்ளன என்று அறியக்கூட வில்லை' என்று எழுதியிருப்பதைக் கண்ணுற்றேன்.

உரிச்சொல் நிகண்டு புதுச்சேரியில் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது என்ருல் எப்படியும் அப்பதிப்பின் ஒரு படியாவது கிடைக்கலாம் என்ற நம்பிக்கையுடன் புதுச்சேரி வட்டாரத்தில் பலரை வினவிப் பலவிடங் களிலும் 'சல்லடை போட்டுச் சலித்துத்' தேடிப் பார்த் தேன். எங்கெங்கோ இருக்கலாம். ஆனுல், நான் வினவிய—தேடிய இடங்களில் கிடைக்கவேயில்லை. சோர்ந்து போனேன். இந்நிலையில் ஒரு நாள் தற்செய லாக, காலஞ் சென்ற புதுவை மகாவித்துவான் பு. அ. பெரியசாமி பிள்ளையவர்களின் பேரன் முறை யான திரு. சு. சோமு ஆசிரியர் அவர்கள், 'வீட்டில் ஒரு நிகண்டு இருக்கிறது; பார்வையிடுகிறீர்களா?' என்று என்னிடம் கூறினுர்கள். உடனே அதை அவரிட மிருந்து பெற்றுப் பார்வையிட்டேன். நான் அவரை ஒரு நாளும் கேட்காதிருக்கவும், எய்ப்பினில் வைப் பென எதிர்பாராது எனக்குக் கிடைத்த அது, நான் எதிர்பார்த்துத் தேடிக்கொண் டிருந்த உரிச் சொல் நிகண்டின் புதுவைப் பதிப்பேதான்! இப்பதிப்பு குறித்து இந்நூலின் மூன்ரும் பாகத்தில் மிகவிரிவாகக் காணலாம்.

---

* அரும்பொருள் விளக்க நிகண்டுப் பதிப்பின் முன்னுரை—பக்கம் : 7.

அடுத்து, வெளியில் எவரிடமும் கிடைக்காத-மிகப் பழைய பதிப்புக்களாக உள்ள சில நிகண்டுகளும் அகராதிகளும் புதுவை அரசின் பொது நூல் நிலையத்திலும், புதுவை பிரெஞ்சு கலைக் கழகத்திலும் (French Institute) கிடைத்தன. அவை யனைத்தும் பெறலருங் கருவூலப் பெட்டகங்கள். இவையே யன்றி, இன்னும் சில விடங்களிலிருந்தும் சில நூற்கள் பெற்றேன்.

இவ்வளவுக்கும், போதிய உடல்நலம் இல்லா திருந்த நான், வேறெங்கும் செல்லாமல், நொண்டி மாங்தோப்பு காவல் காப்பதுபோல் புதுச்சேரியில் இருந்தபடியே நிகண்டுகளும் அகராதிகளும் தேடி ஆராய்ந்துகொண் டிருந்தேன். இன்னும், சென்னை நூல் நிலையங்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தஞ்சை சரசுவதி மகால் முதலிய இடங்கட்குச் சென்று தேடியிருந்தால் இன்னும் என்னென்னவோ கிடைத்தாலும் கிடைத்திருக்கலாம். அது செய்யாதது என் குறைபாடுதான். அக்குறைக்குக் காரணம் என் உடல் நலக் குறைவே.

இப்படியாகச் சொற்பொழிவிற்காகத் திரட்டிய குறிப்புக்கள் மலையாக வளர்ந்துவிட்டன. கூட்டத்தில் இரண்டரை மணி நேரம் தொடர்ந்து பேசியும் பத்தில் ஒரு பங்கும் தீர்ந்தபாடில்லை. எனவே, பாடு பட்டுத் தேடிய குறிப்புக்களைப் பாழாக்கக் கூடாது என்று கருதி இந்நூல் வடிவத்தில் எழுதி யமைத்து விட்டேன். எனவே, இந்நூல் தோன்றியதற்குக் காரணம் உயர்திரு. தேசிகப் பிள்ளையவர்களே.

**பல்லாயிரம் நிகண்டுகள்**

வட மொழியில் உள்ளாங்கு தமிழிலும் எண்ணற்ற நிகண்டுகள் தோன்றின. இதனை,

*"பல்லாயிர நிகண்டிற் பண்டிதர்கள் சொன்னபொருள்
எல்லாம் எளிதாய் இனிதுணர..."

என்னும் சிவசுப்பிரமணியக் கவிராயரின் பாடலால் அறியலாம். அப் பல்லாயிர நிகண்டுகளுள் ஒரு சிலவே அழியாது கிடைத்துள்ளன. அவை பற்றிய குறிப்புக்களே மட்டுமே இந்நூலில் காணலாம். அகராதிகளைப் பொறுத்தமட்டில், 1965–ஆம் ஆண்டுவரையும் தோன்றியுள்ள அகராதிகள் பலவற்றோடு, இன்னும் முற்றுப் பெருமல் வேலை நடந்துகொண்டிருக்கிற அகராதிகள் சிலவுங்கூட இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூலில் சொல்லப்படாமல் விடுபட்டுப் போன நிகண்டுகளும் அகராதிகளும் இன்னும் எவ்வளவோ இருக்கலாம். அவற்றை அன்பர்கள் தெரிவித்தால் அடுத்த பதிப்பில் சேர்க்க முடியும்.

**ஐந்து பாகங்கள்**

இந்நூல் ஐந்து பாகமாகப் பகுத்து எழுதப்பட்டுள்ளது. தமிழ் அகராதிக் கலையின் வரலாற்றுராய்ச்சி முதல் பாகமாகவும், கிடைத்துள்ள நிகண்டுகளுக்குள் முதலாவதும் மற்ற நிகண்டுகளுக்கு முன்னோடியானது மாகிய சேந்தன் திவாகர நிகண்டைப் பற்றிய மிக விரிவான ஆராய்ச்சி விளக்கம் இரண்டாம் பாகமாகவும், பிங்கலம் முதலிய முப்பதுக்கு மேற்பட்ட பிற நிகண்டுகளைப் பற்றிய விவரங்கள் மூன்றும் பாகமாகவும், நூற்றுக்கு மேற்பட்ட அகராதிகளைப் பற்றிய விளக்கங்கள் நான்காம் பாகமாகவும் இறுதியாகச் 'சொல்லும் மொழியும்' என்ற தலைப்பில் சொற்பொருள் பற்றிய மொழியாராய்ச்சி ஐந்தாம் பாகமாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

---

* நாமதீப நிகண்டு—பாயிரச் செய்யுள் : 8

**நன்றி**

இந்நூல் உருவாவதற்கு வேண்டிய நிகண்டுகளும் அகராதிகளும் அளித்துதவிய அன்பர்கட்கும் நிறுவனங்கட்கும், உடனிருந்து அச்சுப் பிழை திருத்தியுதவிய நண்பர் பண்டித - வித்துவான் - திரு. மு. பெருமாள் அவர்கட்கும் நான் மிகமிக நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

கிடைத்தற்கரிய ஒவ்வொரு நொடிப் பொழுதையும் வீணாக்காது நன்முறையிற் பயன்படுத்தும் பேரறிஞர் உயர்திரு. டாக்டர். மு. வரதராசனார் அவர்கள், தமது பொன்னான நேரத்தில் ஒரு பகுதியை எனக்காகச் செலவிட்டுச் சிறந்த முறையில் அணிந்துரை எழுதியருளினமைக்காக அவர்கட்கு என் பெரு நன்றி உரியதாக.

மற்ற நூல்கள் போலவே இந்நூலும் உருவாவதற்குப் பல்லாற்றானும் துணைபுரிந்த புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகப் புரவலர் உயர்திரு. சிங்கார குமரேசனார் அவர்கட்கும் என் நன்றி உரித்து.

டாக்டர். மு. வ. அவர்கள் தமது அணிந்துரையின் இறுதியில் பரிந்துரைத்துள்ளாங்கு, கல்விக் கூடங்கள், நூலகங்கள், பல்கலைக் கழகங்கள் உட்படத் தமிழகத்தின் பேராதரவை இந்நூலுக்குப் பெரிதும் வேண்டுகிறேன்.

சுந்தர சண்முகன்

# தமிழ் அகராதிக் கலை

## பொருளடக்கம்


பக்கம்

**முதல் பாகம்** ... 11—76

**தமிழ் அகராதிக் கலை வரலாறு**

அகராதி என்றால் என்ன—அகராதிக் கலை என்றால் என்ன—அகராதிக் கலை வரலாறு யாது — சொல்லிலக்கணம் — நிகண்டு பெயர்க் காரணம் — உரிச்சொல் — அகராதி — முதல் அகராதி — உலக முதல் அகராதி— டும் டும் டும் டும் — தொல்காப்பியம்— தொல்காப்பியர் வரலாறு—தொல்காப்பியக் காலம்—நூலின் அமைப்பு —இடையியல் — உரியியல் — மரபியல் — முப்பெரும் பிரிவுகள் — ஆட்சியும் மாட்சியும் — இடை வெளி நூற்கள் — நிகண்டு கலைக்கோட்டுத் தண்டு — ஆதி திவாகரம்.

**இரண்டாம் பாகம்** ... 77—207

**முதல் நிகண்டு — சேந்தன் திவாகரம்**

பெயர்க் காரணம் — சேந்தன் வரலாறு—திவாகரர் வரலாறு — நூலின் காலம் — நூல் அமைப்பு — நூலின் உட்பொருள்—தெய்வப் பெயர்த்தொகுதி— மக்கள் பெயர்த் தொகுதி—விலங்கின் பெயர்த்தொகுதி — மரப் பெயர்த் தொகுதி—இடப் பெயர்த் தொகுதி— பல் பொருள் பெயர்த் தொகுதி — செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி — பண்பு பற்றிய பெயர்த் தொகுதி —செயல் பற்றிய பெயர்த் தொகுதி — ஒலி பற்றிய பெயர்த் தொகுதி — ஒரு சொல் பல் பொருள் பெயர்த் தொகுதி — பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி.

பக்கம்

**மூன்ரும் பாகம்** ... 208—368

**பிற நிகண்டுகள்**

பிங்கலம்—பெயர் தெரியா நிகண்டுகள்—நன்னூல் — சூடாமணி — அகராதி — உரிச் சொல்—கயாதரம் — பல் பொருள் சூடாமணி — கைலாச நிகண்டு — பாரதி தீபம் — ஆசிரிய நிகண்டு — அரும் பொருள் விளக்கம் — தொகை — பொருள் தொகை — பொதிகை — நாம தீபம் — வேதகிரியார் சூடாமணி — கந்த சுவாமியம் — தொகைப் பெயர் விளக்கம் — இலக்கத் திறவு கோல் — நாநார்த்த தீபிகை — சிந்தாமணி — அபி தானத் தனிச் செய்யுள் — விரிவு நிகண்டு — ஆரிய நிகண்டு — பொதிய நிகண்டு — ஔவை நிகண்டு — அகத்தியர் நிகண்டு — போகர் நிகண்டு — கால நிகண்டு — காரக நிகண்டு — முதலியன.

**நான்காம் பாகம்** ... 369—446

**தமிழ் (பிணைந்த) அகராதிகள்**

அகராதிகள் — பதினேழாம் நூற்ருண்டு அகரா திகள்—பதினெட்டாம் நூற்ருண்டு அகராதிகள்—பத் தொன்பதாம் நூற்ருண்டு அகராதிகள் — இருபதாம் நூற்ருண்டு அகராதிகள் — ஐயர் பதிப்பு — சமாசப் பதிப்பு—முதலியன.

**ஐந்தாம் பாகம்** ... 447—513

**சொல்லும் மொழியும்**

சொல் பிறந்த கதை — சொல் பெருகிய கதை— நான்கு விதச் சொற்கள்—ஒரு பொருள் பல் பெயர்கள் — ஒரு சொல் பல் பொருள் — கல்வித் துறையில் அகராதிக் கலையின் பங்கு.

**பிற்சேர்க்கை** ... 514 – 524

# முதல் பாகம்

# தமிழ் அகராதிக் கலை வரலாறு

அகராதிக் கலை என்றதுமே, இப்படியும் ஒரு கலையா என்று வியப்புடன் கேட்கத் தோன்றும். ஆம், இஃதும் ஒரு கலைதான்! இதில் இன்னொரு வியப்பு என்னவென்ருல், தமிழ் அகராதிக் கலையின் வயது மூவாயிரம் ஆண்டுக்கும் மேற்பட்டதாகும்.

பொதுவாக ஆங்கிலத்தில் 'லெக்சிகோகிராஃபி' (Lexicography) என அழைக்கப்படும் அகராதிக் கலை ஐரோப்பிய மொழிகளில் பெரிதும் வளர்ச்சி பெற்றுள்ளது. அத்தகு வளர்ச்சி தமிழ் மொழியிலும் நடை பெற்று வருகிறது.

அகராதி என்ருல் என்ன? அகராதிக் கலை என்ருல் என்ன? அதன் வரலாறு யாது? இவ்வினுக்கட்குத் தொடர்ந்து விளக்கம் காணவேணடும்.

**அகராதி என்ருல் என்ன ?**

ஒரு மொழியில் உள்ள சொற்கள் அகர வரிசை யில் அடுக்கிப் பொருள் (அர்த்தம்) கூறப்பட்டிருப் பதற்கு அகராதி என்று பெயராம். அதாவது, ஆனி, அறம், ஆடு, அணில் என்னும் சொற்களை எடுத்துக் கொண்டால், தமிழ் எழுத்துக்களுள் முதலெழுத்தாகிய 'அ' என்னும் எழுத்தில் தொடங்கும் அறம், அணில் என்னும் சொற்களை முதலிலும், அடுத்த எழுத்தாகிய 'ஆ' என்னும் எழுத்தில் தொடங்கும் ஆனி, ஆடு, என்னும் சொற்களை அடுத்தபடியாகவும் நிறுத்த வேண்டும்; அறம், அணில் என்னும் சொற்களுள்ளும் இரண்டாவது எழுத்துக்களை நோக்கின், 'ற' என்ப தனினும் 'ணி' என்பது எழுத்து வரிசையில் முதன்மை யான தாதலின் அணில் என்னும் சொல்லை முதலிலும், அறம் என்னும் சொல்லை அடுத்தபடியாகவும் நிறுத்த வேண்டும்; அது போலவே, ஆனி, ஆடு என்னும் சொற்களுள்ளும் இரண்டாவது எழுத்துக்களுள் 'னி' என்பதனினும் 'டு' என்பது முதன்மையான தாதலின் ஆடு என்னும் சொல்லை முன்னும், ஆனி என்னும் சொல்லைப் பின்னும் அமைக்க வேண்டும்; இவ்வாறே இன்னும் மூன்ருவது–நான்காவது–ஐந்தாவது எழுத் துக்களையும் ஐந்திற்கும் மேற்பட்ட எழுத்துக்களையும் நோக்கிச் சொற்களை வரிசைப் படுத்தி அவற்றிற்கு நேரே பொருளும் கொடுக்கப்பட்டிருக்கும் சுவடிக்குத் தான் அகராதி என்பது பெயர்.

+அகரம் ஆதி = அகராதி. அகரம் என்ருல் 'அ'. (அகரம் என்பதில் உள்ள 'கரம்' என்பது, சாரியை எனப்படும்.) ஆதி என்ருல் 'முதல்'. அ என்னும் எழுத்தை முதலாகக் கொண்டு தொடங்கிச் செல்வதால்

அகராதி எனப்பட்டது. இதனை 'அகர வரிசை' என்னும் பெயராலும் இன்று அழைக்கின்றனர். அகரத்தை முதலாகக் கொண்டு அ, ஆ, இ, ஈ, என்ற வரிசையில் சொற்கள் செல்வதால் 'அகர வரிசை' என இக்காலத்தில் தனித் தமிழ்ப் பெயரால் அழைக்கப்படுகிறது. இந்த அகரவரிசை முறையை ஆங்கிலத்தில் 'ஆல்பாபெடிகல் ஆர்டர்' (Alphabetical Order) என்பர். இப்பெயர் 'கிரீக்' (Greek) மொழியிலிருந்து வந்ததாகும். Alpha என்பது ஒரு சொல்; Beta என்பது மற்றொரு சொல். Alpha என்பது A என்னும் எழுத்தில் தொடங்குகிறது; Beta என்பது B என்னும் எழுத்தில் தொடங்குகிறது. A என்பது கிரீக் மொழியின் முதல் எழுத்து; B என்பது அம்மொழியின் இரண்டாம் எழுத்து. கிரீக் எழுத்துக்களிலிருந்துதான் இலத்தீன் எழுத்துக்கள் தோன்றின. இலத்தீன் எழுத்துக்களால்தான் ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மனி முதலிய ஐரோப்பிய மொழிகள் எழுதப்படுகின்றன. எனவே, ஐரோப்பிய மொழிகளில் A, B, C, D' வரிசை என்று சொல்வதற்குப் பதிலாக, Aவில் தொடங்கும் Alpha என்னும் சொல்லையும், Bயில் தொடங்கும் Beta என்னும் சொல்லையும் இணைத்து Alphabet வரிசை என்கின்றனர். அ, ஆ வரிசை என்பதற்குப் பதில் 'அணில் ஆடு வரிசை என்று சொல்வது போன்றதாகும் இது. A, B என்னும் எழுத்துக்களை அறிமுகஞ் செய்ய Alpha, Beta என்னும் சொற்கள் பயன்படுத்தப் படுவதைப் போல, இந்தக் காலத்தில் முதல் வகுப்பு மாணவரின் சுவடியில் அ, ஆ என்னும் எழுத்துக்களை அறிமுகப் படுத்த அணில், ஆடு, என்னும் சொற்கள் பயன்படுத்தப் படுகின்றன வன்றோ? எனவே, ஆங்கிலத்தில் Alphabetical Order என்பதுபோல, தமிழில் 'அணிலாடு

வரிசை' என ஒரு புதுப்பெயர் படைத்துக் கொண்டு வழங்கி வரலாம். அல்லது, சுருக்கமாக 'அ-ஆ வரிசை' என்றும் அழைக்கலாம். அதன் சுருக்கமே 'அகர வரிசை' என்பது.

எனவே, அணிலாடு வரிசை முறையில் சொற்கள் அடுக்கப்பட்டுப் பொருளும் கூறப்பட்டிருக்கும் சுவடி அகராதி என அழைக்கப்படுகிறது. இதனை ஆங்கிலத்தில் 'டிக்ஷனரி' (Dictionary) என்கின்றனர்.

**அகராதிக் கலை என்றால் என்ன?**

சொல்லுக்குப் பொருள் கூறத் தொடங்கிய அகராதி நாளடைவில் பல துறைகளாகப் பிரிந்து பல உருவங்கள் எடுத்தது. அவற்றுட் சில வருமாறு:—

(1) சொல்லுக்குப் பொருள் கூறுவதோடு, அச் சொல் எந்த வேரிலிருந்து எப்படிப் பிறந்து உருவாயிற்று என்ற விவரமும், அது பேச்சு வழக்கிலோ அல்லது செய்யுள் வழக்கிலோ வந்துள்ள தொடரும், அது எடுத்தாளப்பட்டுள்ள நூலின் பெயரும், நூலில் அது வந்துள்ள உட்பிரிவின் பெயரும், இத்தனையாவது பாடல் எனப் பாடல் எண்ணும் இன்ன பிறவும் கொடுக்கப்பட்டிருக்கும் அகராதிகள்.

(2) மின்சாரம், பொறிகள் (இயந்திரங்கள்) என்பன போன்ற குறிப்பிட்ட பொருள்களைப் பற்றியும், உழவு, நெசவு போன்ற குறிப்பிட்ட தொழில்களைப் பற்றியும் உள்ள சொற்கள் மட்டும் அவற்றின் தோற்றத்துடன் பொருள் கூறப்பட்டிருக்கும் தனித்துறையகராதிகள்.

(3) சரியான இலக்கிய வழக்கிலிருந்தும் பொருத்தமான ஒலியிலிருந்தும் (உச்சரிப்பிலிருந்தும்) வேறு

பட்டு, நாட்டின் பல பகுதிகளிலும் பலவாறு வழங்கப் படும் வட்டார வழக்குச் சொற்கள்மட்டும் அகர வரிசை யில் பொருள் கூறப்பட்டிருக்கும் வழக்குஅகராதிகள் (Dialects).

(4) ஒரு நூலின் இறுதியில் அல்லது முதலில், அந் நூலிலுள்ள செய்யுட்களின் முதலிலுள்ள சொற்களை யெல்லாம் திரட்டி அகர வரிசையில் கொடுக்கும் செய் யுள் முதற் குறிப்பகராதி; நூலின் உள்தலைப்புக்களைக் கூறும் பொருளடக்க அகராதி.

(5) ஒரு நூலிலுள்ள அருஞ்சொற்களை மட்டும் பொருளுடன் அந்நூலினிறுதியில் தந்திருக்கும் அருஞ் சொல்லகராதி.

(6) ஒரு நூலிலுள்ள சொற்கள் அனைத்தையும் நூலில் வந்துள்ள இடஞ்சுட்டிக் கொடுக்கும் தனிநூல் அகராதி.

(7) ஒரு நூலிலுள்ள இன்றியமையாச் சொற்களை மட்டுமோ அல்லது பொருட்களை (செய்திகளை) மட் டுமோ நூலில் வந்துள்ள அடி-இடம் சுட்டிக் கொடுத் துள்ள சிறப்பு அகராதி (Concordance). இவ்விருவகை யுள் சொற்கள் கொடுக்கப்பட்டிருப்பது ‘சொற் கோவை அகராதி’ (Verbal Concordance) எனவும், பொருட்கள் கொடுக்கப்பட்டிருப்பது ‘பொருட்கோவை அகராதி’ (Real Concordance) எனவும் அழைக்கப்படும்.

(8) பல்வகைக் கலைத்துறை - அறிவுத்துறை பற்றிய படங்களுடன் கூடிய அருஞ்சொல் விளக்க அகராதிகள் (Glossary).

(9) உலகச் செய்திகள்–பொருள்கள் அனைத்தும் விரிவாக விளக்கப்பட்டுள்ள கலைக்களஞ்சியம் (Encyclopaedia).

(10) ஒரு மொழிச் சொல்லுக்கு நேரான வேறு ஒரு மொழிச் சொல்லோ–அல்லது–பல மொழிச் சொற்களோ கொடுக்கப்படும் மொழியகராதி வகைகள்.

(11) மேலுள்ளவையே யன்றி, ஒரு மொழியிலே வழங்கும் பழமொழிகளை யெல்லாம் அகர வரிசையில் தொகுத்த பழமொழி யகராதி.

(12) ஒரு மொழி வல்ல புலவர்களின் (அறிஞர்களின்) வாழ்க்கைக் குறிப்புக்களை அகர வரிசையில் தரும் புலவர் அகராதி.

(13) இருசுடர், முக்குணம், ஐம்பொறி எனத் தொகை யெண்களால் சுட்டப்படுவனவற்றை விளக்கும் தொகை யகராதி.

(14) அகம், மகம், முகம்; இன்னல், கன்னல், தின்னல்—என்பன போன்ற செய்யுட் கேற்ற எதுகைத் தொடைச் சொற்கள் தரப்படும் தொடையகராதி.

(15) அரம்—அறம்; குலம்—குளம்; மணம்—மனம் என்பன போல ஒப்புமையுடைய ஓரெழுத்து வேறுபாடுடைய சொற்கள் தரப்பட்டுள்ள எழுத்து வேறுபாட்டகராதி.

இப்படி யின்னும் பலவகை அகராதிகள் உருவெடுத்து வளர்ந்து வருகின்றன.

முதலில் சொற்கட்குப் பொருள் கூறுதல் மட்டும் செய்து வந்த அகராதி, மேலே கொடுக்கப்பட்டுள்ளபடி

பலவகை உருவங்கள் என்றைக்கு எடுக்கத் தொடங்கியதோ அன்றைக்கே அகராதியும் ஒரு 'கலை'யாகி விட்டது. பொதுவாக ஓர் அறிவியலோ அல்லது ஒரு தொழிலியலோ அது தோன்றிய காலத்து இருந்த நிலையினும் மேலாகக் கற்பனையால் புதுப்புது நிலையை அடையத் தொடங்குகிற போதே 'கலை' பிறந்து விடுகிறது. ஓர் இயல் கலையாகி வளர வளர, மக்கள் அதனால் கவரப்பட்டு, அதனைப் பல வகையில் பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்தப் பொது விதிக்கு அகராதிக் கலையும் உட்பட்டதே.

# அகராதிக் கலை வரலாறு யாது ?

ஒரு கலையாக வளர்ச்சி பெற்ற தமிழ் அகராதித் துறை மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே தோற்றம் எடுத்தது. இப்பொழுது கிடைத்திருக்கும் தமிழ் நூற்களுள் முற்பட்டதாகவும், மூவாயிரம் ஆண்டுக்கு முன் தோன்றியதாகவும் கருதப்படும் தொல்காப்பியம் என்னும் பெரிய இலக்கண நூலில் சொற்களுக்குப் பொருள் கூறும் பகுதிகள் உள்ளன.

## முதல் தமிழ் அகராதி :

தொல்காப்பியம் 'மொழி விஞ்ஞானமும்', 'சமூக வாழ்வியல் விஞ்ஞானமும்' அடங்கிய ஒரு தலை நூலாகும். அதன் முதல் பிரிவாகிய எழுத்ததிகாரத்தில் எழுத்திலக்கணமும், இரண்டாவது பிரிவாகிய சொல்லதிகாரத்தில் சொல்லிலக்கணமும், இறுதிப் பிரிவாகிய பொருளதிகாரத்தில் செய்யுளிலக்கணமும் அணியிலக்கணமும் வாழ்வியற் பொருளிலக்கணமும் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் சொல்லதிகாரத்திலுள்ள உரியியல் என்னும் பிரிவில் 120 சொற்கட்குப் பொருள் கூறியுள்ளார் ஆசிரியர் தொல்காப்பியனார். அதே அதிகாரத்திலுள்ள இடையியல் என்னும் பகுதியிலும் ஒருசார் சொற்கட்கு உரிய பொருள்கள் தரப்பட்டுள்ளன பொருளதிகாரத்திலுள்ள மரபியல் என்னும் பகுதியிலும் சொற்பொருள் அறிவிக்கும் கூறு அமைந்துள்ளது. இம்மூன்று இயல்களுக்குள்ளேயே உரியியலில்தான் முழு அளவில் அகராதிக் கூறு அமைந்துள்ளது. எனவே இதனை 'முதல் தமிழ் அகராதி'

எனலாம். ஆனால், தொல்காப்பியத்தில் பொருள் கூறப்பட்டுள்ள சொற்கள் இக்கால அகராதிபோல் அகரவரிசையில் இல்லை என்பது ஈண்டு நினைவில் வைக்கற்பாலது.

தமிழிலக்கணத்தில் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனச் சொற்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முருகன், மாடு, வீடு எனப் பொருள்களின் பெயரைக் குறிக்குஞ் சொற்கள் பெயர்ச் சொற்கள். வா, போ என வினையை (செயலைக்) குறிக்குஞ் சொற்கள் வினைச் சொற்கள். தனித்துப் பொருள் தராமல், அவனே, செய்தானோ எனப் பெயர்ச் சொல்லோடும் வினைச் சொல்லோடும் சேர்ந்து பொருள் தரும் ஏ, ஓ போன்ற பெயரும்அல்லாத–வினையும் அல்லாத - இரண்டுக்கும் இடைப்பட்ட சொற்கள் இடைச் சொற்களாம். கறுப்பு, சிவப்பு, முழுமை போன்ற பண்புச் சொற்கள் உரிச் சொற்களாம்.

கறுப்பு, சிவப்பு, முழுமை எனத் தனியே பொருட்கள் இல்லை; எனவே இவை, பொருளின் பெயரைக்குறிக்கும் பெயர்ச் சொற்களுமல்ல; இவை செயல்களும் அல்லவாதலின் வினைச் சொற்களும் அல்ல. உள்ளத்தாலும் ஐம்பொறிகளாலும் உய்த்து (யூகித்து) உணரப்படும் பண்புகளே (abstract) இவைகள். அதாவது, கறுப்பு என ஏதாவது ஒரு பொருளைத் தனியே பிரித்துப் பார்க்க முடியாது; ஒரு பொருளில் கறுப்பு நிறம் என ஒன்று தெரியும்-அவ்வளவு தான். மற்ற பண்புகளும் இப்படியே. இவ்வகையாக, நிறம், அளவு, தன்மை, உணர்வு முதலிய பண்புகளைக் குறிக்குஞ் சொற்கள் உரிச் சொற்கள் எனப்பட்டன. உரிச் சொல் என்பதற்கு, செய்யுட்கு உரிமை பூண்ட

சொல் என்று சிலரும், அதற்கு உரியது-இதற்கு உரியது-இன்னும் எதெதற்கோ உரியது என்று சிலரும் விளக்கம் தருகின்றனர். அப்படியெனில், பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் செய்யுட்கு உரிய சொல் இல்லையா - இன்னும் எதெதற்கோ உரியசொல் இல்லையா? எனவே, உரிச்சொல் என்றால், பல்வகைப் பண்புகளைக் குறிக்குஞ் சொல் என்ற முடிவுக்குத் துணிந்து வந்துவிடவேண்டும். 'உரி' என்னும் பெயர் ஏன் வந்தது—எப்படி வந்தது? என்று கேள்வி கேட்டால் சரிப்படாது. பெயருக்கும் வினைக்கும் பெயர், வினை என்னும் பெயர்கள் ஏன் வந்தன—எப்படி வந்தன? இவைபோலவே உரி என்னும் பெயரும் வந்ததாகக் கொள்ள வேண்டும்.

இந்தப் பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு சொற்களையும் பற்றித் தனித்தனியே பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் என்னும் நான்கு இயல்களில் பேசியுள்ளார் தொல்காப்பியனார். நான்கு சொற்கட்கும் நான்கு இயல்களில் இலக்கணங் கூற வந்த ஆசிரியர், பெயரியலிலும் வினையியலிலும் பெயர்—வினை வகைகளும் அவற்றின் இலக்கணங்களும் கூறினரேயன்றி, பெயர்ச் சொற்கள் பலவற்றையும் வினைச் சொற்கள் பலவற்றையும் திரட்டி நிறுத்திப் பொருள் கூறினரிலர்; ஆனால் இடையியலில் இடைச் சொற்கள் சிலவும், உரியியலில் உரிச் சொற்கள் பலவும் அமைத்து அவற்றிற்குப் பொருளும் கூறியுள்ளார். பெயர்ச் சொல்லையும் வினைச் சொல்லையும் மக்கள் தெளிவாக அறிவார்கள் எனக் கருதி அவற்றிற்குப் பொருள் கூறும் வேலையை ஆசிரியர் விட்டுவிட்டார் போலும். அதே நேரத்தில், இடைச் சொற்களும் உரிச் சொற்களும் பொருள் கடினமானவையாதலின்

அவற்றிற்கு மட்டும் பொருள் கூறினர் போலும். அவற்றுள்ளும், வெளிப்படையாக எளிதில் பொருள் தெரியும் சொற்களை விட்டுவிட்டு அரிய சொற்கட்கு மட்டுமே ஆசிரியர் பொருள் கூறியுள்ளார். இதனைத் தொல்காப்பிய உரியியலி லுள்ள

" வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன."

என்னும் நூற்பாவால் அறியலாம். மேலும் ஆசிரியர், 'அரிய சொற்கள் எனினுங்கூட எல்லாச் சொற்களையும் இங்கே கூற முடியாது; சொற்களுக்கு உரிய எல்லாப் பொருள்களையுங்கூட (அர்த்தங்களையுங்கூட) சொல்ல முடியாது ; விடுபட்ட சொற்களையும் பொருள்களையும் வந்தவிடத்துக் கண்டு கொள்க' என்றும் முடிவில் அறிவித்துள்ளார். இச் செய்திகளை, இடையியலின் இறுதியி லுள்ள

" கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே."

என்னும் நூற்பாவானும், உரியியலின் இறுதியிலுள்ள

" கூறிய கிளவிப் பொருள்நிலை அல்ல
வேறுபிற தோன்றினும் அவற்றொடுங் கொளலே."

" அன்ன பிறவும் கிளந்த அல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉம்
உரிச்சொல் லெல்லாம் பொருட்குறை கூட்ட
இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்து
ஓம்படை ஆணையிற் கிளந்தவற் றியலான்
பாங்குற உணர்தல் என்மனர் புலவர்."

என்னும் நூற்பாக்களானும் அறியலாம். மேலே "அன்னபிறவும்" என்னும் நூற்பாவில் உள்ள 'பன் முறையானும் பரந்தன வரூஉம் உரிச்சொல்,' 'இனைத் தென அறியும் வரம்பு தமக்கின்மையின்'- ஆகிய தொடர்களை நோக்கின், சொல்லி முடியாவாதலின் எவ்வளவோ உரிச்சொற்கள் விடுபட்டன என்பது புலனாகும். மற்றும், அந்நூற்பாவின் இறுதியிலுள்ள 'என்மனார் புலவர்' என்னும் தொடரை நோக்கின், ஓர் அரிய உண்மை புலப்படும். 'என்மனார் புலவர்' என்றால், 'என்று புலவர்கள் சொல்லியுள்ளனர்'- என்று பொருளாம். 'என்று புலவர்கள் சொல்லியுள்ளனர்' என்று தொல்காப்பியர் சொல்லியிருக்கிறார் என்றால், அவருக்கும் முன்னே எத்தனையோ புலவர்கள் எத்தனையோ இலக்கண நூற்கள் இயற்றியுள்ளனர் என்பது புலனாகிறது. அச்செல்வங்கள் எல்லாம் நமக்குக் கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால் அவற்றில் கூறப்பட்ட சொற் பொருள்களையும் நாம் அறிய முடியும். எனவே, இவ்வுண்மையைக் கொண்டு நோக்குங்கால், மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியத்திற்கும் முன்னமேயே — அதாவது வரலாற்றுக் காலத்திற்கும் அப்பாற்பட்ட மிகப் பழங் காலத்திலேயேசொல்லுக்குப் பொருள்கூறும் அகராதித் துறை தமிழ்மொழியில் தோன்றிவிட்டது என்னும் பேருண்மை தெரியவரும்.

சொல்லுக்குப் பொருள் கூறும் உரியியலில், ஒரே பொருள் (அர்த்தம்) உடைய சொற்களும் உள்ளன; பல பொருள்கள் தரும் சொற்களும் இடம்பெற்றுள்ளன; ஒரே பொருளைத் தரும் பல சொற்களும் கொடுக்கப் பட்டுள்ளன. இவை யெல்லாம் எடுத்துக் காட்டுக் களுடன் தனித்தலைப்பில் பின்னர் விளக்கப்படும்.

**சொல்லிலக்கணம் :**

தொல்காப்பியச் சொல்லதிகாரம் சொல்லிலக்கணம் (Etymology) கூறும் பகுதியெனக் கண்டோம். அதில் சொற்களின் பல்வேறு நிலைகளும் இயல்புகளும் கூறப் பட்டிருப்பதோடு, இடையியலிலும் உரியியலிலும் சொற்கட்குப் பொருள்களும் கூறப்பட்டிருப்பதையும் அறிந்தோம். இதைக் கொண்டு, சொல்லுக்குப் பொருள் கூறும் அகராதித் துறையும் சொல்லிலக் கணத்தின்பாற்பட்டதே என்பது புலனாகும்.

இவ்வாறு சொல்லிலக்கணத்தின் ஓர் உறுப் பாயிருந்த அகராதித் துறை, நாளடைவில் அதிலிருந்து பிரிந்து ஒரு தனிககலை யாயிற்று. எல்லாக் கலை களிலுமே இவ்வாறு நிகழ்வது இயற்கையே. பொது வாக மக்களின் உள்ளத்து (மனத்து) இயல்புகளைக் கூறவெழுந்த உளவியல் (Psychology) கலையிலிருந்து குழந்தை உளவியலும் (Child Psychology), கல்வி உள வியலும் (Educational Psychology) பிரிந்தது போல, சொல்லிலக்கணத்தி (Etymology) லிருந்து அகராதிக் கலை (Lexicography) பிரிந்ததில் வியப்பில்லை.

தொல்காப்பிய உரியியலின் வேலையைப் பிற்காலத் தில் சேந்தன் திவாகரம், பிங்கலம், சூடாமணி முதலிய நூல்கள் எடுத்துக்கொண்டன. இந்நூற்களில் சொற் பொருள் தவிர வேறெதுவும் கிடையாது. தொல் காப்பியத்தில் இடைச் சொற்கள்—உரிச் சொற்கள் மட்டும் குறுகிய அளவில் பொருள் விளக்கப் பட்டுள்ளன. ஆனல் இந்நூற்களில் பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச்சொல், உரிச்சொல், திசைச் சொல், வட சொல் எனப் பல்வகைச் சொற்களும் பரந்த

அளவில் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியம் போலவே இந்நூற்களிலும் சொற்கள் அகர வரிசையில் இல்லாமல் கண்டபடி அமைக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியத்தில் உரிச் சொற்களும் இடைச் சொற்களும் பொருள் கூறப்பட்டிருப்பதைக் கண்ட பிற்காலத் தமிழறிஞர்களின் உள்ளங்களில் பெயர்ச் சொல், வினைச் சொல் முதலிய சொற்கட்கும் ஏன் பொருள் கூறக்கூடாது? என்ற உணர்வு தோன்றி யிருக்க வேண்டும். எனவே அவர்கள், எல்லாவகைச் சொற்களையுஞ் சேர்த்துத் தனி நூற்கள் எழுதத் தொடங்கிவிட் டிருக்கிறார்கள். அப்படித்தான் சொல் லிலக்கணத்திலிருந்து அகராதித் துறை தனியாகப் பிரிந்திருக்க வேண்டும். இந்த முறையில் திவா கரம், பிங்கலம் முதலிய நூற்கள் பலவகைச் சொற்களுடனும் விரிவாகத் தோன்றியிருப்பினும், எளிய சொற்கள் முதற்கொண்டு இக்கால அகராதிகளில் எண்ணிறந்து காணப்படுவது போல், அந்நூற்களில் காணமுடியாது; அரிய சொற்கள் மட்டுமே அந்நூற்களில் இடம் பெற்றுள்ளன. எனவே, திவாகரம், பிங்கலம் முதலிய நூற்கள் தொல்காப்பிய உரியியலை நோக்க மிகப் பரந்து பட்டவை யெனினும், இக்கால அகராதிகளை நோக்க மிகச் சுருங்கியனவேயாம்.

மேலும், தொல்காப்பியக் காலத்திற்கும், திவாகரம் பிங்கலம் முதலிய நூற்களின் காலத்திற்கும் நடுவே பல நூற்றாண்டு காலம் இடைவெளியுள்ளது என்னுஞ் செய்தி ஈண்டு எண்ணத் தக்கது. இந்தத் துறையில் கிடைத்திருக்கும் நூற்களில் சேந்தன் திவாகரமே முற்பட்டது. அது, ஒருதோற்றம் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் - அதாவது இற்றைக்கு 1200 ஆண்டு

கட்கு முன் இயற்றப் பட்டதாகக் கருதப்படுகிறது. அதற்கும் முன்னுல் ஆதி திவாகரம் எனவும் ஒரு நூல் இருந்ததாகச் சொல்லப் படுகிறது. அதற்கும் முன்னுல் நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனுர் என்னும் புலவரால் இப்படியொரு நூல் இயற்றப்பட்டிருக்கலாம் என உய்த்துணரப் படுகிறது. இப்படி வைத்துப் பார்க்குங்கால், மூவாயிரம் ஆண்டுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் தொல்காப்பியத்திற்கு முன்னுல் சில நூற்கள் தோன்றி மறைந்து விட்டது போலவே, அத்தொல்காப்பியத்துக்குப் பின்னும் சில நூற்றுண்டுகள்வரை சில நூற்கள் தோன்றி மறைந் திருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. இதை நம்ப முடியாதென்ருல், தொல்காப்பியத்தின் காலத்தை இன்னும் சில நூற்றுண்டுகள் பின்னுக்குத் தள்ள வேண்டிவரும்.

ஆகக் கூடியும், அகராதித் துறையில் தொல் காப்பிய உரியியலுக்குப் பின் நமக்கு உருப்படியாகக் கிடைத்துள்ள முழு நூற்களுள் சேந்தன் திவாகரம், பிங்கலம் ஆகிய இரண்டும் முற்பட்டவை. இவற்றின் காலம் கி. பி. எட்டாம் நூற்றுண்டெனச் சொல்லப் படுகிறது. இந்நூற்கள் 'நிகண்டு' என்னும் பொதுப் பெயர் ஏற்று, திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு என மக்களால் அழைக்கப்படுகின்றன. இந்நிகண்டுகளை யடுத்து, சூடாமணி நிகண்டு, கயாதர நிகண்டு, உரிச் சொல் நிகண்டு முதலிய நூற்றுக் கணக்கான நிகண்டு நூற்கள் தோன்றின. இவையெல்லாம் பின்னர்த் தனித்தனித் தலைப்புக்களின்கீழ் விளக்கப்படும்.

**நிகண்டு—பெயர்க் காரணம் :**

நிகண்டு நூற்கள் எல்லாம் சொல்லுக்குப் பொருள் கூறும் அகராதித் துறையைச் சேர்ந்தனவே யாகும் அங்ஙனமாயின், இத்துறை நூற்கட்கு 'நிகண்டு' என்னும் பொதுப்பெயர் ஏன் வந்தது?—என்பது குறித்து ஆராய வேண்டும் :—

வடமொழியிலுள்ள வேதத்தின் ஆறு அங்கங்களுள் நிருத்தம் என்பதும் ஒன்று ; அதில் 'நிகண்டு' என ஒரு பகுதி உள்ளது ; அப்பகுதியில் சொற்பொருள் விளக்கஞ் செய்யப்பட்டுள்ளது. இதை யொட்டி, சொல்லுக்குப் பொருள் கூறும் தனி நூற்களும் நிகண்டு என வடமொழியில் அழைக்கப்பட்டன. புராணம், பிரபந்தம் முதலிய பெயர்களைப் போல இந்த நிகண்டு என்னும் பெயரும் தமிழ் மொழிக்குத் தொத்திக் கொண்டது. சொற்பொருள் கூறத் தொடங்கிய தமிழ் நூற்களெல்லாம் நிகண்டு என்னும் பொதுப் பெயரால் அழைக்கப்பட்டன. இஃது ஒரு சாரார் கொள்கை.

நிகண்டு என்னும் வட சொல்லுக்குத் தொகுதி-கூட்டம் என்று பொருளாம். சொற்கள் தொகுதியாக-கூட்டமாக அமைக்கப்பட்டுப் பொருள் விளக்கப்பட்டிருத்தலால் நிகண்டு என்னும் பெயர் தரப்பட்டதாம்.

நிகண்டு என்பது வடமொழிச் சொல் என்று சொல்பவர் ஒருபுற மிருக்க, அது தமிழ்ச் சொல்தான் என்று சொல்பவரும் உளர். நிகண்டு என்னும் சொல்லுக்கு உண்மை என்பது பொருள் எனவும், 'நிகழ்ந்தது' என்னும் சொல்தான் 'நிகண்டு' என மருவி விட்டதெனவும்

தமிழ்க் கொள்கையினர் ஒருசாரார் கூறுகின்றனர். இதற்கு இன்னொரு வகையாகவும் பொருட்டு (காரணம்) கூறலாம் :

நீளம் என்பதை நிகளம் எனவும் நீண்டது என்பதை நிகண்டது எனவும் பேச்சு வழக்கில் மக்கள் சிலர் சொல்வதைக் கேட்கலாம். நிகளம் என ஒருசார் செய்யுள் வழக்கும் உண்டு. இந்த வழக்குகளை யொட்டிப் பார்க்குங்கால், நிகண்டு என்னும் சொல்லுக்கு, நீண்டது என்று பொருள் கொள்ளலாம். சொற்களின் பட்டியல் நீளமாகத் தரப்பட்டிருத்தலின்—அதாவது—சொற்களின் பட்டியல் நிகண்டு (நீண்டு) கொண்டுபோதலின் 'நிகண்டு' என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கலாம். நிகளுவது நிகண்டு. எளிய மக்களின் பேச்சு வழக்கிலும் நிகண்டு என்னும் சொல்லாட்சியைக் காணலாம்; அது வருமாறு :—

"எனக்கு இந்த வேலை ஒரு நெகுண்டு இல்லே"; "அவன் அந்த வேலையை ஒரே நெகுண்டா முடிச்சு விட்டான்"; "நான் வழியில் எங்கும் நிற்காமல் ஒரே நெகுண்டா போய்ச் சேர்ந்தேன்"......முதலிய வழக்காறுகள் தென்னார்க்காடு மாவட்டத்திலுண்டு. மற்ற மாவட்டங்களிலுங் கூட இருக்கலாம். இந்த வழக்காறுகளில் 'நிகண்டு' என்னும் சொல்தான் 'நெகுண்டு' எனக் கொச்சையான உருவத்தில் காணப்படுகிறது. 'இந்தவேலை ஒரு நெகுண்டு இல்லை' என்றால் தொடர்ந்து செய்ய முடியாத அளவுக்கு நீண்டு கொண்டு போகும் ஒரு பெரிய வேலையன்று என்பது கருத்து. வேலையை 'ஒரே நெகுண்டா முடித்து விட்டான்' என்றால், இடையீடின்றி நீண்ட நேரம் தொடர்ந்து செய்து வேலையை முடித்து விட்டான் என்பது கருத்து. 'ஒரே நெகுண்டா

2

போய்ச் சேர்ந்தேன்' என்றால், நீண்ட தொலைவைத் தொடர்ந்து கடந்து சென்றேன் என்பது கருத்து. 'ஒரே நெட்டாய்ப் போய்ச் சேர்ந்தேன்' என்றும் சிலர் சொல்வதுண்டு. நெட்டாய் என்பதற்கும் நெகுண்டாய் என்பதற்கும் பொருள் ஒன்றே; இவ்விரண்டிற்கும் அடிப்படைகளாகிய நெடுமை (நெட்டாய்), நிகளம் (நெகுண்டாய்) என்னும் இரண்டும் ஒரே பொருளுடையன வன்றோ?

எனவே, சொற்கள் நீளத் தொடர்ந்து கொடுக்கப் பட்டிருக்கும் நூல் 'நிகண்டு' எனப்பட்டது. இப்படிப் பொருள் கொள்ளின், நிகண்டு என்னும் சொல் தமிழ்ச் சொல்லே என்பது பெறப்படும். நிகண்டு என்பதை வடசொல்லெனக் கொண்டு பார்த்தால், தொகுதி-கூட்டம் என்பது அதன் பொருளாகும்; எனவே, சொற்கள் தொகுதியாக - கூட்டமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் நூல்நி கண்டு என்பது பெறப்படும்; இந்தப் பெயர்க் காரணம் பொருந்து மென்றால், நிகண்டு என்பதைத் தமிழ்ச் சொல்லாகக் கொண்டு, சொற்கள் ஒருபட்டியல் போல நீளத்தொடர்ந்து கொடுக்கப்பட்டிருக்கும் நூல் நிகண்டு எனக் கூறும் பெயர்க்காரணம் மட்டும் ஏன் பொருந்த முடியாது? எனவே, நிகளுவது நிகண்டு என்னும் முடிவுக்கு வரலாம்.

**உரிச்சொல் :**

திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு, கயாதர நிகண்டு முதலிய நூற்கள் நிகண்டு என்னும் பொதுப் பெயரால் அழைக்கப் பட்டது பிற்காலத்தில்தான்; முதற் காலத்தில் இந்நூற்கள் 'உரிச் சொல்' என்னும் பொதுப்

பெயராலேயே அழைக்கப்பட்டன. சொல்லுக்குப் பொருள் கூறும் தனி நூலை இப்போது நாம் அகராதி யென அழைத்தல் போல அந்தக் காலத்தில் உரிச் சொல் அல்லது உரிச்சொல் பனுவல் என அழைத்தார்கள். உரிச் சொல் என்னும் பெயர் நாளடைவில் மறைந்து போக, நிகண்டு என்னும் பெயர் நிலைத்துவிட்டது.

சொல்லுக்குப் பொருள் கூறும் துறை நூலுக்கு முதலில் உரிச்சொல் என்னும் பெயர் கொடுக்கப் பட்டதன் காரணமாவது:—

சொல்லுக்குப் பொருள் கூறும் துறை, முதன் முதல் தொல்காப்பிய உரியியலில் காணப்பட்டது. அதில் உரிச் சொற்கள் பொருள் விளக்கஞ் செய்யப் பெற்றிருத்தலைக் கண்ட பிற்கால அறிஞர்கள், தாமும் சொற்பொருள் விளக்கந் தரும் தனி நூற்கள் இயற்றத் தொடங்கி அவற்றை உரிச்சொல் என்னும் பெயரால் அழைத்தார்கள். எனவே, இந்த உரிச்சொல் என்னும் பெயர், தொல்காப்பியத்தில் உள்ள உரியியல் என்னும் பெயரிலிருந்து கடன் வாங்கப் பட்டதேயாகும். தொல்காப்பிய உரியியல், உரிச் சொற்கட்குப் பொருள் கூறுவதால் உரியியல் எனப்பெயர் பெற்றது; பிற்காலத்திலோ உரிச் சொல்லே யன்றி மற்ற சொற் கட்கும் பொருள் கூறும் நூற்களும் உரிச் சொல் என்னும் பெயர் பெற்றன; இது எது போன்ற தெனின், எள்ளிலிருந்து எடுக்கப்பட்ட நெய்க்கு மட்டும் முதலில் பெயரா யிருந்த 'எண்ணெய்' என்னும் பெயர், பின்னர் மற்ற பொருள்களிலிருந்து எடுக்கப்பட்ட நெய் வகைக்கும் உரியதானது போன்றதாம். 'உரிச் சொல்' என்பதின் உண்மையான பெயர்க் காரணம் இதுவே. ஆனால் சிலர், ஒரு சொல்லுக்கு 'உரிய'

பல பொருள்களும், ஒரு பொருளுக்கு 'உரிய' பல பெயர்களும் கொடுக்கப் படுவதால் 'உரிச் சொல்' எனப்பட்டது என என்னென்னவோ காரணம் கூறி இடர்ப்படுகின்றனர்.

இனி, திவாகரம், பிங்கலம் முதலிய நூற்கட்கு முதற் காலத்தில் உரிச்சொல் என்னும் பொதுப் பெயரே இருந்தது என்பதை உறுதி செய்யும் அகச் சான்றுகள் சில வருமாறு:—

(1) திவாகரம், பிங்கலம் ஆகிய நூற்கள் தோன்றிச் சில நூற்றுண்டுகள் கடந்த பின்னர், பதின் மூன்றும் நூற்றுண்டில் 'நன்னூல்' என்னும் இலக்கண நூல் இயற்றிய பவணந்தி முனிவர், தொல்காப்பியச் சொல்லதிகார உரியியலைப் போலவே, தமது நன் னூலின் சொல்லதிகாரத்திலும் உரியியல் என ஒரு பகுதி அமைத்துச் சொற்பொருள் விளக்கஞ் செய்துள் ளார். அவர் உரியியலின் இறுதியில், 'எல்லாச் சொற் கட்கும் இங்கே பொருள் கூறி முடியாது; மற்ற மற்ற சொற்கட்கு உரிய பொருள்களை யெல்லாம் பிங்கலம் முதலிய உரிச் சொல் நூற்களுள் கண்டு கொள்க' என்னும் கருத்தில் ஒரு நூற்பா பாடியுள்ளார்; அது வருமாறு:—

"இன்னது இன்னுழி இன்னணம் இயலும்
என்றிசை நூலுட் குணிகுணப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலிற் பிங்கலம் முதலா
நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே"

இந்நூற்பாவில், பிங்கலம் முதலிய நூற்கள் 'உரிச் சொல்' எனக் குறிப்பிடப்பட் டிருப்பது காண்க. திவாகரமும் பிங்கலமும் இயற்றப்பட்ட காலம்

எட்டாம் நூற்றுண்டு; பவணந்தியார் நன்னூல் இயற்றியகாலமோ பதின்மூன்ரும் நூற்ருண்டு. ஐந்து நூற்ருண்டுகட்குப் பின்னும், நன்னூலார், பிங்கல முதலிய நூற்களை நிகண்டு என்னும் சொல்லால் குறிப்பிடாமல் 'உரிச்சொல்' என்னும் சொல்லால் குறிப்பிட்டிருப்பது காண்க.

(2) இதே நன்னூற் பாடலுக்குப் பிற்காலத்தில் உரை யெழுதிய மயிலை நாதர் என்னும் அறிஞர்,

"………அவை பிங்கல முதலான புலவர்களாற் செய்யப் பட்ட உரிச்சொல் பனுவல்களுள் விரும்பி அறிந்து கொள்க"

எனத் தமது உரையிலும் நிகண்டு என்னுது உரிச்சொல் பனுவ லென்றே கூறியுள்ளமை காண்க. மற்றும், நன்னூல் பொது வியலில் உள்ள,

"எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"

என்னும் நூற்பாவின் உரையிலும் உரையாசிரியர் மயிலை நாதர்,

"………விரிந்த உரிச்சொற் பனுவல்களுள்ளும் உரைத்த வாறு அறிந்து வழங்குக"

என்று உரிச்சொல் பனுவ லெனவே எழுதியுள் ளார். பனுவல்—நூல்; உரிச்சொல் பனுவல்—உரிச் சொல் நூல்.

இனி, பிங்கலம் முதலிய சில நூற்களின் பாயிரப் பகுதியிலும் உரிச் சொல் என்றே கூறியிருக்கும் சான்றுகள் வருமாறு :—

(3) பிங்கல நூலின் சிறப்புப் பாயிரச் செய்யுளில்

"பிங்கல முனிவன் எனத்தன் பெயர்நிறீஇ
உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை"

என உரிச்சொல் என்றே கூறப்பட்டுள்ளது.

(4) கயாதரர் எழுதிய கயாதரம் என்னும் நூலின் பாயிரப் பாடல்களில்,

"...............தேவைக் கெயாதரன் தொல்
வேதியன் சொற்ற உரிச்சொற் பனுவலு மேம்படுமே."
"...............உரிச்சொல் கிளர் பனுவல்........................
நடக்கும் படியாக் கெயாதரம் என்றுபேர் நாட்டினனே.'"

எனவும், கயாதர நூலின் இறுதிப் பாடலில்,

"விரும்பிய கோவை உரிச்சொற் பனுவல் விரித்
துரைத்தான்
பெரும் பொருள் கண்ட கெயாதரன் தேவைப்
பெருந்தகையே.'"

எனவும் 'உரிச்சொல் பனுவல்' என்றே கூறப்பட்டுள்ளது.

(5) திவாகரர், பிங்கலர், கயாதரர் முதலிய அறிஞர்களைப் போலவே காங்கேயன் என்னும் புலவரும் சொற்பொருள் கூறும் நூல் ஒன்று இயற்றியுள்ளார். அவர் தமது நூலுக்கு 'உரிச்சொல்' என்றே பெயர் வைத்துவிட்டார். இதனை,

"உத்தம சீலத்துக் காங்கேயன் சொன்ன உரிச்சொல்
தன்னை.........."

என்னும் பாடற் பகுதியால் அறியலாம். மற்றும், இந்த உரிச்சொல் நிகண்டின் ஓலைச் சுவடி யொன்றின்

இறுதியில், ஏடு பெயர்த்து எழுதியவரால் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது :—

**'950-ம் ஞு புரட்டாசி மீ 14உ ஆழ்வார் திரு நகரி மாசித்தெரு தேவர்பிரான் கவிராயர் உரிச்சொல் நீடூழி வாழ்க..."**

இதிலும் உரிச்சொல் என்று கூறப்பட் டிருப்பது காண்க. இவ்வாறே இன்னும் பல சான்றுகள் கொடுத்துக் கொண்டே போகலாம்.

பவணந்தியார் இயற்றிய நன்னூலுக்கும் சில நூற்றுண்டுகள் பிற்பட்டனவாகிய கயாதரம், உரிச் சொல் நிகண்டு ஆகியவற்றிலும் உரிச்சொல் என்னும் பெயர் காணப்படுவதை நோக்கின், இப்பெயர் 16-ஆம் நூற்றுண்டுக்கு மேலும்—ஏன்—17, 18-ஆம் நூற்றுண்டுகள் வரையுங்கூட வழக்கில் இருந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

உரிச்சொல் என்னும் பெயர் மறையாமல் நடைமுறை வழக்கில் இருந்துகொண் டிருக்கும்போதே அதற்குப் போட்டியாக நிகண்டு என்னும் பெயரும் தோன்றிவிட்டதாகத் தெரிகிறது. திவாகரம், பிங்கலம் ஆகியவற்றிற்குப் பின்னுல் தோன்றி அவற்றினும் மிகுதியாக மக்களால் பயிலப்பட்டு வந்ததும், பதினும் நூற்றுண்டில் தோன்றியதாகச் சிலராலும் அதற்கும் முன்னமேயே தோன்றியதாகச் சிலராலும் சொல்லப்படுவதுமாகிய சூடாமணி நிகண்டையியற்றிய மண்டல புருடர் என்னும் அறிஞரே, அச் சூடாமணியின் பாயிரப் பாடலில் அதனை ஒரு நிகண்டு எனக் குறிப்பிட்டுள்ளார் :

"மன்னிய நிகண்டு சூடா மணியென ஒன்று சொல்வன்
இந்நிலந் தன்னின் மிக்கோர் யாவரும் இனிது கேண்
மின்."

என்பது அப்பாடற் பகுதி. சொற்பொருள் கூறும் துறையில் சூடாமணிக்குப் பின்னெழுந்த நூற்கள் பெரும்பாலன நிகண்டு என்னும் பெயருடனேயே தோன்றின. இப்படியாக, உரிச்சொல் என்னும் பெயருக்குப் 'போட்டி'யாக எழுந்த நிகண்டு என்னும் பெயர், அந்த உரிச்சொல் என்னும் பெயரை விழுங்கி விட்டுத் தான் நிலைத்துவிட்டது.

**அகராதி :**

நிகண்டு நூற்கள், இக்கால அகராதிகளைப் போல் தனித்தனிச் சொற்கள் ஒன்றன் பின் ஒன்றாக அமைக் கப்படாமல், செய்யுள் வடிவில் அமைக்கப்பட்டுள்ளன மற்றும், நிகண்டுகளில், சொற்கள் அகராதிகளைப் போல் அகரவரிசையில் அமைக்கப்படாமல் கண்டபடி அமைக்கப்பட்டுள்ளன. இக்கால அகராதிகளில் ஒரு சொல்லை உடனே தேடிக் கண்டுபிடித்து விடலாம் நிகண்டுகளில் இதுமுடியாது; ஆனால் அகராதிகளை நெட்டுரு பண்ண முடியாது; நிகண்டுகள் செய்யுளா யிருப்பதால் எளிதில் நெட்டுரு (மனப்பாடம்) செய்து விடலாம். அக்கால மாணுக்கர் அனைவரும் நிகண்டு கற்றனர். நிகண்டு கற்காத கல்வி அந்தக் காலத்தில் கிடையாது. கல்வித் துறையில் நிகண்டுகள் இன்றி யமையா இடத்தைப் பிடித்துக்கொண் டிருந்தன

முன்சொல்லியுள்ளபடி, குறிப்பிட்ட ஒரு சொல்லை எளிதில் தேடிக் கண்டுபிடிக்க முடியாத ஒரு பெருங் குறை-ஒரு பெருந்தொல்லை நிகண்டுக் கல்வியில்

இருந்து வந்தமை தமிழறிஞர்களால் உணரப் பட்டதோடு, அவர்தம் உள்ளங்களை உறுத்தியும் வந்தது. அதன் பயனுக, இக்குறையை நிறையாக்கும் முயற்சிகள் சில முகிழ்க்கத் தொடங்கின.

முதல் நிகண்டுகளாகிய திவாகரமும் பிங்கலமும் அகரவரிசையில் ஆசிரியர்களால் இயற்றப்பட வில்லைதான். ஆனுல், சில நூற்ருண்டுகள் கழிந்ததும், இந்நூற்களைக் கற்பித்தவர்களும், கற்றவர்களும் திவாகரரும் பிங்கலரும் அமைத்த முறைக்கு மாருகச் சொற்களை அகர வரிசையில் மாற்றி யமைத்து எழுதி வைத்துக் கொண்டனர். பின்னர் அச்சிட்டவர்களும் அவ்வாறே செய்து கொண்டனர். இந்த விவரங்கள் தனித்தனி நிகண்டுத் தலைப்புக்களில் பின்னர்த் தரப்படும்.

திவாகரமும் பிங்கலமும் இயற்றிய ஆசிரியர்கட்கு அகர வரிசை முறை நினைவு வரவில்லை யாயினும், இந் நூற்கட்கு அடுத்தபடிப் பெருவாரியாக மக்களால் பயிலப்பட்டு வந்த சூடாமணி நிகண்டை இயற்றிய ஆசிரியர் மண்டல புருடர் இதில் கவனம் செலுத்தி யிருப்பது குறிப்பிடத் தக்கது. இவர் சொற்களை எதுகை வாரியாகப் பிரித்தார். சொற்களின் இரண் டாவது எழுத்து ஒத்து ஒரேமாதிரியாய் இருப்பதற்கு 'எதுகை' என்று பெயராம். எடுத்துக் காட்டாக,- பகவன், பகல், மகரம், அகம் ஆகிய சொற்களில் இரண்டாவது எழுத்தாக 'க' என்னும் ஒரே எழுத்தே இருக்கிறது; இப்படி யிருக்கும் சொற்கட்குக் 'ககர எதுகைச் சொற்கள்' என்பது பெயர். 'க' தொடங்கி 'கௌ' வரையும் உள்ள எழுத்துக்களுள் எந்த எழுத்தையாவது இரண்டாவது எழுத்தாகக்

கொண்டுள்ள சொற்கள் அனைத்துமே ககர எதுகைச் சொற்களாம். மனவு, தனி, முனை, இனம்-என்பன போல, 'ன' தொடங்கி 'னௌ' வரையும் உள்ள எழுத்துக்களுள் எந்த எழுத்தையாவது இரண்டாவது எழுத்தாகக் கொண்டுள்ள சொற்கள் அனைத்துமே 'னகர எதுகைச் சொற்கள்' எனப்படும். இங்கே காட்டிய சொற்கள் எல்லாம் சூடாமணி நிகண்டிலிருந்து எடுக்கப்பட்டவையே. இப்படியாக, சூடாமணி யியற்றிய மண்டலபுருடர், ககர எதுகை, ஙகர எதுகை, சகர எதுகை, ஞகர எதுகை, டகர எதுகை, ணகர எதுகை, தகர எதுகை, நகர எதுகை, பகர எதுகை, மகர எதுகை, யகர எதுகை, ரகர எதுகை, லகர எதுகை, வகர எதுகை, ழகர எதுகை, ளகர எதுகை, றகர எதுகை, னகர எதுகை-எனச் சொற்களைப் பதினெட்டு எதுகை வகைகளாகப் பிரித்துக் கொண்டார்; ககர எதுகைச் சொற்களை முதலாவதாகவும், ஙகர எதுகையை இரண்டாவதாகவும், சகர எதுகையை மூன்றாவதாகவும், இப்படியே வந்து...... னகர எதுகைச் சொற்களைப் பதினெட்டாவதாகவும் அமைத்துவிட்டார். இதுவே ஒருவகை அகராதி முறைதானே.

சூடாமணி நிகண்டில் ஒரு சொல்லைத் தேட வேண்டுமானால், அச்சொல்லின் இரண்டாவது எழுத்து என்ன என்று நோக்கி, அதற்குரிய எதுகைப் பகுதியில் சென்று பார்த்தால் கிடைத்துவிடும். இக்கால அகராதி முறையேபோல இஃதும் ஒருவகை வசதிதானே. சூடாமணி நிகண்டு 16-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் இயற்றப்பட்டதாகச் சிலரும், அதற்கு முன்னமேயே இயற்றப்பட்டு விட்டதாகச் சிலரும்

கூறுகின்றனர். எப்படியோ, இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகட்கு முன்பே இத்தகைய அகராதிமுறை யுணர்வு நம்மவர்க்குத் தோன்றிவிட்டது என்பது வரைக்கும் உறுதி.

சூடாமணி நிகண்டில் மண்டல புருடர் கையாண்ட எதுகை முறையைப் பின்வந்த நிகண்டு ஆசிரியர்கள் சிலரும் பின்பற்றினர். இருப்பினும் இந்த எதுகை முறையை முழு அகராதி முறையாகக் கொள்ள முடியாது. எதுகை முறையில் சொற்களின் இரண்டாவது எழுத்து மட்டும் கவனிக்கப் பட்டதே தவிர, முதலெழுத்து அகராதி முறையில் கவனிக்கப்பட வில்லை. 'த' என்பதை இரண்டாவது எழுத்தாகக் கொண்டுள்ள 'முதலை' என்னும் சொல்லைத் தேட வேண்டுமானால், மற்ற எதுகைப் பகுதிகட்குச் செல்லாமல் நேரே 'தகரஎதுகை'ப் பகுதிக்குச் செல் வதற்குமட்டுந்தான் சூடாமணியில் வசதியுண்டு; தகர எதுகைப் பகுதியில் தகர எதுகைச் சொற்கள் பல உள்ளன; அவையெல்லாம் முதலெழுத்து வாரியாக அகரவரிசையில் அமைக்கப் படாமல் முன்னும் பின்னு மாகக் கண்டபடி அமைக்கப்பட்டுள்ளன; எனவே, எல்லாச் சொற்களையும் ஒன்றன்பின் ஒன்றாக ஒரு முறை படித்துப் பார்த்துக் கொண்டு வந்தால்தான், எங்கேயோ ஓரிடத்தில் 'முதலை' என்னும் சொல் தட்டுப் படும். இதனால் காலமும் முயற்சியும் வீணே.

முதல் அகராதி :

எனவே, சொற்களை முதலெழுத்து வாரியாக அகர வரிசையில் அமைக்க வேண்டுமென்ற உணர்வு அரும் பலாயிற்று. இதனைப் பதினாறும் நூற்றாண்டின்

இறுதியிலேயே ஒரு புலவர் செய்து முடித்தே விட்டார். கி. பி. 1594-ஆம் ஆண்டில் சிதம்பர இரேவண சித்தர் என்னும் புலவர் 'அகராதி நிகண்டு' என்னும் பெயரில் ஒரு நூல் இயற்றினுர். இச் செய்தியை, அந்நூலின் பாயிரப் பகுதியில் அவரே பாடியுள்ள

" அரிய சகாத்தம் ஆயிரத் தைஞ்ஞூற்று
ஒருபத் தாறென உரைத்திடும் ஆண்டினில்
............................ அகராதி நிகண்டென
ஓதினன் யாவரும் உணர்ந்திட நினைந்தே. "

என்னும் பாடற் பகுதியால் அறியலாம். சக ஆண்டு 1516-இல் இயற்றியதாக ஆசிரியர் அறிவித்துள்ளார். சக ஆண்டுடன் 78 ஆண்டுகள் கூட்டிக் கொண்டால் கி.பி. ஆண்டு கிடைக்கும். எனவே, சக ஆண்டு 1516 என்ருல், கி. பி. 1594-ஆம் ஆண்டில் அகராதி நிகண்டு இயற்றப்பட்டது என்பது தெளிவு.

சொற்கள் அ, ஆ, இ, ஈ என்ற அகரவரிசையில் முறைப்படுத்தப்பட் டிருத்தலின், இந்நூல் 'அகராதி நிகண்டு' என்னும் பெயர் பெற்றது. தமிழில் முதன் முதலில் ஏற்பட்ட அகராதிநூலே இதுதான்-அகராதி என்னும் சொல்லை முதன் முதலாகக் கற்றுக் கொடுத் ததே இதுதான்-இக்காலத்தில் சொற்பொருள் விளக் கும் நூல் வகைகளை யெல்லாம் அகராதி யென்னும் பெயரால் நாம் அழைப்பதற்கு மூலஊற்று இது வேதான்.

**உலக முதல் அகராதி :**

அகராதி நிகண்டு தமிழ் மொழியில் தோன்றிய முதல் அகராதி மட்டுமன்று ; இதுவரைக்கும் தெரிந்

துள்ள ஆராய்ச்சி முடிபின்படி, உலகத்தின் முதல் அகராதியும் இதுவேதான். தொல்காப்பியமே போல, இற்றைக்கு 2500 ஆண்டுகட்கு முன் அசிரிய மக்கள் சொற்பொருள் கூறும் துறைநூல் இயற்றினரெனி னும், மேலைநாட்டில் முதன் முதலாக அகரவரிசையில் அகராதிநூல் தோன்றியது பதினேழாம் நூற்றாண் டில்தான். அதாவது, 1612-ஆம் ஆண்டில் இத்தாலி மொழியில் முதல் முதலாக அகரவரிசையில் அகராதி தோன்றியது. இந்த இத்தாலி அகராதிக்குப் பதி னெட்டாண்டுகட்கு முன்பே-1594-ஆம் ஆண்டிலேயே தமிழில் அகராதி நிகண்டு தோன்றிவிட்டதன்றோ? எனவேதான் அகராதி நிகண்டு உலக முதல் அகராதி என இங்கே சிறப்பித்து எழுதப்பட்டது.

1594–இல் 'அகராதி' என்னும் பெயரை அறிமுகப் படுத்திய இரேவணசித்தர், அதற்குப் பதிலாக 'அகர முதல்' என்னும் அழகிய தூய தமிழ்ப் பெயரைத் தம் நூலிற்கு வைத்திருந்தால் இன்னும் நன்றாக இருக்கும். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தோன் றிய திருக்குறளி லுள்ள

> "அகர முதல வெழுத்தெல்லா மாதி
> பகவன் முதற்றே யுலகு"

என்னும் முதல் பாடலிலும், மூவாயிரம் ஆண்டுக்கு முன் தோன்றிய தொல்காப்பியத்திலுள்ள

> "எழுத் தெனப் படுப,
> அகர முதல் னகர இறுவாய்
> முப்ப ·. தென்ப
> சார்ந்து வரல் மரபின் மூன் றலங் கடையே."

என்னும் முதல் பாடலிலும் 'அகர முதல்' என்னும் அழகிய தொடர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதன்றோ?

இந்தத் தொடரைப் பயன்படுத்திக் கொள்ளலாமே! ஒருவேளை, 'அகர முதல்' என்னும் தொடரின் துணை கொண்டே 'அகராதி' என்னும் பெயரை அமைக்க இரேவண சித்தர் கற்றுக்கொண்டிருந்தாலும் இருக்கலாம்

## டும்-டும்-டும்-டும்

"வாலு போச்சு கத்தி வந்தது டும் டும்- கத்தி போச்சு மாங்காய் வந்தது டும் டும்- மாங்காய் போச்சு சோறு வந்தது டும் டும்-சோறுபோச்சு மேளம் வந்தது டும் டும் டும் டும்"- என்ற கதையே போல, உரியியல் என்னும் பெயர் போய் உரிச்சொல் என்னும் பெயர் வந்தது- உரிச்சொல் போய் நிகண்டு வந்தது-நிகண்டு போய் அகராதி வந்தது- இப்போதோ அகராதிக்குப் பதிலாக 'அகர வரிசை' என்னும் பெயர் வந்து கொண்டிருக்கிறது. வடமொழியிலுங்கூட, நிகண்டு அபிதானம், கோசம், நாமமாலை என்னும் பெயர்கள் மாறி மாறி அகராதித் துறை நூற்களைக் குறித்தன. ஐரோப்பிய மொழியிலுங்கூட இப்படித்தான்! பல பெயர்களைக் கடந்த பின்னரே ஆங்கிலத்தில் Dictionary என்னும் பெயர் இப்போது நடை முறையில் இருந்து வருகிறது. Dictionary என்னும் பெயருக்கு முன் இருந்த பெயர்கள் பின் வருமாறு:—

Nominale (பெயர்ப் புத்தகம்), Medulla grammatices (இலக்கணத் தோழன்),Ortus Vocabulorum (சொற்களின் தோட்டம்), Promptorium Parvulorum (சொல்லெடுத்துக் கொடுப்போன்), Catholicon Anglicum, Manipulus Vocabulorum (கையடக்க அகராதி), Alvearie (சொற்களின் தேன் கூடு), Abecedarium (ஆரம்ப ஆசிரியன்), Bibliotheca (சொல் நூல் நிலையம்), Thesaurus (சொற்

கருவூலம்); Word-hord, World of Words (சொல்லுலகம்) English Expositor (ஆங்கிலத் தெளி பொருள் விளக்கி,) Ductor in Linguas (மொழியின் வழிகாட்டி), glossographia (அருங் கலைச் சொல் விளக்கம்), New world of words (சொற்களின் புத்துலகம்), Etymologicum (சொல் விளக்க இலக்கணம்), gazophylacium, Dictionary.

மேற் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களெல்லாம் அகராதியைக் குறிக்கும் பொதுப்பெயர்களாகத் தெரிய வில்லை; சொற் பொருள் கூறும் நூல் இயற்றத் தொடங்கிய ஆசிரியர் ஒவ்வொருவரும் தத்தம் விருப் பத்திற் கேற்பத் தத்தம் நூலுக்கு வைத்த பெயர் களாகவே தெரிகின்றன. இது எது போன்ற தெனின்-, பண்டு தமிழகத்தில் சொற் பொருள் கூறும் நிகண்டு நூற்கள் இயற்றத் தொடங்கிய ஆசிரியர்கள் தத்தம் நூலுக் கேற்ப 'நாம தீபம்' (பெயர் விளக்கு), 'அரும் பொருள் விளக்கம்', 'நாநார்த்த தீபிகை', 'பல் பொருள் சூடாமணி' என்றெல்லாம் பெயர் வைத்தாற் போன்ற தேயாம். ஆங்கிலத்தில் பல பெயர்களைத் தாங்கிக் கொண்டு சொற் பொருள் கூறும் நூற்கள் தோன்றிக் கொண்டிருந்தகாலை, கி.பி. 1538-ஆம் ஆண்டில் 'சர் தாமஸ் எலியட்' (Sir Thomas Elyot) என்னும் அறிஞர் Dictionary' என்னும் பெயரில் சொற் பொருள் கூறும் நூல் ஒன்று வெளியிட்டார். இந்த 'Dictionary' என்னும் பெயரே, பின்பு எல்லாவகைச் சொற் பொருள் கூறும் நூற்கட்கும் பொதுப் பெயராய் விட்டது. இது போலவே தமிழிலும் அகராதி என்னும் பெயரே பொதுப் பெயராய் நிலைத்து விட்டது.

ஐரோப்பிய மொழிகளிலுஞ் சரி-இந்திய மொழி களிலுஞ் சரி—பதினேழாம் நூற்றுண்டுவரை அருஞ்

சொற்கட்குப் பொருள் கூறும் வேலை மட்டுமே அகராதித் துறையில் நடந்து வந்தது; பின்னரே பல்துறைக் கலையகராதிகள் தோன்றலாயின. அவையும் அகர வரிசை முறையில் அடுக்கப்பட்டபோது அகராதித் துறையானது 'அகராதிக் கலை' என்னும் சிறப்புப் பெயருக்கு உரியதாயிற்று.

இத்துறை நூற்கள் அகராதி என்னும் பொதுப் பெயரால் அழைக்கப் பட்டாலும், இந்த அகராதி என்னும் பெயரை முழுப்பெயராகக் கொள்ளமுடியாது; அதாவது,—அகராதி என்றால் அகர வரிசையில் தொடங்குவது என்று மட்டுந்தான் பொருள். அகர வரிசையில் தொடங்கி என்ன செய்கிறது என்பதை இந்த அகராதி என்னும் பெயர் விளக்கவில்லை. அகர வரிசையில் தொடங்கிப் பொருள் விளக்கும் நூல் என்று நாம் பெயர் விளக்கம் செய்து கொள்ள வேண்டும். எனவே, அகராதி என்னும் பெயரை ஒரு முதற்குறிப்புப் பெயராகக் கொள்ள வேண்டும்.

எப்படியோ அகராதி என்னும் அருமைப் பெயர் கிடைத்துநிலைத்துவிட்டது. முதல் உலக அகராதியாக 1594 இல் தோன்றி அகராதி என்னும் பெயரைத் தமிழர்க்குக் கற்றுக்கொடுத்த அகராதி நிகண்டு என்னும் நூலில், முதலெழுத்தைப் பொறுத்த மட்டுமே சொற்கள் அகர வரிசையில் அடுக்கப்பட்டுள்ளன; இரண்டாவது - மூன்றாவது முதலிய எழுத்துக்களைப் பொறுத்தும் சொற்கள் அகர வரிசையில் அமைக்கப்படவில்லை. இக்குறையை ஓரளவு போக்கும் முறையில், அகராதி நிகண்டிற்கு நூறாண்டு பின்தோன்றிய 'அசராதி மோனைக்கு அகராதி எதுகை' என்னும் நூலில், அகம், அகப்பை,

வண்டி, வண்டல் என்பனபோல, சொற்களின் முதலெழுத்துக்களே யன்றி இரண்டாவது எழுத்துக்களை நோக்கியும் அகர வரிசை அமைக்கப் பட்டது. இந்த நூலிலும் மூன்ருவது—நான்காவது—எழுத்துக்கள் அகர வரிசையில் கவனிக்கப் படவில்லை. எனவே, இக்கால அகராதிகளில் உள்ளாங்கு, சொற்களை முதலெழுத்துத் தொடங்கி இறுதி எழுத்து வரையும் அகர வரிசையில் நோக்கி அடுக்கிய பெருமை பதினேழாம் நூற்ருண்டுப் பாதிரிமார்கட்கே உரியதாம்.

நம் நாட்டில் கிறித்துவ சமயம் பரப்ப ஐரோப்பாவினின்றும் கிறித்துவப் பாதிரிமார்கள் பலர் பதினேழாம் நூற்ருண்டில் வந்திறங்கினர். அவர்கள் தமிழ் கற்ருர்கள். ஐரோப்பிய மொழிகளுடன் தமிழ் பிணைந்த அகராதிகளும் இயற்றத் தொடங்கினுர்கள். இவ்வகராதிகள், ஐரோப்பியர் தமிழ் தெரிந்து கொள்ளவும், தமிழர் ஐரோப்பிய மொழிகளை அறிந்து கொள்ளவும் பயன்பட்டன.

பதினேழாம் நூற்ருண்டின் பிற்பகுதியில்—அதாவது 1679-இல், 'ஆந்தம் தெ ப்ரோயன்சா (Fr. Antem de Proenca) என்னும் மேலைப்புலத் துறவியார் தமிழ்—போர்ச்சுகீசிய அகராதி இயற்றினுர். பதினெட்டாம் நூற்ருண்டில்—1732-இல், இத்தாலி நாட்டிலிருந்து வந்த 'பெஸ்கி' (Fr. Beschi) என்னும் துறவியார் 'சதுர் அகராதி' என்னும் தமிழகராதி இயற்றினுர். மேலும் பல ஐரோப்பியர்கள், பதினேழாம்—பதினெட்டாம் நூற்ருண்டுகளில் இலத்தீன், பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளுடன் தமிழ் பிணைந்த அகராதிகள்

பல இயற்றினர். இவை யெல்லாம் பின்னர்த் தனித் தனித் தலைப்பில் விரிவாக விளக்கப்படும்.

மேலை நாட்டார் இயற்றிய அகராதிகளுக்குள், பதினெட்டாம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் எனப் படும் 'பெஸ்கி' இயற்றிய சதுர் அகராதியும், 'ஃபாபிரிசியஸ்' (Fabricius) என்பவ ரியற்றிய தமிழ்—ஆங்கில அகராதியும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் 'ராட்லர்' (Rottler) என்பாரியற்றிய தமிழ்—ஆங்கில அகராதியும், 'வின்சுலோ' (Winslwo) என்பா ரியற்றிய ஆங்கிலம்—தமிழ் அகராதியும் தமிழ்—ஆங்கில அகராதியும் மிகவும் குறிப்பிடத் தக்கவை. பிற்காலத்தில் தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலச் சொல்லால் பொருள் கூறும் அகராதிகள் பலவும் ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லால் பொருள் கூறும் அகராதிகள் பலவும் தோன்றுதற்கு முன்னோடியாக — முதல் நூற்களாக இருந்தவை, ஃபாபிரிசியஸ், ராட்லர், வின்சுலோ ஆகியோரியற்றிய அகராதிகளேயாம். இவற்றிற்கெல்லாம் மேலாக, தமிழ்ச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லாலேயே பொருள் கூறும் தனித் தமிழ் அகராதிகள் பல தோன்றுதற்கு முன்னோடி முதல் நூலாகத் திகழ்ந்தது வீரமா முனி வரின் சதுர் அகராதியேயாம். இது, பெயர், பொருள் தொகை, தொடை என்னும் நான்கு பிரிவுகளை உடைய தாதலின் 'சதுர் அகராதி' எனப்பட்டது. பிற்காலத்தில் தமிழ்ப் பெரும் புலவர்கள் பலரால் தொகுக்கப்பட்ட மிகப் பெரிய தமிழகராதிகள் பலவும் இந்தச் சதுர் அகராதியைப் பின்பற்றி யெழுந்தனவே.

— மேலை நாட்டினரின் ஈடுபாட்டினுல் தமிழ் அகராதித் துறைக்குச் சில நன்மைகள் கிடைத்தன. அவை யாவன :—

(1) நிகண்டு என்னும் பெயரில் செய்யுள் நடையில் இருந்த அகராதித் துறை, எல்லோரும் எளிதில் படித்துணருமாறு தனித்தனிச் சொல் நடையில் வந்தது.

(2) சொற்களின் முதல் எழுத்து—இரண்டாவது எழுத்து வரைக்கு மட்டுமே இதற்குமுன் அக்ர வரிசை கவனிக்கப்பட்டது. வெள்ளையர் வந்தபின் இறுதி எழுத்து வரைக்கும் அகர வரிசை பின்பற்றப் பட்டது.

(3) பழைய நிகண்டுகளில் அருஞ் சொற்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தன. ஆனுல், வெள்ளையர்கள் புதிதாகத் தமிழ் கற்றுக் கொண்டதனுல் அவர்கட்கு அருஞ் சொற்கள் இவை—எளிய சொற்கள் இவை என்ற பாகுபாடே தெரியாமற்போயிற்று; எனவே, அவர்கள் அருஞ் சொற்கள்—எளிய சொற்கள் ஆகிய எல்லாச் சொற்களையும் தொகுத்துத் தமிழ்ச் சொல் வளத்தை முழு உருவத்தில் காட்டினர்.

(4) கிறித்துவம் பரப்புவதற்காக அவர்கள் கல்லாத எளிய மக்களோடும் பழகியதால், அம்மக்கள் வாயிலாக அறிந்து கொண்ட எளிய பேச்சு வழக்குச் சொற்களையும் சேர்த்து அகராதிகளின் வடிவத்தை. முழுமைப் படுத்தினர்.

(5) வினைச் சொற்களின் வேர்ச் சொற்களைத் தனி அடையாளமிட்டுக் காட்டி, அவ்வேர்ச் சொற்களி லிருந்து மற்ற வினையுருவங்கள் தோன்றுமாற்றை எடுத்துக்காட்டியுள்ளனர்.

(6) தமிழ்ச் சொற்களுக்கு நேரான இலத்தீன்—போர்ச்சுகீசியம்—பிரெஞ்சு—ஆங்கிலம்--ஆகிய மொழிச் சொற்களை அறிந்து கொள்ள வாய்ப்பு ஈந்தனர்.

இப்படியாக, சொற் பொருள் கூறும் கலைத்துறை, செய்யுள் நடையாலான நிகண்டுகளிலிருந்து தனிச் சொல் நடையாலான அகராதிகளாக மாறிப் பல்வகை வளர்ச்சிப் பருவங்களைப் படிப்படியாக எய்தியது. பத்தொன்பதாம் நூற்றாண்டோடு, போர்ச்சுகீசியம், இலத்தீன், பிரெஞ்சு ஆகிய ஐரோப்பிய மொழிகளுடன் தமிழ் பிணைந்த அகராதிகள் புதிதாகத் தோன்றுவது நின்றுவிட்டது. இருபதாம் நூற்றாண்டில், ஆங்கிலத்தோடு தமிழ் பிணைந்த அகராதிகள் பலவும், வட மொழி, இந்தி முதலிய இந்திய மொழிகளோடு தமிழ் பிணைந்த அகராதிகள் சிலவும் மட்டுமே புதிதாகத் தோன்றின. இவற்றோடு, தமிழுக்குத் தமிழ் அகராதிகள் மிகப் பல தோன்றின என்பது சொல்லாமலே விளங்கும்.

தமிழுக்குத் தமிழிலும், சொற்பொருள் கூறும் அகராதிகளே யன்றி, தொடக்கத்தில் கூறியுள்ளாங்கு, தனி நூல் அகராதி, தனித்துறை யகராதி, கலைச்சொல் அகராதி, கலைக் களஞ்சியம், ஒப்பியல் மொழியகராதி, பழமொழி யகராதி, புலவர் அகராதி, தொகையகராதி, தொடையகராதி முதலிய பல்வகை அகராதிகள் இருபதாம் நூற்றாண்டில் தோன்றித் தமிழ் மொழி வளங்கொழிக்கச் செய்தன. இன்னும் பல்துறை யகராதிகள் உருவாகிக்கொண் டுள்ளன.

மூவாயிரம் ஆண்டுக்கு முந்திய தொல்காப்பியக் காலமுதல் இன்றுவரை யுள்ள தமிழ் அகராதிக் கலை வரலாற்றின் சுருக்கம் இதுதான்! விரிவு இந்நூல் முழுது மாகும்!

## தொல்காப்பியம்

இந்நூலில், சொற் பொருள் கூறும் துறையில் முதல் நூலாகிய தொல்காப்பியம்முதல் இன்று தோன்றிய அகராதிவரை ஆராய வேண்டும். அவ் வரிசைப்படி முதல்நூலாகிய தொல்காப்பியங் குறித்து இப்பகுதியில் சிறிது ஆய்வாம்:—

தொல்காப்பியம் ஒரு மொழியிலக்கண நூல். தொல்காப்பியர் என்னும் தமிழ்ப் பெரும் புலவரால் இயற்றப்பட்டதால் தொல்காப்பியம் என இஃது அழைக்கப்படுகிறது.

### ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் தொல்காப்பியரின் வரலாறு பற்றி உறுதியாக ஒன்றும் வரையறுத்துக் கூறவியலாது. திருவள்ளுவர், ஔவையார் முதலியோரின் பிறப்பு வளர்ப்பு குறித்து என்னென்னவோ கதைகள் நடமாடுவதுபோன்றே தொல்காப்பியர் பற்றியும் கதைகள் பல வழங்குகின்றன. இவர் குடிப்பெயர் 'காப்பியம்' என்பதாம்; பழம்பெருங் காப்பியக் குடியில் தோன்றியதால், குடிப்பெயராலேயே இவர் தொல்காப்பியர் என அழைக்கப்பட்டாராம்.

அகத்தியரின் மாணுக்கர் பன்னிருவருள் தொல்காப்பியர் தலைமாணுக்கராம். அதங்கோட்டாசான், செம்பூட்சேய், வாய்ப்பியனுர்,பனம்பாரனுர், அவிநயனுர், காக்கைப்பாடினியார், நற்றத்தனுர் முதலியோர் தொல்

காப்பியருடன் அகத்தியரிடம் கல்வி கற்றவர்களாம். இவர்கள் எல்லாருமே, தொல்காப்பியர் தொல்காப்பியம் இயற்றியது போல் ஆளுக்கோர் இலக்கண நூல் இயற்றினுர்கள்; ஆனுல் அவை நமக்குக் கிடைத்தில. இவர்தம் நூற்கட்கு முதல்நூலாக—ஆசிரியர் அகத்தியனுரால் இயற்றப்பட்டுத் திகழ்ந்த அகத்தியம் என்னும் தலைநூலே நமக்குக் கிடைக்கவில்லையே. தொல்காப்பியமாவது மறையாது கிடைத்திருப்பது ஒருவகையில் நமது பெரும்பேறே.

தொல்காப்பியர் தமது தொல்காப்பிய நூலை, 'நிலந்தரு திருவிற் பாண்டியன்' என்னும் மன்னனது அவையில், தம்நட்புப் புலவராகிய அதங்கோட்டாசான் முன்னிலையில் அரங்கேற்றினுராம். இச்செய்திகளை, பன்னிரு படலம் என்னும் நூலிலுள்ள

"ஆனுப் பெருமை அகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
பொருந்தக் கற்றும் புரைதப வுணர்ந்தோர்
நல்லிசை நிறுத்தத் தொல்காப்பியனும்..."

என்னும் பாயிரப் பாடற் பகுதியானும், புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூலிலுள்ள

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப்பியன்முதல்
பன்னிரு புலவரும்........."

என்னும் பாடற் பகுதியானும், தொல்காப்பியருடன் பயின்றாண்பராகிய பனம்பாரனுர் என்னும் புலவரால் சிறப்புப் பாயிரமாக இயற்றப் பெற்றுத் தொல்காப்பியத்துக்கு முன்னுல் சேர்க்கப்பட்டுள்ள,

" வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந் தொகுத் தோனே போக்கறு பனுவல்;
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்
தறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே".

என்னும் பாயிரப் பாடலானும் ஓரளவு அறியலாம்.

## தொல்காப்பியக் காலம்

தொல்காப்பியரது காலத்தைத் திட்டவட்டமாக உறுதிப் படுத்துவதற்குரிய அகச்சான்று யாதொன்றுமிலது. நம் முன்னோர்கள் முறையாக வரலாற்றை எழுதி வைக்காததால் நேர்ந்த பெருங்குறையே யிது. இதனால், பெரும்பாலான மன்னர்கள், புலவர்கள் முதலியோர்தம் காலத்தை இன்னமும் சரியாக வரையறுத்துக் கூற முடியவில்லை. கால வாராய்ச்சி ஓரளவு உய்த்துணர்வின் வாயிலாகவே செய்யப் படுகிறது. இந்நிலையில் தொல்காப்பியக் காலமும் உய்த்துணர்ந்தே (யூகித்தே) உரைக்கப்படுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய கடைச் சங்கப் புலவர்களே யன்றி, அதற்கும் முன் தோன்றிய இடைச் சங்கப் புலவர்களும் இந்தத்

தொல்காப்பியத்தைப் பயன்படுத்தினர். தொல் காப்பியம் அரங்கேற்றப்பட்ட பேரவைக்குத் தலைமை தாங்கிய நிலந்தரு திருவிற் பாண்டியனும் தலைச்சங்க காலத்தைச் சேர்ந்தவனாக ஆராய்ச்சியாளர் சிலரால் அறிவிக்கப்பட்டுள்ளான். எனவே, எது எப்படியிருந்த போதிலும், இற்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முந்தியது தொல்காப்பியம் என உறுதி யாகக் கூறலாம்; ஒரு தோற்றமாக மூவாயிரம் ஆண்டுகட்கு முந்தியது என்று மொழியலாம்; எனவே, தொல்காப்பியத்தின் காலம் ஏறத்தாழ கி. மு. 1000 ஆகும். ஐயாயிரம் ஆண்டுக்கு முந்தியது என்று மொழிவாருமுளர்.

## நூலின் அமைப்பு

தொல்காப்பியம் நூற்பா (சூத்திர) நடையா லானது. இஃது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளை யுடையதென்பது முன்னரே கூறப்பட்டது. ஒவ் வோர் அதிகாரத்திலும் ஒன்பது இயல்கள் (உட் பிரிவுகள்) உள்ளன. ஆக மொத்தம் (3 x 9=27) இரு பத்தேழு இயல்களை யுடையது தொல்காப்பியம்.

எழுத்ததிகாரத்தில் எழுத்திலக்கணமும், சொல் லதிகாரத்தில் சொல்லிலக்கணமும், பொருளதி காரத்தில் வாழ்வியல் இலக்கணமும் யாப்பிலக்கணமும் அணியிலக்கணமும் சொல்லப்பட்டுள்ளமை ஈண்டு மீண்டும் நினைவுகூரத் தக்கது.

இவற்றுள் சொல்லதிகாரத்திலுள்ள இடையியல், உரியியல் என்னும் இரு பகுதிகளிலும், பொருளதி

காரத்திலுள்ள மரபியல் என்னும் பகுதியிலும் சொற் பொருள் கூறும் அகராதிக் கூறு அமைந்துள்ளது. இனிமுறையே அம்மூன்று இயல்கள் குறித்து ஆய்வாம்:-

**இடையியல் :**

இடையியலில், மன், தில், கொன், உம், ஓ, ஏ, என, என்று, மற்று, எற்று, மற்றையது, மன்ற, தஞ்சம், அந்தில், கொல், எல், ஆர், குரை, மா, மியா, இக, மோ, மதி, இகும், சின், அம்ம, ஆங்க, யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, ஆக, ஆகல், என்பது, ஔ, எனு, என்ரு, ஒடு—முதலிய இடைச்சொற்கட்கு உரிய பொருள்கள் விளக்கப்பட் டுள்ளன. எடுத்துக் காட்டாகச் சில இடைச்சொற்களின் பொருள்கள் வருமாறு:-

'கொன்' என்னும் இடைச்சொல், அச்சம், பயன் இல்லாதது, காலம், பெருமை என்னும் நான்கு பொருள் உடையதாம் :

"அச்சம், பயமிலி, காலம், பெருமையென்று
அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே."

என்பது தொல்காப்பிய நூற்பா. 'மன்ற' என்னும் சொல்லுக்குத் தேற்றம் (தெளிவு) என்று பொருளாம். 'தஞ்சம்' என்னும் சொற்கு எண்மை (எளிமை) என்று பொருளாம். 'கொல்' என்னும் சொற்கு ஐயம் (சந்தேகம்) என்று பொருளாம்:-

"மன்ற என்கிளவி தேற்றம் செய்யும்."

"தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே."

"கொல்லே ஐயம்."

என்பன நூற்பாக்கள். இவ்வாறே மற்ற இடைச் சொற்களின் பொருள்களையும் தொல்காப்பிய இடையியலில் கண்டு கொள்க. எல்லா இடைச்சொற்களையும் எல்லாப் பொருள்களையும் ஈண்டுக் கூறமுடியாது என்று தொல்காப்பியரே எழுதியுள்ளார்.

**உரியியல் :**

சொற்பொருள் கூறும் துறையில் மிகவும் இன்றியமையாததான உரியியலில் 'உறு' என்னும் சொல் முதலாக 'எறுழ்' என்னும் சொல் ஈருக நூற்றிருபது உரிச் சொற்கட்குப் பொருள் கூறியுள்ளார் தொல்காப்பியர். மாதிரிக்காகச் சில சொற்களின் பொருள்கள் வருமாறு:-

உறு, தவ, நனி என்னும் மூன்று உரிச்சொற்களும் 'மிகுதி' (அதிகம்) என்னும் பொருள் உடையனவாம்:

"உறுதவ நனியென வரூஉ மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப."

என்பது நூற்பா. குரு, கெழு என்னும் சொற்கட்கு நிறம் என்று பொருளாம். செல்லல், இன்னல் என்னுஞ் சொற்கட்கு இன்னுமை (துன்பம்) என்று பொருளாம்:

"குருவும் கெழுவும் நிறன் ஆகும்மே."

"செல்லல் இன்னல் இன்னு மையே."

என்பன நூற்பாக்கள். மேலும் சில சொற்பொருள் அறிவிக்கும் நூற்பாக்கள் வருமாறு:-

"மல்லல் வளனே." (மல்லல்—வளம்)

"மழவும் குழவும் இளமைப் பொருள."

"சீர்த்தி மிகுபுகழ்."

"மாலை இயல்பே."

"கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்."
(உள்ளது சிறத்தல்—Evolution)

"கதழ்வும் துனைவும் விரைவின் பொருள."

"தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்."

"தடவும் கயவும் நளியும் பெருமை."

"பழுது பயம் இன்றே." (பயம்—நன்மை)

"முழுது என்கிளவி எஞ்சாப் பொருட்டே."

"வம்பு நிலையின்மை."

"மாதர் காதல்."

"புலம்பே தனிமை."

"வெம்மை வேண்டல்". (விருப்பம்)

"வறிது சிறிது ஆகும்."

"ஏற்றம் நினைவும் துணிவும் ஆகும்."

"பையுளும் சிறுமையும் நோயின் பொருள."

"எய்யாமையே அறியாமையே."

"தெவ்வுப் பகையாகும்."

"செழுமை வளனும் கொழுப்பும் ஆகும்."

" விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்."

" கருவி தொகுதி." (கூட்டம்)

" இலம்பாடு, ஒற்கம் ஆயிரண்டும் வறுமை."

" பே, நாம், உரும் என வரூஉங் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள."

" வாள் ஒளியாகும்."

" உசாவே சூழ்ச்சி." (ஆலோசனை)

" வயா என்கிளவி வேட்கைப் பெருக்கம்."

" கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள."

" புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி."
(யாணர்—புதுவருவாய்)

" யாணுக் கவினும்." (யாணு—அழகு)

" ஐ வியப்பு ஆகும்."

" வையே கூர்மை."

" எறுழ் வலி ஆகும்."

மேலுள்ள நூற்பாக்களில் பல வளமான அரிய அழகிய புதிய சொற்களையும் அவற்றின் பொருள் களையும் கண்டோம்; அரிய சொற்கட்கிடையே தீர்தல், தீர்த்தல், பழுது, முழுது, செழுமை ஆகிய எளிய சொற்களையும் கண்டோம்; நமக்கு எளியன வாகத் தோன்றும் இச்சொற்கள் தொல்காப்பியர் காலத்தில் அரியனவாகக் கருதப்பட்டன போலும். மற்றும், தொல்காப்பியர் 'கடி' என்னும் ஓர் உரிச் சொல்லுக்குப் பன்னிரண்டு பொருள்கள் கூறி யுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்:-

"கடி என் கிளவி
வரைவே, கூர்மை, காப்பே, புதுமை,
விரைவே, விளக்கம், மிகுதி, சிறப்பே,
அச்சம், முன்தேற்று, ஆயீ ரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே.
ஐயமும், கரிப்பும், ஆகலும் உரித்தே."

இந் நூற்பாவில் கடி என்னும் சொற்கு உரிய பன்னிரு பொருள்களைக் காணலாம்.

இப்பகுதியில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள சொற்களுள் சில சொற்கட்கு எல்லாரும் அறிந்த பொருள் கூறப்படவில்லையே என்று சிலர் கேட்கலாம்; எடுத்துக்காட்டாக,— கடி என்னும் சொல்லுக்குக் 'கடித்தல்' என ஒரு பொருளும் உண்டே—அது தொல்காப்பிய நூற்பாவில் கூறப்படவில்லையே என்றும், மாலை என்னும் சொல்லுக்கு மாலை நேரம் எனவும் ஒரு பொருள் உண்டே—அது கூறப்பட வில்லையே—'மாலை இயல்பே' என இயல்பு (தன்மை) என்னும் பொருள் மட்டுந் தானே கூறப்பட்டிருக்கிறது என்றும் கேட்கலாமல்லவா? இதற்குத் தக்க விடை வருமாறு:-

கடித்தல் எனப் பொருள்படும் இடத்தில் கடி என்னும் சொல் வினைச்சொல்லாகும்; வரைவு, கூர்மை முதலிய பொருள்படும்போது கடி என்னும் சொல் உரிச்சொல்லாகும். மாலை நேரம் எனப் பொருள்படும் இடத்தில் மாலை என்னும் சொல் காலப் பெயர்ச்சொல்லாகும்; இயல்பு என்று பொருள்படும் போது மாலை என்பது உரிச்சொல் லாகும். இந்தப் பகுதியோ உரியியல். எனவே, சொற்கள் உரிச்சொற்களாக இருக்கும் நிலைக்கு மட்டுமே உரியியலில் பொருள் கூறப்படும்.

தொல்காப்பியர் உரியியலில் நூற்றிருபது சொற்களையும் அவற்றிற்குப் பொருளாகப் (அர்த்தமாகப்) பல சொற்களையும் கூறிவிட்டு, இறுதியில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

"எடுத்துக் கூறியுள்ள சொற்களைப் புரிந்து கொள்வதற்காக அவற்றின் பொருள்களாகச் சொல்லப் பட்டுள்ள சொற்களும் சிலருக்குப் புரியவில்லையென்றால், அவற்றிற்கும் நான் பொருள் சொல்லிக் கொண்டிருக்க முடியாது; அப்படிச் சொல்வதானால் அதற்கு எல்லையே யிராது; எனவே, ஒருவனுக்கு ஒரு சொல்லும் அதன் பொருளும் புரியவில்லை என்றால், அவனுக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர், நன்றாகத் தெரிந்த வேறு ஓர் எளிய சொல்லின் துணைகொண்டோ-அல்லது — கண்ணுக்குத் தெரியும் ஓர் உருவப் பொருளைக் காட்டி அதன் துணைகொண்டோ விளக்கலாம். ஆசிரியர் எவ்வளவுதான் முயன்று உணர்த்தினும், கற்பவரின் உணரும் ஆற்றலையும் பொறுத்தே பொருள் புலப்பாட்டில் வெற்றி கிடைக்கும்.''— என்று தொல்காப்பியர் மொழிந்துள்ளார். இதனை,

**"பொருட்குப் பொருள் தெரியின் அதுவரம் பின்றே".**

**"பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின்."**

**"உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே".**

என்னும் உரியியல் நூற்பாக்களால் உணரலாம். இக்காலக் கல்வியில் சொல்லுக்குப் பொருள் கூறும் முறைபற்றிப் பயிற்று முறை (போதனுமுறை) நூற்களுள் பல வழிகள் கூறப்பட்டுள்ளன; அவற்

றுடன், மேலுள்ள தொல்காப்பிய நூற்பாக்களேயும் கருத்திற் கொள்வது கல்வியுலகத்திற்குக் கடமை யாகும்.

**மரபியல்**

மரபியல் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் இறுதியில் உள்ளது. இன்னும் கேட்டால், தொல் காப்பிய முழுநூலின் இறுதிப் பகுதியே மரபியல்தான். மரபியலிலும் சொற்பொருள் கூறும் துறைக்கூறு அமைந்துள்ளது. மரபு என்னும் சொல்லுக்கு ஈண்டு முறைமை அல்லது வழக்கமுறை என்று பொருள் கொள்ளலாம்; அதாவது, இதையிதை இப்படி யிப்படித்தான் சொல்வது முறை—இதையிதை இப்படி யிப்படித்தான் செய்வது வழக்கம்—என்று வகுத்துக் கொண்டு உலக வழக்கில் பின்பற்றி வருகிருே மல்லவா ?— அதற்குத்தான் மரபு என்று பெயராம். எடுத்துக் காட்டாக, மிகச் சிறிய கோழியைக் கோழிக் குஞ்சு என்று சொல்வதுதான் மரபே தவிர, கோழிக் குட்டி என்று சொல்வது மரபன்று; மிகச் சிறிய யானையை யானைக் குட்டி என்று சொல்வது மரபே தவிர, யானைக்குஞ்சு என்று சொல்வது மரபன்று.

தொல்காப்பியர் மரபியலில் இதையிதை இப்படி யிப்படித்தான் சொல்ல வேண்டும் என்ற முறையில் பலவகைப் பொருள்கட்குரிய மரபுச் சொற்களேக் கூறியுள்ளார். ஆனுல், ஆசிரியர் காலத்தில் வழங்கிய சில மரபு முறைகள் பிற்காலத்தில் மாறிப்போக, வேறு விதமாகவும் வழங்கப் படுகின்றன. ஆம்! கால வெள்ளத்தில் மிதந்து கலித்துச் செல்லும் உயிருள்ள மொழியின் போக்கை முற்றிலும் யாரே தடுக்க முடியும் ?

இனி, மரபியலின் மாதிரிக்காகச் சில மரபுச் சொற்களைக் காண்போம் :— பறவை-விலங்குகளின் இளமை நிலையைக் குறிக்கும் பெயர்கள் முதல் நூற்பாவில் கூறப்பட்டுள்ளன. அப் பா வருமாறு :—

" மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற்
பார்ப்பும், பறழும், குட்டியும், குருளையும்,
கன்றும், பிள்ளையும், மகவும், மறியும் என்று
ஒன்பதும் குழவியோடு இளமைப் பெயரே."

இவற்றுள்ளும், பார்ப்பு, பிள்ளை என்னும் இரு பெயர்களும் பறவை, ஊர்வன என்னும் இரண்டு இனங்களின் இளமை நிலையைக் குறிக்கும் பெயர் களாம் :—

" அவற்றுள்,
பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்று இளமை."
" தவழ்பவை தாமும் அவற்றோர் அன்ன."

என்பன நூற்பாக்கள், மூங்கா (கீரி), வெருகு (பூனை), எலி, அணில் இந்நான்கிற்கும் குட்டி, பறழ் என்னும் இளமைப் பெயர்கள் உரியனவாம் :—

" மூங்கா வெருகெலி மூவரி அணிலொடு
ஆங்கவை நான்கும் குட்டிக்கு உரிய."
" பறழ் எனப்படினும் உறழாண் டில்லை."

என்பன நூற்பாக்கள். நாய், பன்றி, புலி, முயல், நரி ஆகியவற்றிற்குக் குருளை, குட்டி, பறழ் என்னும் இளமைப் பெயர்கள் உரியனவாம். இவற்றுள் நாய் தவிர மற்றவற்றிற்குப் பிள்ளை என்னும் இளமைப் பெயரும் உரியதாம் :—

" நாயே பன்றி புலி முயல் நான்கும்
ஆயுங் காலைக் குருளை என்ப"

" நரியும் அற்றே நாடினர் கொளினே."

" குட்டியும் பறழும் கூற்றவண் வரையார்."

" பிள்ளைப் பெயரும் பிழைப்பாண் டில்லை
கொள்ளுங் காலை நாயலங் கடையே."

என்பன நூற்பாக்கள். இப்படியே மற்ற மற்ற விலங்குகட்குரிய மற்ற மற்ற இளமைநிலைப் பெயர்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பின்வரும் நூற்பாவில் பறவை—விலங்குகளின் ஆண்பாற் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன :—

" எருதும், ஏற்றையும், ஒருத்தலும், களிறும்
சேவும், சேவலும், இரலையும், கலையும்,
மோத்தையும், தகரும், உதளும், அப்பரும்,
போத்தும், கண்டியும், கடுவனும், பிறவும்
யாத்த ஆண்பாற் பெயரென மொழிப."

பின்வரும் நூற்பாவில் பறவை-விலங்குகளின் பெண்பாற் பெயர்கள் பேசப்பட்டுள்ளன :—

" பேடையும், பெடையும், பெட்டையும்; பெண்ணும்,
மூடும், நாகும், கடமையும், அளகும்,
மந்தியும், பாட்டியும், பிணையும், பிணவும்,
அந்தம் சான்ற பிடியொடு பெண்ணே."

இவற்றுள் இந்த இந்தப் பெயர்கள் இந்த இந்த ஆண் பறவைக்கும், ஆண் விலங்கிற்கும் உரியன என்றும், இன்னின்ன பெயர்கள் இன்னின்ன பெண் பறவைக்கும், பெண் விலங்கிற்கும் உரியன என்றும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இன்னின்ன பறவை—விலங்குகளோடு இன்னின்ன மரபுப் பெயர்களைச் சேர்த்துச் சொல்ல வேண்டும் எனத் தொல்காப்பியரால் கூறப்பட்டிருப்பவற்றுள் பல வழக்காறுகள் இக்காலத்தில் இல்லை. எனவே, மேலுள்ள தொல்காப்பிய நூற்பாக்களைப் படிக்கும்போது நமக்கு வியப்பும் வேடிக்கையும் தோன்றுகின்றன.

மற்றும், மரபியலில் மரம்—புல்வகைகளைப்பற்றியும் சில செய்திகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. வெளி வயிரம் உடையது 'புல்' எனப்படுமாம். உள் வயிரம் உடையது மரம் எனப்படுமாம். தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை முதலியன புல்லின் உறுப்புக்களாம். இலை, முறி, தளிர், தோடு, சினை, குழை, பூ, அரும்பு, நனை, முதலியன மரத்தின் உறுப்புக்களாம்:—

"புறக் காழனவே புல்லெனப் படுமே."

"அகக் காழனவே மரமெனப் படுமே."

"தோடே, மடலே, ஓலை என்ரு
ஏடே, இதழே, பாளை என்ரு
ஈர்க்கே, குலையே நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்."

"இலையே, முறியே, தளிரே, தோடே
சினையே, குழையே, பூவே, அரும்பே,
நனையே, உள்ளுறுத் தனையவை யெல்லாம்
மரனொடு வரூஉங் கிளவி யென்ப."

என்பன நூற்பாக்கள். இச்சொல் வளங்களை அறியும் போது உள்ளத்தில் உவகை ஊற்றெடுக்கின்றதன்றோ? தோடு, மடல், ஓலை, ஏடு, இலை, முறி

முதலிய சொற்களைக் குறிக்க ஆங்கில மொழியில் Leaf என்னும் ஒரே சொல்தான் உள்ளமை ஈண்டு ஒப்பு நோக்கற்பாற்று.

மற்றும், ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்னும் எண்களால் சுட்டப்படும் ஒரு சார் தொகைப் பெயர்கள் மரபியலில் விளக்கப்பட்டுள்ளன. அவையாவன :—

ஓர் அறிவு என்பது உற்றறியும் (தொட்டுணரும்) தோல் அறிவு; ஈரறிவு என்பன அதனோடு (தோல் அறிவோடு) நாக்கறிவு ; மூவறிவு என்பன அவற்றோடு மூக்கறிவு ; நாலறிவு என்பன அவற்றோடு கண்ணறிவு ; ஐயறிவு என்பன அவற்றோடு செவியறிவு ; ஆறறிவு என்பன அவற்றோடு மன அறிவு :—

“ ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.”

என்பது நூற்பா. ஓரறிவுடைய உயிர்கள் புல், மரம் முதலியன. ஈரறிவுடையவை நந்து (நத்தை), முரள் (இப்பி) முதலியன. மூவறிவின சிதல் (கறையான்), எறும்பு முதலியன. நாலறிவின நண்டு, தும்பி முதலியன. ஐயறிவின மா(விலங்கு), புள் (பறவை) முதலியன. ஆறறிவின மக்கள், ஒருசில உயர் அறிவுடைய விலங்குகள் முதலிய உயிர்கள் :—

" புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

" நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

" சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

" நண்டும் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

" மாவும் புள்ளும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

" மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

" ஒருசார் விலங்கும் உளவென மொழிப."

என்பன நூற்பாக்கள். இப்படி இன்னும் பல பெயர் விளக்கங்கள் மரபியலில் தரப்பட்டுள்ளன.

## முப்பெரும் பிரிவுகள்

தொல்காப்பியத்திற்குப் பின்னெழுந்த நிகண்டு நூற்கள் மூன்று பெரும் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு தோன்றியனவாம். அம் முப்பெரும் பிரிவுகள் தொல்காப்பியத்திலிருந்தே உறிஞ்சி எடுக்கப் பட்டன. அவ்விவரம் வருமாறு :—

மேலே, தொல்காப்பிய இடையியல், உரியியல், மரபியல் ஆகியவற்றிலிருந்து சில சொல்—பெயர்—பொருள் விளக்கங்களைக் கண்டோம். கூர்ந்து நோக்குவோர்க்கு, அச்சொல்—பெயர்—பொருள் விளக்கங்களில் மூன்று கூறுகள் இலைமறை காய்களாக மறைந்து கிடப்பது புலனாகும். அவையாவன :—

(1) சில விடங்களில் ஒரே பொருளைக் குறிக்கும் பல பெயர்கள் (சொற்கள்) கொடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக,—மிகுதி என்னும் ஒரு பொருளைக் குறிக்க, உறு, தவ, நனி என மூன்று சொற்கள் காட்டப்பட் டுள்ளன; பெருமை என்னும் ஒரு பொருளைக் குறிக்க, தட, கய, நளி என்னும் மூன்று சொற்களும், அச்சம் என்னும் ஒரு பொருளைச் சுட்ட, பே, நாம், உரும் என்னும் மூன்று சொற்களும், கூறப்பட்டுள்ளன. இவை ஒரு பொருளைக் குறிக்கும் பல பெயர்கள் (சொற்கள்) ஆகையால் இவற்றிற்கு 'ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதி' எனப் பெயர் கொடுக்கலாம்.

(2) சில விடங்களில் ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் (அர்த்தங்கள்) தரப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக,—ஏற்றம் என்னும் ஒரு சொல்லுக்கு நினைவு, துணிவு என்னும் இருபொருள்களும், விழுமம் என்னும் ஒரு சொல்லுக்கு சீர்மை, சிறப்பு, இடும்பை என்னும் மூன்று பொருள்களும் சொல்லப்பட் டுள்ளன. கடி என்னும் ஒரே சொல்லுக்கு வரைவு, கூர்மை முதலிய பன்னிரண்டு பொருள்கள் கூறப்பட் டுள்ளன. ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் கொடுக்கப்பட் டிருப்ப தால் இன்னவற்றிற்கு 'ஒரு சொல் பல்பொருட் பெயர்த் தொகுதி' எனப் பெயர் தரலாம். சொல்லுக்குப் பொருள் கூறும் (Homonyms) பகுதியாகிய இதிலேயே, ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் கூறியிருப்பதையும் அடக்கிக் கொள்ள வேண்டியதுதான்!

(3) சில விடங்களில் பல பொருள்களின் கூட்ட மாகிய தொகைப் பெயர்கள்—அதாவது—எண்ணிக் கையால் குறிக்கப்படும் பெயர்கள் விளக்கப்பட்

டுள்ளன. எடுத்துக் காட்டாக,—மூன்று என்னும் எண்ணுல் சுட்டப்படும் 'மூவறிவு' என்னும் தொகைப் பெயர், தொடு அறிவு, நாக்கறிவு, மூக்கறிவு என்னும் பல பொருள்களின் கூட்டத்தைக் குறிக்கிறது. அதேபோல், தொடு அறிவு, நாக்கறிவு, மூக்கறிவு, கண்ணறிவு, செவியறிவு என்னும் பல பொருள்களின் கூட்டத்தை 'ஐயறிவு' என்னும் தொகைப் பெயர் குறிக்கிறது. பல பொருள்களின் கூட்டத்தைக் குறிக்கும் ஒரு தொகைப் பெயராக இருத்தலின் இன்னவற்றிற்குப் 'பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி' எனப் பெயர் அளிக்கலாம்.

மேற் கூறப்பட்டுள்ள முப்பெரும் பிரிவுகளின் அடிப்படையிலேயே, கிடைத்திருக்கும் நிகண்டுகளுள் முதல் நிகண்டாகிய சேந்தன் திவாகர நிகண்டு அமைந்துள்ளது. அதைப் பின்பற்றியே மற்ற நிகண்டுகளும் அமைந்துள்ளன. இவ்விவரங்கள் திவாகர நிகண்டைப் பற்றிய தனித்தலைப்பின்கீழ்ப் பின்னர் விரிவாக விளக்கப்படும்.

## ஆட்சியும் மாட்சியும்

இப்போது உலகமொழி எனப் புகழ்ந்து போற்றப் படுகிற ஆங்கில மொழியே ஆயிரம் ஆண்டுகளுக்குள் தான் உருவாகி இந்த உயர் நிலையை அடைந்துள்ளது. ஆனால் தமிழ் மொழியில் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே தொல்காப்பியம் என்னும் உயர்தனிப் பெரு நூல் தோன்றியுள்ள தென்றால், தமிழ் மொழியின் தொன்மையும் வன்மையும் சொல்லி முடியுமா? இன்னும் கேட்டால், 'நூல் வல்ல புலவர்கள் இவ்வாறு இயம்பியுள்ளனர்—அறிஞர்கள் அவ்வாறு

அறிவித்துள்ளனர்' என்றெல்லாம் பல விடங்களில் தொல்காப்பியரே கூறியிருப்பதை நோக்கின், தொல் காப்பியத்திற்கு முன்பே பெரு நூல்கள் பல தோன்றி யிருந்தமை புலனாகும்; ஆகவே, தமிழின் தொன்மைக்கு எல்லையே யில்லை என்பது தெளிவு. தோன்றியிருந்த பெரு நூல்கள் எங்ஙனமோ அழிந்துபோக, தொல் காப்பியம் ஒன்றே நிலைத்து நின்றதால் அதனையே பின்வந்த தமிழ்ப் புலவோர் பலரும் போற்றிக் கையாண்டனர். இடைச் சங்கத்திலும் கடைச் சங்கத்திலும் தொல்காப்பியமே ஆட்சி செலுத்தியது. தொல்காப்பிய இலக்கணத்தைப் பின்பற்றியே அனை வரும் நூல் இயற்றினர். படித்தவர்கள் என்றால், அவர்கள் தொல்காப்பியம் படிக்காமல் இருந்திருக்க முடியாது.

தொல்காப்பியத்தின் ஆட்சியும் மாட்சியும் பெருகவே அதற்கு உரைகள் பல தோன்றின. ஒரு நூலுக்கு எழுதப்பட்டுள்ள உரைகளின் எண்ணிக்கை அதன் ஆட்சிக்கும் மாட்சிக்கும் தக்க சான்றாகும். தொல்காப்பிய நூலுக்கு இளம்பூரணர், பேராசிரியர் கல்லாடர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச் சிலையார், சிவஞான முனிவர் முதலிய பழம் பெரும் புல வர்கள் இயற்றியுள்ள உரைகள் தரம் நிறைந்தவை. பத்தொன்பது — இருபதாம் நூற்றாண்டுகளில் தோன்றிய பேரறிஞர்கள் சிலரும் தொல்காப்பியத் திற்கு உரை வகுத்துள்ளனர். இஃதன்றி, வேறு சில நூற்களின் உரையிலும் தொல்காப்பிய நூற்பாக்கள் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. எட்டாம் நூற்றாண்டில் சேந்தன் திவாகர நிகண்டு இயற்றிய திவாகர முனிவரும், பதின் மூன்றாம் நூற்றாண்டில்

நன்னூல் என்னும் இலக்கண நூல் யாத்த பவணந்தி முனிவரும் தத்தம் நூற்களினிடையே தொல்காப்பிய நூற்பாக்கள் சிலவற்றை அப்படியே எடுத்துச் சேர்த்துக்கொண்டுள்ளனர். பிற்காலத்திய ஆசிரியர்கள் சிலரும் இப்பாதையில் சென்றுள்ளனர்.

இவ்வாறு தமிழ்ப் புலவோர் பலரும், குறிப்பிட்ட தொல்காப்பிய இலக்கணத்தைப் பின்பற்றித் தமிழ் மொழியை வளர்த்து வந்ததனுல், ஆங்கில மொழியில் நூற்றுண்டுக்கு நூற்றுண்டு தோன்றிய நூற்களினிடையே, இது வேறுமொழியோ அது வேறுமொழியோ என்று ஐயுறக் கூடிய அளவிற்கு நடைவேறுபாடு காணப்படுவதுபோல், மூவாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய தொல்காப்பிய நூல்நடைக்கும் இன்று தோன்றும் தமிழ்நூல் நடைக்கு மிடையே பெருத்த வேறுபாடு காணப்பட வில்லை. இது தமிழ் மொழிக்கும் ஒரு சிறப்பே யாகும்.

## இடைவெளி நூற்கள்

கிடைத்திருக்கும் தமிழ் நூற்களுள் சொற பொருள் கூறும் துறையில் முதல்நூல் தொல் காப்பியம்; இரண்டாவது நூல் சேந்தன் திவாகரம். தொல்காப்பியமோ கி. மு. ஆயிரம் ஆண்டுகட்குமுன்-அதாவது -மூவாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றியது; சேந்தன் திவாகரமோ கி. பி. எட்டாம் நூற்ருண்டில்-அதாவது-ஆயிரத்து இருநூறு ஆண்டுகட்கு முன் தோன்றியது. அப்படியெனில், இரண்டுக்கும் நடுவே ஆயிரத்தெண்ணூறு - அல்லது - ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகால இடைவெளி உள்ளமை புலனுகும். இந்தப் 'பசிபிக்' இடைவெளியில்,

தொல்காப்பியம் போன்ற இலக்கண நூற்கள் பலவும், சேந்தன் திவாகரம் போன்ற நிகண்டு நூற்கள் பலவும் கட்டாயம் தோன்றியிருக்கத்தான் வேண்டும். நமது தீப்பேருக அவையெல்லாம் கிடைக்கவில்லை ஆயினும், நிகண்டு (கலைக் கோட்டுத் தண்டு), ஆதி திவாகரம் என்னும் இருநிகண்டு நூற்களின் பெயர்கள் மட்டும் தெரிகின்றன; நூற்கள் கிடைத்தில. அவற்றுள் முதலில் நிகண்டு கலைக்கோட்டுத் தண்டு என்னும் நூல் பற்றிய குறிப்பு வருமாறு.

## நிகண்டு (கலைக் கோட்டுத் தண்டு)

நன்னூல் என்னும் இலக்கண நூலின் பாயிரப் பகுதியில் நூற்கட்குப் பெயர் வைப்பதற்குரிய பல பொருட்டுக்கள் (காரணங்கள்) சொல்லப்பட்டுள்ளன; இறுதியில், இடுகுறியாகப் பெயர் வைப்பதும் உண்டு என்று சொல்லப்பட்டுள்ளது. இடுகுறி என்றால், ஒரு பொருட்டும் (காரணமும்) இன்றி, ஏதாவது ஒரு பெயர் வைத்துத் தீரவேண்டுமே என்பதற்காக இடப்பட்ட பெயர் ஆகும். நமக்கு ஒரு பொருளினது பெயரின் பொருட்டுத் தெரியவில்லையென்றால், அதை இடுகுறிப் பெயர் என்று சொல்ல வேண்டியதுதான் போலும்! இது பற்றிய நன்னூல் நூற்பா வருமாறு :—

"முதனூல் கருத்தன் அளவு மிகுதி
பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தினும்
இடுகுறியானும் நூற்கு எய்தும் பெயரே."

இந்நூற்பாவிற்கு உரை யெழுதிய மயிலைநாதர் என்னும் உரையாசிரியர், முதனூல்,

கருத்தன், அளவு, மிகுதி, பொருள், செய்வித்தோன், தன்மை ஆகிய நிமித்தங்களால் (காரணங்களால்) பெயர் பெற்றமைக்கு எடுத்துக்காட்டாகச் சிற்சில நூற்களின் பெயர்களைக் குறிப்பிட்டுவிட்டு, இடுகுறியால் பெயர் பெற்ற நூலுக்கு எடுத்துக்காட்டாகப் பின்வருமாறு எழுதியுள்ளார் :—

"இடுகுறியாற் பெயர் பெற்றன நிகண்டு நூல், கலைக்கோட்டுத் தண்டு முதலாயின."

இதே நூற்பாவின் உரையில் சங்கர நமச்சிவாயர் என்னும் உரையாசிரியர் பின்வருமாறு எழுதியுள்ளார் :—

"இடுகுறியாற் பெயர் பெற்றன நிகண்டு கலைக் கோட்டுத் தண்டு முதலாயின."

நன்னூலின் உரைகளிலே யன்றி, 'இறையனார் அகப் பொருள்' என்னும் களவியல் இலக்கண நூலின் உரையிலும் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது :—

"இடுகுறியாற் பெயர் பெற்றன நிகண்டு நூல், கலைக்கோட்டுத் தண்டு என இவை."

இவ்வாறு நன்னூல் உரையிலும், இறையனார் அகப்பொருள் என்னும் களவியல் உரையிலும் எழுதப்பட் டிருப்பதற்குத் தக்க சான்று பகர்வது போல், 'நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனார்' என்னும் சங்க காலப் புலவர் ஒருவரின் பெயர் அடிபடுகிறது. நற்றிணை என்னும் சங்க இலக்கியத்திலுள்ள "கானல் மாலைக் கழிநீர் மல்க" என்று தொடங்கும் 382-ஆம் பாடல் இவர் பாடியதே. இப்பாடல் ஒன்றின் வாயிலாகத்தான் இவர் தமிழ் மக்கட்கு

அறிமுகமாகி யுள்ளார். நற்றிணைக்குப் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் அவர்கள் எழுதிய உரை நூற் பதிப்பின் முற்பகுதியில், பாடினோர் வரலாறு என்னும் தலைப்பில், நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனுர் பற்றிப் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:—

“மான் கொம்பை நிமிர்த்திக் கைக் கோலாகக்கொண்டமையால் இவர் கலைக் கோட்டுத் தண்டன் எனப்பட்டார். இவரது இயற்பெயர் புலப்படவில்லை. நிகண்டன் என்ற அடைமொழியால் இவர் தமிழில் நிகண்டொன்று செய்தாரென்று தெரிகிறது; அதுவே கலைக் கோட்டுத் தண்டு எனப்படுவது. இதனை இடுகுறிப் பெயரென்று கொண்டார் களவிய லுரைகாரரும் நன்னூல் விருத்தியுரைகாரரும்(சூத் 49). அஃது இதுகாறும் வெளிவந்திலது. இவர் நெய்தலைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியது நற்றிணை 382-ஆம் பாட்டு.”

இந்தப் பகுதி அப்படியே ‘அபிதான சிந்தாமணி’ என்னும் நூலிலும் உள்ளது. ‘கலைக் களஞ்சியம்’ என்னும் நூலிலோ பின்வருமா றுள்ளது:—

“நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனுர்: சங்க காலப் புலவர். நிகண்டு, கலைக் கோட்டுத் தண்டு என்பவை இடுகுறியாற் பெயர் பெற்ற நூல்களென நன்னூல் விருத்தியுரை (நன். பாயிரம்: 49) கூறும். இந்த நூல்களுக்கும் இவருக்கும் ஏதாவது தொடர்புண்டோ என்பது ஆராயத் தக்கது (நற். 382).”

மேலே எடுத்துக் காட்டப்பட்டவற்றுள் நன்னூல் உரையும் களவியல் உரையும், ‘நிகண்டு நூல் என்பது ஒரு தனி நூல்; கலைக் கோட்டுத் தண்டு என்பது

மற்றொரு தனி நூல்' என்னும் பொருள்பட உள்ளன. அபிதான சிந்தாமணி, நற்றிணை உரையின் முற்பகுதி ஆகியவையோ, 'நிகண்டு என்பதும் கலைக் கோட்டுத் தண்டு என்பதும் ஒரே நூல்தான்—அதாவது—கலைக் கோட்டுத் தண்டு என்பது ஒரு நிகண்டு நூல்' என்னும் கருத்துப்படக் கூறியுள்ளன. இவ்விரு வேறு கருத்துக்களுள் எது உண்மையானது?

நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனார் என்பது ஒரு புலவரைச் சுட்டுவதால், அவர் நிகண்டு நூல் என ஒரு நிகண்டு நூலும், கலைக் கோட்டுத் தண்டு என ஒரு நிகண்டு நூலுமாக இரண்டு நிகண்டுகள் எழுதியிருக்கமாட்டார்; அல்லது, இரண்டும் ஒரே நிகண்டு நூலாகவும் இருக்க முடியாது. நிகண்டன், கலைக் கோட்டுத் தண்டன் என்னும் இரண்டு ஆண்பாற் பெயர்களின் முடிபைக் கொண்டு, இரண்டும் தனித் தனி நூற்களே என்று துணியலாம். அப்படி யிரண்டும் வெவ்வேறு நூற்களின் பெயர்களே யெனின், நிகண்டு என்பது நிகண்டுத் துறை நூலாகவும், கலைக் கோட்டுத் தண்டு என்பது வேறு துறை நூலாகவுந்தான் இருக்க வேண்டும்; ஒருவரே இரண்டு நிகண்டு நூற்கள் எழுதியிருக்க மாட்டார்.

இதில் இன்னுமொரு சிக்கல் உள்ளது:—கலை என்றால் மான்: கோடு என்றால் கொம்பு; தண்டு என்றால் தடி; எனவே, மான் கொம்பை நிமிர்த்தித் தடியாக ஊன்றிச் சென்றதனால் கலைக் கோட்டுத் தண்டனார் என ஆசிரியர் அழைக்கப்பட்டிருக்க வேண்டும்—என்னும் கருத்துப்பட நற்றிணை யுரையின் முற்பகுதியும் அபிதான சிந்தாமணியும் கூறுகின்றன. இதன்படி நோக்கின், கலைக் கோட்டுத் தண்டனார்

என்னும் பெயருடைய ஆசிரியரால் இயற்றப்பட்ட நூல், அவர் பெயராலேயே கலைக் கோட்டுத் தண்டு என அழைக்கப்பட்டது—என்னும் கருத்து உறுதிப் படும்; படவே, நன்னூல் உரைகாரரும் களவியல் உரை காரரும், கருத்தனுல் (ஆசிரியனுல்) பெயர் பெற்ற நூலுக்கு எடுத்துக் காட்டாக இந்நூலைக் குறிப் பிடாமல், இடுகுறியால் பெயர் பெற்ற நூலுக்கு எடுத்துக் காட்டாக இந்நூலைக் குறிப்பிட்டிருப்பது பொருத்த மற்ற தாகும். ஆனுல், இவ்வுரையாசிரி யர்கள், கலைக் கோட்டுத் தண்டு என்னும் நூலை இயற் றியதால் ஆசிரியர் கலைக் கோட்டுத் தண்டனுர் என் னும் பெயர் பெற்ருர் என்னும் கருத்துடையவர்களாக இருந்திருக்கலாம். அப்படியெனில், கலைக் கோட்டுத் தண்டை ஊன்றியதனுல்தான் ஆசிரியர் கலைக் கோட் டுத்தண்டனுர் என்னும் பெயர் பெற்ருர் என்னும் கருத்து பொருத்த மற்றதாகப் போய்விடும். இவ்வாறு இருவேறுபட்ட இச்சிக்கலுக்குத் தீர்வு யாது?

சங்க காலப் புலவர்களுள் 'தொடித்தலை விழுத் தண்டினுர்' என்பவர் ஒருவர். இவரது பாடலொன்று புறநானூற்றில் உள்ளது. அது, 'இனிநினைந் திரக்க மாகின்று' என்று தொடங்கும் (243-ஆம்) பாடலாகும் அப்பாடலில் புலவர், 'ஆழமான மடுவில் குதித்து மணலெடுத்து வந்த இளமை போய்விட்டதே; தண்டு (தடி) ஊன்றி நடுங்கி நடக்கும் முதுமை வந்து விட்டதே' என்று இரங்குகிருர். அப்பாடற் பகுதி யாவது:-

" இனிநினைந்து இரக்க மாகின்று...............
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்து மணற்கொண்ட கல்லா இளமை

அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரேம் ஆகிய எமக்கே ''

இப்பாடலிலுள்ள 'தொடித்தலை விழுத்தண்டு' என்னும் தொடர் கவனிக்கற்பாற்று. புலவர் ஊன்றிய தண்டு (தடி) விழுத் (பெரிய) தண்டாம்; அதன் தலையில் (உச்சியில்) தொடி (பூண்) போடப் பட்டுள்ளதாம்; அதனால் புலவர் தமது தடியைத் 'தொடித்தலை விழுத்தண்டு' என்று விதந்து கூறி யுள்ளார். இப்பாடலில் 'தொடித் தலை விழுத் தண்டு' என்னும் தொடர் கவர்ச்சி யுடையதாகக் காணப்படு வதால் இத்தொடராலேயே தொடித்தலை விழுத் தண்டினார் எனப் புலவர் அழைக்கப்பட்டார். இது போலவே, குறுந்தொகை என்னும் சங்கநூலில் ஒரு பாடலில் 'அணிலாடு முன்றில்' என்னும் தொடர் சிறந்து காணப்பட்டதால் அப்பாடலைப் பாடிய புலவர் 'அணிலாடு முன்றிலார்' என அழைக்கப்பட்டார்; இன்னொரு பாடலில் 'ஓர் இல் பிச்சை' என்னும் தொடர் சிறந்து காணப்பட்டதால் அப்பாடலைப் பாடியவர் 'ஓரில் பிச்சையார்' என அழைக்கப்பட்டார்; மற்றொரு பாடலில் 'ஓர் ஏர் உழவன்' என்னும் தொடர் சிறந்து தோன்றியதால் அதன் ஆசிரியர் 'ஓர் ஏர் உழவனார்' என அழைக்கப்பட்டார். இவ்வாறே தாம் பாடிய பாடலிலுள்ள தொடரால் பெயர் பெற்ற சங்கப் புலவர்கள் இன்னும் பலருளர். இது அக் காலத்து மரபு; அதாவது, ஒரு பாடலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை யென்றால், அப்பாடலிலுள்ள சிறந்த தொடரால் ஆசிரியரை அழைப்பது அக்கால வழக்கம். இம் மரபை யொட்டிக் கலைக் கோட்டுத்

தண்டனுர் என்னும் பெயரையும் ஏன் ஆராயக் கூடாது ?

மான் கொம்பை நிமிர்த்தி எவரும் தடியாகக் கொள்ளார்; எனவே, தாம் பாடிய பாடலிலுள்ள தொடரால் பெயர்பெற்ற தொடித்தலை விழுத்தண்டினர் போலவே, கலைக்கோட்டுத் தண்டனுரும் தொடரால் பெயர் பெற்றிருக்கலாம். தனித்தனி நூலாக மதிக்கப்படுகின்ற திருமுருகாற்றுப்படை, முல்லைப் பாட்டு, குறிஞ்சிப்பாட்டு முதலிய நீளமான பத்துப் பாட்டுக்களைப் போல ஒரு நீளமான பாடல் இருந்திருக்கலாம்; அதற்கு நூற்பெயரும் ஆசிரியர் பெயரும் கிடைக்காமல் விடுபட்டுப் போயிருக்கலாம். இந்நிலை பழங்கால நூல்கள் சிலவற்றிற்கு உள்ளதுதானே! எனவே நூற்பெயரும் ஆசிரியர் பெயரும் தெரியாத அந் நெடும்பாட்டு நூலில் 'கலைக் கோட்டுத் தண்டு, என்னும் தொடர் சிறப்பிடம் பெற்றிருக்கலாம்' அதனுல், அத்தொடராலேயே நூலையும் ஆசிரியரையும் பெயர் சுட்டி அழைத்திருக்கலாம். ஆகவே, அந் நூலுக்குக் கலைக்கோட்டுத் தண்டு என்னும் பெயர் எந்த நிமித்தம் (காரணம்) கருதியும் வைக்கப் பட்டதன்று; ஏதேனும் ஒரு பெயர் வேண்டுமே என்பதற்காக இடுகுறியாக இடப்பட்ட பெயரே யென்பது புலனுகலாம். இதனுல்தான் நன்னூல் உரைகாரரும் களவியல் உரைகாரரும் இடுகுறியாற் பெயர் பெற்ற நூலுக்கு எடுத்துக் காட்டாகக் கலைக்கோட்டுத் தண்டைக் காட்டியுள்ளனர். எனவே, கலைக்கோட்டுத் தண்டு என்பது நிகண்டு நூலன்று; வேறு துறையைச் சேர்ந்த நூலேயாகும். இதனை ஒரு

நிகண்டு நூலின் பெயரெனஅபிதான சிந்தாமணி யாரும் நற்றிணை உரையாளரும் கூறியிருப்பது பொருத்த முடைத்தன்று. புலவரது நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனுர் என்னும் பெயரைக் கொண்டு, அவர் ஒரு நிகண்டு நூல் இயற்றியுள்ளார் என்பது புலப்படினும், அந்நிகண்டின் பெயர் தெளிவாகத் தெரியாததால் அது கலைக் கோட்டுத் தண்டாகத்தான் இருக்க வேண்டும் என்று கற்பனை செய்துவிடக் கூடாது.

கலைக் கோட்டுத் தண்டைப் பற்றிய செய்தி எப்படி யிருந்தபோதிலும், கலைக்கோட்டுத் தண்டனுர் என்னும் பெயருக்கு முன்னுலுள்ள 'நிகண்டன்' என்னும் அடைமொழியைக் கொண்டு அவர் ஒரு நிகண்டுநூல் இயற்றியுள்ளார் என்பதுவரை உறுதி.

இந்நிகண்டு, ஏனைய நிகண்டுகட் கெல்லாம் முற் பட்ட முதல் நிகண்டாகவும் இருக்கலாம்; அதனுல், அந்த நிகண்டு–இந்த நிகண்டு என ஆசிரியர் எந்தப் பெயரும் வைக்காமல், வெறும் 'நிகண்டு' எனவே தம் நூலை அழைத்திருக்கலாம். திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு முதலியனபோ லின்றி, வெற்றுப்படியாக நிகண்டு என்னும் பெயர்மட்டும் உள்ளதால், 'ஆசிரியர் ஒரு நிமித்தமும் கருதி ஒரு பெயரும் வைக்கவில்லை; ஏதேனும் ஒரு பெயர் இருக்க வேண்டுமே என்பதற்காக நிகண்டு என இடுகுறியாக வாளா அழைத்துக் கொண்டார்'—என்று நன்னூல் உரைகாரரும் களவியல் உரைகாரரும் எண்ணி, இடு குறியாற் பெயர் பெற்ற நூலுக்கு எடுத்துக் காட்டாக இந்நிகண்டு நூலைக் காட்டியிருக்க வேண்டும்.

மற்றும், நன்னூல்—களவியல் உரைகாரர்கள் காட்டியுள்ள நிகண்டு, கலைக் கோட்டுத் தண்டு என்னும் இரு நூற்கட்கும், நற்றிணையின் 382-ஆம் பாடலைப் பாடிய நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனார் என்னும் புலவர்க்கும் தொடர்பில்லை யென்று எவரேனும் கட்டவிழ்த்து விடுவார்களோ என்னவோ! நன்னூல்—களவியல் உரைகளில் நிகண்டு—கலைக் கோட்டுத் தண்டு என்னும் பெயர்கள் பக்கத்தில் பக்கத்தில் இணைந்திருப்பதாலும், நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனார் என்னும் பெயரிலும் அவ்வாறே இணைப்புக் காணப்படுவதாலும் அவ்விரு நூற்களையும் இயற்றியவர் அவரேயென முடிச்சுப் போடப்பட்டுள்ளது.

## நிகண்டு நூலின் காலம்

நற்றிணை கடைச்சங்க நூலாகும்; நிகண்டன் கலைக் கோட்டுத் தண்டனாரும் கடைச் சங்கப் புலவரே; எனவே, அவரியற்றிய நிகண்டு நூலும் கடைச் சங்க காலத்ததாகும். கடைச் சங்க காலம், கி.மு. ஐந்நூறிலிருந்து கி.பி. ஐந்நூறுவரை தலைக்குத் தலை யொருவிதமாக ஆராய்ச்சியாளரால் பந்தாடப் படுவது தெரிந்த செய்தியே.

இனி ஆதி திவாகரம் என்னும் நிகண்டு குறித்து வருமாறு:—

# ஆதி திவாகரம்

இப்பொழுது கிடைத்திருக்கும் நிகண்டுகளுள் முந்தியது 'சேந்தன் திவாகரம்' என்னும் நிகண்டாகும். இது, சேந்தன் என்னும் சிற்றரசனது

வேண்டுகோட்படி திவாகரர் என்பவரால் இயற்றப் பட்டதாதலின், இயற்றுவித்தோன் பெயரையும் இயற்றியவர் பெயரையும் இணைத்துச் சேந்தன் திவாகரம் என அழைக்கப்பட்டது. இந்தத் திவாகர ருக்கு முன்னலேயே இன்னெரு திவாகரர் தம் பெயரால் ‘திவாகரம்’ என ஒரு நிகண்டு இயற்றி யிருந்தார். இப்படியாக இரண்டு திவாகரங்கள் தோன்றிவிடவே, இரண்டிற்கும் வேறுபாடு தெரிவதற்காக, முதலில் தோன்றிய திவாகரம் ‘ஆதி திவாகரம்’ எனவும், சேந் தனது தூண்டுதலால் இரண்டாவதாகத் தோன்றிய திவாகரம் ‘சேந்தன் திவாகரம்’ எனவும் அழைக்கப் பட்டன. ஆனல் எப்படியோ ஆதி திவாகரம் அழிந்து போயிற்று.

சிலர், இந்த இரு திவாகரங்களையும் தனித் தனி நூலாகக் கொள்ளாமல், ஒரே நிகண்டெனக் கூறுகின் றனர். இவர் கூற்றுப் பொருத்த முடையதாகப் புலப் படவில்லை. இது குறித்துச் ‘சேந்தன் திவாகரம்’ என்னும் தனித் தலைப்பில் விரிவாக ஆராயப்படும்; அதனை அடுத்து வரும் இரண்டாம் பாகத்தின் தொடக் கத்திலேயே காணலாம்.

# இரண்டாம் பாகம்

# முதல் நிகண்டு

# சேந்தன் திவாகரம்

தமிழ் மொழியில் இதுவரை கிடைத்திருக்கும் நிகண்டு நூற்களுக்குள் இதனை முதலாவதாகக் குறிப்பிடலாம். சேந்தன் திவாகரம் என்பதைச் சுருக்கித் திவாகரம் என்றும் அழைப்பதுண்டு.

## பெயர்க் காரணம்

இதனை இயற்றிய ஆசிரியர் திவாகரர் என்பவர். இவரை ஆதரித்து இந்நூலை இயற்றச் செய்தவன் சேந்தன் என்பவன். எனவே இது சேந்தன் திவாகரம் எனப் பெயர் பெற்றது. இந்தப் பெயர்வைப்பு ஒரு புதுமுறையே! அதாவது, இயற்றுவித்தவர் பெயரும் இயற்றியவர் பெயரும் முறையே இணைந்து திகழ்கின்றன வன்றோ? சில நூற்கள் இயற்றியவர் பெயராலும், சில நூற்கள் ஆதரித்து இயற்றுவித்தவர்

பெயராலும், வேறுசில கதைத்தலைவன் பெயராலும், சில சொல்லப்பட்டுள்ள பொருளின் பெயராலும், இன்னுஞ்சில இன்னோரன்ன பிற காரணங்களாலும் பெயர் பெற்றிருக்க, இந்நூலோ சேந்தன் திவாகரம் எனப் பெயர்பெற்றிருப்பது ஒரு புதுமைதானே!

அகத்தியர் எழுதிய நூலுக்கு அகத்தியம் என்பது பெயர்; தொல்காப்பியர் எழுதிய நூலுக்குத் தொல் காப்பியம் என்பது பெயர்; இளம்பூரணர் எழுதிய உரைக்கு இளம்பூரணம் என்பது பெயர்; நச்சினார்க் கினியர் எழுதிய உரைக்கு நச்சினார்க்கினியம் என்பது பெயர்; இவை போலவே, திவாகரர் எழுதிய நூலுக்குத் திவாகரம் என்பது பெயர். இது முற்றிலும் சரியே. இக்காலத்தில்கூட, இடத்தின் பெயரோ அல்லது விஞ்ஞானப் பொருளின் பெயரோ, கண்டுபிடித்தவர் அல்லது உருவாக்கியவரின் பெயரால் வழங் கப்படுவது தெரிந்ததே! பழைய நூற்கள் சிலவற்றின் பெயர்கள், இயற்றிய ஆசிரியர்களின் பெயர்களால் அழைக்கப்படுவது மிகவும் பொருத்தம் என்பதோடு மட்டுமல்லாமல், வேறொரு பெரிய நன்மையும் உண்டு என்பதை மறக்கக்கூடாது. அதாவது, பழைய தமிழ் நூற்களை எழுதிய ஆசிரியர்களைப் பற்றி ஒன்றுமே அறிய முடிவதில்லை. முத்தொள்ளாயிரம் போன்ற சிறந்த தமிழ் நூற்களைப் படைத்த ஆசிரியர்களின் பெயர்கள்கூடத் தெரியவில்லையே! இந்நிலையில், ஆசிரியரின் பெயரையே நூலுக்கு இடும் முறையால், நூலாசிரியரின் பெயரை மட்டுமாவது தெரிந்து கொள்ளும் வாய்ப்பாயினும் கிடைத்தது பிற்காலத் தார்க்கு ஒரு பெரும் பேறல்லவா?

இந்நூலுக்கு ஆசிரியர் பெயரால் திவாகரம் என்று மட்டும் பெயரிடாமல், சேந்தன் திவாகரம் என்று

பெயரிட்டதற்குச் சிலர் வேறு காரணம் கூறுகின்றனர். அதாவது, இந்தத் திவாகர நிகண்டுக்கு முன்னுலேயே, திவாகரம் என்னும் பெயருடைய இன்னெரு நிகண்டு இயற்றப்பட்டிருந்தது. திவாகரர் என்னும் பெயருடைய வேறெருவர் அதனை இயற்றியிருக்கலாம். ஒரு பெயரே ஒரே காலத்தில் ஒரே தெருவில் பலர்க்கு இருக்கும்போது, ஒரு பெயரையே பல காலத்தில் வாழ்ந்த பலர் வைத்துக் கொண்டிருந்திருக்கலாமன்றே? எனவே, அந்தப் பழைய திவாகரத்துக்கும் இந்தப் புதிய திவாகரத்திற்கும் வேறுபாடு தெரிவதற்காகப் பழைய திவாகரத்தை 'ஆதி திவாகரம்' என்றும், புதிய திவாகரத்தைச் 'சேந்தன் திவாகரம்' என்றும் பிற்காலத்தவர் குறியிட்டு அழைத்தனர்- என்பதுதான் சிலர் கூறும் புதுக்காரணம். இதனை மறுப்பவரும் உளர். அவர்மறுப்பு வருமாறு :—

"சேந்தன் திவாகரத்தைத் தவிர, ஆதி திவாகரம் என வேறெரு நிகண்டு இருந்திருக்க முடியாது. அதற்கு எந்தச் சான்றும் கிடைத்திலது. சில உரை நூற்களுள் சேந்தன் திவாகரப் பாக்களே எடுத்தாளப் பட்டுள்ளன; ஆதி திவாகரப் பாடல் என்ற பெயரில் எதுவும் எடுத்தாளப்படவில்லை. மேலும், பிற்கால மக்களால் பெருவாரியாகப் படித்துப் போற்றப்பட்ட சூடாமணி நிகண்டின் ஆசிரியராகிய மண்டல புருடர், தமக்குமுன் இருந்த திவாகரம், பிங்கலம் என்னும் இரண்டு நிகண்டுகளையும் முதல் நூல்களாகக் கொண்டு எளிய முறையில் சூடாமணி நிகண்டைத் தாம் எழுதியிருப்பதாகக் கூறியுள்ளார். 'இங்கிவை இரண்டும் கற்க' என மண்டல புருடர் இரண்டு என்னும் எண்ணிக்கையிட்டு முடிவாகக் கூறி

விட்டதனுலே, திவாகரம், பிங்கலம் என்னும் இரண்டு நிகண்டுகளைத் தவிர, ஆதிதிவாகரம் என வேருெரு நிகண்டு முற்காலத்தில் இருந்திருக்க முடியாது. அப்படி யிருந்திருந்தால் மண்டலபுருடர் அதனையும் கூட்டி மூன்ருகக் குறிப்பிட்டிருப்பார். எனவே, நிகண்டு களுக்குள் முந்தியது சேந்தன் திவாகரமே. அதன் பழமையை நோக்கி அதனையே ஆதி திவாகரம் என்றும் அழைத்திருக்கக்கூடும். ஆகவே, ஆதி திவாகரம், சேந்தன் திவாகரம் என்னும் இரண்டும் ஒரு நிகண்டின் பெயர்களே. இந் நுட்பம் உணராதார் இரண்டினையும் தனித்தனி நிகண்டெனக் கருதியிருக்க வேண்டும்''.

மேலே இருசாரார் கருத்துக்களைக் கண்டோம். நடுநிலைமையுடன் இரு கருத்துக்களையும் அணுகி ஆராயின், ஆதி திவாகரமும் சேந்தன் திவாகரமும் ஒன்ருக இருக்க முடியாது; திவாகரம் என்னும் பெயரில் இரண்டு நிகண்டுகள் இருந்ததனுல்தான், இரண்டிற்கும் வேறுபாடு தெரிய, முந்தியதை ஆதி திவாகரம் என்றும், சேந்தனுல் தூண்டி எழுதப்பட்ட பிந்தியதைச் சேந்தன் திவாகரம் என்றும் அழைத்தனர்–என்னும் முதல் சாராரின் கருத்தே சரியானது என்பது புலப்படும். 'இல்லாமல் பிறவாது-அள்ளாமல் குறையாது' என்ற படி, ஆதி திவாகரம் என ஒன்று இல்லாமல் இந்தப் பேச்சு எழுந்திருக்க முடியாது. அப்படியில்லாதிருந்தால் சேந்தன் திவாகரம் என அழைக்க வேண்டிய வேலையே இன்றி, வெறுமையாய்த் திவாகரம் என்றே அழைத் திருப்பர். மேலும், ஆதி திவாகரம் இல்லாதிருந்தால், சேந்தன் திவாகரம் எனப் பெயர் வந்ததற்குக் காரண மாக இரண்டு விதமான கருத்துத் தெரிவிப்பதோடு ஆராய்ச்சியாளர்கள் அமைந்து விட்டிருப்பார்கள். அதாவது, திவாகரர் தம்மை ஆதரித்த சேந்தனுக்கு

நன்றி செலுத்துமுகத்தான் அவன் பெயரையும் இணைத்துச் சேந்தன் திவாகரம் எனத் தம் நூலுக்குப் பெயரிட்டார் என்றுவது, அல்லது, இந்தத் திவாகரர் காலத்திற்கு முன்பே வேறொரு திவாகர நிகண்டு இருந்திருக்க வேண்டும்; அதனுல்தான் இந்த நிகண்டிற்குச் சேந்தன் திவாகரம் என்ற பெயர் எழுந்தது போலும்; ஆனுல் அந்தப் பழைய திவாகரத்தைப் பற்றி ஒன்றும் தெரிந்திலது என்றுவது ஆராய்ச்சியாளர்கள் அறிவித்திருப்பர். அப்படியில்லாது, ஆதி திவாகரம் என ஒன்றைத் திட்ட வட்டமாக அறிவித்திருப்பதனுலே அது இருந்திருக்கக் கூடும். எனவே, சேந்தன் திவாகரமே பழமை பற்றி ஆதி திவாகரம் என அழைக்கப்பட்டது என்னும் கூற்றுப் பொருந்தாது. அப்படியே சேந்தன் திவாகரத்தின் பழமையைப் பாராட்ட விரும்பியிருந்தாலும் அதனை ஆதி நிகண்டு என அழைத்திருக்க வேண்டுமே தவிர, ஆதி திவாகரம் என அழைத்திருக்க முடியவே முடியாது. எனவே, ஆதி திவாகரம் வேறு. அப்படியாயின் அஃது எங்கே எனின், தமிழில் மறைந்து போன நூற்களின் எண்ணிக்கை மிக நீளமானது; அந்த நீளமான பட்டியலில் ஆதி திவாகரமும் சேர்ந்து விட்டிருக்க வேண்டும். சேந்தன் திவாகரமாவது உருப்படியாய்க் கிடைத்ததே!

# சேந்தன் வரலாறு

சேந்தனைப் பற்றி முறையான வரலாறு இல்லை. அரசர்கள்பற்றியோ—புலவர்கள்பற்றியோ—வள்ளல்கள் பற்றியோ—இன்னும் செயற்கருஞ்செயல்கள் செய்த பெரியார்கள் பற்றியோ முறையான வரலாறு எழுதி வைக்காத குறை நம் தமிழ் முன்னோரைச் சாரும் என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். பொதுவாக, வரலாற்று நிகழ்ச்சிகளை அறியக் கிடைத்துள்ள சான்றுகளின் (சாதனங்களின்) வாயிலாக வரலாற்றை மூன்று வகைப்படுத்திக் கூறுவதுண்டு. அதாவது, (1) பட்டப் பகலில் நடந்த வரலாறு, (2) வைகறையில் (விடிவதற்கு முன்) பனி மூட்டத்தில் நடந்த வரலாறு, (3) அமாவாசை நள்ளிரவில் நடந்த வரலாறு எனப் பகுக்கலாம். சரித்திரம் என்னும் பெயரில் இப்போது பள்ளிக்கூடத்தில் படிக்கப்படுவது முதல்வகையைச் சேர்ந்ததாகும்—அதாவது பட்டப் பகலில் நடந்த வரலாறாகும். இதற்கு இப்பெயர் கொடுத்ததற்குக் காரணம்:— பட்டப் பகலில் நடக்கும் நிகழ்ச்சிகள் நன்றாகத் தெளிவாகத் தெரியும். அதுபோலவே, ஆண்டு, திங்கள், நாள், நாடு, ஊர், மக்களின் பெயர்கள், நிகழ்ச்சிகள் முதலியன தெளிவாகக் குறிப்பிட்டு எழுதப் பட்ட வரலாறு, ஐயத்திற் கிடமின்றி உறுதியானது. இது முதல் வகையது. அடுத்து, பழந்தமிழ் மன்னர்கள் பழந்தமிழ்ப் புலவர்கள் முதலியோர் வரலாறு—இராமர், பாண்டவர் முதலியோர் வரலாறு—இன்ன பிற வரலாறுகள் எல்லாம் இரண்டாம் வகையைச் சார்ந்தன. ஏனெனில், இவை முறையாக ஆண்டு, திங்கள், நாள் முதலியன குறிப்பிட்டு ஐயத்திற்கு இடமின்றி எழுதப் பட்டவையல்ல. புராணம், இதிகாசம், காவியம், பல்

வகை இலக்கியங்கள் ஆகியவற்றின் வாயிலாக இவ்வரலாற்று நிகழ்ச்சிகள் ஒரு தோற்றமாக (உத்தேசமாக) நுனித்து (யூகித்து) உணரப்படுவனவாகும். வைகறையில் பனிமூட்டத்தில் பொருள்கள் தெளிவாகத் தெரியாமல் ஒரு தோற்ற மாகத்தானே தெரியும்? அதுபோலவே இவையு மாதலின், இவை இரண்டாம் வகையன. அடுத்து, சிந்துவெளி நாகரிகம், பழைய எல்லம்—பாபிலோன் நாகரிகங்கள் முதலிய வரலாற்றுக் குறிப்புக்கள் மூன்றும் வகையைச் சார்ந்தவை. விளக்கு வசதியும் இல்லாத விடத்தில் அமாவாசை நள்ளிரவில் பொருள்கள் தெரியவே தெரியா; தடவிப் பார்த்தே தெரிந்து கொள்ள வேண்டும்; அதுபோலவே, சிந்து வெளி நாகரிகம் முதலியன, முன்னமேயே எழுதி வைத்துள்ள பழைய வரலாற்றுக் குறிப்பு எந்த உருவத்திலும் ஒரு சிறிதும் இன்மையால், நிலத்தைத் தோண்டி எடுத்துக் கண்ட பொருட்கள் வாயிலாகவும் பழைய கட்டடங்கள்—இடிபாடுகள் வாயிலாகவும் இன்ன பிற பொருட்கள் வாயிலாகவுமே அறிந்து கொள்ளப்படுவதால், இவை மூன்றும் வகையன வாகும்.

மேற்கூறிய மூன்று வகையுள் சேந்தன் வரலாறு இரண்டாம் வகையைச் சார்ந்ததாகும். எப்படி யெனில், முதல் வகையைப்போல் சேந்தனைப் பற்றி முறையான வரலாறு எழுதி வைக்கப்படவும் இல்லை; மூன்றும் வகையைப் போல் சேந்தனைப் பற்றி எழுத்துச் சான்று ஒரு சிறிதும் கிடைக்காமலும் இல்லை. எனவே இரண்டாம் வகையைப் போல், திவாகரம் போன்ற நூற்களின் வாயிலாகச் சேந்தனைப் பற்றி அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில செய்திகள் அறியக் கிடக்கின்றன. கிடைத்தவரைக்கும் மனநிறைவு கொள்ள வேண்டியதுதான்! இந்த இரண்டாம் வகை

வரலாற்றுப் பிரிவைச் சாரும் தகுதி சேந்தனுக்குமட்டும் உரியதன்று—திவாகரருக்கும் சரி—இனி சொல்லப் போகும் நிகண்டுகளின் ஆசிரியர்களுக்கும் சரி—இது பொருந்தும். எனவேதான் இம் மூவகை வரலாற்றுத் தகுதி ஈண்டு இவ்வளவு விரிவாக எழுதப் பட்டது. இனி, சேந்தனைப் பற்றிய செய்திகளைக் காண்பாம்:

சேந்தன் சோழ நாட்டுக் காவிரிக் கரையை ஒட்டிய அம்பல் என்னும் பகுதியின் தலைவன்; அருவந்தை என்னும் ஊரினன்; (அதாவது தஞ்சை மாவட்டத்தான்) கல்வி கேள்வி நிரம்பியவன்; தமிழ், வடமொழி என்னும் இருமொழிகளிலும் வல்ல செந்தமிழன். பல பாடல்களும் நூல்களும் எழுதிய சிறந்த பாவலன்—நாவலன். இறைவியின்மேல் செந்தமிழ் மாலை அந்தாதி பாடியுள்ளான். இராமரது விற்போர், பாரதப் போர், தாருகன் வதை முதலியவை பற்றியும் பாடியுள்ளான்.

சிறந்த மூதறிவாளன். நல்ல நோக்கினன். நாகரிக நாட்ட முடையவன். மறம் நீக்கி அறம் பேணுபவன். ஐம்புலன்களை வென்றவன். குடிமக்களைத் தன் குடை நிழற்கீழ்க் குளிர்ச்சியுடன் காப்பவன். பரிசிலர் பலர் வரினும் இல்லை என்னாது கொடுக்கும் கொடையாளி. பகைவர் வரின் வெல்லத்தக்க படையாளி. தேவரே போன்ற சிறந்த தோற்ற முடையவன். புலவர்களை ஆதரித்துப் பெரும்புகழ் பெற்றவன். ஔவையார், திவாகரர் முதலிய புலவர் பெருமக்களால் புகழ்ந்து பாடப் பெற்றுள்ளவன். ஒரு நாட்டின் தலைவனுக்கு இன்னும் என்ன வேண்டும்? ஏறக்குறைய எல்லா நல்லியல்புகளும் இருக்கின்றன வன்றோ?

சேந்தனைப் பற்றிய இவ்வளவு செய்திகளையும் திவாகர நிகண்டினுள் காணலாம். திவாகரர் தம்

நிகண்டினைப் பன்னிரண்டு தொகுதிகளாக அமைத்துள்ளார். ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும், நன்றி பாராட்டும் வகையில், சேந்தனைப் புகழ்ந்து பாடியுள்ளார். அவற்றினின்றே மேற்கூறிய செய்திகள் திரட்டித் தரப்பட்டன. அப் பாடற் பகுதிகள் முதல் தொகுதிதொட்டு முறையே வருமாறு:—

1. "வடநூற் கரசன் தென்தமிழ்க் கவிஞன்
கவியரங் கேற்றும் உபயகவிப் புலவன்
செறிகுணத்து அம்பற் கிழவோன் சேந்தன்".

2. "கற்ற நாவினன் கேட்ட செவியினன்
முற்ற உணர்ந்த மூதறி வாளன்
நாகரிக நாட்டத் தாரியன் அருவந்தை
தேறுங் காட்சிச் சேந்தன்".

3. "காதலி கையிற் போதிப் பெருந்தவன
தெவ்வடு கால வைவேல் எழிலி
அவ்வை பாடிய அம்பற் கிழவன்
தேன்தார்ச் சேந்தன்".

4. "நாடே பிறர் நாட்டிற் குவமை, ஆறே
காலம் அறிந்துதவும் காவிரி தானே
ஆட்வர் திலகன் அம்பல் மன்னன்
ஈடிசைத் தலைவன் அருவந்தைச் சேந்தன்
ஆய்ந்த திவாகரத் தரும்பொருள் விளங்கும்"

5. "ஒருவற் கொருவன் ஆகி உதவ்யும்
பரிசில் மாக்கள் பற்பல ராயினும்
தானொரு வன்னே தரணி மானவன்
செந்தமிழ்ச் சேந்தன் தெரிந்த திவாகரம்".

6. "வருநற் கங்கை வடதிசைப் பெருமையும்
தென்திசைச் சிறுமையும் நீக்கிய குறுமுனி
குண்டிகைப் பழம்புனல் காவிரிப் பெரும்பதி
அம்பற் கதிபதி சேந்தன்".

7. " முற்றவப் பயனே கற்றவப் பயனே
சாபத் திழுக்கிய தேவ சாதரில்
தோற்றம் உடையனென அம்பல் தோன்றிய
இயற்கைச் சேந்தன்"

8. " மறக்குறும்பு ஓட்டி அறத்தின் வழிநின்று
கவிகைத் தண்ணளி புவிபெற ஆணையின்
ஐம்புலன் ஆளும் அம்பற் கோமான்
திண்பெருஞ் சேந்தன் திவாகரம்"

9. " அண்ணல் செம்பாதிக் காணி யாட்டியைப்
பெண்ணனங்கை மூவுலகும் பெற்ற அம்மையைச்
செந்தமிழ் மாலை அந்தாதி புனைந்த
நாவலன் அம்பற் காவலன் சேந்தன்"

10. " அரக்கரைப் பொருத முரட்போர் வில்லும்
பாரதம் பொருத பேரிசைச் சிலையும்
தாருகற் கடிந்த வீரத் தயிலும்
பாடிய புலவன் பதிஅம்பற் சேந்தன்
பயில் வுற்ற திவாகரம்"

11. " புலவி நீக்கிய கல்விச் செல்விக்கு
அமிழ்து சுவை ஈந்த அரும்பெறல் இன்பத்து
ஒருபெருஞ் செல்வன் அருவந்தைச் சேந்தன்
பகர்வுற்ற திவாகரம் "

12. " செம்பொற் கிடையான் அம்பற் சேந்தன்
நன்ன ராளன் நலமிகு நாட்டத்தன் "

இவை பன்னிரண்டும் சேந்தனைப் பற்றிய திவாகரப்பாடல் பகுதிகளாகும். இனி இவற்றின் சில பகுதிகள் குறித்துச் சிறிது ஆய்வாம் :-

எடுத்ததும் முதல் தொகுதிப் பாடலில் 'வடநூற்கு அரசன்' என்று சேந்தன் சிறப்பிக்கப் பெற்றுள்ளான்.

இதிலிருந்து, வடமொழியில் இவனுக் கிருந்த பெரும் புலமை புலப்படும். மேலும், இக்காலத்தில் தமிழகத் தில் ஆங்கிலம் பெற்றுள்ள மதிப்பை அக்காலத்தில் வடமொழி பெற்றிருந்தது. இப்பொழுது ஆங்கிலம் படித்தால் சிறப்பு என்பதுபோல, அப்பொழுது வட மொழி படித்திருந்தால் சிறப்பு. இன்று A, B, C, D முதலிய இருபத்தாறு ஆங்கில எழுத்துக்களை மாற்றி மாற்றிப் பின்னிப் பின்னிப் பிணைத்துப் பெயருக்குப் பின்னுல் பட்டமாகப் போடுவதில் பெருமை காண்பது போல, அன்று வடமொழி படித்தவர் என்று விளம்பரம் செய்வதில் பெருமை காணப்பட்டது. எனவே, சேந் தன் இத்தகுதியிலும் மிக்கவனுகத் திகழ்ந்தான்.

மூன்ரும் தொகுதிப் பாடலில், 'காதலி கையிற் போதிப் பெருந்தவன்' என்று சேந்தன் குறிப்பிடப்பட் டிருப்பது குழப்பம் தருகிறது. போதிப் பெருந்தவன்' என்ருல், போதி மரத்தின் கீழ்ப் பெருந்தவம் புரிந்த புத்த பகவான்தான். இந்தத் தொடரில் புத்த பகவா ஞக உருவகிக்கப்பட் டிருப்பதைக்கொண்டு இவனைப் புத்த மதத்தினன் என்று கூறிவிடக் கூடாது. ஏன் எனில், ஒன்பதாவது தொகுதிப் பாடலில் கூறியுள் ளாங்கு, சிவனது இடப்பாகங் கொண்டிருக்கும் அம்மை யின்மேல் இவன் செந்தமிழ் மாலை அந்தாதி நூல் பாடியிருப்பதாலும், 'சேந்தனைக் கந்தனைச் செங் கோட்டு வெற்பனைச் செஞ்சுடர் வேல் வேந்தனை' என்று முருகனை அருணகிரியார் குறிப்பிட்டுள்ளாங்கு முருகனது பெயராகிய 'சேந்தன்' என்பதை இவன் வைத்துக்கொண்டிருப்பதாலும் இவன் சைவ சமயத் தினனே யாவான். அப்படியெனில், "காதலி கையிற் போதிப் பெருந்தவன்' என்னும் தொடருக்கு நாம்

பொருள் காணவேண்டும் :- மனைவியிடம் பெறும் சிற்றின்பத்தைத் துறந்து உலகிற்குப் பணி புரிந்தார் புத்த பகவான் ; அவர்போலவே இவனும் மனைவியின் சிற்றின்பத்தை மட்டுப்படுத்திக் கொண்டவன், என்பது பொருள். எட்டாவது தொகுதிப் பாடலில் கூட, 'ஐம் புலன் ஆளும் அம்பல் கோமான்' என்று சிறப்பிக்கப்பெற்றுளா னல்லவா? எனவே, புலன் உணர்ச்சியை அடக்கி யாள்பவன் என்னும் பொருளில் கூறப்பட்டுள்ள 'போதிப் பெருந்தவன்' என்னும் உருவகத்தைக் கொண்டு இவனைப் புத்த மதத்தினன் எனல் பொருந்தாது.

இதே மூன்றும் தொகுதிப் பாடலில் உள்ள 'அவ்வை பாடிய அம்பல் கிழவன்' என்னும் தொடரைக் கொண்டு இவன் அவ்வையாரால் பாடப்பட்டுள்ளான் என்பது புலனுகிறது. அவர் இவன்மேல் பாடிய தனிப்பாடலோ அல்லது தனி நூலோ யாதெனப் புலப்பட்டிலது. அஃதும் இழந்த செல்வங்களின் வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டியதே போலும்!

அடுத்து நான்காம் தொகுதிப் பாடலில், இவனது நாடோ பிற நாடுகளுக்கு எடுத்துக் காட்டாகத் திகழக் கூடியது; இவன் காவிரி ஆறே காலம் அறிந்து உதவக்கூடியது; இவனே ஆடவர் திலகன், ஈடிசைத் தலைவன்—என்று கூறப்பட்டிருப்பவற்றிலிருந்து இவன் நாட்டின் நீர்வளமும் நிலவளமும் இவனுடைய ஆட்சிச் சிறப்பும் வீரமும் புகழும் நன்கு விளங்கும்.

இவன் கண்கவர் வனப்பும் பொலிவும் மிக்கவன் என்பது ஏழாம் தொகுதிப் பாடலால் விளங்கும். ஏதோ

ஒரு சாபம் காரணமாக மண்ணுலகிற்கு வந்து விட்ட ஒரு தேவனே என்று எண்ணும்படியான கவர்ச்சியான தோற்ற முடையவன் என்னும் கருத்தை, 'சாபத் திழுக்கிய தேவ சாதரில் தோற்றம் உடையன்' என்னும் பகுதி உணர்த்துகின்றதன்றோ? ஆனால் அவன் உண்மையில் அப்படி வந்தவ னல்லன்; இயற்கையாகவே பேரழகு மிக்க மாந்தனே யாவான் என்னும் கருத்தை 'இயற்கைச் சேந்தன்' என்னும் தொடர் உணர்த்துகிறது.

சேந்தன் திவாகரம் என வெறும் பெயருக்கு மட்டும் உரியவன் அல்லன் சேந்தன்; திவாகர நிகண்டோடு இவனுக்கு நெருங்கிய தொடர்புண்டு; அதாவது, திவாகரத்தை இவன் நன்கு தெரிந்து ஆராய்ந்து பயின்று பலர்க்கும் எடுத்துச் சொல்லியும் உள்ளான் என்பதை, 'சேந்தன் ஆய்ந்த திவாகரம்' 'சேந்தன் தெரிந்த திவாகரம்,' 'சேந்தன் பயில்வுற்ற திவாகரம்,' 'சேந்தன் பகர்வுற்ற திவாகரம்' என்னும் பாடற் பகுதிகளால் அறியலாம். இறுதியாக, சேந்தனது ஊர் பற்றியும் பேர் பற்றியும் காலம் பற்றியும் உள்ள சிக்கலைச் சிறிது ஆய்ந்து விட்டு இவ் வரலாற்றை முடித்துக் கொள்ளலாம்:—

காவிரிப் பகுதியைச் சேர்ந்த 'அம்பல்' என்னும் ஊரும் 'அருவந்தை' என்னும் ஊரும் சேந்தனுக்கு உரியவை என்னும் கருத்து, (1) 'அம்பற் கிழவோன் சேந்தன்', (2) 'அருவந்தை தேறுங் காட்சிச் சேந்தன்', (4) 'அருவந்தைச் சேந்தன்', (6) 'காவிரிப் பெரும்பதி அம்பற்கு அதிபதி சேந்தன்', (7) 'அம்பல் தோன்றிய சேந்தன்' முதலிய திவாகரப் பாடல் பகுதிகளால் தெளியப்படும். ஆனால், புறநானூறு—385—ஆம்

பாடலில், சிறிது வேற்றுமையுடன், கிட்டத் தட்ட இதே மாதிரியில் ஓர் அரசன் பேசப்பட்டுள்ளான். அப் பாடலின் அடியில், 'அம்பர் கிழான் அருவந்தையைக் கல்லாடனார் பாடியது' என்று குறிக்கப்பட்டுள்ளது. அப்பாடல் வருமாறு:—

"வெள்ளி தோன்றப் புள்ளுக்குரல் இயம்பப்
புலரி விடியற் பகடுபல வாழ்த்தித்
தன்கடைத் தோன்றினும் இலனே பிறன்கடை
அகன்கண் தடாரிப் பாடுகேட் டருளி
வறன்யான் நீங்கல் வேண்டி என்னரை
நீனிறச் சிதாஅர் களைந்து
வெளியது உடீஇஎன் பசிகளைந் தோனே
காவிரி யணையுந் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி அம்பர் கிழவோன்
நல் அருவந்தை வாழியர் புல்லிய
வேங்கட விறல் வரைப் பட்ட
ஓங்கல் வானத் துறையினும் பலவே."

[அம்பர் கிழான் அருவந்தையைக் கல்லாடனார் பாடியது.]

'காவிரி பாயும் கழனி சூழ்ந்த அம்பர் என்னும் ஊரின் தலைவனாகிய அருவந்தை என்பான், எனக்கு நல்ல உடையும் உணவும் அளித்து என் வறுமையைப் போக்கினான்; அவன் நீடுழி வாழ்க!' என்பதுதான் மேலுள்ள புறநானூற்றுப் பாடலின் சுருக்கமான கருத் தாகும்.

இந்தச் சூழ்நிலையை வைத்துக் கொண்டு, புற நானூற்றில் சொல்லப்பட் டிருப்பவனும் திவாகரத்தில் சொல்லப்பட் டிருப்பவனும் ஒருவனே என்று சிலர்

கூறுகின்றனர். அவர்கள் கூறுவதற்குச் சான்று, இரண்டு நூற்களிலும் ஒத்து வந்துள்ள காவிரி, அம்பர் (அம்பல்), அருவந்தை என்னும் மூன்று சொற்களுமேயாம். புறநானூற்றில் அம்பர் கிழவோன் என இடையின 'ர்' உள்ளது. திவாகரத்திலோ அம்பற் கிழவோன் என வல்லின 'ற்' உள்ளது. வல்லின 'ற்' இருப்பதால் புணர்ச்சி யிலக்கணப்படி 'அம்பல்' எனப் பிரித்துக்கொள்ள நேரிட்டது. புறநானூற்றின் வேறு ஓர் ஓலைச் சுவடியில் 'அம்பல்' என்றே உள்ளது. எனவே ஒரு பெயரே சுவடிக்குச் சுவடி மாறுபடுவது இயற்கை. ஆனுல், அருவந்தை என்னும் சொல்தான் பொருளளவில் மாறுபட்டுள்ளது. புறநானூற்றின் படி 'அருவந்தை' என்பது அரசனது பெயராகும். திவாகரத்தின்படியோ—சிலர் கருத்துப்படி 'அருவந்தைச் சேந்தன்' என ஊரின் பெயராகத் தெரிகிறது.

நடுநிலையுடன் ஆராயுங்கால், திவாகரத்திலுள்ள அருவந்தை என்பதை ஊரெனச் சொல்லாமல் அரசனது பெயராகவே கொள்ளலாமே! அதாவது 'அருவந்தைச் சேந்தன்' என்பதற்கு, அருவந்தை என்னும் பட்டப் பெயருடைய--குடும்பப் பெயருடைய சேந்தன் எனப் பொருள் கொள்ளலாமே? அதாவது, பாண்டியன் நெடுஞ்செழியன்—பாண்டியன் அறிவுடை நம்பி, சோழன் நலங்கிள்ளி—சோழன் நெடுங்கிள்ளி என்னும் பெயர்களிலுள்ள பாண்டியன், சோழன் என்னும் குடிப் பெயர்களைப் போல, அருவந்தைச் சேந்தன் என்பதிலுள்ள அருவந்தை என்பதும் குடும்பப் பட்டப் பெயராக இருக்கலா மன்ருே?

எனவே, காவிரி, அம்பல், அருவந்தை என்னும் சொற்கள் புறநானூற்றிலும் திவாகரத்திலும் இருப்

பதும் உண்மைதான் எனினும், இந்தச் சான்றைக் கொண்டு, புறநானூற்று அம்பர்கிழானும் திவாகரத்து அம்பற் கிழானும் ஒருவனே என முடிவு கட்டுதல் ஏற்புடைத்தாகாது. அவன் வேறு—இவன் வேறு. ஒருவேளை, இவன் அவனது மரபில் வந்தவனு யிருக்கலாம். இதற்குக் காரணமும் கூறமுடியும்: புறநானூற்றுப் பாடலில் சேந்தன் என்னும் பெயரின் வாடையே காணப்படவில்லை; அரசனது பெயராக அருவந்தை என்னும் சொல்தான் உள்ளது. இருவரும் ஒருவரே யானுல், இவ்வளவு விளம்பரம் உள்ள சேந்தன் என்னும் பெயர் புறநானூற்றுப் பாடலில் வராமற் போக வழியில்லை. மேலும், அப் புறப் பாட்டைப் பாடியவர் கல்லாடர்; அவர் சங்க காலத்தைச் சேர்ந்த புலவர். புறநானூற்றுப் பாடல்களும் சங்க காலத்தன. பெரும்பாலான ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி, சங்க காலம் கி.பி. 3 அல்லது 5-ஆம் நூற்ருண்டிற்குள் முடிவடைவதாகத் தெரிகிறது. ஆனுல், திவாகரரும் திவாகரச் சேந்தனும் சங்க காலத்திற்குப் பிற்பட்டவர்கள் என்று துணிவதற்கு இடமுண்டு. சில சான்றுகள் வருமாறு:—

(1) திவாகரர் தமது நூலின் தொடக்கத்தில் விநாயகர் காப்புப் பாடல் பாடியுள்ளார். மற்றும், முதல் தொகுதியாகிய தெய்வப் பெயர்த் தொகுதியில் விநாயகருக்கு உரிய பெயர்களை,

> “ ஒற்றைக் கொம்பன், விநாயகன், ஐங்கரன்,
> வெற்றி யானை முகவன், கணபதி,
> பாசாங்குச தரன், ஆகு வாகனனே.”

என்னும் பாட்டலில் கூறியுள்ளார். ஆராய்ச்சியாளரின் கூற்றுப்படிப் பார்த்தால், பழந் தமிழகத்தில் விநாயகர்

வணக்கம் கிடையாது. ஏழாம் நூற்ருண்டில் காஞ்சி புரத்து நரசிம்மவர்ம பல்லவனுடைய படை, சளுக்கிய மன்னனுகிய புலிகேசியை வென்று வாதாபி நகரைக் கைப்பற்றியபோதுதான், அங்கிருந்த விநாயகர் உருவம் ஒன்றைப் பல்லவனுடைய படைத் தலைவர் பரஞ்சோதியார் (சிறுத்தொண்டர்) தமிழகத்துக்கு முதல் முதலாகக் கொண்டு வந்தார். அதன் பின்னரே —அதாவது ஏழாம் நூற்ருண்டில்தான் தமிழ் நாட்டிற்கு விநாயகர் அறிமுகம் ஏற்பட்டது. இந்நிலையில், சங்க நூற்களில் காணப்படாத விநாயகர் திவாகரத்தில் இடம் பெற்றிருக்கிருர் என்ருல், ஏழாம் நூற்ருண்டிற்குப் பிறகே திவாகரரால் திவாகரம் இயற் றப்பட்டிருக்க வேண்டும்.

(2) சேந்தன் அம்மையின்மேல் அந்தாதி பாடி யிருப்பதாகத் திவாகரர் கூறியுள்ளார். தொண் ணூற்ருறு சிறு பிரபந்த (சிற்றிலக்கிய) வகைகளுள் அந்தாதியும் ஒன்று. அந்தாதி போன்ற நூல் வகைகள் சங்க காலத்தில் இயற்றப்படவில்லை. இன்னவை சங்க காலத்திற்கு இப்பால் இடைக் காலத்திலேயே எழத் தொடங்கின.

(3) மேலும், திவாகர நிகண்டின் இரண்டாம் தொகுதியாகிய மக்கட் பெயர்த் தொகுதியில், ‘வேள் புலவரசர் சளுக்கு வேந்தர்’ எனச் சாளுக்கிய மன்னர் குடியினர் பேசப்பட் டுள்ளனர். எனவே, சாளுக்கிய மன்னர்கள் தமிழ் நாட்டோடு தொடர்பு கொண்ட பின்னரே திவாகர நூல் தோன்றியிருக்க வேண்டும். தமிழ் நாட்டோடு எந்த விதமான தொடர்பும் இல்லாத மன்னரைத் தமிழ் நிகண்டு பேச வேண்டிய காரணமே

இல்லை யன்றே? தமிழ் நாட்டோடு தொடர்பு கொள்ளாத ஏனைய உலக மன்னர்களைப் பற்றித் திவாகர நிகண்டு பேசவில்லை யன்றே?

சாளுக்கிய மன்னர்கள் தமிழ் நாட்டோடு தொடர்பு கொண்டது ஆறு, ஏழாம் நூற்றாண்டுகளி லாகும். புலிகேசி, விக்ரமாதித்யன் முதலிய சளுக்கிய குல மன்னர்கள், காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டை யாண்ட பல்லவ குல மன்னர்களோடு போரிட்டதாக வரலாறு கூறுகின்றது. எனவே, சளுக்கிய மன்னர்களைப் பற்றியும் கூறும் திவாகரம் ஏழாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகத் தான் இருக்கவேண்டும். ஏறக்குறைய எட்டாம் நூற்றாண்டில் திவாகரம் தோன்றி யிருக்கக்கூடும் என்று கூறலாம். அப்படி யென்றால், சேந்தனும் திவாகரரும் எட்டாம் நூற்றாண்டினர் என்பது பெறப்படும்.

ஆனால், திவாகரம் மூன்றாம் தொகுதிப் பாடலில் 'அவ்வை பாடிய அம்பற் கிழவன்' எனத் திவாகரரால் சேந்தன் சிறப்பிக்கப் பெற்றிருப்பதைக் கொண்டு, 'அவ்வையார் சங்க காலத்தவர்; அவரால் பாடப் பெற்ற சேந்தனும் சங்க காலத்தவன்; எனவே சேந்தன் திவாகரமும் சங்க காலத்தது', என்று சிலர் கூறக்கூடும். இது பொருந்துமா? அவ்வையாரைப் பொறுத்தமட்டில் எதையும் துணிந்து கூறுதற்கில்லை. அவ்வை என்ற பெயரை வைத்துக் கொண்டு திட்ட வட்டமாகக் கால ஆராய்ச்சி செய்துவிட முடியாது. ஏன் எனில், கடந்த இரண்டாயிரம் ஆண்டு காலத் தமிழ் இலக்கிய வரலாற்றைப் புரட்டிப் பார்க்குங்கால், அவ்வையார் என்னும் பெயரில் பல காலத்தில் பலர்

இருந்ததாகத் தெரிகிறது. இருபதாம் நூற்றுண்டுச் சினிமா—நாடக அவ்வையாரோ, பழைய அவ்வையார்கள் பலரும் சேர்ந்த கதம்ப அவ்வையாராகக் காட்சியளிக்கின்ருர். எனவே, திவாகரர் கூறியுள்ளபடி சேந்தனைப் பாடிய அவ்வையார் எந்த அவ்வையாரோ? அவர் சங்க கால அவ்வையாரே என்று எப்படித் துணிந்து கூறமுடியும்? இடைக் கால அவ்வையாராக இருக்கலாமே!

எனவே, சேந்தனும் திவாகரரும் ஒருதோற்றம் எட்டாம் நூற்ருண்டின ராவர். கால ஆராய்ச்சிக்காகவே புறநானூற்றுப் பாடலை இங்கே இழுத்துப் போட்டு இவ்வளவு நேரமும் முயற்சியும் செலவிட வேண்டிய தாயிற்று.

# திவாகரர் வரலாறு

சேந்தனைப் பற்றி முறையான வரலாறு எழுதி வைக்கப்பட வில்லை என்று குறைபட்டுக் கொண் டோம். இருப்பினும், திவாகரர் எழுதி வைத்துள்ள குறிப்புக்களைக் கொண்டு அவனது வரலாற்றை ஓரளவு உருவாக்கிக் கொண்டோம். ஆனால் திவாகரர் வரலாற்றைப் பொறுத்தமட்டும் நமக்கு ஏமாற்றமே காத்துக் கிடக்கிறது. அவரைப் பற்றி ஓரளவாயினும் அறிந்துகொள்வதற்குக்கூட, அவர் நூலோ அல்லது பிறர் நூற்களோ துணை புரியவில்லை. சில நூலாசிரி யர்கள் நூலுக்கு முன்னால் உள்ள பாயிரப் பகுதியில் தம்மைப் பற்றி ஒரு சிறிது உரைத்திருப்பார்கள்; அல்லது, நூலாசிரியரைப் பற்றிப் பிறராயினும் பாயிரப் பகுதியில் புகழ்ந்து எழுதியிருப்பார்கள். இந்த இரண்டு நிலைகளுமே திவாகர நிகண்டில் காணப் படவில்லை. ஒருவேளை இருந்து அழிந்துவிட் டிருக்குமோ? இந்நிலை நமது தீப்பேறே. இருப்பினும், திவாகரரைப் பற்றிப் பின்வருமாறு சிறுகுறிப்பு செப்ப னிட்டுக் கொள்ளலாம் :—

திவாகரர் முதலில் இல்லறம் நடாத்திப் பின்னர்த் துறவு பூண்ட ஒரு முனிவர். 'திவாகர முனிவர் அருளிச் செய்த சேந்தன் திவாகரம்' என நூலுக்கு முன்னால் எழுதப்பட் டிருப்பதைக் கொண்டு இது புலனாகும். இவர் தஞ்சை மாவட்டத்துச் சேந்தனால் ஆதரிக்கப் பெற்றவர்; அதனால் இவரும் அந்த வட் டத்தினராக இருக்கலாம். இவர் நன்றி மறவாத பண்பினர் என்பது, தம் நூலின் தொகுதி தோறும்,

தம்மை ஆதரித்த சேந்தனைப் புகழ்ந்து பாடியிருப்பதன் வாயிலாகப் புலப்படும்.

திவாகர நூலுக்கு முன்னுல் 'காப்பு' என்னும் தலைப்பில் ஒரே ஒரு செய்யுள் மட்டும் உள்ளது. நூலாசிரியர்கள் தம்மையும்—நூலையும் காக்குமாறு பிள்ளையாரையோ அல்லது பிற கடவுளரையோ வேண்டிக் காப்புச் செய்யுள் பாடுவது மரபு. திவாகரர் பிள்ளையாரை வேண்டிக்கொண்டுள்ளார். அந்தக் காப்புச் செய்யுள் வருமாறு :—

" தந்திமுகத்து எந்தை சதங்கைப் பதம்போற்றிச்
சிந்தை விளக்காம் திவாகரத்துள்—வந்த
தொகுதியொரு பன்னிரண்டும் சோராமல் நேரே
பகுதியுற மனமே பற்று."

இப்பாடலிலுள்ள 'தந்தி முகத்து எந்தை' என்பதற்கு, யானை முகத்தை யுடைய விநாயகக் கடவுள் என்பது பொருள். இவ்வாறு பிள்ளையார் வணக்கம் பாடியிருப் பதால், திவாகரர் சைவ சமயத்தவர் என்பது எளிதில் விளங்கும். மேலும், நிகண்டின் முதல் தொகுதியாகிய தெய்வப் பெயர்த் தொகுதியில் சிவன் பெயர்களையே இவர் முதலில் தொடங்கியுள்ளார். இதனுலும் இவர் சைவர் என்பது பெறப்படும். சமண சமயத்தவ ராகிய மண்டல புருடர் தமது சூடாமணி நிகண்டின் தொடக் கத்தில், சமணக்கடவுளாகிய அருகன் பெயர்களையே முதலில் தொடங்கியிருப்பது ஈண்டு குறிப்பிடத் தக்க தாகும். அன்றியும், சைவ சமயத்தானுகிய சேந்தனுல் ஆதரிக்கப் பெற்று, அவன் பெயரையும் தம் நூலுக்கு இட்ட திவாகரரும் சைவ சமயத்தவராகத்தானே இருந்திருக்கக்கூடும்.

திவாகரர் சோழக் குடும்பத்தின் வழிவந்தவர் என்ற ஒரு கருத்து சிலரிடையே நிலவுவது உண்டு. அத்தகையவர் இந்தத் திவாகரர் அல்லர்; அவர் ஆதி திவாகரம் எழுதிய திவாகர ராவார் என்ற கருத்து வேற்றுமையும் உண்டு. இவ்விரண்டனுள் பின் கருத்தே பொருத்தமானதாகத் தெரிகிறது. ஏனெனில், இந்தத் திவாகரர் சோழர் குடிவழியினரா யிருந்திருந் தால் சேந்தனுல் ஆதரிக்கப்பட் டிருக்கவேண்டியதில்லை யன்றோ?

அடுத்துப் பேசப்போகும் பிங்கல நிகண்டின் ஆசிரி யராகிய பிங்கலர் என்பவர் திவாகரரின் மகனுவார் என்பதாகப் பிங்கல நிகண்டின் பாயிரத்தில் ஒரு குறிப்பு காணப்படுகிறது. அதுகுறித்து ஆங்கு ஆராய்வாம்.

திவாகரரின் காலம் எட்டாம் நூற்ருண்டு என்பது முன்னரே சொல்லப்பட்டுள்ளது. இக் குறிப்புக்களைத் தவிர, திவாகரரைப் பற்றி வேருென்றும் தெரிந்திலது. இனி ஏதேனும் கிடைத்தால் உண்டு.

## நூலின் காலம்

சேந்தனும் திவாகரரும் எட்டாம் நூற்ருண்டின ராதலின், சேந்தன் திவாகரம் எட்டாம் நூற்ருண்டு நூல் என்பது இனிது பெறப்படும்.

## நூலின் அமைப்பு

திவாகரம் பன்னிரண்டு தொகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது. அவையாவன :—

1. தெய்வப் பெயர்த் தொகுதி
2. மக்கள் பெயர்த் தொகுதி
3. விலங்கின் பெயர்த் தொகுதி
4. மரப் பெயர்த் தொகுதி
5. இடப் பெயர்த் தொகுதி
6. பல் பொருள் பெயர்த் தொகுதி
7. செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி
8. பண்பு பற்றிய பெயர்த் தொகுதி
9. செயல் பற்றிய பெயர்த் தொகுதி
10. ஒலி பற்றிய பெயர்த் தொகுதி
11. ஒருசொல் பல்பொருள் பெயர்த் தொகுதி
12. பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி-

என்பனவாம். தெய்வப் பெயர்த் தொகுதியில் பல் வகைத் தெய்வங்களின் பற்பல பெயர்கள் கூறப் பட்டிருக்கும். இது போலவே மற்ற தொகுதிகளிலும் அவ்வப் பெயர்கள் கூறப்பட்டிருக்கும். தொகுதி என்ருலும் நிகண்டு என்ருலும் கூட்டம் என்ருலும் பொருள் (அர்த்தம்) ஒன்றே. திவாகரத்தில் உள்ள தொகுதி அமைப்புமுறையே பின்வந்த நிகண்டுகளின் அமைப்புக்கும் வழிகாட்டியாகும்.

மேற்கூறிய பன்னிரண்டு தொகுதிகளையும் மூன்று வகைக்குள்ளும் அடக்கிவிடலாம். அதாவது, முதல் பத்துத் தொகுதிகளையும் சேர்த்து 'ஒரு பொருள் பல் பெயர்த் தொகுதி' என்னும் தலைப்புக்குள் அடக்கி விடலாம். ஏனெனில், இந்தப் பத்தும் ஒரே முறையைப் பின்பற்றியவை யாகும். அதாவது, தெய்வம் முதல் ஒலி யீருக உள்ள பத்துப் பொருள்களுள் ஒவ்வொரு பொருளையும் குறிக்கும் பல பெயர்களும் (Class vocabularies) தொகுத்துக் கூறப் பட்டிருப்பதால்—எடுத்துக் காட்டாக, சிவன் என்னும் தெய்வத்திற்கு எத்தனை பெயர்கள் உண்டோ அத்தனை பெயர்களும் கூறப்பட்டிருப்பதால்—இந்தப் பத்துத் தொகுதிகளையும் 'ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதி' என்னும் ஒரே தலைப்பால் குறிப்பிடலா மன்ருே? அடுத்துப் பதினொன்ருவது தொகுதியை 'ஒரு சொல் பல் பொருள் பெயர்த் தொகுதி' என அதே தலைப்பாலேயே குறிப்பிடலாம். இப்பகுதியில்தான், நாம் இப்போது கையாண்டு வரும் அகராதிப் பயன் அமைந்திருக்கிறது. அதாவது' (Homonyms) ஒரு சொல்லுக்கு உரிய பல பொருள்களும் (அணி என்ருல் அழகு, ஆபரணம், அணிதல், வரிசை என்பது போல) கொடுக்கப்பட்டுள்ளன. இறுதியாக உள்ள பன்னிரண்டாம் தொகுதியையும் 'பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி' என்னும் அதே தலைப்பாலேயே குறிப்பிடலாம். இப்பகுதியில், முக்காலம் என்ருல் இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்பது போல—நால் நிலம் என்ருல் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பது போல—ஐம் பொறி என்ருல் மெய், வாய், கண், மூக்கு, செவி என்பது போலக் குழூப் பெயர்கட்கு (Group—names) விளக்கம் கொடுக்கப்படும். நானிலம் என்னும் ஒரு பெயர்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் பல பொருள்களின் கூட்டத்தைக் குறிக்கும் என்பதுபோல இத் தொகுதி அமைக்கப்பட்டிருப்பதால் இதற்குப் 'பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி' என்னும் பெயர் கொடுக்கப்பட்டது பொருத்தம் தானே !

எனவே, திவாகரத்தின் பன்னிரண்டு தொகுதிகளையும் (1) ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதி, (2) ஒருசொல் பல்பொருள் பெயர்த் தொகுதி, (3) பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி என்னும் மூவகைக்குள் அடக்கி விடலாம். இங்கே இம் மூவகை அமைப்புக்களைப் பற்றி இவ்வளவு விரிவாக எழுதியதற்குத் தக்க காரணம் உண்டு. திவாகரத்தின் தொகுதி அமைப்புமுறையே பின்வந்த நிகண்டுகளின் அமைப்புக்கு வழிகாட்டி என்று முன்னரே கண்டோம். அவ்வண்ணமே-திவாகரத்தைப் போலவே பன்னிரண்டு தொகுதிகளாகச் சில நிகண்டுகள் அமைந்துள்ளன. இப் பன்னிரண்டு தொகுதிகளையும் மூவகைத் தொகுதிகளுள் நாம் அடக்கியிருக்கிறோம். இம் மூன்றனுள் முதல் வகையைப் பற்றி மட்டும் (அதாவது முதல் பத்துத் தொகுதிகளைப் பற்றி மட்டும்) சில நிகண்டுகள் பேசுகின்றன. வேறு சில நிகண்டுகளோ, இரண்டாம் வகையைப் பற்றி மட்டும் (அதாவது பதினொன்றாவது தொகுதியைப் பற்றி மட்டும்) பேசுகின்றன. இன்னும் சில நிகண்டுகளோ, மூன்றாம் வகையைப் பற்றி மட்டும் (அதாவது பன்னிரண்டாவது தொகுதியைப் பற்றி மட்டும்) பேசுகின்றன. அந்த விவரங்கள் எல்லாம், பின்னர் அந்தந்த நிகண்டுகளைப் பற்றித் தனித் தனித் தலைப்புக்களின் கீழ் விளக்கும்போது குறிப்பிடப்

படும். அந்த வசதிக்காகவே இங்கே இவ்வளவு அடிப்படை பொதுவாகப் போடவேண்டியதாயிற்று. இனி அங்கங்கே அந்தந்த வகையை மட்டும் குறிப்பிட்டுச் சென்று விடலாமன்றோ? இனி மீண்டும் திவாகர நிகண்டிற்கு வருவோம் :

திவாகரத்தின் பன்னிரண்டு தொகுதிகளிலும் ஏறக்குறைய 9500 சொற்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வளவு சொல்செல்வங்களையும் நமக்கு அறிமுகப் படுத்தும் திவாகரப் பாடல்கள் தொல்காப்பியத்தைப் போல் சூத்திர (நூற்பா) வகையைச் சார்ந்தவை யாகும். இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் எழுதப்பெற்ற தொல்காப்பிய நூலில் உள்ள நூற்பாக்கள் (சூத்திரங்கள்) சிலவும் இந்த நிகண்டுக்குள் அப்படியே சேர்த்துக்கொள்ளப்பட் டிருக்கின்றன. இஃது ஒரு வகை மரபு. அதாவது, ஒரு நூலாசிரியர், முன்னோரையும் அவர்தம் நூலையும் மதித்துப் போற்றுவதற்கு அடையாளமாக, அம் முன்னோரது நூலில் உள்ள சில செய்யுட்களை அப்படியே எடுத்துத் தம் நூலில் சேர்த்துக் கொள்வது அக்கால வழக்கம். இது திருட்டு ஆகாது. அவ்வண்ணம் திவாகரத்தி லுள்ள தொல்காப்பிய நூற்பாக்கள் இரண்டு வருமாறு :—

“ நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது
ஓத்தென மொழிப உயர்மொழிப் புலவர்.”

“ ஒருநெறி யன்றி விரவிய பொருளால்
பொதுமொழி தொடரினது படல மாகும்.”

மேலுள்ள நூற்பாக்கள் இரண்டும் தொல்காப்பியம்—பொருளதிகாரம்—செய்யுளியலில் உள்ளன.

இவையே திவாகரத்தின் பத்தாம் தொகுதியாகிய ஒலி பற்றிய பெயர்த் தொகுதியிலும் உள்ளன.

இத் திவாகரம் கி.பி. 1835-ஆம் ஆண்டில் தாண்டவராய முதலியார் என்பவரால் ஓலைச் சுவடியிலிருந்து முதல் முதலாக அச்சிடப்பட்டது. இப்பதிப்பில் முதல் பத்துத் தொகுதிகள் மட்டுமே உள்ளன; இறுதித் தொகுதிகள் இரண்டும் காணப்படவில்லை. மேலும் இப்பதிப்பில் இடைச் செருகல் உள்ளதாகச் சொல்லப் படுகிறது. ஒரு நூலைப் பெயர்த்தெழுதுபவரோ அல்லது அச்சிடுபவரோ, நூலின் இடையிடையே தாமாகச் சிலவற்றைச் செருகி விடுவதற்குத்தான் இடைச்செருகல் என்று பெயராம். தாண்டவராயர் தம் கைவண்ணம் சிறிது காட்டியிருப்பார் போலும்!

தாண்டவராய முதலியாருக்குப் பின்னர் மேலும் சிலர் திவாகரத்தைப் பதிப்பித்தனர். அப் பதிப்புக் களுள் பதினொன்றாவது தொகுதியின் அகரமுறைச் சீர்திருத்தப் பதிப்பு மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். இது குறித்து ஓரளவு விளக்கினால்தான் புரியும்.

இப்போது நமக்கு ஒரு சொல்லுக்குப் பொருள் தெரியவில்லையென்றால் உடனே அகராதியை எடுத்துப் புரட்டுகிறோம். இக்கால அகராதிகளில் எழுத்துக்களின் வரிசை முறையில் சொற்கள் அமைக்கப்பட் டிருப்பதால் எந்தச் சொல்லையும் உடனே கண்டுபிடிக்க முடிகிறது. ஆனால் பழைய நிகண்டுகளில் இப்படி யில்லாததால் குறித்த சொல்லை உடனே தேடி எடுக்க முடியவில்லை. அதனால் திவாகரத்தில் சொல்லுக்குப் பொருள்கூறும் பகுதி யாகிய பதினொன்றாவது தொகுதியில் உள்ள சொற்களை

அகர வரிசைப்படுத்தி எழுதி வைத்துக்கொண்டு அக்காலத்தவர் சிலர் பயன்படுத்தி வந்தனர். (இது குறித்து முன்பு ஓரிடத்திலும் சொல்லப்பட்டுள்ளது.) அச்சு வசதி ஏற்பட்ட பின்னர் அகர வரிசையில் சீர்திருத்திப் பதிப்பிக்கவும் செய்தனர். 'அகர முறைச் சீர்திருத்தப் பதிப்பு' என்றால் இதுதான். அண்மைக் காலத்தில் அச்சிடப்பட்ட திவாகரப் பதிப்புகளில்கூட, பதினொன்றாவது தொகுதி மட்டும் அகர வரிசையில் உள்ளது. ஆனால், இந்த அகர வரிசை திவாகரர் செய்த முறையன்று; பிற்காலத்தவர் செய்து கொண்ட சீர்திருத்தமே—என்பது நினைவிருக்க வேண்டும்.

அகர வரிசைப் படுத்திய பிற்காலத்தவர்கள் பதினொன்றாவது தொகுதியை 'ஆதியிற் பொருள்', 'அந்தத்துப் பொருள்' என இரு பிரிவுகளாக அமைத்துள்ளனர். 'ஆதியிற் பொருள்' என்றால் என்ன என்று விளக்குவதற்கு, ஆதியிற் பொருள் பிரிவிலுள்ள முதல் பாடலையும் இறுதிப் பாடலையும் எடுத்துக் கொள்வோம் :—

[அங்கதம் என்னும் பெயர்]

" அங்கதம் தோளணி அரவு மாகும்."

இது முதல் நூற்பா.

[வேளாண்மை என்னும் பெயர்]

" வேளாண்மை உபகாரம் ஈகையும் விளம்பும்."

இஃது இறுதி நூற்பா.

அங்கதம் என்னும் சொல்லுக்கு, தோள் அணி, அரவு என்னும் இரண்டு பொருளாம். வேளாண்மை

என்னும் சொல்லுக்கு, உபகாரம், ஈகை என்னும் இரண்டு பொருளாம். இவ்வாறு அங்கதம், வேளாண்மை என்னும் சொற்களைப் பாடலின் முதலில் ஆதியில்) நிறுத்திப் பின்னர்ப் பொருள் கூறுவதால் இந்தப் பிரிவுக்கு ஆதியிற் பொருள் என்று பெயர் சூட்டப்பட்டது. இனி, 'அந்தத்துப் பொருள்' என்றால் என்ன என்று விளக்குவதற்கு அந்தத்துப் பொருள் பிரிவிலுள்ள முதல் பாடலையும் இறுதிப் பாடலையும் எடுத்துக் கொள்வோம் :—

அணங்கு என்னும் பெயர்]

"தெய்வமும் தெய்வத் துவமை மாதரும்
மையலும் நோயும் வருத்தமும் கொலையும்
ஐயமின் றுரைக்கும் அணங்கு என்கிளவி."

இது முதல் நூற்பா.

[வையம் என்னும் பெயர்.]

"சிவிகையும் ஆனேறும் சகடமும் தேரும்
அவனியும் வையம் எனப்பெய ராகும்."

இஃது இறுதி நூற்பா.

அணங்கு என்னும் சொல்லுக்கு, தெய்வம், தெய்வத்துவமை மாதர் (பெண் தெய்வம் போன்ற பெண்), மையல், நோய், வருத்தம், கொலை என்னும் ஆறு பொருளாம். வையம் என்னும் சொல்லுக்கு, சிவிகை (பல்லக்கு), ஆனேறு (காளை), சகடம், தேர், அவனி (உலகம்) என்னும் ஐந்து பொருளாம். இவ்வாறு அணங்கு, வையம் என்னும் சொற்களைப் பாடலின் அந்தத்தில் (இறுதியில்) வைத்து முன்னாலேயே பொருள் கூறியிருப்பதால்,

இந்தப் பிரிவுக்கு அந்தத்துப் பொருள் என்று பெயர் சூட்டப்பட்டது.

இவ்வாறு அகராதி முறையில் சீர்திருத்திக் கொண்டது எளிதில் பொருள் காண்பதற்கு உதவும். ஆனால் திவாகரரின் அமைப்பு முறையிலே, மிக்க மதிப்பும் பயனும் உள்ள பொருள் முன்னாலும், அதற்குஅடுத்ததுஅதன்பின்னாலும், அதற்குஅடுத்தது அதன் பின்னாலுமாக வரிசைப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும். சில விடங்களில் எதுகையும் இடம்பெற்றிருக்கும்.

திவாகரத்தின் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும், இத்தனையாவது தொகுதியாகிய இன்ன பெயர்த்தொகுதி முற்றிற்று என்றும், நூலின் இறுதியில் "பன்னிரு தொகுதியும் பண்பொடு முற்றின" என்றும் திவாகரராலேயே அறுதி செய்யப்பட்டிருப்பது ஈண்டு குறிப்பிடத் தக்கதாம்.

## நூலின் உட்பொருள்

திவாகர நிகண்டு, ஏறக்குறைய உலகம் முழுதும் அடங்கியுள்ள ஒரு பொருட்காட்சி நிலையமாகும். எனவே, நாம் அதன் உள்புக்கு ஒரு சில பொருட்களையாயினும் காணவேண்டும். திவாகரம், பிங்கலம், சூடாமணி முதலிய நிகண்டுகளுள் ஒரு நிகண்டினையாயினும் நாம் ஓரளவு ஆராய்ந்து விட்டால், பின்னர் மற்ற நிகண்டுகளை மிக மிகச் சுருக்கமாக முடித்துக் கொள்ளலாம். எனவே மாதிரிக்காக, முதல் நிகண்டாகிய திவாகரத்தை ஓரளவு விரிவாகக் காண்பாம்.

# 1. தெய்வப் பெயர்த் தொகுதி

தெய்வப் பெயர்த் தொகுதியில், சிவன், திருமால், முருகன், அருகன், புத்தன் முதலிய பல்வகைத் தெய்வங்களின் பெயர்களைக் கூறுவதோடு ஆசிரியர் அமைந்துவிட வில்லை; மேலும் பலவகைத் தேவ இனங்கள், அரக்க இனம், நாள் (நட்சத்திரங்கள்), கோள் (கிரகங்கள்), விண், காற்று, தீ, நீர், பலவகைக் காலங்கள், மழை மேகம் இடி முதலியவற்றிற் குரிய பலவகையான பெயர்களையும் கூறியுள்ளார். மாதிரிக் காக முதல் பாட்டைப் பார்ப்போம். அதில் சிவனுக்குரிய அறுபத்துமூன்று பெயர்கள் கூறப்பட் டுள்ளன. அது வருமாறு :—

(சிவன் பெயர்)

" சங்கரன், இறையோன், காம தகனன்,
கங்கா தரனே, கறைமிடற் றண்ணல்,
கூற்றை உதைத்தோன், குன்ற வில்லி,
ஏற்று வாகனன், திரியம்பகன், சோதி,
நக்கன், சடையோன், நாரி பாகன்,
முக்கண் பகவன், பசுபதி, பரமன்,
கொன்றை சூடி, கொலை மழுவாளி,
சமத் தாடி, பிஞ்ஞகன், பித்தன்,
ஆனை யுரித்தோன், அரன், சிவன், உருத்திரன்,
கால காலன், கபால மூர்த்தி,
நீல கண்டன், நீறணி கடவுள்,
அரவா பரணன், ஆரழ லாடி,
பிறையது சூடி, பெருமான், உமாபதி,
அழலது வேத்தி, அமலன், ஆனந்தன்,
பரசு பாணி, சுடலை யாடி,
மானிடம் ஏந்தி, மறைமுதல், யோகி,
புலித்தோ லுடையோன், புரமூன் றெரித்தோன்,

பிஞக பாணி, பேயோ டாடி,
பூத நாதன், புணர் கங்காளன்,
ஞான மூர்த்தி, ஈசன், அஞதி,
ஐம்முகன், பகவன், ஆதி, பாண்டரங்கன்,
அந்தி வண்ணன், ஆலமர் கடவுள்,
நந்தி, நம்பன், நாதன், தற்பரன்,
கண்ணுதல் மூர்த்தி, கைலை யாளி, என்று
எண்ணிய நாமம் இன்னமும் பலவே.''

சிவனுக்குக் கூறப்பட்டுள்ள பெயர்களைக் கூர்ந்து நோக்கின், திவாகரர் காலத்திலேயே தமிழ் நாட்டில் புராணக் கதைகள் மலிந்துவிட்டன என்பது புலனாகும். சங்க இலக்கியங்களில் இத் தகைய பெயர்களைக் காணமுடியா தன்றோ? இதனாலும் திவாகரம் சங்க காலத்தைச் சேர்ந்த நூலன்று என்பது புலனாகும்.

திவாகரத்தில் சமண சமயக் கடவுளாகிய அருகனுக்கு உரியனவாக நாற்பத்து மூன்று பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள், ஆதியங் கடவுள், பகவன், அறவாழி யந்தணன், எண் குணன், பூமிசை நடந்தோன் என்னும் பெயர்களும் அடங்கி யுள்ளன. இப்பெயர்கள் அருகனுக் குரியனவாகச் சூடாமணி முதலிய நிகண்டுகளிலும் சொல்லப்பட் டுள்ளன. இவை, திருக்குறள் கடவுள் வாழ்த்திலுள்ள ஆதி பகவன், மலர் மிசை ஏகினான், அறவாழி யந்தணன், எண்குணத்தான் என்னும் பெயர்களோடு ஒத்துள் ளமை ஆராய்ச்சிக் குரியது. இதைக் கொண்டே, திருவள்ளுவர் ஒரு சமணர் என்று சிலர் கூறுகின்ற னர் போலும்! இருப்பினும், திருவள்ளுவரைச் சாதி சமயங்கட்கு அப்பாற்பட்டவராக மதிப்பிடுதலே எக்காலத்திற்கும் ஏற்புடைத் தாகு மன்றோ?

'எல்லாக் கலைகளையும் எழுதுவதற்கேற்ற சொல் வளம் தமிழில் இல்லை; ஆதலின் எல்லாப் பாடங்களை யும் தமிழில் நடத்த முடியாது' என்று பிதற்றும் கையாலாகாத கடைந்தெடுத்த சோம்பேறிகளுக்குத் தமிழ் நிகண்டுகள் பெரிய அறைகூவலாகும். தமிழில் எதையும் குறிப்பிடுவதற்குச் சொல்வளம் உண்டு. இன்னும் கேட்டால் ஒவ்வொன்றுக்கும் பல சொற்கள் உண்டு. எடுத்துக்காட்டாக, காற்று என்னும் பொருளின் தொடர்பாகமட்டும் இருபது சொற்கள் இருப்பதைக் கீழே காணலாம்:-

(காற்றின் பெயர்)

" வாதம், கூதிர், வங்கூழ், கால், வளி,
ஊதை, அனிலம், கோதை, நீழல்,
உலவை, மாருதம், மருத்து, புவனம்,
வாடை, ஒலியே, கூதை, உயிர்ப்பே,
வேற்றலம், கொண்டல், கோடை என்று இருபதும்
காற்றின் பெயரெனக் கருதல் வேண்டும்."

இவையேயன்றிப் பின்னுள்ள பாடல்களில், வடந்தை, மலயக்கால், தென்கால், தென்றல், சூறை, சாரிகை, சுழற்காற்று முதலிய காற்றின் பல்வகைப் பெயர்களும் கூறப்பட்டுள்ளன. அம்மம்மா! எத்துணை சொற்செல்வம்!

நிகண்டுகளில் கூறப்பட்டுள்ளவற்றோடு தமிழின் சொற்களஞ்சியம் முற்றும் நிறைந்துவிட்டதாகக் கொள்ளக்கூடாது. வழக்கத்திலுள்ள பதினாயிரக் கணக்கான எளிய சொற்கள் நிகண்டுகளில் இடம்பெற வில்லை. எடுத்துக்காட்டுக்கு ஒன்று நோக்குவாம்:-

" நென்னலும் நெருநலும் முன்னைநாள் ஆகும்."

இது முதல் தொகுதியிலுள்ள ஒரு பாடல்தான். நென்னல் என்ற சொல்லும் நெருநல் என்ற சொல்லும் முன்னாள் அதாவது நேற்று என்பதைக் குறிக்கும்— என்பது இதன் பொருளாகும். இந்தப் பாடலில் 'நேற்று' என்னும் சொல் விடப்பட்டுள்ளதன்றோ? இவ்வாறு விடுபட்ட சொற்கள் மிகப் பலவாம். ஆதலின், நிகண்டுகளைக்கொண்டு தமிழ்மொழியின் சொற் கருவூலத்தை அளந்து எண்ணிக்கையிட்டு முற்றுப் புள்ளி வைத்துவிடக்கூடாது.

அடுத்து இன்னொரு கருத்து ஆராய்ச்சிக்குரியது. தமிழ்மக்கள் சித்திரைத் திங்களைத் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கமாகக் கொண்டாடுகின்றனர். தைத் திங்களைத் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கமாகக் கொண்டாடும் ஒருசார் மரபும் நிலவி வருகிறது. இப்பொழுதே போட்டி போட்டுக்கொண்டிருக்கும் இந்த இரண்டு திங்களுக்கிடையே புதிதாக மற்றொரு திங்கள் (மாதம்) போட்டியாக முளைப்பதற்குத் திவா கரம் இடம்தரும்போல் தெரிகிறது. அது வருமாறு:-

தமிழ் வழக்குப்படி இரண்டு திங்கள்கள் கொண்டது ஒரு பருவமாகும். எனவே, பன்னிரண்டு திங்கள்கள் கொண்ட ஓர் ஆண்டினைப் பின்வருமாறு ஆறு பருவங்களாகப் பகுக்கலாம்:-

சித்திரை, வைகாசி—இளவேனில் பருவம்.

ஆனி, ஆடி—முதுவேனில் பருவம்.

ஆவணி, புரட்டாசி—கார்ப் பருவம்.

ஐப்பசி, கார்த்திகை—கூதிர்ப் பருவம்.

மார்கழி, தை—முன்பனிப் பருவம்.

மாசி, பங்குனி—பின்பனிப் பருவம்.

இதுபற்றிக் கூறும் திவாகரப் பாடல் வருமாறு:-

(அறுவகைப் பருவம்)

“ காரே, கூதிர், முன்பனி, பின்பனி,
சீர் இளவேனில், முதுவேனில் என்றுங்கு
இருமூன்று வகைய பருவம் அவைதாம்
ஆவணி முதலா இரண் டிரண்டாக
மேவின திங்கள் எண்ணினர் கொளலே.”

இப்பாடல் கார் முதலிய ஆறு பருவங்களையும் முதலில் குறிப்பிட்டு, பிறகு இப்பருவங்கட்கு உரியன வாக ஆவணி முதலாக இரண்டிரண்டு திங்கள்களாக எண்ணிச் சேர்த்துக் கொள்க—என்று கூறுகிறது. இங்கே கார்ப்பருவமாகிய ஆவணியை முதலில் தொடங்கிக் கூறியிருப்பதில் ஏதோ பொருள் இருக் கிறது! சூடாமணி முதலிய நிகண்டுகளிலும் இவ்வாறே ஆவணி தொடங்கப்பட்டுள்ளது.

“ பரவிய காரே கூதிர்
முன் பினிற் பனிக ளோடு
விரவிய இளைய வேனில்
விரைந்திடு முதிய வேனில்
மருவும் ஆவணியே ஆதி
மற்றிரண் டிரண்டு மாதம்
பருவம் மூவிரண்டும் ஆய்ந்து
பார்த்திடின் வாய்த்த பேராம்.”

என்பது சூடாமணி நிகண்டுப் பாடல்.

இவற்றில் மட்டுமா? மூவாயிரம் ஆண்டுகட்கு முன் இயற்றப்பட்ட தொல்காப்பியத்திலும்,

“ காரும் மாலையும் முல்லை குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர் ”

எனக் கார்ப்பருவமே முன்னர்த் தொடங்கப்பட்டுள் ளது. இடைக்காலத்தில் எழுந்த அகப்பொருள் விளக்கம் என்னும் நூலிலுங்கூட,

"காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனில் என்றுங்கு
இருமூன்று திறத்தது தெரிபெரும் பொழுதே."

எனக் கார்ப் பருவமே முதலில் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஆவணியில் தொடங்குவதில் ஏதோ புத்தாண்டுப் பொருத்தம் இருக்கவேண்டும்! இதுகுறித்துத் தனியாக விரிவாக ஆராயவேண்டுமாதலின், ஒரு புதிய எண்ணத்தைக் கிளறிவிடும் அளவுக்கு மட்டும் ஈண்டு ஒரு சிறிது நோக்குவாம்:-

இப்போது திருநெல்வேலி மாவட்டம் என அழைக்கப்படுகின்ற தென்பாண்டி நாட்டில் சிலவிடங்களில் ஆவணித் திங்கள் புத்தாண்டுத் தொடக்கமாகப் போற்றப்படுகிறதாம். பழைய தமிழ்ச்சேர நாடாகிய மலையாளத்தின் சில பகுதிகளிலுங்கூட ஆவணியே ஆண்டின் தொடக்கமாகக் கொண்டாடப்படுகிறதாம். மலையாளப் பெருமக்கள் மிகப்பெரிய நாட்டு விழாவாகக் கொண்டாடும் 'ஓணம் பண்டிகை' ஆவணித் தொடக்கத்திலே நிகழ்கிறது என்பதும் ஈண்டு ஒப்புநோக்கற்பாற்று.

எனவே, ஒரு காலத்தில் தமிழகத்தில் பரவலாக ஆவணித் திங்கள் ஆண்டின் தொடக்கமாகப் போற்றிக் கொண்டாடப்பட்டுள்ளது என உய்த்துணரலாம். கொடிய கோடை நீங்கிக் குளிர்ந்த கார்காலம் தொடங்கும் திங்களாதலின் ஆவணி அவ்வாறு போற்றப்பட்டதுபோலும்!

மற்றும், ஆவணித் திங்களை ஆண்டின் தொடக்கமாகக் கூறுவதில் தக்க பொருத்தம் இல்லாமற் போகவில்லை. மேடம், இடபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம்

கும்பம், மீனம் ஆகிய பன்னிரண்டு வீடு (இராசி) களிலும் ஞாயிறு (சூரியன்) தங்குவதுதான் முறையே சித்திரை முதலிய பன்னிரண்டு திங்கள்கள் (மாதங் கள்) ஆகும். ஞாயிறு ஒவ்வொரு வீட்டிலும் ஒவ் வொரு திங்கள் காலம் இருப்பான். எனவே, பன் னிரண்டு வீடுகட்கும் பன்னிரண்டு திங்கள்கள் ஆகும். இன்னுங் கேட்டால், தமிழர்கள் சித்திரை, வைகாசி ......மாசி, பங்குனி எனப் பன்னிரு திங்கள்களையும் பெயர் சொல்லி அழைப்பதுபோல, மலையாளிகள் மேடம், இடபம்......கும்பம், மீனம் எனவே பன்னிரு திங்கள்களையும் பெயர் சொல்லி அழைக்கின்றனர். இம் முறைப்படி நோக்கின், ஞாயிறு மேடம் என்னும் வீட்டில் இருப்பது சித்திரைத் திங்கள் என்பதும், சிம்மம் என்னும் வீட்டில் இருப்பது ஆவ ணித் திங்கள் என்பதும் புலனாகும். பன்னிரு வீடு களுள் சிம்மம் என்னும் வீடு ஞாயிற்றின் ஆட்சிக் குரிய சொந்த வீடு என்பதும், இரவல் வீடுகளாகிய மற்ற பதினொரு வீடுகளுள் மேடம் என்னும் வீட்டில் வந்திருக்கும்போது ஞாயிறு 'உச்சம்' (உயர் வன்மை) பெற்று விடுகிறான் என்பதும் கணிப் புக்கலையின் (சோதிடக் கலையின்) முடிபு. எனவே, ஞாயிறு 'உச்சம்' பெற்றிருக்கும் மேட வீட்டுத் திங்க ளாகிய சித்திரையை ஆண்டின் தொடக்கமாகக் கொண்டது போலவே, ஞாயிறு 'ஆட்சி' பெற்றிருக்கும் சொந்த வீடாகிய சிம்மம் என்னும் ஆவணித் திங்களை அந்தக் காலத்தார் ஆண்டுத் தொடக்கமாகக் கொண் டதில் தவறொன்றும் இல்லை. மற்றும், சிம்ம வீட்டுத் தொடர்புடைய மகம் என்னும் விண்மீன் ஞாயிற்றுக்கு மிகவும் உகந்ததாம். இவ்வாராய்ச்சியின்படி மேலும் சொல்லப் போனால், சித்திரையினும் ஆவணியை

ஆண்டுத் தொடக்கமாகக் கொள்வதே சாலவும் பொருந்தும் என்னும் கருத்து புலனாகலாம்.

இறுதியாக மழையைப் பற்றிய சொற்செல்வங்களைக் குறிப்பிடுவதோடு இந்த முதல் தொகுதியை முடித்துக் கொள்ளலாம். மழையின் பல்வகை நிலைகளையும் கூறும் பாடல்களைப் படிக்கப் படிக்க மனத்தில் மகிழ்ச்சியும் குளிர்ச்சியும் ஒருங்கே பெருகுகின்றன. அப்பாடல்கள் வருமாறு:-

(மழை தூவுதல்)

"சீகரம், பிதிரே, சிதர், அரி, சிகரம்,
தூவல் என்றிவை துவலை யாகும்."

(துளி போடுதல்)

"துளி, பெயல், ஆலி, உறைதுளி யாகும்."

(கட்டி கட்டியாய்ப் பெய்தல்)

"ஆலி, ஆலங் கட்டி யாகும்."

(பெருமழை பெய்தல்)

"ஆசாரம் என்பது பெருமழை யாகும்."

(விடாமழை பெய்தல்)

"சோனையும், பனித்தலும், விடாது சொரிதல்."

(மழைபெய்து விடுதல்)

"தலையல் என்பது மழைபெய்து விடுதல்."

இச்சொல்வளங்கள் உண்மையிலேயே தமிழுக்குச் சிறப்பு அளிப்பனவன்றோ? இவற்றையெல்லாம் எழுத்திலும் பேச்சிலும் பயன்படுத்தலாமே! இடைக்காலத்தில் மாதம் என்னும் வடசொல் தமிழ்மொழியில் புகுந்து விட்டது. அதைக் குறிக்கும் திங்கள் என்னும் இனிய செந்தமிழ்ச் சொல்,

"ஆவணி முதலா இரண்டிரண் டாக
மேவின திங்கள் எண்ணினர் கொளலே."

என்னும் திவாகரப் பாடலில் ஆளப்பட்டுள்ளது. "தைஇத் திங்கள் தண்ணிய தரினும்" என்று சங்க இலக்கியமாகிய குறுந்தொகையிலும் இச்சொல் ஆளப் பட்டுள்ளது. எனவே நிகண்டுகளிலுள்ள தமிழ்ச் சொற்களைத் துருவி எடுத்துப் பயன்படுத்த வேண்டும்.

தெய்வப் பெயர்த் தொகுதியில், நாள், கோள், விண், காற்று, தீ, நீர், காலங்கள், மழை மின்னல் இடி முதலியவற்றையும் கூறியிருப்பதிலிருந்து இவையும் தெய்வச் சார்புடையவை என்று பழங்கால மக்கள் நம்பி வழிபட்டனர் என்பது புலனாகும்.

## 2. மக்கள் பெயர்த் தொகுதி

மக்களினத்தில் சாதி சமயத்துறையிலும் அரசியல் துறையிலும் தொழில் துறையிலும் தகுதியளவிலும் வாழும் இடத்தைப்பொறுத்தும் எத்துணைப் பிரிவுகள் உண்டோ அத்துணைப் பிரிவுகளுக்கும் உரிய பெயர்கள் ஏறக்குறைய மக்கள் பெயர்த் தொகுதியில் கூறப் பட்டுள்ளன. ஆண்பாற் பெயர்களோடு பெண்பாற் பெயர்களும் பேசப்பட்டுள்ளன. இவற்ருேடு, மக்களது உடல், உடலுறுப்புக்கள், உயிர், ஆகியவற்றின் பெயர்களும் உரைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஒரு சில பெயர்களைக் காண்பாம்:-

பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியருக்கு இக் காலத்தில் 'உபாத்தியாயர்' என்று பெயராம். இது வடமொழிப் பெயர். கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைபோல்—(இந்த ஒப்புமை சொல்லக்கூடாதுதான்; என்ன செய்வது)—இந்த உபாத்தியாயர் என்னும் பெயரும் முழுதாய் நிலைக்காமல் 'வாத்தியார்' ஆகி, பின்னர் 'வாத்தி' என வந்து அப்படியே ஆணி அடித் துக்கொண்டு அமர்ந்துவிட்டது. இனி எவராலும் இந்தப் பெயரை இம்மியும் அசைக்க முடியாதுபோல் தெரிகிறது. ஆனல் அந்தக்காலத்தில் 'கணக்காயர்' என்னும் கருத்துச் செறிந்த பெயரால் ஆசிரியர் அழைக் கப்பட்டார்.

" கணக்காயர் நூல் உரைப்போர்."

என்பது திவாகர நூற்பா. கணக்கு என்ருல் நூல் (புத்தகம்) என்று பொருளாம். எழுதப்படிக்கத் தெரியா

மல், பேசமட்டும் தெரிந்திருந்த மிகமிகப் பழங்காலத்து மக்கள், கொடுக்கல் வாங்கல் கணக்குகளைக் குறிக்கும் முறையில் முதல்முதல் கோடுகிழிக்கத் தொடங்கினர். இதுதான் அவர்கள் செய்த முதல் வரிவடிவ (எழுத்து உருவத்தில் உள்ள) மொழியாகும். இப்போதுங்கூட எழுதப்படிக்கத் தெரியாத நாட்டுப்புறத்துப் பெண்டிர், கொடுக்கல் வாங்கல்களைக் குறிப்பதற்காகக் கோடுகள் போட்டு வைக்கின்றனரல்லவா? எனவே, எழுதிவைக்கவேண்டிய இன்றியமையாமை இந்தக் கணக்கிலிருந்துதான் தொடங்கியது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இவ்வாறு தொடங்கிய கணக்குச் சுவடி பிறகு கணக்கு நூலாயிற்று. கல்வி கற்பதே கணக்குத் தெரிந்து கொள்வதற்காகத்தான் என்ற நிலை அன்று இருந்தது. இக்காலத்திலும் நாட்டுப்புற மக்கள் தம்பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் அனுப்புவதற்கு உரிய காரணமாக, 'நாலு கணக்குத் தெரிந்து கொண்டால்தானே உலகத்தில் பிழைக்க முடியும்' என்று கூறுவதைக் கேட்கலாம்.

இதற்கேற்பவே அக்காலத்தில் தமிழ்க்கணக்கு நூற்கள் மிகப் பெருகிப் பரந்துபட்டிருந்தன—இன்று இவை இருக்குமிடம் தெரியவில்லையே; இதை நினைத்து இப்போது பெருமூச்செறிந்து என்ன பயன்! - எள் நெய்யைக் குறிக்கும் எண்ணெய் என்னும் பெயர் பிறகு எல்லாவகையான எண்ணெய்களுக்கும் உரித்தானதைப்போல, இந்தக் கணக்கு என்னும் பெயரும் நாளடைவில் எல்லாவகையான நூற்களுக்கும் உரித்தாயிற்று. சங்க இலக்கியங்களைக்கூட மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்று குறிப்பிடுகிறோமல்லவா? எனவே, கணக்கு என்றால் பொதுவாகப் புத்தகம் என்று பொருளாம். ஆகவே, கணக்கை ஆய்ந்து கற்பிக்கும்

ஆசிரியர் 'கணக்காயர்' என்று அழைக்கப்பட்டது பொருத்தம்தானே! இப்படி எத்தனையோ செந்தமிழ்ச் செல்வங்களை இழந்துவிட்டு இன்னொரு மொழியிலிருந்து சொற்களை இரவல் வாங்கிக்கொண்டிருக்கிற நாம் மிகவும் இரங்கத்தக்கவரல்லவா! இனி மற்றும் சில செல்வங்களைக் காண்பாம்:-

(பெருமையில் சிறந்தோன் பெயர்)

**" அண்ணலும் குரிசிலும் ஏந்தலும் தோன்றலும்**
**செம்மலும் பெருமையிற் சிறந்தோன் பெயரே."**

அண்ணல், குரிசில், ஏந்தல், தோன்றல், செம்மல் என்னும் சொற்கள் சிறந்த பெருமையுடையவரைக் குறிக்குமாம். எவ்வளவு இனிய பெயர்கள்!

மக்கள் பேச்சுவழக்கில் 'உலகம்' என்னும் சொல்லை அடிக்கடி பயன்படுத்துவது உண்டு. 'இப்படி நடந்தால் உலகம் என்ன நினைக்கும்?' 'உலகம் என்ன பேசும்?' 'உலகத்திற்கு அஞ்சி வாழ்க்கை நடத்த வேண்டும்'—என்னும் பேச்சு வழக்குத் தொடர்களில் உள்ள உலகம் என்னும்சொல் உலகத்திலுள்ள தாழ்ந்த குணமுடையோரைக் குறிக்கவில்லை. உயர்ந்த பண்பாளரையே குறிக்கும். ஆம்! உயர்ந்தவர்க்கே உலகம் உரியது. அவராலேயே உலகம் நன்கு இயங்குகிறது. இக்கருத்தினை,

**" உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே."**

என்னும் திவாகர நூற்பா நன்கு புலனாக்கும்.

அடுத்து, பொதுவாக அரசர்களையும் சிறப்பாகச் சேர சோழ பாண்டிய மன்னர்களையும் குறிக்கும் பெயர்களைப் பற்றிய பகுதிகளைப் பார்ப்போம்:

(அரசன் பெயர்)

“ புரவலன், கொற்றவன், பெருமான், காவலன்,
அரையன், ஏந்தல், கோ(வே), சூரிசில்,
தலைவன், மன்னவன், வேந்தன், முதல்வன்,
நிருபன், பூபாலன், நரபதி, பார்த்திவன்,
இறைவன், அண்ணல் எனப் பதினெட்டும்
அரசன் தொல்பெயர் ஆகும் என்ப.”

(சேரன் பெயர்)

“ பூழியன், உதியன், கொங்கன், பொறையன்,
வானவன், குட்டுவன், வான வரம்பன்,
வில்லவன், குடநாடன், வஞ்சி வேந்தன்,
கொல்லிச் சிலம்பன், கோதை, கேரளன்,
போந்தின் கண்ணிக்கோன், பொருநைத் துறைவன்,
சேரலன், மலயமான், கோச்சேரன் பெயரே.”

(சோழன் பெயர்)

“ சென்னி, வளவன், கிள்ளி, செம்பியன்,
பொன்னித் துறைவனின், புலிக்கொடிப் புரவலன்,
நேரியன், ஆர்த்தார்க்கோன், நேரிறை, அபயன்,
நேரி வெற்பன், கோழி வேந்தன்,
சூரியன், புனனுடன் கோச்சோழன் பெயரே.”

(பாண்டியன் பெயர்)

“ செழியன், தமிழ்நாடன், கூடற்கோ, தென்னவன்,
வழுதி, மீனவன், பஞ்சவன், மாறன்,
கௌரியன், வேம்பின் கண்ணிக்கோ, கைதவன்,
பொதியப் பொருப்பன், புனல்வையைத் துறைவன்,
குமரிச் சேர்ப்பன், கோப்பாண்டியனே.”

அம்மம்மா! ஒவ்வொருவருக்கும் எத்தனை பெயர்கள்! இப்பாடல்களை எல்லாம் படித்து வைத்திருந்தால்

எழுத்தாளரும் பேச்சாளரும் ஒரேபெயரையே திரும்பத் திரும்பப் பயன்படுத்தாமல், பல்வகைப் பெயர்களேயும் மாற்றி மாற்றிப் பயன்படுத்தலாம். அதனுல் படிப்ப வர்கட்கும் சுவை மிகும். இ∴து ஒரு பெரிய நன்மை யல்லவா?

ஈண்டு, சேரரைப் பற்றிய பகுதி ஆராய்ச்சிக்குரிய தாகும். பண்டைக்காலத்தில் தமிழ்நாடு, சேரநாடு–சோழநாடு–பாண்டிய நாடு–தொண்டை நாடு என்றெல் லாம் பிரிக்கப்பட்டிருந்தது என்பதை யாவரும் அறிவர். அப்பிரிவுகளுள் சேரநாடு எனப்படும் பகுதி இப்போது ஏங்கே? அதுதான் 'கேரளா' எனப்படும் மலேயாள நாடாகும். தொடர்புடைய சிலர் இக்கருத்தை ஏற்றுக் கொள்ளாவிடினும் இது நூற்றுக்கு நூறு உண்மை. இப்போது கேரளா எனப்படும் மலேயாள நாட்டில் பேசப்படும் மலேயாள மொழிக்குக் கேரளம் என்ற பெயரும் உண்டு. இதற்குப் பெரிய ஆராய்ச்சிகூட வேண்டியதில்லே. ஒரு சிறிது உற்றுக்கேட்டாலே போதும்—தமிழ்மொழியும் கேரள மொழியும் ஒன்றே என்பது எளிதில் புரியும். இதற்குச் சான்ருக இரண்டு வாக்கியங்கள் வருமாறு:-

(1) "இது ஒரு பருத்திச்செடியுட படம். இதனுட பூவும் காயும் நோக்குக". (பருத்திச்செடி என்னும் பாடத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

(2) "செந்நாயி ஆட்டின் குட்டியெ சாடி கொன்னு தின்னு". (ஓநாயும் ஆட்டுக்குட்டியும் என்னும் பாடத் தின் இறுதி வாக்கியம் இது.)

மேலுள்ள வாக்கியங்கள் இரண்டும் தமிழ்ப்பாடப் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவையல்ல; மலேயாள

மொழிப் பாடப் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை யாகும். இப்போது தெரிந்து கொள்ளலாமே, தமிழும் மலையாளமும் ஒன்றே என்பதை! ஆனால் 'செந்நாய்' என்னும் தமிழ்ச்சொல் 'செந்நாயி' எனவும், 'குட்டியை' என்னும் தமிழ்ச்சொல் 'குட்டியெ' எனவும், 'கொன்று தின்றது' என்னும் தமிழ்ச்சொல் 'கொன்னு தின்னு' எனவும் கொச்சை உருவத்தில் மலையாள மொழியாகக் காட்சியளிக்கிறது. எனவே, பேச்சு இலத்தீன் மொழி தான் பிரெஞ்சுமொழி என்று ஒரு கருத்து நிலவுவது போல, பேச்சுத் தமிழ்தான் மலையாளம் என்று ஒருவாறு கூறலாம். ஆகவே, தமிழ்நாட்டின் ஒரு பிரிவாக இருந்த சேரநாடுதான் இப்போது தனித்து இயங்கும் கேரளாவாகும்—என்று துணிந்து கூறலாம். இதற்குச் சான்று வேண்டுமா? சேரமன்னனின் பெயர்களைக் கூறும் திவாகரப் பாடலில் 'கேரளன்' என்று ஒரு பெயர் காணப்படுகிறதே—அஃது ஒன்றே போதாதா?

பாண்டியனைக் குறிக்கும் பெயர்ப் பட்டியலில் 'தமிழ்நாடன்' என்னும் ஒரு பெயர் காணப்படுகிறது. கழகம் வைத்துத் தமிழ் வளர்த்த சிறப்புரிமையால் பாண்டியன் தமிழ்நாடன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றான் போலும்.

இனி அரசரை விடுத்து மற்றையோரிடம் செல்வோம்:

வள்ளுவர் என்னும் சொல் இழிந்த குலத்தாரைக் குறிக்கும் என்னும் கொள்கையில் திருவள்ளுவரையே இழிகுலத்தவராகக் கொண்டவர்களும் உண்டு. ஆனால் வள்ளுவர் என்பவர் அரசரின் உள்ளுக்குள்ளான—

உண்மையான காரியத் தலைவராவார் என்னும் உயர்ந்த பொருளை,

"வள்ளுவன் சாக்கை எனும் பெயர் மன்னர்க்கு
உள்படு கருமத் தலைவர்க்கு ஒன்றும்."

என்னும் நூற்பா உணர்த்துவது மனத்திற்கு நிறைவு அளிக்கின்ற தல்லவா?

அடுத்து, ஆரியர் என்றால் உயர்ந்தவர்—மேலானவர் என்று மதிப்பாக எண்ணிக்கொண்டிருக்கும் நம் மனத்தை, ஆரியர் என்றால் விலங்குகள்போல் நாகரிகம் அற்றவர்—தாழ்ந்தவர்—மிலேச்சர் என்னும் பொருள் தருகிற

"மிலேச்சர் ஆரியர்"

என்னும் திவாகர நூற்பா குழப்புகிறதன்றோ?

பழங்காலத்தில் அரேபியா, ரோமாபுரி போன்ற அயலிடங்களிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்து வதிந்தவர்களை 'யவனர்' என்றும் 'சோனகர்' என்றும் அக்காலத் தமிழ்மக்கள் அழைத்தனர் என்பதை,

"யவனர் சோனகர்."

என்னும் நூற்பாவால் அறியலாம். இதிலிருந்து அக்காலத் தமிழகம் எவ்வளவோ சிறப்புற்றிருந்தது என்பது புலனாகும்.

அடுத்துக் கூறப்போகும் பெயர்கள் நுட்பமானவை. ஒருத்தி, கொண்ட கணவனை வஞ்சித்து அவனறியாமல் பிறன் ஒருவனோடு கூடிப்பெற்ற பிள்ளைக்குக் 'குண்டகன்' என்று பெயராம். (இந்தக்காலத்தில் குண்டர்கள் என்று சொல்லப்படுபவர்கள் இத் தகுதி

யினர்தானே!) கைம்பெண் (விதவை) வயிற்றில் பிறந்த பிள்ளைக்குக் 'கோளகன்' என்று பெயராம். திருமண மாகாத கன்னி பெற்ற பிள்ளைக்குக் 'கானீனன்' என்று பெயராம். இவற்றை,

" கொண்டோன் பிழைத்துப் பெறும்புதல்வன்
குண்டகன்."

" கோவில் கைம்மையில் பெறும் புதல்வன் கோளகன்."

" கன்னியிற் பெறும் புதல்வன் கானீனன் ஆகும்."

என்னும் நூற்பாக்களால் அறியலாம். அன்றியும், பொதுவாக ஆணையும் பெண்ணையும் குறிக்கும் பெயர்களும் அறியத் தக்கனவாம்:

(ஆண் பெயர்)

" ஆடவர், மைந்தர், காளை, குமாரர்,
ஆடூஉ, மாந்தர், மகன், புமான், மணாளன்,
கூடிய ஆண் பெயர் ஆகக் கூறுவர்."

(பெண் பெயர்)

" பேதை, அங்கனை, வனிதை, இளம்பிடி,
மாது, மடவாள், மகடூஉ, மங்கை.
மடந்தை, காரிகை, மானினி, மஞ்சனி,
மாயோள், ஆட்டி, பாவை, தெரிவை,
தையல், அரிவை, பெதும்பை, பிணா, மகள்,
நையு நுண்ணிடை நாரி என்றுங்கு
இருபதும் இரண்டும் பெண்பாற்கு எய்தும்."

மேலே ஆணுக்கும் பெண்ணுக்கும் இத்தனை பெயர்கள் கூறியிருப்பதுகூட வியப்பன்று; ஆணின் மயிருக்கும் பெண்ணின் மயிருக்கும் வெவ்வேறு பெயர்கள் கூறியிருப்பதுதான் வியப்பு!

[ஆண்மயிரின் பெயர்]

"குஞ்சி, நவிர், உளை, குடுமி, தொங்கல்,
பங்கி, பித்தை, ஓரி, சிகை என்று
இங்கிவை எல்லாம் ஆண்மயிர் என்ப."

[பெண்மயிரின் பெயர்]

"கோதை, நெடுமை, கூந்தல், ஐம்பால்,
ஓதி, கூழை, பரிசாரம், கதுப்பு,
கேசம், அளகம், குழல், குரல், சுரியல்,
பேசின் மாராட்டம், பெண்மயிர் என்ப."

ஆணுக்காகட்டும் — பெண்ணுக்காகட்டும் — தலை மயிர் என்றால் ஒன்றுதான். அதிலேபோய் வேறுபாடு காட்டியிருப்பதோடு, ஒவ்வொன்றிற்கும் பல பெயர்கள் கூறியிருப்பது வியப்பினும் வியப்பாயுளது! இன்னும் பலவகை உறுப்பின் பெயர்களும் இத் தொகுதியில் பட்டியல் செய்யப்பட்டுள்ளன.

# 3. விலங்கின் பெயர்த் தொகுதி

புதிதாகச் சென்னைப்பட்டணம் செல்பவர்கள் 'உயிர் காலேஜ்', 'செத்த காலேஜ்' என்னும் இரண்டு இடங்களையும் மற்றும் பல இடங்களையும் பார்த்து விட்டு வருவது வழக்கம். உயிர்காலேஜ், செத்த காலேஜ் என்பன பொருட்காட்சி நிலையங்களாகும். செத்த காலேஜ் என்னும் நிலையத்தில், செத்துப் போன உயிர்களின் உடலங்கள், கருங்கற் சிலைகள் முதலிய உயிரில்லாத பொருள்கள் இருக்கும். உயிர் காலேஜ் என்னும் இடத்தில், பல வகையான விலங்குகள், பறவைகள், நீர் வாழும் உயிர்கள் முதலிய உயிர்ப் பொருள்கள் இருக்கும். இது மிகவும் சிறிய நிலையம். ஆனால், திவாகர நிகண்டின் மூன்றாம் தொகுதியாகிய 'விலங்கின் பெயர்த்தொகுதி' என்னும் பகுதியோ, சென்னை உயிர்க் காட்சி நிலையத்தைவிடப் பற்பல மடங்கு பெரியதாகும்.

(1) மரஞ்செடி கொடி (தாவரம்), (2) நீர் வாழ்வன, (3) ஊர்வன, (4) பறவை, (5) விலங்கு, (6) மக்கள், (7) தேவர் என எழுவகை இனத்துப் பிறவிகளாக உயிர்களைப் பிரிப்பது ஒரு சார் மரபு. இந்த ஏழனுள், தேவர் தெய்வப் பெயர்த் தொகுதியிலும், மக்கள் மக்கட் பெயர்த் தொகுதியிலும் சொல்லப்பட்டுள்ளனர். மரஞ்செடி கொடி என்னும் நிலையியல் (தாவரப்) பொருள் நான்காவது தொகுதியாகிய மரப்பெயர்த் தொகுதியில் சொல்லப்பட்டுள்ளது—(அதனை அடுத்தாற்போல் காணலாம்.) இந்தத் தேவர், மக்கள்,

மரஞ்செடிகொடி என்னும் மூன்றும் போக, மற்றைய விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன என்னும் நான்கு உயிர்ப்பொருள்களும் மூன்றும் தொகுதியாகிய இந்த விலங்கின் பெயர்த்தொகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொகுதியில் பலவகை விலங்குகள், பலவகைப் பறவைகள், பறப்பன என்ற முறையில் ஈ, கொசு, வண்டு, வௌவால் முதலியவைகள், பாம்பு, பல்லி, தேள், எறும்பு, கறையான், சிலந்தி, புழு முதலிய ஊர்ந்து செல்லும் உயிர்கள், மீன்வகைகள், சிப்பி, சங்கு, நண்டு, தவளை, அட்டை, ஆமை, முதலை, திமிங்கிலம் முதலிய நீர்வாழ் உயிர்கள், விலங்கு—பறவை முதலியவற்றின் உறுப்புக்கள் ஆகியவற்றிற்கு உரிய பெயர்கள் விவரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள், மாதிரிக்காக விலங்கைப் பற்றிச் சிறிது சிறப்பாகக் காண்பாம் :

சிங்கம், புலி, யானை, குதிரை, மாடு, ஆடு, மான், முதலிய பலவகை விலங்குகளின் பெயர்களும் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. ஒவ்வொரு விலங்குக்கும் எத்தனையோ பெயர்கள் கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, யானைக்கு முப்பத்தெட்டுப் பெயர்களும் குதிரைக்கு முப்பது பெயர்களும் கூறப்பட்டுள்ளன. இப் பொதுப்பெயர்களோடு நின்று விடவில்லை. யானை யென்றால், ஆண் யானைக்கு வெவ்வேறு பெயர்களும், பெண் யானைக்கு வெவ்வேறு பெயர்களும், குட்டி யானைக்கு வெவ்வேறு பெயர்களும் கூறப்பட்டுள்ளன. இவற்றை,

[ஆண்]

"மதகரி, தந்தி, வன்களிறு யானை."

[பெண்]

"கரேணு, பிடி, பெண் யானைப் பெயரே."

[கன்று]

"போதகம், துடியடி, கயம், முனி, கன்று ஆம்."

என்னும் நூற்பாக்களால் அறியலாம். அடுத்து, குதிரையின் பெயர்களுள், பாண்டியர் குதிரைக்குக் 'கனவட்டம்' என்றும், சேரர் குதிரைக்குப் 'பாடலம்' என்றும், சோழர் குதிரைக்குக் 'கோரம்' என்றும், மற்ற சிறு குறுநில மன்னர்களுடைய குதிரைக்குக் "கந்துகம்' என்றும் பெயராம். இவற்றை,

"கனவட்டம் என்பது வழுதி ஊர்மா,
பாடலம் என்பது சேரன் ஊர்மா,
கோரம் என்பது சோழன் ஊர்மா,
கந்துகம் குறுநில மன்னர் ஊர்மா."

என்னும் பாடல் பகுதி உணர்த்தும். இந்தப் பெயர்ப் பிரிவினை சுவையா யுளதல்லவா!

மற்றும், மாடு, ஆடு, மான், பன்றி முதலிய விலங்குகளுக்கேகூட பல பிரிவுகள் கூறப்பட்டுள்ளன. மாதிரிக்காக மாட்டை எடுத்துக்கொள்வோம்.

மாடு தொடர்பாக உள்ள ஓர் உண்மை சிலருக்குப் புரியாமல் குழப்பமா யிருக்கிறது. சிலர் அதில் கருத்துச் செலுத்தியே யிருக்கமாட்டார்கள். அது வருமாறு:—மாட்டில் எருமை என ஒரு பிரிவு உண்டு. அதில் ஆணும் உண்டு—பெண்ணும் உண்டு. ஆண்

பெண் இரண்டிற்கும் பொதுவான பெயர் எருமை என்பதே. மாட்டில் இந்த எருமையல்லாத மற்றொரு பிரிவு உள்ளதல்லவா ? எல்லோராலும் எருமையினும் சிறந்ததாகக் கொண்டாடப்படும் அந்தப் பிரிவு மாட்டுக்கு உரிய பெயர் என்ன? இது சிலருக்குப் புரியாத புதிராகும். அந்தப் பிரிவைச் சேர்ந்த பெண் மாட்டிற்குப் 'பசு' என்றும், ஆண் மாட்டிற்குக் 'காளை' என்றும் சொல்கிறார்களே தவிர, அந்தப் பசு மாடு—காளைமாடு ஆகிய இரண்டிற்கும் பொதுவான பெயர் என்ன என்றால் சிலரால் சொல்ல முடியவில்லை. இன்னொரு பிரிவுக்கு எருமை என்பது பொதுப் பெயராயிருப்பதுபோல, இந்தப் பிரிவுக்குப் 'பசு' என்பது தான் பொதுப்பெயராகும். பசு என்பது சிலர் எண்ணுவதுபோல் பெண்மாட்டுக்கு மட்டும் உரியதன்று; ஆண் மாட்டுக்கும் உரியதாகும். எனவே, ஆண் எருமை—பெண் எருமை என்று சொல்வது போல, ஆண் பசு—பெண் பசு என்றும் சொல்லலாம். ஆனால் ஆண்பசு என்று சொல்லும் வழக்கம் இக்காலத்தில் அருகிவிட்டது என்னவோ உண்மைதான்! இருப்பினும் அங்ஙனம் கூறுவதில் தவறொன்றும் இல்லை. இக்கருத்துக்கு,

[பசுவின் பொதுப் பெயர்]

" ஆவும், பெற்றமும், பசுவும், ஆனும்,
கோவும், குரால் தேனும் பசுச்சாதிப் பொதுப்பெயர்."

[பெண் பசுவின் பெயர்]

" சுரபி, தேனு, சுரை, கபிலை, சேதா,
குரமே, கோமளம், பெண்பால் மேன."

[ஆண் பசுவின் பெயர்]

" பாறல், புல்லம், பாண்டில், பசு, மூரி,
ஏறு, பூணி, இருலே, பெற்றம்,
எருது, சே, விடை, இடபம் என்றிவை
கருதின் போத்தின் பெயரெனக் கருதுவர்."

என்னும் பாடல்கள் சான்று பகரும். இவற்றுள் முதல் பாடலின் இறுதியில் உள்ள 'பசுச்சாதிப் பொதுப்பெயர்' என்னும் சிறு தொடரே போதுமே!

மற்றும் இப்பகுதியில், இன்னின்ன விலங்கு களின் ஆண்களையும் பெண்களையும் இன்னின்ன பொதுப்பெயர்களாலும், குட்டிகளை இன்னின்ன பொதுப்பெயர்களாலும் அழைக்கவேண்டும் என்னும் மரபுநிலை மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இறுதியாக, மீன்கள் தொடர்பான ஒரு சுவை யான செய்தியைப் பார்ப்போம். 'மெலியவரை வலியவர் வாட்டினல் வலியவரைத் தெய்வம் வாட்டும்' என்னும் கருத்தை விளக்கும் முறையில், 'சிறுமீனைப் பெருமீன் விழுங்கினல் பெருமீனைத் திமிங்கிலம் விழுங்கும்' என்று உலகில் மக்கள் கூறுவது வழக்கம். ஆம், உண்மைதான்! சிறுமீனை விழுங்கும் அந்தப் பெருமீனுக்கு 'யானை மீன்' என்று பெயராம். யானை மீனை விழுங்கும் மீனுக்குத் 'திமிங்கிலம்' என்று பெய ராம். திமிங்கிலத்தை விழுங்கும் மீனுக்குத் 'திமிங்கில கிலம்' என்று பெயராம். இந்த விவரங்களை,

[பெருமீனின் பெயர்]

" யானைமீன், திமி, பெருமீன் ஆகும்."

[யானைமீனை விழுங்கும் மீன்]

" யானையை விழுங்குமீன் திமிங்கிலம் என்ப."

[திமிங்கிலத்தை விழுங்கும் மீன்]

" அம் மீனை விழுங்கு மீன் திமிங்கிலகிலமே."

என்னும் நூற்பாக்கள் உணர்த்தும். பிறரை ஏய்த்துப் பிழைப்பவனைத் 'திமிங்கிலம்' என்று சுட்டித் திட்டுவது உலக வழக்கம். இன்னும் பெரிய அளவில் ஊரை அடித்து உலையில் போடுபவனைத் 'திமிங்கில கிலம்' என்று சொல்ல வேண்டும் எனத் திவாகரம் நமக்குக் கற்றுத் தருவதுபோல் இல்லையா! ஆனால் மக்கள் இந்தத் திமிங்கிலகிலத்தைக்கூடப் பேச்சு வழக்கில் குறிப்பிடுவதுபோல் தெரிகிறது. 'ஐயோ அவனா—அவன் பெரிய திமிங்கில மாயிற்றே!' என்று கூறுகின்றார்களே—இங்கே பெரிய திமிங்கிலம் என்பது திமிங்கிலகிலத்தைத்தானே? இருக்கலாம்!

# 4. மரப் பெயர்த் தொகுதி

முருங்கைமரம் அறியாதவர்களும் பூவரசம் பூ பார்க்காதவர்களும் பெரிய நகரங்களில் இருப்பதாகச் சொல்வதுண்டு. இது கற்பனையாகவும் இருக்கலாம். ஆனால், 'நெல் காய்க்கும் மரம் பார்த்திருக்கிறீர்களா?' என்று சிலரை நோக்கிக் கேலி பண்ணுவது என்னவோ உண்மை! இது எதைக் காட்டுகிறது? மக்களுள் சிலர் மரஞ்செடி கொடிகளைப் பற்றி ஒன்றுமே அறியாதவரா யுள்ளனர் என்பது இதனால் புலனாகும். அதிலும், மரஞ்செடிகள் அழிக்கப்பட்டு, அவை சூழ்ந்துள்ள சிற்றூர்கள் (கிராமங்கள்) புறக்கணிக்கப் படுகிற இந்தக் காலத்து மக்களுள் பெரும்பாலோர்க்கு ஒன்றுமே தெரியாது என்று துணிந்து கூறலாம்.

என்னென்ன மரஞ்செடிகொடிகள் எங்கெங்கே உள்ளன?—இங்கிங்கே உள்ள மரஞ்செடி கொடிகளுக்கு என்னென்ன பெயர்?— அவற்றின் கிழங்கு, வேர், பட்டை, தோல், பிசின், தளிர், இலை, காம்பு, ஈர்க்கு, மொட்டு, பூ, காய், கனி, கொட்டை, பயறு முதலியவற்றுள் ஒவ்வொன்றும் உடம்புக்கு என்னென்ன நன்மை தரும்?—எந்தெந்தப் பிணிக்கு எது எது நல்லது?— என்ற விவரங்கள் எல்லாம் நம் பழம் பாட்டன் பாட்டிமார்களுக்குத் தண்ணீர்ப் பாடம். நாமோ இப்பொழுது மருத்துவ மனைகளைச் சுற்றி வலம் வந்துகொண்டிருக்கிறோம். இருந்த மரங்களைப் போக்கிவிட்டுப் புதிதாக மரம் நடுவிழா நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்நிலையில், திவாகரநிகண்டின்

மரப்பெயர்த் தொகுதிக்குள் புகுந்து, பல வகை மரஞ்செடி கொடிகளின் பெயர்களை அறிந்து கொள்வதன் வாயிலாகவாவது மனக்கண்ணைக் குளிரச் செய்யலாம். பெரிய பெரிய அரசாங்கத் தோட்டங்களைக் (Botonical gardens) காட்டிலும் இம் மரப் பெயர்த் தொகுதி மிக மிகப் பெரியது.

இத்தொகுதியில், பற்பல விதமான மரஞ்செடி கொடிகளைக் குறிக்கும் பெயர்கள் கூறப்பட்டிருப்ப தோடு அவற்றின் இளமைப் பெயர்களும், அவற்றின் உறுப்புக்களாகிய கிழங்கு, வேர், தோல், கிளை, முள், வைரம், தளிர், இலை, மொட்டு, பூ, பூங்கொத்து, தாதுப்பொடி, காய், கனி, கொட்டை, பயறு, தானியம் முதலியவற்றின் பெயர்களும் பலபடக் கூறப்பட் டுள்ளன. மாதிரிக்காகச் சில காண்பாம்:

மரஞ்செடி கொடிகளின் சிறிய கூட்டமாகிய பூங்கா (நந்தவனம்) என்பதைக் குறிக்கப் பதினொரு பெயர்களும், பெரிய கூட்டமாகிய காட்டைக் குறிக்க இருபத்துமூன்று பெயர்களும், மூங்கில் என்னும் ஒரு வகை மரத்திற்கு மட்டும் இருபத்தைந்து பெயர்களும் கூறப்பட்டுள்ளன. அவை வருமாறு:—

[நந்தவனத்தின் பெயர்]

"தேம் பொழில், மரக்கா, தோட்டம், துடவை,
உய்யானம், சோலை, வனம், உத்தியானம்,
தண்டலை, கானம், அடவி, பதினொன்றும்
ஈண்டிய நந்தன வனமென இசைப்பர்."

[காட்டின் பெயர்]

" கடம், வியல், பழுவம், கட்சி, குறும்பொறை,
கடறு, காந்தாரம், அடவி, கான், வனம்,
ககனம், காண்டம், கட்டம், முளரி,
சுரம், அத்தம், ஆரணியம், கானம், களரி,
சிரணி, பொச்சை, விடர், தில்லம், காடே."

[மூங்கிலின் பெயர்]

" காம்பு, திகிரி, கண், வேழம், சந்தி,
தூம்பு, முளை, வெதிர், விண்டு, வேரல்,
முந்தூழ், தட்டை, கீசகம், வேய், பணை,
அம்பு, வரை, வேணு, கழை, அமை, ஓங்கல்,
பாதிரி, கிளை, அரி, பாண்டில், உள்பட
வருபவை மூங்கில் எனவகுத் தனரே."

மேலும் சில செய்திகளும் பெயர்களும் மிகவும் இன்பமாயுள்ளன. அவை வருமாறு:— இலையுதிர்ந்த காட்டிற்கு 'முதையல்' என்று பெயராம்.

" முதையல் இலையுதிர்வு பிறங்கிய முதுகாடே."

'கோளி' என்னும் மரம் பூக்காது காய்க்குமாம்.

" கோளி பூவாது காய்க்கும் குளிர் மரம்."

சண்பக மரப் பூவையும் வேங்கை மரப் பூவையும் வண்டுகள் மொய்க்காவாம்.

" சண்பகமும் வேங்கையும் வண்டுணு மலர் மரம்."

'செம்மல்' என்பது பழம் பூவின் பெயராம்.

" செம்மல் பழம் பூ வாகச் செப்புவர்."

'பொங்கழி' என்பது தூற்ருத நெல் கூட்டின் பெயராம்.

" பொங்கழி தூற்ரு நெற்கூ டாகும்."

கொத்துமல்லிக்கு 'உருள் அரிசி' என்று ஒரு பெயராம். கடுகுக்குக் 'கடிப்பகை' என்று ஒரு பெயராம்.

"உருளரிசி கொத்துமலி யென உரைப்பர்."

"கடிப்பகை, ஐயவி, கடுகின் பெயரே."

கடிப்பகை என்றால் பேய்க்குப் பகை என்பது பொருள் (கடி = பேய்). வெண்சிறு கடுகை அரைத்துச் சாந்து பண்ணிக் குழந்தையின் உடலில் பூசி வைத்தால் பேய் பிசாசுகள் அண்டமாட்டா என்பது அக்காலத்தவர் நம்பிக்கை. இதற்குக் கடிப்பகை என்னும் பெயர் சான்று. இவ்வாறு சுவையான பல பெயர்கள் இத்தொகுதியில் கூறப்பட்டுள்ளன. இன்னும் ஒன்றே ஒன்று காண்பாம் :

உள்ளே அழுத்த முடைய—அதாவது உள்வைரம் உடைய கருங்காலி முதலிய மரங்கள் 'ஆண்மரம்' எனப்படும். ஆண் மரத்திற்கு அகக்காழ், வன்மரம் என்னும் வேறு பெயர்களும் உண்டு. உள்ளே மெல்லிய சோற்றுத் தன்மை உடையனவாய், வெளியில் மட்டும் ஓரளவு அழுத்தமுடைய பனை, பாக்கு, தென்னை, மூங்கில் முதலிய மரங்கள் 'பெண் மரம்' எனப்படும். பெண்மரத்திற்குப் புறக்காழ், வன்புல் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இந்த இரண்டுங்கெட்ட முருக்க மரம், நார் மரம், பால் மரம் முதலிய மரங்களுக்கு 'அலிமரம்' என்று பெயராம். இந்த ஆண்—பெண் பிரிவினை, திறவு கோல்களுக்குள் ஆண் சாவி—பெண் சாவி என்று சொல்லுவதுபோல் இருக்கின்றதல்லவா? இனிப் பாடல்கள் வருமாறு:—

[ஆண் மரம்]

" அகக்காழ், வன்மரம் ஆண்மரம் ஆகும்;
அவை கருங்காலி முதலா யுள்ளன."

[பெண் மரம்]

" புறக்காழ் வன்புல் பெண்மரம் ஆகும்;
அவைதாம்,
தெரிக்கில் பனை, கமுகு, தெங்கு, மூங்கில்."

[அலி மரம்]

" முருக்கு நார் பால் மர முதலாயின
வேறு அலிமரம் எனும் விகற்பம் பெறுமே."

இது தொடர்பான இன்னொரு கருத்தும் ஈண்டு ஒப்புநோக்கற்பாலது. அது வருமாறு:— மக்கள் ஆணும் பெண்ணுமாய் இணைந்து இனவளர்ச்சி செய்வது போலவே, மரஞ்செடி கொடிகளும் தத்தம் பூக்களின் வாயிலாக ஆணும் பெண்ணுமாய் இணைந்து இன வளர்ச்சி செய்கின்றன. சில செடிகளில் ஒரு பூவிலேயே ஆண் உறுப்பும் பெண்ணுறுப்பும் இணைந்து இருக்கும். இத்தகைய செடிகள் 'இணை யினப் பூஞ்செடிகள்' எனப்படும். வேறு சிலவற்றில் —ஒரு செடியிலேயே ஆண் பூ தனியாகவும் பெண் பூ தனியாகவும் இருக்கும். இத்தகையவை 'ஈரினப் பூஞ்செடிகள்' எனப்படும். வேறு சிலவற்றில்—ஒரு செடியில் ஆண் பூ மட்டுந்தான் இருக்கும்; இன்னொரு செடியில் பெண் பூ மட்டுந்தான் இருக்கும். இத்தகை யவை 'ஓரினப் பூஞ்செடிகள்' எனப்படும். காற்றின் உதவியாலும் வண்டின் வாயிலாகவும் ஆண் பூவில் உள்ள மகரந்தத்தூள் பெண் பூவில் கலக்கக் கருவுற் றுக் காய்காக்கும். இதுதான் மரஞ்செடி கொடிகளின்

ஆண்பெண் கூட்டுறவு முறையாகும். ஆனால் திவாகரத்தில் உள்ள ஆண் பெண் பாகுபாடு இந்த அடிப்படையில் கூறப்பட்டதன்று. மரங்களின் உருவத்திற்கு உள்ள வன்மை, மென்மை ஆகியவற்றின் அடிப்படையிலேயே ஆண்மரம், பெண்மரம் என்ற பாகுபாடு திவாகரத்தில் பேசப்பட்டுள்ளது என்பது நினைவிருக்கவேண்டும்.

கடைசியாக, மலர்களால் தொடுக்கப்பட்ட மங்கலமான மாலைக்கு உரிய பெயர்களைப் பார்ப்போம்.

[மாலையின் பெயர்]

"தொடையல், வாசிகை, சிகழிகை, கோதை,
படலை, அலங்கல், கத்திகை, பிணையல்,
அணியல், சுருக்கை, தொடலை, தாமம்,
தொங்கல், தெரியல், கண்ணி, தார், சூட்டு,
மஞ்சரி, ஒலியல், இலம்பகம், மாலை."

அப்பப்பா! மாலையைக் குறிக்க இருபது பெயர்களா? இவற்றுள்ளும், இன்ன விதமாய்த் தொடுக்கப்பட்ட மாலைக்கு இன்ன பெயர்—இன்ன இடத்தில் அணியும் மாலைக்கு இன்ன பெயர் என்றெல்லாம் பாகுபாடு உண்டு. இத்தகைய பெயர்ப் பாகுபாடுகள், தமிழ் மொழியின் சொல் வளத்தைக் காட்டுவதோடு, தமிழ் மக்களின் கலை வளத்தையும் செழிப்பான வாழ்க்கை வளத்தையும் அறிவிக்கின்றன வன்றோ?

# 5. இடப் பெயர்த் தொகுதி

இந்த இடப்பெயர்த் தொகுதியின் வாயிலாக, புராணங்களில் சொல்லப்படுகின்ற மூவுலகத்தையுமே ஓரளவு காணலாம்போல் தோன்றுகிறது. இன்னும் ஈரேழு பதினான்கு (2×7=14) உலகங்கள் என்று சிலரால் சுட்டப்படுபவை எங்கே உள்ளன என்று தெரியவில்லை. ஆனால், விண்வெளியில் எண்ணற்ற உலகங்கள் உள்ளன என்பது அறிவியல் உண்மை.

இத்தொகுதியிலோ, வீட்டு (மோட்ச) உலகம், தெய்வ உலகம், நரக உலகம், நிலவுலகம், திசைகள் முதலியவற்றின் பெயர்கள் விவரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள்ளும் மக்கள் வாழும் நிலவுலகமே இத்தொகுதியின் பெரும் பகுதியைப் பிடித்துக்கொண்டுள்ளது; அதாவது, நாடு, மலை, மலையின் பலவகை உறுப்புகள், மேடு, பள்ளம், கடல், கழி, உப்பளம், ஆறு, வாவி, ஊருணி, மணல் வகைகள், குறிஞ்சி—முல்லை—மருதம்—நெய்தல்—பாலை என்னும் ஐந்திணைகள், ஊர், நகரம், தெரு, கடை, கோவில், அரண்மனை, வீடு, கட்டட உறுப்புகள், அகழி, மதில், குதிர், யானை—குதிரை கட்டும் இடங்கள், அரங்கம், சுரங்கம், கல்லூரி, கழகம், போர்க்களம், சுடுகாடு, வயல் வகைகள், வழி, தூரம் முதலியன விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

திவாகர நிகண்டில, இந்தியப் பெரு நாட்டின் மலைகளுள், கொல்லி மலை (சோழநாடு), பொதியமலை (பாண்டியநாடு), மேரு மலை, வெள்ளி (இமய) மலை

ஆகிய மலைகள் பேசப்பட்டுள்ளன. ஆறுகளுள் காவிரியாறு (சோழநாடு), பொருநை எனப்படும் தாமிரவர்ணியாறு—குமரி எனப்படும் கன்னியாறு (கன்னியாகுமரிப் பகுதி)—வையையாறு (பாண்டிய நாடு), ஆனிவானி எனப்படும் ஆன் பொருநையாறு (சேரநாடு), பாலாறு (தொண்டைநாடு), கௌதமையாறு, கோதாவிரி ஆகிய ஆறுகள் கூறப்பட்டுள்ளன. நகரங்களுள், சிதம்பரம்—திருவாரூர்—காவிரிப்பூம்பட்டினம் — உறையூர் (சோழநாடு), மதுரை (பாண்டியநாடு), கருவூர் என்னும் வஞ்சி (சேரநாடு); கச்சி என்னும் காஞ்சிபுரம் (தொண்டைநாடு) அவந்தி—காசி—மிதிலை— அயோத்தி — அரித்துவாரம் (வடநாடு) ஆகிய நகரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதினின்று, திவாகரர் காலத்தில், மேற்கூறப்பட்டுள்ள மலைகளும் ஆறுகளும் நகரங்களுமே தமிழ் மக்களிடத்தில் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தன என்பது புலனாகும். மேலும், இன்று பர்மா எனப்படும் கடாரமும் (சிலர் சுமத்ராவைக் கடாரம் என்கின்றனர்), இன்று சிலோன் என்று அழைக்கப்படும் ஈழமும், மேற்கூறப்பட்டுள்ள இந்தியப் பகுதிகளோடு இணைத்துத் திவாகரம் முதலிய நிகண்டுகளில் பேசப்பட்டிருப்பதை ஆராயப் புகுந்தால் அது ஒரு பெரிய அரசியல் சிக்கலாகுமாதலின் அதனை விடுப்பாம். அடுத்து, புலியூர், தில்லை என்னும் பெயர்கள் சிதம்பரத்திற்கு உரிய பெயர்கள் என்று சூடாமணி நிகண்டில் காணக்கிடக்கவும், திவாகர நிகண்டில் "மன்றம் சிதம்பரம்" என்று பாடப்பட்டிருப்பது மிக்க இன்பமாயுள்ளது. அந்த ஊருக்குச் சிதம்பரம் என்னும் வடமொழிப் பெயருக்குப் பதிலாக 'மன்றம்' என்னும் செந்தமிழ்ப் பெயர் ஒரு காலத்தில் வழங்கப்பட்டது என்பதை எண்ணும்போது

மனம் மகிழ்கிறதல்லவா? இறைவன் மன்றத்தில் திருக் கூத்து நிகழ்த்துவதாக இன்றைக்கும் கூறுகின்றார்க ளன்றோ?

இன்னும் இத்தொகுதியில் குறிப்பிடத்தக்க சில சுவையான செய்திகள் வருமாறு:—

நீரும் வயலும் சூழ்ந்த ஊருக்குத்தான் 'கிராமம்' என்று பெயராம்.

> " சுரந்த நீரும் வயலும் சூழ்ந்தவூர்
> கிராம மாகக் கிளக்கப் படுமே."

ஐந்நூறு குடும்பங்களுக்குக் குறையாத கிராமத் திற்குப் 'பெருங்கிராமம்' என்று பெயராம்.

> " குடி ஐஞ்ஞூறுக்குக் குறைவற நிறைந்தது
> பெருங்கிராமம எனப் பேசப் படுமே."

சுற்றிலும் மலைகள் சூழ்ந்த ஊர்—அதாவது, மலை களுக்கு நடுவே உள்ள ஊர் 'கேடகம்' எனப்படும். மலையும் ஆறும் அடுத்த ஊர் 'கர்வடம்' எனப்படும். பல பண்டங்கள் விற்கும் கடற்கரை ஊரின் பெயர் 'பட்டினம்' என்பதாம். பாடி, புரம் என்பன நகரத் தைக் குறிக்கும் பெயர்களாம். சுற்றிலும் சிற்றூர்கள் சூழ்ந்த பெரிய நகரத்தின் பெயர் 'மடப்பம்' என்பதாம். இச்செய்திகளை,

> " கிரிபல சூழ அடுத்தவூர் கேடகம்."

> " மலையும் ஆறும் அடுத்தவூர் கர்வடம்."

> " பண்டம் பலகொடு பகரும் கடற்கரை
> மன்னும் பதியே பட்டினம் ஆகும்."

> " பாடியும் புரமும் நகரப் பதியே."

> " மருங்கில் ஊர்சூழ் பெரும்பதி மடப்பம்."

என்னும் பாடல்களால் அறியலாம். மேலும் பலவகை வழிகளின் பெயர்கள் ஈண்டு குறிப்பிடத்தக்கன.

9

கடத்தற்குக் கடுமையான வழிக்கு அத்தம், கடம், கடறு, தூம்பு, சுரம் என்று பெயர்களாம். பல வழிகள் பிரிந்து செல்லும் இடத்திற்குக் கவலை, கவர்நெறி என்று பெயர்களாம். விடங்கர் என்பது சிறிய வழியாம். பாதை பெருவழியாம். படுகர், மடு என்பன ஏறிஇறங்கும் வழிப்பெயர்களாம். அளக்கர் என்பது நீண்ட வழியாம். இவற்றை,

**" அத்தம், கடம், கடறு, தூம்பு, சுரம், அருநெறி."**

**" கவலை, கவர் நெறி ஆகக் கருதுவர்."**

**" விடங்கர் சிறுவழி ஆகும் என்ப."**

**" பாதை பெருவழி."**

**" படுகர், மடு இழிந்தேறப்படு நெறி."**

**" அளக்கர் நீள் வழியே."**

என்னும் பாக்கள் உணர்த்தும். இவ்வளவு நுணுக்கமான பெயர்ச் செல்வங்களைப் பெற்றிருக்கும் தமிழ் மொழியின் சிறப்பே சிறப்பு! பொதுவாக மலையைக் குறிக்க முப்பத்தெட்டுப்பெயர்களும், கடலைக் குறிக்க முப்பத்தாறு பெயர்களும், வாவியைக் குறிக்க இருபத்தேழு பெயர்களும், சேற்றைக் குறிக்கப் பதினேழு பெயர்களும், ஊரைக் குறிக்க இருபத்தேழு பெயர்களும், மதிலைக் குறிக்கப் பத்தொன்பது பெயர் களும், வழியைக் குறிக்க இருபத்தொரு பெயர்களும் இப்படி இன்னும் பலவற்றிற்கும் பலப்பல பெயர்களும் உள்ளமை வியப்பிற்குரியதாம்.

இழிந்த சாக்கடை என்னும் சலதாரையைக் குறிக்க அங்கணம், தூம்புவாய் என்னும் இரண்டு அழகிய பெயர்களும், உயர்ந்த கல்வி நிலையத்தைக் குறிக்கச்

கல்வியூரி, கல்லூரி என்னும் இரண்டு சிறந்த பெயர் களும் உள்ளமை கண்டு வியக்க!

"அங்கணம் தூம்புவாய் சலதாரை யாகும்."

"கல்வியூரி கல்லூரி யாகும்."

இறுதியாகக் கழகம் என்னும் சொல்லைப் பற்றிச் சிறிது ஆய்வாம்: கல்லூரிக்கும் மேற்பட்ட பெரிய கல்வி நிலையத்தைப் 'பல்கலைக்கழகம்' என இன்று அழைக்கிறோம். கழகம் என்னும் இந்த இனிய பெயரை, பல துறைகளில் பலர் கூடிப் பணியாற்றும் பல வகை நிறுவனங்களும் பெற்றுள்ளன. ஆனால், கழகம் என்றால் 'சூது ஆடும் இடம்' என்னும் பொருளில், திருக்குறளில் 'சூது' என்னும் தலைப்பில்,

"கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார்."

"பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்."

என்னும் இரு குறள்கள் காணப்படுகின்றன. 'கழகமும் கையும் சூதாடும் கருவியுமாக இருப்பவர் ஒன்றும் இல்லாதவராகிவிடுவர்', 'கழகத்தில் புகுந்தவர் செல்வமும் பண்பும் அற்று விடுவர்'—என்பன மேலுள்ள குறட் கருத்துக்கள். சூதாடுகளம் என்னும் பொருளில் கழகம் என்னும் சொல்லை வள்ளுவர் பயன்படுத்தியிருப்பது சிலரைத் தியங்கி மயங்கச் செய்துள்ளது. கழகம் என்னும் சொல்லை எழுத்து எழுத்தாக—அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து உடைத்துச் சொல்லாராய்ச்சி செய்பவரும் உண்டு. இதற்காக இவ்வளவு மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டியதில்லை. இது மிகவும் எளிதில் அவிழ்க்கக் கூடிய சிக்கலேயாகும். இதற்குத் திவாகர

நிகண்டு துணைபுரியும். கழகம் என்னும் சொல்லுக்குத் திவாகரத்தில் கிடைக்கும் விளக்கம் வருமாறு:—

[கழகம் என்னும் பெயர்]

" செல்லல் தீய்க்கும் பல்புகழ்ச் சேந்தனில்
வல்லுநர் நாவலர் வாய்ந்த இடமும்,
மல்லும், சூதும், படையும், மற்றும்
கல்வி பயில் களமும் கழகம் ஆகும்."

'சேந்தனைப் போல் கல்வியறிவிற் சிறந்த நாவலர்கள் கூடும் இடமும், மற்போர் பயிலும் இடமும், சூது ஆடும் இடமும், படைப் பயிற்சி பெறும் இடமும், கல்வி கற்கும் இடமும் கழகம் எனப் பெயர் பெறும்'—என்பது மேலுள்ள திவாகர நூற்பாவின் கருத்தாகும். 'பலர் கூடும் இடம்' என்னும் பொது அடிப்படையிலேயே, மேற்கூறப்பட்டுள்ள இடங்கட்குக் கழகம் என்னும் பெயர் வைக்கப்பட்டதாகத் தெரிகிறது. திவாகரத்தில், கழகம் என்னும் பெயர் உடையனவாக ஐந்திடங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதலும் கடையுமோ, 'வல்லுநர் நாவலர் வாய்ந்த இடமும்—கல்வி பயில் களமும் கழகம் ஆகும்—என முழு முழு வரியில் கூறப்பட்டு முக்கியம் பெற்றுள்ளன; ஏனைய மூன்றுமோ, அதுவும் இதுவும் உதுவும் என்ற ஏனோ தானோ முறையில்— 'மல்லும் சூதும் படையும்' என ஒற்றை வரியில் ஓட்டிக் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொன்றன் தகுதிபற்றி ஆசிரியரின் உள்ளத்தில் இருந்த மதிப்பீடுகள் பாட்டாக வெளிவரும்போது அதற்குரிய உருவம் பெற்றுவிட்டன. இலக்கியத் திறனுயவுக் கலைஞர்களும் உளநூல் வல்லுநர்களும் இதனை எளிதில் உணர்வர் இதிலிருந்து உணர வேண்டியதாவது:—

அறிஞர்கள் பலர் கூடும் சங்கங்களும் கல்விக் கூடங்களுமே கழகம் என்னும் பெயரை முன்னர்ப் பெற்றிருந்தன. பின்னரே, மற்போர்ப் பயிற்சிக் களமும் படைக்கலப் பயிசிற்சிக்களமும் சூதாடு களமும் கழகம் என்னும் பெயர் பெற்றிருக்கவேண்டும். இதற்கு மாறாக, சூதாடும் இடந்தான் முன்னர்க் கழகம் என அழைக்கப்பட்டது; அந்தப் பெயரே பின்னர் அறிவியல் மன்றங்களுக்கும் கடன் வாங்கப் பட்டது என்று யாரும் சொல்ல முடியாது. ஏனெனில், அன்று தொட்டே அறிஞர்கள் சூதாட்டத்தை இழித்துப் பேசி வருகின்றனர். எனவே, அந்த இழிசெயல் நடக்கும் இடத்திற்குக் கழகம் என்னும் பெயர் முதலில் இருந்திருக்குமானுல், அந்த இழிந்த பெயரையா அறிஞர்கள் கூடும் ஆராய்ச்சி மன்றங் களுக்குப் பெயராகச் சூட்டியிருக்க முடியும்? ஒரு காலும் முடியாது! ஆகவே, அறிவு மன்றங்களும் கல்விக்கூடங்களுமே கழகம் என்னும் பெயர்க்கு உரியனவாம். இக்காலத்திலும் உடற்பயிற்சியும் படைப்பயிற்சியும் கல்வித்திட்டத்தில் சேர்ந்திருப் பதைப் போல, அக்காலத்திலும் மற்போர்ப் பயிற்சியும் படைக்கலப் பயிற்சியும் முக்கியம் பெற்றிருந்தன வாதலால், அவை நடைபெறும் இடமும் கழகம் என அழைக்கப்பட்டதில் வியப்பில்லை. ஆனுல் சூதாடு களத்திற்கு இப்பெயர் வந்த வரலாறு யாதாக இருக்கலாம்? இதற்கும் இதோ பதில் கிடைத்து விட்டது:

அறிவியல் மன்றங்களில் ஒய்வு நேரத்தில் பொழுதுபோக்கிற்காகச் சூதாட்டம் நடந்திருக்கலாம் முதலில் பந்தயம் இன்றி ஆடியிருக்கலாம். பின்னர்ப்

பணம் வைத்துப் பந்தயம் கட்டி ஆடியிருப்பர். இப்படியாகச் சில இடங்களில் அறிவியல் ஈடுபாட்டினும் சூதாட்டமே முதலிடம் பெற்றுவிட்டிருக்கலாம். நாளடைவில் சில அறிவியல் மன்றங்கள் கலைக்கப்பட்டு, முழுக்க முழுக்கச் சூதாடும் களமாகவே மாறிவிட்டிருக்கலாம். இன்றைய உலகில் இத்தகைய நிலையைச் சில இடங்களில் காணக்கூடும்—ஆனால், நிலைமை மாறியும், கழகம் என்னும் அந்தப் பெயர் மட்டும் அப்படியே ஆணியடித்துக் கொண்டு நிலைத்துவிட்டிருக்கவேண்டும். அதனால்தான் "கழகத்தியலும் கவற்றின் நிலையும்" எனப் புறப்பொருள் வெண்பா மாலைபோன்ற நூற்களில் ஆளப்பட்டிருப்பதல்லாமல், திருவள்ளுவரின திருக்குறளிலும் சூதாடும் இடம் எனக் கழகம் சுட்டப்பட்டுள்ளது. இந்தத் திருக்குறள் ஆட்சியைக்கொண்டு, கழகம் என்னும் சொல், சூதாடும் இடத்தை மட்டுந்தான் அக்காலத்தில் குறித்து வந்தது என்று முற்றுப்புள்ளி வைத்துவிடக்கூடாது. ஓர் இலக்கியக்கழகத்தைப் பற்றிப் பேசும்போது கழகம்—கழகம் என்றால் அது அந்த இலக்கியக் கழகத்தைக் குறிக்கும். ஓர் அரசியல் கட்சிக் கழகத்தைப் பற்றிப் பேசும்போது கழகம்—கழகம் என்றால் அது அந்த அரசியல் கட்சியைக் குறிக்கும். இது இக்கால உலகியல. இது போலவே, திருவள்ளுவர் திருக்குறளில் சூது என்பதைப் பற்றிப் பேசும்போது கழகம்—கழகம் என்றால் அது சூதாடும் இடத்தைக் குறிப்பதில் வியப்பென்ன இருக்க முடியும்? நாளடைவில் சூதாடுங் கழகங்கள் திருவள்ளுவர் போன்ற அறிஞர் பெருமக்களால் இழித்துக் கண்டிக்கப்புட்டமையாலும், அதனால் மக்களால் புறக்கணிக்கப்பட்டமையாலும், சூதாடும் இடங்களைக் கழகம் என அழைக்கும்

வழக்காறு இன்று அறவே மறைந்துவிட்டது. அறிஞர்கள்கூடும் சங்கங்களும் கல்வி பரப்பும் நிலையங் களும் முன்போலவே கழகம் என அழைக்கப்படு கின்றன. இதுதான் கழகம் என்னும் பெயரின் வரலா ருகும். இவ்வளவு அரிய கருத்துக்களையும் அறிவதற் குத் திவாகரப் பாடல் நமக்குத் துணை நிற்கிறதல்லவா?

இந்தக் காலத்தில் 'கிளப்' (CLUB) என்னும் ஆங்கிலச் சொல் பல இடங்களையும் சுட்டி நிற்பதைப் போல, திவாகரர் காலத்தில் கழகம் என்னும் சொல் பல இடங்களையும் சுட்டி நின்றது என்பதையும் ஈண்டு சுட்டாமல் விடமுடியவில்லை.

# 6. பல்பொருள் பெயர்த் தொகுதி

பல்பொருள் பெயர்த் தொகுதி என்னும் பெரிய கடைத் தெருவிற்குள் நுழைந்துவிட்டால் ஆங்கே பல வகையான பொருள்களைப் பார்க்கலாம். இத் தொகுதியில், பல்வகைப் பொன்கள் (உலோகங்கள்), மணிகள் (இரத்தினங்கள்), சங்கநிதி, பதுமநிதி, காந்தம், சூரிய காந்தக்கல், சந்திரகாந்தக் கல், சங்கு, கருப்பூரம், கத்தூரி, சாந்து, பூச்சு, பொட்டு, குங்கிலியம், பெருங் காயம், அரக்கு, சுக்கு-ஏலம் முதலிய மருந்துச் சரக்குகள், விறகு, கரி, சாம்பல், சாணம், புகை, பனிநீர், காவிக் கல், பஞ்சு, சோறு, பல்வகை உணவுகள், தேன், பால், தயிர், நெய், மோர், சர்க்கரை, கள், நஞ்சு, அமிழ்து முதலிய பல்வகைப் பொருள்களின் பெயர்கள் கூறப் பட்டுள்ளன. இப்பகுதியிலுள்ள சில சுவையான செய்திகள் வருமாறு :-

சங்க நிதி, பதும நிதி என்னும் இருவகைச் செல் வங்கள் பேசப்பட்டுள்ளன. இவை பாற்கடலில் தோன்றியதாகவும், தேவர் உலகத்தில் உள்ளதாகவும், குபேரன் கையில் இருப்பதாகவும் பலவாறு பல புராண நூற்களில் கூறப்பட்டுள்ளன. சங்கநிதி சங்கு வடி வாக இருக்கும் என்றும், பதும நிதி தாமரை வடிவாக இருக்கும் என்றும் மற்றையோர் கூறுவது போலவே திவாகரரும் கூறியுள்ளார். இவற்றின்முன் நின்று கொண்டு எது வேண்டுமென்று கேட்டாலும் கொடுக் கும் என்று கூறுகிறார்கள். இது குறித்துத்தான், 'வரையாது வழங்கும் சேந்தனுடைய கைகளைப் போன்றவை' என்று திவாகரர் கூறியுள்ளார் போலும்.

“ செங்கைநந்தி அம்பல் சேந்தன் செங்கையில்
சங்கின் வடிவினது சங்க நிதியே.”

“ தேமலர் அலங்கல் சேந்தன் செங்கையில்
தாமரை வடிவினது பதும நிதியே.”

என்பன திவாகரப் பாடல்கள். வாய்ப்புக் கிடைத்த போது வள்ளல் சேந்தனைப் பாராட்ட ஆசிரியர் மறக்க வில்லை. இஃது அவரது செய்ந் நன்றி மறவாச் சீர்மைக்கு எடுத்துக் காட்டு! மேலும் சில செய்திகள் காண்பாம் :

“ சாணி புண்ணிய சாந்தம் எனப்படும்”

என்னும் நூற்பாவால், மாட்டுச் சாணத்தை மக்கள் மிகவும் உயர்வாக மதிப்பது புலனாகும். மற்றும் பிட்டு, அஃகுல்லி, இடி, மோதகம், பில்லடை, அப்பம் முதலிய உணவுப் பண்டங்களும் ஈண்டு குறிப்பிடப் பட்டுள்ளன. பூரிகம், நொலையல், கஞ்சம், தோசை, என்னும் தின்பண்டங்கள் அப்பவகையைச் சேர்ந்தன வாம்.

“ பூரிகம், நொலையல். கஞ்சம், தோசை
பேத வகைப் பெயர் அப்ப மாகும்.”

“ அப்பம், பிட் டொடு, அஃகுல்லி, இடியெனச்
செப்பிய வெல்லாம் சிற்றுண்டி யாகும்.”

சிற்றுண்டி என்னும் சொல், ‘டிஃபன்’ (Tiffen) என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நேராக இக்காலத்தில் புதிதாகப் படைத்துக்கொண்ட தமிழ்ச்சொல் அன்று; அது பழைய செந்தமிழ்ச்செல்வமே என்பது, மேலுள்ள திவாகர நூற்பாவால் புலனாகும்.

இத்தொகுதியில் பொன்னைக் குறிக்க முப்பத்தெட்டுப் பெயர்களும், சோற்றுக்கு இருபத்து நான்கு பெயர்களும், உண்ணும் செயலுக்குப் பதின் மூன்று பெயர்களும், கள்ளுக்கு நாற்பத்தெட்டுப் பெயர்களும் கூறப்பட்டுள்ளன. மாதிரிக்காக, சோற்றுக்கும் உண்ணல் தொழிலுக்கும் உரிய பெயர்களை மட்டும் பார்ப்போம் :

(சோற்றின் பெயர்)

**“ புன்கம், மிதவை, பொம்மல், போனகம்,**
**அன்னம், ஓதனம், அயினி, அடிசில்,**
**பாளிதம், பொருகு, மிசை, பதம், பாத்து,**
**அமலை, உணவு, துப்பு, அசனம், கவளம்,**
**சொன்றி, நிமிரம், மடை, கூழ், புழுக்கல்,**
**ஒன்றிய மூரல், சோறு என உரைப்பர்.”**

(உண் தொழிலின் பெயர்)

**“ மிசைதல், பக்கித்தல்,**
**அயிலல், அனுங்கல், விழுங்கல், துய்த்தல்,**
**மேய்தல், அயிறல், நுகர்தல், அருந்தல்,**
**உண்டல், தின்றல், பருகுதல் என்றிவை**
**பண்பின் தொழிலைப் பகருங் கிளவி.”**

மற்றும், பொதி சோறு, ஆற்றுணா, தோட்கோப்பு என்னும் சொற்கள் கட்டு சோற்றைக் குறிக்கும் பெயர்களாம்.

**“ பொதி சோறு ஆற்றுணா தோட்கோப்பு ஆகும்.”**

பொதி என்றால் மூட்டை; எனவே, பொதி சோறு என்றால் கட்டு சோற்று மூட்டை என்று பொருளாம்.

ஆறு என்ருல் வழி - உணு என்ருல் உணவு; எனவே, ஆற்றுணு என்ருல், வழிப்பயணத்தில் உண்ணும் உணவு (மூட்டை) என்று பொருளாம். தோட்கோப்பு(தோள் + கோப்பு) என்ருல் தோளில்கோத்துத் (மாட்டித்) தொங்கும்பொருள் என்று பொருளாம்; எனவே, அக்காலத்தில் கட்டு சோற்று மூட்டையைத் தோளில் மாட்டித் தொங்கவிட்டுக்கொண்டு போயினர் என்பது புலப்படும். இந்த நாகரிகக் காலத்திலும் எந்தெந்தப் பொருளேயோ ஒரு வகைப் பையில் போட்டு அடைத்து இளம் பெண்களும் — ஆண்களுங் கூடத் தோளில் மாட்டித் தொங்கவிட்டுக்கொண்டு போகிருர்கள் அல்லவா? இவ்வகைப் பைக்குத் 'தோட்கோப்பு' என்னும் அழகிய பெயரை நாம் சூட்டலாமே. ஏனெனில், ஊருக்கு ஊர் உணவுக் கடைகள் ஏற்பட்டு விட்டதால் கட்டு சோற்று மூட்டை கரைந்து காணுமற் போய்விட்டதன்ருே இக்காலத்தில்?

இவ்வாறு பழைய சொற்கிடங்கிற்குள் புகுந்து பார்த்தால் எண்ணற்ற சொற்கள் இக்காலத்திற்கு ஏற்புடையனவாகக் கிடைக்கலாம்.

# 7. செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி

செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி என்னும் பெரிய தொழிற் பேட்டைக்குள் (Industrial Estate) புகுந்து விட்டால், பலவகைத் தொழிற் படைப்புகளைப் பார்க்கலாம். இத்தொகுதியில், பலவகை உலோகங்கள், மரங்கள், தோல், நூல், மண் முதலியவற்றால் செய்யப்பட்ட செயற்கைப் பொருள்களின் பெயர்கள் விவரிக்கப்பட்டுள்ளன. அதாவது, பலவகைப் படைகள் (ஆயுதங்கள்), அணிகலன்கள், நாழிகை வட்டில் (கடியாரம்), கண்ணாடி, பலவகை இசைக் கருவிகள், தேர், வண்டி, வீடுகளில் பயன்படுத்தப்படும் பலவகையான பொருள்கள், உழவு-நெசவு முதலிய தொழில்களுக்கு உதவுங் கருவிகள், எழுதுகோல், ஏணி, தோணி, கப்பல், கிரி யோட்டுங் கருவி, குடை, சீப்பு, பந்து-காற்றாடி முதலிய விளையாட்டுப் பொருள்கள், செருப்பு, பலவகை உடைகள், கொடிகள், படுக்கை, ஓவியம் முதலியவற்றிற் குரிய பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

பலவகையான வாச்சியங்கள் (இசைக் கருவிகள்) பேசப்பட்டுள்ளன. அவற்றுள் பறை என்பது ஒன்று. அந்தப் பறை என்னும் வகையில்மட்டும் ஏறத்தாழ இருபது இனங்கள் சொல்லப்பட்டுள்ளன. இதிலிருந்து தமிழர்களின் இசைக்கலையின் வளம் புலப்படும். தமிழில் இசை இல்லை என்பவர்க்கு இச்செய்தி ஓர் அறைகூவல் அன்றோ?

உயரமாக அமரும் நீளப் பலகையை 'பெஞ்சு' (Bench) என்னும் ஆங்கிலச் சொல்லால் இக்காலத்தில்

பலர் அழைக்கின்றனர். இக்காலத்தும் சில விடங்களில் இதனை 'விசி' என்றும் 'விசிப் பலகை' என்றும் அழைக்கும் பழக்கம் மறையவில்லை. இதனைக் குறிக்க விசி, அரி என இருசொற்கள் இருப்பதாகத் திவாகரம் தெரிவிக்கிறது.

"விசி அரி ஆகும்"

என்பது பாடல். எனவே, பிற மொழிச் சொற்களிலேயே மயங்கி விடாமல், பழந் தமிழ்ச் சொற்களைப் போற்றி வழங்கவேண்டும். இத் தொகுதியில் பல பொருள்கட்கும் உரிய பல பெயர்கள் கூறப்பட்டிருப்பினும், ஈண்டு மாதிரிக்காகக் கூறையைக் (துணியைக்) குறிக்கும் பெயர்களைமட்டும் காண்பாம் :-

[கூறையின் பெயர்]

"மடியே, புட்டம், மாறுகம், கலை, உடை,
இலக்கர், கலிங்கம், சேலை, காடகம்,
காழகம், அறுவை, வட்டம், சாடி,
தானை, வாதநம், கோடிகம், அம்பரம்,
ஆசாரம், ஆடை, தூசு, துகில், நீவி,
சமபடம், பட்டம், படாம், புடவை, கூறை."

[நல்லாடையின் பெயர்]

"எடகம், புங்கம், பங்கம், இடையல்,
வேதகம், சில்லிகை, சித்திலிகை, கத்தியம்,
நாகம, துரியம், கருள், பாரி, நல்லாடை."

கலிங்கம், காழகம் என்னும் பெயர்களை நோக்குங்கால், அந்த நாடுகளிலிருந்தும் தமிழ் நாட்டுக்கு உடைவகைகள் வந்தன என்பது புலனாகும்.

இந்தத் தொகுதியிலும் சேந்தன் பாராட்டப் பெற்றுள்ளான். சேந்தனைப் போன்ற வீரர்கள் காலில் கட்டிக் கொள்ளும் வீரக்கழலுக்குக் 'காலணி வடம்' என்று பெயர் என்று விளக்கும்முகத்தான் திவாகரர் சேந்தனைச் சிறப்பித்துள்ளார். பாடல்:-

"கெழுதகை அம்பல் கிழவோன் சேந்தனில்
விழைவுறு தியாகத்து வீரத்து விளக்கிய
கழலே ஆடவர் கால்மிசை யணிவடம்."

# 8. பண்பு பற்றிய பெயர்த் தொகுதி

உளவியல் (Psychology), வடிவக் கணக்கு (geometry), விஞ்ஞானக் கருத்துக்கள் முதலிய துறைகள் பற்றித் தமிழில் நூல் எழுதுவதற்கு வேண்டிய சொற்கள் பல இத் தொகுதியிலிருந்து கிடைக்கும். சிலவற்றிற்கு நேரடியாகக் கிடைக்காது போயினும், இத்தொகுதியில் சொல்லப்பட்டிருக்கும் சொற்களைக் கொண்டு சில புதிய பெயர்களையும் படைத்துக்கொள்ளலாம்.

வடிவு, அளவு, நிறம் முதலிய காட்சிப் பொருட் பண்புப் பெயர்களும், சுவை, குணம், உணர்வு, முதலிய கருத்துப் பொருட் பண்புப் பெயர்களும் இத்தொகுதியில் கூறப்பட்டுள்ளன. சிறிது விரிவாகச் சொல்ல வேண்டுமானால், வட்டம், வளைவு, திரள், குவிவு, மொக்குள், உண்டை, உள்துளை, துவாரம், பரப்பு, அகலம், நீளம், தொகுதி, மிகுதி, பாதி, முழுமை, உயர்ச்சி, பெருமை, பருமை, சிறுமை, செறிவு, மென்மை வன்மை, நுண்மை, நொய்ம்மை, செம்மை—பசுமை—கருமை - பொன்மை - வெண்மை முதலிய நிறங்கள், ஒளி, அழகு, வலிமை, மதர்ப்பு, எளிமை, வெம்மை, தண்மை, வீரம். வெற்றி, தோல்வி, மனம், அறிவு, கருத்து, உணர்வு, விருப்பு, வெறுப்பு, அன்பு, இரக்கம், சினம், காமம், அச்சம், அருவருப்பு, வியப்பு, உவகை, கண்ணோட்டம், நன்மை, தீமை, நோய், வறுமை, செல்வம், இன்பம், துன்பம், சோம்பல், பகை, நட்பு, வஞ்சனை, பொறுமை, ஒழுக்கம், பழைமை, புதுமை,

பிறப்பு, இளமை, நிலையாமை, உரிமை, ஆக்கம், தூய்மை, வளமை, உறவு, துறவு, மணம், இனிமை, கசப்பு, புளிப்பு, உறைப்பு, அளவைகள், ஒப்புமை முதலிய பண்புகளுக்குரிய பல்வகைப் பெயர்கள் மிகவும் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

பெருமை என்னும் பண்பைக் குறிக்க முப்பத் தொன்பது பெயர்களும், மிகுதியைக் குறிக்க இருபத்து மூன்று பெயர்களும், வலிமைக்கு முப்பத்திரண்டு பெயர்களும், அச்சத்திற்கு நாற்பத்திரண்டும், விருப் புக்கு இருபத்தைந்தும், துன்பத்திற்கு நாற்பத்தேழும், குற்றத்திற்கு இருபத்தேழும், இன்னும் பலவற்றிற்கும் பலப்பல பெயர்களும் கூறப்பட்டிருப்பதிலிருந்தே இத் தொகுதியின் விரிவு புலனாகும். மாதிரிக்காகப் பெரு மையின் பெயர்களை மட்டும் காண்போம்:--

**“தடம், தவவு, விபுலம், வியலிகை, வியன், விறல்,**
**முடலை, அகலுள், மோடு, செம்மை,**
**பீடு, கண், பாழி, பீன், முன்பு, மால், மா,**
**வந்தை, கலந்தை, பரி, பணை, அழுவம்,**
**பிறங்கல், படு, நளி, இயக்கம், வியம், தகை,**
**செம்மல், அணி, நன்று, அருமை, இருமை,**
**கருமை, கதழ்வு, கயவு, மூரி,**
**பெருமை, பாடும், அண்ணலும், அதற்கே.”**

இனிச் சில சுவையான செய்திகளைப் பார்ப்போம்: சிலர் தம் நண்பர்க்கு மடல் (கடிதம்) எழுதும்போது, ‘உழுவல் அன்புடைய கெழுதகை நண்பரீர்!’ என்று நண்பரை விளிக்கின்றனர். இது சிலரிடத்தில் ‘சம்பிர தாயம்’ (Formality) எனப்படும் ஒருவகை மரபாகப் போய் விட்டது. இவர்களுக்குள் அன்பும் இருக்காது —பண்பும் இருக்காது; இதற்கு முன் இவர்கள் பகைவர்

போலவும் நடந்து கொண்டிருப்பர் — அல்லது — இன்னும் சில நாளில் பகைவராகவும் மாறக்கூடும்; இருப்பினும், ஒப்புக்கு 'உழுவல் அன்புடைய நண்பரீர்' என அழைத்துக் கொள்கின்றனர். இன்னும் சிலர் 'உழுவல் அன்பு' என்பதன் பொருள் புரியாமலேயே எழுதிக் கொள்கின்றனர். இன்னோர் அனைவரும் மிகவும் இரங்கத் தக்கவரே — இல்லையில்லை — எள்ளி நகையாடற்கு உரியவராவர். ஏனெனில் 'உழுவல்' என்றால், ஏழுபிறவிகள் எடுத்தாலுங்கூடத் தொடர்ந்து நீடிக்கக்கூடிய அன்பு என்று பொருளாம்.

"உழுவல் எழுமையும் தொடர்ந்த அன்பு உரைக்கும்."

என்பது திவாகர நூற்பா. நிலைமை இங்ஙனமிருக்க, மணிக்கு மணி மனம் மாறும் பேர்வழிகள், உழுவல் அன்புடைய கெழுதகை நண்பர்களாக எப்படியிருக்க முடியும்? அடுத்து, இறுமாப்பு என்பதைக் குறிக்க ஏக்கழுத்தம் என்னும் சொல்லும், அக (மன) மலர்ச்சி என்பதற்குச் செம்மாப்பு என்ற சொல்லும், குறிப்பு என்பதற்கு நாட்டியம் என்ற சொலலும், காரணம் என்பதற்குப் பொருட்டு, திறன், வாயில் முதலிய சொற்களும், இலாபம் என்பதற்குப் பசை, பேறு முதலிய சொற்களும் இருப்பதை எடுத்துச் சுட்டாமல் இருக்க முடியவில்லை:

"இறுமாப்பு ஏக்கழுத்தம்."
"செம்மாப்பு அகமலர்ச்சி."
"நாட்டியம் குறிப்பே."
"நிபமும், பொருட்டும், ஏதுவும், நிமித்தமும்,
திறனும், வாயிலும், காரணம் தெரிசொல்."

— "ஊதியம் பசை பயன் பலித்நம் ஆக்கம் என்று
ஓதிய ஐந்தும் இலாப மாகும்;
பேறும் அதிகமும் பேசுப இலாபம்."

என்பன பாடல்கள். ஏக்கமுழுத்தம், செம்மாப்பு என்பன மிகவும் இனிய அழகிய சொற்கள் அல்லவா? நாட்டியம் என்றால் குறிப்பாம். நாட்டியம் ஆடுபவர்கள் தங்கள் உடல் - உறுப்பு அசைவுகளின் வாயிலாகக் குறிப்பாகத்தானே கருத்தை உணர்த்துகின்றனர்! எனவே, நாட்டியம் என்பது பேசாத பேச்சு — நாட்டியக் கலை என்பது பேசாத பேச்சுக் கலை—என்னும் கருத்து இனிது புலனாகும். அடுத்து, காரணம் என்னும் வடசொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் கிடைக்காத ஏக்கம் சிலருக்கு உண்டு. இனி அந்த ஏக்கம வேண்டா! பொருட்டு, திறன், வாயில் முதலிய நல்ல தமிழ்ச் சொற்கள் உள்ளனவே – பயன்படுத்தலாமே! அடுத்தபடியாகப் பசைக்கு வருவோம். உலக வழக்கில் செல்வத்தைப் பசை என்று குறிப்பிடும் பழக்கம் உண்டு. 'அவருக்குப் பசை ஏறிவிட்டது', 'அதில் நல்ல பசை படும்', 'அதில் ஏதேனும் பசை படுமா?', 'அதில் ஒன்றும் பசை படவில்லை', 'பசை இருந்தால் தானே வண்டி ஓடும்!'-- என்பன உலக வழக்குகள். இந்தத் தொடர்களில் பசை என்பது பணச்சார்பான பொருள்படுவது காண்க. இந்த நயமான உலக வழக்குச் சொல், திவாகரத்தில் இலக்கியச் சொல்லாக ஏறியிருப்பது கண்டு வியக்க!

மேற்கொண்டு சில நிறுத்தல் அளவைப் பெயர்களைப் பார்ப்போம். ஒரு பலம் அளவுக்குத் 'தொடி' என்று பெயராம். கால் பலத்திற்குக் 'கஃசு' என்று பெயராம். தொடி நூறு நிறை கொண்ட அளவுக்குத் 'தூக்கு', 'கா', 'துலாம்' என்று பெயர்களாம்.

"ஒரு பலப் பெயர் தொடி."

"கஃசு காற் பலம்."

"தூக்கும், காவும், துலாமும், நூற்று நிறை."

என்பன பாடல்கள். கால் பலத்திற்குக்கூடத் தனிப் பெயர் இருந்ததென்றால், தமிழின் சொல்வளத்தையும், அன்றைய தமிழரின் கணக்கியல் கலை நுட்பத்தையும் என்னென்பது! மேலும், இச்சொற்கள் நிகண்டோடு நின்றுவிடவில்லை; இலக்கியத்திலும் எடுத்தாளப் பட்டுள்ளன. சான்றாக, திருக்குறளில் உழவு என்னும் தலைப்பிலுள்ள ஒரு குறளை நோக்குவோம்: 'நிலத்தில் ஒரு பலம் (தொடி) மண், கால் பலம் (கஃசு) மண்ணாகக் காயும் அளவுக்கு ஏரை ஓட்டி ஓட்டி உழுதால், அந் நிலம் பிடி எருவும் போடாமலேயே நிரம்ப விளையும்' என்னும் கருத்துப் பொதிந்த

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்."

என்னும் குறளில் தொடி, கஃசு என்னும் சொற்கள் அமைந்துள்ள அழகை நாம் நன்கு சுவைக்கத்தான் வேண்டும்!

இந்தத் தொகுதியிலும் திவாகரர் சேந்தனை மறக்கவில்லை. அம்பல் தலைவன் சேந்தனைப் போல அறிந்தும் அறியாதவர்போல் அடங்கியிருப்பதற்குத் தான் 'அறிமடம்' என்று பெயர் என்று அறிமடம் என்பதற்கு விளக்கம் கொடுக்கும் இடத்தில் ஆசிரியர் சேந்தனைச் சிறப்பித்துள்ளார்:

"பெருஞ் சேந்தன் அம்பல் பெருமான் போலத்
தெரிந்து பிறர் அறிவின் சோர்வு புறமறைத்து
அறிந்தும் அறியார் போறல் அறிமடம்."

என்பது நன்றியறிவிப்புப் பாடலாகும்.

# 9. செயல் பற்றிய பெயர்த் தொகுதி

செயல் பற்றிய பெயர்த் தொகுதியில் ஏறக்குறைய இருநூற்றைம்பது செயல்கள் அதாவது வினைகள் பேசப்பட்டுள்ளன. சில செயல்களுக்கு, இனிய அழகிய தூய தமிழ்ப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக, செய்தல் என்னும் வினைக்கு,

> "அயர்தல், குயிற்றல் ஆற்றல், இழைத்தல்,
> வினைதல், செய்தல் மாற்ற மாகும்"

எனப் பல பெயர்கள் கூறப்பட்டிருப்பது காண்க. மகளிர் விளையாட்டைக் குறிக்க,

> "ஓரை, பண்ணை, கெடவரல், பொய்தல்,
> உண்டாட்டு, கிரீடை, உப்பு, கேளி,
> வண்டல், தொடலை, மகளிர் விளையாட்டு."

எனப் பல பெயர்கள் இருப்பது புலனாகும். இந்தக் காலத்தில் நம் நாட்டில் ஆண்கள் மட்டுமே விளையாடுகின்றனர். பெண்கள் விளையாடும் பழக்கம் இப்போது தான் சிறிது தலைகாட்டுகிறது ஆனால், பண்டைய தமிழகத்தில் பெண்கள் பெரிதும் விளையாடினர்; பல வகை ஆட்டங்கள் ஆடினர் என்ற செய்தி இந்தத் திவாகர நூற்பாவால் புலனாகின்றது. இந்தக் காலத்தில் ஆண்கள் பந்தாடுகின்றனர். அந்தக் காலத்திலோ பெண்களே பந்தாடினர். பந்தாடும் ஆண்மகன் பெட்டையாகக் கருதப்பட்டான். இந்தச் செய்தி ஈண்டு குறிப்பிடப்பட வேண்டியதொன்றன்றோ?

அடுத்து, விழாவைக் குறிக்க,

"முருகும், சாறும், சேறும், விழாவே ;
உயர் துணங்கறலும், உற்சவம் ஆகும்."

என்னும் புதுமைப் பெயர்கள் உள்ளமை காண்க.

இப்போது நடைமுறைப் பேச்சு வழக்கில் அலங்காரம்—அலங்காரம் செய்தல் என்னும் வழக்காறே பெரும்பாலும் அடிபடுகிறது. இந்த அலங்காரத்தைக் குறிக்க எத்தனையோ இனிய அழகிய சுவையான தமிழ்ப் பெயர்கள் இருப்பதைத் தமிழ் மக்களுட் பெரும் பாலார் அறிந்தாரிலர். ஒப்பனையைக் குறிக்கும் அப் பெயர்களை ஈண்டு காண்பாம்:–

"மண்ணல், கைசெய்தல், பொற்பு, அலங்கரித்தல்,
புனைதல், மிலைதல், வேய்தல், அணிதல்,
வனைதல் ஒப்பனை மாற்ற மாகும்."

இனி இச் சொற்களைப் பயன்படுத்தலாமே!

நாம் உலக வழக்கில் அயர்ந்த தூக்கத்தைத் தூங்குதல் என்னும் வினையால் சுட்டுகிறோம். ஆனால், தூங்கல் என்னும் சொல், நிரம்பாத தூக்கத்தையே குறிக்கும் என நிகண்டு கூறுகிறது. இதனை

"தூங்கல் நிரம்பாத் தூக்கம் என்ப."

என்னும் திவாகர நூற்பாவால் அறியலாம். பொது வாகத் தூக்கத்தைக் குறிப்பதற்கு,

"கண் படை, கண் வளர்தல், கனவோடு, அனந்தர்,
துஞ்சல், பள்ளி, துயிறல் ஆகும் ;
உறங்கலும், படையும் உரைப்பர் அதற்கே."

என வேறு பல பெயர்கள் உள்ளன.

கணவன் மனைவியர்க்குள் ஏற்படும் சிறு மனத் தாங்கலுக்கு 'ஊடல்' என்று பெயராம். இந்த ஊடலைச் 'செல்லக் கோபம்' என்று சொல்லலாம். இது சிறிது முதிருமேயானால் அதற்குப் 'புலவி' என்று பெயராம். அந்தப் புலவி நீட்டிக்குமேயானால் அதற்குத் 'துனி' என்று பெயராம். இவ்வாறு நீட்டித்த ஊடல் ஒருவாறு முடிவடைந்து கூடலுக் கேற்ற சூழ்நிலை உருவாகுமானால் அதற்கு 'ஒல்' என்றும் 'சிரல்' என்றும் பெயர்களாம்.

"ஊடலின் முதிர்தல் புலவி யாகும்."
"அதனின் நீடுதல் துனி எனப்படுமே."
"ஒல்லும் சிரலும் முடிவிடன் உரைக்கும்."

என்பன திவாகர நூற்பாக்களாம். அகராதி தொகுத்து வெளியிட்டுள்ள பலரும், ஈண்டு கூறப்பட்டுள்ள ஒல், சிரல் என்னும் சொற்களின் உண்மைப் பொருள் உணராதவராய், இச் சொற்களுக்கு 'முடிவிடம்' (Limit, End, Top) என்று பொருள் எழுதியுள்ளனர். 'ஒல்லும் சிரலும் முடிவிடம் உரைக்கும்' என்னும் பாடலை அவர்கள் திரிபாகப் புரிந்து கொண்டுள்ளனர் என உணரக்கிடக்கின்றது. 'ஊடலின் முதிர்தல் புலவி யாகும்,' 'அதனின் நீடுதல் துனி எனப்படுமே' என்னும் இரு பாடல்களோடு ஊடலைப் பற்றிய பகுதி முடிந்துவிட்டதாக அவர்கள் நம்பி, 'ஒல்லும் சிரலும் முடி விடன் உரைக்கும்' என்னும் பாடலை, வேறு செயலைப் பற்றிக் கூறும் தனிப் பகுதியாகக் கொண்டு விட்டனர். அதனால்தான், 'ஊடல் முடியும் இடம்' என்று பொருள் எழுதாமல், எது ஒன்றும் முடியக் கூடிய இடம் - எல்லை - உச்சி என்ற கருத்தில் பொதுவாக எழுதிவிட்டனர். இது பொருந்தாது. 'ஒல்லும் சிரலும் முடிவிடன் உரைக்கும்' என்னும் திவாகர

நூற்பாவுக்கு, மண்டல புருடர் இயற்றிய சூடாமணி நிகண்டில் உரிய விளக்கம் காணக்கிடக்கிறது.

> "கூடியும் கூட்ட மின்மை
> குலவிய புலவி யென்ப.
> ஊடலே நணுகா ராகி
> உரைமறுத் திருத்த லாகும்.
> ஆடவர் நீங்க உள்ளே
> அடைத்துறல் துனியே என்பர்.
> ஊடலைத் தீர்த்தலின் பேர்
> உணர்த்தலே ஒல்லல் ஆகும்."

என்பது சூடாமணி நிகண்டு நூற்பா. இப்பாடலின் இறுதிப் பகுதியில், ஊடல் தீர்ந்த நிலைக்கு 'ஒல்லல்' என்று பெயராம் என்ற செய்தி தெளிவாக விளக்கப் பட்டுள்ள தன்றோ? வழி வழி மரபை யொட்டிய இந்த விளக்கத்தைக் கொண்டு, திவாகர நூற்பாவின் உண்மைப் பொருளை உணரலாமே! இக்காலத்தில் அகராதி தொகுத்தவர்கள் இதனை அறியாதது வியப்பே!

அன்றியும். 'ஒல்' என்னும் சொல்லுக்கு 'உடன் படுதல்' என்னும் பொருள் உண்டு என்பது,

> "பாசறை யல்லது நீ ஒல்லாயே."

என்னும் புறநானூற்றுப் (31) பகுதியாலும், அதே சொல்லுக்குப் 'பொருந்துதல்' என்னும் பொருளும் உண்டு என்பது,

> "கானத்து ஒல்லும் பேரழல்"

என்னும் கந்த புராணப் பகுதியாலும், அதற்கே 'பொறுத்தல்' என்னும் பொருளும் உண்டென்பது,

" ஒல்லுவ சொல்லாது"

என்னும் பரிபாடல் (12) பகுதியாலும் விளங்கும் என்ற செய்தி அகராதி தொகுத்தவர்கள் அறிந்ததுதானே! 'ஒல்' என்னும் சொல்லுக்குரிய உடன்படுதல், பொருந்துதல், பொறுத்தல் என்னும் இம்மூன்று பொருள்களும், 'ஒல்' என்பதற்கு 'ஊடல் முடிவிடம்' என்று பொருள் கொள்வதற்குத் துணை புரியுமே! அதாவது ஊடல் கொண்ட தலைவனும் தலைவியும் ஒருவர்க்கொருவர் குறை பொறுதது உடன்பாடு எய்திப் பொருந்துதல் தானே ஊடல் முடிவிட மாகும்?

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் கூடி வாழ்க்கைத் துணைவர்களாகும் விழாவைக் கல்யாணம், விவாகம் முதலிய வட மொழிச் சொற்களால் இடைக்கால மக்கள் குறித்து வந்தனர். இக்காலத் தமிழ் மக்களோ, 'திருமணம்' என்னும் அழகிய தமிழ்ச் சொல்லால் அதனைக் குறிக்கின்றனர். ஆம்! மணத்தல் என்றால் கூடுதல். ஓர் ஆணும் ஒரு பெண்ணும் கூடுகிற — இணைகிற நிகழ்ச்சிதானே திருமணம் என்பது! இதற்குத் திவாகரத்தில் அகச்சான்று காணலாம்.

" மணத்தல் கூடுதல்"

என்பது திவாகர நூற்பா. இப்படியாகத் துருவித் துருவி நல்ல தமிழ்ச் சொற்களைத் தேடித் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தவேண்டும்.

ஊராண்மை என்றால் மிக்க செயலாம்; பேராண்மை என்றால அரிய செயலாம்:

"ஊராண்மை மிக்க செயல்."

"பேராண்மை அரிய செயல்."

என்பன திவாகர நூற்பா. எடுப்பான இந்த இரண்டு சொற்களும்,

"பேராண்மை என்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு."

என்னும் திருக்குறளில் பொருள் பொதிந்து பொலிந்து கிடப்பதை அறிந்து மகிழ்க.

ஆலோசனை, மந்திராலோசனை என்னும் வடமொழி வழக்காறுகளுக்குத் தக்க தமிழ்ச் சொல் அறியாது பலர் திகைக்கின்றனர். இதோ: சூழ்ச்சி, உசாவல், தேர்ச்சி, நூல், எண்ணல் என ஐந்து சொற்கள் உள்ளனவே அப்பொருளைக் குறிக்க!

"சூழ்ச்சி, உசாவே, தேர்ச்சி, நூல் என
யாப்புற எண்ணல் கிளவி யாகும்."

என்பது நூற்பா. அடுத்து, 'ஒற்றுமை' என்னும் சொல்லுக்குக 'குறிக்கோள்' என்று பொருள் கூறு கிறது திவாகரம்

"ஒற்றுமை குறிக்கோள்."

என்பது நூற்பா. ஒற்றுமைக்கும் குறிக்கோளுக்கும் உள்ள தொடர்பு அறிஞர்களின் ஆராய்ச்சிக் குரிய தாம்.

வரையறுத்தல் என்பதைக் குறிக்கக் கணித்தல், குணித்தல் என்னும் இரு சொற்கள் கூறப்பட்டுள்ளன.

" கணித்தலும், குணித்தலும் வரையறுத்த லாகும்."

என்பது நூற்பா. இப்பாடலின் துணையால் கணிதத்தைப் பற்றிய ஓர் உண்மை புலனாகிறது. உலகில் இசை, இலக்கியம், ஓவியம், சிற்பம், நாடகம், கணிதம், விஞ்ஞானம், முதலிய பல கலைகள் உள்ளன; இவை பள்ளிக்கூடங்களிலும் மாணவர்க்குப் பயிற்றப்படுகின்றன. இவற்றுள், கணிதத்தைத் தவிர மற்ற கலைகளைப் பொறுத்தவரையில், காலப்போக்கில் பல மாறுதல்களும் புதுப்புது ஆராய்ச்சி முடிவுகளும் கண்டுபிடிப்புகளும் தோன்றுகின்றன. எடுத்துக்காட்டாக,—அன்று எழுதிய சில இலக்கியங்களை இன்று பலர் ஏற்றுக்கொள்வதில்லை. அன்று இசைத்த இசையும் நடித்த நாடகமும் இன்று பெரும்பாலோரைக் கவருவதில்லை. ஓவியத்திலும் 'மாடர்ன் ஆர்ட்' (Modern Art) என்ற பெயரில் பல மாறுதல்கள் காணப்படுகின்றன. நில நூலை எடுத்துக் கொண்டாலோ, உலகம் தட்டை என்று அன்று கூறினர்; உருண்டை என்று இன்று கூறுகின்றனர். கதிரவன் (சூரியன்) உலகத்தைச் சுற்றுவதாக அன்று கூறினர்; உலகம் கதிரவனைச் சுற்றுவதாக இன்று கூறுகின்றனர். விஞ்ஞான முடிவுகளோ காலத்துக்குக் காலம் மாறுகின்றன- புதுமை பெறுகின்றன பச்சையரிசியே உடம்புக்கு நல்லது என்று ஒரு நேரத்திலும் புழுங்கலரிசியே நல்லது என்று ஒரு நேரத்திலும், இன்னின்ன பொருட்டுக்களினால் (காரணங்களினால்) இந்தப் பொருள் தீயது என்று ஒருவராலும், அதே பொருள் இன்னின்ன பொருட்டுக்களினால் நல்லது என்று ஒருவராலும் மாறிமாறிக் கூறப்படுகின்றன.

ஆனால் கணிதக் கலை மட்டும் ஒரே நிலையானது; அன்றும் நான்கும் மூன்றும் ஏழுதான் - இன்றும்

நான்கும் மூன்றும் ஏழுதான் - என்றைக்குமே நான்கும் மூன்றும் ஏழேதான்! எவர்க்கும் ஏழெட்டு ஐம்பத்தாறுதான்—எந்த இடத்திலும் ஐம்பத்தாறுதான்—எந்தக் காலத்திலும் ஏழெட்டு ஐம்பத்தாறே தான். எனவே கணிதம் என்பது, மாறுத - திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட ஒரே முடிவுடையது என்பது புலனாகும். ஒரு கணக்கைச் சரியான முறையில் எவர் போட்டாலும் ஒரே விடை வருவது கண்கூடன்றோ? இதனால்தான், கணிதம் என்பது, சரியான—திருத்தமான ஒரு வகை அறிவியல் (Exact Science) ஆகும் என அறிஞர்கள் கூறுகின்றனர். இவ்வாறு சரியாக - திருத்தமாக வரையறுத்தலுக்குக் கணித்தல் என்று பெயராம். கணிப்பது கணிதம். அதாவது திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டதே கணிதம் என்பது புலப்படும். இத்தனை கருத்துக்களையும், 'கணித்தலும் குணித்தலும் வரையறுத்தலாகும்' என்னும் திவாகரப் பாடல் உள்ளடக்கிக்கொண் டிருக்கிறதன்றோ?

அடுத்து, பலவகை வரிப் பெயர்கள் நினைவு கூரத் தக்கனவாம். சிற்றரசர்கள் பேரரசர்க்குக் கட்டும் வரியைக் குறிக்கும் பாடல் வருமாறு:

"அரசிறை, திறையே,
கப்பமும், மிறையும் காட்டும் அதுவே."

சுங்க வரியைக் குறிக்கும் பாடல் வருமாறு:

"உல்கு, சுங்க விறை,
ஆயம், சார்ஙகை அஃதென மொழிப."

குடிமக்கள் அரசர்க்குக் கட்டும் வரியைக் குறிக்கும் பாடல் வருமாறு:—

"காமும், கடனும், கறையும், குடியிறை;
இறுப்பும், வரியும், ஏற்கும் அதற்கே."

அடுத்து, கூத்து (நடனம்-நாட்டிய) வகையைப் பற்றி அறிய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

கூத்தின் பெயர்களாவன :-

" நடமே, நாடகம், கண்ணுள், நட்டம்,
படிகம், ஆடல், தாண்டவம், பரதம்,
ஆறுதல், தூங்கல், வாணி, குரவை,
இலயம், நிலயம், நிருத்தம், கூத்தே ;
நடனம், தூக்கு, நாட்டியம், நட்டணம்,
நடையும் அதற்கே நவிலலு மாகும்."

" கரணம், பித்தம், மலைப்பு, பவுரி,
பிரமரி, வீரட் டானம், குனிப்பே,
உள்ளாவனம், கடகம், எனவே ஒன்பதும்
ஒள்ளிய கூத்தின் விகற்ப மாகும்."

திருமால் ஆடும் கூத்தின் பெயர்களாவன:—

" அல்லியம், குடமாடல், மல்லே, மரக்கால்,
எல்லொளி மாயோன் ஆடலாகும்."

சிவன் ஆடும் கூத்தின் பெயர்களாவன :-

" பாண்டரங்கம், கபாலம், கொடுகொட்டி,
என்றிவை மூன்றும் முக்கண னுடல்."

முருகன் ஆடும் கூத்தின் பெயர்களாவன :—

" கொட்டியும், குடையும், குமரன் ஆடல்."

திருமகள் ஆடும் கூத்து :-

" பரவை என்பது திருமகள் ஆடல்."

துர்க்கை (காளி) ஆடும் கூத்து —

" மரக்கால், கூத்தே, துர்க்கை ஆடல்."

மங்கையர் எழுவர் (சப்த கன்னியர்) ஆடுவது :—

"எழுவர் மங்கையர் ஆடலும் துடியே."

காமன் (மன்மதன்) ஆடும் கூத்து :—

"பேடாடல் காமனது ஆடலாகும்."

கைகோத்து ஆடும் கூத்து:—

"குரவைக் கூத்தே கைகோத் தாடல்."

இருகை முடக்கி ஆடுங் கூத்து :—

"முடக்கிய இருகை பழுப்புடை ஒற்றித்
துடக்கிய நடையது துணங்கை யாகும்."

முருகன் சாமி ஏறி ஆடுங் கூத்து :—

"அணங்கும், வெறியும், கழங்கும், வேலனடல்."

மேலுள்ள பாடல்களினுல், கூத்தைக் குறிக்கும் பெயர்களையும், கூத்தின் வகைகளையும், அவரவர் ஆடும் கூத்துகட்குரிய தனித்தனிப் பெயர்களையும் அறியலாம். இதிலிருந்து தமிழருடைய கூத்துக் கலையின் ஆழமும் அகலமும் உயர்ச்சியும் புகழ்ச்சியும் நன்கு புலனுகுமே!

அடுத்துச் சில சுவையான சொற்களைக் காண்பாம்:

அவிதலைக் குறிக்கும் பாடல் :—

"நதுத்தலும நொதுத்தலும் நுதுத்தலும் அவித்தல்."

இப்பெயர்கள் சுவையாகவும் வேடிக்கையாகவும் உள்ளனவன்றோ? இரண்டு காலடிகளையும் கீழே

பதியவைத்துக் கோழிபோல் குந்திக்கொண்டிருப்பதற்குக் 'குஞ்சித்தல்' என்று பெயராம்.

" குந்திய கால்நிலே குஞ்சித்த லாகும்."

அவமதிப்பாக - இகழ்ச்சியாகச் சிரிப்பதற்கு 'அசி' என்று பெயராம்.

" அசி அவமதிச் சிரிப்பா மென அறைவர்."

இவ்வாறு பலவகைச் செயல்கள் இத் தொகுதியில் பேசப்பட்டுள்ளன.

இன்னார்க்குத்தான் கொடுப்பது, இப்போதுதான் கொடுப்பது, இத்தனை முறைதான் கொடுப்பது, இன்னதுதான் கொடுப்பது, இவ்வளவுதான் கொடுப்பது என்ற வரன்முறை - வரையறை இல்லாமல், அம்பல் சேந்தனைப் போல, எல்லோர்க்கும், எப்போதும், எத்தனை முறையும், எதனையும், எவ்வளவும் கொடுப்பதற்குக் 'கொடை மடம்' என்று பெயராம் – என்று கூறுமுகத்தான், இத்தொகுதியிலும் நன்றியறிதலாகத் திவாகரர் சேந்தனைச் சிறப்பித்துள்ளார் :

" திடமொழி அம்பல் சேந்தனை ஏய்ந்த
கொடைமடம் வரையாது கொடுத்த லாகும்."

என்பது அந்நன்றி யறிவுப் பாடலாகும்.

# 10. ஒலி பற்றிய பெயர்த் தொகுதி

இப்பகுதியில் ஒலி (ஓசை) தொடர்பான பல்வேறு பிரிவுகளின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இதனை இன்னும் நன்கு விளக்க வேண்டும்.

ஒரு மொழி (பாஷை) எனப்படுவது, பல சொற்ருெடர்களால் (வாக்கியங்களால்) பேசப்படுவது. ஒரு சொற்ருெடர் பல சொற்களால் ஆனது. ஒரு சொல் பல எழுத்துக்களால் ஆனது. ஓர் எழுத்தோ பல ஒலி அணுக்களால் ஆனது. அதாவது, அணு அணுவான பல ஒலிகளின் திரளே ஓர் எழுத்தாகும் எடுத்துக் காட்டாக, 'ஆ' என்னும் ஓர் எழுத்தை ஒலிக்கச் சிறிது சிறிதாக—அணு அணுவாக ஓசையை நீட்டிக்கொண்டே செல்லவேண்டும். எனவே, பல ஒலி யணுக்களால் ஆனது எழுத்து; பல எழுத்துக் களாலானது சொல்; பல சொற்களாலானது சொற்ருெடர்; பல சொற்ருெடர்களைக் கொண்டது ஒரு மொழி—என்பது புலனுகும். இதனைப் பவணந்தி முனிவர் தமது நன்னூலில்,

> "மொழிமுதற் காரணமாம்,
> அணுத்திரள் ஒலி எழுத்து."

எனச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார். இது 'காரண காரிய முறை' (Logical Method) எனப் படும்.

எனவே, ஒலி பற்றிய பெயர்த் தொகுதியில், ஒலி பற்றிய விவரங்களும், ஒலியாலான எழுத

திலக்கணமும், எழுத்தாலான சொல்லிலக்கணமும், சொல்லாலான பொருள் இலக்கணமும், பொருள் அமைந்த செய்யுள் இலக்கணமும், செய்யுளோடு சேர்ந்து வரும் இசையிலக்கணமும் சொல்லப்பட்டிருப்பதில் வியப்பில்லை. பொதுவாக நிகண்டு நூலை ஒருவகை 'மொழி நூல்' என்று கூறலாமெனின், அதிலும் குறிப்பாக இந்த ஒலி பற்றிய பெயர்த் தொகுதியை ஒருவகை 'மொழி விஞ்ஞானம்' என்றே கூறிவிடலாம்.

இனி இத்தொகுதியில் உள்ள சில சிறந்த சொல்லாட்சிகளையும் கருத்து விளக்கங்களையும் கண்டு சுவைப்போம் :—

சொல்லுதல் என்பதைக் குறிக்கும் சொற்களஞ்சியம் வருமாறு :—

" விரித்தல், கதைத்தல், உரைத்தல், கூறல்,
தெரித்தல், ஆடல், நொடித்தல், நவில்லல்,
சாற்றல், பணித்தல், மொழிதல், வலித்திடல்,
ஏற்ற மூந்நான்கும் சொல்லுதற் கிசையும்."

" பகர்தல், செப்பல், இயம்பல், பரவல்,
குயிறல், இறுத்தல், கூறல், புகறல்,
கட்டுரை, விளம்பல், கரைதல், ஓதல்,
சொற்றல், வழங்கல், வசனம், காதை,
பேசல், பேச்சு, கிளப்பே, அறைதல்,
இசைப்பு, தேர்தல், மிழற்றல், வாணி,
அசைப்பு, என்றின்னவை சொல்லென அறைவர் ;
குயில், வினா, எதிர்ப்பு, கிர், நுவல், பாணி,
இயம், வாக்கு, என்பவும் சொல்லின்பால."

சொல்லைப் பற்றிய சொல் வளங்களை யறிந்து வியந்தோம். மேலும் தொடருவோம் : பலமுறை

சொல்லுதலுக்கு 'மீதுரை' என்று பெயராம். விடாது பேசுதலுக்குப் 'பிதற்றுதல்' என்று பெயராம்.

"மீதுரை பல்கால் விளம்புத லாகும்"

"பிதற்றுதல் விடாது பேசுத லாகும்."

ஒருவரிடம் உள்ள குறையைச் சுட்டி அவர் இல்லாத விடத்தில் புறங்கூறுதலுக்குக் 'கொடுவாய்' என்று பெயராம். ஒருவரிடம் இல்லாத குறையைக் கற்பனையாகப் புனைந்து அவர் இல்லாத விடத்தில் புறங் கூறுதலுக்குக் 'கொண்டியம்', 'தொடுப்பு' என்று பெயர்களாம்.

"கொடுவாய் என்பது புறங்கூற லாகும்."

"கொண்டியம் தொடுப்பு வெறும்புறங் கூறல்."

சிலரறிந்து பழித்தல் அம்பல் ஆகும்; பலரறிந்து பழித்தல் அலர் எனப்படும்:

"அம்பல் சிலரறிந்து தம்முட் புறங்கூறல்."

"அலரே பலரும் அறிந்து அலர் தூற்றல்."

ஒருவரது வளர்ச்சியைக் கருதி, அவரது குறையைக் கண்டித்துப் பேசுவதைக் குறிக்கும் சொற்களாவன :—

"கழறலும் இடித்தலும் உறுதிக் கட்டுரை."

குழந்தையின் பொருள் நிரம்பாத மெல்லிய மழலைப் பேச்சைக் குறிக்கும் பெயர்களாவன :—

"நிழற்றலும், மிழற்றலும், நிரம்பா மென்சொல்;
மழலை, கொஞ்சல், குதலை, உல்லாபம்,
மிழலை எனவும் விளம்பும் அதற்கே."

ஒன்றும் பேசாமல்—செய்யாமல் சும்மா இருத்தலுக்கு வாளா இருத்தல் என்பது பெயர்:

"வாளா என்கிளவி பேசா என்ருகும்."

போருக்கு—அதாவது, போட்டிக்கு—விவாதத்திற்கு அழைப்பது அறைகூவல் ஆகும்.

"அறை கூவல் பொர அழைத்தல்."

கல்வியையும் கற்றலையும் குறிக்கும் பெயர்கள் கருதத் தக்கன:

"உறுதியும், சால்பும், ஓதியும், அறிவும்,
கலையும், கேள்வியும், கல்வி யாகும்.
வித்தை, சாலம், விஞ்சை, ஊதியம்,
மற்றிந் நான்கும் கல்வியின் நாமம்."

"நவிலல், கெழுயல், பயிலல், கற்றல்."

உறுதி (நன்மை), சால்பு (பெருந்தன்மை), அறிவு, ஊதியம் என்னும் பெயர்கள் கல்விக்கு இருப்பதை ஊன்றி நோக்கின் கல்வியின் பயனும் சிறப்பும் புலப்படும். கலைகளைக் கற்பதும் கல்வியே என்பது ஈண்டு கருதத் தக்கது. "கேள்வியும் கல்வியாகும்" என்ற தொடரிலிருந்து, கல்வியறிவும் பட்டறிவும் நிறைந்த பெரியோர்களின் சொற்பொழிவு விளக்கங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வதும் கல்வியாகும் என்பது புலனுகும். தாமாகப் படிக்க வாய்ப்பில்லாதவர்கள் கேட்டாவது தெரிந்து கொள்ளலாமே! 'கற்றிலனுயினும் கேட்க' என்பது வள்ளுவர் வாய்மொழியன்ருே!

'இலக்கியம்' என்னும் சொல்லுக்கு என்னென்னவோ விளக்கங்கள் கூறப்படுகின்றன. மேலை

காட்டு ஆசிரியர்களின் கருத்துக்களையும் இழைத்துக் குழைத்துக் கூறுவதும் உண்டு. எடுத்துக் காட்டாகச் சில காண்பாம் :

(1) 'மொழியின் வாயிலாக மக்களின் வாழ்க்கை முறையினை எடுத்து விளக்குவதே இலக்கியம்'—(Literature is thus fundamentally an expression of life through the medium of language) என்று ஃஅட்சன் (Hudson) என்னும் அறிஞர் கூறியுள்ளார்.

(2) 'தலை சிறந்த கருத்துக்கள் பதிவு செய்யப் பட்டதே இலக்கியம்' (Literature is a record of best thoughts) என்று எமர்சன் (Emerson) கூறியுள் ளார்.

(3) 'மக்களிடம் நற்பண்பை உருவாக்க வல்ல சிறந்த கருவிகளுள் இலக்கியமும் ஒன்று' (Literature is one of the most powerful instruments for forming character) என்று வைகவுன்ட் மார்லி (Viscount Morley) என்னும் பெரியார் கூறியுள்ளார்.

இவ்வாறே இலக்கியம் பற்றிப் பலரும் பலவாறு கூறிச் செல்கின்றனர். இது குறித்துத் திவாகரம் கூறுவதாவது :—

"இலக்கியம் : உதாரணம், எடுத்துக்காட்டல்."

என்பது நூற்பா. ஓர் உயர்ந்த கருத்தை—அறிவுரையை—நீதியை—படிப்பினையைத் தக்க உதாரணத்தின் வாயிலாக—எடுத்துக் காட்டின் மூலமாக விளக்குவதே இலக்கியம்; இதுதான் திவாகர நூற்பாவின் இலக்கிய விளக்கம். அந்த எடுத்துக் காட்டு

(உதாரணம்) வரலாருகவும் இருக்கலாம்—அல்லது—வாழ்க்கை நிகழ்ச்சியாகவும் இருக்கலாம். சிலப்பதிகாரம் போன்றவை வரலாற்று இலக்கியங்கள். திருக்குறள் போன்றவை வாழ்க்கை நிகழ்ச்சி இலக்கியங்கள்.

இப்போது தமிழ் மொழியில் எத்தனையோ பாவகைகளைக் காண்கின்றோம். ஆனால் பழங் காலத்தில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் வகைகளே முறையே முதன்மை பெற்றிருந்தன. இவற்றுள்ளும் வெண்பாவே முற்பட்டதும் முதன்மை 'உடையதும் ஆகும். இதனைத் தமிழ் மொழி வரலாறும் தமிழ் இலக்கிய வரலாறும் அறிந்தவர்கள் நன்குணர்வர். மேலும்,

"முதற்பா வெண்பா."

என்னும் திவாகர நூற்பாவாலும் இக்கருத்து உறுதி பெறும். இதனால், பாக்களுள் குறள் வெண்பாவைத் தேர்ந்தெடுத்த திருவள்ளுவரது உயர்ச்சியும் திருக்குறளின் மாட்சியும் புலப்படுமே.

கணக்கு, கணக்காயர் என்னும்' சொற்களைப் பற்றி முன் ஓரிடத்தில் நாம் ஆராய்ந்துள்ளோம். எண்ணூலான கணிதத்தை மட்டுமே இக்காலத்தில் கணக்கு என்னும் சொல்லால் மக்கள் குறிக்கின்றனர். அக்காலத்திலோ, எண்ணூலான கணிதம் எழுத்தாலான இலக்கியம் ஆகிய இரண்டு பிரிவுகளையும் கணக்கு என்னும் சொல்லால் அழைத்தனர். நற்றிணை முதலிய பத்தெட்டுச் சங்க இலக்கியங்களை 'மேற் கணக்கு' என்றும், நாலடியார் முதலிய பதினெட்டுச் சங்க இலக்கியங்களைக் 'கீழ்க் கணக்கு'

என்றும், தமிழ் எழுத்துக்களைத் 'தமிழ் நெடுங் கணக்கு' என்றும் அழைப்பது இன்றும் வழக்கத்தில் உள்ளதே! இவ்வளவு கருத்துக்களையும் துணிந்து கூறுவதற்கு,

" எழுத்தும் எண்ணும் கணக்கு எனப்படுமே."

என்னும் திவாகர நூற்பாவும் துணைக்கு வருமே! அடுத்து, ஏழு இசைகளின் பெயர்கள் வருமாறு:—

" குரலே, துத்தம், கைக்கிளை, உழையே,
இளியே, விளரி, தாரம், என்றிவை
எழுவகை இசைக்கும் எய்தும் பெயரே."

ஏழு இசைகளுக்கு உரியனவாக—ச, ரி, க, ம, ப, த, நி,—என்னும் ஏழு எழுத்துக்களும் வழங்கப்பட்டு வருகின்றன இவை வடமொழி முறையை ஒட்டியவை. இவ்வெழுத்துக்களுக்கு ஈடாக—ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ—என்னும் ஏழு தமிழ் எழுத்துக்களையும் திவாகரம் பரிந்துரைக்கிறது :

" ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, எனும்
இவ்வேழ் எழுத்தும் ஏழிசைக் குரிய."

என்பது நூற்பா. தமிழிசையுலகம் இதனை ஊன்றி ஆராய்ந்து உண்மை காணவேண்டும்.

இறுதியாகத் திவாகரத்தில், பொதுவாக ஒலியைக் குறிக்க இருபத்திரண்டு பெயர்களும், ஒலித்தலைக் குறிக்க முப்பத்தேழு பெயர்களும், ஆரவாரத்தைக் குறிக்க இருபத்தொரு பெயர்களும் கூறப்பட்டுள்ளன. மேலும், சில ஒலி வகைகள் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளன. அவை வருமாறு:—

எழுத்து எழுத்தாகப் பிரித்து உணரமுடியாத ஓசையைக் குறிக்கும் பெயர்களாவன :—

" பிளிறலும், குளிரலும், பிறற்றலும், சிரற்றலும்,
மருளலும், பயிறலும், குரைத்தலும், கனைத்தலும்,
முழைத்தலும், அகவலும், எழுத்திலா ஓசை."

பல வகையான ஒலிகள் கலந்த கலப்போசையைக் குறிக்கும் பெயர்களாவன :—

" தமரம், பூசல், ஆர்ப்பு, கர்ச்சனை,
குமுறல், உலம்பல், கோடணை, கோலா
கலமே, தெழித்தல், கலகம், ஆகுலமோடு,
ஊறுதல், முந்நான்கு ஒன்றலாப் பேரொலி."

ஒலிக் குறிப்புக்களை அறிவிக்கும் பெயர்களாவன :—

" இம்மெனல், கல்லெனல், இழுமெனல், வல்லெனல்,
பொம்மெனல், ஒல்லெனல், பொள்ளெனல்,
ஞெள்ளெனல் அன்ன அநுகரண ஓசையாகும் ;
கொம்மெனல், விடேலெனல், நெரேலெனல்,
முகேரெனல், அம்மெனல்,
சரேலெனல், அநுகரண ஓசை."

உலக வழக்கில், சரேலெனப் பாய்ந்தான் ; படீர் என உடைத்தான் என்றெல்லாம் சொல்லுகின்றோம் அல்லவா? இப் பாட்டில் கூறப்பட்டிருப்பவை யாவும் இவ்வினத்தைச் சேர்ந்தவையே.

இரட்டைக் கிளவிகளாக வரும் ஒலிப் பெயர்களாவன :—

" படபடெனல், களகளெனல், பதபதெனல்,
கொளகொளெனல், மொடு மொடெனல்,
திடுதிடெனல், மொகமொகெனல், கலகலெனல்
நெடுநெடெனல், கடகடெனல், நிறையுபயவோசை."

(உபயம்=இரண்டு ; உபய ஓசை=இரட்டை ஒலி)

மேலுள்ள ஒலி பற்றிய பாடல்களைக் கொண்டு, ஒரு நிகண்டு நூல், மொழித் துறையில் எத்துணை தொலைவு சென்று செயலாற்றி யிருக்கிறது என்பதை நுனித்துணரலாம்.

மேலும் இத் தொகுதியில், எழுத்திலக்கணப் பகுதிகளும், சொல்லிலக்கணப் பகுதிகளும், பொருளிலக்கணப் பகுதிகளும், யாப்பிலக்கணப் பகுதிகளும், இசையிலக்கணப் பகுதிகளும் பரவலாக விளக்கப்பட்டிருப்பதை நூலினுட் சென்று காண்க.

# 11. ஒரு சொல் பல் பொருள் பெயர்த் தொகுதி

கடந்த பத்துத் தொகுதிகளும் ஒரு பொருள் பல் பெயர்த் தொகுதிகளாகும். அதாவது, ஒவ்வொரு பொருளுக்கும் எத்தனை பெயர்களுண்டோ அத்தனை பெயர்களும் கொடுக்கப்பட்டன இந்தப் பதினோராவது தொகுதியோ அவற்றினும் வேறுபட்டது என்பது முன்னரே அறிந்த செய்தி. அதாவது, நாம் இந்தக் காலத்தில் பயன்படுத்தும் அகராதியைப் (Dictionary) போல, ஒரு சொல்லுக்கு எத்தனை பொருள்கள் (அர்த்தங்கள்) உண்டோ அத்தனை பொருள்களும் கொடுக்கப் பட்டுள்ள பகுதியாகும் இது. அதனால் தான், 'ஒரு சொல் பல்பொருள் பெயர்த்தொகுதி' என்னும் தலைப்பு இப்பகுதிக்குச் சூட்டப்பட்டுள்ளது.

இத்தொகுதியில் முந்நூற்று எழுபத்தேழு சொற்களுக்குப் பொருள் தரப்பட்டுள்ளது. இவற்றுள், ஒரே பொருளுடைய சொல் எதுவும் இல்லை. குறைந்தது இரண்டு பொருள்களாயினும் உடைய சொற்களே உள்ளன இருபத்து மூன்று பொருள்கள் (அர்த்தங்கள்) உடைய சொல்லும் இவற்றுள் உண்டு.

நாம் இப்போது பயன்படுத்தி வரும் அகராதிகளில் ஆயிரக்கணக்கான சொற்கள் உள்ளனவே; ஆனால் இத்தொகுதியில் முந்நூற்று எழுபத்தேழு சொற்கள் தாமே உள்ளன; மற்ற சொற்கட்கெல்லாம்

பொருள் தரவில்லையே - என்று கேட்கத் தோன்றும். இப் பதினோராந் தொகுதியில் நேர்முகமாக முந்நூற்று எழுபத்தேழு சொற்கட்குப் பொருள் கூறப்பட்டிருப் பினும், மற்ற பத்துத் தொகுதிகளில் மறைமுகமாகப் பல்லாயிரக் கணக்கான (9500) சொற்கட்குப் பொருள் கூறப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக, — முதல் தொகுதியில் முதல் பாவில் சிவனைக் குறிப்பனவாக அறுபத்து மூன்று பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அப்படியென்றால், அந்த அறுபத்து மூன்று பெயர் கட்கும் சிவன் என்று பொருள் (அர்த்தம்) எழுதி விட்டதாகத்தானே பொருள் கொள்ளவேண்டும்? இவ்வாறே எல்லாத் தொகுதிகளிலும் உள்ள எல்லாச் சொற்களுமே பொருள் விளக்கம் செய்யப்பட்டிருப் பதாகக் கொள்ளவேண்டும்.

ஏன், இந்தத் தொகுதியிலுங்கூட, முந்நூற்று எழுபத்தேழு சொற்களின் பொருள்களாகப் பல சொற் கள் தரப்பட்டுள்ளன அல்லவா? அந்தப் பல சொற் களின் பொருள்களாக இந்த முந்நூற்று எழுபத்தேழு சொற்களையும் கொள்ளவேண்டும். இவ்வாறாக இந்தத் தொகுதியிலும் எண்ணற்ற சொற்கள் இடம் பெற்றிருத்தலை அறியலாம்.

இத் தொகுதியினும் இக் கால அகராதிகளில் சொற்கள் மிக்கிருப்பதற்குத் தக்க பொருட்டுகள் (காரணங்கள்) வேறு சிலவும் உண்டு. அவை யாவன :— ஒன்று: பேச்சு வழக்கில் உள்ள எல்லா எளிய சொற்களும் இக்கால அகராதியில் இடம் பெற்றுள்ளன. அங்ஙனமின்றி ஓரளவு அரிய சொற்கள் மட்டுமே நிகண்டில் இடம் பெற்றுள்ளன. எளிய சொற்கட்குப் பொருள் எழுதிக்கொண்டு கிடக்க வேண்டியதில்லை என்பது நிகண்டு நூலாரின் கருத்தா யிருக்கலாம்.

இரண்டு : இக்காலத்தில் கலைகள் பெருகிப் பல்கி யுள்ளமையால், இருக்கும் தமிழ்ச் சொற்களைக் கொண்டே மின்சாரம், புகைவண்டி முதலிய கலைத் துறைச் சொற்கள் பல தமிழில் புதியனவாகப் படைக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் இக்கால அகராதிகளில் இடம் பிடித்துக் கொண்டுள்ளன.

மூன்று : பிற்காலத்தில் பல மொழிகளோடு தொடர்பு கொள்ளவேண்டி நேர்ந்ததால், அவை சார்பான பல சொற்கள் இக்கால அகராதிகளில் ஏறி யுள்ளன.

இன்னும் பல்வேறு சமயங்கள் - நாகரிகங்கள் தொடர்பாகப் பல சொற்கள் இடம் பெற்றன. இவ் வாறாகப் பலவகையிலும் இக்கால அகராதிகள் நிகண்டுகளைவிட உருவத்தில் உப்பிவிட்டன.

இத்தொகுதியிலுள்ள முந்நூற்று எழுபத்தேழு சொற்களும் ஆதியிற் பொருள், அந்தத்துப் பொருள், என்னும் இரு பிரிவின் கீழ் அகரவரிசையில் பிற்காலத்த வரால் அடுக்கி அமைக்கப்பட்டுள்ளன என்று முன்னே ரிடத்தில் கூறியுள்ள செய்தியை ஈண்டு மீண்டும் நினைவு படுத்திக் கொள்ளல் நன்று.

இனி இத்தொகுதியில் உள்ள சில சொற்பொருள் விளக்கங்களைக் காண்பாம் :

அடுதல் என்னும் சொல்லுக்குச் சமைத்தல், கொல்லுதல் (கோறல்) என்னும் இரு பொருட்கள் கூறப்பட்டுள்ளன.

"அடுதல் சமைத்தலும், கோறலும் ஆகும்."

என்பது நூற்பா. சமைத்தலுக்கும் கொல்லுதலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்னும் குறிப்பு இந் நூற்பாவால் புலனுகலாம். இதனைச் சிறிது ஆய் வாம் :

ஓர் உயிர் உணவு உண்கிறது என்ருல் இன்னென் றைக் கொன்றுவிட்டது என்றுதான் அதற்குப் பொருள். பெரும்பாலான அஃறிணை உயிர்கள் புலால் உண்ணிகளாகவே (மாமிச பட்சணிகளாகவே) உள்ளன. அதாவது ஒன்றையொன்று கொன்றே உண்ணுகின்றன. மரக்கறி உண்ணிகள் (சாகப் பட்சணிகள்) என்று அழைக்கப்படுகிற ஆடு மாடு முதலியவை செடி கொடிகளை அப்படியே இழுத்துப் பிடுங்கி மெல்லுகின்றன. இஃதும் உயிர்க் கொலையே. மரஞ்செடி கொடிகளும் உயிர் உடையனவேயாம்.

மக்களையே எடுத்துக்கொள்வோமே. மிகப் பழங்காலத்தில் மக்கள் பிற உயிர்களைக் கொன்றே தின்ருர்கள். அண்மைக்காலம் வரையுங்கூட மக்களைக் கொன்று தின்னும் மக்களும் இருந்தனர். இன்றுங் கூட உலகில் புலால் புசிப்பவரே (Non-Vegetarians) மிகப் பெரும்பான்மையர். மரக்கறி உணவினரோ (Vegetarians) மிகச் சிறுபான்மையரே. ஒரு நாளைக்குக் கூட - ஒரு வேளைக்குக் கூட மரக்கறி மட்டும் உண்ண முடியாதவராய், நாடோறும் - வேளை தோறும் புலால் கலந்தே புசிப்பவர் இன்றும் பலர் உளர். மரக்கறி உணவிலுங்கூட உயிர்க் கொலை பரவலாக உள்ளது. நாம் எத்தனையோ நெற்களை ஒரு வேளை உணவாக உண்ணுகிருேம். அத்தனை நெற்களும் அத்தனை உயிர்கள். நாம் உண்ணும் அவரை, துவரை, உளுந்து

கடலை முதலிய பயறுவகைகள் அனைத்தும் உயிர்களே. திருவிழா நாட்களில் சுண்டல் செய்வதற்காக அண்டா நிறையக் கடலைகளைக் கொட்டி வேகவைக் கிறோமே — அப்போது உள்ளே கொதிக்கும் ஒலி கேட் கிறதே - அது என்ன ஒலி தெரியுமா? 'ஐயையோ! எங்களை அடாத முறையில் கொல்கின்றீர்களே! என்று ஆயிரக்கணக்கான கடலைகள் அலறி ஓலமிடும் ஒலி தான் அது. நாம் உண்ணும் தானிய வகைகளும் பயறு வகைகளும். நிலத்தில் விதைத்தால் முளைத்துப் புதுவாழ்வு பெறக்கூடிய புத்துயிர்களே. நாம் புசிக் கும் காய்கனிகளிலுள்ள விதைகளும் கொட்டைகளுங் கூட அத்தகையனவே. ஆனால் எல்லாவற்றையும் நாம் உள்ளே தள்ளிச் செரிக்கச் செய்து விடுகிறோம்.

இதிலிருந்து, உணவு சமைத்தல் என்றால், உயிர் களைக் கொல்லுதல்—உயிர்களைக் கொன்று பதம் செய் தல் என்று பொருள் கொள்ள வழியிருக்கிறது. அந்தக் காலத்தில் புலாலையும் சரி—மரக்கறியையும் சரி மக்கள் பச்சையாகவே உண்டார்கள்; இந்தக் காலத் தில் நாம் வேகவைத்து உண்ணுகிறோம்—இதுதான் வேற்றுமை.

சமையல் வேலையின் தொடக்க நிகழ்ச்சி கொலைச் செயலே—அதாவது—ஆட்டையோ, கோழியையோ, மீனையோ, கூலங்களையோ (தானியங்களையோ) பயறு களையோ கொல்லத் தொடங்கியபோதே சமையல் கலையும் தொடங்கிவிட்டது.

பண்டைக் காலத்தில் முற்றும் துறந்த முனிவர் கள்—கொல்லா நோன்பிகள், தாமாக உதிர்ந்த சருகு களையும், தாமாக விழுந்த கனிகளின் (விதைகள்—

கொட்டைகள் நீங்கிய) தசைப் பகுதிகளையும் மட்டுமே உண்டு வந்ததில் உள்ள மறை பொருள் (இரகசியம்) யாது? மக்கள் கொள்ளும் நடைமுறை உணவில் கொலைச் செயல் அடங்கியுள்ளது என்னும் உண்மையை அவர்கள் உணர்ந்தமையினாலேயே, தாமாக உதிர்ந்து மீண்டும் முளைக்காத பகுதிகளை மட்டும் உண்டு வந்தனர்.

இவ்வளவு கருத்துக்களையும் நினைவு செய்து கொள்ள, 'அடுதல் சமைத்தலும் கோறலும் ஆகும்' என்னும் நூற்பா உதவி செய்கிறதல்லவா? அடுப்பு, அடுக்களை (அடுப்பங்கரை) அடிசில் (உணவு) ஆகிய சொற்கள் அடுதல் என்னும் சொல்லை அடிப்படையாகக் கொண்டனவே என்பதும் ஈண்டு நினைவு கூரத் தக்கது.

அடுத்து, கடி என்னும் சொல்லுக்குப் பன்னிரண்டு பொருள்கள் கூறப்பட்டிருப்பது கருதத் தக்கது அவையாவன:

"கடியென் கிளவி, காப்பே, கூர்மை,
விரையே, விளக்கம், அச்சம், சிறப்பே,
வரைவே, மிகுதி, புதுமை, தோற்றம்,
மெய்படத் தோன்றும் பொருட்டாகும்மே;
ஐயமும், கரிப்பும், ஆகலும் உரித்தே."

எனபது நூற்பா. இங்கிகண்டுப் பொருள்களைப் பார்த்தே இக்கால அகராதியினர் சொற்பொருள் விளக்கம் செய்துள்ளனர்.

படித்துத் தெரிந்து கொள்வது மட்டும்தான் கல்வி என்பதில்லை. கேட்டுத் தெரிந்து கொள்வதும் கல்விதான். கேள்வி என்னும் சொல்லுக்கு, கேட்கும்

காது என்னும் பொருளோடு கல்வி என்னும் பொருளும் திவாகரத்தில் கூறப்பட்டுள்ளது :

**“ கேள்வி கல்வியும் செவியும் கிளக்கும்.”**

என்பது நூற்பா ‘கற்றிலனுயினும் கேட்க’ என்னும் திருக்குறள் பகுதியும், ‘கற்றல் கேட்டல் உடையார் பெரியார்’ என்னும் ஞானசம்பந்தரின் தேவாரப் பகுதியும் ஈண்டு ஒப்பு நோக்கற்பாலன. கல்வி உளநூல் (Educational Psychology) வளர்ச்சி பெற்றுள்ள இக்காலத்தில், படித்துத் தெரிந்து கொள்வதோடு, கேட்டுத் தெரிந்து கொள்ளுதல்—பார்த்துத் தெரிந்து கொள்ளுதல்—தொட்டுத் தெரிந்து கொள்ளுதல்—மோந்து தெரிந்து கொள்ளுதல்—சுவைத்துத் தெரிந்து கொள்ளுதல் ஆகிய ஐம்புலப் (Sense Training) பயிற்சியும், செய்து (Learning By Doing) தெரிந்து கொள்ளுதல் ஆகிய இயக்கப் பொறிப் (Kinaesthetic) பயிற்சியுங்கூடக் கல்வியாகக் கருதப்படுவதும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

நாம் அரசியல் (Politics) என்று சொல்கிறோமே— அதைக் குறிக்கக் கொற்றம் என்னும் அழகிய தமிழ்ச் சொல்லும் அக்காலத்தில் வழங்கப்பட்டது என்பதனை

**“ கொற்றம் அரசியலும் வெற்றியும் ஆகும்.”**

என்னும் நூற்பாவால் அறியலாம்.

பெண்கள் காதில் அணிந்து கொள்ளும் அணிகலனுக்குக் ‘கம்மல்’ என்ற பெயர் உண்டு. இதனை இக்காலத்தினர் ‘தோடு’ என அழைக்கின்றனர். இதனையே சற்று முன்காலம் வரைக்கும் ‘ஓலை’ என்று அழைத்தனர். இன்றும் சிலவிடங்களில் சிலர் ஓலை என்றே அழைக்கின்றனர். ஆயினும், தோடு என

அழைப்பதே இன்று நாகரிகமாகக் கருதப்படுகிறது. இதனையே இலக்கியப் புலவர்கள் 'குழை' என அன்றும் அழைத்தனர்—இன்றும் அழைக்கின்றனர். ஓலை, குழை, தோடு என்னும் பெயர்கள் நமக்கு அறிவிக்கும் மறைபொருள் (இரகசியம்) யாது?

மிகப் பழங்காலத்து மக்கள் வெள்ளி, பொன் முதலியவற்றால் நகை செய்து காதுகளில் அணிந்து கொள்ளவில்லை. இயற்கையாகக் கிடைத்த பூக்கள், பூவிதழ்கள், தளிர்கள், தென்னையோலை-பனையோலைகள் முதலியவற்றையே காதுகளில் அணிகலன்களாகச் செருகி மகிழ்ந்தனர். இன்றும் சிலர் மலர்களைக் காதில் செருகிக் கொள்வதைக் காணலாம். இன்றும் சிலர் தென்னையோலை பனையோலைகளைச் சுருட்டிக் காதுத்துளையில் பதித்துக் கொள்வதைப் பார்க்கலாம்.

இவ்வாறு மலர்களையும் இதழ்களையும் தளிர்களையும் அணிந்துவந்த மக்கள், அவை உடனுக்குடன் காய்ந்து கருகிப் போவதால் அடிக்கடி வேறு மாற்ற வேண்டியிருப்பதில் உள்ள தொல்லையை நீக்குவதற்காக, அவை போலவே நிலையாகப் பொன், வெள்ளி முதலியவற்றால் நகைகள் செய்து அணியத் தொடங்கினர். அப்போதும் சரி—இப்போதும் சரி—பழைய பெயர்களை விடவில்லை. மிக்க விலை மதிப்புடைய அந்த அணிகலன்களை ஓலை என்றும், தளிர் என்னும் பொருளுடைய குழை என்றும், இதழ்—ஓலை என்னும் பொருளுடையதோடு என்றும் இந்நாள்வரை அழைத்து வருகின்றனர். இவ்வளவு கருத்துக்களையும்

"குழையே, குண்டலம், தவிர், சேறும் ஆகும்."

"தோடே, தொகுதியும், பனையிதழ் போல்பவும்,
பூவின் இதழும் புகலும் கிளவி."

என்னும் திவாகர நூற்பாக்களால் உணரலாம்.

இதிலிருந்து, இப்போது பெண்கள் அணிந்து கொள்ளும் அணிகலன்களின் மதிப்பு எத்தகையது என்பதும் புலனாகலாம். அதாவது,—உண்மையான பூக்களுக்குப் பதிலாக இப்போது பல வண்ணக் காகிதப் பூக்கள் நாட்டில் நிறைய நடமாடுகின்றன. இவை வாடா மலர்களாய் மக்களையும் இடங்களையும் ஒப்பனை செய்கின்றன. இருப்பினும் இவற்றிற்கு உண்மையான மலர்களின் மதிப்போ தகுதியோ இல்லையன்றோ? உண்மையான ஓலை, குழை, தோடு இவற்றிற்குப் பதிலாக, பொன், வெள்ளி முதலியவற்றால் செய்த ஓலை, குழை, தோடு இவற்றிற்குள்ள மதிப்பும் காகிதப் பூக்களின் மதிப்புப் போன்றதே!

ஞமலி, ஞாலம் என்பனபோல் ஞகர வரிசையில் தொடங்கும் சொற்கள் மொழியில் மிகவும் குறைவே. அவ்வரிசையில் 'ஞெ' என்னும் எழுத்தில் தொடங்கும் 'ஞெள்ளல்' என்னும் சொல்லுக்கு நிகண்டில் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளமை புதிய கவர்ச்சியளிக்கிறது. அது வருமாறு:

(ஆதியிற் பொருள் பகுதி)

"ஞெள்ளல், தெருவே, மேன்மையும், நிகழ்த்தும்."

(அந்தத்துப் பொருள் பகுதி)

"சோர்வு, மிகுதல், உடன்படல், படுகர்,
நாலினோடு ஒலியும், தெருவும், ஞெள்ளல்."

என்பன நூற்பாக்கள்.

பண்டைக் காலத்தில் தமிழகத்தில் கணிதம் எவ்வளவு வளர்ச்சியுற்றிருந்தது என்பதனை

" நூலே, எண்ணும், பனுவலும் ஆகும் ".

என்னும் நூற்பாவால் அறியலாம். நூல் என்றால், எண் எனப்படும் கணிதக் கலை நினைவுக்கு வருமளவுக்கு அன்று கணிதக் கலை தமிழில் வளர்ந்திருந்தது. ஆனால் இன்று...? எல்லாவற்றையும் இழந்து, தமிழில் ஒன்றும் இல்லை என்ற குறைச் சொல்லைக் காதால் கேட்டுப் பிறர் கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

'மா' என்னும் ஓரெழுத்து மொழிக்கு ஆறு பொருள்கள் கூறப்பட்டுள்ளன :

" மாவே, பெருமையும், கருமையும், சூதமும்,
மேவிய நாற்கால் உடையவும், வண்டும்,
பூவுறை திரு, என ஆறையும் பொருந்தும்."

[சூதம்=மாமரம்; நாற்கால் உடைய=விலங்குகள்; பூஉறைதிரு=தாமரைப் பூவில் வதியும் திருமகள் ]

அரி என்னும் சொல்லுக்கு உரிய இருபத்து மூன்று பொருள்களும் அறியத்தக்கன :

" கண், வரி, கடல், பொன், கிண்கிணிப் பெய்பரல்,
பொன்னிறம், குதிரை, தவளை, குரங்கு,
பகை, வாள், சயனம், வலி, வண்டு, வெம்புகை,
எனப் பதினைந்தும் அரியெனப் புகல்ப.
சிங்கம், திருமால், திகிரி, இரவி,
இந்திரன், காற்றே, யமனே, அங்கி, என்று
அங்கண் வடமொழிச் சிதைவின் அரியாகும்."

என்பது நூற்பா. அரி என்னும் சொல் தற்செயலாகத் தமிழ் மொழியிலும் உள்ளது; சிறு ஒலி வேறுபாட்

டுடன் வடமொழியிலும் உள்ளது. அரி என்னும் வட மொழிச் சொல்லின் பொருள்கள் தமிழ் மொழியிலும் கலந்து பலரால் பயன்படுத்தப்படுகின்றன. மேலுள்ள இருபத்து மூன்று பொருள்களுள் முதல் பதினைந்தும் அரி என்னும் தமிழ்ச் சொல்லுக்கு உரியன; இறுதி எட்டும் அரி என்னும் வடமொழிச் சொல்லுக்கு உரியன. இவ்வுண்மை உணராமல், அரி என்னும் சொல் வட மொழியிலிருந்துதான் தமிழ் மொழிக்கு வந்தது என்று யாரும் உளறுகக்கூடாது.

அரி என்னும் சொல் தமிழ் இலக்கியங்களில் பல விடங்களில் பல பொருள்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும். நிகண்டு நூற்பாக்களை நெட்டுரு செய்திருப்பவர்கள் முட்டின்றிப் பொருள் புரிந்து கொள்ள முடியுமன்றோ? நிகண்டின் பயன் இப்போது புரியுமே!

கிழி என்னும் சொற்கு மூன்று பொருள்கள் கூறப்பட்டுள்ளன:

"எழுது படமும் இருநிதிப் பொதியும்
கிழிபடு துகிலும் கிழியெனற்கு உரிய."

எழுது படம் என்றால் ஓவியம். இருநிதிப் பொதி என்றால் துணியில் கட்டிய பொன் மூட்டை அதாவது பொற்கிழி. கிழிபடுதுகில் என்றால் பெரிய துணியிலிருந்து கிழிக்கப்பட்ட ஒரு பகுதி.

ஈண்டு எழுதுபடம் என்னும் பொருள் கவனிக்கத் தக்கது. சுவரிலும் பலகையிலும் துணியிலும் தாளிலும் ஓவியம் தீட்டப்படுகிறது. பெரிய துணியிலிருந்து கிழிக்கப்பட்ட பகுதியில் எழுதப்படும் ஓவியம் கிழி என அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஓவியம் என்னும்

பொருளைக் குறிக்கும் 'படம்' என்னும் வடசொல் லுக்குத் துணி என்பது நேர்பொருள் என்றும், துணியில் எழுதப்பட்ட ஓவியம் 'படம்' என வடமொழியாளரால் அழைக்கப்பட்டதென்றும் சொல்லப்படுவதுண்டு இந்தப் படம் என்னும் வடசொல்லுககு நேரான தமிழ்ச் சொல்தான் 'கிழி' என்பது. கிழியில் (துணியில்) எழுதப்படும் ஓவியம் 'கிழி' எனப்பட்டது.

அடுத்துக் 'கூழ்' என்னும் சொல் நினைக்கத் தக்கது. இச் சொல் இலக்கியங்களில் உணவு, பயிர் என்னும் பொருள்களில் வழங்கப்படுகிறது. பயிர் தானே உணவுப் பொருளாக மாறுகிறது! அதனால் இரண்டை யும் கூழ் எனல் சாலும்.

**"பல்வகை உணவும், பயிரும், பொன்னும்,**
**கொள்ப மாதோ கூழ்என் கிளவி."**

என்பது திவாகரம். ஈண்டு, பல்வகை உணவுக்கும் கூழ் என்பதே பொதுப் பெயர் என்பது பெறப்படும். ஆனால் இன்று நடைமுறை உலக வழக்கில், கூலங்களை (தானியங்களை) மாவாக்கித் துழவிய ஒரு வகைத் தடிப்பான நீருணவே கூழ் எனப்படுகிறது இதிலிருந்து அறியக் கிடப்பதென்ன? நாகரிகம் முதிராத மிகப் பழங்காலத்து மக்கள், கூலங்களை இடித்து நசுக்கி அப்படியே துழவி உண்டார்கள்; அதுதான் அன்றைய உணவு முறை—அதுதான் அன்றைய சமையல் முறை. அந்த உணவைக் கூழ் என்று அழைத்து வந்தார்கள். பின்னர் வேறு விதமாகச் செய்யப்பட்ட உணவும் கூழ் என அழைக்கப்பட்டது உணவு என்றால் கூழ்—கூழ் என்றால் உணவு என்ற நிலை அன்று இருந்தது. பிறகு நாளடைவில் நாகரிக முதிர்ச்சியால் புதிய முறையில்

உணவு செய்யப்பட்டது. புது முறைகள் புகத் தொடங்கியதும், ஒவ்வொன்றும்—சோறு, இட்லி, தோசை, உப்புமா, கிச்சடி, பொங்கல், புலவு என்பன போல—ஒவ்வொரு பெயர் பெற்றது. பழைய கறுப்பன் பழைய கறுப்பனே என்றபடி, இடித்துத் துழவிய நீருணவுமட்டும் இன்றும் கூழ் என்னும் பெயரளவில் நிற்கிறது. ஆயின், புலவர்கள் மட்டும் பழைய மரபை விடாது உணவு என்னும் பொருளில் கூழ் என்னும் சொல்லை ஆண்டு வருகின்றனர். இதுதான் கூழின் வரலாறு.

இந்த நூற்பாவில் கூழ் என்னும் சொல்லுக்குப் பொன் என்னும் பொருளும் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பொன் கொடுத்தால் உணவுப் பொருள் கிடைக்கும்; அதனால் பொன்னும் கூழ் எனப்பட்டது போலும்! இதிலிருந்து, பழங்காலத்தில் தமிழ்நாட்டில் பொன் நாணயம் புழக்கத்தில் இருந்தது என்பதும் தெரியவரும். பெரும்பாலான மக்கள் நாள்தோறும் பொன் கொடுத்து வாங்கும் பொருள் உணவுப் பொருள்மட்டுமே யாகும். ஆடை அணிகலன் முதலியன என்றோ ஒரு நாளைக்கே வாங்கப்படும். இன்றும் இந்நிலையைக் காணலாம். எனவே, பொன்னின் பயனாக, உணவுப் பொருள் வாங்கும் நோக்கமே முனைப்புற்றிருந்ததால் பொன்னும் கூழ் எனப்பட்டது. "இந்தப் (சம்பளப்) பணத்தைக் கொண்டு தான் நாங்கள் இத்தனை பேரும் சாப்பிட வேண்டும்" என்று உலக வழக்கில் பணத்துக்கும் உணவுக்கும் தொடர்பு காட்டப்படுவதையும் ஈண்டு ஒப்பு நோக்குக. (இது போன்ற சொற் குடும்பங்களைப் பற்றி இந்நூலின் இறுதிப் பகுதியில் பார்ப்போம்.)

புலவர் என்னும் சொல்லால் அறு வகையினர் குறிக்கப்பட்டுள்ளனர் :

“ அமரரும், கவிஞரும், ஆடுநரும், பாடுநரும்,
பொருநரும், அறிஞரும், புலவர் எனப்படுமே. ”

என்பது நூற்பா. அமரர்=தேவர்; பொருநர்=போர் மறவர். ஒவ்வொரு கலையிலும் வல்லவர் புலவர் என அழைக்கப்படுவர் என்பது இப்பாடலால் புலனாகும். தேவருக்கும் இப்பெயர் உண்டு என்பதிலிருந்து இப் பெயரின் பெருமை விளங்கும்.

வாகை என்றால் வெற்றி. ஒரு துறையில் வெற்றி பெற்றவர் வாகை என்னும் ஒரு வகைப் பூ சூடிக்கொள்ளுதல் மரபு. நாளடைவில், வெற்றி பெற்றவர் வாகைப் பூ சூடினும் சூடாவிடினும் ‘அவர் வாகை சூடினார்’ என்று சொல்லும் மரபு ஏற்பட்டுவிட்டது. வெற்றி என்றால் போரில் பெறும் வெற்றிபட்டும் சிலருக்கு நினைவுக்கு வரும். இன்னும் சிறிது ‘தாராளக் கணக்கு’ போட்டுப் பார்த்தால், போட்டிகளில் பெறும் வெற்றியும் சிலருக்கு நினைவுக்கு வரலாம். இவை மட்டும் வெற்றி யாகா. உழைப்பு, கல்வி, பண்பு, கொடை, ஒழுக்கம், தவம், அறச்செயல்கள் முதலிய நல்லனவற்றிலெல்லாம் மற்றையோரினும் முதன்மை பெற்றுத் திகழ்வதும் வாகையாகும். இந்த அரும்பெருங் கருத்தைத் திவா கரம் அழகாக அறிவித்துள்ளது :

“ ஆள்வினை முதலாம் செய்கையும் நலனும்
கைவலம் முதலாம் கல்வியும் ஆண்மையும்
சால்பு முதலாம் பண்பும் ஈகையும்
ஒழுக்க முதலாம் தவமும் அறத்துறையும்
ஒருவரின் ஒருவர் வென்றியும் மிகுதியும்
வருவன எல்லாம் வாகை என்னும் பெயர்: ”

என்பது நூற்பா. மறத்துறையில்மட்டும் வெற்றி நோக்குடன் வெறிகொண்டலையும் மக்கட் கூட்டம், அதனை விடுத்து அறத்துறையில் கண் திருப்புமாயின், உலகில் போட்டி பொறாமை போர் பகை முதலிய தீமைகள் விலகி, உயர்வு ஒற்றுமை ஒப்புரவு முதலிய நன்மைகள் பெருகி இவ்வுலகம் இன்ப வுலகமாக மாறிவிடும் அன்றோ?

இந்தப் பதின்மூராம் தொகுதியில் இரண்டு இடங்களில் தமிழ் முழக்கம் கேட்கிறது. ஆசிரியர் திவாகரர் தமது தாய் மொழியாகிய தமிழ் மொழியைக் 'கன்னித் தமிழ்' என்றும், 'வாழித் தமிழ்' என்றும் புகழ்ந்து மகிழ்வெய்துகிறார். கம்பலை, மடங்கல் என்னும் இரு சொற்களையும் தமிழர் இன்னின்ன பொருள்களில் வழங்குவர் என்று கூறுமுகத்தான் தமிழைச் சிறப்பித்து ஆசிரியர் சிறப்பெய்துகிறார்:

" இன்னுங் கோசை, நடுக்கம், அச்சம்,
கன்னித் தமிழோர் கம்பலை என்ப."

" ஊழித்தீ, சிங்கம், உகமுடிவு, இடியென,
வாழித் தமிழோர் மடங்கல் என்ப.
கொடுங் கூற்றின் பெயரும், நோயும், கூறும்."

என்பன பாக்கள். இன்று தமிழின் பெருமையைப் பேசுவோருக்கு ஒருசிலரால் என்னென்னவோ 'பட்டங்கள்' கட்டப்படுகின்றன. திவாகர முனிவரோ, எட்டாம் நூற்றாண்டிலேயே, என்றும் குலையாத இளைய கன்னிமொழி தமிழ் என்றும், என்றும் அழியாது வாழும் மொழி தமிழ் என்றும் கூறித் தம் மொழி யுணர்வை—மொழிப் பற்றை வெளிப்படுத்தியுள்ளார். உண்மை

யான தமிழ் அறிஞர்களைப் பொறுத்தவரையில் 'தாம் ஆடாவிடினும் தம் தசை ஆடுவது' உறுதி.

பொறை என்னும் சொற்குப் பொருள் கூறும் வாயிலாக ஆசிரியர் அம்பல் சேந்தனது பொறுமையைப் புகழ்ந்துளார் :

" மலை, சுமை, பாரம், அம்பல் சேந்தனோடு
உலவிய பொறுமை, பார், ஐந்தும் பொறையே. "

பொறுமைக்கு எடுத்துக் காட்டாகச் சேந்தன் சிறப்பிக்கப் பெற்றுள்ளான்.

இந்தப் பதினோராந் தொகுதி, இக்காலத்துப் பயன் படுத்தப்படுகிற 'டிக்ஷனரி' எனப்படும் அகராதியைப் போன்றதாதலின், அக்காலத்து மக்கள் இத் தொகுதியையே பெருவாரியாகப் பயின்றனர்—மனப்பாடமும் செய்துவைத்துக் கொண்டனர். நிகண்டு கற்றவர் என்னும் பெயருக்கு உரியவர் மட்டுமல்லர்—பொதுவாகப் படித்தவர் என்னும் பெயருக்கு உரியவர் அனைவருமே நிகண்டு நூலிலுள்ள மற்ற தொகுதிகளைக் கற்றாலும் கற்காவிடினும், பதினோராந் தொகுதியாவது கட்டாயம் கற்றேயிருந்தனர். பதினோராந் தொகுதியைப் பதினோராம் நிகண்டு எனத் தனி நிகண்டு நூல் போல் குறிப்பிடும் வழக்கமும் அன்று இருந்தது. இதிலிருந்து, இத்தொகுதியின் இன்றியமையாமையும் பரந்த பயனும் நன்கு புலப்படும்.

# 12. பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி

முதல் பத்துத் தொகுதிகளும் 'ஒரு பொருள் பல் பெயர்த் தொகுதிகள்' எனவும், பதினோராம் தொகுதி 'ஒரு சொல் பல் பொருள் பெயர்த் தொகுதி' எனவும், பன்னிரண்டாம் தொகுதியோ, அவற்றினும் வேறு பட்டதாய், 'பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி' என்னும் தனி வகையது எனவும் முன்னரே அறிந்து வைத்துள்ளோம்.

ஆம்! முக்காலம், ஐம்பொறி, முப்பத்திரண்டு அறம் முதலிய எண் குழுப் பெயர்களில் அடங்கியுள்ள பொருள்கள் இன்னின்னவை எனத் தெளிவிக்கும் தொகுதி இப் பன்னிரண்டாம் தொகுதியாகும். பிற் காலத்தில் அகராதி அமைத்தவர்கள் இதுபோன்ற பகுதிக்குத் 'தொகை யகராதி' எனப் பெயர் தந்துள்ள னர். ஐம்பொறி என்னும் ஒரு பெயரிலுள்ள ஐந்து என்னும் தொகை, மெய்-வாய்-கண்-மூக்கு-செவி என்னும் பல பொருள்களின் கூட்டத்தைக் குறிக் கின்றதல்லவா? அதனால், இந்தப் பகுதிக்குப் 'பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி' என்னும் பெயரும், இதுபோன்ற அகராதிப் பகுதிக்குத் 'தொகை அகராதி' என்னும் பெயரும் மிகவும் சாலும்.

இனி இப் பன்னிரண்டாம் தொகுதிக்குள் புகுந்து சுவையான சில பகுதிகளைப் பார்ப்போம்:

ஒன்று என்னும் எண்ணுல் சுட்டப்படுவது (மோட்சம் எனப்படும்) வீடு பேளும். தனக்கு இணையாக வைத்து எண்ணத் தக்கது வேறு எதுவும் இன்றித் தான் தனித்த பெருமை உடையது வீடுபேறு என்பது இதனுல் புலனுகும்.

“ ஒன்று என்பதுவே வீடுபேறு ஆகும். ”

என்பது திவாகர நூற்பா. உயிர் வாழ்க்கையின் ஒப்பற்ற ஒரே பயனுய் வீடுபேறு மதிக்கப்பட்டிருக்கிறது.

இருவகை அறங்களாவன : இல்லறம், துறவறம் என்னும் இரண்டுமாம்.

“ இருவகை அறமே இல்லறம், துறவறம். ”

வாழ்க்கை நிலையை இல்லறம், துறவறம் என இரண்டாகத் தமிழ் நெறியாளர் வகுத்துள்ளனர். திருவள்ளுவரும் தமது திருக்குறளில் இவ்விரண்டு நெறிகளையே இல்லறவியல், துறவறவியல் என்னும் பிரிவுகளின்கீழ்ப் பேசியுள்ளார். ஆனுல் வடமொழி வாணரோ. பிரமச்சரியம் (திருமணம் ஆகாத நிலை), கிருகத்தம் (இல்லறம்), வானப்பிரத்தம் (மனைவியுடன் காட்டில் தங்கித் தவஞ்செய்யும் நிலை), சந்நியாசம் (துறவறம்) என வாழ்க்கை நிலையை நான்காக வகுத்துள்ளனர். அதாவது, அவரவர் பழக்க வழக்க வாழ்க்கை முறைக்கு ஏற்றவாறு நிலைகள் வகுக்கப்பட்டுள்ளன. உண்மை இப்படி யிருக்க,

“ இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. ”

என்னும் திருக்குறளின் உரையாக, வடமொழி வாணரின் நான்கு நிலைகளைப் புகுத்திக் குழப்புவது

பொருந்துமா? அதாவது, நான்கு நிலையினருள் கிருகத்தன் எனப்படும் இல்வாழ்வான், மற்ற மூவர்க்கும் (மூன்றுநிலையினர்க்கும்) துணையாக நிற்க வேண்டும் என இக் குறளுக்குப் பொருள் கூறப்படுகிறது; இது பொருநதுமா?

வள்ளுவர் தமது நூலில் அறத்துப்பாலை நான்காகப் பிரிக்காமல் இல்லறம், துறவறம் என இரண்டாகத் தானே பிரித்துக்கொண்டுள்ளார். அப்படியிருக்க, நான்கு நிலைகளை எவ்வாறு இக்குறளில் அவர் அமைத்துப் பேசியிருக்க முடியும்? மேலும் இக்குறளுக்கு அடுத்துள்ள

" துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை."

என்னும் குறளில் 'துறந்தார்' எனக் குறிப்பிட்டுள்ளாரே—அவர் யார்? முன் குறளிலேயே துறவிகள் அடங்கிவிட்டால், இந்தக் குறளிலும் அவர்களுக்கு என்ன வேலை? எனவே, முன் குறளில் உள்ள 'இயல்புடைய மூவர்' என்பதற்கு வேறு ஏதேனும் பொருள் இருக்க வேண்டும். இதனை ஆராய்ச்சியாளரின் அறிவுப் பசிக்கு விருந்தாக விட்டு வைப்போம்.

பிற்காலத் தமிழ் நூற்கள் சிலவற்றில் நான்கு நிலைகள் பேசப்பட்டுள்ளனவே எனின், அது, வடமொழிக் கோட்பாடு தமிழில் இரண்டறக் கலந்துவிட்ட காலத்தின் கோலமாகும். நிகண்டு நூற்களிலுங்கூட, வடமொழிக் கோட்பாடுகள் நிரம்ப இடம் பெற்றுள்ளன.

கல்வியும் செல்வமும் இருவகைப் பொருள் களாம் :

" இருவகைப் பொருள் கல்விப் பொருள், செல்வப் பொருள்."

இப்பாவில், கல்விப் பொருளுக்கு முதன்மை தரப் பட்டிருப்பது ஈண்டு கவனிக்கத்தக்கது. கல்லாத செல்வர்கள் இதனை உணரவேண்டும்.

" மெய், வாய், கண், மூக்கு, செவி, ஐம்பொறியே."

என்னும் திவாகரப் பாடலில் உள்ளாங்கு ஐம்பொறிகள் தொன்று தொட்டுப் பேசப்படுகின்றன. ஆனால், இக் காலத்து உள நூல் அறிஞர்கள் (Psychologist) உடல்-தசையின் இயக்கத்தையும் 'இயக்கப் பொறி' (Kinaesthetic) என்னும் பெயரில் ஒரு பொறியாகக் கொண்டு பொறிகள் ஆறு என்கின்றனர். இது புதுமை!

நிகண்டினுள், தாய்மார்களை ஐந்து வகையின ராக்கி

" பாராட்டுந் தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய்,
கைத்தாய், செவிலித்தாய், ஐந்தெனக் கழறுவர்."

எனக் கூறியிருப்பது சுவையா யிருக்கிறது!

காலாட் படை, தேர்ப் படை, யானைப் படை, குதி ரைப்படை எனப் படைகளை நால் வகையாகக் கூறு வதே அக்கால மரபு என்பதை அனைவரும் அறிவர். ஆனால், காலாட் படையை வேல் படை, வாள் படை, வில் படை என மூ வகையாக்கி, தேர்ப்படை, யானைப் படை, குதிரைப் படை என்னும் மூன்றையும் சேர்த்து

"வேல்தானை, வாள்தானை, வில்தானை, மேலோர்
தேர்த்தானை, பரித்தானை, களிற்றுத்தானை என
ஆற்றல் சான்ற அறுவகைத் தானை ."

எனப் படையை ஆறாக நிகண்டு கூறியிருப்பது ஒரு புது மாறுதல்! விஞ்ஞானம் பெருகியுள்ள இருபதாம் நூற்றாண்டில் நிலப்படை, நீர்ப்படை, வானப்படை எனப் படைகள் மூவகைக்குள் அடங்கும். இவற்றுடன் மலைப்பயிற்சிப் படையையும் சேர்த்து இக்காலத்தும் படைகளை நால் வகையாகக் கூறலாம் போலும்! இன்னும் என்னென்ன படைகள் முளைக்க இருக்கின்றனவோ ?

"படையும், குடியும், கூழும், அமைச்சும்,
அரணும், நட்பும், அரசியல் ஆறே ."

என அரசியல் உறுப்புகள் ஆறு என்று எட்டாம் நூற்றாண்டில் திவாகரம் கூறியுள்ளது. இதனை மேலும் சில நூற்றாண்டுகட்கு முன்பே,

"படைகுடி கூழ்அமைச்சு நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு."

எனத் திருவள்ளுவர் திருக்குறளில் கூறியுள்ளார். இதிலிருந்து அறிய வேண்டுவது யாது? 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்' என்பர் இதற்கேற்ப, முன்னர்த் தோன்றியுள்ள இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டே பின்னர் நிகண்டு நூற்கள் எழுந்தன என்பது புலனாகும். நிகண்டு நூற்கள் மொழியிலக்கண நூல் வகையைச் சேர்ந்தன வன்றோ?

பத்து வகையான முதல்(மூலப்) பொருள்கொண்டு சிற்ப உருவங்கள் செய்யப்படலாம் எனத் திவாகரம் அறிவிக்கிறது :

" கல்லும், உலோகமும், செங்கலும், மரமும்,
மண்ணும், சுதையும், தந்தமும், வண்ணமும்,
கண்ட சருக்கரையும், மெழுகும், என்றிவை
பத்தே சிற்பத் தொழிற்கு உறுப்பாவன ."

என்பது நூற்பா.

கல்=கருங்கல்; உலோகம்=பொன், வெள்ளி, வெண்கலம் முதலிய உலோகங்கள்; சுதை=சுண்ணும்பு; வண்ணம்=பல்வகை வண்ணச் (நிறச்) சாந்து; கண்ட சருக்கரை=ஒரு வகைச் சருக்கரை.

இந்தப் பகுதி கலை உள்ளத்திற்கு ஓர் உணவாகும். உலகியலில் 'பளிங்குச் சிலை' என்கிருர்களே, இப்பாடலில் பளிங்கு கூறப்படவில்லையே எனின், மண் என்பதனுள் பளிங்கு அடங்கும். பளிங்கு—கண்ணுடி—பீங்கான் போன்றவை பல்வகை மண்ணுல் ஆனவையே யன்ரு ?

உலக மக்கள் அனைவரும் தொடர்பு கொண்டுள்ள இந்தக் காலத்தில் உலகில் நூற்றுக் கணக்கான மொழிகள் (பாஷைகள்) இருப்பது தெரிய வருகிறது. உலகம் முழுவதும் தொடர்பு கொள்ளமுடியாத பழங் காலத்தில் பதினெட்டு மொழிகள் குறிப்பிடப் பட்டுள்ளன

" அங்கம், வங்கம், கலிங்கம், கௌசிகம்,
சிந்து, சோனகம், திரவிடம், சிங்களம்,
மகதம், கோசலம், மராடம், கொங்கணம்,
துளுவம், சாவகம், சீனம், காம்போஜம்,
பருணம், பப்பரம், எனப் பதினெண் பாடை."

என்பது திவாகர நூற்பா. இப்பதினெட்டும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும், சுற்றுப்புற நாடுகளிலும்

வழங்கிய—வழங்குகிற மொழிகளாம். இவற்றுள் சில மொழிகள் சில மாறுதல்கள் பெற்று வேறு பெயர் களுடன் வழங்கப்படுவதாகத் தெரிகிறது. ஒவ்வொன் றின் விவரமும் வருமாறு:—

(1) அங்கம்:—வட இந்தியாவில் உள்ள காசி நக ரைச் சார்ந்த பகுதி அங்க நாடு. அங்கே வழங்கிய மொழி அங்க மொழியாகும். கன்னனை அங்கர்கோன் எனப் பாரதம் கூறும்.

(2) வங்கம்:—வங்காள மாநிலத்தில் வழங்கும் வங்காள மொழி.

(3) கலிங்கம்:—ஏறக்குறைய நர்மதையாற்றுக் கும் துங்கபத்திரை யாற்றுக்கும் இடைப்பட்ட பகுதி கலிங்க நாடாகும். இன்று 'ஒரிசா' என அழைக்கப்படு கிறது. அசோகரும் குலோத்துங்கச் சோழனும் ஒவ் வொரு காலத்தில் வென்ற நாடு இது. இங்கே வழங் கிய மொழி கலிங்க மொழியாகும். இப்போது இங்கே வழங்கும் மொழி 'ஒரியி' எனப்படுகிறது.

(4) கௌசிகம்:—இது வட இந்தியாவில் வழங்கிய ஒரு மொழி.

(5) சிந்து:—வடக்கே சிந்து மாநிலத்தில் வழங் கும் சிந்தி மொழி.

(6) சோனகம்:—வெளி நாட்டாராகிய கிரேக்கர், அரேபியர் போன்றவர்களைச் சோனகர் என்றும் அவர்தம் மொழியைச் சோனகம் என்றும் அன்று நம்மவர் அழைத்தனர்.

OFFICE OF THE ... 4747 4 JUN 1975 GOVT. ...

(7) திரவிடம்:—இது தமிழ் மொழி. நாளடைவில் தமிழிலிருந்து பல மொழிகள் தோன்றின என்பது யாவரும் அறிந்த செய்தியே.

(8) சிங்களம்:—இலங்கையில் வழங்கும் சிங்கள மொழி.

(9) மகதம்:—வடக்கேயுள்ள பீகார் மாநிலத்தின் குறிப்பிட்ட பகுதி மகத நாடாம். மௌரியப் பேரரசுக்கு உரியது மகதமன்றோ? ஈண்டு வழங்கிய மொழி மகத மொழியாம்.

(10) கோசலம்:—வட நாட்டில் (உத்தரப் பிர தேசம்) கங்கை பாய்வதும் அயோத்தியைத் தலைநகரா கக் கொண்டதுமான ஒரு பகுதி கோசல நாடாம். இங்கே வழங்கிய மொழி கோசல மொழி.

(11) மராடம்:—இன்றைய மகாராட்டிர (பம்பாய்) மாநிலத்தில் வழங்கும் மகாராட்டிர (மராட்டி) மொழி யாகும்.

(12) கொங்கணம்:—அரபிக் கடலுக்குக் கிழக்கும்-மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கும்—கோவாவிற்கு வடக்கும் - குசராத்தி நாட்டுக்குத் தெற்கும் ஆன எல்லைக்கு உட்பட்ட பகுதி கொங்கணமாகும். ஆங்குப் பேசிய மொழி கொங்கண மொழி எனப்பட்டது.

(13) துளுவம்:—கேரள நாட்டிற்கும் கன்னட நாட்டிற்கும் இடையே குறிப்பிட்ட பகுதியில் பேசும் மொழி. கல்யாணபுரி ஆற்றுக்கும் சந்திரகிரி ஆற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் ஏறத்தாழ எழுநூறாயிரம் (700,000) மக்களால் இன்று பேசப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

(14) சாவகம்:—இந்தியப் பெருங்கடலில் (Indian Ocean) ஏறக்குறைய மூவாயிரம் தீவுகளைக் கொண்டதாய் 'இந்தோனேழ்சியா' என்னும் நாடு இன்று விளங்குகிறது. இதன் தலைநகராகிய சாகர்த்தா நகர், சாவா (Java) என்னும் தீவில் உள்ளது. இதன் பக்கத்தில் சுமத்ரா எனனும் பெரிய தீவு உள்ளது. இந்தச் சுமத்ரா—சாவா பகுதியினை நம்மவர் சாவகம் என்றும், ஈண்டு வழங்கிய மொழியினைச் சாவக மொழி என்றும் அழைத்தனர். இந்தப் பகுதியை அடுத்து மலேயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் உள்ளன. இங்கெல்லாம் பழங்காலத் தமிழ் மன்னர்கள் படையெடுத்துச் சென்றதாகச் சொல்லப்படுகிறது. இன்றும் இப்பகுதிகளில் தமிழ் மக்கள் பரவலாக வாழ்கின்றனர். ஆனால், மலேயா, சிங்கப்பூர், இந்தோனேழ்சியா ஆகிய பகுதிகளில் இன்று பேசப்படும் மொழி 'மலாய் மொழி' என அழைக்கப்படுகிறது.

(15) சீனம்:—இந்தியாவின் வடக்கேயுள்ள சீன நாட்டில் வழங்கும் மொழி இது; ஓவிய எழுத்துக்களைக் கொண்டது; மேலிருந்து கீழ் நோக்கி ஒன்றின்கீழ் ஒன்ருக எழுதப்படுவது.

(16) காம்போஜம்:—இந்தியாவின் வடமேற்கு (பாகிஸ்தான்-பெஷாவர்) எல்லையைச் சேர்ந்த ஒரு பகுதி காம்போஜம் ஆகும். இங்கே பேசப்பட்ட மொழி காம்போஜ மொழியாம். தென் கிழக்கு ஆசியாவில் உள்ள 'கம்போடியா' என்னும் நாடும் காம்போஜம் எனப்படுகிறது.

(17) பருணம்:—ஒரு வட இந்திய மொழி.

(18) பப்பரம்:—இஃதும் ஒரு வடக்கு மொழியாம்.

மேற்கூறிய பதினெட்டு மொழிகளுள் சோனகம், சிங்களம், சாவகம், சீனம் என்னும் நான்கைத் தவிர, மற்ற பதினான்கும் இந்தியப் பெருநாட்டைச் சேர்ந்த மொழிகளாம். இலக்கண உரைநூற்களில் காணப் படுகின்ற

"சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுக், குடகம்,
கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம்,
கலிங்கம், வங்கம்,
கங்கம், மகதம், கடாரம், கவுடம், கடுங் குசலம்,
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே."

என்னும் பழம் பாடல் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது. தமிழ் நாட்டை அடுத்தடுத்துத் தொடர்பு கொண்ட பதினேழு நாடுகள் இப்பாடலில் பேசப்பட்டுள்ளன. இப்பாடலையும் திவாகர நூற்பாவையும் உற்று நோக்கின், தமிழர்கள் பல நாட்டினரொடு—பல மொழியினரொடு தொடர்பு கொண்டிருந்தமை புலனாகும்.

பதினெட்டு மொழிகளுள் தமிழ் மொழியானது திரவிடம் என்னும் மாற்றுப் பெயரால் திவாகரத்தில் சுட்டப்பட்டுள்ளது. வட இந்திய மொழிகள் பலவற்றைத் தனித்தனியே எடுத்து மொழிந்த திவாகரம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்னும் தென்னிந்திய மொழிகளைத் தனித் தனியே சுட்டவில்லை. திவாகரம் எழுதப் பெற்ற எட்டாம் நூற்றாண்டில் மலையாளம் என ஒரு மொழி இல்லை. மலையாள நாடு அப்போது சேர நாடு. இப்போதும் தமிழும் மலையாளமும் ஏறக்குறைய ஒரே மொழியே. பழங் கன்னடமும் தமிழும் ஒன்றேயாம். இப்படியே பார்த்துக் கொண்டு சென்றால், தென்னிந்தியாவில் தமிழ்மொழி அன்று பெற்றிருந்த தலைமைநிலை புலனாகும்.

திவாகரம் கூறும் பதினெட்டு மொழிகளும் பிற்காலத்தில் பல்வேறு பிறவிகள் (அவதாரங்கள்) எடுத்தன. சில தேய்ந்தன. சில குட்டி போட்டன. எனவே, பிற்காலத்தில் இந்தப் பதினெட்டு என்னும் எண் வரையறைக்கு இடமில்லாது போயிற்று. திவாகரத்தை அப்படியே அடியொற்றி (காப்பியடித்து) பதினும் நூற்றுண்டில் எழுந்த சூடாமணி நிகண்டு, இந்தப் பதினெண் மொழிகளின் பக்கமே தலே வைத்துப் படுக்கவில்லே. திவாகரத்துக்கும் சூடாமணிக்கும் இடைப்பட்ட எண்ணூறு ஆண்டுகளில் எத்தனேயோ மொழிகள் கிளேத்து விட்டனவாதலால், சூடாமணி நிகண்டு ‘கப்சிப்’ என்று பேசாமல் விட்டுவிட்டது.

பெயர்பெற்ற மொழிகள் என விதந்து பேசக் கூடியஅளவு எட்டாம் நூற்றுண்டில் சிறப்புற்றிருந்த இப்பதினெட்டு மொழிகளுள் பலவற்றின் பெயர்களே அவ்வளவாக இன்று பார்க்க முடியவில்லே. இந்தியாவின் சிறந்த மொழிகளாகத் தமிழ், மலேயாளம், கன்னடம், தெலுங்கு, ஒரியி, வங்காளம், அசாம், காசுமீரி, பஞ்சாபி, குசராத்தி, மகாராட்டிரம், இந்தி, உருது, சம்சுகிருதம் என்னும் பதினுன்கு மொழிகளே இப்போது திகழ்வது ஈண்டு எண்ணிப் பார்த்தற்குரியது.

அடுத்து, முப்பத்திரண்டு அறங்கள் (தருமங்கள்) இன்னின்னவை எனப் பின்வருமாறு திவாகரம் கூறுகிறது:

“ **ஆதுலர் சாலே, ஓதுவார்கது உணவு, அறு**
**சமயத்தோர்க்கு உணவு, பசுவுக்கு வாயுறை,**
**சிறைச்சோறு, ஐயம், தின்பண்டம், மகச்சோறு,**
**மகப்பெறுவித்தல், மகவளர்த்தல், மகப்பால்,**

அறவைப் பிணஞ்சுடுதல், அறவைத் தூரியம்;
வண்ணார், நாவிதர், வதுவை, பூணூல், நோய்
மருந்து, கண்ணாடி, காதோலை, கண்மருந்து,
தலைக்கெண்ணெய், பெண்போகம், சுண்ணம்,
பிறர்துயர்
காத்தல், தண்ணீர்ப் பந்தர், மடம், தடாகம்,
கா, ஆவுரிஞ்சி நடுதறி, ஏறு
விடுத்தல், விலைகொடுத்துக் கொலையுயிர் மீட்டல்,
இச்செயல் முப்பத்திரண்டு அறம் என்ப."

என்பது பாடல். இவற்றுள், இந்தக் காலத்தில் நிலைத்து நிற்கும் அறங்கள் எத்தனையோ?

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புல அறிவுகளோடு மன அறிவாகிய பகுத்தறிவை யும் சேர்த்து ஆறு அறிவு உடையவர்களாக மக் களைச் சொல்வது வழக்கம். ஆனால் திவாகரரோ, மக்களையும் விலங்குகளையும் ஐந்தறிவு உடைய உயிர்களாக முதலில் கூறி, மன அறிவாகிய ஆறாவது அறிவும் மக்களுக்கு உண்டு என்றும், அந்த ஆறாவது அறிவு ஒரு சில விலங்குகட்கும் உண்டு என்றும் பின்னர்க் கூறி யுள்ளார்:

" உற்றறி புலன், நா, மூக்கொடு, கண், செவி,
மக்களும் மாவும் ஐந்தறி வினவே."

" மனத்தோடு ஆறறிவினரே மக்கள்
ஒருசார் விலங்கும் அதுபெறற்கு உரித்தே."

என்பன நூற்பாக்கள். மக்களுள் சிலர்—சிலரென்ன பலர்—பகுத்தறிவற்ற விலங்குகள்போல இந்த இரு பதாம் நூற்றாண்டிலும் நடந்து கொள்கிறார்களே—இதுபோல அன்றும் நடந்திருப்பார்கள் அல்லவா?

அதனுல்தான், மக்களே மாக்களோடு இணைத்து ஐயறிவு உயிராகத் திவாகரர் கூறினுர் போலும். விலங்குகளுள்ளும் ஆறறிவு உடையவை ஒரு சில உண்டு எனக் கூறியிருப்பதை நோக்கின், மக்கள் எவ்வளவோ உயர்ந்த பண்பு உடையவர்களாக நடந்துகொள்ள வேண்டும் என்பது சொல்லாமல் பெறப்படும். மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே தொல்காப்பியரும் இப்படி ஒரு குறிப்புத் தந்துள்ளார் :

" மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
ஒருசார் விலங்கும் உளவென மொழிப."

என்னும் தொல்காப்பிய நூற்பா ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது.

இந்தத் தொகுதியில், அலி எனப்படும் பேடியின் இயல்புகள் பேசப்பட்டிருப்பது மிகவும் சுவையாக உள்ளது. அது வருமாறு:—

" பேடி யிலக்கணம் பேசுங் காலை
நச்சுப் பேசலும், நல்லுரை யோதலும்,
அச்சு மாறி ஆண் பெண் ஆகியும்,
கைத்தலம் ஒன்றைக் கடுக வீசியும்,
மத்தகத்து ஒருகை மாண்புற வைத்தலும்,
விலங்கி மிதித்தலும், வழிவே ருகியும்,
துளங்கித் தூங்கிச் சுழன்று துணிந்தும்,
நக்கும், நாணியும், நடம்பல பயின்றும்,
பக்கம் பார்த்தும், பாங்கு திருத்தியும்,
காரண மின்றிக் கடிபல கொண்டும்,
வாரணி கொங்கையை வலிய நலிந்தும்,

இரங்கியும், அழுதும், அயர்ந்தும், அருவருத்தும்,
குரங்கியும், கோடியும், கோதுகள் செய்தும்,
மருங்கில் பாணியை வைத்தும், வாங்கியும்,
இரங்கிப் பேசியும், எல்லேல் என்றும்,
இன்னவை பலவும் இயற்றுதல் இயல்பே.''

இந்தப் பாடலில் கூறப்பட்டுள்ள பேடியின் செயல்கள் அனைத்தும் அப்படியே இயற்கையை ஒட்டி உள்ளன. இப்பாடலைப் படிப்பவர் தம் மனக்கண்முன் ஒரு பேடியின் உருவத்தை அப்படியே காணலாம்.

இந்த விதமாகத் திவாகரத்தின் பன்னிரண்டாந் தொகுதியில் அறிவுக்கு விருந்தான பல செய்திகள் படைக்கப்பட்டுள்ளன.

பின்னெழுந்த பல நிகண்டுகளுக்கும் முன்னேடியாகச் சேந்தன் திவாகரத்தைப் பயந்த ஆசிரியர் திவாகரர் பெரிதும் போற்றுதற்கு உரியவர். அவருக்குத் தமிழுலகம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

# மூன்றும் பாகம்
# [பிற நிகண்டுகள்]

## பிங்கல நிகண்டு

சேந்தன் திவாகரத்திற்கு அடுத்ததாகக் காலத்தால் முற்பட்டது பிங்கலம்தான். பவணந்தி முனிவர் தமது நன்னூலின் நானூற்று அறுபதாம் நூற்பாவில், 'பிங்கலம் முதலா' என இதனையே நிகண்டுகளின் தலை நூலாக எடுத்தாண்டிருப்பதை ஆராயின், ஒரு காலத்தில் திவாகரத்தினும் பிங்கலமே பெருவாரியாகப் பயிலப்பட்டிருந்தது என்பது புலனாகலாம்.

### பெயர்க் காரணம்

'பிங்கலர்' என்பவரால் இயற்றப்பெற்ற தாதலின், ஆசிரியர் பெயராலேயே இந்நூல் 'பிங்கலம்' என அழைக்கப்படுகிறது. இதற்குப் 'பிங்கலந்தை' என்னும் மாற்றுப் பெயரும் உண்டு.

## ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் பிங்கலரது வரலாற்றை விரிவாக அறிந்துகொள்ளவும் வழக்கம்போல் போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை. 1917-ஆம் ஆண்டில் 'மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை'யில் வெளியான பிங்கல நிகண்டுநூல் பதிப்பின் முகவுரையில் பின் வருமாறு ஒரு பகுதி காணப்படுகிறது :

" பிங்கல நிகண்டு என்பது பிங்கல முனிவர் என்னும் வித்வ சிரேஷ்டரால் இயற்றப்பட்ட நூல். இவர் ஆதிதிவா கரம் இயற்றிய திவாகர முனிவர் புத்திரர். இப்பிங்கல முனிவர் சோழ வம்சத்தில் உதித்தவரே யாயினும், துறவு பூண்டு தமிழ், நூல் ஆராய்ச்சியிலேயே தமது காலத்தைப் போக்கியவர். இவர் காலம் நச்சினார்க்கினியர் காலத்துக்கு முந்தியதென்பர்."

இது, நூலை அச்சிட்டவர்கள் எழுதிய முகவுரை யாகும்.

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியரா யிருந்த ஆ. சிங்கார முதலியார் இயற்றிய 'அபிதான சிந்தாமணி' என்னும் நூலின் இரண்டாம் பதிப்பில் (1934-ஆம் ஆண்டு), பிங்கல முனிவரைப் பற்றிப் பின் வருமாறு காணக்கிடக்கிறது :

" பிங்கல முனிவர் :—பிங்கலந்தை என்னும் நிகண்டு இயற்றிய சைநர். இந் நிகண்டு, சூடாமணி நிகண்டு, சேந் தன் திவாகரம் முதலியவற்றிற்கு முந்திய நூலாதலால், இவர் அந்நூலாசிரியர்களுக்கு முந்தியவர். இவர் ஆதி திவாகர முனிவர்க்குப் புத்திரர்."

மேலுள்ள இரு குறிப்புக்களையும் நோக்கின் பிங்கலர் ஆதி திவாகரரின் மகனாவார் என்பதும், பிங்கல நிகண்டு சேந்தன் திவாகர நிகண்டினும் காலத்

தால் முந்தியது என்பதும் புலனாகும். இக்கருத்துப் பொருந்தாது எனினும், பிங்கல நிகண்டை அச்சிட்ட பழைய பதிப்பாசிரியரும் அபிதான சிந்தாமணி ஆசிரியரும் மேற்கண்டவாறு கூறியுள்ளதற்கு அவர்கட்குக் கிடைத்துள்ள சான்றுகளாகக் கருதத்தக்கவை சில உண்டு. அவை வருமாறு:—

(1) பதின்மூன்றாம் நூற்றாண்டில் நன்னூல் எழுதிய பவணந்தி முனிவர், "பிங்கல முதலா, நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே'' எனப் பிங்கல நிகண்டுக்கே முதன்மை தந்துள்ளார்.

(2) பதினாறும் நூற்றாண்டின் இறுதியில் (1594) 'அகராதி நிகண்டு' என்னும் நிகண்டு எழுதிய புலியூர்ச் சிதம்பர ரேவண சித்தர் என்னும் புலவர் அந்நூலின் தற்சிறப்புப் பாயிரச் செய்யுளில்,

> " தெரிதரு பிங்கலம் திவாகரம் முதலாய்ப்
> பரவிய நிகண்டு பலவெடுத்து ஆராய்ந்து "

எனத் திவாகரத்தினும் பிங்கலத்திற்கே முதன்மை கொடுத்துள்ளார். பவணந்தியாராவது 'பிங்கல முதலா' எனப் பிங்கலத்தை மட்டும் விதந்து குறிப்பிட்டுள்ளார். ஆனால் இவரோ, 'பிங்கலம் திவாகரம் முதலாய்' என இரண்டையும் குறிப்பிட்டு, பிங்கலத்தை முன்னும் திவாகரத்தைப் பின்னுமாக அமைத்துள்ளார். இதனால், திவாகரத்தினும் பிங்கலமே முந்தியது என்னும் கொள்கை உருவாயிற்று.

(3) பிங்கல நிகண்டு நூலின் தொடக்கத்துக்கு முன்னால் பிற்காலத்தவரால் சேர்க்கப்பட்டுள்ள சிறப்புப் பாயிரச் செய்யுளின் இடையே,

" செங்கதிர் வரத்தால் திவாகரன் பயந்த
பிங்கல முனிவன் எனத்தன் பெயர் நிறீஇ
உரிச்சொல் கிளவி விரிக்குங் காலை "

என்னும் அடிகள் அமைந்துள்ளன. இப்பகுதியால், திவாகரன் பெற்ற பிள்ளை பிங்கலன் என்பது தெரிய வருகிறது. சேந்தன் திவாகரத்தினும் பிங்கலமே முந்தியது என்னும் கொள்கையினர் இப் பகுதியைக் கண்டதும், ஆதிதிவாகரர் பெற்ற பிள்ளையே பிங்கலர் என்று பொருள் கூறி, சேந்தன் திவாகரம் எழுதிய திவாகரர் பிங்கலர்க்குப் பிற்பட்டவரே என்று முடிவு கட்டிவிட்டனர்.

இந்தக் கருத்துப் பொருந்தாது; பிங்கலர் ஆதி திவாகரரின் மகன் அல்லர்; சேந்தன் திவாகரரின் மகனே பிங்கலர். எனவே, பிங்கலம் சேந்தன் திவாகர நிகண்டுக்குப் பிந்தியதேயாகும். இதற்குரிய சான்றுகள் வருமாறு :—

(1) பிற்காலத்தில் மிகுதியாகப் பயிலப்பட்ட 'சூடாமணி' என்னும் நிகண்டுநூலைப் பதினாறும் நூற்றாண்டின் முற்பகுதியில் (1520) இயற்றிய மண்டல புருடர் என்னும் ஆசிரியர், நூலின் தொடக்கத்தில் பின்வருமாறு பாடியுள்ளார் :—

" அங்கது போய பின்றை
அலகில்நூல் பிறந்த மற்றும்
செங்கதிர் வரத்தால் தோன்றும்
திவாகரர் சிறப்பின் மிக்க
பிங்கலர் உரைநூற் பாவில்
பேணினர் செய்தார் சேர
இங்கிவை யிரண்டுங் கற்க
எளிதல என்று சூழ்ந்து "

" விரவிய தேவர் மக்கள்
விலங்கொடு மரம்இடம் பல்
பொருள் செயும் வடிவு பண்பு
போற்றிய செயல் ஒலிப் பேர்
ஒருசொல் பல்பொருளி னேடும்
உரைத்த பல்பெயர்க் கூட்டந்தான்
வருமுறை திவாகரம் போல்
வைத்துப் பிங்கலந்தை தன்னில் "

" ஒருங்குள பொருளும் ஓர்ந்திட்டு
உரைத்தனன் விருத்தம் தன்னில்."

மேலுள்ள பாடல் பகுதியில் ஓர் இடத்தில் மட்டு மன்று—இரண்டு இடங்களில் பிங்கலத்தினும் திவாகரத்திற்கே மண்டல புருடர் முதன்மை கொடுத்திருப்பது புலனுகும். நிகண்டுக் கலையில் முழுக்க முழுக்கத் தோய்ந்து தாமும் ஒரு (சூடாமணி) நிகண்டு எழுதிய மண்டல புருடரின் தீர்ப்பாவது, பிங்கலத்தினும் திவாகரமே முந்தியது என்பதே. ஆனுல், மண்டல புருடரால் குறிப்பிடப்பட்டிருப்பது சேந்தன் திவாகர மன்று—ஆதி திவாகரமேயாகும் என்று சிலர் மறுப்புக் கூறலாம். இம் மறுப்பு தவருனது. மண்டல புருடர் குறிப்பிட்டிருப்பது சேந்தன் திவாகரத்தையே! சேந்தன் திவாகரத்தில் உள்ள பன்னிரண்டு தொகுதிகளின் பெயர்களையும் வரிசை மாருமல் அப்படியே அடுக்கி வைத்து

" விரவிய தேவர், மக்கள்,
விலங்கொடு, மரம், இடம், பல்
பொருள், செயும் வடிவு, பண்பு,
போற்றிய செயல், ஒலிப்பேர்,

ஒருசொல் பல்பொருளி னேடும்,
உரைத்தபல் பெயர்க் கூட்டந்தான்,
வருமுறை திவாகரம் போல்......''

என மண்டல புருடர் எழுதியிருக்கும் பாடலை மீண்டும் ஒருமுறை ஈண்டு நினைவுசெய்து பார்த்தால், திவாகரம் என அவரால் சுட்டப்பட்டிருப்பது சேந்தன் திவாகரமே என்னும் உண்மை மலைமேல் விளக்காகும்.

(2) இவ்வுண்மையை விளக்க மற்றும் ஒரு சான்று உண்டு. பதினேழாம் நூற்ருண்டில் ஆசிரிய நிகண்டு என்னும் நூல் இயற்றிய ஆண்டிப் புலவர் தமது முன்னுரைப் பாயிரத்தில்,

"முந்துள திவாகரம் பிங்கல நிகண்டுசீர்
முந்து காங்கயன் உரிச்சொல்
முறைபெறு கயாகரம் பகரும் அகராதியிவை
முற்றும் ஒன்ருய்த் திரட்டி......''

எனப் பிங்கலத்தினும் திவாகரத்திற்கே முதன்மை தந்துள்ளார். இதனுலும் திவாகரமே முற்பட்டது என்பது உறுதி.

உண்மை இஃதாயின், பவணந்தியாரும், அகராதி நிகண்டு எழுதிய புலியூர்ச் சிதம்பரரேவண சித்தரும் பிங்கலத்திற்கே முதன்மை கொடுத்திருப்பது ஏன்? என்ற வினு ஈண்டு எழலாம். இந்த ஐய வினுவிற்குத் தெளிவாகத் தக்க விடையிறுக்க முடியும்:

பவணந்தியார் தமது நன்னூலில் பிங்கலத்திற்கு முதன்மை கொடுத்திருக்கும் சூழ்நிலையை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அவர் நன்னூல் உரியியலில்,

பலபொருள் (அர்த்தம்) உடைய ஒரு சொல்லும், ஒரு பொருள் உடைய பல சொற்களுமாகச் சில சொற்களைக் கூறி, இப்படியே சொல்லிக்கொண்டு போனால் இந்நூல் விரியும் ஆதலால், ஏனைய சொற்களைப் பற்றியெல்லாம் விரிவாக அறியவேண்டுமாயின், பிங்கலம் முதலிய நூல்களில் கண்டுகொள்க என்னும் கருத்தில்,

> " இன்னது இன்னுழி இன்னணம் இயலும்
> என்றிசை நூலுட் குணகுணிப் பெயர்கள்
> சொல்லாம் பரத்தலிற் பிங்கல முதலா
> நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே."

என்று எழுதியுள்ளார். நன்னூலார் இப்படிக் கூறியிருப்பதில் பொருள் உண்டு. திவாகரம், பிங்கலம் என்னும் இரண்டனுள், திவாகரத்தினும் பிங்கலத்திலேயே மிக்க சொற்கள் இடம் பெற்றுள்ளன. அதாவது, திவாகரத்தில் ஏறக்குறைய 9500 சொற்களே விளக்கம் பெற்றுள்ளன; பிங்கலத்திலோ ஏறக்குறைய 15,800 சொற்கள் விளக்கம் பெற்றுள்ளன. கிட்டத்தட்ட பிங்கலத்தின் ஐந்தில் மூன்று பாகமே திவாகரம். இதனால்தான் பவணந்தியார், சொற்களை விரிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் பிங்கலம் முதலிய நூற்களில் காண்க என, மிக்க சொற்கள் இடம் பெற்றுள்ள பிங்கலத்தை முதலில் குறித்தார்.

தந்தை திவாகரர் சுருக்கமாய் எழுதியிருக்க, அவர் விட்டனவற்றையும் சேர்த்து மைந்தர் பிங்கலர் விரிவாக எழுதியிருப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை. 'தாய் பத்தடி தாண்டும் என்றால், குட்டி பதினாறடி தாண்டும்' என்று பழமொழி சொல்வார்களே !

பிங்கலத்தின் பெருக்கம் நோக்கிப் பவணந்தியார் அதற்கு முதன்மை கொடுத்திருப்பதின் பொருத்தத்தைப் புரிந்து கொள்ளாத சிலர், திவாகரத்தினும் பிங்கலமே முந்தியது எனப் பிற்காலத்தில் கூறத் தொடங்கிவிட்டனர். இவ்வாறே புலியூர்ச் சிதம்பர ரேவண சித்தரும் தம் அகராதி நிகண்டில் கூறிவிட்டிருக்கிறார்.

திவாகரத்தினும் பிங்கலத்திற்குச் சிலர் முதன்மை கொடுத்துவிட்டதற்கு இன்னொரு பொருட்டும் (காரணமும்) சொல்லலாம். அதாவது:— திவாகரரால் திவாகரம் தோன்றிய உடனேயே, அவர் மகன் பிங்கலரால் பிங்கலம் தோன்றிவிட்டிருக்கவேண்டும். இக்காலம்போல் அச்சு வசதியும் போக்குவரவு வசதியும் இல்லாத எட்டாம் நூற்றாண்டில் ஒரு குடும்பத்திலிருந்து அடுத்தடுத்துத் தோன்றிய இந்த இரு நிகண்டுகளும் கிட்டத்தட்ட ஒரே காலத்தில்தான் (அல்லது சிறிது முன்னும் பின்னுமாக) வெளியுலகில் பரவத் தொடங்கியிருக்கும். அதனால், எது முந்தியது — எது பிந்தியது என்று அறிய முடியாத ஒருநிலை — அறிய வேண்டிய தேவையில்லாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கலாம். ஒருசிலர் திவாகரம் படித்துவந்திருக்கலாம் — ஒரு சிலர் பிங்கலம் படித்து வந்திருக்கலாம். ஒரு சிலவிடங்களில் திவாகரம் பரவி யிருக்கலாம் — ஒரு சிலவிடங்களில் பிங்கலம் பரவி யிருக்கலாம். ஒரு சிலர்க்கு திவாகரம் உயர்ந்ததாகத் தெரியலாம்— ஒரு சிலர்க்குப் பிங்கலம் உயர்ந்ததாகத் தெரியலாம். இவ்வகையாக நாளடைவில் ஒருசிலர் திவாகரத்திற்கு முதன்மை கொடுத்திருக்கலாம் — ஒருசிலர் பிங்கலத்திற்கு முதன்மை கொடுத்திருக்கலாம். இதனால், எது முந்தியது

—எது பிந்தியது என்று சொல்ல முடியாத அளவுக்குப் பிற்காலத்தில் குழப்பம் ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த இரு நூற்களுக்கும் நடுவே குறைந்தது ஒரு நூற்றுண்டுக் காலமாயினும் இடைவெளி யிருந்திருக்குமாயின், இரு வேறுபட்ட இந்தக் குழப்பத்திற்கு இடம் இருந்திராது; இதுதான் முன்னது — இதுதான் பின்னது என்ற திட்டவட்டமான முடிவு எல்லோராலும் தொடர்ந்து ஒருமித்துக் கூறப்பட்டு வந்திருக்கும்.

இவ்வாறு சில பொருட்டுக்களால் சிலர் பிங்கலத்திற்கு முதன்மை கொடுத்திருப்பினும், திவாகரத்தின் தலைமை இறுதிவரை — இன்றுவரை மறையவில்லை. சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதியைப் பத்தொன்பதாம் நூற்றுண்டில் (1836) அச்சிட்ட புதுவை—நயநப்ப முதலியார் தமது பதிப்பு முகவுரையில்,

"கையெழுத்துப் புத்தகங்களி லெழுத்துஞ் சொல்லும் மாறுபடுகின்றனவற்றை விலக்கிச் சுத்தபாடமாக வழங்குவிக்கும் பொருட்டுத் திவாகரம் - பிங்கலம்—உரிச் சொன்னிகண்டு—அரும் பொருள் விளக்கத் தீபிகை—ஆசிரிய நிகண்டு—கயாகரம்—பொதிய நிகண்டு—சூத்திர வகராதி—இவை முதலிய நூல்களானும்—"

என்று திவாகரத்திற்கே முதன்மை கொடுத்துள்ளார். பிங்கலத்திற்கு முதன்மை கொடுத்துள்ள இருபதாம் நூற்றுண்டினர்களாகிய பிங்கல நிகண்டுப் பதிப்பாசிரியரும் அபிதான சிந்தாமணி ஆசியருங்கூட, பிங்கலர் திவாகரரின் மகன் என்பதை ஒத்துக் கொள்கின்றனர். ஆனல் அவர்கள், 'திவாகரன் பயந்த பிங்கல முனிவன்' என்னும் பாடற் பகுதியிலுள்ள திவாகரன்

என்பதற்கு ஆதிதிவாகரன் என மாற்றிப் பொருள் கொண்டதனாலேயே, சேந்தன் திவாகரரினும் பிங்கலர் முந்தியவர் எனத் திரிபாகக் கூறி விட்டனர்.

ஈண்டுப் பெரும்பாலாரின் கருத்துப்படி ஆராய்ந்து பார்த்ததில், பிங்கலத்தினும் சேந்தன் திவாகரமே முற்பட்டது என்ற முடிவு நமக்குக் கிடைத்துள்ளது. எனவே, பிங்கலர் சேந்தன் திவாகரரின் மகனாவார் என்பதும் தெரியவரும்.

சேந்தன் திவாகரருக்கும் பிங்கலருக்கும் தந்தை—மகன் என்ற முடிச்சு போடவேண்டியதில்லை; இவர் வேறு— அவர் வேறு என்று எவரேனும் கூறினும், சேந்தன் திவாகரத்தினும் பிங்கலம் பிந்தியது என்பது வரைக்குமாவது உறுதி.

சேந்தன் திவாகரரின் மகனே பிங்கலர் என்பதை ஒத்துக்கொண்டால், பிங்கலரின் காலமும் எட்டாம் நூற்றாண்டே என்பது பெறப்படும். பதின் மூன்றாம் நூற்றாண்டினராய பவணந்தியார் தமது நன்னூலில் பிங்கலத்தைக் குறித்திருப்பதால், பிங்கலம் பதின் மூன்றாம் நூற்றாண்டிற்கு மிகவும் முந்தியது என்பதை எவரும் மறுக்க முடியாது.

சைவ சமயத்தவராகிய சேந்தன் திவாகரரின் மகனே பிங்கலர் என்றால், இவரும் சைவ சமயத்தவர் என்பது பெறப்படும். மேலும், ஆசிரியர், வானவர் பெயர் வகைகளைக் கூறுங்கால், முதலில் விநாயகரையும் அடுத்துச் சிவன், உமை, முருகன் ஆகியோரையும் கூறி, பின்னரே மற்ற சமயக் கடவுளர்களைப் பற்றிப் பேசி யிருப்பதால், இவர் சைவ சமயத்தவர் என்பது உறுதி.

பிங்கல முனிவர் எனச் சுட்டப்படுவதிலிருந்து, வாழ்க்கையின் தொடக்கத்திலோ அல்லது இறுதியிலோ இவர் துறவு பூண்டிருக்கவேண்டும் என்பதும் தெளிவு.

## நூலின் அமைப்பு

பிங்கல நிகண்டு நூலின் முகப்பில் முதலாவதாக,

“ தன்தோள் நான்கின் ஒன்று கைம்மிகூஉம்
களிறுவளர் பெருங்கா டாயினும்
ஒளிபெரிது சிறந்தன் றளியஎன் நெஞ்சே.”

என்னும் பிள்ளையார் வணக்கப் பாடல் காணப்படுகிறது. இதன் கருத்து :— என் உள்ளம், ஐந்து கைகளையுடைய பிள்ளையாராகிய யானை தங்கியுள்ள காடாக இருப்பினும், அது மிக்க அறிவொளி வீசி விளங்குகிறது—என்பதாம். இந்தப் பாடலை அடுத்து, சிறப்புப் பாயிரம் என்னும் தலைப்பில்,

“ இருங்கடல் உடுத்தஇம் மாநிலம் விளங்க
அரும்பொருள் தெரிந்த அகன்தமிழ் வரைப்பின்
இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யுட் கணிகல னுதலிற்
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமல் இசைக்கும் இயற்சொல்
ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறு பொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி
செந்தமிழ் சேர்ந்த திசைதொறும் திசைதொறும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி

வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொற்ரு குதம்
சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்
அந்நாற் சொற்றிறம் அரில்தப முழுதும்
செங்கதிர் வரத்தால் திவாகரன் பயந்த
பிங்கல முனிவன் எனத்தன் பெயர்நிறீஇ
உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
விருப்புடன் நிலைஇய வீறுசால் சிறப்பின்
வாஅன் வகையும் வானவர் வகையும்
வானினும் மண்ணினும் வழங்கல் வழாஅ
ஈனமில் ஐயர் இயல்புளி வகையும்
அவனி வகையும் ஆடவர் வகையும்
அவர்திறத் தமைந்த அநுபோக வகையும்
அவையவத் தடைத்த ஆனு இயல்பிற்
பண்பிற் செயலிற் பகுதி வகையும்
மாப்பெயர் வகையும் மரப்பெயர் வகையும்
ஒருசொல் பல்பொருள் ஓங்கிய வகையுமென்று
இருளற ஈரைந் தாக்கி
மருளற வகுத்தனன் மதியினின் விரைந்தே."

என்னும் பாடல் காணப்படுகிறது. இதன் சுருங்கிய கருத்தாவது :— ஆசிரியர், இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொற்களையும் விளக்க உரிச்சொல் (நிகண்டு) நூல் இயற்றத் தொடங்கி, திவாகரன் பெற்ற பிங்கல முனிவன் எனத் தம் பெயரைச் சொல்லிக்கொண்டு அப்பெயரையே நூலுக்கும் இட்டு, 'வான்வகை' முதலாக 'ஒரு சொல் பல்பொருள்வகை' ஈருகப் பத்துத் தொகுதிகளைத் தம் அறிவுத் திறமையால் ஐயந்திரிபற அமைத்து விளக்கியுள்ளார் — என்பதாகும்.

மேல் கூறப்பட்டுள்ள பிள்ளையார் வணக்கப் பாடலும் சிறப்புப் பாயிரப் பாடலும், ஆசிரியர் பிங்கலரால்

எழுதப்பட்டவையல்ல. இவை யிரண்டும், பிறகாலத்தில் ஏடு பெயர்த்து எழுதியோரால் இயற்றிச் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். ஓர் ஓலையிலிருந்து மற்ருேர் ஓலையில் பெயர்த்து எழுதுபவர்களும், ஓலைச் சுவடியிலிருந்து தாளில் அச்சிடுபவரும் இவ்வாறு கடவுள் வணக்கமும், ஆசிரியரின் சிறப்பைக் கூறும் பாயிரமும் (அணிந்துரையும்) எழுதிச் சேர்ப்பது தொன்று தொட்ட மரபு.

இப்பாடல்கள் இரண்டும் பிற்காலத்தவர் எழுதிச் சேர்த்தவையல்ல என்ருலும், ஆசிரியர் காலத்திலேயே ஒரு சிறந்த புலவர் எழுதியளித்த அணிந்துரை (மதிப்புரை)யாகவும் இருக்கலாம். இக்காலத்தும் ஓர் எழுத்தாளர் எழுதிய நூலுக்கு அறிஞர் சிலர் மதிப்புரை — சிறப்புரை அளிக்கும் மரபு உண்டல்லவா?

இவ்விரண்டு பாடல்களும் பிங்கல முனிவரே எழுதிய தற்சிறப்புப் பாயிரமாகும் — அதாவது இக்காலத்தில் நூலாசிரியர் நூலின் முகப்பில் எழுதுகிற ஆசிரியர் முன்னுரை (Preface) போன்றனவாகும் என்று சிலர் கூறலாம். இக்கூற்று பொருந்தாது. சிறப்புப் பாயிரப் பாடலின் இடையிலுள்ள 'பிங்கல முனிவன் எனத்தன் பெயர் நிறீஇ', என்னும் அடியைக் கூர்ந்துநோக்கின், பிறர்எழுதியதே என்பதுபுலப்படும். பிங்கல முனிவரே எழுதியிருப்பின், 'தன் பெயர்' எனக் கூருது 'என் பெயர்' என்று கூறியிருப்பார்; அதாவது, 'பிங்கல முனிவன் என என் பெயர் நிறீஇ' என்று எழுதியிருப்பார். எனவே, இச்சிறப்புப் பாயிரப் பாடல் பிறர் எழுதியதே என்பது தெளிவு. இப்பாடலுக்கு முன்னல் பிள்ளையார் வணக்கப் பாடல் இருப்பதால்

அஃதும் சிறப்புப் பாயிரம் எழுதியவர் எழுதியதே. சிறப்புப் பாயிரத்திற்குப் பின்னால் பிள்ளையார் வணக்கப் பாடல் இருந்திருப்பின், அதனைப் பிங்கலர் எழுதிய காப்புப் பாடலாகக் கருதமுடியும். அவ்வாறு இல்லையாதலின், இரண்டுமே பிறர் எழுதிய பாடல்களே.

## வகைகள்

பிங்கலம் பத்து வகைகளாக அமைக்கப்பட்டுள்ளது. திவாகரத்தின் ஒவ்வொரு பிரிவும் 'தொகுதி' என அழைக்கப்படுதல் போல, பிங்கலத்தின் ஒவ்வொரு பிரிவும் 'வகை' என அழைக்கப்பட்டுள்ளது. அதன் பத்து வகைகள் வருமாறு :—

முதலாவது — வான்வகை
இரண்டாவது — வானவர் வகை
மூன்றாவது — ஐயர் வகை
நான்காவது — அவனி வகை
ஐந்தாவது — ஆடவர் வகை
ஆறாவது — அநுபோக வகை
ஏழாவது—பண்பிற் செயலின் பகுதிவகை
எட்டாவது—மாப் பெயர் வகை
ஒன்பதாவது—மரப் பெயர் வகை
பத்தாவது—ஒரு சொல் பல்பொருள் வகை

இந்தப் பத்து வகைகளுள் முதல் ஒன்பது வகைகளும் 'ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதி' என்னும் முதல் இனத்தைச் சேர்ந்தனவாம்; அதாவது, ஒரே பொருளுக்கு உரிய பல பெயர்களையும் கூறுவனவாம். இறுதியான பத்தாவது வகையோ 'ஒரு சொல் பல்

பொருள் பெயர்த் தொகுதி' என்னும் இரண்டாவது இனத்தைச் சேர்ந்ததாம்; அதாவது, ஒரு சொல்லுக்கு எத்தனை பொருள்கள் (அர்த்தங்கள்) உண்டோ, அத்தனையையும் கூறுவதாம். திவாகரத்தின் இறுதியில் உள்ளதுபோல் 'பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி' என்னும் மூன்ருவது இனம் பிங்கலத்தில் பேசப்படவில்லை.

திவாகரத்தோடு பிங்கலத்தை ஒத்திட்டு நோக்குவாம்:—திவாகரத்தில் உள்ள முதல் இனத்தைச் சேர்ந்த முதல் பத்துத்தொகுதிகளையும் பிங்கலர் முதல் ஒன்பது வகைக்குள் அடக்கிவிட்டார். திவாகரத்தில் உள்ள இரண்டாம் இனத்தைச் சேர்ந்த பதிேைராவது தொகுதியைப் பிங்கலர் தமது நூலில் பத்தாவது தொகுதியாக அமைத்துள்ளார். திவாகரத்தில் உள்ள மூன்ரும் இனத்தைச் சேர்ந்த பன்னிரண்டாம் தொகுதியைப் பிங்கலர் பேசாது விட்டுவிட்டார்.

இனி, ஒவ்வொரு வகையும் எது எதைப் பற்றியது என்று சிறிது நோக்குவாம் :—

(1) வான்வகை :—இது ஏழுலகம், வீடு, மழை முதலியன பற்றியது.

(2) வானவர் வகை :— இது தெய்வங்களையும் தேவர்களையும் பற்றியது.

வான்வகை, வானவர் வகை ஆகிய இரண்டையும் திவாகரர் தெய்வப் பெயர்த் தொகுதி என்னும் ஒரே தொகுதியில் அடக்கி விட்டார்.

(3) ஐயர் வகை :—முனிவர், கவிஞர் முதலானவரைப் பற்றியது. இப்பகுதியில் உள்ள பலவற்றைத்

திவாகரா தெய்வப் பெயர்த் தொகுதியிலும் மக்கள் பெயர்த் தொகுதியிலும் அடக்கிவிட்டார்.

(4) அவனி வகை:—இது இடங்களைப் பற்றியது. திவாகரத்தின் இடப் பெயர்த் தொகுதியைப் போன்றதே இது.

(5) ஆடவர் வகை:—இது, திவாகரத்தின் மக்கள் பெயர்த தொகுதியைப் போன்றது.

(6) அநுபோக வகை :— இது, வாழ்க்கையில் அநுபவிக்கிற — துய்க்கிற பொருள் வகைகளைப் பற்றியது. இப்பகுதி பின்வரும் இருபது உள் தலைப்புக்களின்கீழ் மிக விரிவாகப் பேசப்பட்டுள்ளது :—

1. உணவின் வகை
2. பூணின் வகை
3. இரத்தின வகை
4. உலோக வகை
5. ஆடை வகை
6. பூச்சு வகை
7. சூட்டு வகை
8. இயல் வகை
9. இசை வகை
10. நாடக வகை
11. மண்டில வகை
12. படை வகை
13. காலாள் வகை
14. தோல் கருவி வகை
15. குடை வகை
16. ஆயுத வகை
17. செயற்கை வகை
18. அக்குரோணி வகை
19. வெள்ள வகை
20. இல்லணி வகை

மேலுள்ளவாறு பிங்கலத்தில் அநுபோக வகை என்னும் தொகுதியில் கூறப்பட்டுள்ளனவற்றை, திவாகரர் பல்பொருள் பெயர்த் தொகுதி, செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி என்னும் இரண்டு தொகுதிகளில் அமைத்துள்ளார்.

(7) பண்பின் செயலில் பகுதிவகை:—இது, திவாகரத்தில் உள்ள பண்பு பற்றிய பெயர்த் தொகுதி, செயல் பற்றிய பெயர்த் தொகுதி என்னும் இரண்டு தொகுதிகளையும் போன்றது.

(8) மாப் பெயர் வகை:— இது, திவாகரத்தின் விலங்கின் பெயர்த் தொகுதியைப் போன்றது.

(9) மரப் பெயர் வகை :— இது, திவாகரத்தின் மரப் பெயர்த் தொகுதி போன்றது.

(10) ஒரு சொல் பல்பொருள் வகை :-இது, திவாகரத்தின் பதினோராவது தொகுதியாகிய ஒரு சொல் பல் பொருள் பெயர்த் தொகுதியைப் போன்றது.

## நூற்பா

பிங்கல நிகண்டு திவாகரம் போலவே நூற்பாவால் (சூத்திர நடையால்) ஆனது. இந்நூலில் மொத்தம் *4121* நூற்பாக்கள் உள்ளன. ஏறக்குறைய 15,800 சொற்கள் விளக்கம் பெற்றுள்ளன.

## முறை மாற்றம்

பிங்கலத்தில் உள்ள 'ஒரு சொல் பல்பொருள் வகை' என்னும் பத்தாம் பகுதிதான், இக்காலத்தில் உள்ள அகராதிகளைப்போல், ஒரு சொல்லுக்கு உரிய பல பொருள்களையும் கூறுகிறது. இப்பகுதியில் 1091 சொற்களுக்கு உரிய பொருள்கள் தரப்பட்டுள்ளன. பிங்கலர் இந்த 1091 சொற்களையும் அகராதி முறையில் அடுக்கிக் கூறாமல், தம் உள்ளம் போன போக்கில் முன்னும் பின்னுமாக வைத்திருந்தார். ஒரு

சொல்லுக்குப் பொருள் காணவேண்டுமானால் அந்தச் சொல்லைப் பிங்கலரது அமைப்புமுறையில் உடனே கண்டுபிடிக்க முடியாது. முதலிலிருந்து படித்துக் கொண்டு வந்தால்தான் அச்சொல் கிடைக்கும். எனவே, பிங்கலரது வைப்புமுறை வசதி இல்லாதது என்பது புலனாகும்.

இக்குறையைப் போக்க, பிற்காலத்தில் பிங்கல நிகண்டை அச்சிட்ட சிவன்பிள்ளை என்னும் அறிஞர், 1091 சொற்களையும், அ–ஆ, க–கா என இக்கால அகராதி முறையில் அடுக்கிப் பதிப்பித்துள்ளார். சான்றாக, முதல் மூன்று பாக்களையும் இறுதியில் உள்ள மூன்று பாக்களையும் காண்பாம் :--

[அகப்பா]

(1) " புரிசையும் உள்ளுயர் நிலமும் அகப்பா."

[அகம்]

(2) " மனமும் உள்ளும் மனையும் பாவமும்
புவியும மரப்பொதுப் பெயரும் அகமே."

[அகலுள்]

(3) " ஊரும் நாடும் அகலுள் ஆகும்."

[வை]

(1089) " வைக்கோலும் கூர்மையும் பகுதியும் வை எனல்.

[வைகல்]

(1090) " தினமும் தங்கலும் தெரியின் வைகல்."

[வையம்]

(1091) " உரோகிணி நாளும் பாரும் தேரும்
ஏறும் ஊர்தியும் வையம் எனப்படும்."

மேல் உள்ள அகராதி முறையான அமைப்பு முறை சிவன்பிள்ளை யவர்களின் கைவண்ணமாகும். படிப்பவரின் வசதியைக் கருதி, பிங்கலரது வைப்பு முறையை மாற்றிய சிவன் பிள்ளையின் துணிவு வியத் தற்குரியது. இம்முறையினால், எந்தச் சொல்லுக்குப் பொருள் காணவேண்டுமாயினும் உடனே கண்டு பிடித்துவிடலாம்.

இந்த அகராதி வைப்புமுறை சிவன் பிள்ளையின் கைவண்ண மன்று; பிங்கலரே அகராதி முறையில் அமைத்தார் என்று யாரும் சொல்ல முடியாது—சொல் லக் கூடாது; ஏனெனில், பழைய ஓலைச் சுவடிகள் பல வற்றிலும் அகராதி முறையில் நூற்பாக்கள் காணப் பட வில்லை; அதனால் என்க.

## நூற்பா ஒற்றுமை

திவாகரம் போலவே பிங்கலமும் நூற்பா நடை யால் ஆனது என்ற ஒற்றுமை ஒருபுறம் இருக்க,— திவாகரத்தில் உள்ள சில நூற்பாக்கள் போலவே பிங் கலத்திலும் சில நூற்பாக்கள் உள்ளன. சான்றாகச் சில வருமாறு :—

(ஓர் அறிவுயிர்)

" உற்றறி புலனது ஒன்றே உடைமையின்
மற்றைப் புல்லும் மரனும் ஓரறிவே."

(ஈரறி வுயிர்)

" உற்றறி புலனும், நாவும் உடைமையின்
அட்டையும் நந்துவும் போல்வ ஈரறிவே."

(மூவறி வுயிர்)

" உற்றறி புலன், நா, மூக்கும் உடைமையின்
முற்பெறு சிதல் எறும்பு இனைய மூவறிவே."

(நாலறி வுயிர்)

" உற்றறி புலன், நா, மூக்கொடு, கண்ணும்
பெற்ற வண்டும் ஞெண்டும் நாலறிவே."

(ஐயறி வுயிர்)

" உற்றறி புலன், நா, மூக்கொடு, கண், செவி
மக்களும் மாவும் ஐந்தறி வினவே."

(ஆறறி வுயிர்)

" மனத்தோடு ஆறறி வினரே மக்கள்
ஒருசார் விலங்கும் அதுபெறற் குரித்தே."

மேல் உள்ள ஆறு நூற்பாக்களும் திவாகரத்தில் உள்ளவை. இனி இதே கருத்துக்களைக் கூறும் பிங்கல நூற்பாக்களைக் காண்பாம் :—

(ஓரறி வுயிர்)

" உற்றறி புலனது ஒன்றே உடைமையின்
மற்றைப் புல்லும் மரனும் ஓரறிவே."

(ஈரறி வுயிர்)

" உற்றறி புலனும், நாவும் உடைமையின்
அட்டையும் நந்தும் போல்வ ஈரறிவே."

(மூவறி வுயிர்)

" உற்றறி புலன், நா, மூக்கும் உடைமையின்
மூற்பெறு சிதல் எறும்பு ஆதி மூவறிவே."

(நாலறி வுயிர்)

" உற்றறி புலன், நா, மூக்கொடு, கண்ணும்
பெற்ற வண்டு ஞெண்டு ஆதி நாலறிவின."

(ஐயறி வுயிர்)

" உற்றறி புலன், நா, மூக்கொடு, கண், செவி
மக்களும் மாவும் ஐயறி வினவே."

(ஆறறி வுயிர்)

" மனனோடு ஆறறி வினரே மக்கள்
ஒருசார் விலங்கும் அதுபெறற் குரித்தே."

இவை ஆறும் பிங்கல நூற்பாக்களாகும். இந்த ஆறு பாடல்களைப் பொறுத்தமட்டும், எங்கோ ஒரு சொல் அல்லது ஓரிரு எழுத்து தவிர வேறு வேறுபாடு திவாகரத்திற்கும் பிங்கலத்திற்கும் இல்லையன்றோ?

பிங்கலத்தில் மேலும் பல விடங்களில், திவாகர நூற்பாக்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு, சில சொற்களையும் அடிகளையும் கூட்டியும் குறைத்தும் இடம் மாற்றியும் புதுக்கியும் நூற்பாக்கள் அமைக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

இதிலிருந்து, பொதுவாக முன்னோர் மொழியை—சிறப்பாகத் தந்தையின் மொழியைப் போற்றவேண்டும் என்னும் மரபைப் பிங்கலர் பின்பற்றி யுள்ளார் என்பது புலனாகும். அன்றியும், தந்தையின் சொத்தாகிய திவாகரத்தை, மைந்தனாகிய பிங்கலர் எப்படியும் கையாளலாம் போலும்!

# பெயர் தெரியா நிகண்டுகள்

திவாகரம், பிங்கலம் ஆகியவற்றின் காலம் எட்டாம் நூற்றாண்டாகும் என்னும் முடிவை ஆராய்ச்சியாளர் சிலர் ஒத்துக்கொள்ளாமல் பத்தாம் நூற்றாண்டு வரைக்கும் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு போகிறார்கள்.

இவ்விரண்டினையும் அடுத்து, கிடைத்திருக்கும் நிகண்டுகட்குள் காலத்தாலும் தரத்தாலும் முதன்மையுடைய சூடாமணி நிகண்டின் காலம் பதினாறாம் நூற்றாண்டாகும் எனச் சிலர் ஆய்ந்து கூறியுள்ள முடிவை வேறு சிலர் ஒத்துக் கொள்ளாமல், பதினான்கு அல்லது பதின்மூன்றாம் நூற்றாண்டெனச் சில நூற்றாண்டுகள் முன்னுக்கு இழுத்துக்கொண்டு வருகின்றனர்.

எது எப்படி யிருந்தபோதிலும், முன்னர்ப் புகழ் பெற்றிருந்த திவாகரம், பிங்கலம் ஆகியவற்றின் காலத்துக்கும், பின்னர்ப் புகழ்பெற்றிருந்த சூடாமணி நிகண்டின் காலத்துக்கும் நடுவில், இரண்டு மூன்று நூற்றாண்டு காலமோ — அல்லது நான்கைந்து நூற்றாண்டு காலமோ-அல்லது ஏழெட்டு நூற்றாண்டு காலமோ-- அதாவது ஒரு சில நூற்றாண்டு காலமாயினும் இடைவெளி யிருந்திருக்கவேண்டும் என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்த இடைவெளிக் காலத்தில் பல நிகண்டுகள் தோன்றியிருக்கக்கூடும். ஆனால் அவை கிடைக்கவில்லை; பெயர்களும் தெரியவில்லை;

அந்தோ ! அழிந்தொழிந்து மறைந்தன. ஆனால் சில நிகண்டுகள் மட்டும் சிறிதளவு சுவடுகள் விட்டுச் சென்றுள்ளதாக ஆராய்ச்சியாளர் அறிவித்துள்ளனர். சில சுவடுகள் வருமாறு :—

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் உரியியலின் இறுதியிலுள்ள

"அன்ன பிறவுங் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉம்
உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட
வியன்ற மருங்கின் இனைத்தென வறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்
தோம்படை யாணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற வுணர்தல் என்மனார் புலவர்-"

என்னும் நூற்பாவின் உரையில் உரையாசிரியர் இளம்பூரணர்,

"இருமை பெருமையும் கருமையும் செய்யும்."

"தொன்று என்கிளவி தொழிற்பயில்வு ஆகும்."

என்னும் இரண்டு நூற்பாக்களை எடுத்துக் காட்டியுள்ளார். இந்த இரண்டு பாக்களும் எந்த நூலிலிருந்து எடுத்தாளப்பட்டன என்று கண்டுபிடிக்க முடியவில்லை. பாக்களைப் பார்த்தால், ஏதோ நிகண்டு நூலைச் சேர்ந்தவையாகத் தெரிகின்றன. 'இருமை என்னும் சொல்லுக்குப் பெருமை, கருமை என இரு பொருள் உண்டு' என்பது முதற்பாவின் கருத்து. 'தொன்று என்னும் சொல்லுக்குத் தொழிற்பயிற்சி என்னும் பொருள் உண்டு' என்பது இரண்டாவது பாவின் கருத்து. எனவே இவையிரண்டும், ஏதோ ஒரு

நிகண்டின்—அல்லது—எவையோ இரண்டு நிகண்டு களின் ஒரு சொல் பல் பொருள் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டவையாக இருக்கவேண்டும். இவ்விரு பாக்களும் இதுவரைக்கும் கிடைத்துள்ள எந்த நிகண்டு களிலும் இல்லையாதலின், பெயர் தெரியாது அழிந்து சிதைந்து போன நிகண்டைச் சேர்ந்தனவே என்பது தெளிவு. இந்த இரு பாக்களையும் எடுத்துக் காட்டிய இளம்பூரணர் பதினோராம் நூற்றாண்டினர் எனச் சொல்லப்படுவதால் அக்காலத்துக்கு முன்பே இவை எழுதப்பட்டிருக்கவேண்டும்.

அடுத்து, யாப்பருங்கலம் என்னும் யாப்பிலக்கண நூலின் விருத்தியுரையில் ஒரு சுவடு கிடைக்கிறது. யாப்பருங்கலத்தின் செய்யுளியலில் உள்ள

> "குறள்சிந் தின்னிசை நேரிசை பஃறொடை
> எனஐந் தாகும் வெண்பாத் தானே."

என்னும் நூற்பாவின் உரையில், 'நேர்' என்னும் சொல்லுக்குரிய பொருள்களைப் பின்வருமாறு உரை யாசிரியர் குறிப்பிட்டுள்ளார்:—

**"நேர் என்பது மாறுதற் கண்ணும், ஒத்தற் கண்ணும், தனிமைக் கண்ணும், மிகுதிக் கண்ணும், நுட்பத்தின் கண் ணும், சமனுதற் கண்ணும், உடம்படுதற் கண்ணும், பாதிக் கண்ணும், தலைப்பாட்டின் கண்ணும், நிலைப்பாட்டின் கண் ணும், கொடைக் கண்ணும் நிகழும்."**

அதாவது—நேர் என்னும் சொல்லுக்கு, மாறுதல், ஒத்தல், தனிமை, மிகுதி, நுட்பம், சமன், உடம்படுதல், பாதி, தலைப்பாடு, நிலைப்பாடு, கொடை எனப் பதினொரு பொருள்கள் சொல்லப்படும்—என்று உரையாசிரியர் அறிவித்துள்ளார்.

இந்தப் பதினொரு பொருளும் ஏதேனும் ஒரு நிகண்டிலிருந்து எடுத்துச் சொல்லப்பட்டிருக்க வேண்டும். அந்த நிகண்டு இன்னதென்று தெரியவில்லை. இதுவரைக்கும் கிடைத்துள்ள எந்த நிகண்டிலும் பதினொரு பொருள்கள் கூறப்படவில்லை. எடுத்துக்காட்டாக, திவாகர நிகண்டில்,

> "உடன்படல், உவமை, ஒத்தல், நுட்பம்,
> சமன், பாதி, மிகுதி, தலைப்பாடு, தனிமைஎன
> நிகழ்ந்த ஒன்பானும் நேர் என் கிளவி."

என ஒன்பது பொருள்களே கூறப்பட்டுள்ளன. இந்தப் பாவில் திவாகரரே 'ஒன்பான்' (ஒன்பது) என எண்ணிக்கையிட்டுச் சொல்லிவிட்டார். சூடாமணி நிகண்டிலோ,

> "நேர், சமம், ஈதல், பாதி,
> நெடில், உடன்பாடு, நுட்பம்."

என ஆறு பொருள்களே அறிவிக்கப்பட்டுள்ளன. பிங்கலம் போன்ற சில நிகண்டுகளிலோ நேர் என்னும் சொல் பேசப்படவேயில்லை. எனவே, யாப்பருங்கல விருத்தியுரையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள பதினொரு பொருள்களையும் கூறும் ஏதோ ஒரு நிகண்டு இருந்திருக்கவேண்டும். அது கிடைக்கவில்லை—அதன் பெயரும் தெரியவில்லை.

மற்றும், திவ்யப் பிரபந்தத்தின் பெரிய விரிவுரையில் சில விடங்களில் சில நூற்பாக்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் அமைப்பை நோக்குங்கால் அவை நிகண்டு நூற்பாக்களாகவே தெரிகின்றன. அவையும் எந்தெந்த நிகண்டுகளைச் சேர்ந்தவை எனப் புலப்படவில்லை.

மேலும், சென்னை அரசின் கீழைக்கலை ஓலைச் சுவடி நிலையத்தில், ஆசிரியர்பெயரும் நூலின்பெயரும் தெரியாத ஏதோ ஒரு நிகண்டின் ஆறு தொகுதிகள் மட்டும் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. அந் நிகண்டின் முதல் தொகுதி இல்லையாம். முதல் தொகுதி இருந்திருந்தால் பெயர் தெரிந்திருக்குமே! அத்தொகுதி எப்படியோ கைநழுவி விட்டிருக்கிறது. இரண்டாம் தொகுதியிலிருந்து ஆறு தொகுதிகள் உள்ளனவாம். இறுதித் தொகுதிகளும் காணப்படவில்லையாம். இக் காலத்தில் புத்தகங்களின் முன் தாள்கள் சிலவும் பின் தாள்கள் சிலவும் கிழிந்து அகன்று விடுவதுபோல அக்காலத்தும் ஓலைச்சுவடி நூற்களின் முற்பகுதியும் பிற்பகுதியும் கெட்டுவிட்டிருக்கும் அல்லவா? 'பதிற் றுப் பத்து' என்னும் சங்க இலக்கியத்தின் முதல் பத்தும் இறுதிப்பத்தும் இப்படித்தானே இழக்கப்பட்டு விட்டன. இந்த நிலை மேற்குறிப்பிட்ட நிகண்டிற்கும் ஏற்பட்டிருக்கிறது இந்நிகண்டு நூற்பா(சூத்திர) நடையில் உள்ளதாம்.

இவ்வாறு பல நிகண்டுகள் ஏற்பட்டும், அவை நன்கு போற்றிக் காக்கப்படாமையால் ஊர் பேர் தெரியாதபடி அழிந்து போயின. எனவே, இப்பெயர் தெரியா நிகண்டுகள், திவாகரம் பிங்கலம் ஆகியவற் றின் காலத்துக்கும் சூடாமணி நிகண்டின் காலத்துக் கும் நடுவிலுள்ள இடைவெளிக் காலத்தில் தோன்றி யிருக்கக் கூடும் என்று ஆராய்ச்சியாளர் சிலர் கூறு கின்றனர். ஆனால், இப்பெயர் தெரியா நிகண்டுகள் அனைத்துமே திவாகரத்திற்கும் சூடாமணிக்கும் இடையில்தான் தோன்றின என்று அறுதியிட்டுக் கூற முடியாது; இன்னோரன்னவற்றுள் சில, ஆதி

திவாகரம் தோன்றி அழிந்துவிட்டதுபோல் சேந்தன் திவாகரத்திற்கு முந்தியும் தோன்றி மறைந்திருக்க லாம். மற்றும் தொல்காப்பியச் சொல்லதிகார-இளம் பூரணர் உரையிலிருந்து எடுத்துக் காட்டப்பட்ட

" இருமை பெருமையும் கருமையும் செய்யும்."

" தொன்று என்கிளவி தொழிற் பயில்வு ஆகும்."

என்னும் இருநூற்பாக்களும், சிலர் கூறுவதுபோல் ஏதோ ஒரு நிகண்டைச் சேர்ந்தனவாயிராமல், தொல் காப்பியம் போன்ற ஒரு மொழியிலக்கண நூலைச் சேர்ந்தனவாயும் இருக்கலாமே!

ஆகக் கூடியும், பெயர் தெரியா நிகண்டுகள் சில, திவாகரத்திற்கு முந்தித் தோன்றி மறைந்தது போலவே, திவாகரத்திற்கும் சூடாமணிக்கும் உள்ள இடைக்காலத்திலும் தோன்றி மறைந்தன என்பதைத் தடையின்றி ஒத்துக்கொள்ளலாம். ஏனெனில், சூடா மணியைத் தொடர்ந்து சிறிதும் இடைவெளியின்றிப் பல நிகண்டுகள் தோன்றி யிருக்கும்போது, சூடா மணிக்கு முன்பும் திவாகரம், பிங்கலம் ஆகியவற்றைத் தொடர்ந்து சில அல்லது பல நிகண்டுகள் தோன்றி யிருக்கத்தானே வேண்டும். அந்தக் காலத்தில் ஒவ்வொரு நூற்றாண்டிலும் தமிழறிஞர் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு நிகண்டு செய்திருப்பர் போலும்! இப்படிப் பார்த்தால், இப்போது கிடைத்திருக்கும் நிகண்டுகளைவிட, கிடைக்காமல் மறைந்து போன நிகண்டுகளே மிகுதி என்பது தெளிவாகும். சிவசுப்ர மணியக் கவிராயர் என்னும் புலவர் தாம் இயற்றிய நாமதீப நிகண்டின் தற்சிறப்புப்பாயிரப் பாடல் ஒன் றில், இதற்குமுன் தோன்றியுள்ள நிகண்டுகள்

நூற்றுக் கணக்கானவை எனக் கருமித்தனமாகக் கணக்குப் போடாமல், ஆயிரக் கணக்கானவை—அதுவும் பல்லாயிரக் கணக்கானவை எனப் பரந்த அளவில் தாராளக் கணக்குப் போட்டுள்ளார். அந்தப் பாடல் வருமாறு :

“ பல்லா யிரநிகண்டில் பண்டிதர்கள் சொன்னபொருள்
எல்லாம் எளிதாய் இனிதுணரக்—கல்லிடையூர்
மன்னுசிவ சுப்ர மணியன் கவிராசன்
பன்னுதமிழ் நாம தீபம்.”

இப்பாடலிலிருந்து, மறைந்துபோன நிகண்டுகளின் அளவை உய்த்துணரலாம். கிடைத்திருக்கும் நிகண்டுகளில் ஏதேனும் ஒன்றையாயினும் எவரும் கல்லாத இந்த இருபதாம்நூற்றுண்டில்—கிடைத்திருக்கும் நிகண்டுகளின் பெயர்களைக்கூடப் பெரும்பாலான கல்விமான்கள் அறிந்திராத இந்த இருபதாம் நூற்றுண்டில்—நிகண்டுகள் என ஒருசார் கலைநூற்கள் உள்ளன என்பதையே மாபெருங் கல்வி வல்லுநர்களுள் பெரும்பாலோர் தெரிந்திராத இரங்கத்தக்க இந்த இருபதாம் நூற்றுண்டில், கிடைக்காமல் மறைந்துபோன நிகண்டுகளைப் பற்றிக் கவலைப்பட யார் இருக்கிறுர்கள் ? அந்தோ காலமே !

# நன்னூல்

திவாகரம், பிங்கலம் ஆகியவற்றிற்கும் சூடாமணி நிகண்டிற்கும் இடையில், நிகண்டு மாதிரியான ஓர் அமைப்பைத் தன்னகத்தே ஓர் உறுப்பாகக் கொண்ட 'நன்னூல்' என்னும் ஒரு நூல் எழுந்தது. நல்ல நூல்—நன்மை தரும் நூல் ஆனது பற்றி இது நன்னூல் எனப் பெயரிடப்பட்டது. தொல்காப்பியம் போலவே இஃதும் ஒரு மொழியிலக்கண நூலாம்.

## ஆசிரியர் வரலாறு

நன்னூலின் ஆசிரியர் பவணந்தியார் என்பவர். இவர் ஒரு சைனசமயத் துறவி. நூலின் தொடக்கத்தில்

" பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த
நான்முகற் றொழுது நன்கியம்புவன் எழுத்தே."

என அசோக நிழலில் அமர்ந்த அருகக் கடவுளை வழிபட்டிருத்தலின் சைனர் என்பது தெளிவு. இவர் சனகை என்றழைக்கப்படும் சனகாபுரம் என்னும் ஊரில் வாழ்ந்த சன்மதி என்னும் முனிவரின் மாணுக்கராவார். அதனுல் இருவரும் அதே ஊரினர் எனக்கொள்ளலாம். இவர் தொண்டை மண்டலத்தில் உள்ள சனகாபுரம் என்னும் ஊரினர் என்று தொண்டை மண்டல சதகம் என்னும் நூலும், கொங்கு மண்டலத்திலுள்ள சனகாபுரம் என்னும் ஊரினர் என்று கொங்கு மண்டல சதகமும் கூறுகின்றன. இவற்றுள் எது உண்மையோ? சீயகங்கன் என்னும் சிற்றரசனுல் இவர்

ஆதரிக்கப் பெற்றவர். அவனது வேண்டுகோளின் படியே இவர் நன்னூலை எழுதினாராம்! ஆசிரியரது வரலாற்றை நன்னூலின் முகப்பிலுள்ள

"மலர்தலை உலகின் மல்கிருள் அகல
இலகொளி பரப்பி யாவையும் விளக்கும்
பரிதியின் ஒருதா னாகி முதலீறு
ஒப்பள வாசை முனிவிகந் துயர்ந்த
அற்புத மூர்த்திதன் அலர்தரு தன்மையின்
மனவிருள் இரிய மாண்பொருள் முழுவதும்
முனிவற அருளிய மூவறு மொழியுளும்
குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையின் இருந்தமிழ்க் கடலுள்
அரும்பொருள் ஐந்தையும் யாவரும் உணரத்
தொகைவகை விரியிற் றருகெனத் துன்னார்
இகலற நூறி யிருநில முழுவதும்
தனதெனக் கோலித் தன்மத வாரணம்
திசைதொறு நிறுவிய திறலுறு தொல்சீர்க்
கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்
திருந்திய செங்கோல் சீய கங்கன்
அருங்கலை விநோதன் அமரா பரணன்
மொழிந்தன னாக முன்னோர் நூலின்
வழியே நன்னூல் பெயரின் வகுத்தனன்
பொன்மதில் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத்து இருந்தவத் தோனே."

என்னும் சிறப்புப் பாயிரச் செய்யுளால் ஓரளவு உய்த்துணரலாம்.

## ஆசிரியர் காலம்

பவணந்தியாரை ஆதரித்த சீயகங்கன், மூன்றாங் குலோத்துங்கச் சோழ மன்னனின்கீழ் அடங்கியாண்ட

ஒரு சிற்றரசன். அச்சோழ மன்னனது ஆட்சிக்காலம் கி. பி. 1178 முதல் 1216-ஆம் ஆண்டுவரையும் ஆகும். எனவே, சீயகங்கன் காலமும் பவணந்தியார் காலமும் அதே அல்லது அதைத் தொடர்ந்த காலம் என்பது புலனுகும். ஆகவே, நன்னூல் எழுந்த காலம் பதின் மூன்ரும் நூற்ருண்டின் முற்பகுதி எனலாம். நன்னூ லில் பிங்கலம் குறிப்பிடப்பட்டிருப்பதால் அதற்குப் பிற்பட்டது இது என்பதும் அறியற்பாற்று.

## நூலின் அமைப்பு

நன்னூல் நூற்பா (சூத்திர) நடையில் யாக்கப் பட்டுள்ளது. இப்போது உள்ள நன்னூலில் எழுத்ததி காரம், சொல்லதிகாரம் என இரு பகுதிகள் உள்ளன. இவற்றில் எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் சொல்லப்பட்டுள்ளன. ஆனுல், நன்னூலில் எழுத்ததி காரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதி காரம், அணியதிகாரம் என ஐந்து அதிகாரங்கள் இருந்ததாகவும், அவற்றில் எழுத்திலக்கணம், சொல் லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என்னும் ஐந்திலக்கணங்கள் சொல் லப்பட்டதாகவும் நன்னூல் உரையிலும் 'பெரிய திரு மொழித் தனியனிலும்' சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனுல், சைனர் சிலர், தொல்காப்பியம் போலவே நன்னூலும் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொரு ளதிகாரம் என்னும் மூன்று பிரிவுகளே உடையதென வும், பொருளதிகாரத்தில் தொல்காப்பியம் போலவே பொருளிலக்கணத்துடன் யாப்பிலக்கணமும் அணி யிலக்கணமும் இணைத்துச் சொல்லப்பட்டன எனவும் கூறுகின்றனர். எது உண்மையாயினும், முழு நன்னூ லும் நமக்குக் கிடைக்கவில்லை என்பதுவரைக்கும் உறுதி.

நூலின் முதற் பகுதியாகிய எழுத்ததிகாரத்தில் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய் யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்னும் ஐந்து இயல்கள் உள்ளன. இரண்டாவதாகிய சொல்லதி காரத்தில் பெயரியல், வினையியல், பொதுவியல், இடை யியல், உரியியல் என ஐந்து இயல்கள் உள்ளன. பொதுவாகச் சொல்லதிகாரத்தில், சிறப்பாக இடை யியல்—உரியியல்களில்தான் சொற்பொருள் பற்றிய நிகண்டுக் கூறு அமைந்து கிடக்கிறது. அது வருமாறு :—

## நிகண்டுப் பகுதி

இடையியலில் —ஏ, ஓ, என, என்று, உம், என்ரு, எனு, ஒடு, தில், மன், மற்று, கொல், தெய்ய, அந்தில், ஆங்கு, அம்ம, மா, மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ, யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஒரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான், கின்று, நின்று முதலிய இடைச் சொற்கட்கு உரிய பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட் டாக, ஏ, ஓ என்னும் இடைச் சொற்களின் பொருள் களைக் காண்பாம் :—

(ஏகார இடைச்சொல்)

" பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை எனஆறு ஏகாரம்மே."

(ஓகார இடைச் சொல்)

" ஒழியிசை வினாச்சிறப்பு எதிர்மறை தெரிநிலை
கழிவு அசைநிலை பிரிப்பு என எட்டு ஓவே."

என்பன நன்னூற் பாக்கள். அதாவது — ஏ என்னும் சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசை நிறை என ஆறுபொருள்கள் உடையதாம். ஓ என்னும் சொல் ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிப்பு என எட்டுப் பொருள்கள் உடையதாம். இவ்வாறே மற்ற சொற்களின் பொருள்களையும் நன்னூலில் காண்க. இந்த இடையியல், திவாகரத்திலுள்ள ஒரு சொல் பல்பொருள் பெயர்த் தொகுதியைப் போன்ற அமைப்புடையதாகும்

அடுத்த உரியியலில், திவாகரத்தில் உள்ளாங்கு, ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதி, ஒரு சொல் பல் பொருள் பெயர்த் தொகுதி, பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி என்னும் மூன்று வகைக் கூறு களும் சுருங்கிய அளவில் உள்ளன.

உரியியலின் தொடக்கத்தில் ஓரறிவுயிர், ஈரறி வுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் ஆகியவை இன்னின்னவை என விளக்கப்பட்டுள்ளன.

"புல்மரம் முதல உற்றறியும் ஓரறிவுயிர்."

"முரள் நந்து ஆதி நாவறிவோடு ஈரறிவுயிர்."

"சிதல் எறும்புஆதி மூக்கறிவின் மூவறிவுயிர்."

"தும்பி வண்டு ஆதி கண்ணறிவின் நாலறிவுயிர்."

"வானவர் மக்கள் நரகர் விலங்கு புள்
ஆதி செவி யறிவோடு ஐயறிவுயிரே."

என்பன நூற்பாக்கள். ஆறுவது அறிவைப் பற்றிப் பவணந்தியார் ஒன்றுமே கூறவில்லை. இந்தப் பகுதி திவாகரத்தில் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கொண்டு உரியியலில் ஒரே பொருளைக் குறிக்கும் பல பெயர்கள் கூறப்பட்டுள்ளன. மிகல் என்னும் ஒரு பொருளைக் குறிக்க ஆறு பெயர்கள் உள்ளனவாம் :

"சால, உறு, தவ, நனி, கூர், கழி, மிகல்."

என்பது நூற்பா. அடுத்து, சொல் என்னும் ஒரு பொருளைக் குறிக்கப் பதினாறு பெயர்கள் உள்ளனவாம்:

"மாற்றம், நுவற்சி, செப்பு, உரை, கரை, நொடி, இசை,
கூற்று, புகறல், மொழி, கிளவி, விளம்பு, அறை,
பாட்டு, பகர்ச்சி, இயம்பல், சொல்லே."

என்பது நூற்பா. அடுத்து, ஓசை என்னும் ஒரு பொருளைக் குறிக்க இருபத்திரண்டு பெயர்கள் உள்ளனவாம் :

"முழக்கு, இரட்டு, ஒலி, கலி, இசை, துவை, பிளிறு, இரை,
இரக்கு, அழுங்கு, இயம்பல், இமிழ், குளிறு, அதிர், குரை,
கனை, சிலை, சும்மை, கௌவை, கம்பலை,
அரவம், ஆர்ப்போடு இன்னன ஓசை."

என்பது நூற்பா. இந்தப் பகுதி ஒருபொருள் பல் பெயர்த் தொகுதி என்னும் பிரிவைச் சேர்ந்தது.

மேலும் உரியியலில் ஒரு சொல்லுக்கு உரிய பல பொருள்களும் கொடுக்கப்பட்டுள்ளன. கடி என்னும் ஒரு சொல்லுக்குப் பதின்மூன்று பொருள்கள் உரியனவாம். அவை :—

"கடி யென் கிளவி : காப்பே, கூர்மை,
விரையே, விளக்கம், அச்சம், சிறப்பே,
விரைவே, மிகுதி, புதுமை, ஆர்த்தல்,
வரைவே, மன்றல், கரிப்பின் ஆகும்."

என்பது நூற்பா. இந்தப் பகுதி ஒரு சொல் பல்பொருள் பெயர்த் தொகுதி என்னும் பிரிவைச் சேர்ந்ததாகும்.

இன்னும் உரியியலில், உயிர்ப் பொருள்களின் பண்புகள், உயிரல் பொருள்களின் பண்புகள் போன்றனவும் சொல்லப்பட்டுள்ளன. ஆகக்கூடியும் நன்னூலில் நிகண்டுக் கூறு (அம்சம்) மிக மிகச் சுருங்கிய அளவிலேயே உள்ளது. ஆசிரியர் பவணந்தியார், 'மொழியிலக்கண நூலாகிய இந்நன்னூலில் எல்லாச் சொற்களையும் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்க முடியாது; அவற்றையெல்லாம் பிங்கலம் முதலாகிய நூற்களில் விரிவாகக் கண்டு கொள்க' என உரியியலின் இறுதியில் கூறியிருப்பது ஈண்டு மீண்டும் நினைவு கூரத் தக்கது.

## நன்னூலின் ஆட்சி

நன்னூல் எழுந்ததும் தொல்காப்பியத்தின் இடத்தைத் தான் பிடித்துக் கொண்டது. தொல்காப்பியத்தினும் சுருக்கமும் தெளிவும் நோக்கியும், பிற்காலத்து மொழி நடைக்கு ஏற்ற இலக்கண முடிபுகள் அமைந்துள்ளமை கருதியும் மக்கள் நன்னூலையே மிகுதியாகக் கையாளத் தொடங்கினர். நன்னூல் பயின்ற பின்னரே தொல்காப்பியம் என்ற நிலை ஏற்பட்டது. நன்னூலின் ஆட்சி பெருகவே, மயிலைநாதர், ஆண்டிப்புலவர், சங்கரநமச்சிவாயர், சிவஞான முனிவர் முதலிய புலவர் பெருமக்களால் நன்னூலுக்கு உரைகள் எழுதப்பட்டுப் பலராலும் பயிலப்பட்டன. உரைகளின் எண்ணிக்கையைக் கொண்டே ஒரு நூலின் ஆட்சியும் மாட்சியும் புலப்படுமே!

# சூடாமணி நிகண்டு

திவாகரம், பிங்கலம் என்னும் இரண்டுக்கும் அடுத்தபடியாக, கிடைத்திருக்கும் நிகண்டுகளுள் காலத்தாலும் தகுதியாலும் முதன்மை பெறுவது சூடாமணி நிகண்டு. இந் நிகண்டு எழுந்ததும் திவாகரமும் பிங்கலமுங்கூட மங்கத் தொடங்கிவிட்டன. சூடாமணிக்குப் பின்னர்ப் பற்பல நிகண்டுகள் தோன்றியும், அவற்றுள் ஒன்ருலும் சூடாமணியின் இடத்தைப் பிடிக்க முடியவில்லை. அந்த அளவுக்கு இந் நிகண்டு பிற்காலத்தவரால் பெரிதும் பயிலப்பட்டது. நிகண்டு என்ருல் சூடாமணிதான் — நிகண்டு படித்தவர் என்ருல் சூடாமணி படித்தவர்தான் என்று பொருள் கொள்ளும் அளவுக்கு இந்நிகண்டு தமிழ் மக்களிடையே மிகவும் பரவி மிளிர்ந்தது.

### பெயர்க் காரணம்

சூடாமணி என்பது, தலையில் அணியும் ஒருவகை அணியின் (நகையின்) பெயராம். மற்ற உறுப்புக்களில் அணியும் அணியினும் — மணியினும் தலைமேல் அணியும் மணியணி மிகவும் சிறப்புடைத்து. எனவே, அணிகளுக்குள் சிறந்த தலைமணியான சூடாமணியைப் போல, நிகண்டுகளுக்குள் தலைசிறந்தது இந்நூல் என்னும் கருத்தில் இஃது சூடாமணி நிகண்டு என அழைக்கப்பட்டிருக்கவேண்டும். தலைமணியாகிய சூடாமணியைச் சூளாமணி என அழைக்கும் வழக்கம் இருப்பது போல, சூடாமணி நிகண்டைச் சூளாமணி நிகண்டு என அழைக்கும் ஒருசார் வழக்கமும் உண்டு. இந்நிகண்டு

பன்னிரண்டு தொகுதிகளை உடையய தாதலின், 'சூடா மணி பன்னிரண்டு நிகண்டு' என்றும் இதனை அழைப்ப துண்டு.

## ஆசிரியர் வரலாறு

சூடாமணி நிகண்டின் ஆசிரியர் 'மண்டல புருடர்' என்பவர். இவர் 'மண்டல புருடோத்தமன்' என்றும் சில சுவடிகளில் குறிப்பிடப்பட்டுள்ளார். ஆனால் இவர் தாமே எழுதிய தற்சிறப்புப் பாயிரப் பாடலில் தம் பெயர் 'மண்டலவன்' எனக் கூறிக் கொள்கிறார். ஆசிரியர், மண்டல புருடன் என்னும் தம் பெயரைத் தற் கூச்சத்தால் சுருக்கி, மண்டலவன் எனக் கூறிக் கொண்டிருக்கலாம்.

இவர் தொண்டை நாட்டில் உள்ள பெருமண்டூர் என்னும் ஊரினர் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் தமது ஊர் வீரை (வீரபுரம்) என்று ஆசிரியரே சூடா மணி நிகண்டில் பல விடங்களில் கூறியுள்ளார். அரும் பொருள் விளக்க நிகண்டிலும் 'வீரை மண்டலவன்' எனச் சுட்டப்பட்டுள்ளார். இவர் சைனம் எனப்படும் சமண சமயத்தினர்; குணபத்திரன் என்னும் சமண சமயப் பெரியாரின் மாணவர்; கிருட்டிணராயன் என் னும் அரசனால் ஆதரிக்கப் பெற்றவர். இந்த உண்மை களையெல்லாம், சூடாமணி நிகண்டின் முகப்பில் ஆசிரியரே பாடியுள்ள தற்சிறப்புப் பாயிரப் பாடல் களால் அறிந்து கொள்ளலாம். அந்தப் பாடல்கள் வருமாறு:—

(1) "பொன்னுநன் மணியும் முத்தும்
புனைந்த முக்குடை நிழற்ற
மின்னுபூம் பிண்டி நீழல்
வீற்றிருந் தவனை வாழ்த்தி
மன்னிய நிகண்டு சூடா
மணியென ஒன்று சொல்வன்
இந்நிலந் தன்னின் மிக்கோர்
யாவரும் இனிது கேண்மின்."

(2) "பூமலி அசோகின் நீழல்
பொலிந்தஎம் அடிகள் முன்னாள்
ஏமமா முதனூல் சொல்லக்
கணதரர் இயன்ற பாவால்
தாமொரு வழிநூல் சொல்லச்
சார்புநூல் பிறருஞ் சொல்லத்
தோமிலா மூன்று நூலும்
துவமென உதித்த வன்றே."

(3) "அங்கது போய பின்றை
அலகில்நூல் பிறந்த மற்றும்
செங்கதிர் வரத்தில் தோன்றும்
திவாகரர் சிறப்பின் மிக்க
பிங்கலர் உரைநூற் பாவில்
பேணினர் செய்தார் சேர
இங்கிவை யிரண்டுங் கற்க
எளிதல என்று சூழ்ந்து"

(4) "சொல்லொடு பொருள் உணர்ந்தோன்
சோதிட நீதி வல்லோன்
நல்லறி வாளன் எங்கள்
நறுங்குன்றை ஞான மூர்த்தி
பல்லுயிர்க் கொருதா யாகும்
பரமன்மா முனிவன் மெய்ந்நூல்
வல்லுநர் வல்லார்க் கெல்லாம்
வரையறத் தரையில் வந்து"

5) " பரிதிஒன் றுதயம் செய்து
பங்கயம் அநேக கோடி
முருகெழ மலர்வித் தென்ன
முகமுடன் அக மலர்த்தி
மருவுமுத் தமிழை முன்னாள்
வளர்த்த பாண்டியனே போலக்
கருதிய வெல்லாந் தந்து
கவிமணி மாலை சூடி"

(6) " செகமெனும் பளிங்கு மாடத்
திகிரி வேந்தரையே போலப்
புகழெனும் பஞ்சி சேர்த்திப்
பொலிவுறு பேரத் தா ணரி
மகிழ்குண பத்திரன் எங்கள்
வழித்தெய்வம் போல்வான் சொல்ல
இகபரம் இரண்டும் வேண்டி
இயலிசை வல்லோர் கேட்ப"

(7) " விரவிய தேவர் மக்கள்
விலங்கொடு மரம் இடம் பல்
பொருள் செயும் வடிவு பண்பு
போற்றிய செயல் ஒலிப்பேர்
ஒருசொல் பல்பொருளி னோடும்
உரைத்தபல் பெயர்க் கூட்டந்தான்
வருமுறை திவாகரம் போல்
வைத்துப் பிங்கலந்தை தன்னில்"

(8) " ஒருங்குள பொருளும் ஓர்ந்திட்டு
உரைத்தனன் விருத்தம் தன்னில்
இருந்தவை நல்லோர் குற்றம்
இயம்பிடார் என்ப தெண்ணித்
திருந்திய கமல வூர்தி
திருப்புகழ் புராணம் செய்தோன்
பரந்தசீர்க் குணபத்திரன் தாள்
பணிந்த மண்டலவன் றனே."

மேலுள்ள பாடல்களால், — ஆசிரியரின் பெயர் மண்டலவன் (மண்டல புருடர்) என்பதும், அவர் அசோக நிழலில் அமர்ந்திருக்கும் அருகக் கடவுளை வணங்கும் சமண சமயத்தினர் என்பதும், திருப்புகழ் புராணம் என்னும் நூலொன்றும் இயற்றியவர் என்பதும், குணபத்திரரின் மாணுக்கர் (சீடர்) என்பதும், இயற்றிய நூலின் பெயர் சூடாமணி நிகண்டு என்பதும், திவாகரருக்கும் பிங்கலருக்கும் காலத்தால் பிற்பட்டவர் என்பதும், குணபத்திரர் கட்டளை யிட்டதாலும், மேலும் சிலர் கேட்டுக் கொண்டதாலும் சிறப்பாகத் திவாகர அமைப்பைப் பின்பற்றியும், ஓரளவு பிங்கலத்தையும் தழுவியும் சூடாமணியை இயற்றினுர் என்பதும் நன்கு புலனுகும்.

இப்பாடற் பகுதியில் மண்டல புருடர் தம் ஆசாணுகிய குணபத்திரரை மிகவும் புகழ்ந்து பேசியுள்ளார் : குணபத்திரர் குன்றை என்னும் ஊரினராம்; ஞாயிறு போல் தோன்றி நன்மை செய்பவராம்; பாண்டியரே போல் தமிழ் வளர்ப்பவராம்; ஞான அரசாட்சி புரிபவராம்; சோதிட நூல் வல்லவராம் – இவ்வாறெல்லாம் புகழ்ந்து மண்டலபுருடர் தம் ஆசானன்பை (குரு பக்தியை) வெளியிடுகிருர். இக்காலத்தாரிடம் இத்தகைய நன்றியுணர்வு உண்டா ?

மற்றும் மண்டல புருடர், சூடாமணியின் பன்னிரண்டு தொகுதிகளின் இறுதியிலும், இத்தொகுதியைச் சேர்ந்த இத்தனை பாடல்களும் இன்னுர் மாணுக்கராகிய இன்னுர் எழுதியவை என்று அறிவிக்கும் வாயிலாகத் தம்மையும் தம் ஆசானையும் குறிப்பிட்டுள்ளார். அப்பாடற் பகுதிகள் வருமாறு :—

" பனேகுண பத்திரன்தாள் போற்று மண்டலவன் ருனே."

" குறுநறுங் குன்றை வேந்தன் குணபத்திரன் தந்த
நோன்மை
தருநெறி நோற்கும் வீரை தழைத்த மண்டல வன்ருனே."

" வருமுறை யுரைத்தான் வீரை மன்னன் மண்டலவன்
ருனே."

" நிரப்படுங் குணபத்திரன் தாள் நித்தலும் போற்றி செய்து
விருப்புறு விரத சீலன் வீரை மண்டலவன் செய்தான்."

" மன்னு சீர்க் குணபத்திரன்தாள் வணங்கும் மண்டலவன்
ருனே."

" இகலிலாக்குணபத்திரன் றன் இரு சரண் இதயம் வைத்தோன்
மிகுபுகழ் புனேயா நின்ற வீரை மண்டலவன் செய்தான்."

"
குணபத்திரன் தாள்
நிற்றலும் வணங்கி நீதி நிறுத்த மண்டல வன்ருனே."

" தேங்கிய புகழான் குன்றைக் குணபத்திரன் திருத்தாள்
போற்றி
வீங்குநீர்ப் பழனஞ் சூழ்ந்த வீரை மண்டலவன் செய்தான்."

"மைம்முகிற் குணபத்திரன் தாள் வணங்கு மண்டலவன்
ருனே."

"அறந்தரு குணபத்திரன் தாள் அரணெனச் சரண மானேன்
மறந் தலேப்படாத வீரை மன்னன் மண்டலவன் செய்தான்."

" சொன்னவன் குணபத்திரன் தாள் சூடுமண்டலவன்ருனே."

"திருக்கிளர் குணபத்திரன் தாள் சென்னியில் சூடிக்கொண்
டோன்
மருக்கிளர் பொழில்சூழ் வீரைமன்னன் மண்டலவன் தானே."

இப்பாடற் பகுதிகளால், குணபத்திரரது ஊர் குன்றை என்பதும், மண்டல புருடரது ஊர் வீரை என்பதும் புலப்படும். குன்றை என்பது குன்றையூர். வீரை என்பது வீரபுரம். இவை தொண்டை நாட்டைச் சேர்ந்தவை. வீரைமண்டலவன் என ஆசிரியர்

அடிக்கடிச் சொல்லி யிருப்பதிலிருந்து. — பெயரோடு ஊரையும் இணைத்துச் சொல்லும் வழக்காறு அன்றும் உண்டு என்பது விளங்குவதோடு, ஆசிரியரின் ஊர்ப் பற்றும் விளங்கும். இந்த ஊர்ப் பற்று இருந்திராவிட்டால், ஆசிரியரின் ஊரை அறிந்து கொள்ளும் வாய்ப்பு இன்று கிடைக்காதல்லவா ? மேலும், நீர்வளம் — நிலவளம்—பொழில்வளம் எல்லாம் செறிந்த வீரை என ஆசிரியர் தம் ஊரைப் புகழ்ந்திருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

ஆசிரியரது ஊராகிய வீரைக்குப் பெருமண்டூர் என்னும் வேறு பெயரும் உண்டு எனச்சிலர் கூறுகின்றனர். இந்த வீரை தொண்டை மண்டலத்தில் உள்ளதென்பதில் ஐயமில்லை. ஏனெனில், ஆசிரியர் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவர் எனத் ‘ தொண்டை மண்டல சதகம் ’ என்னும் நூல் பின்வருமாறு கூறுகிறது :—

" .........நிகண்டு சூடாமணி தானுரைத்த மண்டலவன்
குடிகொண்டது நீள்தொண்டை மண்டலமே."

மற்றும், ஆசிரியர் தம் ஆசானைக் குன்றை வேந்தன் எனக் குறிப்பிட்டுள்ளமையும், தம்மை வீரை மன்னன் என மூன்று இடங்களில் கூறிக்கொண்டுள்ளமையும் ஈண்டு உணர்தற்பாலன. வேந்தன், மன்னன் என்றால் என்ன ?

குணபத்திரரும் மண்டல புருடரும் குன்றை, வீரை ஆகிய ஊர்களை ஆண்ட குறுநில மன்னர்களாய் இல்லாவிடினும், அக்காலத்தில் இருந்த கிராம ஆட்சி முறையில், அவ்வவ்வூர்களின் ஆட்சித் தலைமைப் பொறுப்பாயினும் இவர்களிடம் இருந்திருக்கவேண்டும். அல்லது, சமயத்துறையில் — கல்வி கலைத்துறையில் அவ்வவ்வூர்களில் இவர்கள் முதன்மையும்

தலைமையும் பெற்றிருக்கவேண்டும்; அதாவது கவிச் சக்கரவர்த்தி—பாவேந்தர் என்ற அளவில் இவர்கள் தலைசிறந்து விளங்கியிருக்கவேண்டும். மேலும், தமிழ் நாட்டில் சமண சமயம் தலைவிரித்தாடிய அந்தக் காலத்தில், ஊர்களில் சமயத் தலைவர்களின் செல் வாக்கே மேலோங்கி யிருந்தது என்னும் உண்மையும் ஈண்டு நினைவுகூரத் தக்கது. மற்றும், அண்மைக் காலம் வரையுங்கூட, உலகம் முழுவதுமே சமயத் தலைவர்களே அரசர்க்குமேல் அரசராக உலகை ஆட் டிப் படைத்தனர் என்ற வரலாற்றுக் குறிப்பும் ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது.

## ஆசிரியரின் காலம்

ஆசிரியர் மண்டல புருடர் வாழ்ந்த காலத்தைக் கணக்கிடுவது ஒரு சிக்கலான செயலாகத் தோன்று கிறது. நீந்தத் தெரியாமல் தண்ணீரில் மூழ்கித் தத் தளிப்பவனுக்கு ஒரு சிறு துரும்பும் தெப்பமாகத் தென் படுவது போல், சூடாமணியில் உள்ள ஒரு குறிப்பு ஆசிரியரின் காலத்தை ஒரு தோற்றமாக (உத்தேச மாகக்) கணிக்க உதவுகிறது :

சூடாமணியின் ஒன்பதாவது தொகுதியாகிய செயல் பற்றிய பெயர்த் தொகுதியின் பத்தாவது செய்யுளில் 'கிருட்டிண ராயன்' என்னும் மன்னன் குறிப்பிடப்பட்டுள்ளான். 'கொடை மடம்' என்பதற்கு விளக்கம் கூறவந்த மண்டல புருடர், கிருட்டிண ராயன் கைபோல் வரையறை யில்லாமல் வாரி வழங் குவதற்குத்தான் கொடை மடம் என்று பெயர் எனக் கூறியுள்ளார். அச்செய்யுளின் முதல் மூன்று அடிகளி லும் அம்மன்னனைப் புகழின் உயர் எல்லையில் நிறுத் திச் சிறப்பித்துள்ளார் :

இதோ அந்தப் பாடல்:

“ படைமயக் குற்ற போதும்
படைமடம் ஒன்றி லாதான்
மடைசெறி கடகத் தோளான்
மதிக்குடை மன்னர் மன்னன்
கெடிமன்னர் வணங்குந் தாளான்
கிருட்டிண ராயன் கைபோல்
கொடைமடம் என்று சொல்ப
வரையாது கொடுத்த லாமே.”

இந்தப் பாடலில் கூறப்பட்டுள்ள கிருட்டிண ராயன் எந்தக் கிருட்டிண ராயன் என முடிவு கட்டுவது எளிதன்று. இந்தப் பெயரில் பல மன்னர்கள் இருந்த தாகத் தெரிகிறது. விசயநகரம் ஆண்டவர் ஒருவர்—தொண்டை மண்டலத்துச் சிற்றரசர் ஒருவர்— இரண்டாம் விக்கிரமாதித்தச் சோழனுக்கு நட்பரசர் ஒருவர்—இராட்டிர கூடத்தை ஆண்டவர் ஒருவர் — செஞ்சியை ஆண்டவர் ஒருவர் — இப்படியாக இந்தப் பெயரில் பல மன்னர்கள் கூறப்படுகின்றனர். மண்டலபுருடரை ஆதரித்தமையால் சூடாமணியில் நன்றி பாராட்டப் பட்டுள்ள மன்னர் இவர்களுள் யாரோ ?

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி யின் பதிப்பாசிரியர், மண்டல புருடர் பதினும் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்றும், ஒரு தோற்றம் கி. பி. 1520–ஆம் ஆண்டு வாக்கில் சூடாமணி நிகண்டு தோன்றி யிருக்கலாம் என்றும் கூறியுள்ளார். அப்படியென்ருல் பதினும் நூற்றுண்டில் விசயநகரத்தில் அரசு செலுத்திய ‘இராயர்’ காலத்தவராகக் கொள்ளல் வேண்டும்.

மண்டல புருடர் சூடாமணியில் பன்னிரண்டாம் தொகுதியின் தொண்ணூறும் செய்யுளில், பன்னிரண் டாம் நூற்றுண்டில் வாழ்ந்த பாற்கரர் என்பவர் இயற் றிய 'பாற்கரம்' என்னும் கணித நூலைக் குறிப்பிட்டுள் ளார் :

“ குணகாரம் பரியச்சந் தான்
குறித்த பாற்கரமே மூலம்.”

என்பது அப்பாட்டற் பகுதியாம். இதனுல், மண்டல புருடர் பன்னிரண்டாம் நூற்றுண்டிற்குப் பிற்பட்ட வர் என்பது மட்டும் உறுதி; இதுபோலவே, பதினுரும் நூற்றுண்டிற்கு உட்பட்டவர் என்பதும் உறுதி.

## நூலின் அமைப்பு

### தொகுதியும் பாடலும்

சூடாமணி திவாகரம் போலவே பன்னிரண்டு தொகுதிகள் உடையது அவையாவன :—

| | | | |
|---|---|---|---|
| 1. | தேவப் பெயர்த் தொகுதி | பாடல்கள் | ...93 |
| 2. | மக்கட் பெயர்த் தொகுதி | ,, | ...106 |
| 3. | விலங்கின் பெயர்த் தொகுதி | ,, | ...78 |
| 4. | மரப் பெயர்த் தொகுதி | ,, | ...68 |
| 5. | இடப் பெயர்த் தொகுதி | ,, | ...68 |
| 6. | பல்பொருள் பெயர்த் தொகுதி | ,, | ...35 |
| 7. | செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி | ,, | ...76 |
| 8. | பண்பு பற்றிய பெயர்த் தொகுதி | ,, | ...82 |
| 9. | செயல் பற்றிய பெயர்த் தொகுதி | ,, | ...67 |
| 10. | ஒலி பற்றிய பெயர்த் தொகுதி | ,, | ...52 |

*11.* ஒரு சொல் பல்பொருள் பெயர்த் தொகுதி ,, ...*310*
*12.* பல்பெயர்க் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி } ,, ...*154*

தொகுதிகளின் எண்ணிக்கையில் சூடாமணி திவாகரத்தை ஒத்திருப்பதல்லாமல், தொகுதிகளின் பெயர்களிலும் ஒத்திருப்பது காண்க. சூடாமணியைத் திவாகரத்தின் விரிவான மறு பதிப்பு என்று கூறலாம். இதன் பன்னிரண்டு தொகுதிகளிலும் மொத்தம் *1189* செய்யுட்கள் உள்ளன. ஆசிரியர் தம்மைப் பற்றிக் கூறியுள்ள தற்சிறப்புப் பாயிரப் பாடல்கள் எட்டையும் சேர்த்தால் மொத்தம் சூடாமணியின் பாடல்கள் 1197 ஆகும். ஆறுமுக நாவலர் பதிப்பில் மொத்தம் 1197 செய்யுட்கள் காணப்படுகின்றன. ஆனல் 'பழைய பாடல் ஒன்று, சூடாமணியின் மொத்தச் செய்யுட்கள் *1125* என்றே கூறுகிறது.

ஒரு பழம் பாடலில் 1125 செய்யுட்கள் எனக் கூறப் பட்டிருப்பதையும், ஆறுமுக நாவலர் பதிப்பில் 1197 செய்யுட்கள் இருப்பதையும் — அதாவது 72 செய்யுட் கள் மிகுதியாக இருப்பதையும் கண்ட சிலர், பிற்காலத் தில் யாரோ 72 செய்யுட்களைப் புதிதாகப் பாடி இடைச் செருகலாகச் சேர்த்துவிட் டிருக்கவேண்டும் எனக் கூறுகின்றனர்.

எதை நம்புவது ? 1125 செய்யுட்களே என முடிவு கட்டும் பழம் பாடலை எழுதியவர் தவருகக் கணக்கிட் டிருக்கக் கூடாதா ? அவருக்குக் கிடைத்த ஓலைச் சுவடி யில், ஆங்கொன்றும் ஈங்கொன்றுமாக 72 செய்யுட்கள் விடுபட்டிருக்கக் கூடாதா ? ஓலை காணுமற் போவதும் செல்லரித்துப் போவதும் இயற்கை தானே !

சூடாமணி 1197 செய்யுட்கள் உடையது என்னும் கொள்கையினர் தக்க சான்று ஒன்று தர முடியும். அதாவது :— சூடாமணியின் ஒவ்வொரு தொகுதியின் இறுதிப் பாடலிலும், இத்தொகுதியில் மொத்தம் இத்தனை பாடல்கள் எழுதியுள்ளேன் என்று ஆசிரியரே கணக்குக் கட்டிக் கூறியுள்ளார். அந்தக் கணக்கின் படி கூட்டிப் பார்த்தால் மொத்தம் 1197 செய்யுட்கள் வருகின்றன.

ஆனால், 72 செய்யுட்கள் இடைச் செருகலே என்னும் கொள்கையினர், 72 செய்யுட்களைப் புதிதாகப் பாடி இடையிடையே செருகியவர்கள் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஆசிரியர் கூறியுள்ள எண்ணிக்கையையும் திருத்தி விட்டிருப்பார்கள், என்று கூறக் கூடும்.

இவற்றுள் எது உண்மையோ, யார் அறிவார்!

## நூல் நடை

திவாகரமும் பிங்கலமும் நூற்பா (சூத்திர) நடையில் இருப்பதால் படித்து நினைவில் இருத்துவதற்குக் கடினமா யுள்ளது என்று கருதித் தாம் விருத்தப் பாவால் சூடாமணியை எழுதி யிருப்பதாக ஆசிரியர் தற்சிறப்புப் பாயிரத்தில் கூறியுள்ளார். இசையுடன் படித்துச் சுவைப்பதற்கும் அந்த இசையோட்டத்துடன் செய்யுளை நினைவில் இருத்துதற்கும் விருத்தம் மிகவும் ஏற்றது என்பது அனைவரும் அறிந்த உண்மையே!

## சொற்கள்

முதல் பத்துத் தொகுதிகளில் மட்டும் 11,000 சொற்கள் விளக்கம் பெற்றுள்ளன. பதினோராம்

தொகுதியிலோ 1575 சொற்களுக்கு உரிய பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன. திவாகரத்தை நோக்க இது எவ்வளவோ மிகுதியல்லவா ?

## நூலின் போக்கு

நூலின் தொடக்கத்தில், ஆசிரியரின் முன்னுரையாகிய தற்சிறப்புப் பாயிரம் அமைந்துள்ளது. ஒவ்வொரு தொகுதியின் தொடக்கத்திலும் அருகக் கடவுள்மேல் காப்புப் பாடல் உள்ளது. இதனுல், ஆசிரியர் சைனர் என்பது நன்கு புலனுகும். மற்றும், தெய்வங்களின் பெயர்களைக் கூறவந்த இடத்தில் திவாகரரும் பிங்கலரும் சைவக் கடவுளரை முதலிற் கூறியிருக்க, மண்டல புருடரோ அருகக் கடவுளுக்கே முதன்மை கொடுத்துள்ளார். நூலின் தொடக்கமே—அதாவது, முதல் தொகுதியின் முதல் பாடலே அருகனைப் பற்றியதுதான். இதோ அப்பாடல் :—

“ அநகன் எண்குணன் நிச்சிந்தன்
அறவாழி வேந்தன் வாமன்
சினன் வரன்உறுவன் சாந்தன்
சினேந்திரன் நீதி நூலின்
முனைவன் மாசேனன் தேவன்
மூவுல குணர்ந்த மூர்த்தி
புனிதன் வென்றேன் விராகன்
பூமிசை நடந்தோன் போதன்.”

இப்படியாகத் தொடங்கி முதல் ஐந்து பாடல்களில் அருகக் கடவுளின் பெயர்களை அடுக்கிக்கொண்டு போகிருர். இதன் பின்னரே சிவன், திருமால் முதலான தெய்வங்களைப் பற்றிப் பேசியுள்ளார்.

மற்றும், மண்டல புருடர் ஒவ்வொரு தொகுதியின், இறுதியிலும், இத்தொகுதியில் மொத்தம் இத்தனை பாடல்கள் பாடியுள்ளேன் என்று குறிப்பிட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

ஒவ்வொரு தொகுதியிலும் தொடக்கத்தில் காப்புப் பாடலும் இறுதியில் பாடல்களின் எண்ணிக்கையும் ஆசிரியர் பெயரும் அமைக்கப்பட்டுள்ளமைக்கு எடுத்துக் காட்டாக, ஐந்தாம் தொகுதியாகிய இடப்பெயர்த் தொகுதியின் முதல் பாடலும் இறுதிப் பாடலும் வருமாறு :—

[முதல் பாடல் - காப்பு]

**“ கடலெழும் இரவி கோடி கால்சீத்துப் பொடித்த தென்ன**
**மடலவிழ் கமல வூர்தி வந்த வாமனையே போற்றி**
**அடைவுள திணைதேம் ஊர்வான் அகம்புறம் ஆதி யாய**
**இடனுடைத் தாக வைத்த இடப்பெயர்த் தொகுதி**
**சொல்வாம்.”**

[இறுதிப் பாடல்]

**“ முன்னெடு மேலும் மற்று மொழியுமஞ் ஞாங்கர் தானே**
**முன்னரே தலைத்தா ளாகும் முதலொடு புரமும் அப்பேர்**
**அன்னதிவ் விடப்பேர்க்கு எட்டோடு அறுபது விருத்தம்**
**செய்தான்**
**மன்னுசீர்க் குணபத்திரன் தாள் வணங்கு மண்டலவன்**
**தானே.”**

(எட்டோடு அறுபது விருத்தம் — அறுபத்தெட்டு விருத்தப் பாடல்கள்.)

**அச்சுப் பதிப்புகள்**

மற்ற நிகண்டுகளினும் சூடாமணியே மக்களால் மிகவும் பயிலப்பட்டதால், அச்சு வசதி ஏற்பட்ட

பின்னர் அது பலரால் பதிப்பிக்கப்பட்டது. சில பதிப்புகள் வருமாறு :—

(1) நூல் முழுதும் உரையுடன் (பன்னிரண்டாம் தொகுதிக்கு மட்டும் உரையில்லை.) யாழ்ப்பாணத்து நல்லூர் வித்துவ சிரோமணி ச. பொன்னம்பலப்பிள்ளை யால் பார்வையிடப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதுவே பலமுறை பதிப்பிக்கப்பட்டுள்ளது. (இரண் டாம் பதிப்பு — கி. பி. 1898)

(2) நூல் முழுதும், மணிமங்கலம் வடிவேலு முதலியாரால் பார்வையிடப்பட்டு, மதுரை குருசாமி நாயுடுவால் (கி. பி. 1901) பதிப்பிக்கப்பட்டுள்ளது.

(3) நூல் முழுதும் உரையுடன், பாரிப்பாக்கம் முனியப்ப முதலியாரால் பார்வையிடப்பட்டு அப்பாவு பிள்ளையால், (கி. பி. 1910) பதிப்பிக்கப்பட்டுள்ளது.

(4) நூல் முழுதும், நா. கதிரைவேற் பிள்ளை மாணவர் ப. கணேச முதலியார் செப்பனிட்ட உரை யுடன் (கி. பி. 1933) வெளிவந்துள்ளது.

(5) நூல் முழுதும் — யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரால் ஆராயப்பட்ட பதிப்பு – பலமுறை வெளிவந்துவிட்டது. 17-ஆம் பதிப்பு (கி. பி. 1957– ஆம் ஆண்டில் வெளியாயிற்று.

(6) சூடாமணியின் பதினோராவது தொகுதி மட்டும் புதுவை - நயநப்ப முதலியார் உரையுடன் திரு. வேங்கடாசல முதலியாரது சென்னை சரசுவதி அச்சுக் கூடத்தில் (1836) பதிப்பிக்கப்பட்டுள்ளது.

(7) பதினேராவது தொகுதிமட்டும், தில்லை — நடராாசசுவாமி அவர்களால் பார்வையிடப்பட்டு, பூ. மு. இராசு முதலியாரின் சென்னை புரசை ரூபி அச்சுக் கூடத்தில் (1910) பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இப்படியாகப் பலரால் பலமுறை பதிப்பிக்கப்பட்டிருப்பதிலிருந்து சூடாமணியின் ஆட்சியும் மாட்சியும் விளங்கும்.

## பதினேராவது (தொகுதி) நிகண்டு

சூடாமணியின் பதினேராம் தொகுதி, ஒரு சொல்லுக்குரிய பல பொருள்களையும் கூறுகின்ற இக்கால அகராதிகளைப் போன்ற (Homonyms) பகுதியாதலின், அக்காலத்தில் இத்தொகுதி மிகவும் முதன்மை பெற்றிருந்தது. நிகண்டு படித்தவர்கள் என்ருல் சூடாமணியின் பதினேராவது தொகுதியைப் படித்தவர்கள் என்று பொருள் கொள்ளும் அளவுக்கு இத்தொகுதி உயர்ந்திருந்தது. இதனுலேயே இத்தொகுதி 'பதினேராவது நிகண்டு' என ஒரு தனி நிகண்டு நூல் போல் அழைக்கப்பட்டு வந்தது. பதினேராவது நிகண்டு என்பது சூடாமணியின் ஒரு பகுதி என்பதை அறியாமல், அதனை ஒரு தனி நிகண்டாகவே அன்றும் சிலர் கருதினர் — இன்றும் சிலர் கருதுகின்றனர்.

புதுவை நயநப்ப முதலியார், தில்லை நடராசசுவாமி முதலியோர் இப்பதினேராம் தொகுதியை மட்டும் தனி நூலாக அச்சிட்டிருப்பதொன்றே இத்தொகுதியின் ஆட்சிக்கும் மாட்சிக்கும் போதிய சான்ருகும். நயநப்ப முதலியாரின் பதிப்பில் 'ஒரு சொல் பல பொருட்டொகுதி' என்பது நூற்பெயராகவும், நடராச சுவாமி பதிப்பில் 'பதினேராவது நிகண்டு' என்பது நூற்

பெயராகவும் குறிப்பிடப்பட்டிருப்பது ஈண்டு நோக்கத் தக்கது.

பதினேராம் தொகுதியின் இன்றியமையாமையைச் சூடாமணி ஆசிரியர் மண்டல புருடரே உணர்ந்திருந் தார். அதனுல், எளிதில் மனப்பாடம் செய்வதற்குரிய முறையில் இத்தொகுதியை அமைப்பதற்கு வழி கண் டார். இத்தொகுதியில் தாம் சொல்ல எடுத்துக் கொண்ட 1575 சொற்களையும், பதினெட்டு மெய்யெழுத் துக்களின் அடிப்படையில் பதினெட்டு வகை எதுகைச் சொற்களாகப் பிரித்துக் கொண்டார். எதுகை என்பது, ஒவ்வொரு சொல்லிலும் இரண்டாவது எழுத்து ஒத் திருப்பதாகும். அகம், நகை, முகில் என்னும் சொற் களில் இரண்டாவது எழுத்தாக - க - கை - கி – எனக் 'ககர இனம்' ஒத்திருக்கிறதல்லவா ? இதற்குக் 'ககர எதுகை' என்று பெயராம். வனம், கனிவு, பனுவல் என்னும் சொற்களில் இரண்டாவது எழுத்தாக — ன – னி - னு - என 'னகர இனம்' ஒத்திருக்கிறதல்லவா? இதற்கு 'னகர எதுகை' என்று பெயராம்.

இப்படிப் போல 1575 சொற்களையும், ககர எதுகை முதலாக னகர எதுகை ஈருகப் பதினெட்டு வகைக்குள் அடக்கினுர் ஆசிரியர். அவையாவன :—

1. க கர எதுகை
2. ங கர எதுகை
3. ச கர எதுகை
4. ஞ கர எதுகை
5. ட கர எதுகை
6. ண கர எதுகை
7. த கர எதுகை
8. ந கர எதுகை
9. ப கர எதுகை
10. ம கர எதுகை
11. ய கர எதுகை
12. ர கர எதுகை

13. ல கர எதுகை
14. வ கர எதுகை
15. ழ கர எதுகை
16. ள கர எதுகை
17. ற கர எதுகை
18. ன கர எதுகை

எடுத்துக் காட்டாக, இத்தொகுதியிலிருந்து ககர எதுகைக்கு ஒரு செய்யுளும், னகர எதுகைக்கு ஒரு செய்யுளும் வருமாறு :—

(ககர எதுகை)

"பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்
பகலே நாள் ஒரு முகூர்த்தம் பகலவன் நடுவே தேசு
மகரமே சுருப்பூந் தாதாம் வசிகூர்மை வசியம் வாளே
அகம்மனம்மனையே பாவம் அகலிடம் உள்ளுமாமே."

இப்பாடலில் பகவன், பகல், மகரம், வசி, அகம் என்னும் ஐந்து சொற்கட்கு உரிய பொருள்கள் தரப் பட்டுள்ளன. ககர எதுகைச் சொற்களிடையே 'வசி' என்னும் சகர எதுகைச் சொல்லும் இப்பாடலில் கலந்து விட்டிருக்கிறது.

(னகர எதுகை)

"தானமே மதம் நீராட்டுத் தருகொடை சுவர்க்கம் நாற்பேர்
பீனமே பருமை பாசி பேடுஎன்ப பேடி ஊரே
நானமே பூசும் பூச்சு நானமும் குளிக்கு நீரும்
வானம்ஆகாயம் என்ப மழை உலர்மரமும் ஆமே."

இப்பாடலில், தானம், பீனம், பேடு, நானம், வானம் என்னும் ஐந்து சொற்களின் பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. னகர எதுகைச் சொற்களி னிடையே 'பேடு' என்னும் டகர எதுகைச் சொல்லும் இப்பாடலில் கலந்துவிட்டது.

ஆசிரியர் ஒரு சொல்லுக்கும் அடுத்த சொல்லுக்கும் தொடர்பு கண்டார் இல்லை — ஒரு செய்யுளுக்கும் அடுத்த செய்யுளுக்கும் தொடர்பு கண்டாரில்லை. எப்படியோ முடிந்த வரைக்கும் ஒவ்வொரு செய்யுளிலும் எதுகைச் சொற்களை அமைத்தால், செய்யுளை நினைவில் நிறுத்துவதற்கும், வேண்டிய சொல்லை வேண்டியபோது நினைவிலிருந்து வருவிப்பதற்கும் உதவும் என்று எண்ணினர்— அப்படியே செய்தார். பொதுவாக எவர் பாடிய எந்த நூலிலுள்ள எந்த விருத்தப் பாடலும் நான்கு அடிகளிலும் எதுகை உடையதா யிருப்பதால், நினைவில் இருத்துவதற்கும் மீண்டும் வருவிப்பதற்கும் பெரிதும் உதவும் இயல்பினதாம். அதனலேயே மண்டல புருடர் விருத்தப் பாடலைத் தேர்ந்தெடுத்தார். ஒவ்வொரு பாடலின் நான்கு அடிகளுக்கும் எதுகை வேண்டுமாதலால், 1575 சொற்களையும் எதுகை வாரியாகப் பிரித்துப் பயன்படுத்திக் கொண்டார்.

ஆசிரியர் முதலில் ககர எதுகைச் சொற்கள் — அடுத்து ஙகர எதுகை — அடுத்து சகர எதுகை — என்று இந்த வரிசையில் அமைத்திருப்பதிலும் இக்கால அகராதி முறையின் வாடை வீசுகிறது. இக்கால அகராதிகளில், முதலில் முதல் எழுத்தின்படி சொற்களை வரிசைப் படுத்திப் பின்னர் அவற்றையே இரண்டாம் எழுத்தின்படியும் வரிசைப்படுத்துவர். அகம், அணில், ஆடல், ஆவல்—இது இக்காலத்து அகராதி முறை. அதாவது, — முதலில் அகம், அணில் என 'அ'வில் தொடங்கும் சொற்கள்; பின்னர் ஆடல், ஆவல் என 'ஆ'வில் தொடங்கும் சொற்கள். 'அ'வில் தொடங்கும் சொற்களுக்குள்ளும் 'க' என்பதை இரண்டாவது

எழுத்தாக உடைய அகம் என்னும் சொல் முந்தியும், 'ணி' என்பதை இரண்டாம் எழுத்தாக உடைய அணில் என்னும் சொல் பிந்தியும் இருப்பது காண்க. எழுத்து வரிசையில் 'ணி' என்பதைவிட 'க' என்பது முன்னது அல்லவா ? நம் மண்டல புருடரோ முதல் எழுத்தைக் கவனிக்காமல் இரண்டாவது எழுத்தை மட்டும் அகராதிக் கண்கொண்டு நோக்கியுள்ளார்.

ஆசிரியர் 1575 சொற்களையும் பதினெட்டு எதுகைக் குள் அடக்கிப் பதினெட்டுப் பகுதிகளாக அமைத்திருப் பதனால், நாம் ஒரு சொல்லுக்குப் பொருள்தேட 1575 சொற்களையும் புரட்டிக்கொண்டு கிடக்க வேண்டிய தில்லை. எடுத்துக் காட்டாக, கழல் என்னும் சொல்லுக் குப் பொருள் காணவேண்டுமாயின், நேரே ழகர எதுகைப் பகுதிக்குச் சென்று விடலாம். ஆசிரியர் கையாண்டுள்ள இந்த அமைப்பு ஓரளவு அகராதி முறை போன்ற வசதி உடையதல்லவா ?

ஆனால், மண்டல புருடர் கையாண்டுள்ள எதுகை முறையில் குறை இல்லாமலும் இல்லை. நாம் எடுத்துக் காட்டாக முன் பார்த்த ககர எதுகைப் பாடலில் ககர எதுகைச் சொற்களினிடையே 'வசி' என்னும் சகர எதுகைச் சொல்லும், னகர எதுகைப் பாடலில் னகர எதுகைச் சொற்களினிடையே 'பேடு' என்னும் டகர எதுகைச் சொல்லும் கலந்திருப்பதைக் கண்டோம். இவ்வாறு கலப்பு எதுகையாக அமைத்திருப்பது ஒரு குறைதானே ! அடியை நிரப்புவதற்காக இடை யிடையே வேறு எதுகைச்சொல்லையும் ஆசிரியர் கலந்து விட்டிருப்பதாகத் தெரிகிறது. அடியைப நிரப்பவேண் டும் என்னும் நோக்கத்தில் — மோனை அமைந்த சொல்லைப் போடவேண்டும் என்னும் நோக்கமும்

கலந்திருக்கிறது. எடுத்துக் காட்டாக மேலே பார்த்த னகர எதுகைப் பாடலின் இரண்டாம் அடியில் 'பீனமே பருமை பாசி பேடு என்ப பேடி ஊரே' என 'பீனம்' என்னும் னகர எதுகைச் சொல்லுக்கு மோனையாகப் 'பேடு' என்னும் டகர எதுகைச் சொல் போடப்பட்டுள்ளது. மோனை என்பது முதல் எழுத்து ஒத்திருப்பது. 'பீ' என்னும் எழுத்துக்கு 'பே' என்னும் எழுத்து மோனை யாகும். ஒவ்வோர் அடியிலும் இவ்வாறு மோனை அமைய வேண்டியது யாப்பிலக்கண முறையாகும். ஒத்த எதுகை உடைய மோனைச் சொல் இருந்து கிடைத்தால் ஆசிரியர் போடுவார்; கிடைக்காவிட்டால் வேறு எதுகை உடைய மோனைச் சொல்லைத்தானே போடவேண்டும்? அவர் என்ன செய்வார்! கலப்பு எதுகை ஏற்பட்டதன் பொருட்டு (காரணம்) இப்போது புலனுகலாம்.

மற்றும், சில விடங்களில் சொல்லுக்குப் பொருள் கூறும்போது வேண்டாத அடைமொழிச் சொற்களைச் சேர்த்திருப்பதால் பொருள் மயக்கம் ஏற்படுகிறது — என்று ஒரு குறை கூறப்படுகிறது. எடுத்துக் காட்டாக, விழவு என்னும் சொல்லுக்குப் பொருள் கூறவந்த ஆசிரியர்,

"விழவு என்ப மிதுன ராசி விளங்கும் உற்சவமு மாகும்."

என்று பாடியுள்ளார். விழவு என்னும் சொல்லுக்கு மிதுனராசி, உற்சவம் என்னும் இரண்டு பொருளாம். இங்கே உற்சவத்தை 'விளங்கும் உற்சவம்' என அடைமொழி தந்து குறிப்பிட்டுள்ளார். விழவு என்பதற்கு 'விளங்கும்' என்றும் ஒரு பொருள் உண்டு போலும் என்று சிலர் மயங்கக் கூடும். ஆனுல் இத்தகைய

மயக்கம் போதிய இலக்கியப் பயிற்சி யில்லாதோர்க்கே ஏற்படும். இந்த மயக்கம் ஏற்படாதிருக்க ஆசிரியர் சில விடங்களில் இந்தச் சொல்லுக்கு இத்தனை பொருள் உண்டு என்று இறுதியில் எண்ணிக்கை யிட்டும் கூறியுள்ளார். எடுத்துக் காட்டாக குழல் என்னும் சொல்லுக்குத் துளையுடைப் பொருள், மயிர் இசைக்குழல் என்னும் மூன்று பொருள் உண்டு என்பதை,

"குழல்துளையுடைப் பொருட்பேர் மயிர் இசைக்குழல்
முப்பேரே."

என்னும் அடியால் அறிவித்துள்ளார். இறுதியில் மூப்பேர் (மூன்று பொருள்களின் பேர்) என்று எண் ணிக்கையிட்டு விட்டதால் பொருள் மயக்கத்திற்கு இடமில்லை யன்றோ?

எனவே, இதுபோல்வனவற்றைப் பெருங் குறை யாக எடுத்துக்கொள்ளக் கூடாது. செய்யுளில் இடம் அடைப்பதற்காகவும் எதுகை மோனை அமைப்பதற் காகவும் — அதே நேரத்தில் அழகுக்காகவும் சுவைக் காகவும் சில அடைமொழிச் சொற்களைச் சேர்க்கத் தான் வேண்டியிருக்கும். இந்நுட்பங்களையெல்லாம் செய்யுள் இயற்றும் பயிற்சி யுடையோரே நன்கறிவர்.

ஆசிரியர் மண்டல புருடரே பதினோராம் தொகு தியை எதுகை முறையில் வரிசைப்படுத்திப் படிப் போர்க்கு வசதி செய்திருந்தும், மேலும் சில வசதி களைப் பிற்காலத்தார் செய்துகொண்டுள்ளனர். ஒரே எதுகைச் சொற்கள் அமைந்த பாடல்களைத் தனியாக வும், கலப்பு எதுகைச் சொற்கள் அமைந்த பாடல் களைத் தனியாகவும் பிரித்தனர். ஒரே எதுகைச்

சொற்கள் அமைந்த பாடல்களையும், திவாகரத்தில் செய்தது போல், ஆதியில் பொருள் — அந்தத்துப் பொருள் என இருபிரிவாகப் பகுத்துக் கொண்டனர். இவ்வாறெல்லாம் பிற்காலத்தினர் தத்தம் கைவண்ணம் பெய்து எளிதாக்கிக் கற்றனர்— கற்பித்தனர்.

## வேதகிரியார் சூடாமணி

சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதியில் மொத்தம் 310 விருத்தப் பாக்கள் உள்ளன; அவற்றின் வாயிலாக 1575 சொற்களுக்கே பொருள் விளக்கம் செய்யப்பட்டுள்ளது; தமிழ் மொழியில் உள்ள மற்ற சொற்கள் எல்லாம் இடம் பெறவில்லை. இக்குறை போக்க, பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த களத்தூர் வேதகிரி முதலியார் என்பவர், மேலும் பல சொற்களை எதுகை முறையில் அமைத்துப் புதிதாக 290 விருத்தப் பாக்களை இயற்றிச் சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதியில் உள்ள 310 விருத்தப் பாக்களின் இடையிடையே புகுத்தி (310 + 290 = 600) மொத்தம் 600 பாக்கள் கொண்ட தனிநூலாக்கி 'வேதகிரியார் சூடாமணி' என்னும் பெயரில் 1842-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இவ்வாறெல்லாம் சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதி பல 'அவதாரங்கள்' எடுத்திருப்பதாகத் தெரிகிறது.

## நயநப்ப முதலியார் உரை

பதினோராம் தொகுதியில் பலர் பல சீர்திருத்தங்கள் செய்ததன்றி அதற்குமட்டும் தனியே உரை எழுதியும் உள்ளனர். அவ்வுரைகளுள் புதுவை—நயநப்ப முதலியார் உரை தானும் ஒன்று என்பதோடு நில்லாமல்,

முதன்மையானதாகவும் பிறரால் பின்பற்றப்பட்ட தாகவும் தெரிகிறது. பதினோராம் தொகுதியாகிய ஒரு சொல் பலபொருள் தொகுதியை எல்லோரும் எளிதில் படித்துப் புரிந்து கொள்ளும்வண்ணம் ஓர் உரை எழுதுக என்று நாதமுனி என்பவர் கேட்டுக்கொள்ள நயநப்ப முதலியார் தெளிவாக உரை எழுதினராம். இந்தச் செய்தி நயநப்ப முதலியாரது உரைநூற் பதிப்பின் தொடக்கத்தில், அவரைப் புகழ்ந்து புதுவை—பொன்னுசாமி முதலியாரால் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ள உரைப்பாயிரப் பாடலால் தெரியவருகிறது. அப்பாடல் வருமாறு :—

### உரைப் பாயிரம்
### [நேரிசை யாசிரியப்பா]

“ வளமலி கடல்சூழ் மாநில மதனில்
உளநூல் எவற்றினும் உறுபயன் யாவையும்
கற்றுணர்ந் தவரும் கல்லா தவரும்
சற்றும் உளனிற் றளர்வெய் தாமல்
வேங்கடம் குமரி மேற்கடல் கீழ்க்கடல்
ஆங்கவ் வெல்லையுள் அருந்தமிழ்ப் பௌவத்
திலகும் அமிழ்தென இயைந்திடும் ஒருசொற்
பல்பொருள் தொகுதி பகர்பொருள் அனைத்தையும்
வெளிப்படை யாக விதந்ததற் கோருரை
எளிதின் உணர இயற்றுதி என்னு
மருமலர்ப் பொழிலு மணிநிகழ் மாடமும்
பெருகுநல் வளங்கள் பிறங்கும் ஆவணமும்
சேலூர் கயமும் செறிந்தெழில் விளங்கும்
வேலூர்க் கதிபன் வென்றிசேர் மகிபன்
திருமால் பதத்தைச் சிந்தையில் இருத்தும்
பெருமான் தமிழ்மறை பெரிதுணர் பெற்றியன்
கருணைச் சாகரம் கல்விக் காகரம்

பொருள்நனி யளிக்கும் புலவர் பொன்மேரு
மேதகு சந்தியப்பன் மெய்த்தவத்தால்
காதல னாகக் கவினுறத் தோன்றிக்
கோதறு மேழிக் கொடியினை யுயர்த்த
நாத முனிமன் நவின்றன னாகத்
திவாகரம் அரும்பொருள் விளக்கத் தீபிகை
அவாவற உணர்த்தும் ஆசிரிய நிகண்டோ
டகலாப் பிங்கலம் அமர்ந்திடும் உரிச்சொல்
நிகண்டு கயாகரம் நிகழ்த்தும் இரேவணர்
சூத்திரம் பொதிய நிகண்டெனும் தொன்னூல்
மாத்திர மன்றியும் மருவு தொல்காப்பிய
முதனூல் விதிகளை முழுதுணர் அறிவால்
இதமுள சொல்வழூப் பொருள்வழூ இலாவகை
ஆராய்ந் ததனை அமைதிபெற விரித்து
ஏரார் இலக்கியம் ஏற்கும் படியுரை
மேற்கோள் காட்டி மேம்படச் செய்தனன்
பாற்பட இசைத்த பல்கலைப் புலமையும்
நாற்றிசை எங்கணு நண்ணிய சிறப்புந்
தோற்றமும் ஆற்றலுஞ் சோர்விலா நடையுங்
கிளர்பெருஞ் செல்வமுங் கீர்த்தியும் ஓங்கி
வளரஎஞ் ஞான்றும் வயம்பெறு நிபுணன்
கங்கை குலாதிபன் கடிகமழ் குவளை
தங்கு புயாசலன் தரும குணாலயன்
உயர்சீர்ப் புதுவையின் உற்ற
நயநப்பன் எனுமியற் பெயர்கொள் நாவலனே."

இப்பாடலிலிருந்து தெரியவரும் சில கருத்துக் களாவன :—

வள மிக்க வேலூரில் சந்தியப்பன் என்னும் பெரியார் வாழ்ந்தார். அவர் திருமாலை வழிபடுபவர்; அருட் கடல்; கல்வியே உருவானவர்; பொருள் ஈந்து புலவர் களைப் போற்றுபவர். அவர் மகன் நாதமுனி என்பவர்.

இந் நாதமுனி மேழிக் கொடி உடையவர். இவர், சூடாமணியின் பதினோராம் தொகுதிக்கு உரை எழுதும் படி நயநப்பன் என்னும் அறிஞரைக் கேட்டுக்கொண்டார். இந்த நயநப்பர் பல்கலைப் புலவர்; எங்கும் பரவிய புகழினர்; பெருஞ் செல்வர்; கங்கை குலத்தினர்; தோளில் குவளைமாலை அணிபவர்; கொடைப் பண்பினர்; புதுவை என்னும் ஊரினர். இவர், தொல்காப்பியம், திவாகரம் முதலிய நூற்களை ஆராய்ந்ததன் துணைகொண்டு பல நூற்களிலிருந்து தக்க மேற்கோள்களும் காட்டிப் பிழையின்றி உரையியற்றினர்—

மேலுள்ளாங்கு, பதினோராம் தொகுதிக்கு உரையெழுதியவர் பெயரே இவ்வளவு பெருமிதப்படுத்தப் படுவதை நோக்குவோர், அப்பதினோராவது தொகுதி எவ்வளவு இன்றியமையாததாகப் போற்றப்பட்டிருக்கும் என்பதையும் நுனித்துணர முடியும்.

இனி, இத்தொகுதியை மாதிரி பார்ப்பதற்காக இரண்டே இரண்டு சுவையான இடங்களை எடுத்துக் கொள்வாம் :—

உப்பு என்னும் சொல்லுக்கு, பெண்கள் ஆடும் ஒரு வகை விளையாட்டு, உவர்ப்புத் தன்மை (உப்புக் கரிப்பு), கடல், இனிமை என நான்கு பொருள்கள் உண்டாம்:

"உப்பு மெல்லியலாராடல் உவர் கடல் இனிமை நாற்பேர்."

என்பது சூடாமணிப் பாடல் பகுதி. இந்நான்கு பொருள்களுள், மெல்லியலாராகிய பெண்கள் உப்புகுந்தம் — உப்பு மூட்டை போன்ற பெயர்களில் ஆடும் உப்பு விளையாட்டு என்னும் பொருளும் புதிதன்று; உவர்ப்புத் தன்மை, கடல் என்னும் இரண்டு பொருள்

களுங்கூடப் பழையனவே. ஆனல், 'இனிமை' என்னும் பொருள்தான் இனிமையாகவும் புதுமையாகவும் உணரப்பட்டுச் சுவை பயக்கிறது.

ஆம், உண்மைதான்! உப்பு என்னும் சொல்லுக்கு 'இனிமை' என்னும் பொருள் முற்றிலும் பொருந்தும்—முக்காலும் பொருந்தும்.

தனியே வாயில் போட்டால் கரித்துத் 'தூ - தூ' என்று துப்பக்கூடிய பொருள் உப்பு என்பது உண்மைதான் என்ருலும், தனித்தனியே நச்சுத்தன்மையுடைய சோடியம், குளோரைன் என்னும் இரண்டு பொருள்களின் சேர்க்கைப் பொருள்தான் உப்பு என்பது உண்மைதான் என்ருலும், உப்பு என்னவோ இனிமை தரும் பொருள்தான்! நூறு ரூபாய் செலவிட்டு ஆக்கும் ஓர் உணவுப் பொருளில் ஒரு சிறிதளவு உப்பு போடாவிட்டால் அதை வாயில் வைக்க முடியுமா? சிறிது உப்பு சேர்த்துவிட்டாலோ அமிழ்தம்—அமிழ்தம் அல்லவா? புளி, மிளகாய், எண்ணெய், கடுகு, சீரகம், வெங்காயம், காய், பயறு முதலியவற்றுள் எதையும் சேர்க்காமலேயேகூட உணவை உண்டுவிட முடியும். ஆனல் உப்பு போடாமல் உண்ண முடியாதே! உப்பு ஒன்றுமட்டுமே சேர்த்துக் கூழாகவும் கஞ்சியாகவும் உட்கொண்டுவிட முடியுமே! இதனுல்தான், 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்னும் பழமொழி எழுந்தது. தெலுங்குப் பெரியாராகிய வேமன்னர் என்பவரும் வேமன்ன பத்தியம் என்னும் தமது நூலின் ஒரு பாடலில் இந்த உப்புச் செய்தியை ஒரு பெரிதாக மதித்து, 'உப்பில்லாத கறி (பதார்த்தம்) உதவியற்றது' ('உப்புலேனு கூர வூனம்புருச்சலகு') என்று கூறியுள்ளார்.

எனவே, 'உணவை இனிமையுடையதாக்குவது உப்பே யாதலின் உப்பு இனிமை எனப்பட்டது.

உணவை உணவாக ஆக்குவது — அதாவது — உண்ணக் கூடியதாகச் செய்வது உப்பே யாதலின் உணவுக்கு உப்பு என்னும் குழூஉக்குறிப் பெயரும் உண்டு. 'அவர் உப்பைத் தின்றுவிட்டு அவருக்கே கேடு செய்யலாமா ?' 'உங்கள் உப்பைத் தின்றுவிட்டு உங்களுக்கே கேடு சூழ்வேனு ?' என்னும் உலக வழக்குத் தொடர்களில் உப்பு என்றது உணவைக் குறிக்கின்றதல்லவா ? எனவே மண்டல புருடர் சூடா மணி நிகண்டில் உப்பு என்னும் சொல்லுக்கு உணவு என்ற பொருளையும் சேர்த்து ஐந்து பொருள்கள் எழுதி யிருக்கலாம். இவ்வாறு எழுதாவிடினும், அவர் கூறி யுள்ள இனிமை என்னும் நான்காவது பொருளிலேயே உணவு என்னும் ஐந்தாவது பொருளையும் அடக்கி விட லாம். உணவை உண்ணக்கூடிய அளவில் இனிமை யுடைய பொருளாகச் செய்வது உப்பே யன்றோ !

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்னும் முது மொழியும் தமிழ் மொழியில் உண்டு. ஈண்டு, உப்பிட் டவர் என்பதற்கு உணவளித்தவர் என்று பொருள் கொள்வதனினும், கூழுக்கோ, கஞ்சிக்கோ, கீரைக்கோ போட உப்பு வாங்கவும் வசதியின்றி நீ தவித்தபோது, சிறிது உப்பு அளித்து உண்ணும்படிச் செய்தவர்கள் என்று பொருள் கொள்வது சாலச் சிறந்தது. எனவே, உப்பே இனிமை என்னும் பொருட்பொருத்தம் இப்போது இனிது விளங்குமே !

ஏன், உப்பு என்னும் சொல்லுக்கு இனிமை என் னும் பொருள் உண்டா என்று வள்ளுவனரிடம்

சென்று கேட்டுப் பார்ப்போமே! ஆம், உண்டு என்று அவர் திருவாய் மலர்கிறார் :

ஒரு தலைவனும் தலைவியும் ஊடல்கொள்கின்றனர்; பின்னர் ஊடல் நீங்கிக் கூடுகின்றனர். ஊடலைத் தொடர்ந்து நிகழ்ந்த அக் கூடலில் மிக்க இனிமை கண்டனர். "ஆகா! ஊடிக் கூடும் இந்த இனிய இன்பம் இன்னும் கிடைக்காதா" என்று ஏங்குகிறான் தலைவன். சுவை கண்ட பூனையல்லவா ? இந்தக் கருத்து, திருக்குறள் காமத்துப் பாலில் "ஊடல் உவகை" என்னும் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

இதோ குறள் :

**"ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்**
**கூடலில் தோன்றிய உப்பு."**

இந்தக் குறட் பாவில் இனிமை என்னும் பொருளில் உப்பு என்னும் சொல்லைக் கையாண்டுள்ளார் பெருமான் வள்ளுவனார். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் என்றபடி, இது போன்ற இலக்கிய ஆட்சிகளைக் கண்டே நிகண்டு நூலார் சொற்பொருள் தொகுத்துள்ளனர்.

மற்றும் உலகியலில்கூட, ஒரு காட்சியோ — ஒரு சொற்பொழிவோ — ஓர் எழுத்துப் படைப்போ — அல்லது இன்னும் வேறு ஏதேனும் ஒன்றோ சுவை பயக்கவில்லையாயின், "அதில் உப்பு சப்பு ஒன்றும் இல்லை' என்று கூறி மக்கள் உதட்டைப் பிதுக்குவது கண்கூடு. இவ்வாறெல்லாம் நின்று உப்பு என்னும் சொல்லின் இனிமைப் பொருள் நமக்கு இனிமை தருகிறது.

அடுத்து, 'சமன்' என்னும் சொல்லின் பொருள் உணரத்தக்கது. சமன் என்பதற்கு யமன், நடு என்னும் இரு பொருள்கள் உண்டாம்.

" சமன் யமன் நடுவும் ஆகும்."

என்பது சூடாமணிப் பாடல் பகுதி. சமன் என்னும் சொல்லுக்குரிய நடு (சமம்) என்னும் பொருள், அனைவரும் அறிந்த அன்றாட வழக்கில் உள்ள பொருளேயாகும்; ஆனால் யமன் (எமன்) என்னும் பொருளோ புதுமையானது — நினைக்கத் தக்கது.

எமன் என ஒருவன் இருக்கிறானா—இல்லையா என்ற ஆராய்ச்சி ஈண்டு வேண்டுவ தின்று. ஆனால் அப்படியொருவன் இருப்பதாக ஒரு சிலராயினும் நம்புகின்றனர். அவன் எல்லோரையும் சமமாகக் கருதுபவனும். அரசர்—ஆண்டி, இல்லறத்தார்-துறவறத்தார், ஏழை-செல்வர், இளையவர்—முதியவர், ஆண்கள்—பெண்கள், பிறந்த குழந்தை — குழந்தை பெற்ற தாய் என்ற வேற்றுமை அவனுக்குக் கிடையாதாம். அவரவர்க்குள்ள காலக்கெடுவின்படி ஒரு நொடி நேரமும் தாழ்க்காது சென்று உயிரைப் பிடிப்பானும். அவனது இந்த நேர்மைப் பண்பை — நடுவுநிலைமையை, சாத்தனார் இயற்றிய மணிமேகலை என்னும் காப்பியத்தில் உள்ள

" தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டிர் ஆற்றாப் பாலகர்
முதியோர் என்னான் இளையோர் என்னான் "

என்னும் பாடற் பகுதியாலும் உணரலாம். எனவே, எவரும் எமனுக்குக் கையூட்டு (இலஞ்சம்) கொடுத்து உயிரைக் காத்துக்கொள்ள முடியாதுபோலும்! ஆனால்,

மார்க்கண்டேயன் சிவனது உதவியால் எமனை வென்ற புராணக் கதை உண்டு. அறநெறிப்படி நோக்கின், சிவன் எமனை உதைத்து மார்க்கண்டேயனைக் காத்தது பொருந்தாச் செயலே. இது கட்டுக் கதையாதலின் இதனை விடுப்பாம்.

இதுகாறுங் கூறியவாற்றால், துலாக் கோல்போல் எமன் நடுநிலைமை உடையவன் — சம நோக்கினன் என்பது பெறப்படும். இதனாலேயே இவனை 'எம தருமன்' என்றுகூட அழைப்பதுண்டு. இதனாலேயே இவனுக்குச் சமன் என்னும் பெயர் வைக்கப்பட்டது. மேலும் இவன், அவரவரது குற்றத்திற் கேற்பக் கண்டிப்பான தீர்ப்பு வழங்குவதாகவும் கூறுவதுண்டு

திருவாளர் யமதருமனைப் பற்றிய செய்தி நம்பத் தக்க தன்று என்று சொல்லப்படினும், சமன் என்னும் சொற் பொருள் நயம் அறிவிற்கு விருந்தாயுள்ளது.

இவ்வாறு சூடாமணியின் பதினோராவது தொகுதி யின் சொற்பொருள்நயச் சோலைக்குள் புகுந்தால் எண்ணற்ற இடங்களில் அமர்ந்து இளைப்பாறலாம்.

## மூன்றாவதும் முதலாவதும்

சூடாமணி பவணந்தியார் காலத்திற்குப் பின்னால் எழுந்த நிகண்டாதலின், அவர் தமது நன்னூலில் இதனைக் குறிப்பிடவில்லை. ஆயினும், அந் நன்னூலில் உள்ள "பிங்கலமுதலா நல்லோர் உரிச்சொலில்" என்னும் நூற்பாப் பகுதிக்குப் பிற்காலத்தில் உரை யெழுதிய சங்கர நமச்சிவாயர் என்னும் பெரும்புலவர் இந்தச் சூடாமணியை மறந்தாரிலர் — மறக்கத்தான்

முடியுமா ? "பிங்கலம் திவாகரம் சூடாமணி முதலிய நூற்களுள்" என உரை விரித்துப் போந்தார் அவர்.

எனவே, நிகண்டுகளுக்குள் சூடாமணி மூன்றாவது இடத்தைப் பெற்றுத் திகழ்ந்தமை புலனாகும். நாளடைவில் முதலிடத்தையும் இது பெற்றுவிட்டது என்றும் துணிந்து கூறலாம். ஆம்! அருமருந்தைய தேசிகர் தாம் இயற்றிய அரும்பொருள் விளக்க நிகண்டில், சூடாமணியின் ஆசிரியராகிய வீரை மண்டலவருக்கே முதலிடம் தந்துள்ளார். மண்டல புருடர் முதலான ஆசிரியர்கள் எழுதிய நிகண்டு களைப் பின்பற்றித் தாம் தமது நிகண்டை இயற்று வதாகப் பாயிரத்தில் கூறியுள்ளார். அப்பாடல் வருமாறு :

"மாவியல் சிறக்கும் வீரை
மண்டலவன் காங்கேயன்
ரேவண சித்தன் செஞ்சொற்
சுயாதரன் இவராற் சொற்ற
பாவியல் நூற்கூ றோர்சொல்
பல்பொருள் தொகையெலாம் சேர்த்து
ஓவிலா வளஞ்சிறப்ப
ஒருபெரு நூல தாக."

இந்தப் பாட்டில் அருமருந்தைய தேசிகர் மண்டல புருடருக்கு முதலிடம் கொடுத்திருக்கிறார் என்றால், அவரது சூடாமணி நிகண்டுக்கு முதலிடம் கொடுத் துள்ளார் என்பதுதானே பொருள் ! திவாகரம், பிங்கலம் ஆகிய இரண்டையும் இருட்டடிப்புச் செய்து விட்டு, அவற்றின் இடங்களை இந்தச் சூடாமணி பிடித்துக்கொண்டதை இப்பாடலால் அறியலாம்.

# அகராதி நிகண்டு

## பெயர்க் காரணம்

இந்தக்காலத்தில் சொற்பொருள் கூறும்(டிக்ஷனரி) நூலை அகராதி என வழங்குகிறோம் நாம். அகராதி என்னும் இந்தச் சொல்லை முதல்முதல் அறிமுகப் படுத்தியது இந்த அகராதி நிகண்டுதான். சொற் பொருள் கூறும் நூலை மக்கள் பண்டைக் காலத்தில் 'உரிச்சொல்' என்னும் பெயரால் அழைத்தார்கள்; இடைக்காலத்தில் 'நிகண்டு' என்னும் பெயரால் அழைத்தார்கள்; இக்காலத்தில் அகராதி என்னும் பெயரால் அழைக்கின்றார்கள். அகராதி, நிகண்டு என்னும் இரண்டு பெயர்களையும் இணைத்துக்கொண்டு இந்த அகராதி நிகணடு காட்சியளிப்பது ஒரு புதுமையே! அதாவது, தமிழ் அகராதிக் கலை (Tamil Lexicography) வளர்ச்சியில் இது ஒரு புதுத் திருப்பமே யாகும். திருப்பம் எப்படி என்று பார்ப்போம்:

இதுவரையும் சொற்பொருள் விளக்க எழுந்த நூல்கள் யாவும் அ, ஆ என்ற அகர வரிசையில் ஆசிரியர்களால் அமைக்கப்படவில்லை. உலகிலேயே முதன் முதலாக இந்த அகராதி நிகண்டே அ, ஆ என்ற வரிசையில் ஆசிரியரால் சொற்கள் நிரல் செய்யப்பட்டு இயற்றப்பட்டது. அதனால் அகராதி நிகண்டு என்னும் சிறப்புப்பெயரும் பெற்றது. இக்காலத்தில் டிக்ஷனரியை (Dictionary) அகராதி என்று அழைக்கக் கற்றுக் கொடுத்ததே இந் நிகண்டுதான். எனவே, இது ஒரு

புதுத்திருப்பந்தானே ! இந்நூலுக்குப் பிறகே மேலை நாட்டில் அகர வரிசையில் அகராதிகள் தோன்றின என்பது ஈண்டு நினைவு கூரத் தக்கது.

## வேறு பெயர்கள்

இரேவண சித்தரால் சூத்திர (நூற்பா) நடையில் எழுதப்பட்ட நூலாதலின் அகராதி நிகண்டிற்கு 'இரேவண சூத்திரம்' என்ற பெயரும் உண்டு. இந்நூல் சூத்திர நடையில் அமைக்கப்பட்ட அகராதியாதலின் இதற்குச் 'சூத்திர வகராதி' என வேறு ஒரு பெயரும் உண்டு.

## ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் இரேவண சித்தர் எனப்படுபவர். இவர் புலியூர்ச் சிதம்பர ரேவண சித்தர் என நீளமாகவும் அழைக்கப்படுகிறார். புலிக்கால் முனிவர் (வியாக்கிர பாதர்) வழிபட்ட ஊராதலின் சிதம்பரத்திற்குப் புலியூர் என்ற பெயரும் உண்டு. எனவே, ஆசிரியரது ஊர் சிதம்பரம் என்பது புலனாகும். இவர் சைவ வேளாள மரபினர் எனவும், வீரசைவச் சமயத்தினர் எனவும் சொல்லப்படுகிறார். ஆசிரியர் பல பாக்களில் பட்டீசுரரைத் தொழுதிருப்பதால், திருப்பட்டீசுரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவனைக் குலதெய்வமாகக் கொண்டவர் என்பது புலப்படும்.

அகராதி நிகண்டேயன்றி, திருப்பட்டீசுரப் புராணம், திருவலஞ்சுழிப் புராணம், திருமேற்றளிப் புராணம் ஆகிய புராண நூற்களும் ஆசிரியர் இயற்றியுள்ளார். எல்லாவற்றிற்கும் மேலாக, முதல் முதல் அகராதி முறையில் நிகண்டு இயற்றிய திறனொன்றே,

ஆசிரியரின் அறிவு நுட்பத்திற்கும் புலமையின் தலைமைக்கும் போதிய சான்ருகும்.

### காலம்

ஆசிரியர் இரேவண சித்தர் அகராதி நிகண்டின் பாயிரத்தில், சகாத்தம் 1516-ஆம் ஆண்டில் இந் நிகண்டைத் தாம் இயற்றியதாகக் கூறியுள்ளார் :

“ அரிய சகாத்தம் ஆயிரத் தைஞ்னூற்று
ஒருபத் தாறெனஉரைத்திடும் ஆண்டினில்......
........................அகராதி நிகண்டென
ஓதினன் யாவரும் உணர்ந்திட நினைந்தே.”

என்பது அப்பாயிரப் பாடற் பகுதி. சக ஆண்டுடன் 78 ஆண்டுகள் கூட்டிக் கொண்டால் கி. பி. ஆண்டு கிடைக்கும். எனவே, சக ஆண்டு 1516 என்ருல், கி.பி. 1594-ஆம் ஆண்டில் அகராதி நிகண்டு இயற்றப் பட்டது என்பது தெளிவு. ஆகவே, ஆசிரியரின் காலம் பதினும் நூற்ருண்டின் பிற்பகுதி என்பது வரைக் கும் உறுதி. மேலும் அவர் அகராதி நிகண்டு இயற்றிய பின்னும் பதினேழாம் நூற்ருண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்திருக்கலாம்.

### நூல் அமைப்பு

திவாகரத்தில் உள்ள பன்னிரு தொகுதிகளும் மூன்று பெரும் பிரிவுகளுக்குள் அடக்கப்பட்டுள்ளன அல்லவா ? அம் மூன்றனுள் இரண்டாவதாகிய ‘ஒரு சொல் பல்பொருள் பெயர்த்தொகுதி’என்னும் பிரிவைச் சார்ந்ததே அகராதி நிகண்டு. அதாவது திவாகரம், சூடாமணி ஆகிய நிகண்டுகளிலுள்ள பதினேராவது

தொகுதி யொன்றுமட்டுமே அகராதி நிகண்டாக விரிந்துள்ளது. ஆனால் அமைப்பில் அவற்றினும் இது வேறுபட்டதாகும்.

இந்நிகண்டு நூற்பா (சூத்திர) யாப்பினாலானது. இந்நூலினைப் பத்துத் தொகுதியாகப் பிரித்து, மொத்தம் 3368 நூற்பாக்கள் எழுதியிருப்பதாக ஆசிரியர் பாயிரத்தில் கூறியுள்ளார். ஆனால் அச்சிட்ட நூலின் இறுதியில் 3334 பாக்கள் என்று தொகை கொடுக்கப்பட்டுள்ளது. இடையிடையே 34 பாக்கள் எப்படியோ விடுபட்டுப் போயின.

அகர வரிசையை யொட்டி இந்நூல் பத்துத் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை யாவன:

1. அகராதிப் பேர்த்தொகுதி
2. ககராதிப் பேர்த் தொகுதி
3. சகராதிப் பேர்த் தொகுதி
4. ஞகராதிப் பேர்த் தொகுதி
5. தகராதிப் பேர்த் தொகுதி
6. நகராதிப் பேர்த் தொகுதி
7. பகராதிப் பேர்த் தொகுதி
8. மகராதிப் பேர்த் தொகுதி
9. யகராதிப் பேர்த் தொகுதி
10. வகராதிப் பேர்த் தொகுதி

'அ' தொடங்கி 'ஔ' வரையும் உள்ள உயிர் எழுத்துக்களை முதலிலே உடைய சொற்களெல்லாம் அகராதிப் பேர்த் தொகுதியிலும், 'க' தொடங்கி 'கௌ' வரையும் உள்ள எழுத்துக்களை முதலிலே

கொண்ட சொற்களெல்லாம் ககராதிப் (ககர இனம்) பேர்த் தொகுதியிலும், இவைபோலவே மற்ற மற்ற சொற்களெல்லாம் மற்ற மற்ற தொகுதிகளிலும் அடக்கப்பட்டுப் பொருள் கூறப்பட்டுள்ளன.

இந்நூலில் பல வகையான சொற்கள் இடம் பெற்றுள்ளன ; அதாவது, பிற நிகண்டுகளில் உள்ள சொற்களோடு, சங்க இலக்கியங்களிலும் அவற்றின் உரைகளிலும் உள்ள அருஞ் சொற்களும், பிற்காலத் தமிழிலக்கியங்களிலுள்ள சொற்களும், உலக வழக்குச் சொற்களும், வடமொழி — தெலுங்கு — கன்னடம் முதலியவற்றினின்றும் திரிந்து வந்த சொற்களும் இதில் இடம் பெற்றுள்ளன.

இந்நூலில் இடம் பெற்றுள்ள சொற்களெல்லாம் அகர வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன என்பது உண்மையாயினும், சொற்களின் முதல் எழுத்தைப் பொறுத்துமட்டுமே அகரவரிசை பின்பற்றப்பட்டிருக்கிறது ; இக்கால அகராதிகளில் உள்ளாங்கு சொற்களின் இரண்டாவது — மூன்ருவது — நான்காவது எழுத்துக்களையும் பொறுத்து அகரவரிசை அமைக்கப்படவில்லை. என்ருலும், "சும்மா கிடந்த பிள்ளையாருக்கு ஒரு பொங்கல் சோறு போதாதா" என்னும் பழமொழியே போல, அகராதி முறையே தோன்ருதிருந்த காலத்தில் முதலெழுத்தளவில் மட்டுமாவது சொற்கள் அகர வரிசைப் படுத்தப்பட்டமை வரவேற்கத்தக்கதும் பாராட்டத் தக்கது மாகுமன்ருே !

## நூல்

ஆசிரியர் நூலின் தொடக்கத்தில் பிள்ளையார்மேல் இரண்டு காப்புப் பாடல்கள் பாடியுள்ளார். அவை :

" சோதி விநாயகர் பாத மெனமுடி
வோதிய நாவினர் நீதி யுளார்களே."

" வெள்ளை வாரணப் பிள்ளையார் பதம்
உள்ளுவார் மனக் கள்ள மாறுமே."

இவையன்றி, ஒவ்வொரு தொகுதியின் முன்னாலும் இறைவனை வணங்கி இன்ன தொகுதியைச் சொல்கிறேன் என்று கூறியே தொடங்கியுள்ளார்.

இஃதிங்ஙன மிருக்க, இங்நிகண்டின் ஓலைச் சுவடியில் நூலின் தொடக்கத்தில் பின்வரும் பாடல் காணப்படுகிறதாம் :

" தேன ருமகிழ்த் தொடையலு மவுலியுந்
திருக்கிளர் குழைக்காதுங்
கான ருமலர்த் திருமுகச் சோதியுங்
கயிரவத் துவர் வாயும்
மோன மாகிய வடிவமு மார்பமு
முத்நிரைத் திருக்கையும்
ஞான தேசிகன் சரணதா மரையுமென்
நயனம் விட் டகலாவே."

இது திருமால் வணக்கப் பாடலாகும். அகராதி நிகண்டின் ஆசிரியர் இரேவண சித்தரோ சைவர். எனவே இப்பாடலை, ஏடு பெயர்த் தெழுதிய வைணவ ரொருவர் தம் வழிபடு கடவுளை வழிபட்டு வேலையைத் தொடங்குமுகத்தான் எழுதிச் சேர்த்திருக்கவேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர். ஆகவே, இரேவண சித்தர் பிள்ளையார் காப்பு மட்டுமே எழுதினர் என்பது தெளிவு.

பிள்ளையார் வணக்கத்தையடுத்து ஆசிரியரின் தற்சிறப்புப் பாயிரப் பாடல் அமைந்துள்ளது. அதில்

மேற்கூறிய செய்திகள் பலவற்றையுங் காணலாம். அப்பாடல் வருமாறு :—

" உலகினர் பவமற மலைமகள் தவஞ்செயும்
தேசுகொள் பட்டீச் சுரன்பதம் பணிந்து
ஒலியெழு கடல்சூழ் உலகிலாற் றெரிக்கும்
இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றுரைதரு சொற்கள் ஒருநான் கதனில்
திரிசொலின் பேதம் இருவகை யதுதான்
ஒருசொற் றனே பலபொரு ளாகியும்
பலசொற் றனே ஒருபொருள் நிலவியும்
வருமிதில் ஒருசொல் பலபொரு ளதனைத்
தெரிதரு பிங்கலம் திவாகர முதலாய்ப்
பரவிய நிகண்டு பலவெடுத் தாராய்ந்
ததிற்சில திரட்டி அகர முதலாய்
மதித்தெழு வகார வர்க்கம் ஈருய்
மொழிமுதல் எழுத்து நூற்றெரு நாலடைவே
மொழிதரு சூத்திர முதற்பதந் தோறும்
வருபெய ராதிப் பொருளா யெடுத்தே
ஒருபெயர் முதல் நாற்பத்தா றுய்
நிகழ்தர உரைக்கும் தொகைதனக் கிப்பெயர்
அடைவினில் அங்கங் கமர்ந்துள பேரும்
இடையிடை யடைவிலங் கில்லாப் பேரும்
மன்னு சூத்திர மூவாயிரத் துடனே
முந்நூற் றறுபத் தெட்டெனுந் தொகையாய்
வந்திடுந் தொகுதி ஈரைந்தென வகுத்தே
அரிய சகாத்தம் ஆயிரத் தைஞ்ஞூற்
றெருபத் தாறெனு உரைத்திடும் ஆண்டினில்
ஐந்ததி காரம் அறுபத்து நாற்கலை
உந்திய வறிவால் ஒருங்குட னுணர்ந்த
நாற்கவி வாணர் நகைதர யானும்
நூற்பா வதனல் நுண்ணிய வறிவினில்
ஆதரவால் அகராதி நிகண்டென
ஓதினன் யாவரும் உணர்ந்திட நினைந்தே. "

இப்பாயிரப் பாடல் அகராதி நிகண்டைப் பற்றி அறிந்து கொள்வதற்குரிய அகச் சான்ருய் அமைந் துள்ளது. இப்பாடலினுல் அறிந்து கொள்ளும் இன்றி யமையாத செய்திகள் சிலவற்றை ஈண்டு மீண்டும் தொகுத்துக் காண்பாம் :— இந்நூல் ஒரு சொல் பல் பொருட் பெயர்ப் பிரிவைச் சார்ந்தது; அகர முதல் வகரம் ஈருகப் பத்துத் தொகுதிகளை உடையது; அகராதி முறையில் அமைந்தது ; நூற்பா நடையால் ஆனது ; மொத்த நூற்பா 3368 ; சொற்கட்கு ஒரு பொருள் (அர்த்தம்) முதல் நாற்பத்தாறு பொருள்வரை கூறப்பட்டுள்ளன ; நூலின் பெயர் அகராதி நிகண்டு; நூல் எழுந்த காலம் சக ஆண்டு 1516 (கி., பி. 1594).

இவ்வளவு செய்திகளையும் உள்ளடக்கிக்கொண் டிருக்கும் இப்பாயிரம், அகராதி நிகண்டை ஆராய விரும்புவோர்க்கு அருந்துணை புரியும் என்பதில் ஐயமில்லை.

இனி, சொற்பொருள் கூறும் நூற்பாக்கள் சில வற்றைக் காண்பாம். மற்ற நிகண்டுகளினும் இந் நிகண்டில் இன்னெரு புதுமையும் உண்டு. அதாவது, ‘அ’ என்னும் எழுத்தை முதலில் உடைய சொற்களை முதலில் நிறுத்தியிருப்பதிலேயே மேலும் ஒரு புதுமை யைப் புகுத்தியுள்ளார் ஆசிரியர். அதாவது, ஒரே ஒரு பொருள் (அர்த்தம்) மட்டும் உடைய சொற்களை எல்லாவற்றிற்கும் முதலில் அமைத்துள்ளார் ; இந்தப் பகுதிக்கு ‘அம் முதல் ஒரு பெயர்’’ என்று தலைப்பு தரப்பட்டுள்ளது. ‘அம் முதல் ஒரு பெயர்’ என்ருல், ‘அ’ என்னும் எழுத்தை முதலில் பெற்று ஒரே ஒரு பொருள் தரும் சொல் — என்று பொருளாம். இதற்கு

எடுத்துக் காட்டாக அகராதி நிகண்டிலிருந்து இரண்டு நூற்பாக்கள் வருமாறு :

(அம் முதல் ஒரு பெயர்)

(1) " அரன் என்பதுவே சங்கரன் ஆகும்."

(2) " அம்பிகை என்பது உமையவள் பெயரே."

அரன் என்னும் சொல்லுக்குச் சங்கரன் என்னும் ஒரு பொருள் உரியது. அம்பிகை என்னும் சொல்லுக்கு உமையவள் என்னும் ஒரு பொருள் உரியது. இப் படியாக ஒரு பொருள் உடைய எழுபத்திரண்டு சொற்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்து. இரண்டு பொருள்கள் மட்டும் உடைய சொற்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இந்தப் பகுதிக்கு 'அம்முதல் இருபெயர்' என்னும் தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது இதற்கு எடுத்துக்காட்டாக இரண்டு நூற்பாக்கள் வருமாறு :–

(அம் முதல் இரு பெயர்)

(73) " அந்தரியே உமை துர்க்கை என்றிருபேர்."

(74) " அனந்தை தானேர் சத்தியும் பூமியும்."

அந்தரி என்னும் சொல்லுக்கு உமை, துர்க்கை என்று இரு பொருளாம். அனந்தை என்னும் சொற்குச் சத்தி பூமி என்று இரு பொருளாம். இப்படியாக இரு பொருள் உடைய அறுபத்து மூன்று சொற்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றைத் தொடர்ந்து மூன்று பொருள்கள்மட்டும் உடைய சொற்கள் அமைக்கப் பட்டுள்ளன. இப்பகுதிக்கு 'அம்முதல் முப்பேர்' எனத் தலைப்பு தரப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக ஒரு நூற்பா வருமாறு :—

(அம் முதல் முப்பேர்)

(136) " அத்தன் என்பதுவே சிவனும் பிதாவும்
சுவாமியும் என்றே சொல்லு முப் பேரே."

அத்தன் என்னும் சொல்லுக்குச் சிவன், பிதா, சுவாமி என்று மூன்று பொருளாம். இப்படியாக இன்னும் 'அம் முதல் நாற்பேர்', 'அம்முதல் ஐம்பேர்' என மேலும் மேலும் அடுக்கி 'அம் முதல் நாற்பத்தாறு பெயர்' வரையும் ஆசிரியர் கூறிச் சென்றுளார். 'அரி' என்னும் சொல்லுக்கு நாற்பத்தாறு பொருள்கள் உள்ளனவாம். அது பற்றிய பா வருமாறு :-

(அம் முதல் நாற்பத்தாறு பெயர்)

" அரியே : அரித்தலும், அருக்கனும், முராரியும்,
பரியும், சிங்கமும், பகையும், தேரையும்,
பொன்னும், காற்றும், பொன்னகர்க் கிறையும்,
செந்நெற் கதிரும், கிள்ளையும், காந்தியும்,
தேரும், ஐம்மையும், சேகும், வரியும்,
கூர்மையும், நிறமும், கூற்றும், வண்டும்,
வேயும், பன்றியும், விசியும், புகையும்,
பாயலும், சிலம்பின் பரலும், சோலையும்,
கண்ணினில் வரியும், கடலும், உரகமும்,
எண்ணிய கிரியும், ஈர வாளும்,
தகரும், வலியும், அரிசியும், குரங்கும்,
புகரும், நெருப்பும், புரையும், சயனமும்,
எறிதரு பறையும், எண்படைக் கலமும்,
குறிதரு பச்சையும், கூறிய மதுவும்,
அரிதலும், எனப்பெயர் நாற்பத் தாறே."

இது காறும் 'அ' என்னும் எழுத்தில் தொடங்கும் சொற்கள் சில பற்றிய நூற்பாக்கள் காட்டப்பட்டன. இவ்வாறே மற்ற எழுத்துக்களில் தொடங்கும் சொற்களை அகராதி நிகண்டிற் காண்க

# உரிச்சொல் நிகண்டு

சூடாமணிக்கு அடுத்ததாக உரிச்சொல்நிகண்டைச் சொல்லலாம். நிகண்டு என்பதைக் குறிக்கப் பண்டைக் காலத்தில் உரிச்சொல் என்ற பெயரே பயன்படுத்தப் பட்டது என முன்னரே கூறப்பட்டுள்ளது. எளிதில் விளங்காமல் அரிதிற் பொருள் விளங்கக்கூடியதும் செய்யுளுக்கு உரியதுமாகிய சொல்லுக்கு உரிச்சொல் என்று பெயராம். இத்தகு உரிச் சொற்களைப் பற்றிய நூலுக்கு உரிச்சொல் நிகண்டு என்னும் பெயர் கொடுக்கப்பட்டது.

## ஆசிரியர் வரலாறு

உரிச்சொல் நிகண்டின் ஆசிரியர் காங்கேயன் என்னும் புலவர். இவர் தொண்டை நாட்டிலுள்ள செங்கற்பட்டு என்னும் ஊரினர் என்று ஒரு சாராரும், கொங்கு நாட்டினர் என்று கொங்கு மண்டல சதக ஆசிரியரும் கூறுகின்றனர். இதுபோலவே, இவர் செங்குந்த மரபினர் என்று ஒரு சார் கருத்தும், வேளாள மரபினர் என்று ஒரு சார் கருத்தும் உள்ளன. மேலும் இவர் சைவ சமயத்தினர் என்றும் துறவி என்றும் சொல்லப்படுகின்றார்.

இவர் சைவ சமயத்தினர் என்ற கருத்துமட்டும் உறுதியானது. காங்கேயன் என்பது முருகக் கடவுளுடைய பெயர்களுள் ஒன்று. எனவே, அப்பெயரை யுடைய இவர் சைவர் என்பது தெளிவு. மேலும், தெய்வப் பெயர்த் தொகுதியில் சிவன், பார்வதி,

விநாயகர், முருகன் ஆகிய சைவ சமயக் கடவுளரையே இவர் முதலில் கூறியிருப்பதாலும் இவர் சைவர் என்பது புலனுகும். மற்றும் இவர், முதல் செய்யுளில், திருமாலாலும் நான்முகனுலும் காண முடியாத சிவபெருமான் எனச் சிவனைப் புகழ்ந்துள்ளார் :

"திருமாலுஞ் செங்கமல மேயானுங் காணுப்
பெருமான் பிறைசூடும் பெம்மான்—அருள் மூர்த்தி
நன்னெஞ்சி னுன்மறையோன் தில்லை நடம்புரிவோன்
என்னெஞ்சின் மேய இறை."

என்பது செய்யுள். இதனுலும் ஆசிரியர் சைவரே என்பது உறுதி.

## காலம்

காங்கேயன் பதினுன்காம் நூற்றுண்டினர் எனச் சிலர் கூறுகின்றனர்; இது பொருத்தமாகப் புலப்பட வில்லை. பதினுரும் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் பதினேழாம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் இவர் வாழ்ந்தார் எனவும், கி.பி. 1600-ஆம் ஆண்டு வாக்கில் உரிச்சொல் நிகண்டு இயற்றப்பட்டது எனவும் ஒரு சாரார் கூறுகின்றனர். ஏறக்குறைய இக்கருத்து பொருத்தமானதாகத் தோன்றுகிறது. பதினெட்டாம் நூற்றுண்டில் அருப்பொருள் விளக்க நிகண்டு இயற்றிய அருமருந்தைய தேசிகர், தமது நூலின் பாயிரப் பகுதியில், பதினுரும் நூற்றுண்டில் சூடாமணி நிகண்டு இயற்றியவராகக் கருதப்படும் வீரை(மண்டல புருடர்) மண்டலவருக்கு அடுத்த இடம் காங்கேய னுக்கு அளித்துள்ளார் :

"மாவியல் சிறக்கும் வீரை
மண்டலவன் காங்கேயன்
ரேவண சித்தன் செஞ்சொற்
கயாகரன் இவராற் சொற்ற..."

என்பது அரும்பொருள் விளக்க நிகண்டுப் பாடற்பகுதி. எனவே, பதினும் நூற்றுண்டினரெனக் கருதப்படும் மண்டல புருடர்க்கும், பதினெட்டாம் நூற்றுண்டினரெனக் கருதப்படும் அரு மருந்தைய தேசிகருக்கும் இடைப்பட்டவராகக் காங்கேயனைக் கொண்டு, உரிச் சொல் நிகண்டின் காலம் பதினேழாம் நூற்றுண்டின் முற்பகுதி என முடிவு கட்டுதல் ஒரு சார் பொருத்த முடைத்து.

## நூலின் அமைப்பு

இந் நிகண்டு வெண்பாவால் ஆனது. நினைவில் இருத்துதற்கு வெண்பா ஏற்றது — எளியது. ஒரு முறை படித்தாலேயே வெண்பா மனப்பாடமாகிவிடும் என்று சொல்லுவது வழக்கம். அதனுல் ஆசிரியர் வெண்பாவைத் தேர்ந்தெடுத்தாராம்.

இந்நிகண்டு திவாகரம்போல் பன்னிரண்டு தொகுதிகள் உடையதாம். அவற்றில் மொத்தம் 287 வெண்பாக்கள் உள்ளனவாம். சில ஓலைச் சுவடிகளில் பன்னிரண்டு தொகுதிகள் 287 பாடல்களுடன் காணப் படுகின்றன. ஆனுல், வேறு சில சுவடிகளில் ஒலி பற்றிய பெயர்த் தொகுதியும் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதியும் ஆகிய இரண்டும் நீங்கலாக மற்ற பத்துத் தொகுதிகளே 220 பாடல்களுடன் காணப்படுகின்றன. பன்னிரண்டு தொகுதிகள் என்னும் கொள்கையினர், 'ஒலி பற்றிய பெயர்த் தொகுதியும் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்

தொகுதியும் பிற்காலத்தவரால் போற்றிக் கற்கப் படாமையால் வழக்கழிந்து போயின ; அதனாலேயே சில சுவடிகளில் பத்துத் தொகுதிகளே காணப் படுகின்றன,' எனக் கருத்துத் தெரிவிக்கின்றனர். பத்துத் தொகுதிகளே என்னும் கொள்கையினரோ, 'ஆசிரியரால் பத்துத் தொகுதிகளே எழுதப்பட்டன ; ஆனால், இங்நிகண்டும் திவாகரம் போல் பன்னிரண்டு தொகுதிகள் பெற்று முழுநிறைவு உடையதாகத் திகழ வேண்டும் என விரும்பி, பின் வந்த யாரோ, ஒலி பற்றிய பெயர்த் தொகுதியையும் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதியையும் புதிதாகப் புனைந்து சேர்த்திருக்க வேண்டும்' எனக் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இஃது இங்ஙனம் இருக்க, மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இருக்கும் சுவடியில், பன்னிரண்டாம் தொகுதியான பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி மட்டும் இல்லையாம் ; ஒலி பற்றிய பெயர்த் தொகுதி உட்பட மற்ற பதினொரு தொகுதிகளும் உள்ளனவாம். இதிலிருந்து, முதலில் யாரோ ஒருவர் ஒலி பற்றிய பெயர்த் தொகுதியை எழுதிச் சேர்த்திருக்க வேண்டும் என்றும், பின்னர் வேறொருவர் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதியை எழுதிச் சேர்த் திருக்கவேண்டும் என்றும் உணர இடமிருக்கிறது— என ஒரு சார் கருத்தும் கூறப்படுகிறது.

## அச்சுப் பதிப்புகள்

உரிச்சொல் நிகண்டு முதன் முதலில் 1840-ஆம் ஆண்டில் புதுச்சேரியில் அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது. இதில் பத்துத் தொகுதிகளே உள்ளன. அடுத்து, 1858-இல், யாழ்ப்பாணம்

ரா. ரா. அருணுசலம் சதாசிவம் பிள்ளையால் யாழ்ப் பாணத்தில் அச்சிடப்பட்டதாம். இதில் எத்தனைத் தொகுதிகள் உள்ளனவென்று தெரியவில்லை. பின்னர் 1890-இல் தமிழ்ப் புலவர் சிவன் பிள்ளை அச்சேற்றினுர். இதில் பன்னிரண்டு தொகுதிகளும் உள்ளன. அதன் பின்னர் 1905-இல் சுன்ஞகம் அ. குமாரசாமிப் பிள்ளை பதிப்பித்தார். இதிலும் பன்னிரண்டு தொகுதிகளும் உள்ளன.

இவற்றைக்கொண்டு ஆராயுங்கால், உண்மையில் உரிச்சொல் நிகண்டு பத்துத் தொகுதிகள் உடையதா அல்லது பன்னிரண்டு தொகுதிகள் உடையதா என அறுதியிடல் அரிய செயலெனத் தோன்றுகிறது. ஆனுல், கொல்லம் ஆண்டு 950-இல் அதாவது கி. பி. 1775-ஆம் ஆண்டில் ஏடுபெயர்த்து எழுதப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் உரிச்சொல் நிகண்டின் ஒரு பழைய பனை ஓலைச் சுவடியில் உள்ள ஒரு பாடல், 'பராக்கிரம பாண்டிய தேவன் என்பவன், உரிச்சொல் நிகண்டினைப் பத்துத்தொகுதியாக ஒழுங்குபடுத்தினுன்' எனக் கூறுகிறது.

" உத்தம சீலத்துக் காங்கேயன் சொன்ன உரிச்சொல் தன்னை
வைத்த மனத்து.........
.........பராக்கிரம பாண்டிய தேவன் கண்டீர்
பத்துத் தொகுதியிற் சேர்த்தான் எவரும் படித்திடவே."

என்னும் பழம் பாடலைக் காண்க. இப்பாடலைக் கொண்டு, உரிச்சொல் நிகண்டு பத்துத் தொகுதிகள் மட்டும் உடையது எனச் சிலர் அறுதியிட்டுக் கூறு கின்றனர். ஆனுல், "காங்கேயன் சொன்ன உரிச் சொல் தன்னை......பராக்கிரம பாண்டிய தேவன்......

பத்துத் தொகுதியிற் சேர்த்தான்...'' என்னும் இதே பாடல் பகுதியைக் கொண்டு, உரிச்சொல் நிகண்டு முதலில்பத்துக்கு மேற்பட்ட தொகுதிகள் உடையதாய் இருந்திருக்கவேண்டும் என்றும், அவற்றுள் கட்டாயம் தேவைப்படாத சில தொகுதிகளைக் குறைத்து, எவரும் எளிதில் — சுருங்கிய அளவில் படித்துப் பயன் பெறும்படிப் பத்துத் தொகுதிகளுடன் உரிச்சொல் நிகண்டைப் பராக்கிரம பாண்டிய தேவன் ஒழுங்கு செய்து அமைத்தான் என்றும் கருத்து எடுத்துக் கொள்ளவும் இடமிருப்பது போல் தோன்றுகிறதே!

## புதுவைப் பதிப்பு

உரிச்சொல் நிகண்டின் பல பதிப்புக்களுள் முதலாவதான புதுச்சேரிப் பதிப்பைப் பற்றிச்சிறப்பாக ஒருசிறிது நோக்குவாம்: இஃது இந்த (1965-ஆம்) ஆண்டுக்கு நூற்றிருபத்தைந்து ஆண்டு காலத்துக்கு முன் — அதாவது கி. பி. 1840-ஆம் ஆண்டில், புதுவை குவெர்னமா(gouvernement) அச்சுக்கூடத்தில்— அதாவது அரசாங்க (government) அச்சகத்தில், சிற்றம்பலம் என்னும் தமிழாசிரியர் எழுதிய உரையுடன் அச்சிடப்பட்டது. உரிச்சொல் நிகண்டுரை என்பது நூற்பதிப்பின் தலைப்புப் பெயராகக் கொடுக்கப் பட்டுள்ளது. இப்பதிப்பின் முதல் பக்கத்திலுள்ள செய்தி அப்படியே வருமாறு:

---

# உரிச் சொல் நிகண்டுரை

—ooo—

கனம் பொருந்திய......தேசத்துப் பிராஞ்சுத் தலங்களுக்கு......யதிகாரியாகிய

**ழெனரூல் சேங்சிமோ**

துரையவர்கள் துரைத்தனத்தில்

ஒற்றொனுத்தே ராகிய

**நூல்மாஸ்**

துரையவர்கள் அனுமதியில்

—ooo—

புதுவை மாநகரம் பிராஞ்சு.........கல்விச் சங்கத்து

விசாரணைக் கருத்த ராகிய

அண்ணுசாமி யையர் — கிருஷ்ணசாமி பிள்ளை

இவர்கள் கேட்டுக் கொண்டதின் பேரில் அச்சங்கத்தை

நாடத்துந் தலைவராகிய

**லே பெல்த்றியே**

துரையவர்கள் கட்டளைப்படி

தமிழைக் கற்க விரும்புஞ் சிறுவர் முதல் யாவரும் அத் தமிழ் மொழிப் பொருளைத் தெளிவா யுணரக் காங்கேய விற்பனன் பத்துத் தொகுதியாக வகுத்துச் சொல்லிய வுரிச்சொனிகண்டானது உச்சரிப்பானுங் கையெழுத் தானும் எழுத்தசை சீரடி தொடை சொற்பொருள் பிறழ்ந்தனவற்றை வழுவற வாராய்ந்து சுத்த பாட மாக்கி யதனையந் தீரச் செய்த நூதன வுரையுட னுலகி னிலை பெறும்படி

## சிற்றம்பல வுபாத்தியாயரால்

அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

சமஸ்க்கிரத திராவிட வல்லவ ராகிய கொம்மித்தே பிரசிதாம் இராமசாமி சாஸ்த்திரியாராலும் மழவை மகாலிங்க கவிராச ராலுங், கும்பினித் தமிழச்சுக் கூடத்திலிருக்கும் முத்துக் குமரப்ப வுபாத்தியாய ராலும் பரிசோதிக்கப்பட்டது.

—ooo—

இரக்ஷணிய ஆண்டு 1840-க்குச் சரியான விகாரி ஆண்டு

---

(மேல் உள்ளது பதிப்பின் முதல் பக்கத்தில் உள்ள செய்தி யாகும். இனி பதிப்பின் இறுதியில் உள்ள செய்தி வருமாறு :—)

---

பத்தாவது ஒரு சொற் பல்பொருட் பெயர்த் தொகுதி முற்றும்

——o——

ஆகத் தொகுதி பத்திற்கு வெண்பா — ௨௱௨௰ (220) முற்றிற்று

---

இஃது, புதுவை மாநகரம் — குவெற்னமா அச்சுக் கூடத்தில் அ...துத்தென் துரையவர்களால் 1840–ஆம் ஆண்டில், பதிப்பிக்கப்பட்டது.

---

இதன் விலை — ரூபாய், தெ (3/4)

---

மேலுள்ளபடி நோக்கின், புதுவைப் பதிப்பில் பத்துத் தொகுதிகளே உள்ளன என்பது தெளிவு. மற்றும், தமிழர்கள் பலர் நிகண்டுகளைப் பற்றி அறியா திருக்கும்போது, பிரஞ்சுக்கார வெள்ளையர்கள் உரிச் சொல் நிகண்டுப் பதிப்பில் புகுந்து விளையாடியிருப்பது இங்கே குறிப்பிடத் தக்க செய்தியன்றோ ?

புதுவைப் பதிப்பின் முதல் பக்கத்துச் செய்தியாக மேலே கொடுக்கப்பட்டிருக்கும் கருத்தை யமைத்து மழவை மகாலிங்கக் கவிராசர் என்பவர் ஒரு சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். அது புதுவைப் பதிப்பில் நூலுக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ளது. அப்பாடல் வருமாறு :

# சிறப்புப் பாயிரம்

## நில மண்டில வாசிரியப்பா

" திருவளர் மணிதிகழ் தெண்டிரைக் கடல்சூழ்
இருநில வலயத் தியற்றமிழ்ப் புலவர்
தசநிகண் டறிவுறச் சாற்றினர் அவற்றுள்
இசைகொள் காங்கேயன் இயம்பும் உரிச்சொல்
நிகண்டிக் கால நிலவுதல் கண்டத்
தொகுதி முற்றுந் தூக்கிப் பார்க்கச்
சொற்பொருள் எழுத்தசைச் சோர்வுண ராது
பற்பலர் பள்ளிப் பாடம் ஓதலி னதை
நவையறத் திருத்தி நாவலர் மகிழ்பெறச்
சுவைமலி உரையும் தோன்றச் செய்கெனச்
சீர்திகழ் மர்க்கிதே சேங்சிமோ குவர்னேர்
ஏர்பெறச் செங்கோல் இயற்றிடு நாளில்
தகைகொள் ஒற்தொனுத்தேர் தல்மாசு எனுந்துரை
அகமகிழ் வுடனவர் அனுமதி பெற்றே
அலகில் சீர் அண்ணு சாமி ஐயர்
தலைமைசேர் கிருஷ்ண சாமி மகிபனிவ்
விருவருங் கேட்க மிக்கெழிற் புதுவைப்பதித்
தருமக் கல்வி தழைக்குஞ் சங்கத்
தலைவரா யுவந்து சதிர்பெற நடாத்தும்
சொலவரும் பெல்த்தியே துரைமகன் இனிதாய்க்
கட்டளை யிடுமொழி கருத்துட் கொண்டு
திட்டமொ டெவர்க்குந் தெளிவுறச் செய்தனன்
வலங்கொள வோங்கு மயிலையங் கிரிமீது
இலங்கயில் வேன்முரு கேசர்பொன் மலரடி
மனமுற வணங்கி வண்டமிழ் உணர்ந்துவிற்
பனமுயர் பேர்அம்பலக் குரவன் செயு
நற்றவத் துதித்தோ னதிகுல திலகன்
சிற்றம் பலம்எனும் செந்தமிழ் வலனே."

இது மழவை மகாலிங்க கவியரசர் சொல்லியது.

—o—

இப்பாடற் செய்தி குறித்துச் சிறிது நோக்குவாம் :—

1840–ஆம் ஆண்டு புதுவையில் மர்க்கிதே சேங்சிமோ என்பவர் கவர்னராய் (குவர்னேர்) இருந்தார்; தல்மாசு என்பவர் ஒற்தொனுத்தேர் (ordonnateur = Arranger) பதவி வகித்தார். லே பெல்த்தியே என்பவர் கல்வித்துறைத் தலைவராய்(Director of Public Instruction) இருந்தார். அண்ணுசாமி ஐயர், கிருஷ்ணசாமி பிள்ளை ஆகியவர்கள் கல்வித்துறையில் கண்காணிப்பு அலுவலாளர்களாய் இருந்தனர். சிற்றம்பலம் என்பவர் ஆசிரியராயிருந்தார். துத்தென் என்னும் வெள்ளைத்துரை அரசினர் அச்சகத் தலைவராயிருந்தார். உரிச்சொல் நிகண்டு அரசினர் பள்ளிக்கூடங்களில் பாடமாக வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், உரிச்சொல் நிகண்டுக்கு உரை எழுதும்படி அண்ணுசாமி ஐயரும் கிருஷ்ணசாமி பிள்ளையும் கேட்டுக்கொள்ள, லே பெல்த்தியே துரை கட்டளையிட, ஆசிரியர் சிற்றம்பலம் உரை எழுதினர் ; அவ்வுரை, தல்மாசு துரையின் ஒப்புதலுடன் அரசினர் அச்சகத்தில் துத்தென் துரையால் அச்சிடப்பெற்றது.

இதிலிருந்து நாம் அறிவதாவது :— நம் நாட்டிற்கு வெள்ளையர் வந்த பின்னும் — ஏன் — நூறாண்டுகளுக்கு முன்புங்கூட, வெள்ளையர் மேற்பார்வையில் நடந்த பள்ளிகளில் நிகண்டு பாடமாயிருந்திருக்கிறது; நாளடைவில் கைவிடப்பட்டது.

### பாடலும் உரையும்

இனி, உரிச்சொல் நிகண்டுப் பாடலின் மாதிரிக்காகவும், சிற்றம்பல ஆசிரியரது உரையின் மாதிரிக்

காகவும், ஒரு சொல் பல்பொருட் பெயர்த் தொகுதியில் உள்ள முதல் பாடலையும் அதன் உரையையும் காண்பாம் :—

(பாடல்)

“ அரிபன்றி தேரைகிளி பச்சையளி சிங்கம்
பரிகவிபாம் பிந்திரன்மால் கால்கூற் றிருசுடர்தீ
கோவிறை திக்குக் கிரணஞ் சலங்குலிச
மாவுரைகண் பார்சுவர்க்க மம்பு.”

உரை

அரி என்றது — பன்றி, தேரை, கிளி, பச்சை, வண்டு, சிங்கம், குதிரை, குரங்கு, பாம்பு, தேவேந்திரன், விஷ்ணு, காற்று, இயமன், சந்திரன், சூரியன், நெருப்பு — ஆக *16*

கோ என்றது — இராசா, திக்கு, கிரணம், நீர், வச்சிராயுதம், கூப்பிடல், சொல், கண், பூமி, தெய்வலோகம், அம்பு — ஆக *11*

மேலுள்ள பாடலானும் உரையானும், ‘அரி’ என்னும் சொல்லுக்குப் பதினாறு பொருள்களும் ‘கோ’ என்னும் சொல்லுக்குப் பதினொரு பொருள்களும் கூறப்பட்டுள்ளமை புலனாகும். ஒவ்வொரு சொல்லுக்கும் இத்தனை பொருள்கள் என உரையாசிரியர் இறுதியில் எண்ணிக்கையிட்டுக் காட்டியிருப்பது தெளிவுக்கு வழி செய்யும்.

பிரஞ்சுக்காரர்களின் ஆட்சி நிலைத்த பிறகும் அரசினர் பள்ளிகளில் உரிச்சொல் நிகண்டு கற்பிக்கப் பட்ட புதுச்சேரியில் இன்று ஓர் உரிச்சொல் நிகண்டு நூல் தேடிக் கண்டுபிடிப்பது அரிதாகிவிட்டது. காலத்தின் கோலம் என்னே !

# கயாதர நிகண்டு

## பெயர்க் காரணம்

கயாதர நிகண்டும் அக்காலத்தில் சிறந்த நிகண்டு களுள் ஒன்ருகப் பயிலப்பட்டு வந்தது. கயாதரர் என்னும் புலவரால் இயற்றப்பட்டதால் கயாதரம் எனப் பெயர் பெற்றது. ஆசிரியர் கெயாதரர் எனவும் பெயர் சொல்லப்படுவதால், நூலும் கெயாதரம் எனவும் சிலரால் அழைக்கப்படுகிறது. மற்றும் ஆசிரியர் கயாகரன் என்றும் சிலரால் அழைக்கப்படுவதால், நூலுக்கும் கயாகரம் என்னும் பெயர் வழங்கப்படுகிறது. அதாவது,—

(1) மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 'செந்தமிழ்' என்னும் இதழில் கயாகர நிகண்டு எனத் தலைப்பு குறிப்பிடப் பட்டுள்ளது; ஆனல் அத்தலைப்பின் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் செய்யுட்களில் கெயாதரம் என்றுள்ளது.

(2) வேதகிரி முதலியார் வெளியிட்ட இலக்கியக் களஞ்சியம் என்னும் நூலில் கயாகர நிகண்டு என உள்ளது.

(3) மாறனலங்காரம் என்னும் அணியிலக்கண நூலின் உரையில் கயாகரநிகண்டு எனச் சுட்டப் பட்டுள்ளது.

(4) ஆண்டிப் புலவ ரியற்றிய ஆசிரிய நிகண்டின் பாயிரத்தில்,

> "முறைபெறு கயாகரம் பகரும் அகராதியிவை
> முற்றும் ஒன்ருய்த் திரட்டி"

எனக் கயாகரம் என்றே உள்ளது.

(5) அருமருந்தைய தேசிகர் இயற்றிய அரும் பொருள் விளக்க நிகண்டுப் பாயிரத்தில்,

"ரேவண சித்தன் செஞ்சொற்
கயாசுரன் இவராற் சொற்ற"

என ஆசிரியர் கயாகரன் என்றே சுட்டப்பட்டுள்ளார். ஆனால், அரும்பொருள் விளக்க நிகண்டின் வேறு ஓர் ஓலைச்சுவடியில் கயாதரன் என்றுள்ளது.

(6) கயாதர நிகண்டின் ஓலைச் சுவடிகளிலும் கயாகரம் எனவும் கயாதரம் எனவும் இரண்டு நிலைகளும் மாறி மாறிக் காணப்படுகின்றன. ஆசிரியர் பெயரோ கெயாதரன் எனக் காணப்படுகிறது.

இந்த நிலையில் எந்தப் பெயரை உறுதியாகக் கொள்வது? கை என்றால் சொல்; ஆகரம் என்றால் இருப்பிடம்; எனவே, கையாகரர் என்றால் சொற்கு இருப்பிடமானவர்—சொல்லின் செல்வர் என்பது பொருள்; எனவே, கையாகரரால் இயற்றப்பட்டது கயாகரம் ஆகும் என்பது ஒரு சாரார் கொள்கை. வட மொழி இலக்கணப்படி இந்தப் பொருளமைப்பு பொருந்தாது என்பது இன்னொரு சாரார் கொள்கை.

சொற்பொருள் எதுவாயினும், கயாதரம் என்ற பெயரே கயாகரம் என்றும் கெயாதரம் என்றும் மாற்றி வழங்கப்பட்டிருக்கவேண்டும். கயாதரம் என்னும் சொல்லின் இடையிலுள்ள 'த' என்னும் எழுத்தின் வால்போன்ற கீழ் வளைவுக்கோடு சில ஓலைச் சுவடி களில் சரியாகப் பதிவு விழாமலோ அல்லது விழுந்தும்

தேய்ந்தோ போனதால் 'க' என்னும் எழுத்துப்போல் படிப்பவர் கண்கட்குத் தெரிந்திருக்கலாம்; எனவே அவர்கள் கயாகரம் எனப் படித்ததோடன்றி, ஏடு பெயர்த்து எழுதியபோதும் கயாகரம் என்றே எழுதி விட்டிருக்கவேண்டும். இந்தக் கருத்தே பொருத்த மானதாகப் புலப்படுகிறது. இதற்கு மாருக, கயாகரம் என்னும் பெயரே கயாதரம் என மாறிற்று என்று சொல்ல முடியாது. 'க' என்னும் எழுத்து 'த' என்னும் எழுத்தாக ஓலைச்சுவடியில் கோடு நீண்டு மாறுவது இயற்கைக்கு முரணானது.

மற்றும், கயாதரம் என்னும் பெயரை மக்கள் சிலர் பேச்சு வழக்கில் கெயாதரம் என நீட்டி நெளித்துப் பேசியிருக்கவேண்டும். கந்தகம் கெந்தகம் எனவும், கஜமுகன் கெஜமுகன் எனவும், கங்காதரன் கெங்கா தரன் எனவும் சொல்லப்படுவதைப் போல, கயாதரமும் கெயாதரம் எனச் சிலரால் சொல்லப்பட்டு, பின்னர் அவ்வாறே எழுதப்பட்டும் இருக்கவேண்டும். பேச்சு நடைக்கு ஏற்பவே எழுத்து நடையும் அமையும் என்பது இக்கால மொழியியலாரின் (கிரீனிங் [Greening] என் னும் ஆசிரியரது) கொள்கையன்றோ? இக்காலக் கொள்கை என்றென்ன! 'செந்தமிழும் நாப் பழக்கம்' என அன்றே ஔவையார் அறிவித்துள்ளார் அல்லவா? எனவே, கயாதரம் என்பதையே நூலின் பெயராகக் கொள்ளலாம்.

## ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் கயாதரர், தேவை எனப்படும் இராமே சுரம் என்னும் ஊரினர்; சோமேசர் என்பவரின் மகன்; சைவர்; அந்தணர்; தமிழ், வடமொழி இரண்டிலும்

வல்லவர்; அரும்பொருள் அந்தாதி, இராமீசுரக்கோவை என்னும் வேறு நூல்களும் இயற்றியவர். இந்தச் செய்திகள், கயாதர நிகண்டின் முகப்பில் ஆசிரியரே பாடியுள்ள,

"ஆரண நான்கும் பரவமும் மூர்த்திக ளாகிநின்ற
காரணன் பாகங் கலந்துல கீன்றருள் கன்னி பெற்ற
பூரணன் பாரதப் போர்வட மேருப் பொருப்பில் வைத்த
வாரணன் வாரணப் போரில் வென்றோன் என்
வழித்துணையே."

"பேதையர் பித்தர் அறியாத பாலர் சொற் பேதங்கொள்ளார்
ஓதினுங் குற்றந் தெரியார் பெரியவர் ஓங்கிடப
கேதனன் பற்று மறவாத தேவைக் கெயாதரன்தொல்
வேதியன் சொற்ற உரிச்சொற் பனுவலு மேம்படுமே."

"வளர்ந்த முதனூல் வழிநூல் வழிச்சென்று மற்றவையும்
அளந்து சிறியோர் அறியும்படி பெரியோ ரருளால்
தளர்ந்தன நீக்கி உரித்தாய சொல்லைத் தமிழ்ப் படுத்தான்
கிளர்ந்த பெரும்புகழ்ச் சோமீசன் தேவைக் கெயாதரனே."

"வடக்குங் குமக்கொங்கை மங்கைதன் பங்கன் மலரடிக்கீழ்க்
கிடக்குந் தனிநெஞ் சுடையோன் உரிச்சொல் கிளர் பனுவல்
குடக்குங் குணக்கும் வடக்குந் தென்பாலுங் குவலயத்து
நடக்கும் படியாக் கெயாதரம் என்று பேர் நாட்டினனே."

என்னும் பாயிரப் பாடல்களாலும், கயாதரத்தில் மக்கட் பெயரியல் என்னும் மூன்றும் தொகுதியின் இறுதியில் உள்ள,

"வாரிய கேள்வி மறையவர் வேந்தன் வடகலைதேர்
ஆரிய நாடன் தமிழ்நாடன் தேவை யதிப னென்னும்
ஓரியல் பான குணத்தான் கெயாதரத் துள்ளமைத்தான்
பேரியல் பாலொரு மூன்றுவது மக்கட் பேரியலே."

என்னும் பாடலானும், விலங்கின் பெயரியலிலுள்ள,

" தீட்டு மறைபயில் நாவினன் என்றுஞ் செழுந்தமிழ் நூல்
கேட்ட செவியினன் கேளா வறிவன் கெயாதரத்துள்
ஈட்டிய சொற்பொருள் எல்லாந் தொகுத்தீ ரிரண்டாவது
காட்டிய தொல்லை விலங்கின் பெயரியல் கண்டு கொள் வே."

என்னும் பாடலானும், மரப்பெயரியலிலுள்ள,

" காசிப கோத்திரம் வாழவந்தோன் தென் கலைத்தமிழ்தேர்
மாசில் பெருந்தகை மாரு வறிவன் மலரயனுங்
கேசவனும் புகழ் தேவைநன் னுடன் கெயாதரத்துப்
பேசி யமைத்தனன் ஐந்தாவது மரப் பேரியலே."

என்னும் பாடலானும், பல்பொருட் பெயரியலிலுள்ள,

" நீடும் பதமும் பொருளும் தெரிந்து நிலைபெறவே
நாடு மவர்க்கு நலந்தரு மாறு நயத்தொ டென்றுங்
கேடும் பெருக்கமும் இல்லாத தேவைக் கெயாதரன் சீர்
பாடுந் தமிழில் ஆருவது பல்பொருட் பேரியலே."

என்னும் பாடலானும், ஒலி பற்றிய பெயரியலிலுள்ள,

" மேவும் அரும்பொருள் அந்தாதி கேட்டிந்த மேதினியோர்
தாவும் வினைகெடச் சாற்றிய கோன்தமிழ்த் தேவை மன்னும்
கோவை யிராமீசுரக்கோவை சொன்ன குருபரன் மற்
றேவுத லின்றி யமைத்தான் பத்தாவது ஒலியியலே."

என்னும் பாடலானும், பிறவற்றானும் அறியப்படும்.

## காலம்

ஆசிரியரின் காலம் பற்றி அறிஞர்களிடையே குழப்பமே காணப்படுகிறது. பதினான்காம் நூற்றாண்டிலிருந்து பதினேழாம் நூற்றாண்டுவரை அங்கும் இங்குமாகக் கயாதரரின் காலம் பந்தாடப்படுகிறது. எது எப்படி யிருந்தபோதிலும், பதினெட்டாம் நூற்

ருண்டினராகக் கருதப்படும் அருமருந்தைய தேசிகர் தமது அரும்பொருள் விளக்க நிகண்டில் கயாதரரைக் குறிப்பிட்டுள்ளதால், பதினெட்டாம் நூற்றுண்டுக்கு முற்பட்டவர் கயாதரர் என்பதுமட்டுமாவது உறுதி.

## நூலின் அமைப்பு

கயாதர நிகண்டில் பின்வருமாறு பதினொரு இயல்கள் உள்ளன:

(1) தெய்வப் பெயரியல்
(2) இடப் பெயரியல்
(3) மக்கட் பெயரியல்
(4) விலங்கின் பெயரியல்
(5) மரப் பெயரியல்
(6) பல்பொருட் பெயரியல்
(7) செயற்கை வடிவிற் பெயரியல்
(8) பண்புப் பெயரியல்
(9) செயல் பற்றிய பெயரியல்
(10) ஒலிபற்றிய பெயரியல்
(11) ஒருசொல் பல் பொருளியல்.

திவாகரம், சூடாமணி, உரிச்சொல் நிகண்டு ஆகிய நிகண்டுகளில் உட்பிரிவுகள் 'தொகுதி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. பிங்கல நிகண்டிலோ 'வகை' எனக் குறிப்பிடப் பட்டிருப்பதைக் காணலாம். ஆனல் கயாதரத்திலோ ஒவ்வொரு பிரிவும் 'இயல்' எனக் குறிக்கப்பட்டிருப்பது காண்க.

கயாதர நிகண்டின் சில ஓலைச் சுவடிகளில் 'ஒரு சொல் பல் பொருளியல்' என்னும் பதினோராவது இயல் காணப்படவில்லையாம். இதைக் கொண்டு, பதினோராவது இயல் பிற்காலத்தவரால் எழுதிச் சேர்க்கப் பட்டது எனச் சிலர் எளிதில் கூறக் கூடும். இது பொருந்தாது. பதினோரியல்களும் அமைந்துள்ள ஓலைச் சுவடியில் பதினோராம் இயலின் இறுதியில் பின் வரும் பாடல் உள்ளது :—

" அரும்பொருள் அந்தாதி சூடிய சீதரன் அம்பிகையைத்
தரும்பொருள் செய்த பரம்பரை யான்றினம் தண்டமிழோர்
விரும்பிய கோவை யுரிச்சொற் பனுவல் விரித்துரைத்தான்
பெரும்பொருள் கண்ட கெயாதரன் தேவைப்
பெருந்தகையே."

பதினோராவது தொகுதியும் கயாதரத்தில் உண்டு என்பது இப்பாடலாற் புலனாகும். இதற்கு மற்றும் ஒரு சான்று உண்டு. அருமருந்தைய தேசிகர் இயற்றிய அரும்பொருள் விளக்க நிகண்டானது, ஒரு சொல்லுக்குப் பல பொருள் கூறுகின்ற பதினோராவது தொகுதியைப் பற்றியது மட்டுமே யாகும். மண்டல புருடர், காங்கேயன், இரேவணசித்தர், கயாதரர் ஆகியோர் ஒரு சொல் பல்பொருளாகக் கூறியிருப் பனவற்றைத் தொகுத்து அரும்பொருள் விளக்கம் என்னும் நூலாக உருவாக்கியதாக அதன் ஆசிரியர் பாயிரப் பாடலில் கூறியுள்ளார் :—

" மாவியல் சிறக்கும் வீரை
மண்டலவன் காங்கேயன்
ரேவண சித்தன் செஞ்சொற்
கயாகரன் இவராற் சொற்ற

பாவியல் நூற்கூறு ஓர் சொல்
பல்பொருள் தொகையெலாம் சேர்த்து
ஒவிலா வளஞ் சிறப்ப
ஒரு பெரு நூல தாக”

என்பது அப்பாடல். இதிலிருந்து, ஒரு சொல் பல் பொருள் கூறும் பதினோராவது இயலும் கயாதரத்தில் உண்டு என்பது தெளிவு.

கயாதரத்தில் மொத்தம் 566 பாடல்கள் உள்ளன. முதல் பத்து இயல்களிலும் 10,500 சொற்களும் பதினோராவது இயலில் 850 சொற்களும் பேசப்பட்டுள்ளன.

கயாதரப் பாடல்கள் கட்டளைக் கலித்துறை என்னும் பாவினத்தைச் சேர்ந்தவையாகும். இது, நெட்டுரு செய்து நினைவில் இருத்துதற்கு மிகவும் ஏற்றதாகும். மேலும், இந்நூல் அந்தாதித் தொடையில் அமைந்திருப்பது, பாடல்களை மீண்டும் நினைவிலிருந்து வருவித்தலுக்கு மிகவும் உதவி செய்யும். அந்தாதித் தொடையாவது, ஒரு பாட்டின் அந்தத்தில் (இறுதியில்) உள்ள ஓர் எழுத்தோ அல்லது ஓர் அசையோ அல்லது ஒரு சொல்லோ அடுத்த பாட்டின் ஆதியில் (முதலில்) அமையும்படித் தொடுத்துப் பாடுவதாகும். ஒரு பாட்டை ஒப்பித்ததும் அதன் இறுதிப் பகுதியின் துணைகொண்டு அடுத்த பாட்டைத் தொடங்கி ஒப்பிப்பதற்கு அந்தாதி முறை மிகவும் உதவுமன்றோ? இம்முறையில் நோக்குங்கால், சூடாமணி நிகண்டைவிடக் கயாதர நிகண்டு நினைவில் இருத்துதற்கும் (Retention) மீண்டும் வருவித்தலுக்கும் (Recall) மிகவும் ஏற்றதென்பது புலனாகும்.

கயாதரப் பாடல்களின் மாதிரிக்காகவும், அதே நேரத்தில் அந்தாதித் தொடையின் எடுத்துக் காட்டுக் காகவும் சில பாடல்கள் காண்பாம். தெய்வப் பெய ரியலின் தொடக்கத்தில் சிவன் பெயர்களைக் கூறும் இரண்டு பாடல்கள் வருமாறு :—

**"ஆதி யனாதி அரன் சிவன் ஈசனு னந்த னத்தன்**
**சோதி பினாகி உருத்திரன் பிஞ்ஞகன் சூலி சுத்தன்**
**பாதி உமாபதி சங்கரன் கங்காதரன் பகவன்**
**பூதி புனை பாண்ட ரங்கன் பரமன் புராந்தகனே."**

**"தக்கன் மருகன் சதாசிவன் ஐம்முகன் சம்பு நித்தன்**
**இக்கன் படவிழித்தோன் காலகாலன் இறை அமலன்**
**முக்கண் முதல்வன் பசுபதி கங்காளன் முத்தன் பித்தன்**
**நக்கன் சடையோன் விடையூர்தி நாகா பரண னென்னே."**

மேலுள்ள இரு பாடல்களுள் முதல் பாட்டின் இறுதியில் (அந்தத்தில்) 'தகன்' என்னும் அசை உள்ளது. அதனோடொத்த 'தக்கன்' என்னும் சொல் இரண்டாம் பாட்டின் முதலில் (ஆதியில்) உள்ளது.

மற்றும், பதினோராம் இயலாகிய ஒரு சொல் பல் பொருளியலிலிருந்து இரு பாடல்கள் வருமாறு :—

**"அரிகடல் மால் பன்றி ஆயுதம் பச்சை அளி அருக்கன்**
**எரிபுகை கிண்கிணி பெய் பரல் ஐம்மை யமன் கிளி கண்**
**வரி வலி இந்திரன் மாருதம் நேமி மடங்கல் மது**
**பரி பகை செந்நெற் கதிர் தேரை வானரம் பாம்பு பொன்னே."**

**"பொன்னேர் இரும்பு சுரர் குரு மாடை பொலிவு திரு**
**என்; ஏர் அழகு முழு பெற்றமும்; எல் ஒளி பகலாம்;**
**தென்னே வனப்பும் இசை பாடலும் தென்றிசையும் என்ப;**
**கொன் னே பெருமை பயனிலி அச்சம் கொளும் பொழுதே"**

மேலுள்ள இரு பாடல்களுள் முதல் பாடலில் 'அரி' என்னும் சொல்லுக்கும், இரண்டாம் பாடலில் பொன், ஏர், எல், தென், கொன் ஆகிய சொற்கட்கும் உரிய பொருள்கள் தரப்பட்டுள்ளன. மற்றும், முதல் பாடலின் இறுதியில் உள்ள 'பொன்' என்னும் சொல்லே அடுத்த பாடலின் தொடக்கத்தில் அந்தாதித் தொடையாய் அமைக்கப்பட்டிருப்பது காண்க. இப்படியாக, மற்ற நிகண்டுகளினும் கயாதரம் அமைப்பில் புதுமை பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கதாம்.

கயாதரத்தின் ஒவ்வோர் இயலின் இறுதியிலும் ஆசிரியர் தம் பெயர், வரலாறு, இயலின் பெயர் ஆகியவை கூறியிருப்பதும் ஈண்டு நினைவுகூரத் தக்கது.

# பல் பொருள் சூளாமணி நிகண்டு

மண்டல புருடர் இயற்றிய சூடாமணி நிகண்டு மக்களிடையே மிகவும் பரவிய பின், நிகண்டு நூல்களைச் சூளாமணி என்னும் பெயரால் அழைக்கும் மரபு தோன்றிவிட்டது என்பது, பல் பொருள் சூளாமணி என்னும் இப்பெயரிலிருந்து தெரியவரும்.

## ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் ஈசுர பாரதியார். இவர் நெல்லை மாவட்டத்தினர்; மடசை என்னும் ஊரினர் ; சிதம்பரபாரதி என்பாரின் குமாரர்; சைவ சமயத்தினர்; திருநெல்வேலிச் சிவனை வழிபடு கடவுளாகக் கொண்டவர். ஆசிரியர் இந்நிகண்டினைக் கொல்லம் 876-ஆம் ஆண்டில் — அதாவது கி. பி. 1700-ஆம் ஆண்டில் இயற்றி முடித்தார்; எனவே, இவரது காலம் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியுமாகும். இவ்வளவு செய்திகளையும் ஆசிரியரே பாடிய பல் பொருள் சூளாமணியின் பாயிரச் செய்யுட்களால் அறியலாம். அவை வருமாறு :—

“ கொல்ல மெண் ணூற் றெழுபத்தா றெனக்கணிதப் பாவாணர்
குறித்த வாண்டின்
மல்குபுகழ் விக்கிரம வருடத் தாவணி மூல
வளஞ்சேர் நாளில்
நெல்லைநகர் வடிவுவந்த வேய்முத்தைப் பணிந்துலகில்
நெடுநாள் நிற்கப்
பல் பொருட்சூ ளாமணியை ஈசுரபா ரதி தமிழாற்
பாடி னனே.”

"சிதம்பர பாரதிபாலன் புகழ்மடசை யுடையவளாந்
தேவி செம்பொற்
பதம்பணிசெங் கைத்தலத்தான் ஈசுரபா ரதியெனுநாற்
பாவ லோனே."

மேலுள்ள முதல் பாடலிலிருந்து, தமிழ் விக்கிரம ஆண்டு ஆவணித் திங்கள் மூலநாளில் (மூல நட்சத் திரத்தன்று) இந்நிகண்டு அரங்கேற்றப்பட்டதாகத் தெரிகிறது.

## நூல் அமைப்பு

நிகண்டுத் தொகுதிகளின் முப்பெரும் பிரிவுகளுக் குள் 'ஒரு சொல் பல் பொருள் பெயர்த் தொகுதி' என் னும் இரண்டாம் பிரிவையும், 'பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி' என்னும் மூன்றும் பிரிவையும் பற்றி மட்டும் இந்நூல் பேசுகிறது. ஆசிரியர் பின் வருமாறு மூன்று காண்டங்களாக நூலைப் பகுத்துக் கொண்டார்:

(1) ஒரு சொல் ஒரு பெயர்க் காண்டம்
(2) ஒரு சொல் பல் பொருட் காண்டம்
(3) பல் பெயர்க் கூட்டத்து ஒரு பெயர்க் காண்டம்

இவற்றுள் முதல் காண்டத்தில், ஒரே பொருள் கூறும் 2800 சொற்கள் இடம் பெற்றுள்ளன; இரண் டாங் காண்டத்தில், பல பொருள் கூறும் 1465 சொற்க ளிடம்பெற்றுள்ளன. இவ்விரு காண்டங்களும் சொற்கட்குப் பொருள் கூறும் ஒரு சொல் பல் பொருட் பெயர்த் தொகுதி என்னும் பெரும் பிரிவைச் சார்ந் தவை. மூன்றுங் காண்டமோ தொகைப் பெயர்களை விளக்குகிறது; இது பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி என்னும் பெரும் பிரிவைச் சார்ந்தது.

அகராதி நிகண்டைப் போலவே இந்நிகண்டும் அகர வரிசையில் அமைந்துள்ளது; இதிலும் சொற்களின் முதலெழுத்து வரைக்குமே அகரவரிசை கவனிக்கப்பட் டிருக்கிறது. ஆயினும், அகராதி நிகண்டைவிட இந்நிகண்டு படிப்போர்க்கு எளிதில் பயனளிக்க வல்லது; எங்ஙன மெனின்,— பொருள் கூறும் சொற்கள் அகராதி நிகண்டில் பத்துப் பிரிவுகளில் பரவலாகக் கூறப்பட்டுள்ளன; இதிலோ இரண்டே பிரிவுகளில் அடக்கப்பட்டுள்ளன. மேலும், அகராதி நிகண்டில் அம் முதல் இரு பெயர், அம் முதல் நாற்பத்தாறு பெயர் என்ற சிக்கல் உள்ளது; இதில் அஃதில்லை. எனவே, பொருள் காணுவதற்காக ஒரு சொல்லைத் தேடி எடுக்க வேண்டுமாயின், அகராதி நிகண்டினும் பல்பொருள் சூளாமணி நிகண்டில் விரைவில் முடியும்.

இனி, பல்பொருள் சூளாமணி நிகண்டின் அமைப்பு முறையை விளக்கும் அகச் சான்றாக, ஆசிரியரே இயற்றியுள்ள பாயிரச் செய்யுட்களைப் பார்ப்போம் :—

“ தோன்றுகாண் டச்சடையான் தொல்சீர்சேர் நாமநூல்
மூன்றுகாண் டத்தால் மொழிகின்றேன்...”

“ நாவுவந்த பல்பொருட் சூளாமணியைப் பாரில்
நாட்டியசீர் முதற்காண்ட மென்னும் பேர்தான்
பூவுவந்த ஒருபெயரோர் பொருளே யாகும்
போற்றிரண்டாங் காண்டம்பல் பொருளி னோர்சொல்
சேவுவந்த நெல்வேலிப் பெருமான் ஈன்ற
செவ்வேளின் திருவருளால் தேர்ந்து நான்சொல்
பாவுவந்த பெயர்மூன்றுங் காண்ட மாகும்
பலபெயர்க்கூட் டத்தொருபேர் பலவுந் தானே.”

மேலுள்ள பாடல்களால், இந்நூலின் மூன்று காண்டங்களைப் பற்றி அறிந்து கொள்ளலாம். மற்ற நிகண்டுகளின் உட்பிரிவுகள் தொகுதி, வகை, வர்க்கம், இயல் முதலிய பெயர்களால் அழைக்கப்பட, இந்நிகண்டின் உட்பிரிவோ, காண்டம் என்னும் பெயரால் அழைக்கப்படுவது ஒரு புதுமையே !

# கைலாச நிகண்டு சூடாமணி

இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. நூலின் பெயரைக் கொண்டு ஆசிரியர் பெயர் கைலாசம் என்பதாக இருக்கலாம் எனக் கொள்ளலாம்! ஆசிரியர் 17–ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இந்நிகண்டு மற்ற நிகண்டுகளைப் போல் பத்து அல்லது பதினொன்று அல்லது பன்னிரண்டு தொகுதிகளை உடையதா யில்லாமல், ஐம்பத்தா று தொகுதிகளுடன் நூற்பா நடையில் உள்ள து.

பெரும்பாலான நிகண்டுகள் திவாகரத்தில் உள்ளாங்கு தெய்வப் பெயர்த் தொகுதி, மக்கட் பெயர்த் தொகுதிமுதலியனவாகத் தொகுதிகள் பிரித்து ப்பெயர் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனல் கைலாச நிகண்டோ தொகுதி பிரிப்பில் பிங்கல நிகண்டை ஓரளவு பின் பற்றியுள்ள து. அதாவது, பிங்கலத்தில் வான்வகை, வானவர் வகை, ஐயர் வகை, அவனிவகை முதலியனவாகப் பிரிவுகள் உள்ளன. இதுபோலவே கைலாச நிகண்டிலும் விண்ணவர் வகை, விண்ணின் வகை, மண்ணின் வகை முதலியனவாகத் தொகுதிகள் பெயர்கொடுத்துப் பிரிக்கப்பட்டுள்ளன.

கைலாச நிகண்டில் உள்ள 56 பிரிவுகளில் முதல் 49 பிரிவுகள், திவாகரத்தில் உள்ள முதல் பத்துத் தொகுதிகளின் வகைகளாகும். இவற்றில்மட்டும் 15,000 பெயர்கள் இடம் பெற்றுள்ளனவாம். இறுதியி

லுள்ள ஏழு பிரிவுகள், திவாகரத்தில் பதினோராவது தொகுதியாக உள்ள ஒரு சொல் பல் பொருட் பெயர்த் தொகுதியின் வகைகளாகும். அதாவது, அந்த ஒரு தொகுதியையே கைலாச நிகண்டு ஏழு வகைகளாகப் பிரித்துக் கொண்டு செல்கிறது. மாதிரிக்காக, அந்த ஏழு வகைகளின் பெயர்கள் வருமாறு:—

(1) ஓரெழுத் தொரு மொழி
(2) ஓரெழுத் தொற் றிருமொழி
(3) ஈரெழுத் தொரு மொழி
(4) ஈரெழுத் தொற் றிருமொழி
(5) மூவெழுத் தொரு மொழி
(6) மூவெழுத் தொற் றிருமொழி
(7) நாலெழுத் தொருமொழி.

இந்த ஏழனுள் முதலில் உள்ள ஓரெழுத் தொரு மொழி என்னும் பிரிவு மட்டும் அகரவரிசையில் அமைக்கப்பட்டுள்ளது. ஆ, ஈ, கா, மா என்பன போன்ற ஓரே எழுத்தாக உள்ள சொற்கள் மிகவும் குறைவு ஆதலாலும், வேறு எழுத்துக்கள் பின்னே தொடராமையால் எந்தச் சிக்கலும் இல்லாமையாலும் இந்த ஓரெழுத்துச் சொற்களை அகர வரிசைப்படுத்துதல் மிகவும் எளிது. அதனால்தான், இந்தப் பிரிவை மட்டும் அகர வரிசைப்படுத்தி, மற்ற பிரிவுகளை யெல்லாம் ஆசிரியர் வாளா விட்டுவிட்டார் போலும். ஆயினும், ஒரு பிரிவிலாவது அகராதி உணர்வு தோன்றியிருப்பதுகுறித்துப் பாராட்டவேண்டியது தான்!

கைலாச நிகண்டு சூடாமணி என நூற்பெயரின் இறுதியில் உள்ள சூடாமணி என்னும் சொல்லை

நோக்கின், மண்டல புருடர் இயற்றிய சூடாமணி நிகண்டுக்கு இருந்த செல்வாக்கு புலப்படும். அப்பெயரைப் பின்வந்த நிகண்டுகளும் பெற்றுக் கொண்டதில் வியப்பில்லை.

இனி நூலின் மாதிரிக்காக, ஓரெழுத் தொற்றொரு மொழி என்னும் பிரிவிலிருந்து மூன்று நூற்பாக்கள் வருமாறு :—

" ஓர் இடைச் சொல்லும் உரைக்குங் காலமும்
பேசில் வறிதும் பெருமையுங் கொன்னே
அச்சமும் ஆங்கதற் காகும் என்ப."

" காற்றும் வழியும் காலும் பொழுதும்
கூற்றும் அளவையும் குவிதேர் உருளையும்
காம்பும் தறியும் கண்ணெண் உருபும்
வான்கொடிப் படரு மரமும் புதல்வரும்
சரிபுனல் ஓடைத் தாழ்ந்த வதியும்
உரியதோர் இலக்கமும் உரைக்கும் காலே."

" அருக்கன் முதலா வாய்ந்த ஒன்பதும்
வலியும் கொள்கையும் வல்லிடை யூறும்
கொலையும் பிசினமும் கோளெனத் தகுமே."

மேலுள்ள மூன்று நூற்பாக்களிலும் முறையே கொன், கால், கோள் என்னும் மூன்று சொற்கட்குரிய பொருள்கள் தரப்பட்டுள்ளன. கொ, கா, கோ என்னும் ஓரெழுத்துக்களை யடுத்து ன், ல், ள் என்னும் ஒற்றுக்கள் வந்துள்ளமையின், இச்சொற்கள் ஓரெழுத்து ஒற்று ஒருமொழி என்னும் தொகுதியில் சேர்க்கப்பட்டன.

# பாரதி தீபம்

## பெயர்க் காரணம்

இந்த நிகண்டும் ஆசிரியர் பெயரைத் தொட்டுக் கொண்டே யுள்ளது. திருவேங்கட பாரதி என்பவரால் இயற்றப்பட்டதாதலின் பாரதி தீபம் என்னும் பெயர் பெற்றது. தீபம் என்ருல் விளக்கு. விளக்குபோல் இருந்து சொற்பெயர்ப் பொருள் விளக்கம் செய்தலின் நிகண்டுகளைத் தீபம் என அழைத்தல் மரபு.

## ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் திருவேங்கட பாரதி என்பவர். இவருக் குப் பரமானந்த பாரதி என்னும் வேறு பெயரும் உண் டாம். இவர் தென் கடம்பை என்னும் ஊரினர்; அந்த ணர்; துறவி; கவி வல்லவர். பாரதி தீப நிகண்டின் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் இத்தனையாவது தொகுதியாகிய இந்தத் தொகுதியை இன்னுர் செய்தார் என்ற குறிப்பு உள்ளது. எடுத்துக்காட்டாக, மூன்ரும் தொகுதியாகிய விலங்கின் பேர்த் தொகுதி யின் இறுதிப் பாடல் வருமாறு :—

“ மீன்ருவு வாவிக் கடம்பையில் வாழ்திரு வேங்கடவன்
ஏன்ருதல் கூறுங் கவிவேந்தன் பாரதி யேற்றமலர்த்
தேன்ருழ் தொடைப்புயன் செப்பிய பாரதி தீபந்தன்னில்
மூன்ருவது விலங்கின் பேர்த் தொகுதி முடிந்ததுவே.”

இன்ன பிற பாடல்கள் ஆசிரியரைப் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பை அளிக்கின்றன.

## காலம்

ஆசிரியரின் காலம் பதினேழாம் நூற்றுண்டு என்றும், பதினெட்டாம் நூற்றுண்டு என்றும் இருவிதமாகச் சொல்லப்படுகிறது. பதினேழாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் பதினெட்டாம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் ஆசிரியர் வாழ்ந்திருக்கலாம்!

## நூல் அமைப்பு

கயாதரத்தைப் போலவே பாரதி தீபமும் கட்டளைக் கலித்துறைப் பாடலால் ஆனது. ஆனுல் அந்தாதித் தொடை இதில் இல்லை. இந்நூல் பன்னிரண்டு தொகுதிகளை உடையது. மொத்தம் 737 பாடல்கள் உள்ளன. முதல் பத்துத் தொகுதிகளில் மட்டும் 13,000 சொற்கள் இடம் பெற்றுள்ளனவாம். இந்நூலின் மாதிரிக்காக, முதல் தொகுதியாகிய தெய்வப் பெயர்த் தொகுதியின் தொடக்கத்தில் சிவன் பெயர்களைக் கூறும் பாடல் வருமாறு:—

**“அரன்இறை வன்சிவன் சங்கரன் நித்தன் அமலன் கங்கா**
**தரன்உமை பங்கன் மலைவில்லி தற்பரன் தாணுச்சம்பு**
**புரதக னன்புனிதன் பிறைசூடி புலி யதளோன்**
**பரசு தரன் கயிலாயன் கபாலி பசுபதியே.”**

மேலுள்ள பாடலில் ஒவ்வொரு பெயருக்கும் முன்னுல் எந்தவிதமான அடைமொழியும் இன்றி, பெயர்கள் மட்டும் அமைக்கப்பட்டிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. இதனுல் குழப்பம் இன்றிப் பெயர்களை நன்கு புரிந்து கொள்ள வாய்ப்புண்டல்லவா?

# ஆசிரிய நிகண்டு

இந்நிகண்டு ஆசிரிய விருத்தம் என்னும் பாவினத்தால் ஆனதால் ஆசிரிய நிகண்டு என்னும் பெயர் பெற்றிருக்கலாமோ என்னவோ !

### ஆசிரியர் வரலாறு

இதன் ஆசிரியர் ஆண்டிப் புலவர் என்பவர். இவர் தொண்டை நாட்டில் செஞ்சிச் சீமையை யடுத்த ஊற்றங்கால் என்னும் ஊரினர்; பாவாடை வாத்தியார் என்பாரின் மகன்; ஞானப்பிரகாசர் என்பவரின் மாணவர்; சைவர். இவரை நற்கீரன் என அழைப்பதும் உண்டாம். சங்கினை யறுத்து வளையல் செய்யும் குலத்தினராம் இவர். பழந்தமிழ்ச் சங்கப் புலவராகிய நற்கீரரும் இக்குலத்தவர் எனச் சொல்லப்படுவதுண்டு. இதற்குச் சான்றாக,

"சங்கறுப்பது எங்கள் குலம்
தம்பிராற்கு ஏது குலம்."

என்று நற்கீரரே பாடியதாகக் கூறப்படும் செய்யுள் எடுத்துக் காட்டப்படுகிறது. எனவே, நற்கீரர் குலத்தைச் சேர்ந்த ஆண்டிப் புலவரும் முகமன் வழக்காக நற்கீரர் என அழைக்கப்பட்டார் போலும். நூலில் உள்ள

"மன்னுசெஞ் சிச்சீமை சூழ்தொண்டை வளநாட்டில்
வாய்த்த வூற் றங்காலில்வாழ்
வளையறுப் போர்குலன் பாவாடை வாத்தியார்
மைந்தனும் நற்கீரனே."

"மண்ணுளோ ரறியப் பகுத்தனன் கயிலேயான்
வடிவெடுத் தைந்தெழுத்தின்
மந்த்ரவுப தேசஞ்செய் ஞானப்ர காசகுரு
வனசமல ரடிசூடுவோன்."

என்னும் பாடல்கள் போன்றவற்ருல் ஆசிரியரைப் பற்றி அறிந்து கொள்ளலாம். மேலே முதல் பாட்டில் உள்ள

"வளையறுப் போர்குலன் பாவாடை வாத்தியார்
மைந்தனும் நற்கீரனே."

என்னும் பகுதிக்குப் பதிலாக,

"மாநகர்க் கதிபனுயர் பாவாடை வாத்தியார்
மைந்தன் ஆண்டிப் புலவனே."

எனச் சில ஓலைச்சுவடிகளில் உள்ளது.

## காலம்

திவாகரம், பிங்கலம், உரிச்சொல் நிகண்டு, கயாதரம், அகராதி நிகண்டு ஆகியவற்றின் கருத்துக்களை ஒன்ருய்த் தொகுத்து ஆசிரிய நிகண்டைத் தாம் இயற்றியதாக ஆண்டிப் புலவர் பாயிரத்தில் கூறியுள்ளார்:

"முந்துள திவாகரம் பிங்கல நிகண்டுசீர்
முந்து காங்கயன் உரிச்சொல்
முறைபெறு கயாகரம் பகரும் அகராதியிவை
முற்றும் ஒன்ருய்த் திரட்டி."

என்பது பாயிரப் பாடல். எனவே, காங்கேயன், கயாதரர், இரேவணசித்தர் ஆகியோருக்குப் பிற்பட்டவர் அல்லது அவர்தம் காலத்தை ஒட்டியவர் ஆண்டிப் புலவர் என்பது புலப்படும். அதனுல், பதினேழாம்

நூற்றுண்டின் பிற்பகுதியினர் அல்லது பதினெட்டாம் நூற்றுண்டினராக ஆண்டிப்புலவரைக் கொள்ளலாம்.

## நூல் அமைப்பு

ஆசிரிய நிகண்டு மிக நீளமான அடி கொண்ட ஆசிரிய விருத்தத்தால் ஆனது. பதினொரு தொகுதிகள் உள்ளன. மொத்தம் 263 பாடல்கள் உள்ளன. முதல் பத்துத் தொகுதிகளில் மட்டும் 12,000 சொற்கள் எடுத்துப் பேசப்பட்டுள்ளனவாம். நூலின் மாதிரிக்காகப் பதினோராம் தொகுதியாகிய ஒரு சொல் பல் பொருட் பெயர்த் தொகுதியிலிருந்து ஒரு பாடல் காண்பாம் :—

“ கஞ்சமிகு தீபமோர் தகழிவட் டம்படைக்
கலமேறு தாளமுடனே
கட்டில்எட் டும்பாண்டில் என்பர்செல் வம்பெருமை
கருமைமண் டிலம்விலங்கு
சஞ்சரிக மிகவெறுப் பொடுகமலே வரவழைத்
தல்பிண்டி பத்துமாவென்
ருகும்வெறி யாட்டுநாற் றங்கலக் கத்துடன்
சாறுவெம் பேய்வெருவுதல்
எஞ்சல்பெறு வட்டமொடு துருவையிரு நாலும்வெறி
யெழுமோசை பற்றுநாடூர்
ஏற்றகா தலநெடும் போதுபுனல் சோலேபல்
லியம்பண்ட மிவைபாணியாம்
செஞ்சொலா வணங்கோட ரம்புனற் கரைபாகல்
திகழ்விலங் கின்வால் பசுச்
செய்வரம் பிவைகூல மென்றுமுத் தமிழ்முனி
செப்புமிப் பொருளாகுமே.”

இப்பாடல் பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகும். பார்வைக்குப் பதினறு அடிகள்

உடையது போல் தோன்றினும் இப்பாடல் நான்கே அடிகள் கொண்டதாகும். ஒவ்வோர் அடியும் பன்னிரண்டு சீர்கள் உடையதாகி நான்கு வரிகளாக மடக்கி எழுதப்பட்டுள்ளது.

இப்பாடலில் பாண்டில், மா, வெறி, பாணி, கூலம் ஆகிய சொற்களுக்கு உரிய பொருள்கள் தரப்பட்டுள்ளன. பாண்டில் என்னும் சொல்லுக்கு எட்டுப் பொருளும் ('எட்டும் பாண்டில்'), மா என்னும் சொல்லுக்குப் பத்துப் பொருளும் ('பத்து மா'), வெறி என்னும் சொல்லுக்கு எட்டுப் பொருளும் ('இரு நாலும் வெறி') உரியன என்று ஆசிரியர் எண்ணிக்கையிட்டுக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. இம்முறையானது, அடை மொழிகளால் ஏற்படும் குழப்பத்திற்கு மருந்தாகித் தெளிவுக்கு வழி செய்யும்.

# அரும்பொருள் விளக்க நிகண்டு

சொற்கட்கு அருமையாகப் பொருள் விளக்கும் நிகண்டு அரும் பொருள் விளக்க நிகண்டு. 'அரும் பொருள் விளக்கத் தீபிகை' என்று பாயிரத்தில் ஆசிரியர் பெயர் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும், அரும் பொருள் விளக்க நிகண்டு என்றே பரவலாக இஃது அழைக்கப்படுகிறது.

## ஆசிரியர் வரலாறு

இதன் ஆசிரியர் அருமருந்தைய தேசிகர் என்பார். இவர் திருச்செந்தூரினர்; சிவப்பிரகாசர் என்பாரின் குமாரர்; வீரசைவ சமயத்தினர்; சிதம்பரம் பச்சைக் கந்த தேசிகரின் மாணுக்கர்; பச்சைக் கந்த தேசிகரின் ஆணைப்படி இவர் இந்நூல் செய்தாராம். இச்செய்திகள் ஆசிரியரே பாடிய பாயிரச் செய்யுட்களால் அறியப்படுகின்றன. மேலும் ஆசிரியர், நூலின் பதினெட்டுத் தொகுதிகளின் இறுதிகளிலும் 'செந்தில் அருமருந்தையன்', 'செந்தில் மேவும் அருமருந்தையன்' என்று மாறி மாறித் தம்மைச் சுட்டியுள்ளார்; தாம் செந்தில் (திருச்செந்தூர்) முருகனை வழிபடுபவர் என்றும் கூறிக் கொள்கிருர். இதனுல், செந்தில் வேலன் ஆசிரியருக்கு வழிபடு கடவுள் என்பது புலனுகும்.

## காலம்

பாயிரத்தின் இறுதிச் செய்யுளில் ஆசிரியர் இந் நிகண்டு வெளியான காலத்தைத் தெளிவாகத்

தெரிவித்துள்ளார். சகம் 1685-ஆம் ஆண்டில், அதாவது கி. பி. 1763-ஆம் ஆண்டில்— தமிழ் சித்திரபானு ஆண்டில் —மாசித் திங்கள் சிவராத்திரி வழிபாடு நிகழ்ந்த ஒரு வெள்ளிக்கிழமையில், சிதம்பரத்தில் திருக்கோயிலில் இந்நிகண்டு அரங்கேற்றம் செய்யப் பெற்றதாம். எனவே, ஆசிரியரின் காலம் பதினெட்டாம் நூற்றுண்டு என்பது தெளிவு.

மேலும், சூடாமணி இயற்றிய மண்டல புருடர், உரிச்சொல் நிகண்டு செய்த காங்கேயர், அகராதி நிகண்டு எழுதிய இரேவண சித்தர், கயாதர நிகண்டு பாடிய கயாதரர் ஆகியோர் கூறியவற்றையெல்லாம் தொகுத்து அரும் பொருள் விளக்க நிகண்டாகத் தாம் இயற்றியதாக ஆசிரியரே பாயிரத்தில் கூறியுள்ளார். ஆகவே, அவர்கட்கெல்லாம் பிற்பட்டவர் இவர் என்பதும், எனவே, இவர் பதினெட்டாம் நூற்ருண்டின் இடைப் பகுதியிலும் பிற்பகுதியிலும் வாழ்ந்தவர் என்பதும் புலப்படும்.

## நூல் அமைப்பு

நிகண்டுத் தொகுதிகளின் முப்பெரும் பிரிவுகளுள் இரண்டாவதாகிய 'ஒரு சொல் பல் பொருள் பெயர்த் தொகுதி' என்னும் சொற்பொருள் கூறும் தொகுதியின் விரிவான விளக்கமே இந்நிகண்டு. அதாவது, திவாகரம், சூடாமணி நிகண்டு போன்றவற்றிலுள்ள பதிேைராவது தொகுதி ஒன்றைப்பற்றி மட்டுமே இந்நிகண்டு விரிவாகப் பேசுகிறது.

இந்நூல் எளிதில் நெட்டுரு செய்வதற்கேற்ற விருத்தப் பாவால் ஆனது. மொத்தம் 700 பாக்கள் உள்ளன. ஏறக்குறைய 3200 சொற்கட் குரிய பொருள்கள் தரப்பட்டுள்ளன. உரிச்சொல் நிகண்டு

கயாதர நிகண்டு முதலிய நிகண்டுகளில் பொருள் கூறப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கையை நோக்க, இந்நிகண்டில் இடம்பெற்றுள்ள சொற்களின் எண்ணிக்கையாகிய 3200 என்னும் தொகையளவு பன்மடங்கு பெரியது என்பதை நிகண்டு ஆராய்ச்சி யாளர் அறிவர்.

ஆசிரியர் இந்நிகண்டினைப் பின்வரும் பதினெட் டுத் தொகுதிகளாகப் பிரித்துள்ளார் :—

1. ககர வெதுகை
2. ஙகர வெதுகை
3. சகர வெதுகை
4. ஞகர வெதுகை
5. டகர வெதுகை
6. ணகர வெதுகை
7. தகர வெதுகை
8. நகர வெதுகை
9. பகர வெதுகை
10. மகர வெதுகை
11. யகர வெதுகை
12. ரகர வெதுகை
13. லகர வெதுகை
14. வகர வெதுகை
15. ழகர வெதுகை
16. ளகர வெதுகை
17. றகர வெதுகை
18. னகர வெதுகை

இரண்டாவது எழுத்து ஒத்திருப்பது எதுகை யாகும். அதாவது, ஒரு செய்யுளில் உள்ள நான்கு அடி களிலும் இரண்டாவது எழுத்து ஒன்ருக இருக்கு மாஞல் அதற்கு எதுகை என்பது பெயர். எடுத்துக் காட்டாக இந்நிகண்டின் முதல் செய்யுளிலுள்ள நான்கு அடிகளின் தொடக்கங்களைப் பார்ப்போம் :—

“ அகவலே......
தகவறி......
பகவதி......
முகவுமா......

மேலுள்ள நான்கு அடிகளிலும் ‘க’ என்பதே இரண் டாவது எழுத்தாக உள்ளதை நோக்குக. இப்படியாக,

க், க, கா, கி, கீ முதலிய ககர இன எழுத்துக்களை இரண்டாவதாக உடைய சொற்கள் எல்லாம் 'ககர எதுகை' என்னும் தொகுதியில் அடக்கப்பட்டன. ச், ச, சா, சி, சீ முதலிய சகர இனத்து எழுத்துக்களை இரண்டாவதாக உடைய சொற்கள் 'சகர எதுகை' என்னும் தொகுதியில் அடக்கப்பட்டன. இவ்வாறே 'க' தொடங்கி 'ன' வரையும் உள்ள பதினெட்டு இன எழுத்துக்களுக்கும் பதினெட்டு எதுகைத் தொகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. நாம் ஏதாவது ஒரு சொல்லுக்குப் பொருள் காணவேண்டுமாயின், அச்சொல்லின் இரண்டாம் எழுத்து என்ன என்று நோக்கி, அந்த எழுத்துக்குரிய தொகுதியில் சென்று தேடினால், அது கிடைத்துவிடும். இந்த வசதிக்காகவே எதுகை முறையில் சொற்கள் அமைக்கப்பட்டன. சொற்களை விரைந்து எளிதில் கண்டுபிடிக்க உதவவல்லது அகராதி முறையே யாகும்; அந்தத் துறையில் முன்னோடியாக எழுந்த முதல் முயற்சியே இந்த எதுகைமுறை அமைப்பாகும்.

அரும்பொருள் விளக்க நிகண்டின் எதுகை அமைப்பில் ஒரு சிறப்பு உள்ளது. சூடாமணி நிகண்டில் சொற்கட்குப் பொருள் கூறும் பதினோராவது தொகுதியும் இந்நிகண்டு போலவே எதுகை முறையில் அமைக்கப்பட்டதாகும். ஆனால் அச்சூடாமணியில் ஓர் எதுகைச் சொற்களுக்கிடையே வேறு எதுகைச் சொல் கலந்துள்ளது. காட்டாக, அதன் முதல் செய்யுளில், பகவன், பகல், மகரம், அகம் என்னும் ககர எதுகைச் சொற்களோடு 'வசி' என்னும் சகர எதுகைச் சொல்லுக்கும் பொருள் கூறப்பட்டுள்ளது. இப்படியே மற்ற எதுகைகளோடும் வேறு எதுகைகள் அந்நிகண்டில் கலந்துள்ளன. எனவே, குறிப்பிட்ட ஒரு சொல்லை இன்ன

எதுகைப் பகுதியில் கட்டாயம் கண்டு பிடித்து விட லாம் என்ற உறுதிக்குச் சூடாமணியில் இடமில்லை. ஆனால் இந்நிகண்டிலோ, ஓர் இனத்து எதுகைச் சொற் களோடு வேறு இனத்து எதுகைச் சொல் கலக்கவே யில்லை; அதனால், இந்நிகண்டில் எச்சொல்லையும் அதன் எதுகைத் தொகுதியில் எளிதில் கண்டுபிடித்து விடலாம்.

முதல் முதலில் மோட்டாரோ, சைகிளோ, இன்னும் பிற பொருள்களோ கண்டுபிடிக்கப்பட்டபோது அவற்றில் இல்லாத வசதிகள் பல பின்னர் நாளடை வில் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றில் பொருத்தப் பட்டன. வேறு எந்தச் சீர்திருத்தமும் இப்படித்தான்! இவ்வியற்கை நிலையை யொட்டி, சூடாமணி நிகண் டைக் காட்டிலும் அரும் பொருள் விளக்க நிகண்டின் எதுகை அமைப்பில் சீர்திருத்தம் தோன்றியதில் வியப் பில்லை.

இனி, ஆசிரியரின் வரலாற்றுக்கும், இந்நூலின் அமைப்பு முறைக்கும் அகச்சான்றாக, ஆசிரியராலேயே இயற்றப்பட்ட இந்நூற் பாயிரப் பாடல்கள் ஆராய்ச்சி யாளர்க்கு உதவு மாதலின் அப்பாடல்கள் வருமாறு:—

காப்பு

(1) "மகிழ்ந்துல கெவையும் போற்ற
வன்புரங் குன்ற வென்ற
திகம்பரன் அணங்கோர் பாகத்
தெய்வநா யகன்சேய் தந்தி
முகன்றன தடியை ஏத்தி
மூதரும் பொருள் விளக்க
நிகண்டெனு மணித்தீபத்தை
நிலமிசை நிகழ்த்த லுற்றும்."

பாயிரம்

(2) "பொன்னொளிர் கமலப் புத்தேள் நறுந்துழாய்ப்
பெருமான் போற்றும்
கன்னியம் புரிசைத்தில்லை நாதன்ருள்
கருத்திற் சேர்த்திப்
பன்னரும் பொருள் விளக்கத் தீபிகை
பகர்வேன் பாரில்
செந்நெறி யுளத்தோர் யாரும் செவிமடுத்
தினிது கேண்மின்."

(3) "குளிர்மணி வடநீ ழற்கீழ்க்
குலவுமெம் அடிகள் தொன்னுள்
எளிதிலா முதனூல் செப்ப
இலக்கண ரியையுந் தூக்காற்
றெளியொரு வழிநூல் செப்பச்
சிலர்சார்பு நூலும் போற்றத்
தளிர்பெற இந்நூல் மூன்றும்
சகந்தனிற் றிகழ்ந்த தன்றே."

(4) "ஆங்கது நிற்கப் பின்னும்
அலகில்நூல் உதித்த வாற்றிற்
ருங்கொரு சொற்பொ ருட்பல்
விதத்தொகை தானென் றுக்கொன்
ருேங்கி மிக்குங் குறைந்தும்
ஒத்திடா திருக்கை தன்னுல்
பாங்குயர் சின்னூற் சேரும்
பொருள்கூட்டும் பண்பை யெண்ணி;"

(5) "இலக்கண முழுது ணர்ந்தோன்
இறையிருஞ் சிவாக மத்தின்
துலைக்கடல் முற்றுங் கண்டோன்
தொல்லையாந் தில்லை மூதூர்

கலக்கற விளங்கும் பச்சைக்
கந்த தேசிகனும் எங்கோன்
சொலத்திகழ் இகப ரத்தை
வேண்டியே தொல்லோர் கேட்க ;"

(6) " மாவியல் சிறக்கும் வீரை
மண்டல வன்காங் கேயன்
ரேவண சித்தன் செஞ்சொற்
கயாகரன் இவராற் சொற்ற
பாவியல் நூற்கூ ரேர்சொற்
பல்பொருள் தொகையெ லாஞ்சேர்த்
தோவிலா வளஞ்சி றப்ப
ஒருபெரு நூல தாக"

(7) " நவையறு ககர மாதி
னகராவீ றெதுகை தன்னால்
நுவலடிக் கிரண்டு மொன்றும்
நுண்பொருள் ஒருங்கு சேர்த்திச்
சுவைநிகழ் சொல்வி ருத்தத்
தொகையெழு நூறு தன்னால்
அவைநலோர் குற்றஞ் சொல்லார்
என்பதை யகத்தில் எண்ணி ;"

(8) " சொற்றனன் நருத்து ளிக்குந்
தோட்டலர் கடம்பின் திண்தோள்
கொற்றவேல் முருகன் செந்திற்
குமரவேட் கடிமை பூண்ட
நற்றவ வீரா சார
நற்சிவப் பிரகா சன்சேய்ப்
பெற்றிசேர் அரும ருந்த
தேசிகப் பெயரி னனே."

(9) " இருஞ்சகாத் தம்ச ரைஞ்னூ
றிருமுந்நூ றுடனெண் பத்தஞ்
சொருங்குசித் திரபானுப்பேர்ச்
சமைமகத் திங்க ளொப்பில்
பொருஞ்சிவ நிசிவெள் ளிப்பேர்
புனைதினந் தில்லை மன்றில்
பெருங்குணத் தோர்க் கரங்கே
றுற்றநூற் பெற்றி தானே."

அரும்பொருள் விளக்க நிகண்டு குறித்து இது காறும் கூறப்பட்ட செய்திகளின் சுருங்கிய தொகுப்பை மேலுள்ள பாயிரப் பாடல்களில் காணலாம்.

ஆசிரியர் அருமருந்தைய தேசிகர் தமது நிகண்டின் ஒவ்வோர் எதுகைத் தொகுதியின் முன்னும் கடவுள் வணக்கம் பாடியுள்ளார். முதல் தொகுதியாகிய ககர எதுகைக்கு முன்னுல்மட்டும் பிள்ளையார் காப்பும் பாயிரமும் உள்ளன. மற்ற பதினேழு எதுகைத் தொகுதிகளின் முன்னும் முருகக் கடவுள்மேல் வணக்கம் பாடியுள்ளார். ஒவ்வொரு தொகுதியின் முதற்பாவிலும் முருகனை வணங்கி யிருப்பதோடு, இன்ன எதுகையைப் பற்றிச் சொல்லப் போகிறேன் என்றும் கூறியுள்ளார். இதுபோலவே ஒவ்வொரு தொகுதியின் முடிவிலும், செந்திலில் வாழும் முருகனை வணங்கும் அருமருந்தையன் என்கிற நான், இன்ன எதுகையைப் பற்றி இத்தனை பாடல்கள் பாடியுள்ளேன் என்று மொத்த எண்ணிக்கையுடன், எதுகைப் பெயரும் தம் பெயரும் தம் ஊர்ப் பெயரும் தம் வழிபடு கடவுள் பெயரும் கூறியுள்ளார். இவற்றின்

மாதிரிக்காக, சகர எதுகைத் தொகுதியின் முதற் பாடலையும் இறுதிப் பாடலையும் காண்பாம் :—

(சகர எதுகை — முதற் பாடல்]

" கொலைகிளர்ந் தொளிருஞ் செய்ய
கூரிலை வடிவேற் றூங்கு
மலைசெறி கடகத் திண்டோள்
மஞ்ஞைவா கனத்தெம் பெம்மான்
முலைமுகிழ்க் குறமின் கேள்வன்
மூவிரு முகனைப் போற்றிக்
கலைவலோர் புகழ் சகார
எதுகையின் கவியைச் சொல்வாம்."

[சகர எதுகை — இறுதிப் பாடல்]

" வழுவில வொலிசி றக்கும்
வல்லின மாஞ் சகார
மொழியெது கையினிற் செய்யுள்
மூவொன்ப தாகச் செய்தான்
கழுதுண அசுரர் சேனைக்
கடறெலை குகனைப் போற்றும்
அழகியற் செந்தின் மேவும்
அருமருந் தையன் றனே."

சகர எதுகைத் தொகுதியில் மொத்தம் இருபத்தொன்பது பாடல்கள் உள்ளன. ஆனால் இறுதிப் பாடலில், 'மூவொன்பதாகச் (3x9=27) செய்தான்' என இருபத்தேழு பாடல்களே குறிக்கப்பட்டுள்ளன. உண்மைதான்! சகர எதுகைச் சொற்களுக்குப் பொருள் கூறும் இருபத்தேழு பாடல்களுடன், முருக வணக்கப்

பாடலாகிய முதற் பாடலும், பாடல் எண்ணிக்கையும் ஆசிரியர் பெயரும் கூறும் இறுதிப் பாடலும் சேர (27+1+1=29) மொத்தம் இருபத்தொன்பது பாடல்கள் ஆகும். இவ்வாறே ஒவ்வோர் எதுகைத் தொகுதியிலும் ஆசிரியர் கூறியுள்ள எண்ணிக்கையோடு மேலும் முதற் பாடல், இறுதிப் பாடல் ஆகிய இரண்டு எண்ணிக்கையைச் சேர்த்துக் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும்.

இனி, சொற் பொருள் கூறும் நூற்பாடல்களின் மாதிரிக்காக, ககர எதுகையின் முதற் பாடலும் னகர எதுகையின் இறுதிப் பாடலும் வருமாறு:—

[ககர எதுகை]

"அகவலே அழைத்தல் ஆடல் ஆன்ற ஆசிரியம் முப்பேர்;
தகவறி வுடனொழுக்கம் தெளிவும் சற்குணமும் சாற்றும்;
பகவதி உமையேதுர்க்கை தருமதே வதைப்பேர் பன்னும்;
முகவுமாளிகை முகப்பே மொள்ளுதல் காந்திக்கும்பேர்."

இப் பாடலில் அகவல், தகவு, பகவதி, முகவு என்னும் சொற்களின் பொருள்கள் தரப்பட்டுள்ளன.

[னகர எதுகை]

"மன்றமே தெருட்சி மெய்ம்மை வாசம் அம்பலமே வீதி
நின்றகல் யாணத்தோடு வெளியென நிகழ்த்தும் ஏழ்பேர்;
கன்றுகை வளையே அற்பம் காட்டிய இளமை குட்டி;
நன்றே உத்தமத்தி னுமம்நல்லறந் தானும் ஆமே,"

இந்தப் பாடலில் மன்றம், கன்று, நன்று என்னும் சொற்கட் குரிய பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ககர எதுகைப் பாடலில், அகவல் என்னும் சொல்லுக்கு

மூன்று பொருள்கள் உண்டென 'முப்பேர்' என்று எண்ணிக்கையிட்டும், னகர எதுகைப் பாடலில் மன்றம் என்னும் சொல்லுக்கு ஏழு பொருள்கள் உண்டென 'ஏழ்பேர்' என எண்ணிக்கையிட்டும் ஆசிரியர் கூறியுள்ளமை காண்க. இவ்வாறே நூல் முழுவதும் ஆங்காங்கே பல சொற்களின் பொருள்களை எண்ணிக்கையிட்டுக் கூறியுள்ளார் ஆசிரியர்.

### நூற்பயன்

அரும்பொருள் விளக்க நிகண்டின் இறுதிப் (700–ஆம்) பாடலில், நூலைப் படிப்பதனால் உண்டாகும் பயன் ஆசிரியரால் கூறப்பட்டிருப்பது ஒரு புதுமை. இந்நிகண்டைக் கற்பவர்கள் சிறந்த புலமையும் செல்வமும் பெற்றுப் பெருமையுறுவராம். அப்பாடல் வருக:–

**"இருமையோன் றியதிருச் செந்தின் முருகோனை யேத்தும்**
**அருமருந்தையன் சொற்ற அரும்பொருள் விளக்கம் கற்றோர்**
**பொருமுரண் டெறப்படுத்தும் புலமைநாற் றிறம் விளக்கும்**
**திருமருங் குறப்பொருத்தும் செருக்குட னிருப்பர் தாமே."**

# தொகை நிகண்டு

இதன் ஆசிரியர் சுப்பிரமணியக் கவிராயர்; திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கல்லிடைக்குறிச்சி என்னும் ஊரினர். இவர் பதினெட்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியினரா யிருக்கலாம்.

சிவசுப்பிரமணியக் கவிராயர் தமது நாமதீப நிகண்டின் பாயிரத்தில் தொகை நிகண்டைக் குறிப்பிட்டுள்ளார்:

“ பன்னுந் தொகைநிகண்டிற் பார்க்கவிரி வாமவைகள்
இன்னசுருக் கத்தடங்காவே.”

என்பது நாமதீபப் பாடற்பகுதியாகும். இது தவிர வேருென்றும் தொகைநிகண்டைப் பற்றி விளக்கமாகத் தெரியவில்லை.

திவாகரத்தின் பன்னிரண்டு தொகுதிகளும் மூன்று பெரும் பிரிவுக்குள் அடக்கப்பட்டிருக்கும் செய்தி முன்னரே அறிந்ததே. அவற்றுள் மூன்ருவதாகிய பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி என்னும் பிரிவைப் பற்றி மட்டும் விளக்கமாகச் சொல்வதுதான் இந்தத் தொகை நிகண்டு. அதாவது, இரு சுடர், முக்குணம், ஐம்பொறிகள் முதலிய தொகைப் பொருள்களே விளக்குவதே இந்நிகண்டு. அதனுல் தான் இது தொகை நிகண்டு என்னும் பெயர் பெற்றது.

திவாகரத்தில் பன்னிரண்டாவதாக உள்ள பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி என்னும் ஒரு தொகுதி மட்டுமே பிற்காலத்தில் பல்கிப் பெருகித் தொகை நிகண்டு போல் தனி நிகண்டுகளாக உரு வெடுத்துள்ளமை ஈண்டு புலனாகும்.

# பொருள் தொகை நிகண்டு

இதன் ஆசிரியர் சுப்பிரமணிய பாரதி (தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் அல்லர்) இவர், புதுக்கோட்டைச் சீமையைச் சார்ந்த குடுமியாமலை என்னும் ஊரினர்; வைத்தீசுர தீட்சதரின் குமாரர். இவரது காலம் பதினெட்டாம் நூற்றாண்டாக இருக்கலாம்.

பொருள் தொகை நிகண்டு என்னும் பெயரிலிருந்தே, இந்நூல் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதியின் விரிவான மறு உருவம் என்பது புலப்படும்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர் 1920-ஆம் ஆண்டில் ஆறணு விலையில் இந்நூலைப் பதிப்பித்துள்ளனர். திருவாவடுதுறை ஆதீனப் புலவரும் மதுரைத் தமிழ்ச் சங்கச் சைவநூற் பரிசோதகருமாகிய சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர் திருத்தியும் விளக்கியும் கூட்டியும் இந்நிகண்டுப் பதிப்பில் தம் கைவண்ணம் காட்டியுள்ளதாகத் தெரிகிறது.

நூலாசிரியர் 878 நூற்பாக்கள் எழுதியிருக்க, அவற்றோடு 122 நூற்பாக்கள் பின்னர் புதிதாக எழுதிச் சேர்த்து 1000 நூற்பாக்களாகக் கணக்காக்கப் பட்டது என்று ஒரு சார் கொள்கையும், ஆசிரியர் 978 எழுத, பின்னர் 22 நூற்பாக்கள் சேர்க்கப்பட்டன என்று ஒரு சார் கொள்கையும் நிலவுகின்றன. இவற்றுள் எது உண்மையோ! அல்லது இரண்டும் பொய்யோ!

இனி நூலின் மாதிரிக்காகச் சில நூற்பாக்கள் வருமாறு:

விநாயகர் துதி

"அருட்கடல் விநாயகன் அடியிணை யிறைஞ்சிப்
பொருள்தொகை நிகண்டினைப் புகலுது மியாமே."

ஒரு பொருள்

"ஒருமை யாவது முத்திப் பேரும்
அஃதிறை யுணர்ந்துற லாமென மொழிப."

(ஒன்று எனச் சிறப்பிக்கத் தக்கது வீடு பேறு)

இரு பொருள்

"அச்சுவினி தேவர் அவர் இருவோர் தமைத்
தேவ மருத்துவர் என்னச் செப்புவர்."

[தேவ மருத்துவர் இருவர் = அச்சுவினிதேவர் எனப்படுவர்)

"அயனம் இரண்டு உத்தரம் தக்கிணமே."

[உத்தராயணம், தட்சிணயணம் என அயனங்கள் இரண்டாம்]

முப்பொருள்

"அயன் அரி அரன் மும் மூர்த்தியாமே."

[மும்மூர்த்திகள் = அயன், அரி, அரன் என்பவர்கள்]

இப்படியாக ஒவ்வொரு தொகைப் பொருளும் விளக்கப்பட்டிருப்பதை நூலில் காணலாம். மேலே

யுள்ள 1, 2, 3 என்னும் தொகைப் பொருள் அல்லாமல், 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 18, 20, 21, 22, 24, 27, 28, 30, 31, 32, 33, 35, 36, 38, 56, 60, 64, 96, 100— ஆகிய தொகைகளால் சுட்டப்படும் பொருள்களும் இங்கிகண்டில் விளக்கப்பட்டுள்ளன. இனி இறுதி நூற்பா வருமாறு:

" சொல்லிய அல்லன தொல் காப்பியங்களிற்
கண்டுணர்ந் திடுதல் கற்ருேர் கடனே."

ஈண்டு தொல்காப்பியங்கள் என்றது, பழைய காப்பி யங்கள் பலவற்றையாம்.

# பொதிகை நிகண்டு

இந்நூலுக்குப் பொதிகை நிகண்டு எனப் பெயர் வந்ததின் பொருட்டு புலப்படவில்லை. இதன் ஆசிரியர் பொதிகைமலைச் சீமையாகிய திருநெல்வேலிமாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆதலின், அம்மலையைச் சிறப்பிக்கும் வாயிலாக இப்பெயர் அமைக்கப்பட்டதோ!

## ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் சாமிநாதக்கவிராயர். இவர் சுருக்கமாகச் சாமி கவிராசன் எனவும் அழைக்கப்படுவார். ஆசிரியர் கல்லிடைக்குறிச்சி என்னும் ஊரினர்; சைவ வேளாளர். இவர் மகன் பூவைப் புராணம், நாம தீப நிகண்டு ஆகியவற்றின் ஆசிரிய:ராகிய சிவ சுப்பிரமணியக் கவிராயர் என்பவர்.

பொதிகை நிகண்டே யன்றி, ஆசிரியர் தம் பெயரால் சாமிநாதம் என்னும் இலக்கண நூல் ஒன்றும் இயற்றியுள்ளார். இதனை அந்நூலின் பாயிரப் பகுதியாகிய,

"பூமிசைப் பன்மொழியின் வேங்கடமுக் கடற்குட்
புணர் தமிழைந் தியல்நிகண்டாய்ந் தார்எளிதி னுணரத்
தோமின் முன்னூல் வழியொருநூல் வேண்டுமெனத்
துறைசைச்
சுடர்மணி சுப்பிரமணியக் குருமணி பார்த்தருள
ஆமிதெனக் குருபதமும் திருக்குறிப்புந் தலைக்கொண்
டகத்தியனைச் சிவசுப்ர மணியனென ஈன்ற

சாமிகவி ராசனதி குலத்தோன் கல்லிடையூர்ச்
சம்பனன் செய்தனன் சாமிநாதம் என்றிந்நூலே.''

என்னும் பாடலால் நன்குணரலாம். திருவாவடுதுறை ஆதீனத் தலைவராகிய சுப்பிரமணிய தேசிக அடிகளாரின் திருக்குறிப்புப்படி ஆசிரியர் சாமிநாதம் என்னும் இலக்கண நூல் எழுதியதாக இப்பாடலால் அறியலாம். மற்றும் ஆசிரியரின் ஊர்ப்பெயரும் மகன் பெயருங் கூட இப்பாடலால் தெரியவருகின்றன.

## காலம்

இவர் மகன் சிவசுப்பிரமணியக் கவிராயர் பூவைப் புராணம் என்னும் நூலை, கொல்லம் 985-ஆம் ஆண்டில்–அதாவது, கி. பி. 1810-ஆம் ஆண்டில் இயற்றியதாகச் சொல்லியுள்ளார். எனவே, மகன் சிவசுப்பிரமணியக் கவிராயரது காலம் 19-ஆம் நூற்றுண்டின் முற்பகுதி என்பது புலப்படும். ஆகவே, தந்தை சுவாமிநாதக் கவிராயரது காலம் 18-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி என்பது தெளிவு. இவர்கள் இருவரும் அப்பன் - மகன் என்பதற்குச் சான்று பகர, சிவசுப்பிரமணியக் கவிராயர் தாம் இயற்றிய நாமதீப நிகண்டின் பாயிரத்தில், என் தந்தை பொதிகை நிகண்டு என ஒரு நிகண்டு இயற்றியுள்ளார் என்னும் கருத்தில் பாடியுள்ள

"எந்தை பொதிகைநிகண் டென்ருேர்சொற் பல்பெயரே
தந்தனன்காண் பல் கூட்டஞ் சாரொருபேர்....''

என்னும் பாடற்பகுதியும் துணை புரியும்.

## நூல் அமைப்பு

இந்நூலில் முதல் பகுதி, இரண்டாம் பகுதி என இரு பகுதிகள் உள்ளன. முதலில் முதல் பகுதியைப்

பற்றிப் பார்ப்போம்:குறுகிய அடிகள் கொண்ட ஆசிரிய விருத்தத்தாலான இது பத்துத்தொகுதிகள்உடையது. மொத்தம் 500 பாடல்கள் உள்ளன. முதல் ஒன்பது தொகுதிகளில் மட்டும் 14,500 சொற்கள் பேசப்பட்டுள்ளன. பத்தாவது தொகுதியில் ஏறத்தாழ 1350 சொற்கள் விளக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. நூற்பா நடையாலான இரண்டாம் பகுதியில், சொற்கட்குப் பல பொருள்கள் கூறப்பட்டுள்ளன. இதில் 2288 சொற்கள் உள்ளன. ஆசிரியர் திருநெல்வேலி மாவட்டத்தாராதலின், அம்மாவட்டத்து வழக்குச் சொற்கள் பல இதில் இடம் பெற்றிருப்பதில் வியப்பில்லை.

குறிப்பிடத் தக்க ஒரு சிறப்பு இந்நிகண்டிற்கு உண்டு. அகராதி நிகண்டைப் போலவே அகர வரிசையில் அமைந்துள்ளமையே அச்சிறப்பாகும். ஆனல் அகராதி நிகண்டில் அரன், அம்பிகை, அயன் என முதலெழுத்துக்கு மட்டும் அகர வரிசை கவனிக்கப்பட்டிருக்கிறது; இரண்டாம் எழுத்தாக ர, ம், ய என எழுத்துக்கள் அகர வரிசையில் இன்றித் தாறு மாருக உள்ளன. பொதிகை நிகண்டிலோ அகம், அகைத்தல், அகப்பா என முதல் எழுத்தோடு இரண்டாம் எழுத்திலும் அகர வரிசை கவனிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, ‘அ’ என்னும் எழுத்தை அடுத்து ககர இனம் உள்ள சொற்கள் ஒன்றன்பின் ஒன்று கூறப்பட்டிருப்பது காணலாம். இம்முறையில் நோக்கின், அகராதி நிகண்டினும் ஒரு படி உயர்ந்தது பொதிகை நிகண்டு என்பது புலனுகும். இனி நூலின் மாதிரிக்காக ஒரு சொல் பல்பொருட் பெயர்த் தொகுதியிலுள்ள முதல் மூன்று நூற்பாக்கள் வருமாறு:-

“ அகம் தருவும் குறையும் வெற்பும் மனையும்
அகமும் உள்ளும் ஆன்மாவும் அகப்பொருளும்
இடமும் பாவமு மல்லவு மாகும்.”

“ அகைத்தல் அறுத்திடலும் ஒடித்தலும் ஈர்தலும்
வேதனை யும்மென விளம்பினர் புலவர்.”

“ அகப்பா உண்மதில் மேடையும் மதிலும்.”

மேலுள்ள மூன்று நூற்பாக்களிலும் அகம், அகைத்தல், அகப்பா என்னும் மூன்று சொற்களுக்கும் பொருள் கூறப்பட்டிருப்பதையும், அவை மூன்றும் அகர வரிசையில் அமைக்கப்பட்டிருப்பதையும் காணலாம்.

# நாம தீப நிகண்டு

நாமம் என்றால் பெயர்; தீபம் என்றால் விளக்கு; பெயர்ப் பொருள் விளக்கம் செய்வதால் நாமதீப நிகண்டு எனப் பெயர் பெற்றது.

## ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் சிவசுப்பிரமணியக் கவிராயர்; கல்லிடைக் குறிச்சி என்னும் ஊரினர்; தளிச்சேரி மடத்தைச் சார்ந்தவர்; பொதிகை நிகண்டு இயற்றிய சாமிநாதக் கவிராயரின் மகன். இந்தச் செய்திகள், சாமிநாதக் கவிராயர் இயற்றிய சாமிநாதம் என்னும் இலக்கண நூலின் பாயிரத்திலுள்ள

" ஆமிதெனக் குருபதமும் திருக்குறிப்பும் தலைக்கொண்
டகத்தியனைச் சிவசுப்ரமணியனென வீன்ற
சாமிகவி ராசனதி குலத்தோன் கல்லிடையூர்ச்
சம்பனன் செய்தனன் சாமிநாத மென்றிந்நூலே."

என்னும் பாடற் பகுதியானும், சிவசுப்பிரமணியக் கவிராயரே இயற்றிய நாமதீப நிகண்டின் பாயிரப் பாடல்களானும் உணரப்படும். ஆசிரியர் நாமதீப நிகண்டே யல்லாமல் பூவைப் புராணம் என்னும் ஒரு நூலும் இயற்றியுள்ளார்.

## ஆசிரியர் பெருமை

சாமிநாதக் கவிராசர் அகத்தியரைத்தான் சிவசுப்பிரமணியன் என்னும் பிள்ளையாகப் பெற்றார்

என்னும் கருத்தில், சாமிநாதம் என்னும் நூலின் பாயிரத்தில் உள்ள

" அகத்தியனைச் சிவசுப்ர மணியனென ஈன்ற
சாமி கவிராசன்"

என்னும் பாடல் பகுதியை நோக்கின், சிவசுப்ரமணியக் கவிராயர் அகத்தியரைப் போலப் பரந்த புலமையும் தலைமையும் உடையவராய் விளங்கினுர் என்பது புலப் படும்.

## காலம்

ஆசிரியர் பூவைப் புராணத்தைக் கொல்லம் 985 (கி. பி. 1810)–ஆம் ஆண்டில் இயற்றியதாகக் கூறி யுள்ளமையால் இவரது காலம் 19-ஆம் நூற்ருண்டின் முற்பகுதி என்பது தெளிவு. மற்றும், நாமதீப நிகண்டைப் பூவைப் புராணத்துக்கு முன்பே ஆசிரியர் இயற்றியிருக்கவேண்டும். எனவே, பதினெட்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியையும் ஆசிரியர் தொட்டுக் கொண்டு இருந்திருக்க வேண்டும்.

## நூல் அமைப்பு

நிகண்டுத் தொகுதிகளின் முப்பெரும் பிரிவுகளுள் முதலாவதாகிய 'ஒரு பொருள் பல் பெயர்த் தொகுதி' என்னும் பிரிவைச் சார்ந்தது நாமதீப நிகண்டு. அதாவது, ஒவ்வொரு பொருளுக்கும் எத்தனை பெயர்கள் உண்டோ அத்தனை பெயர்களையும் கூறுவது இந்நிகண்டு.

இந்நூல் வெண்பா யாப்பினுல் ஆனது; பதினுறு தொகுதிகளுடையது. பாயிரத்தில் எட்டுப் பாக்களும்

பதினுறு தொகுதிகளிலும் எண்ணூறு பாக்களுமாக மொத்தம் எண்ணூற்றெட்டு (808) வெண்பாக்கள் உள்ளன. 12,000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலில், சங்க கால வழக்காற்றுச் சொற்கள்முதல் பதினெட்டாம் நூற்ருண்டு வழக்காற்றுச் சொற்கள் வரை காணக்கிடக்கின்றன. மலையாளப் பகுதியில் வழக்கில் உள்ள தை (மரக்கன்று), ஆட்சி (வாரம்) முதலிய சொற்களும் இடம் பெற்றுள்ளன.

மற்ற நிகண்டுகளினும் இந்நூல் ஒரு புது மாதிரியான அமைப்பு உடையது. நூல் முழுதும் நான்கு படலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு படலமும் பல வர்க்கங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது முறையே அவை வருமாறு:—

I உயர் திணைப் படலம்............................2

(1) தெய்வ வர்க்கம்
(2) மானிட வர்க்கம்

II அஃறிணை உயிர்ப் பொருள் படலம்..........5

(1) நாற்கால் உயிர்ப் பொருள் வர்க்கம்
(2) பறவை உயிர்ப் பொருள் வர்க்கம்
(3) ஊர் உயிர்ப் பொருள் வர்க்கம்
(4) நீர்வாழ் உயிர்ப் பொருள் வர்க்கம்
(5) தாவர உயிர்ப் பொருள் வர்க்கம்

III அஃறிணை உயிரில் பொருள் படலம்..........5

(1) இயற்கைப் பொருள் வர்க்கம்
(2) செயற்கைப் பொருள் வர்க்கம்
(3) இட வர்க்கம்
(4) கால வர்க்கம்
(5) சினை வர்க்கம்

**IV குணநாமப் படலம்... 4**

(1) உயிர்ப் பொருள் — மனக்குண வர்க்கம்

(2) உயிர்ப் பொருள் — வாக்குக் குணவர்க்கம்

(3) உயிர்ப் பொருள் – செயற்குண வர்க்கம்

(4) உயிரில் பொருள் குணவர்க்கம்

[மொத்த வர்க்கங்கள்...*16*

ஆக நான்கு படலங்களும் பதினாறு வர்க்கங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. திவாகரம் முதலிய நிகண்டுகளில் 'தொகுதி' எனப்படுவதுதான் இந்நூலில் 'வர்க்கம்' எனப்படுகிறது. திவாகரத்தில் உள்ள முதல் பத்துத் தொகுதிகளும் இந்நூலில் நான்கு படலங்களின் கீழ்ப்பதினாறு வர்க்கங்களாகக் கொடுக்கப்பட்டிருப்பது ஒரு புது அமைப்பு அல்லவா ? ஆகக் கூடியும், பழைய சரக்கைப் புதிய கலங்களில் கொடுப்பது போன்றதுதான் இது !

நாமதீப நிகண்டு குறித்து இதுகாறும் கூறிய கருத்துக்களை எட்டுப் பாக்களில் தொகுத்துப் பாயிரமாக ஆசிரியர் சிவசுப்பிரமணியக் கவிராயரே இயற்றியுள்ளமை ஆராய்ச்சியாளர்க்கு மிகவும் உதவ வல்லது. அப்பாயிரப் பாடல்கள் வருமாறு :—

**" ஆனைமுக னைக்குகனை யாதிபுவ னேசொரியை**
**ஞானமுதல் கோரக்க நாதனையும்—மேன்மைபெறு**
**சாமிகவி ராசனையுந் தான்வணங்கிப் பேருரைப்பன்**
**பூமிதனில் உள்ள பொருட்கு."**

**" ஒல்லும் உயர்திணைப்பே ரஃறிணை யுயிர்ப்பொருட்பேர்**
**இல்பொருட்பே ரில்பொருள்க ளின்குணப்பேர்—**
**சொல்படல**
**மாமொருநான் கிட்டிரண்டைந் தைந்துநால் வர்க்கமிட்டு**
**நாமதீ பம்பகர்ந்தேன் நான்."**

"தேவர்நர ராமிரண்டும் சீர்பெறுநாற் கால்பறவை
ஊர்வனநீர் வாழ்வநிலை யோரைந்து — மேவியற்கை
செய்கையிடங் காலஞ் சினையைந்து நாற்குணமும்
எய்துவர்க்க நாற்படலத் தே."

"மனக்குணம்வாக் கின்குணமே மற்லுடலாற் செய்யும்
வினைக்குணமிம் மூன்றுமுயிர் மேவுந்-தனிப்பொருள்கட்
கேய்ந்தகுண மாகுமுயி ரில்பொருள்க ளின் குணமோன்
ருய்ந்தவிவை நாற்குணங்க ளாம்."

"பல்வடிவு நாற்றமிரண் டைந்துவண்ண மூறெட்டு
நல்ல சுவையாறு நான்களவை — வல்லோர்
புகலுமுயிர்ப் பில்லாப் பொருட்குணங்க ளாகும்
பகர்படல வர்க்கமுறை பார்."

"திண்பார் புகழ்நாம தீபமோர் எண்ணூறு
வெண்பாவுஞ் சொற்செறிவான் மெய்த்தலையின்—
பண்பு சில்பா
வொற்றறுத்த லாதியகொண் டோர்கசில்பா தந்
பற்றும் வகையுளியாற் பார்." தொடைகள்

"எந்தை பொதிகைநிகண் டென்றோர்சொற் பல்பெயரே
தந்தனன்காண் பல்கூட்டஞ் சாரொருபேர் — முந்தியான்
பன்னுந் தொகைநிகண்டிற் பார்க்கவிரி வாமவைகள்
இன்னசுருக் கத்தடங்கா வே."

"பல்லா யிரநிகண்டிற் பண்டிதர்கள் சொன்னபொருள்
எல்லா மெளிதா யிலிதுணரக் — கல்லிடையூர்
மன்னுசிவ சுப்ர மணியன் கவிராசன்
பன்னுதமிழ் நாமதீ பம்."

மேலே காப்புச் செய்யுளாகிய முதல் பாடலில் 'சாமி கவி ராசனையுந் தான் வணங்கி' என ஆசிரியர் தம் தந்தைக்கும் வணக்கம் செலுத்தியிருப்பது புதுமையா யுள்ளது. படலங்களையும் வர்க்கங்களையும் பெயர்களுடன் எண்ணிக்கையிட்டுக் கூறியுள்ள

ஆசிரியர், மொத்தப் பாக்கள் எண்ணூறு என்று கூறவுந் தவறவில்லை.

இனி மாதிரிக்காக நூலின் முதல் பாடலையும் இறுதிப் பாடலையும் காண்பாம் :—

(முதல் பாடல்)

" நந்திபெம்மான் ஆலமர்ந்தோ னம்பனிறை சோதிசெம்மல்
அந்திவண்ணன் தாணுநித்தன் ஆனந்தன் — இந்தினன்தீ
முக்கணன் ஐந்து முகன்திகம்ப ரன்சடையன்
நக்க னெண்டோ ளன் பிஞ் ஞகன்."

இஃது உயர்திணைப் படலத்தில் தெய்வ வர்க்கத்தில் சிவன் பெயர்களைக் கூறும் பாடலாகும்.

(இறுதிப் பாடல்)

" காதமொடு சாமரத்தநங் காவதமுக் கூப்பாடாம்
கோதில்கவி யூதமிரு கூப்பாடாம் — ஓதுநல்ல
நானூறு விற்கிடை கோழிப்பறவைத் தூரமே
தானு வது கிரவுஞ் சம்."

இது குணநாமப் படலத்தில் உயிரில் பொருட் குண வர்க்கத்தின் இறுதிப் பாடல்—அதாவது நூலின் இறுதிப் பாடல் ஆகும். இதில் தொலைவைக் குறிக் கும் காதம், காவதம் முதலிய பெயர்கள் பேசப்பட் டுள்ளன.

# வேதகிரியார் சூடாமணி நிகண்டு

இதுகுறித்து முன்னரே சூடாமணி நிகண்டு பற்றிய பகுதியில் கூறப்பட்டுள்ளது. சூடாமணி நிகண்டின் பதினோராவது தொகுதியாகிய ஒரு சொல் பல் பொருள் பெயர்த்தொகுதியே பதினோராம் நிகண்டு என்னும் பெயரில் பெருவாரியாக மக்களால் பயிலப் பட்டுவந்ததென முன்பே சொல்லப்பட்டுள்ளது. ஆனால் நாளுக்கு நாள் பெருகிவரும் சொற்களைச் சூடாமணியில் காண முடியவில்லை. இக்குறையைப் போக்கவேண்டு மெனக் களத்தூர் வேதகிரி முதலியார் என்பவர் முயன்றார். எனவே, சூடாமணியில் இல்லாத பல புதிய சொற்களைத் தொகுத்து, எதுகை முறையில் புதிதாக 290 விருத்தப் பாக்களை இயற்றி, சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதியில் முன்னமேயே இருந்த 310 விருத்தப் பாக்களின் இடையிடையே செருகி, மொத்தம் 600 பாக்கள் உடைய தனி நூலாக் கினார். அதனால் இது, வேதகிரியார் சூடாமணி, வேதகிரி யார் நிகண்டு என்றெல்லாம் அழைக்கப்படுவதாயிற்று.

சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதியில் 1575 சொற்களே பொருள் விளக்கம் செய்யப் பெற்றுள் ளன; ஆனால் இதிலோ 2526 சொற்கள் இடம் பெற்றுள் ளன. இந்நூல் முழுவதற்கும் வேதகிரியாரே தெளி வாக உரை எழுதியுள்ளார். இது கி. பி. 1842-ஆம் ஆண்டில் யாழ்ப்பாண சங்கத்தாரால் பதிப்பிக்கப் பட்டது. எனவே, ஆசிரியர் பத்தொன்பதாம் நூற்றாண் டினர் என்பது தெளிவு. இந்நூலே யன்றி மேலும்

இலக்கியக் களஞ்சியம் முதலிய பல நூற்கள் வெளி யிட்டிருக்கிருர் வேதகிரியார். 'தொகைப் பெயர் விளக் கம்' என்னும் நிகண்டு நூலும் இவருடையதே.

வேதகிரியார் சூடாமணி ஒரு சொல் பல் பொருள் பெயர்த் தொகுதி என்னும் பிரிவைச் சேர்ந்ததாகும்.

## கந்த சுவாமியம்

இதன் ஆசிரியர் சுப்பிரமணிய தேசிகர் என்பவர். இவர் கீழ்வேளூர் என்னும் ஊரினர். ஆசிரியர் பழைய நிகண்டுச் சொற்களைத் தொகுத்து இப்படியொரு நிகண்டாக நூற்பா (சூத்திர) நடையில் எழுதி யுள்ளார். நிகண்டு நூற்கள் இப்படி இப்படி அமைக்கப் படவேண்டும் என இருபத்து நான்கு கட்டளைகள் (விதிகள்) இந்நூலில் கூறப்பட்டுள்ளன. அவ்வாறே இந்நிகண்டும் அமைக்கப்பட்டுள்ளது. சொல்லுவது போலவே செய்துகாட்ட வேண்டுமல்லவா ?

முதல் இரு தொகுதிகள் மட்டும் கி. பி. 1844-இல் அச்சாயின. முதல் தொகுதியில் **1318** சொற்களும், இரண்டாம் தொகுதியில் 1425 சொற்களும் இடம் பெற்றுள்ளன.

1844-ஆம் ஆண்டில் அச்சாகியிருப்பதை நோக் கின், ஆசிரியர் காலம் **19**-ஆம் நூற்றுண்டின் முற் பகுதி என்பது புலனுகும்.

கந்தசுவாமி என்பவர், இந்நூலாசிரியராகிய சுப்பிரமணிய தேசிகரின் பெருமதிப்பிற்கு உரியவராய் இருந்திருக்கலாம், எனவே, அவர் பெயராலேயே கந்தசுவாமியம் என இந்நிகண்டினை அழைத்தாரோ என்னவோ !

# தொகைப் பெயர் விளக்கம்

இதன் ஆசிரியர் வேதகிரி முதலியார். இவர் களத்தூர் என்னும் ஊரினர்; தலைசிறந்த தமிழறிஞர்; 19–ஆம் நூற்றுண்டினர்.

இந்நூலும் பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி என்னும் பிரிவைச் சேர்ந்தது என்பது தொகைப் பெயர் விளக்கம் என்னும் அதன் பெயரானேயே புலனுகும்.

இஃது அகரவரிசையில் அமைந்துள்ளது; கி. பி. 1849-ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டது.

# இலக்கத் திறவு கோல்

இப்படியொரு நூல் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இஃதும் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதியைச் சார்ந்ததாகும்.

இலக்கம் என்ருல் எண். தொகை எண்களால் குறிக்கப்படும் பொருள்களை அறிந்து கொள்வதற்கு இந்நூல் ஒரு திறவுகோல் (சாவி) போல இருத்தலின் இலக்கத் திறவு கோல் என அழைக்கப்படுகிறது.

இந்தக்காலத்தில் நூல்(புத்தக)விற்பனையாளர்கள் வாங்குவோரைக் கவர்வதற்காக வாணிக நோக்குடன் கவர்ச்சியாக நூற்கட்குப் பெயர் வைப்பது போல, இந்த இலக்கத் திறவுகோல் என்னும் பெயர் இயற்கையிலேயே கவர்ச்சியாக அமைந்து விட்டதல்லவா? திறவுகோல் இருந்தால்தானே திறந்து உள்ளேயிருக்கும் பொருளைக் காணமுடியும்! அது போலவே, இந்நூலின் துணைகொண்டு, தொகை எண்களில் அடக்கப்பட்டிருக்கும் பொருட் பெயர்களைத் தெரிந்து கொள்ளலாமன்ருே?

தொகைஎண்களால்சுட்டப்படும் பொருட்பெயர்கள் அகரவரிசையில் முறைப்படுத்தப்பட்டு ஓர் அட்டவணை (Alphabetical List) கொடுக்கப்பட்டிருக்கிறதாம் இந்நூலில்.

# நாநார்த்த தீபிகை நிகண்டு

நாநா (நாஞ) என்ருல் பல என்று பொருளாம். நாநாவிதமான (பலவிதமான) என்ற உலக வழக்கை யும் காண்க. அர்த்தம் என்ருல் பொருள் என்று பொரு ளாம். நாநார்த்தம் (நாநா—அர்த்தம், என்ருல் பல பொருள் என்று பொருளாம். எனவே, நாநார்த்த தீபிகை என்பது, சொற்கட்குப் பல் பொருள் விளக்கம் தரும் நிகண்டு என்பது பெறப்படும்.

## ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் முத்துசாமி பிள்ளை என்னும் புலவர். இவர் திருநெல்வேலிக்காரர். இவர் மருகர் சுவாமிநாதப் பிள்ளை என்னும் தமிழறிஞர். மருகர் மாமனுரின் நிகண்டைப் புகழ்ந்து ஒரு சிறப்புப்பாயிரம் எழுதி யுள்ளார். இந்நூல் கி. பி 1850-ஆம் ஆண்டில் எழு தப்பட்டதாகத் தெரிவதால், ஆசிரியர் பத்தொன்பதாம் நூற்ருண்டினர் என்பது புலப்படும்.

## நூல் அமைப்பு

இந்நூல் அரும் பொருள் விளக்க நிகண்டைப் பல வகையில் ஒத்துள்ளது; அதாவது, அது போலவே இஃதும் ஒரு சொல் பல் பொருட் பெயர்த்தொகுதி என் னும் இரண்டாவது பெரும்பிரிவைச் சேர்ந்தது; விருத்த யாப்பினுல் ஆனது. ககர எதுகைமுதல் னகர எதுகை ஈருக எதுகைமுறையில் பாகுபாடு செய்யப்பட்

டுள்ளது. இதன் எதுகை முறையமைப்பு மிகத் தெளிவாயுள்ளது. சொற்கட்கு முன்னுல் வேண்டாத அடைமொழிச் சொற்கள் இந்நிகண்டில் இல்லை. ஆசிரியர் முன்னோர் நிகண்டுகளிலுள்ள சொற்களோடு பல வடமொழித் திரிபுச் சொற்களுக்கும் இந்நூலில் பொருள் கூறியுள்ளார். அதனுல் இது பெருநூலாய் விரிந்துள்ளது. மொத்தம் 1102 பாடல்கள் இதில் உள்ளன. 5452 சொற்கள் பொருள் விளக்கப்பட்டுள்ளன. இச்செய்திகளை நூலின் முகப்பில் ஆசிரியரே பாடிய தற்சிறப்புப் பாயிரத்திலுள்ள

"ககராதி னகாரவீறு எதுகை வைத்து...."

"வடநூற் சொல் செந்தமிழினும் பொருள்
தொடுத்துச் செயும் நாநார்த்த தீபிகை...."

"அடை சொற்கு அஞ்சிப் பற்பல
விருத்தத் தானும் பகர்ந்த...."

"முன்னோர் பன்னூலிற் சில வெவ்வே றுரைத்த
வெலலாஞ் சேர்த்து ஒன்ருத் திரட்டி.......

என்னும் பாடற் பகுதிகளால் அறியலாம்.

இந்நிகண்டிற்கு, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராயிருந்த உயர்திரு. சு. அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் சிறந்த உரையெழுதியுள்ளார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தால் 1936-ஆம் ஆண்டில் இந்நூல் பதிப்பிக்கப் பெற்றது.

# சிந்தாமணி நிகண்டு

சிந்தாமணிபோல் சிறந்தது என்னும் பொருளில் இந்நூல் சிந்தாமணி நிகண்டு எனப் பெயர்பெற்றிருக்க வேண்டும். பல நிகண்டுகள் உலவும் நாட்டிலே ஒரு புது நிகண்டு தோன்றும்போது ஏதேனும் ஒரு பெயர் வைத்தாக வேண்டுமல்லவா?

## ஆசிரியர் வரலாறு

இதன் ஆசிரியர் வைத்தியலிங்கம் பிள்ளை என்பார்; இவர் யாழ்ப்பாணத்து வல்லி பட்டினத்துறை என்னும் இடத்தைச் சேர்ந்தவர். இவரே இந்நிகண்டுக்கு ஓர் உரையும் எழுதி கி. பி. 1874-ஆம் ஆண்டில் அச்சிட்டார். எனவே, ஆசிரியர் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியினர் என்பது தெளிவு.

## நூல் அமைப்பு

அரும்பொருள் விளக்க நிகண்டு, நாநார்த்த தீபிகை என்பன போல இந்நிகண்டும் சொற்கட்குப் பொருள் கூறும் இரண்டாம் பிரிவைச் சேர்ந்ததாகும். அவை போலவே இஃதும் எதுகை முறையில் அமைந்ததாகும். ஆனால் அந்நிகண்டுகளில், பல பொருள்களை உடைய சொற்களும் இடம் பெற்றுள்ளன; இந்நிகண்டிலோ ஒரு பொருளையுடைய சொற்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. இதனை ஆசிரியரே பாடியுள்ள

"நேர்செறி இளைஞர் ஓர்சொற்கு
ஒரு பொருள் நேராய் ஓரப்
பார்செறி நிகண்டு சிந்தா
மணியெனப் பகர்வன் ஒன்றே."

என்னும் பாயிரப் பாடலால அறியலாம். இளைஞர்கள் புரிந்து கொள்வதற்காக இந்நிகண்டை இயற்றியதாக ஆசிரியர் பாயிரத்தில் கூறியிருப்பதிலிருந்து, அன்று கல்வித் துறையில் மொழிப்பயிற்சி இன்றியமையாத இடம் பெற்று மிகவும் கவனிக்கப்பட்டிருந்தது என்பதும், எப்படியாவது நிகண்டுகளின் வாயிலாகச் சொற் பொருள்களை மாணவரின் உள்ளத்தில் திணித்துவிட வேண்டும் என்று கருதாமல், மாணவர்க்கு எளிதில் புரியக்கூடிய முறையில்-நன்கு பதியக் கூடிய வகையில் நயமாகக் கல்வி புகட்ட வேண்டும் என்னும் உள நூல் முறை (Psychological Method) அன்றே ஆசிரியர்களால் பின்பற்றப்பட்டது என்பதும் நன்கு விளங்கும்.

முன்னெழுந்துள்ள நிகண்டுகள் போலவே புது நிகண்டும் இருந்தால் அதனுல் ஒன்றும் பயன் இல்லையல்லவா? எனவே, இந்நிகண்டின் ஆசிரியர் இதில் ஒரு புதுமையைக் கையாண்டுள்ளார். அதாவது, ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் தெரிந்து கொள்வது அப்புறம் இருக்கட்டும்; மாணவ இளைஞர்கள் முதலில் ஒரு சொல்லுக்கு உரிய முக்கியமான ஒரு பொருளைத் தெரிந்து கொள்ளட்டும்; பிறகு பல பொருள்களைப் பற்றிப் பார்த்துக்கொள்ளலாம் என்று, 'எளிமையிலிருந்து படிப்படியாக அருமைக்குச் செல்லுதல்' என்னும் உளநூல் முறையை ஒட்டியவர் போல, ஆசிரியர் இந்நிகண்டில் 3000 (மூவாயிரம்) சொற்களை

எடுத்துக்கொண்டு ஒவ்வொன்றுக்கும் ஒரே பொருள் கூறிச் சென்றுள்ளார். நூலில் மொத்தம் 400 செய்யுட்கள் உள்ளன.

இந்நூலும் எதுகை முறையில் அமைந்திருப்பதால், சொற்களை எதுகை நோக்கி விரைவில் கண்டு பிடித்துவிடலாம்.

## அபிதானத் தனிச் செய்யுள் நிகண்டு

அபிதானம் என்றால் பெயர். பல்பொருட் பெயர்களும் சொல்லப்படுவதால் நிகண்டினை இப்பெயரால் அழைப்பதும் உண்டு. இந்நிகண்டின் ஆசிரியர் கோபாலசாமி நாயக்கர் என்பவர். இவர் கீழ்வேளூர் என்னும் ஊரினர்; வீராசாமி நாயக்கரின் மகன்.

இந்நூல் பல்லினப் பாவகையால் பாடப்பட்டதாகும். இதன் முதல் தொகுதி மட்டும் ஆசிரியர் வாழ்ந்தபோதே கி. பி. 1878-ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டது. எனவே ஆசிரியர் காலம் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பது தெளிவு.

# விரிவு நிகண்டு

இந்நிகண்டு, மிகப் பல சொற்கட்கும் பொருள் கூறும் விரிவான நிகண்டு என்பது 'விரிவு நிகண்டு' என்னும் இதன் பெயராலேயே விளங்கும்.

## ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் நா. அருணாசல நாவலர் என்பவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்து வீரவநல்லூர் என்னும் ஊரினர்; இவர் மகனாகிய பூமிநாத முதலியார் என்பவர் வீரராகவபுரம் என்னும் ஊரில் பெரிய வழக்குரைஞராய் விளங்கியவர். ஆசிரியர் வீரவநல்லூரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பூமிநாதக் கடவுளைத் தெய்வமாகக் கொண்டவர்; அதனால்தான் தம் மகனுக்குப் பூமிநாதன் என்னும் பெயரை இட்டுள்ளார். இதனை, ஆசிரியரே பாடியுள்ள விரிவு நிகண்டின் பாயிரத்திலுள்ள,

" பொன் பொலி வீரை வேணிப்
 பூமி நாதன்றன் தாசன்."

என்னும் பாடற் பகுதியால் அறியலாம்.

## நூல் அமைப்பு

இஃதும் ஒரு சொல் பல் பொருள் தொகுதி என்னும் பிரிவைச் சேர்ந்ததாகும். சூடாமணி நிகண்டின் பதினோராவது தொகுதியை முதல் நூலாகக் கொண்டு சொற்பொருள் விளக்கிச் செல்வதால் இந்நூல் 'பதினோராவது விரிவு நிகண்டு' என்றும் அழைக்கப்

பட்டது. சூடாமணியைக் காட்டிலும் மிக விரிவாகப் பல்வகை வழக்குச் சொற்களும் இதில் இடம் பெற்றுள்ளன; திருநெல்வேலி மாவட்டத்து வழக்குச் சொற்கள் மிக்குள்ளன. விரிவான இந்நிகண்டும் எதுகை முறையில் அமைக்கப்பட்டிருப்பது படிப்போர்க்கு ஓரளவு வசதியே. இச்செய்திகளைப் பாயிரப் பகுதியிலுள்ள,

"பொன்பொலி வீரைவேணிப் பூமிநா தன்றன் தாசன்
முன்புறு நிகண்டோடேனை முதுமொழிப் பொருளனேகம்
இன்புறும் எதுகை யாக இயற்றுமிந் நிகண்டை மேலோர்
அன்பமை கருத்திற் கொள்ள அருள்செய் ஐங்கர மாதேவே."

என்னும் பாடலால் அறியலாம்.

ஒரு சொல் பல் பொருள் தொகுதியைச் சேர்ந்த நிகண்டுகளுக்குள்ளே விரிவு நிகண்டே மிகப் பெரியதாகும். இதில் ஏறக்குறைய 1150 விருத்தப் பாக்கள் உள்ளன. இனி நூலின் மாதிரிக்காக இரண்டு செய்யுட்கள் வருமாறு:—

(ககர எதுகை)

"அகம் இடம் பாம்பு தானியம் புவி பள்ளம் உள்ளோடு
அகலியப் பொதுவே தண்டம் ஆகாயம் ஆழம் ஆன்மா
பகலன் ஏழுருபு துக்கம் பாவம் உள்ளிடம் ஓர்தாரு
தகுதியில் குணம் வீடோடு சாருபத்திரவம் நெஞ்சாம்."

இப்பாடலில் 'அகம்' என்னும் சொல்லுக்குரிய பொருள்கள் தரப்பட்டுள்ளன.

[மகர எதுகை]

"கம்மலே இருமல் ஓர்வகைக் கடுக்கன் காதோலை
பம்மல் மாசோடு மங்கல் குரலடைப்பு என்பர் பாரோர்;
பம்மல் மந்திப்பு மூடல் பொருத்திக் கட்டுகை மந்தாரம்
செம்முதல் ஐம்பேர் என்பர்; சீமாட்டி தலைவி செல்வி."

இப்பாடலில் கம்மல், பம்மல், சீமாட்டி ஆகிய சொற்கட்குப் பொருள்கள் கூறப்பட்டுள்ளன. இந் நிகண்டு, சீமாட்டி என்னும் சொல்லையும் விடாமல் எடுத்துக்கொண்டிருப்பதை நோக்குக.

## ஆரிய நிகண்டு

இந்த நிகண்டைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஆரியமொழி எனும் வடமொழிச் சொற்கள் நிரம்பத் தமிழ் மொழியில் கலந்து விட்டன அல்லவா? அந்தச் சொற்களையெல்லாம் திரட்டி, அவற்றிற்குரிய பொருள் கூறுவதாயிருக்கலாம் இந்த நிகண்டு. அதனாலேயே ஆரிய நிகண்டு என்னும் பெயரும் இது பெற்றிருக்கலாம்.

"நீர்வேலி என்னும் இடத்தைச் சேர்ந்த சங்கர பண்டிதர் என்பார் தாம் இயற்றிய 'சைவப் பிரகாசனம்' என்னும் நூலில், நூற்பா நடையில் ஆரிய நிகண்டு என ஒரு நிகண்டு நூல் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்—"

என்ற செய்தி, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதியில் காணக்கிடக்கிறது.

# சில நிகண்டுகள்

வேதகிரி முதலியார் எழுதிய இலக்கியக் களஞ்சியம் என்னும் நூலில், பொதிய நிகண்டு, ஔவை நிகண்டு என்னும் நிகண்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிகண்டுக்கும் உரியதாக ஒவ்வொரு பாடலும் கொடுக்கப்பட்டுள்ளது. பாடல் வருமாறு :—

## பொதிய நிகண்டு

“ தட்டுநீட் டுக்குறல் தணலினின் றுருகல்
தன்னெடை குறைதலில் லாமை
கொட்டு கடின மின்மை யாணிக்குக்
கூறுமாற் றறிவித்தல் சோதி
விட்டுவிட் டொளிர்தல் மிகுபுடத் திருத்தல்
வெவ்வழல் வென்றியைக் கொள்ளல்
கட்டிசாய்த் திடுகிற் பள்ளங்கொண் டதிக
கனங்கொளல் கனகலக் கணமே.”

இப்பாடலில் பொன்னின் இயல்புகள் கூறப்பட்டுள்ளன. தட்டி நீட்டப்படல், நெருப்பில் உருகுதல், எடை குறையாமை, தட்டுவதற்குக் கடினம் இல்லாமை, உரையாணிக்கு மாற்று அறிவித்தல், விட்டு விட்டுச் சுடர் வீசுதல், புடம் போடப்படல், நெருப்பால் அழியாமை, கனமாயிருத்தல் ஆகியதன்மைகளே உடைமை பொன்னின் இலக்கணமாம். இப்பாடல் படிப்பதற்கு மிகவும் சுவையா யுள்ளது. இப்பொதிய நிகண்டு விருத்தப் பாவகையால் ஆனது.

## ஔவை நிகண்டு

“ ஏலம், தக்கோலம், சூடன்,
இலவங்கம், சாம்பிராணி,
காலஞ்செல் அகில், சந்து, ஓங்கு
கத்தூரி, புழுகு, மௌவல்,
கோலமார் மருக்கொழுந்து, வெட்டி,
குங்குமம், இலாமிச்சம் வேர்,
சாலும் சண்பகம், சவ்வாது,
சாற்றும் சோடச வாசப்பேர்.”

இப்பாடலில் பதினாறு (சோடசம்) வகை வாசனைப் பொருள்கள் கூறப்பட்டுள்ளன. ஔவை என்னும் பெயருடைய யாராலாவது பாடப்பட்டதால் இந் நூலுக்கு ஔவை நிகண்டு என்னும் பெயர் கொடுக்கப் பட்டதோ ?

இப்படியாக நூற்றுக் கணக்கான நிகண்டு நூற்கள் தோன்றி நாளடைவில் மறைந்து விட்டன. சோழவந்தான் சண்முகம் பிள்ளையவர்களும் ஓர் அந்தாதித் தொடை நிகண்டு இயற்றினர். அகராதிகள் பெருகிவிட்ட இக்காலத்தில் நிகண்டுகளை அறிந்தவர் எத்தனை பேர் ?

# மருத்துவ நிகண்டுகள்

இதுவரை பொதுவாக மொழித்துறைக்கு உதவும் நிகண்டுகள் பலவற்றைப் பற்றிப் பார்த்தோம். இவற்றுள்ளும் பல கலைகளுக்குரிய சொற்கள் இடம் பெற்றிருத்தலைக் கண்டோம். இவையேயன்றி, மருத்துவம், வானநூல் (சோதிடம்) முதலிய கலைகளுக்காகத் தனித் தனியே சிறப்பு நிகண்டுகள் பல இருந்தன. அவற்றுள் சில கிடைக்கப்பெற்று இப்போதும் உள்ளன. பதினெண் சித்தர்கள் மருத்துவம் பற்றிப் பதினெட்டு நிகண்டு நூற்கள் பாடியுள்ளனர். எடுத்துக் காட்டாக, அகத்தியர், போகர் ஆகியோர் நிகண்டுகளைப் பற்றிப் பார்ப்போம் :

## அகத்தியர் நிகண்டு

பிற்கால அகத்தியரால் அருளிச் செய்யப்பட்ட இந்நிகண்டுக்கு ஏமதத்துவம், பஞ்ச காவிய நிகண்டு, பஞ்ச காவிய நிகண்டு எண்ணூறு, அகத்தியர் நிகண்டு எண்ணூறு என்ற பெயர்களெல்லாம் வழங்கப்படுகின்றன. விருத்த யாப்பினுல் இயற்றப்பட்ட இந்நூலில், வயித்திய காண்டம், மாந்தரீக காண்டம் என்றெல்லாம் எட்டுக் காண்டங்கள் உள்ளன. ஆயிரத்துக்கு மேலும் பாடல்கள் மிக்குள்ள இந்நிகண்டுக்கு 'அகத்தியர் நிகண்டு எண்ணூறு' என எண்ணின் மேல் ஒரு பெயர் உள்ளதின் பொருத்தம் புலப்படவில்லை.

ஆசிரியர் ஒவ்வொரு காண்டத்தின் தொடக்கத்திலும் கடவுளை வணங்கிக் காண்டத்தின் விவரமும்

கூறியுள்ளார். 'புலத்தியனே கேள்' என்று அடிக்கடிப் புலத்திய முனிவனை விளித்துக் கூறுவதுபோல் நூல் அமைந்துள்ளது. பல சித்தர்களைப் பற்றியும், பல நிகண்டு நூற்களைப் பற்றியும், பல்வகைப் பொருள்களைப் பற்றியும் நூற்றுக் கணக்கில் — ஆயிரக்கணக்கில் — நூறாயிரக் (இலட்சக்) கணக்கில் எண்ணிக்கையிட்டு, 'படி மரக்கால் போட்டு' அள அள என்று அளந்துகொண்டு போயிருக்கிறார் அகத்தியர் இந்நூலில்! அந்த இடங்களையெல்லாம் படிக்கும்போது, ஏதோ 'மாயா சாலக் கண்கட்டி வித்தை' போல் தலை சுற்றுகிறது.

இந்நிகண்டு குறித்து விரிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், நன்கு ஆய்ந்து ஒரு தனி நூலே எழுத வேண்டும். எனவே, நூலின் மாதிரிக்காக இரண்டு பாடல்களை மட்டும் பார்ப்போம் :—

### மூளையின் பெயர்

"முடியான அகாரமதின் முதற்கரு தானாகும்
மூலவெளி சச்சிதா நந்தவெளி யாகும்
அடியான படியாகும் பரவெளியு மாகும்
அந்தமெனும் ஞானவழி ஆகாய வெளிதான்
குடியான மூலவெளி கைலைவெளி யாகும்
குருவிருப்பா ரண்டமெனும் அகண்ட மெனும்பெயர்
செடியான பேரண்ட பேரொளி யென்றும் பெயர்
செப்பினேம் இந்தபடி சிரசதுவின் பெயரே."

முதல் காண்டத்திலுள்ள இப்பாடலில், மூளையைக் குறிக்கும் பல பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இன்னும் அடுத்தடுத்த பாடல்களில் மூளை பற்றியும் மூளைக்குள் இருப்பவை பற்றியும் கூறப்பட்டுள்ளன. இவையென்ன

உடற்கூறு? அறிவியலா? யோகமா? எல்லாமுமா? இக்காலத்தில் மிகப் பலர்க்கு எட்டாத செய்திகள் இவை அன்றோ?

### சுக்கின் பெயர்கள்

"மகத்தான வருக்க மென்றும் நாகராதி யென்றும்
மடவான வீயமென்றும் அதற்குப் பேரு
அகத்தான வகநாதம் என்றும் பேரு
அருளினேம் வலதம் என்றும் அதற்குப் பேரு
வகத்தான வேர்க்கொம்பு வென்றும் பேரு
வசனித்தோ மஞ்சத்த மென்றும் பேரு
நகத்தான நாக்குமம் என்றும் பேரு
நளினமதாய்ச் சொல்லிவிட்டோம் சுக்கின் பேரே."

ஐந்தாங் காண்டத்தில் உள்ள இப்பாடலில் சுக்கினைக் குறிக்கும் பல பெயர்களைக் காணலாம். மேலும் அறியவேண்டிய செய்திகள் எத்தனையோ இங்கிகண்டில் உள்ளன. ஏழாங்காண்டத்தில் பல்வகை யோகங்கள் தொடர்பான செய்திகள் கூறப்பட்டிருப்பது மிகவும் குறிப்பிடத் தக்கது. மற்றும், இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ள 'மதப்பூ லேகியம்' என்னும் மருந்து செய்யும் முறையும் அறியத் தக்கது.

# போகர் நிகண்டு

போகர் ஒரு சித்தர். மற்ற மக்களால் செய்ய முடியாத வியத்தக்க அருஞ்செயல்கள் புரிபவரைச் சித்தர் எனல் மரபு. போகரும் அருஞ் செயல்கள் பல புரிந்ததாகப் புராணக் கதைகள் பல உண்டு. இவர் அகத்தியரின் மாணுக்கர் என்பர் சிலர். காலாங்கிநாதர் என்பவரின் மாணுக்கர் இவர் என இவரே இயற்றிய 'போகர் ஏழாயிரம்' என்னும் நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொங்கணர், கருவூர்த் தேவர், சுந்தராநந்தர், மச்சமுனி, நந்தீசர், இடைக்காடர், கமலமுனி, சட்டைமுனி முதலிய சித்தர் பெருமக்கள் போகரின் மாணுக்கர்கள் என்று சிலர் கூறுகின்றனர். ஆனுல், இந்நிகண்டின் இறுதியில், மேல் குறிப்பிடப்பட் டிருப்பவர்கட் கெல்லாம் போகர் வணக்கம் சொல்லியுள்ளார். உண்மை எதுவோ......?

விருத்தப்பா யாப்பினுலான போகர் நிகண்டு, 'போகர் நிகண்டு ஆயிரத் திருநூறு' என்று பாடல்களின் எண்ணிக்கையையும் சேர்த்துப் பெயர் அழைக்கப்படுவ துண்டு. இதில் 1200 பாடல்கள் உள்ளன. இந்நூலே யன்றி, போகர் ஏழாயிரம், நிகண்டு பதினேழாயிரம் சூத்திரங்கள், எழுநூறு யோகம் என்னும் நூல்களும் போகர் இயற்றியுள்ளார். 'நிகண்டு பதினேழாயிரம் சூத்திரங்கள்' என்னும் பெயரிலிருந்து, 17000 நூற்பாக்கள் கொண்ட ஒரு பரந்த நிகண்டு போகரால் இயற்றப்பட்டுள்ளது என்று அறியும்போது பெருவியப்பு தோன்றுகிறது. இனி, இங்கே சொல்ல

எடுத்துக் கொண்ட 'போகர் நிகண்டு ஆயிரத்திரு நூறு' என்னும் நூலுக்குள் செல்லலாம் :—

போகர் சிவனையும் உமையையும் பிள்ளையாரையும் கலைமகளையும் சித்தர்களையும் முனிவர்களையும் காப்பாக வணங்கிப் பின்னர் நூலைத் தொடங்குகிறார் : அக்காப்பு வருமாறு :—

" அகண்ட பரிபூரணமாம் ஐயர் பாதம் போற்றி
அடுத்து நின்ற உமையவள்தாய் பாதம் போற்றி
நிகண்டெனவே திருமூலர் நாயர் பாதம் போற்றி
நீங்காமல் காலாங்கி ஐயர் பாதம் போற்றி
புகழ்ந்து நின்ற நாதாக்கள் ரிஷிகள் பாதம் போற்றி
புகழான வாக்குடைய வாணி பாதம் போற்றி
முகந்துநின்ற குஞ்சரத்தின் பதத்தைப் போற்றி
மூவுலகும் மெச்சுதற்கு நிகண்டு கேளே."

இப்பாடலில், தெய்வங்களுடன் திருமூலர், காலாங்கிநாதர் முதலிய சித்தர்களும் ஒருசேர வைத்து மதிக்கப்பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது.

இந்நிகண்டில் உடற்கூறு – மருத்துவம் தொடர்பான பல்வகைப் பொருட்கட்குரிய பெயர்கள் விவரமாகக் கூறப்பட்டுள்ளன. மாதிரிக்காகக் கல்நாரின் பெயர்களைக் கூறும் பாடல் வருமாறு :—

" கல்நாரின் பெயர்தனையே கருதக் கேளு
கல்லுக்குட் சவளையாங் கடிய சீலை நாரு
அல்நாரு வில்லுக்குள் சிலாவிந்து வாகு
மாற்றிகம் பூங்கல்லின் கார மாகும்
செல்நாரு சிலையின்ரவி கல்லு மாகும்
சிறுநாரு கல்லதுதான் சிவப்பு மாகும்
முல்நாரு சத்துமாம் சுண்ண மாகு
முக்கிரமாங் கல்நாரின் பெயருந் தானே."

போகர் நிகண்டில் சித்தர்களின் வயது சொல்லப் பட்டிருப்பது மிகவும் வியப்பூட்டுகிறது. சித்தர்களின் வாழ்நாளின் குறைந்த எல்லே 120 ஆண்டுகளாம்; உயர்ந்த எல்லே 700 ஆண்டுகளாம்: அவர்தம் சராசரி வயது 500 ஆண்டுகளாம். இவ்வளவு ஆண்டுகள் வாழ்ந்த சித்தர் இனம் இப்போது எங்கே போயிற்ருே தெரியவில்லே.

மேலும் இந்நிகண்டில், வெடியுப்பு திராவகம் செய்யும் முறையும், தங்கத்தில் இரசம் எடுக்கும் முறையும் இன்னும் பல முறைகளும் பல பாடல்களில் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்தத் துறையில் ஆராய்ச்சி செய்பவர்கட்கு இக்குறிப்புக்கள் பெரிதும் உதவும். கடைகளில் விற்கக் கூடிய அறுபத்து நான்கு நாட்டு மருந்துச் சரக்குகளின் பெயர்கள் இந்நூலில் அழகாகக் கூறப்பட்டுள்ளன.

இந்நிகண்டு கிடைத்தற்கு அரியதென்றும், இதிலே அரும்பெரும் பொருள்கள் பல அறிவிக்கப்பட்டுள்ளன என்றும், இஃது ஆயிரத் திருநூறு பாடல்கள் கொண்டதென்றும் நூலின் இறுதிப்பாடலில் ஆசிரியர் கூறியுள்ளார்.
அப்பாடல் வருமாறு:—

"கிட்டாது இந்நூல்தான் எவர்க்குக் கிட்டும்
கிருபையுடன் சிவயோகி முனிவர்க்குக் கிட்டும்
எட்டாத பொருள்க ளெல்லாம் இதிலே தோயும்
என்மக்காள் சித்தர்களே முனிவர்க் கென்றும்
அட்டாத ஆயிரத் திருநூருக
அறைந்திட்டேன் நிகண்டெனவே பெயர் வகுத்தேன்
திட்டாமல் எந்தனே நீர் எப்போதுந்தான்
திறமுடனே துதிக்கு நூல் இது முற்றே."

இந்தப் போகர் நிகண்டைப் போல இன்னும் பல மருத்துவ நிகண்டுகள் தமிழ் மொழியில் நூற்றுக் கணக்கில் தோன்றியும், போற்றுவா ரின்மையால் மறைந்தே போயின.

இனி வானநூல் பற்றிய நிகண்டுகள் பார்ப் போம்.

# வானநூல் நிகண்டு

கணிநூல் அல்லது வானநூல் எனப்படும் வானியற் கலை (சோதிடக் கலை) பற்றிய நிகண்டுகள் பல தமிழில் இருந்தன. பெரும்பாலானவை மறைந்து போயின. இத்துறை நிகண்டின் மாதிரிக்காக, சாதக சிந்தாமணி என்னும் கணிநூல் இயற்றிய 'தில்லை நாயகர்' என்னும் கணிப்புலவரின் படைப்பாகிய 'கால நிகண்டு', 'காரக நிகண்டு' ஆகியன குறித்துச் சிறிது காண்பாம்:—

## கால நிகண்டு

இதில், கிழமை, திதி, நாள் (நட்சத்திரம்), யோகம் கரணம், இராசி, கோள் முதலிய காலத் தொடர்புடைய பொருட்கள் பேசப்பட்டுள்ளன. ஒவ்வொன்றையும் குறிக்க எத்தனை பெயர்கள் உண்டோ அத்தனையும் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே இந்நிகண்டினை, 'ஒரு பொருள் பல் பெயர்த் தொகுதி' என்னும் குறியினதாகக் கொள்ளலாம். இந்நிகண்டின் மாதிரிக்கிகாக, அசுவினி, பரணி, கார்த்திகை என்னும் நாட்கட், (நட்சத்திரங்கட்கு) உரிய பெயர்களைக் குறிக்கும் பாடல் வருமாறு:—

(அசுவினி—பரணி—கார்த்திகை)

"பரிமருத் துவனாள் யாழேறு செந்நி
பகர்வாசியைப் பசி யிரலை
பரிவுறு முதனாள் அசுபதி யாகும்
பகலவன் ருழிமுக் கூட்டும்
சரியுறு கிழவன் பூதஞ் சோறடுப்புத்
தருமநாள் பரணியே யென்பர்

எரி பிறந்திடு நாள் நாவிதன் அங்கி
இருல் அளக்கு என்பர் கார்த்திகையே."

அடுத்து ஞாயிற்றின் (சூரியனுடைய) பெயர்களைக் குறிக்கும் பாடல்கள் வருமாறு:—

" பருதி ஆதித்தன் இமகரன் பதங்கன்
பனிப்பகை விண்மணி என்றாழ்
அருணன் மார்த்தாண்டன் பாற்கரன் கதிரோன்
ஆயிரங் கதிரி நன்றபநன்
இருள்வலி சண்டன் சூரியன் மித்திரன்
எல்லை அம்போருக நண்பன்
தருமொழி வேந்தன் சூரனே கவிதாத்
தரணிபன் சுடரவன் என்பார் ; "

" அனலியே பகலோன் வெய்யவன் பாநுமரி
அண்டயோநி ஏழ் பரியோன்
கனலியே சான்ருேன் விலோசநன் மாவே
காலத்தை யளந்திட்டோன் இரவி
இனவிரிச்சிகனே திவாகரன் ஒற்றை
யாழியன் அருணனே டுதயன்
தினகரன் அருக்கன் ஞாயிறு பதங்கன்
செப்பிய கிரண மாலியனே."

இவ்வாறு கால நிகண்டில் ஒவ்வொரு காலப் பொருட்கும் உரிய பல பெயர்களும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

## காரக நிகண்டு

காரகம் என்ருல், வினைமுதல்—செயல்தலைமை—செயல் உரிமை (காரகன்=செய்வோன்—இயற்று வோன்) என்று இவ்விடத்திற்குப் பொருள் பண்ணிக் கொள்ளலாம். இங்நிகண்டில் மேடம், இடபம், மிதுநம் முதலியவற்றின் உருவங்களும், காரகங்களும்,

பலவற்றின் பலன்களும், மற்றும் பல செய்திகளும் கூறப்பட்டுள்ளன. இங்நிகண்டின் மாதிரிக்காக, மேடத்தின் உருவமும் காரகமும் சொல்லப்பட்டுள்ள முதல் பாடல் வருமாறு :—

“ மேடந்தான் மேடரூப மேயாகும்
மேவிடம் காடு நாற்காலாம்
நீடிய தாதுவாகும் கீழ்த்திசையாம்
நிறம் சிவப்பரசன் சாதியதாம்
தேடிய ஆண்பால் நிலமகன் வீடாம்
திநகரன் தனக்கு உச்சமாகும்
வீடிய சநிக்கு நீசமாம் இரவில்
விழித்திடும் இராசியும் என்பார்.”

ஆட்டின் உருவமுடைய மேட ஓரையைப் (இராசியைப்) பற்றிய செய்திகள் இப்பாடலில் இடம் பெற்றுள்ளன.

தில்லை நாயகர் இயற்றிய இந்தக் கணி நூல் நிகண்டுகட்கு முன்னும் பின்னும் எத்தனையோ கணி நிகண்டுகள் தோன்றின. பெரும்பாலானவற்றை நாம் இழந்துவிட்டோம்.

அரும்பெருங் கலைச் செல்வங்கள் தோன்றி மறைய இனியும் இடந்தராமல் தமிழ் மக்கள் விழிப்பெய்து வாராக!

# நான்காம் பாகம்

# தமிழ் அகராதிகள்

## அகராதிகள்

நிகண்டு நூற்களைப்போல் செய்யுள் வடிவில் இல்லாமல், தனித் தனிச் சொற்களை ஒன்றன் பின் ஒன்ருக அகர வரிசையில் நிறுத்திப் பொருள் கூறிச் செல்லும் நூல் அகராதி எனப்படும். இத்தகைய தமிழ் அகராதி நூற்கள் பதினேழாம் நூற்ருண்டிலேயே தோன்றத் தொடங்கி விட்டன. பதினேழாம் நூற்ருண்டில் தோன்றிய இந்த அகராதிக் குழந்தை, பதினெட்டாம் — பத்தொன்பதாம் நூற்ருண்டுகளில் முன்னிளமைப் பருவத்தையும் பின்னிளமைப் பருவத்தையும் கடந்து இவ்விருபதாம் நூற்ருண்டில் குமரப் பருவத்தை எட்டியுள்ளது. இன்னும் அடையவேண்டிய வளர்ச்சிகள் — பெறவேண்டிய நிறைவுகள் எவ்வளவோ உள்ளன.

பதினேழாம் நூற்ருண்டில் தமிழுக்குத் தமிழ் அகராதிகளும் (அதாவது, தமிழ்ச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லாலேயே பொருள் கூறும் அகராதிகளும்)

தமிழுக்குப் போர்ச்சுகீசிய அகராதியும் தோன்றின. 18, 19, 20-ஆம் நூற்றுண்டுகளிலோ, இவற்றுடன், போர்ச்சுகீசியத்திற்குத் தமிழ் அகராதியும் (போர்ச்சு கீசியச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் கொடுத் தல்), இவ்வாறே, தமிழ் — இலத்தீன் அகராதிகளும், இலத்தீன் — தமிழ் அகராதியும், தமிழ் — பிரெஞ்சு அகராதிகளும், பிரெஞ்சு — தமிழ் அகராதியும், தமிழ் — ஆங்கில அகராதிகளும், ஆங்கில — தமிழ் அகராதி களும், வடமொழி — தமிழ் அகராதியும், இந்தி —தமிழ் அகராதியும், ஆங்கிலம் — இந்தி - மராத்தி - தெலுங்கு — தமிழ் அகராதியும் மற்றும் பலவகை அகராதிகளும் தோன்றின.

இந்த நூற்றுண்டுகளில், போர்ச்சுகீசியர், பிரெஞ் சுக்காரர், ஆங்கிலேயர் முதலிய ஐரோப்பியர்களின் ஆட்சியும் செல்வாக்கும் நம் நாட்டில் நிலவியதால் அவர்தம் மொழிகளோடு பிணைந்த தமிழகராதிகள் பல தோன்றின. இருபதாம் நூற்றுண்டில் ஐரோப் பியர்களின் செல்வாக்கு மங்கியதால், அத்தகைய அகராதிகள் புதியனவாகத் தோன்ற இடமில்லாது போயிற்று; அந்தப் பழைய அகராதிகளும் மறுபதிப் புக்கள் பெறவில்லை. ஆனல், ஆங்கில மொழி மட்டும் இன்னும் நம் நாட்டில் நடமாடுவதால், ஆங்கிலத் தோடு தமிழ் பிணைந்த அகராதிகள் மட்டும் புதிது புதிதாகத் தோன்றுகின்றன; பழைய அகராதிகள் சிலவும் புதுப் புதுப் பதிப்புக்கள் பெற்று வருகின்றன. அது போலவே, பிரெஞ்சு மொழி நடமாடும் புதுச்சேரி யில், பிரெஞ்சோடு தமிழ் பிணைந்த பழைய அகராதிகள், புதுவை மாதாகோயில் அச்சகத்தில் புதுப் பதிப்புக்கள் பெற்று வருகின்றன.

மற்றும், நீண்டநாளாக நம் நாட்டில் நிலவுகிற வடமொழியோடு தமிழ் பிணைந்த அகராதியும், பின் வந்த இந்தி மொழியோடு தமிழ் பிணைந்த அகராதியும் தோன்றியிருப்பதிலும் வியப்பொன்றுமில்லை.

இனி நூற்றாண்டு வாரியாக அகராதிகளைப் பற்றி ஆய்வாம் :

# பதினேழாம் நூற்ருண்டு அகராதிகள்

## அகராதி மோனேக்கு அகராதி எதுகை

முதல் எழுத்து ஒன்றியிருப்பது மோனே என்பதும் இரண்டாம் எழுத்து ஒன்றியிருப்பது எதுகைஎன்பதும் முன்பே அறிவிக்கப்பட்டுள்ளன. எனவே, 'அகராதி மோனேக்கு அகராதி எதுகை' என்பது, சொற்களின் முதல் எழுத்தை ஒட்டிமட்டும் அகரவரிசைப் படுத்து வதை நிறுத்திக் கொள்ளாமல், இரண்டாம் எழுத்தை ஒட்டியும் சொற்களே அகரவரிசைப் படுத்திப் பொருள் கூறும் நூல் இது என்று அறியலாம். இவ்வகராதியில், சொற்பொருள் விளக்கம் செய்யுளா யில்லாவிடினும் கிட்டத்தட்ட நிகண்டு நடையில் உள்ளது.

இந்த அகராதியின் ஆசிரியர் பற்றியோ, காலம் பற்றியோ உறுதியாக ஒன்றும் தெரியவில்லே. இது பதினேழாம் நூற்ருண்டின் இறுதியில் தோன்றி யிருக்கலாம் என உய்த்துணரப்படுகிறது.

இச் சிறுநூலில் ஏறக்குறைய 7500 சொற்கள் பொருள் விளக்கம் செய்யப்பெற்றுள்ளன. எளிய சொற்கள் பல இதில் காணப்படவில்லே. 'அகல்வுற்று' என்பது போன்ற எச்சச் சொற்களும், 'செய்பொழில்' என்பது போன்ற தொடர்களும், 'காண்போதல் உற்ருர்' என்பது போன்ற வாக்கிய உருவங்களும் இதில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கதாம்.

## பத்துச் சொல் அகராதி

இந்த அகராதியில், திவாகரம், சூடாமணி முதலிய நிகண்டுகளில் உள்ள சொற்கள் அகரவரிசைப் படுத்தப்பட்டுப் பொருள் கூறப்பட்டுள்ளன. இது பத்துத் தொகுதிகளை யுடையது. முதல் தொகுதியில் ஒரே எழுத்தாக உள்ள சொற்களும், இரண்டாந் தொகுதியில் இரண்டு எழுத்துக்களா லான சொற்களும்...... இப்படியே...பத்தாந்தொகுதியில் பத்து எழுத்துக்களா லான சொற்களும் இடம் பெற்றுள்ளன. ஒரு சொல்லுக்குப் பொருள் அறியவேண்டுமாயின், அச்சொல்லில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன என்று எண்ணிப் பார்த்து, அத்தனையாவது தொகுதியில் சென்று அகர வரிசைப்படி தேடினுல் மிக எளிதில் அச்சொல்லையும் பொருளையும் கண்டுபிடித்து விடலாம். ஆனுல், பத்துக்கு மேற்பட்ட எழுத்துக்களையுடைய சொல் லுருவங்கள் இந்த அகராதியில் இல்லை.

## வைணவ விளக்கவுரை அருஞ்சொல் அகராதி

திருவாய் மொழி போன்ற வைணவத் திவ்யப் பிரபந்தங்கட்கு மணிப் பிரவாள (தமிழ்ச் சொல்லும் வட சொல்லும் கலந்த) நடையில் விரிவான விளக்கவுரை எழுதப்பட்டிருப்பது பலரும் அறிந்த செய்தி. அவ்வுரையில் உள்ள அருஞ்சொற்கள் அகரவரிசைப் படுத்தப்பட்டுப் பொருள் கூறப்பட்டுள்ள நூல்தான் இந்த அகராதி. பதின்மூன்று — பதினுன்காம் நூற்ருண்டுகளில் பேச்சு வழக்கில் இருந்த சொற்கள் பல வற்றை இதில் காணலாம்.

இவ்வகராதியே யன்றி, சம்பிரதாய அகராதி என ஒன்றும் உள்ளது. வைணவச் சார்புடைய இந்தச் சம்பிரதாய அகராதி இருபதாம் நூற்றுண்டில் அச்சிடப்பட்டாலும், தோன்றிய காலம் திட்டமாகத் தெரியவில்லே.

## தமிழ் — போர்ச்சுகீசிய அகராதி

பதினேழாம் நூற்றுண்டில் நம் நாட்டில் கிறித்துவ மதத்தைப் பரப்புவதற்காக ஐரோப்பாவிலிருந்து கிறித்துவத் துறவியர் பலர் வந்திருந்தனர். அவர்கள் இலத்தீன், போர்ச்சுகீசியம், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழிகளே அறிந்தவர்கள். தம் மதத்தைத் தமிழ் மக்களிடையே பரப்பவேண்டுமாயின் அவர்கள் தமிழ் மொழியில் பேசினுல்தான் மக்களேக் கவர முடியும். அதற்காகத் தமிழ் கற்ருர்கள்; தமிழ்ச் சொற்களே ஆராய்ந்தார்கள்; சொற்பொருள் களஞ்சியமான அகராதிகளும் ஒரு மொழிக்கு ஒரு மொழியில் படைத்தார்கள். இவ்விதமாக ஐரோப்பிய மொழிகளோடு தமிழ் பிணைந்த அகராதிகள் பல தோன்றின. தமிழ் மக்கள் ஐரோப்பிய மொழிகளே அறிந்து கொள்ளவும், புதிதாக வரும் ஐரோப்பியர்கள் தமிழ் மொழியை அறிந்து கொள்ளவும் இவ்வகராதிகள் பெருந்துணே புரிந்தன. இவற்றுள் காலத்தால் முந்தியது தமிழ் – போர்ச்சுகீசிய அகராதியாகும்.

தமிழ் – போர்ச்சுகீசிய அகராதி என்பது, தமிழ்ச் சொற்களே அகர வரிசையில் முதலில் நிறுத்தி, அவற்றிற்கு நேரான போர்ச்சுகீசியச் சொற்களே எதிர்ப் பக்கத்தில் கொடுத்திருக்கும் அகராதியாகும். இதன்

ஆசிரியர் 'ஆந்தம் தெ ப்ரோயன்சா' (Fr. Antem dé Proenca) என்னும் மேலைப் புலத்துறவியார். இது தோன்றிய காலம் கி. பி. 1679 ஆகும். மலையாளத்தி லுள்ள அம்பலக்காடு என்னும் இடத்தில் இது பதிப் பிக்கப்பட்டது. பதினேழாம் நூற்ருண்டில் ஏறக் குறையத் தமிழ் மொழியும் மலையாள மொழியும் ஒன்றே யாதலின், மேலைப் புலத் துறவியார் இவ்வக ராதியை மலையாளப் பகுதியில் உருவாக்கியதில் வியப் பொன்றுமில்லை.

இஃதொன்று தவிர, ஐரோப்பிய மொழிகளேடு தமிழ் பிணைந்த மற்ற அகராதிகள் பதினெட்டாம் நூற்ருண்டிலும் பத்தொன்பதாம் நூற்ருண்டிலும் தோன்றின.

# பதினெட்டாம் நூற்றாண்டு அகராதிகள்

## திக்சியனரியம் தமுலிசம்

'திக்சியனரியம் தமுலிசம்' Dictionarium Tamulicum) என்னும் இந்தத் தமிழ் அகராதியை, பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய முதல் அகராதியாகக் கொள்ளலாம். இதன் ஆசிரியர் 'பர்தோல்மாஸ் சியஜன்பல்க்' (Bartholmaeus ziegenbalg) என்னும் வெள்ளேயர். எழுதப்பட்ட காலம் கி. பி. 1712 ஆகும். இவ்வகராதி ஒன்றும் பரவியதாகத் தெரியவில்லை.

## சதுர் அகராதி

### ஆசிரியர் வரலாறு

சதுர் அகராதியின் ஆசிரியர் 'பெஸ்கி' Father) Beschi) என்னும் மேலைப்புலக் கிறித்துவத் துறவியார். இவர் கிறித்துவ மதம் பரப்ப இத்தாலி நாட்டிலிருந்து தமிழ் நாடு போந்து கி. பி. 1710–ஆம் ஆண்டிலிருந்து 1747-வரை வாழ்ந்தார்.

இவர் தமிழ் மக்களின் உள்ளங் கவர்வதற்காகக் காவி யுடுத்துக் கால் குறடு அணிந்து புலாலும் நீத்தார்; தைரியநாதசுவாமி எனவும் வீரமா முனிவர் எனவும் அழைக்கப்பட்டார்.

இலத்தீன், போர்ச்சுகீசியம் முதலிய ஐரோப்பிய மொழிகளை நன்கறிந்த வீரமாமுனிவர் தமிழ் மொழி

யினையும் நன்கு கற்று, 'சதுர் அகராதி' முதலிய பல அகராதிகள் இயற்றினர்; அகராதிகளேயன்றி, கொடுந் தமிழ், தேம் பாவணி, வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், வாமன் கதை முதலிய நூல்களும் இயற்றினர். திருக்குறளின் அறத்துப் பாலையும் பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் பெயர்த்தார். இவருடைய படைப்புக்களுள் மிக்க பயனுள்ளது 'சதுர் அகராதி'யாகும். இஃது எழுதப்பட்ட காலம் கி. பி. 1732 ஆகும்.

## நூல் அமைப்பு

இக்காலத்தில் காணப்படும் தமிழ் அகராதிகட்கெல்லாம் முன் மாதிரியாக உள்ளது சதுர் அகராதியே. முதல் எழுத்து அல்லது இரண்டாம் எழுத்தோடு நின்று விடாமல் சொற்கள் கடைசி எழுத்து வரைக்கும் அகரவரிசைப் படுத்தப்பட்டு, தமிழுக்கு நேரே தமிழ்ச் சொல்லிலேயே பொருள்கூறும் முதல் அகதிரா இதுவே! அதனல், இதனை யியற்றிய வீரமாமுனிவர் 'தமிழகராதியின் தந்தை' எனச் சிறப்பிக்கப் பெற்றுர். இந்நூல் தமிழ் என்னும் பெருங்கடலைக் கடக்க உதவும் ஒரு மரக்கலமாகத் திகழ்கிறது என இதன் பாயிரத்தில் கூறப்பட்டுள்ளது.

சதுர் என்ருல் நான்கு என்று பொருள். இவ்வகராதி பெயரகராதி, பொருள் அகராதி, தொகையகராதி, தொடையகராதி என்னும் நான்கு பிரிவுகள் உடையதாதலின் 'சதுர் அகராதி' என்னும் பெயர் பெற்றது. பெயர் அகராதி என்னும் பிரிவில், ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய பலப்பல பொருள்கள் (அர்த்தங்கள்) கூறப்பட்டுள்ளன. இதில் 12000 சொற்கட்குமேல் இடம் பெற்றுள்ளன. பொருளகராதியில், சிவன், திருமால், நிலம் போன்ற ஒவ்வொரு பொருளுக்கும் உரிய

பலப்பல பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தொகை யகராதியில் இருசுடர், முக்குணம் என்பன போலத் தொகைப் பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன. தொடை யகராதியில், அகம் – இகம் - உகம் என்பன போலவும், ஊற்றம் – ஏற்றம் - கூற்றம் என்பன போலவும், முதல் எழுத்து தவிர மற்ற எழுத்துக்கள் எல்லாம் ஒத்து வந்து, செய்யுட்கு உதவக்கூடிய எதுகைத் தொடைச் சொற்கள் (Rhyming words) அகரவரிசையில் பொருள் விளக்கப்பட்டுள்ளன.

நான்கனுள் பெயரகராதியும் தொடையகராதியும், திவாகரம், சூடாமணி ஆகிய நிகண்டுகளிலுள்ள பதினோராந்தொகுதி போன்றனவாகும் — அதாவது — 'ஒரு சொல் பல்பொருட் பெயர்த் தொகுதி' என்னும் இரண்டாம் பெரும் பிரிவைச் சேர்ந்தனவாம். பொரு ளகராதியோ, அந்நிகண்டுகளிலுள்ள முதல் பத்துத் தொகுதிகளைப் போன்றதாகும் — அதாவது — ' ஒரு பொருள் பல் பெயர்த் தொகுதி' என்னும் முதல் பெரும் பிரிவைச் சார்ந்ததாகும். தொகையகராதியோ, அந் நிகண்டுகளின் பன்னிரண்டாந் தொகுதியைப் போன்ற தாகும் — அதாவது — 'பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி' என்னும் மூன்றும் பெரும் பிரிவைச் சேர்ந்ததாகும். பிற்காலத்தில் எழுந்த சில அகராதி களும் நான்கு கூறுகளாகப் பகுக்கப்பட்டமைக்குச் சதுரகராதியின் இந்த நான்கு கூறுகளுமே முன் மாதிரியாகும். இதைக்கொண்டு இவ்வகராதியின் சிறப்பினை யுணரலாம்.

## பதிப்புக்கள்

சதுரகராதி பதினெட்டாம் நூற்றுண்டில் (1732) எழுதப்பட்டாலும் பத்தொன்பதாம் நூற்றுண்டில்தான்

அச்சிடப்பட்டது. இதன் இரண்டாம் தொகுதி யாகிய பொருளகராதிமட்டும் திருச்சிற்றம்பல ஐயர் என்னும் அறிஞரின் உதவியுடன் 'எல்லிஸ்' (Ellis) என்னும் வெள்ளையரால் 1819–ஆம் ஆண்டில் பதிப் பிக்கப்பட்டது. பின்னர் நான்கு தொகுதிகளும் கொண்ட நூல் முழுவதுமே, 'ரிச்சர்டு கிளர்க்' (Richard Clarke) என்பவரின் ஆணைப்படி, தாண்டவராய முதலி யார், இராமச்சந்திரக் கவிராயர் ஆகியோரின் மேற் பார்வையில் 1842-ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு 1835–ஆம் ஆண்டில் 'ரெவரன்ட் ஜே. ஸ்மித்' (Rev.J.Smith) என்பவரால் வெளியிடப்பட்டது. பின் வந்த பதிப்பாசிரியர்கள் வீரமாமுனிவர் அமைத்த சொற்களுக்குமேலும் சில சொற்களைப் புதியனவாகச் சேர்த்துக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. மற்றும், ஆசிரியரால் ஒரு சொல் லுக்கு உரிய பொருள்களாகக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் பதிப்பாசிரியர்கள் அகரவரிசைப்படுத்தி யிருப்பதாகத் தெரிகிறது.

இந்த அகராதியின் மாதிரிக்காக, தாரம், ஊர்தி என்னும் இரு சொற்கட்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பொருள்கள் வருமாறு :—

**தாரம் = அரும்பண்டம், நாக்கு, மனைவி, உச்சவிசை, பொன், மூக்காற் பாடு மிசை, யாழ் நரம்பிலொன்று, விண் மீன், வெள்ளி, வெண்கலம், நல்ல பணியாரம், வில், ஓசை, கண்.**

**ஊர்தி = எருது, குதிரை, சிவிகை, தேர் யானை, பண்டி முதலிய வாகனங்கள், வினைமுற்று.**

## பாடல்கள்

செய்யுளால் நிகண்டு இயற்றிய பழைய ஆசிரியர் களின் மரபை யொட்டி, வீரமா முனிவரும், செய்யுள் நடையில் இல்லாத தமது சதுரகராதியின் தொடக்கத் தில் செய்யுளாலேயே சிறப்புப்பாயிரம் இயற்றியுள் ளார்; மற்றும், சதுரகராதியின் ஒவ்வொரு தொகுதி யையும் தொடங்குவதற்கு முன்பும், கடவுள் வணக்க மும் தொகுதி விவரமும் அறிவிக்கும் செய்யுள் பாடி யமைத்துள்ளார். நூலின் இறுதியிலும் முடிவுரைப் பாடலொன்று பாடியுள்ளார். 'இத்தாலி நாட்டு 'பெஸ்கி' தமிழ்ப் புலவராகவே மாறிவிட்டதை நோக் கின் வியப்பேற்படுகிறது. இனி முறையே அந்தப் பாடல்கள் வருமாறு :—

### சிறப்புப் பாயிரம்

" மூவுல கனைத்து முயன் றடி யேத்த
யாவுல கனைத்து மேந்தியாள் கடவுளைப்
பணிந்துநான் சூடிய பதமல ருலகெலா
மணிந்து வாழ்த்த வருந்தமி ழைம்பொருண்
முன்னூ றெளிந்து முன்னர்த் தந்த
தொன்னூல் விளக்கந் துதித்துக் கொண்டனர்
நூற்பதக் கருவியா நூங்கென வேண்டு
நாற்பத விளக்கமு நவில்கென வேண்ட
யாப்புற மறைவுறு மென்றுணர்ந் தொளிபெறப்
பாப்புறத் தவைதனிப் பகர்ந்தக ராதியா
வவ்வப் பெயர்ப்பொரு ளவ்வவ் பொருட்பெயர்
காட்டிய பின்னர் மீட்டியை வழக்கொடு
தொகைவரும் பலபொருள் வகைவர விளக்கியு
முதல்வரு மெழுத்தொழி முழுதெலா மொன்றி
நுதல்வரும் பதமொரு நுண்டொடை யாக்கியும்
பெயர்பொரு டொகை தொடை பிரித்த நான்முகத்

துயர்பொரு டொடர்பத முரைத்துநூல் வழங்க
மதுர வனுதி வளந்தரச்
சதுரக ராதி சாற்றுது மன்றே."

இப்பாடலின் கருத்தாவது :—சொற்கட்குப் பொருள் விளக்கம் தரும்படிச் சிலர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, பெயர் அகராதி, பொருள் அகராதி, தொகையகராதி, தொடையகராதி என்னும் நால் வகைத் தொகுதிகளுடன் சதுர் அகராதி எனப் பெயரிட்டு நான் இந்நூலை இயற்றுகிறேன்—என்பதாகும்.

### பெயரகராதி — காப்பு

" நம்முத லவனடி யிறைஞ்சி நாவலர்
தம்முதன் மொழிப்பயன் றாப் பதார்த்தமீங்
கம்முத லெழுத்தணி யணவித் தந்திடு
மிம்முதற் பெயரக ராதி யென்பவே."

இறைவனை வணங்கி, முதலாவதான பெயரகராதியைத் தொடங்குகிறேன்—என்பது இதன் கருத்து.

### பொருளகராதி—காப்பு

" அருளகத் தனைத்துமே யாளு நாதனை
மருளகத் தகற்றிட வணங்கி நூற்படி
தெருளகத் தொருபொருட் செப்பும் பற்பெயர்ப்
பொருளக ராதியும் புகலு வாமரோ."

கடவுளைத் தொழுது பொருளகராதியைப் புகலுகிறேன்—என்பது இதன் கருத்து.

### தொகையகராதி—காப்பு

" அருட்டொகை வகைவகுத் துலகனைத்து
மங்கையி லேந்திய தயையிற்காத்
திருட்டொகை துடைத்தெழும் பருதியைப்போ
லெங்கணும் விளக்கிய வோரொன்பான்

மருட்டொகை விலகெனப் பணிந்தேத்தி
வழக்கொடு புலமையோர் முன்னுரைத்த
பொருட்டொகை வகைப்பட விரித்துணர்த்திப்
புகலுதுந் தொகையக ராதியென்றே.''

இறைவனை ஏத்தித் தொகையகராதியைத் தொடங்குகிறேன்—என்பது கருத்து.

## தொடையகராதி—காப்பு

"பார்முத லுலகெலாம் பணிந்தேத்தும்
பரமனைப் புகழ்ந்தடி தொடையாகச்
சார்முத லெழுத்தொழித் தொருங்கொன்றித்
தருமருந் தொடைத்தலை யாகெதுகை
நேர்முத லாகுறிற் பற்றியபின்
னெடிற்றொடர் தொடைப்பதந் தொடுத்திணக்கிச்
சீர்முத லொன்றெழி சிறப்பெதுகை
செப்புதுந் தொடையக ராதியென்றே.''

தெய்வத்தை இறைஞ்சி, முதலெழுத்துத் தவிர இரண்டாமெழுத்து முதலாகிய மற்ற எழுத்துக்கள் ஒரே மாதிரியாக அமைந்துள்ள எதுகைத் தொடைச் சொற்களுக்குப் பொருள் கூறும் தொடையகராதியைத் துவக்குகிறேன்—என்பது இப் பாடலின் பொருள்.

## நூல் இறுதிப் பாடல்

"அடைக்கல நாயகி யம்புயச் சேவடி
யுடைக்கலா மாம்பிறை யொப்பத் தோன்றிய
சுத்த சதுர்த்தி சுங்கநாட் பாகுலத்
தொத்த வில்லிடை யுடைகுளங் குளிப்ப
மூவாட்டை யாடான் முதல்வன் கோயிற்

பூவாட்டி வைத்துப் புக்கன நாளென
மண்ணுண்ட சாலி வாகன சகாத்தத்
தெண்ணூன் கைம்பது மெண்ணூறு மாறுமா
மத்திருக் கன்னிதா ஞதியை யீன்ற
பத்துறழ் நாறெழுபது மெண்ணுன் காண்டுமா
மருக்காவ னீழற்கீழ் வதிந்தவ ளாளுந்
திருக்காவ லூரிற் றேவதாய் துணைசெய
வீரா ரியனெனும் வேதியன்
தாராய் முடித்த சதுரக ராதியே."

சாலிவாகன சகம் *1654*–ஆம் ஆண்டிற்கு நேரான கி. பி. 1732-ஆம் ஆண்டில், திருக்காவலூரில் எழுந்தருளியிருக்கும் அன்னையின் அருள்கொண்டு, வீராரியனுகிய—வேதியனுகிய வீரமாமுனிவன் இயற்றிய சதுரகராதி முற்றிற்று—என்பது இப்பாடற் கருத்து. பெஸ்கியவர்கள் தமிழ் நாட்டு அந்தணர் போலத் தம்மை மாற்றிக்கொண்டதால் 'வீர ஆரியன்' என்றும் 'வேதியன்' என்றும் இப்பாடலில் தம்மைத் தாமே சூட்டிக்கொண்டுள்ளார்.

வீரமாமுனிவரின் உள்ளப் போக்கையும், தமிழ் முன்னேரின் மரபைத் தாமும் மதித்துப் பின்பற்றிய பான்மையினையும், புதிதாகத் தமிழ் கற்ற அவ்வெள்ளையரின் செய்யுள் அமைப்பினையும் அறிவிக்கும் மாதிரியாக மேலுள்ள ஆறு பாடல்களும் இப்பகுதியில் எடுத்துக்காட்டப்பட்டன.

## புதுமை

வீரமாமுனிவர் சதுரகராதியில் தொடையகராதி என ஒரு தொகுதி அமைத்திருப்பது புதுமையானது. அதையும் 'குறிற்கீழ் எதுகை', 'நெடிற்கீழ் எதுகை'

என இரண்டாகப் பகுத்துள்ளார். குற்றெழுத்தை முதலிலே உடைய எதுகைச் சொற்களெல்லாம் குறில்கீழ் எதுகையிலும், நெட்டெழுத்தை முதலிலே உடைய எதுகைச் சொற்கள் எல்லாம் நெடில்கீழ் எதுகையிலும் அடக்கப்பட்டுள்ளன. அகம், நகம், மகம் என்பன போன்றவை குறிற்கீழ் எதுகைச் சொற்களாம். ஆகம், நாகம், மாகம் என்பன போன்றவை நெடிற்கீழ் எதுகைச்சொற்களாம். இவ்வாறு பல்வகை எதுகைச் சொற்களையும் தேடிப் பிடித்து அகர வரிசைப்படுத்திப் பொருள் எழுதியிருப்பது பெரிய முயற்சியாகும். செய்யுள் இயற்றுவோர்க்கு எதுகைச் சொற்கள் வேண்டுமாயின் இத்தொகுதியில் வந்து மொண்டு கொள்ளலாம்.

## பாராட்டு

ஆங்கில நாட்டில் 'சாமுவேல் ஜான்சன்' (Samuel Johnson) என்னும் ஆங்கிலப் பேரறிஞர் 1747-ஆம் ஆண்டில் ஒரு தலைசிறந்த ஆங்கில அகராதி இயற்றினார்; அதற்காக மிகவும் பாராட்டப் பெற்றார். அந்த அகராதி தோன்றுவதற்குப் பதினைந்து ஆண்டுகட்கு முன்பே (1732-இல்) தமிழ் நாட்டில் சதுர் அகராதியை இயற்றிய வீரமாமுனிவர் மிகமிகப் பாராட்டத் தக்கவரன்றோ?

## தமிழ்—இலத்தீன் அகராதி

சதுர் அகராதியேயன்றி, ஐரோப்பிய மொழிகளுடன் தமிழ் பிணைந்த வேறு சில அகராதிகளும் வீரமா முனிவர் இயற்றினர். அவற்றுள், தமிழ்ச் சொல்லுக்கு நேரே இலத்தீன் சொல்லால் பொருள் கூறும் அகராதியும் ஒன்று. இஃது எழுதப்பட்ட

காலம் கி. பி. 1742. இதில் 9000 சொற்கள் இடம் பெற்றுள்ளன.

## இலத்தீன்—தமிழ் அகராதி

இலத்தீன் சொல்லுக்கு நேரே தமிழ்ச் சொல்லால் பொருள் கூறும் அகராதி யிது. ஆசிரியர் வீரமா முனிவர் (பெஸ்கி).

## தமிழ்—பிரெஞ்சு அகராதி

தமிழ்ச் சொல்லுக்கு நேரே பிரெஞ்சுச் சொல்லால் பொருள் கூறும் அகராதி யிது. ஆசிரியர் (பெஸ்கி) விரமா முனிவர். காலம் : கி. பி. 1744.

இந்த அகராதி மிகவும் அழகாகக் கையால் எழுதப்பட்டு, 1806-ஆம் ஆண்டில், எழுதியதை அப்படியே படியெடுக்கும் 'சைகிளோஸ்டைல்' (Cyclostyle) பொறிமூலம் பதிப்பிக்கப்பட்டுள்ளது. மிக மிக நீளமாகவும் அகலமாகவும் உயரமாகவும் உள்ள இந்த 'சைகிளோஸ்டைல்' பதிப்பு, பார்க்கப் பார்க்க மிகவும் நேர்த்தியா யிருக்கிறது. அவ்வளவு அழகாகப் பொறுமையுடன் எழுதிய கை யாருடையதோ? அந்த கைக்கு என்ன பரிசளிப்பது !

## தமிழ்—ஆங்கில அகராதி

இது, தமிழ்ச் சொல்லுக்கு நேரே ஆங்கிலச் சொல்லால் பொருள் கூறுவது. ஆசிரியர் வீரமாமுனிவர் (பெஸ்கி).

## போர்ச்சுகீசியம்—இலத்தீன்—தமிழ் அகராதி

போர்ச்சுகீசியச் சொல்லுக்கு நேரே இலத்தீன் சொல்லாலும் அதனையடுத்துத் தமிழ்ச் சொல்லாலும்

பொருள்கூறும் அகராதி யிது. ஆசிரியர் வீரமா முனிவர். காலம்: 1744.

## வட்டார வழக்குத் தமிழ் அகராதி

ஆங்காங்கே பொதுமக்கள் பேசும் வழக்குச் சொற்களுக்குத் தமிழாலேயே பொருள் கூறும் அகராதி யிது. ஆசிரியர் வீரமா முனிவர்.

மேற் குறிப்பிடப்பட்டுள்ள அகராதிகளை ஆராயுங் கால், வீரமா முனிவரின் தமிழ்த் தொண்டு மிகவும் பரந்துபட்டது என்பது புலனுகும்.

## ஃபாபிரிசியஸ் தமிழ்—ஆங்கில அகராதி

இது தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலச் சொல்லால் பொருள் கூறும் அகராதி. 'ஜான் பிலிப் ஃபாபிரிசியஸ்' (John Philip Fabricius), 'ஜான் கிறிஸ்தியன் ப்ரெய்தாப்ட்' (John Chrisitian Breithaupt) என்னும் செர்மானியக் கிறித்துவச் சங்கத்தார் இருவரால் இவ்வகராதி இயற்றப்பட்டது. இருவருள் முதல்வர் பெயரால் இவ்வகராதி அழைக்கப்படுகிறது. அச்சிடப்பட்ட காலம் கி. பி. 1779.

பொதுவாக ஐரோப்பியர்கள்—சிறப்பாக ஐரோப்பியக் கிறித்துவத் தூதர்களும் ஐரோப்பிய வாணிகர்களும் தமிழ் அறிந்துகொள்ள உதவவேண்டும் என்னும் தலையாய நோக்கத்துடன் இஃது எழுந்ததாகத் தெரிகிறது. இலக்கியச் சொற்களோடு அன்ருட வழக்குச் சொற்களும் மரபுத் தொடர்களும் உட்பட 9000 உருப்படிகள் இதில் இடம் பெற்றுள்ளன. இவ்வகராதியின் முதல் பக்கத்தில் (Title-Page) பின்வருமாறு உள்ளது:—

"[Fabricius, John Phil., and Breithaupt John Chr.] தமிழும் இங்கிலேசுமா யிருக்கிற அகராதி. A Malabar and English Dictionary, wherein the words and phrases of the Tamulian language, commonly called by Europeans the Malabar Language, are explained in English ; by the English Missionaries of Madras. Printed at Wepery, near Madras, in the year MDCCL XXIX."

மேலுள்ள பகுதியில், 'தமிழும் இங்கிலேசுமா யிருக்கிற அகராதி' என்று முதலில் தமிழிலும், அடுத்து 'Malabar and English Dictionary' என்று ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட்டிருப்பது ஈண்டு கவனிக்கத்தக்கது. தமிழ் மொழியை மலபார் மொழி என்று ஐரோப்பியர்கள் அழைத்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மலபார் என்பது மலையாளம். இதனால், தமிழும் மலையாளமும் ஒன்று என்பது உறுதிப்படும். பழைய தமிழ்ச் சேரநாடாகிய மலையாளத்தில் வழங்கிய மொழியும் தமிழ்நாட்டில் வழங்கிய மொழியும் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு ஐரோப்பியர்களின் செவிகட்கு ஒன்றாகவே தெரிந்ததில் வியப்பில்லை. 'லீலா திலகம்' என்னும் நூலில், தூய்மை யான மலையாள மொழி பழந்தமிழ் என்னும் பெயரால் அழைக்கப்பட் டிருப்பதும் ஈண்டு ஒப்பு நோக்கற் பாலது.

இவ்வகராதி 1779-ஆம் ஆண்டில் சென்னை வேப் பேரியில் அச்சிடப்பட்டதாக. மேலே கொடுக்கப் பட்டுள்ள பகுதியில் காணப்படுகிறது. ஆனால் அதில் 1779 என இந்திய—அரபு எண்ணால் குறிக்கப்படாமல், MDCCLXXIX என ரோமன் எண்ணால் குறிக்கப் பட்டுள்ளது. அப்படியென்றால் 1779 என்று பொருள்.

இதன் விளக்கம் வருமாறு :—அன்று ரோமானியர்கள் இலத்தீன் எழுத்தினுலேயே எண்களைக் குறிப்பிட்டு வந்தார்கள்.

| | | | |
|---|---|---|---|
| M | என்ருல் ஆயிரம் | = | 1000 |
| D | என்ருல் ஐந்நூறு | = | 500 |
| C | என்ருல் நூறு | = | 100 |
| C | என்ருல் நூறு | = | 100 |
| L | என்ருல் ஐம்பது | = | 50 |
| X | என்ருல் பத்து | = | 10 |
| X | என்ருல் பத்து | = | 10 |
| IX | என்ருல் ஒன்பது | = | 9 |

ஆக, M D C C L X X I X என்ருல் = 1779 ஆகும்.

இவ்வகராதியின் இரண்டாம் பதிப்பு, 'ரெவரன்ட் பொயசால்டு' (Rev. Mr. Poezold), 'வில்லியம் சிம்சன்' (Mr. William Simpson) ஆகியோரால் ஒழுங்கு செய்யப் பட்டு 1809-ஆம் ஆண்டில் அதே வேப்பேரியில் அச்சிடப்பட்டது.

இவ்வகராதியில், வரிகிறது, வரிந்து போடுகிறது என்பன போன்ற வினையுருவங்களும் கொடுக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# பத்தொன்பதாம் நூற்றாண்டு அகராதிகள்

## அகராதித் தமிழ்

## Dictionnaire

## Francais – Tamoul

## Tamoul—Francais

மேலுள்ளாங்கு நான்கு வரிகளில் பெயர் சொல்லப் பட்டிருப்பது ஓர் அகராதியாகும். 282 பக்கங்கள் கொண்ட இவ்வகராதியில் இரண்டு பாகங்கள் உள்ளன. முதல் பாகத்தில் பிரெஞ்சுச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லால் பொருளும், இரண்டாம் பாகத்தில் தமிழ்ச் சொல்லுக்குப் பிரெஞ்சுச் சொல்லால் பொருளும் கூறப்பட்டுள்ளன. இரண்டு பாகங்களிலுமே பிரெஞ்சு, தமிழ் ஆகிய இருமொழிகளும் இடம் பெற்றிருப்பினும், நூலின் பெயராக முதலில் 'அகராதித் தமிழ்' என்னும் அழகிய பெயர் கொடுக்கப்பட்டிருப்பது மிகவும் புதுமையாகவும் கவர்ச்சியாகவும் உள்ளது.

இதன் ஆசிரியர் 'ப்ளான்' (A. Blin) என்னும் பிரெஞ்சுக்காரர். நூல் தோன்றின காலம் கி. பி. 1831. இவ்வகராதி முழுதும் அழகாகக் கையால் எழுதப் பட்டு, அப்படியே படி எடுக்கும் 'சைகிளோஸ்டைல்' (Cyclostyle) பொறியின்மூலம் பல படிகள் (பிரதிகள்) எடுக்கப்பட்டுக் கட்டடமும் (Binding) கட்டப் பட்டுள்ளது. நூலைத் திறந்து பார்த்தால் கையெழுத்துப்

படிபோல்தான் தோன்றும். இம்முயற்சிகளையெல்லாம் பார்க்கும்போது மிகவும் வியப்பாயிருக்கிறது.

இவ்வகராதியின் தொடக்கத்தில், தமிழ் எழுத்துக்களைப் பிரெஞ்சுக்காரர் ஒலிப்பதற்கு உதவும் வகையில், ஒவ்வொரு தமிழ் எழுத்துக்கும் நேரே ஒலியொற்றுமையுள்ள பிரெஞ்சு எழுத்துக்கள் கொடுக்கப்பட்டிருப்பதும் ஒரு புதுமையே.

பலவிடங்களில் தமிழ்ச் சொற்களில் எழுத்துப் பிழைகள் காணப்படுவது இவ்வகராதிக்கு ஒரு குறையாகும்.

### தமிழ்—ஆங்கில அகராதி
### ஆங்கிலம்—தமிழ் அகராதி
### தமிழுக்குத் தமிழ் அகராதி

இம் மூன்றுவித அகராதிகளையும் தொகுத்து வெளியிட, யாழ்ப்பாணத்து அமெரிக்கக் கிறித்துவச் சங்கம் (American Mission at Jaffna) 1833-ஆம் ஆண்டில் திட்டம் தீட்டியது. அச் சங்கத்தைச் சேர்ந்த 'ரெவரன்ட் ஜே. னைட்' (Rev. J. Knight) என்பவர், 'கபிரியல் திசரா' (Gabriel Tissera), 'ரெவரன்ட் பீட்டர் பெர்சிவல்' (Rev. Peter Percival) ஆகியோரின் உதவியுடன் இம்மூன்று அகராதிகளும் வெளியாவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார். ஆனல் இடையிலேயே அவர் இறந்துவிட்டதால் இவை வெளிவராமல் நின்றுவிட்டன.

### ராட்லர் தமிழ் — ஆங்கில அகராதி

இது தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலச் சொல்லால் பொருள் கூறும் அகராதியாகும். இதில் தமிழ்ச்

சொல்லாலும் பொருள் கூறப்பட்டுள்ளது. இதனை 1830-ஆம் ஆண்டளவில் 'ராட்லர்' (Dr. J. P. Rottler) என்பவர் தொகுத்தார். இது நான்கு தொகுதிகளை யுடையது. சதுர் அகராதியிலிருந்து மிகுந்த அளவில் சொற்பொருள்களை இவ்வகராதி எடுத்துக்கொண் டுள்ளது. இதன் முதல் தொகுதி வேப்பேரியில் 1834-ஆம் ஆண்டிலும், இரண்டாந் தொகுதி 1837-இலும், மூன்றாந் தொகுதி 1839-இலும், நான்காந் தொகுதி 1841-இலும் பதிப்பிக்கப்பட்டன. இப்பதிப்புக் களில், தாய்லர் (Rev. W, Taylor), வேங்கடாசல முதலியார் ஆகிய இருவரும் எடுத்துக் கொண்ட பங்கு மிகப் பெரியது.

இவ்வகராதியில், வரிகிறது, வரிந்தேன், வரி வேன், வரிய, வரிதல், வரிக்கிறது, வரித்தேன், வரிப் பேன், வரிக்க—என வினைச் சொல்லின் பல்வகை உருவங்களும் கொடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

### வின்சுலோ ஆங்கிலம்-தமிழ் அகராதி

வின்சுலோ (Rev. M. Winslow) என்பவரால் ஆங் கிலச் சொல்லுக்கு நேரே தமிழ்ச் சொல்லால் பொருள் அமைக்கப்பட்ட அகராதி யிது. காலம் : 1842-ஆம் ஆண்டு.

### யாழ்ப்பாணத் தமிழ் அகராதி

இது யாழ்ப்பாணத்து அறிஞர் சந்திரசேகர பண்டி தரால் தொகுக்கப் பெற்றது. தமிழ்ச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லாலேயே பொருள் கூறும் இவ்வகராதி யில் ஏறக்குறைய எல்லாத் தமிழ்ச் சொற்களும் இடம்

பெற்றிருப்பதாகத் தெரிகிறது. 58,500 சொற்கட்குப் பொருள்கூறும் இவ்வகராதி சதுரகராதியினும் நான்கு மடங்கு பெரியது. இவ்வகையில்நோக்கின், தமிழுக்குத் தமிழ் அகராதிகளுக்குள் இதுவே முதல் பெரிய அகராதியாகும். இதில் சொற்களேயன்றி அவற்றின் பொருள்களும் அகரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன. சதுர் அகராதியைப் போலவே இஃதும் நான்கு தொகுதிகளையுடையது.

இது, மானுவல் தமிழ் அகராதி (The Manual Dictionary of The Tamil Language) என்றும், யாழ்ப்பாண அகராதி என்றும், மானிப்பாய் அகராதி (Manippay-Akarathi) என்றும் பலவிதமாக அழைக்கப்படுகிறது. 'ரெவரன்ட் லெவி ஸ்பால்டிங்' (Rev. Levi Spaulding) என்பவரால் 1842–ஆம் ஆண்டில் இது பதிப்பிக்கப் பட்டது.

## ஸ்பால்டிங் ஆங்கிலம்-தமிழ் அகராதி

ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லால் பொருள் கூறும் அகராதி யொன்று ஸ்பால்டிங் (Rev. L. Spaulding) அவர்களால் 1844–இல் உருவெடுத்தது.

## பெர்சிவல் ஆங்கிலம்-தமிழ் அகராதி

வின்சுலோ, ஸ்பால்டிங் ஆகியோரைப் போலவே, பெர்சிவல் (Rev. Peter Percival) அவர்களின் பெயராலும் ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லால் பொருள் கூறும் அகராதி யொன்றுள்ளது. இது, An English—Tamil Dictionary எனப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

## "Dictionarium Latino - Gallico - Tamulicum"
## "Dictionaire Latin - Francais - Tamoul"
## "இலத்தீன்—பிராஞ்சு—தமிழ் அகராதி"

மேலுள்ளவாறு மூன்று மொழிகளில் பெயர் கொடுக்கப்பட்டுள்ள ஓர் அகராதி உள்ளது. இம் மூன்று பெயர்களும் ஒரே பொருள் (அர்த்தம்) உடையவையே. மூன்றுமே ஒரே அகராதியைத்தான் குறிக்கின்றன. இம் மூன்றனுள் முதல் பெயர் இலத்தீன் மொழியாகும்; இரண்டாவது பெயர் பிரெஞ்சு மொழி; மூன்ருவது பெயர் தமிழ் என்பது படிப்பவர்க்குத் தெரியும். தமிழ்மொழி, Tamulicum என்று இலத்தீன் மொழியிலும், Tamoul என்று பிரெஞ்சு மொழியிலும் எழுதப்படுகிறது.

இவ்வகராதியில், இலத்தீன் சொல்லுக்கு நேராகப் பிரெஞ்சு சொல்லாலும், அதையடுத்துத் தமிழ்ச் சொல்லாலும் பொருள் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

இதனை, கிறித்துவத் துறவியர் இருவர் இணைந்து இயற்றியதாக நூலின் முகப்பு அறிவிக்கிறது. புதுச்சேரி மாதாகோயில் அச்சகத்தாரால் கி.பி. 1846–ஆம் ஆண்டில் இந்நூல் அச்சிடப்பெற்றது. இதே அச்சகத்தில் மேலும் பல ஆண்டுகள் கழித்து அச்சான தமிழ்–பிரெஞ்சு அகராதியின் மறுபதிப்பில், அவ்வகராதியை, 'முய்சே' (L. Mousset), 'துய்புய்' (L. Dupus) என்னும் அறிஞரிருவர் இணைந்து இயற்றியதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த இருவரே இலத்தீன்–பிரெஞ்சு–தமிழ் அகராதியையும் இயற்றியவராவர் எனக் கொள்ளலாம்.

இவ்வகராதியின் மாதிரிக்காக, இதிலுள்ள ஒரு சொற்பொருள் வருமாறு:—

**Abba = Pere = அப்பன், பிதா**

Abba என்பது இலத்தீன் சொல்; Pere என்பது பிரெஞ்சு சொல்; அப்பன் தமிழ்ச்சொல். Abba (அப்பா) என்றாலும், Pere (பேர்) என்றாலும் அப்பன் (தகப்பன்) என்று பொருளாம். இலத்தீனிலுள்ள அப்பா (Abba) என்னும் சொல்லும், தமிழிலுள்ள அப்பா என்னும் சொல்லும் ஒத்திருப்பதை நோக்கும்போது, பெரு வியப்பும் பெருமகிழ்ச்சியும் தோன்றுகின்றன. இலத்தீனிலும் தமிழிலும் மொழி யடிப்படையில் ஒற்றுமை யுள்ள செய்திகள் தனி நூலாக எழுதும் அளவுக்கு மிகப் பல உள்ளன. ஈண்டு கூறின் மற்றொன்று விரித்தலாகும்.

## ஒரு சொல் பல பொருள் விளக்கம்

இது நிகண்டுகளின் பதினோராந் தொகுதிபோல் பெயர் உடையதாயிருக்கிறது. இதில் ஒரு சொல்லுக்குப் பொருளாகக் கொடுக்கப்பட்டிருக்கும் சொல்லுக்கும் இன்னொரு சொல்லால் விளக்கம் தரப்பட்டுள்ளது.

ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:—

வரி = சுணங்கு = தேமல்
எழுத்து = அக்கரம்
பாட்டு = இசைப் பாட்டு
வாரிதி = கடல்
இறை = குடியிறை
நெல் = சாலி

வரி என்னும் ஒரு சொல்லுக்குப் பொருளாக ஆறு சொற்கள் கொடுக்கப்பட்டிருப்பதையும், அந்த ஆறு சொற்களையும் விளக்க வேறு ஆறு சொற்கள் பயன் படுத்தப்பட்டிருப்பதையும் மேலே காணலாம். இதன் ஆசிரியர் அண்ணுசாமி பிள்ளை என்பவர். காலம் கி.பி. 1850.

## ஆங்கிலம் — தெலுங்கு — தமிழ் அகராதி

ஆங்கிலச் சொல்லுக்குத் தெலுங்குச் சொல்லாலும் தமிழ்ச் சொல்லாலும் பொருள் கூறுவது இவ்வகராதி. ஆசிரியர் டி. எம். கிருஷ்ணசாமிபிள்ளை என்பவர். காலம் கி. பி. 1851.

## தமிழ் — பிரெஞ்சு அகராதி

தமிழ்ச் சொல்லுக்குப் பிரெஞ்சு சொல்லால் பொருள் கூறும் அகராதி யிது. இரண்டு பாகங்கள் இதில் உள்ளன. தலையணை போன்ற இவ்வகராதியின் முதல் பாகம் 932 பக்கங்களும், இரண்டாம் பாகம் (இறுதியில் ஏடுகள் கிழிந்துள்ளன) 1106 பக்கங்கட்கு மேலும் உடையன. புதுச்சேரி மாதாகோயில் அச்சகத் தாரால் கி. பி. 1855–ஆம் ஆண்டில் இஃது அச்சிடப் பட்டது. இருவர் துறவியர் இணைந்து இயற்றியதாக இந்நூலின் முகப்பு அறிவிக்கிறது. இலத்தீன்–பிரெஞ்சு –தமிழ் அகராதி இயற்றிய அதே துறவியர்களே இவர்கள் என்று எண்ண இடமுண்டு. இதே அச்சகத் தில், 1875-ஆம் ஆண்டிலும், 1895-ஆம் ஆண்டிலும் அச்சான இந்தத் தமிழ்-பிரெஞ்சு–அகராதியின் மறு பதிப்புக்களில் 'முய்சே' (L. Mousset), 'துப்புய்' (L. Dupus) என்னும் இருவரும் இணைந்து இயற்றியதாகச் சொல் லப்பட்டுள்ளது. எனவே, இவ்வகராதியின் ஆசிரி யர்கள் இவ்விருவருமே.

## (சிறிய) தமிழ்—பிரெஞ்சு அகராதி

மிகவும் சுருக்கமான சிறிய தமிழ்-பிரெஞ்சு அகராதி யொன்றும் புதுவை மாதாகோயில் அச்சகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

## பிரெஞ்சு — தமிழ் அகராதி

பிரெஞ்சு சொல்லுக்குத் தமிழ்ச்சொல்லால் பொருள் கூறும் அகராதியிது. தமிழ்-பிரெஞ்சு அகராதி தொகுத்த மூய்சே, துய்புய் என்னும் அறிஞரிருவருந் தாம் இதனையும் தொகுத்து உருவாக்கினார்கள். இதுவும் மிகப் பெரிய அகராதிதான். இதன் மூன்ரும் பதிப்பு, புதுச்சேரி மாதாகோயில் அச்சகத்தாரால் 1952-இல் வெளியிடப்பட்டது.

## போப் தமிழ் — ஆங்கில அகராதி

இது ஜி. யு. போப் (Rev. G. U. Pope) அவர்களால் தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலச் சொல்லால் பொருள் எழுதப்பட்ட அகராதி. காலம் 1859 ஆகும். ஜி. யு. போப் என்னும் ஆங்கிலேயர் ஒரு தலை சிறந்த தமிழ்ப் பித்தர்; தாம் இறந்த பிறகு தமது கல்லறையின்மேல் தம்மை ஒரு 'தமிழ் மாணவன்' என்று குறிப்பிடும்படி உயிரோடிருந்த போதே கோரியிருத்தார். அவ்வாறே ஆங்கில நாட்டுக் கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் கிறித்துவம் பரப்ப வந்தப் போப் அவர்கள், உலகில் தமிழ் பரவும்படிச் செய்துள்ள தொண்டுகள் மிகப் பல. இவர் திருக்குறள், திருவாசகம், நாலடியார் ஆகிய நூற்களை ஆங்கிலத்தில் பெயர்த்திருக்கிறார். இந்த ஆங்கிலத் தமிழ்ப் பெருமகனார் தமிழ்—ஆங்கில அ்கராதி படைத்ததில் வியப்பென்ன!

## வின்சுலோ தமிழ் — ஆங்கில அகராதி

தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலச் சொல்லால் பொருள் கூறும் அகராதியிது. தமிழ் ஆங்கில அகராதி என்று இது பெயர் சுட்டப்பட்டாலும், ஆங்கிலச் சொல்லின் பக்கத்தில் தமிழ்ச் சொல்லாலும் பொருள் தரப்பட்டுள்ளது. எனவே, தமிழ்மட்டும் அறிந்தவர்க்கும் இஃது உதவும். இது அச்சிடப்பட்ட காலம் கி. பி. 1862 ஆகும்.

இதன் ஆசிரியர் வின்சுலோ (Rev. M. Winslow) என்பவர். ஆனுல் இவ்வகராதி முற்றிலுமே வின்சுலோ அவர்களின் சொந்தப் படைப்பன்று. ஜே. நைட் (Rev. J. Knight), திசெரா (M. Tissera), பெர்சிவல் (Rev. P. Percival), ஸ்பால்டிங் (Rev. L. Spaulding), ஹட்சிங்சு (Rev. S. Hutchings) ஆகிய அறிஞர்களின் தொகுப்புகளைப் பார்வையிட்டு, தள்ள வேண்டியதைத் தள்ளிச் சேர்க்கவேண்டியதைச் சேர்த்துச் செப்பஞ் செய்து வெளியாக்கிய பெருமையே வின்சுலோ அவர்களுடையது. இவ்வகராதியை உருவாக்கியதில், இராமாநுசக்கவிராயர், விசாகப்பெருமாள் ஐயர், வீராசாமி செட்டியார், ஆதிமூல முதலியார், அப்ரகாம் அல்லியன் முதலிய தமிழறிஞர்களும் வின்சுலோவுக்குப் பெருந் துணை புரிந்துள்ளனர்.

இவ்வகராதியில் பல்துறைக் கலைச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. வடமொழிச் சொற்கள் தனியே அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இதில் மொத்தத்தில் 67,452 சொற்கள் பொருள் விளக்கப்பட்டுள்ளன.

இவ்வகராதியில் வினையுருவங்களை அமைத்துள்ள முறை கவனிக்கத்தக்கது. அஃதாவது:—

**வரி, கிறேன், ந்தேன், வேன், ய.**
**வரி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க.**

மேலே, வரி என்னும் வினைப் பகுதியிலிருந்து முக்கால வினைமுற்றுக்களும் வினையெச்சமும் எபபடி உருவாகி அமைகின்றன என்பது நன்கு தெளிவாகும்படி வரி என்பதன் பக்கத்தில் கால் புள்ளி(,)யிட்டுக் காட்டப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. நம்மவர் வெளியிடும் தமிழ் அகராதிகளில், வரி, வரிதல், வரித்தல் எனத் தொழிற் பெயர் உருவங்களே இருக்கும். ஃபாபிரிசியஸ், ராட்லர், வின்சுலோ முதலிய வெள்ளையர்களால் வெளியிடப்பட்ட அகராதிகளிலோ, வரிகிறது, வரிகிறேன், வரிய, வரிக்க முதலிய முற்று உருவங்களும் எச்ச உருவங்களும் உள்ளன. வெள்ளையருள்ளும் வின்சுலோவின் அகராதியில்தான் மேலுள்ளவாறு பகுதிக்குப் பக்கத்தில் கால்புள்ளி யிட்டுக் காட்டப்பட்டுள்ளது. தமிழர்கள் வழிவழி வழக்கத்தினுல் முற்றுருவங்களையும் எச்ச உருவங்களையும் பேசவும் எழுதவும் இயற்கையாகவே தெரிந்துவைத்துள்ளனர். ஆனுல், புதிதாகத் தமிழ் கற்கும் வெள்ளையர்களுக்கு இந்த வாய்ப்பு எப்படியிருக்க முடியும்? எனவேதான், வின்சுலோ அவர்கள், ஒரு வினைப் பகுதியிலிருந்து மற்ற வினையுருவங்கள் எப்படி யெப்படியெல்லாம் உருவாகின்றன என்று கால் புள்ளி யிட்டுக் காட்டியுள்ளார். ஆராய ஆராயத்தான் புதுப்புது வசதிகள் வளரும் என்னும் இயற்கை அடிப்படையை யொட்டி வின்சுலோவின் அமைப்பில் இந்த வசதி உருவாகியுள்ளது. வெள்ளையர்கள் தங்கள் நன்மைக்காக இவ்வித வேலைகள் புரிந்தாலும், அவர்களால் மறைமுகமாகவாவது உலகில் தமிழ் பரப்பப்

பட்டுள்ளது என்பதை ஒவ்வொரு தமிழரும் எண்ணிப் பார்த்தால், தாமும் அப் பணியைத் தொடரத் தொடங்குவர்.

## தமிழ்—இலத்தீன் அகராதி

தமிழ்ச் சொல்லுக்கு இலத்தீன் சொல்லால் பொருள் கூறும் இவ்வகராதியின் ஆசிரியர் ஆர். பி. குரிபாதிரியாரவர்கள். காலம் கி. பி. 1867.

## கிளாசிகல் தமிழ்—ஆங்கில அகராதி

தமிழுக்கு ஆங்கிலத்தால் பொருள் கூறும் இந்த உயர்தர (Classical Tamil English Dictionary) அகராதி, 1870–இல், சென்னை மாநிலக் கல்வித்துறைத் தலைவரின் கண்காணிப்பின் கீழ் வெளியானது.

## பதார்த்த பாஸ்கரம்

[கிரந்தம்—தமிழ் அகராதி]

கிரந்த எழுத்திலுள்ள சமசுகிருதச் சொற்கட்குத் தமிழ்ச் சொற்களால் பொருள் கூறும் அகராதியிது. சமசுகிருதத்தை எழுதுவதற்குத் தமிழ் மக்கள் பயன்படுத்திய ஒருவகை எழுத்துதான் கிரந்த எழுத்து எனப்படுவது. ஒரு புது மொழியின் எழுத்துக்களைக் கற்றுக்கொள்வது போலவே கிரந்த எழுத்துக்களையும் கற்றுக்கொண்டால்தான் கிரந்த நூற்களைப் படிக்கவும் கிரந்த மொழியினை எழுதவும் முடியும். ஸ, ஜ, ஷ, ஹ, க்ஷ முதலிய எழுத்துக்கள் கிரந்த எழுத்துக்களாம். இந்தக் கிரந்த எழுத்து வடிவிலுள்ள வடமொழிக்குத் தமிழால் பொருள் கூறுவது இவ்வகராதி.

பத + அர்த்தம் = பதார்த்தம் = அதாவது, பதங்களுக்கு அர்த்தம் = சொற்பொருள். பாஸ்கரன் = என்றால் ஞாயிறு (சூரியன்). இருட்டிலிருந்து பொருள்களை விளக்கும் ஞாயிற்றின் ஒளி போல, தெரியாத வடமொழிச் சொற்கட்குப் பொருள் விளக்குவதால் 'பதார்த்த பாஸ்கரம்' என இவ்வகராதி பெயர் பெற்றது.

இதன் ஆசிரியர் கடலூரையடுத்த திருவகீந்திரபுரம்–தி க. நாராயண அய்யங்கார் என்பவர். ஆசிரியரே நூலின் முன்னால், தற்சிறப்புப் பாயிரமாகத் தமிழில் ஓர் அகவற்பா பாடியுள்ளார்.

நூல் வெளியான காலம் ஈசுவர ஆண்டு என நூலின் முன்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 60 ஆண்டுகட்கு ஒரு முறை ஓர் ஈசுவர ஆண்டு வருகிறது. எனவே இது எந்த ஈசுவர ஆண்டு? கிடைத்துள்ள பதிப்பின் தாள்கள் மிகவும் பழமையாய்த் துளை போடப்பட்டிருத்தலின், இது கி.பி. 1937–ஆம் ஆண்டில் வந்த ஈசுவர ஆண்டாக இருக்க முடியாது; எனவே, கி.பி. 1877–ஆம் ஆண்டில் வந்த ஈசுவர ஆண்டே இது. ஆகவே இவ்வகராதியின் காலம் கி.பி. 1877 ஆகும்.

### பில்டர் ஆங்கிலத் தமிழகராதி

ஆங்கிலத்துக்குத் தமிழால் பொருள் கூறும் இந்த (A Builder's Vocabulary in English and Tamil) அகராதியின் ஆசிரியர் டி. எஸ். வீராசாமி முதலியார். காலம் கி. பி. 1880.

## அகராதிச் சுருக்கம்

தமிழ் பாக்கெட் அகராதி (Tamil Pocket Dictionary) என அழைக்கப்படும் இவ்வகராதி தமிழுக்குத் தமிழால் பொருள் கூறும் சுருக்கமான ஓர் அகராதியாகும். மாணவர்க்குப் பயன்படவேண்டும் என்னும் நோக்குடன் இது கையடக்கமாக 'பாக்கெட் சைசு' என்னும் அளவில் வெளியிடப்பட்டது. இதில் 3000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு பக்கத்தின் தலைப்பிலும், ஒவ்வொரு குறள் அமைக்கப்பட்டிருப்பது இவ்வகராதிப் பதிப்பில் உள்ள ஒரு சிறப்பாகும். இவ்வகராதி திரட்டியவர் C. விசயரங்க முதலியார். காலம் கி.பி. 1883.

## விசுவநாதபிள்ளை தமிழ்—ஆங்கில அகராதி

A Dictionary Tamil And English என்ற பெயருடைய இவ் வகராதியைத் திரட்டியவர் V. விசுவநாதப் பிள்ளை என்பவர். காலம் கி. பி. 1888.

## தரங்கம்பாடி அகராதி

தரங்கம்பாடி சங்கத்தாரால் கி. பி. 1897–ஆம் ஆண்டில் தோற்றமெடுத்த இவ்வகராதி தமிழுக்கு ஆங்கிலத்தால் பொருள் கூறுவதாகும். இது ஃபாபிரிசியஸ் அகராதியை ஆதாரமாகக் கொண்டது. இதிலும், வினைப் பகுதியும் அதிலிருந்து உருவாகும் வினையுருவங்களும் வின்சுலோ அகராதியில் உள்ளதுபோல் கொடுக்கப்பட்டுள்ளன. மொத்தம் 33,000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. இதன் இரண்டாம் பதிப்பு 'பெய்சனெர்சு' (Rev. H. Beisenherz) என்பவரால் 1910–ஆம் ஆண்டிலும், மூன்ரும் பதிப்பு 'பெக்செல்'

Rev. D. Bexell) என்பவரால் 1933-ஆம் ஆண்டிலும் வெளியாயின. இவ்வகராதியில் உள்ள ஒரு சிறப்பு அமைப்பாவது:—

டாக்டர் க்ரால் என்பவர், ஐரோப்பிய மொழிகளில் வினைச் .சொற்கள் வகைப்படுத்தப்பட்டு வினைவிகற்பப் பட்டி (Conjugation) கொடுக்கப்பட்டிருப்பது போன்று, தமிழ் வினைச் சொற்களின் விகற்பங்களையும் முக்காலங் கட் கேற்ப ஆராய்ந்து, வினைப் பகுதிகளைப் பதின் மூன்று வகையாகக் கணக்கிட்டிருக்கிறார். அதைப் பின் பற்றி, ஒவ்வொரு வினைப்பகுதியும் பதின்மூன்று வகை களில் : இவ்வகையைச் சார்ந்தது எனக் கூறுகிறது இவ்வகராதி. இது மிகவும் சிறந்த அமைப்பன்றோ?

# இருபதாம் நூற்ருண்டு அகராதிகள்

இருபதாம் நூற்ருண்டு அகராதிகளைப் பற்றி இந்நூற்ருண்டினர் நன்கறிவர். இந்நூற்ருண்டில், போர்ச்சுகீசியம், இலத்தீன், பிரெஞ்சு ஆகிய மொழிகளுடன் தமிழ் பிணைந்த அகராதிகள் புதிதாகத் தோன்றுவது நின்றுவிட, தமிழுக்குத் தமிழ் அகராதிகளும் ஆங்கிலத்தொடு தமிழ் பிணைந்த அகராதிகளும் மட்டுமே புதிது புதிதாகத் தோன்றலாயின. ஆனல், பத்தொன்பதாம் நூற்ருண்டில் தோன்றின பிரெஞ்சொடு தமிழ் பிணைந்த பழைய அகராதிகள் மட்டும், இருபதாம் நூற்ருண்டில், புதுச்சேரி மாதாகோயில் அச்சகத்தாரால் மறுபதிப்பு செய்யப்பெற்றன.

உரிமை பெற்ற இந்தியாவில் வேற்று நாட்டு மொழிகளின் ஆட்சி மறைய, இந்திய மொழிகள் தலை தூக்கத் தொடங்கியதால், சமசுகிருதம், இந்தி, மராட்டி, தெலுங்கு போன்ற இந்திய மொழிகளுடன் தமிழ் பிணைந்த அகராதிகள் இருபதாம் நூற்ருண்டில் தோன்றத் தொடங்கின. தமிழுக்குத் தமிழிலுங்கூட, பல்துறை யகராதி வகைகள் பல்கலாயின. இனி, இவ்விருபதாம் நூற்ருண்டு அகராதிகளைக் காலவாரி யாக ஆய்வாம் :-

### பதினெண் சித்தர் அகராதிகள்

பதினெண் சித்தர் என்னும் பெயரால் பின்வரும் அகராதிகள் காணப்படுகின்றன :—

வைத்திய மூலிகை யகராதி
வைத்திய மூலிகை விரிவகராதி
வைத்திய மலையகராதி

இவ்வகராதிகள், பதினெண்சித்தர் அருளியதாகக் குறிப்பிடப்பட்டு இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் அச்சிடப்பட்டுள்ளன. ஆயினும், இவற்றை அகராதி உருவத்தில் பதினெண் சித்தர்கள் இயற்றியிருக்க முடியாது. சித்தர்கள் இந்த நூற்றுண்டினர் அல்லர். அவர்கள் கடந்த நூற்றுண்டுகளில் செய்யுள் நடையில் மருத்துவ (வைத்திய) நிகண்டுகள் இயற்றியுள்ளனர். அம் மருத்துவ நிகண்டுகளில் கூறப்பட்டுள்ள சொற்களையும் அவற்றின் பொருள்களையும் (அர்த்தங்களையும்) இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் சிலர் தொகுத்து அகராதியாக உருவாக்கி அச்சிட்டனர் என்பதுதான் உண்மை.

பதினெண் சித்தர் அகராதிகளுள், வைத்திய மூலிகை விரிவகராதி, சென்னை வித்யாரத்நாகர அச்சுக் கூடத்தில் கி. பி. 1902-இல் பதிப்பிக்கப்பட்டது. வைத்திய மலையகராதி என்னும் நூல், சென்னை பத்மநாப விலாச அச்சுக் கூடத்தில் 1908-இல் அச்சிடப்பட்டது.

1949-இல் மறு பதிப்பான வைத்திய மூலிகை விரிவகராதியைத் தொடர்ந்து, பதினெண் சித்தர் பெயரில்

அரும்பெயர் அனுபந்த அகராதி
தொகை யகராதி

என்னும் அகராதிகளும் உள்ளன. மாதிரிக்காக ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சொற்பொருள் வருமாறு:—

வைத்திய மூலிகை யகராதி:— அகத்தி=ஓர் மரம்.

அரும்பெயர் அனுபந்த அகராதி:—அக்காரப் பட்டை=மாமரப் பட்டை.

தொகை யகராதி:—அகிற் கூட்டு 5=சந்தனம், கற்பூரம், எரிகாசு, தேன், ஏலம்.

மேற்கூறிய அகராதிகளே யன்றி, ஊர்பேர் விவரம் தெரியாத அகராதிகள் சிலவும் உள்ளன. அவை யாவன :—

பச்சிலை மூலிகை அகராதி
பரிபாஷை அகராதி
கருப் பொருள் அகராதி
மறைப்பு வெளிப்படை யகராதி

மேற் கூறிய அகராதிகளின் பெயர்களைப் பார்க்குமளவில், மருத்துவ அகராதிகளும், கலைச் சொல் லகராதிகளும் படைக்கும் முயற்சி பரவலாக இருந்தமை புலனாகும்.

## ந. கதிரைவேற் பிள்ளை யகராதி

இது தமிழுக்குத் தமிழ் அகராதியாகும். இந்நூற் ருண்டின் தொடக்கத்தில் ந. கதிரைவேற் பிள்ளையவர் களால் ஆக்கப்பட்டது.

## தமிழ்ச் சொல் லகராதி

இது தமிழுக்குத் தமிழ் அகராதி. சங்க அகராதி, தமிழ்ச்சங்க அகராதி என்றுங்கூட இது அழைக்கப் படும். ஆசிரியர் இலங்கை சி. டபிள்யூ. கதிரைவேற் பிள்ளையவர்கள் காலம் 1904. தலையணை போன்ற பெரிய இவ்வகராதி மூன்று பாகங்கள் உடையது; ஏறத்தாழ

1800 பெரிய பக்கங்களைக் கொண்டுள்ளது. இக் காலத்தில் வளர்ந்துள்ள பல்வகைக் கலைச் சொற்கள் உட்பட ஏறக்குறைய 63,900 சொற்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இதன் அடுத்த பதிப்பு மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் அச்சிடப்பெற்றது.

இலங்கை சி. டபிள்யூ. கதிரைவேற் பிள்ளையின் இவ்வகராதி 1904-ஆம் ஆண்டிலேயே அச்சாயினும், அடுத்த பதிப்பாக இதன் முதல் பாகம் 1910-இலும், இரண்டாம் பாகம் 1912-இலும், மூன்றும் பாகம் 1923-இலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அச்சேறின. இப்போது இதன் முழு உருவத்தையும் ஒருசேரக் காணலாம்.

## தமிழ்ப் பேரகராதி

தமிழுக்குத் தமிழான இவ்வகராதியும் மிகப்பெரிது; சதுர் அகராதிபோல் நான்கு தொகுதிகள் உடையது; த. குப்புசாமி நாயுடு என்பவரால் தொகுக்கப் பெற்றது; சென்னை கோபால விலாச அச்சியந்திர சாலையில் 1906-இல் பதிப்பிக்கப்பட்டது.

## சிறப்புப் பெயர் அகராதி

சிறந்த தெய்வங்கள், ஊர்கள், நூற்கள், புலவர்கள் முதலான பல்வகைப் பொருள்களின் சிறப்புப் பெயர்களை அகரவரிசைப்படுத்திப் பொருள் கூறும் தமிழுக்குத் தமிழ் அகராதி யிது. ஆசிரியர் ஈக்காடு—இரத்தினவேலு முதலியார். காலம் 1908.

## இராமநாதன் தமிழ் அகராதி

The Twentieth Century Tamil Dictionary என்னும் தலைப்புடைய இவ்வகராதி தமிழுக்குத் தமிழாகும்;

நான்கு தொகுதிகளுடன் மிகப் பெரியதாக உள்ளது; எங்கோ சில விடங்களில் சொல்லால் பொருள் விளக்குவ தல்லாமல் படங்களும் கொடுக்கப்பட்டுள்ளமை இவ்வகராதிக்கு ஒரு தனிச் சிறப்பு. சொல்லால் முற்றிலும் புரிந்துகொள்ள முடியாத பொருள்களைப் படத்தின் துணைகொண்டு புரிந்து கொள்ளலா மல்லவா? இதன் ஆசிரியர்: P. இராமநாதன், B.A., M-R.A.S., F.R.H.S. அவர்கள். காலம் 1909.

### ஆங்கிலம் – ஆங்கிலம்—தமிழ் அகராதி

The School Dictionary English—English Tamil என்னும் பெயருடைய இது, ஆங்கிலத்துக்கு ஆங்கிலத்தாலும் தமிழாலும் பொருள் கூறும் அகராதி. தொகுப்பாளர் டி. ஏ. சுவாமிநாத ஐயர். காலம் 1909.

### அபிதான சிந்தாமணி

தமிழ் மொழியில் தோன்றிய முதல் கலைக் களஞ்சியம் (Encyclopaedia) அபிதான சிந்தாமணியாகும். இஃது, தனித் தனிச் சொல்லுக்குத் தனித் தனிச் சொல்லால் பொருள்கூறும் மற்ற அகராதிகளைப் போன்றதன்று. கடவுள்கள், முனிவர்கள், அரசர்கள், புலவர்கள், நூற்கள், பறவை-விலங்குகள் முதலிய பல்வகைப் பெயர்களை அகரவரிசைப்படுத்தி விரிவாக விளக்கம் கொடுத்திருக்கும் நூல் இது. சில பெயர்களைப் பற்றிப் பல பத்திகளும், சில பெயர்களைப் பற்றிக் கட்டுரை யமைப்பில் பல பக்கங்களுங்கூட எழுதப்பட்டுள்ளன. சிறப்புடைய யாராவது ஒருவரைப் பற்றியோ அல்லது ஏதாவது ஒன்றைப் பற்றியோ விரிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானல் இந்நூலின் துணையை நாடலாம்.

அபிதானம் என்றால் பெயர் என்று பொருளாம். கேட்ட பொருள்களை யெல்லாம் அளிப்பதாகச் சொல்லப் படும் 'சிந்தாமணி' என்னும் தெய்வ மணிக்கல்லைப் போல, தேவையான பெயர்களைப் பற்றி யெல்லாம் விவரம் தெரிந்து கொள்ள உதவும் நூலாதலின் இஃது அபிதான சிந்தாமணி என்னும் பெயர் பெற்றது.

இதன் ஆசிரியர், சென்னை பச்சையப்பன் கல்விச் சாலையில் தமிழ்ப் பேராசிரியரா யிருந்த ஆ. சிங்கார வேலு முதலியாராவர். 1910-ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் இது முதலில் வெளியிடப் பட்டது. முதல் பதிப்பு மிகவும் நீள-அகல முடைய 1050 பக்கங்கள் கொண்டது. பின்னர் ஆசிரியர் மேலும் பல செய்திகளைச் சேர்த்து விரிவாக்கித் தாமே இரண்டாம் பதிப்பைத் தொடங்கினார். 1936-இல் வெளியான இரண்டாம் பதிப்போ 1634 பக்கங்களைக் கொண்டது.

இந்நூலில், அகத்திய முனிவர் முதலாக வௌவால் ஈறாகப் பல பெயர்கள் விளக்கப்பட்டுள்ளன. பிற்சேர்க் கையாக, சைவத் திருப்பதிகள், வைணவத் திருப் பதிகள், அரச மரபுகள் முதலியன பற்றிய பலவகைச் செய்திகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

தமிழாசிரியர்க்கும், சொற்பொழிவாளர்க்கும், எழுத் தாளர்க்கும் ஆராய்ச்சியாளர்க்கும் எய்ப்பினில் வைப்பே போல் பெருந்துணை புரிந்துவரும் பெரு நூல் இது என்றால் மிகையாகாது.

## கார்னேழ்சன் தமிழ் மொழி யகராதி

தமிழுக்குத் தமிழான இஃதும் மிகப்பெரிய அகராதி தான். நா. கதிரைவேற்பிள்ளையவர்களின் படைப்பில்

மேலும் தம் கைவண்ணம் கூட்டி வண்ணக் களஞ்சியம் காஞ்சி-நாகலிங்க முதலியார் இவ்வகராதியைப் புதிய வடிவில் அமைத்தார். இதிலும் நான்கு தொகுதிகள் உள்ளன. காலம் 1911.

## பழமொழி யகராதி

அகர வரிசையில் தமிழ்ப் பழமொழிகள் தரப்பட்டுள்ள இவ்வகராதியின் ஆசிரியர் சு. அனவரத விநாயகம் பிள்ளையவர்கள். இது, சென்னை ரிப்பன் அச்சியந்திர சாலையில் 1913-இல் அச்சிடப்பட்டது.

## இலக்கியச் சொல் அகராதி

இது, கலித்தொகை, இராமாயணம், சிந்தாமணி, நிகண்டுகள் முதலிய இலக்கியங்களில் உள்ள இன்றியமையாப் பெயர்ச் சொற்கள் அகரவரிசையில் பொருள் கூறப்பட்டிருக்கும் அகராதியாகும். இதன் ஆசிரியர் சுன்னாகம் (யாழ்ப்பாணம்) அ. குமாரசாமி பிள்ளையவர்கள். அச்சான காலம் 1914.

## ஆங்கிலம் - தமிழ் - ஆங்கில அகராதி

Junior School Dictionary (English–Tamil–English) என்னும் பெயருடைய இவ்வகராதி, ஆங்கிலத்துக்குத் தமிழாலும் ஆங்கிலத்தாலும் பொருள் கூறும் அகராதியாகும். ஆசிரியர் பி. என். சங்கர நாராயணப் பிள்ளை. முதல் பதிப்பின் காலம் 1914.

## தமிழ் மொழி யகராதி

தமிழுக்குத் தமிழாய் 1918–இல் வெளியான இவ்வகராதி கா. நமச்சிவாய முதலியாரது முயற்சியின் வடிவமாகும்.

### விசாகப் பெருமாள் தமிழகராதி

தமிழுக்குத் தமிழான இவ்வகராதி, விசாகப் பெருமாள் ஐயரது உழைப்பின் உருவமாகும்.

### பைபிள் அகராதி
### (The Tamil Bible Dictionary)

பைபிள் செய்திகள் அகரவரிசையில் தரப்பட்டுள்ள இத் தமிழகராதியின் ஆசிரியர் கிலேற்றன் ஏ. சி. (Clayton, A. C.) என்பவர். இது, சென்னை சி. எல். எஸ். அச்சகத்தில் *1923*-இல் அச்சாயிற்று.

### தமிழ் லெக்சிகன்

சென்னைப் பல்கலைக் கழக ஆட்சியின் கீழ் வெளியான இவ் வகராதி, 'Tamil Lexicon' என்று ஆங்கிலத்திலும், 'சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி' என்று தமிழிலும் அழைக்கப்படும். இது தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலத்தாலும் தமிழாலும் பொருள் கூறும் ஒரு தலை சிறந்த அகராதியாகும். தமிழர்கள் தமிழ்ச் சொல்லுக்குப் பொருள் அறிந்து கொள்ளப் பயன்படுவதோடு, ஆங்கிலம் தெரிந்த அயல் மொழிக்காரர்கள் தமிழ் கற்பதற்குப் பெருந்துணை புரிவது இவ்வகராதி. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லும் தமிழ் எழுத்துக்களால் எழுதப்பட்டிருப்பதோடு, பக்கத்தில் ஆங்கில எழுத்துக்களாலும் எழுதப் பட்டுள்ளன. அந்த ஆங்கில எழுத்துக்களின் துணைகொண்டு, ஆங்கிலமறிந்தவர்கள் தமிழ்ச் சொற்களை எளிதில் திருத்தமாக ஒலிக்க (உச்சரிக்க) முடியும். தமிழ் எழுத்துக்களுக்கேற்ப ஆங்கில எழுத்துக்களின் கீழும் மேலும் தக்க அடையாளம் இருக்கும். அ என்பதற்கு a என்பது; ஆ என்னும் நெடிலுக்கு a என்னும் எழுத்தின் மேல் சிறு கோடு; ன என்பதற்கு N ; ங என்பதற்கு N மேலே ஒரு புள்ளி ;

ண என்பதற்கு N கீழே ஒரு புள்ளி ; ன என்பதற்கு N கீழே ஒரு கோடு—இப்படியாக எழுத்துக்கள் தக்க முறையில் அடையாளப்படுத்தப்பட்டு, முகப்பில் அடையாள விவரமும் தரப்பட்டிருப்பதால், ஆங்கில மறிந்த அயலார் எளிதில் தமிழ்ச் சொற்களை ஒலிக்க முடியும்.

மற்றும் இவ்வகராதியில், தூய தமிழ்ச் சொற்கள் அல்லாத சொற்கள்—அதாவது—பிற மொழிகளி லிருந்து தமிழுக்கு வந்த சொற்கள். *இந்த உடுக்குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளன. சொற்களின் வேர்ப் (Root) பகுதி இடையில்-இந்தச் சிறுகோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. கூட்டுச் சொற்களின் உறுப்புக் களும் இடையிடையே சிறுகோடிட்டு ஆங்கில எழுத்துக்களால் எழுதிக் காட்டப்பட்டுள்ளன. இம் முயற்சிகள் தமிழ்கற்பார்க்கு மிகவும் பயனுடையவை யன்றோ ? மேலும், இவ்வகராதியில் சிலவிடங்களில் குறிப்பிட்ட தமிழ்ச் சொல், மலையாளம், கன்னடம் தெலுங்கு போன்ற மொழிகளில் அதே உருவத்தில்—அல்லது—சிறிது திரிந்த உருவத்தில் வழங்கப்பட்டு வருவதும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இது, ஒப்பியல் மொழியாராய்ச்சியாளர்க்கு நல் விருந்து.

இவையேயன்றி இவ்வகராதியில் இன்னொரு சிறப்பும் உண்டு. அதாவது,—ஒரு சொல்லுக்குரிய பொருள் கொடுக்கப்பட்டதும், அதன் பக்கத்திலேயே, இந்தச் சொல் இதே பொருளில் இன்ன நூலில் எடுத் தாளப்பட்டுள்ளதென நூல் மேற்கோளும் கொடுக்கப் பட்டுள்ளது.

பல்துறைக் கலைநூற்களிலுள்ள சொற்களேயல்லாமல், உலகியல் வழக்குச்சொற்களும் இவ்வகராதியில் நிரம்ப இடம் பெற்றுள்ளன. அவற்றின் பக்கத்தில் உலக வழக்குச் சொல் என்ற அறிவிப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மிகமிக நீளமும் அகலமும் உடைய தாளில் ஏறக்குறைய 4000 (நாலாயிரம்) பக்கங்களுடைய இப்பேரகராதி ஆறு (Volumes) பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெரும்பிரிவிலும் பலஉட்பிரிவுகள் (Parts) உள்ளன. ஆறு பெரும் பிரிவுகளிலும் மொத்தம் இருபந்தைந்து உட்பிரிவுகள் உள்ளன. ஒவ்வொர் உட்பிரிவும் தனித்தனி நூலாக அச்சிடப்பெற்றது. முதல் உட்பிரிவு 1923-ஆம் ஆண்டிலேயே அச்சு தொடங்கப்பட்டு 1924-இல் தான் முடிவுற்று வெளியாகியது. இப்படி ஒவ்வோர் உட்பிரிவும் அச்சாகிக்கொண்டுவர, இறுதி உட்பிரிவு 1936-இல் தான் அச்சாகிமுடிந்தது. ஆக, 1923-இல் அச்சு தொடங்கப்பட்ட இவ்வகராதி 1936-இல் தான் முழு உருவம் பெற்றது. இப்பேரகராதியில் 1,04,405 சொற்கள் பொருள் விளக்கப்பட்டுள்ளன.

இந்த இருபத்தைந்து பிரிவுகளில் அடங்காமல் விடுபட்ட 20,000 சொற்கள் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டன. அவையும் அகரவரிசையில் பொருள் விளக்கப்பட்டு, மூன்று பாகங்களாக்கப்பட்டு, பிற்சேர்க்கைத் தனிப் பதிப்பாக (Supplement Edition) 1938-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன.

பன்னூறாயிரம் ரூபாய் செலவிட்டுக் கொண்ட இவ்வகராதி தோன்றின வரலாறும் தெரியவேண்டுமல்லவா? இப்படியொரு தமிழ்ப் பேரகராதி தோற்று

விக்கவேண்டும் என்னும் திட்டம் 1911-ஆம் ஆண்டில் சென்னை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அரசு முயற்சி எடுத்துக்கொள்ளவே, அகராதி அமைப்புக்குழுவும் ஆசிரியர் குழுவும் தோன்றின. அகராதி வேலையின் மேலாட்சிப் பொறுப்பு சென்னைப் பல்கலைக் கழகத்திடம் (University of Madras) ஒப்படைக்கப்பட்டது. ஆசிரியர் குழுவின் தலைவராக (Chief Editor) ரெவரன்ட். ஜே. எஸ். சண்ட்லர் (Rev. J. S. Chandler) அமர்த்தப்பட்டார்.

ஒருவிதமாக 1913 சனவரியில் அகராதி வேலை தொடங்கப்பட்டு நடைபெற்று வந்தது. இடையில் முதன்மையாசிரியர் பதவியிலிருந்து சண்ட்லர் விலகியதால் 1922–இல். சு. அனவரத விநாயகம் பிள்ளை அவ்விடத்திற்கு அமர்த்தப்பட்டார். பின்பு அவரும் விலகியதால் 1924-இல் சி. பி. வேங்கடராம ஐயர் அமர்த்தப்பட்டார். பின்னர் அவரும் விலகியதால் 1926-இல் எஸ். வையாபுரிப்பிள்ளை அமர்த்தப்பட்டார். இவர் முதன்மையாசிரியர் பொறுப்பில் இறுதிவரையும் நிலையாக இருந்து அகராதிப்பணியை முடித்து வைத்தார். முதன்மையாசிரியர்க்குத் துணையாசிரியர்களாக. நன்கு கற்றுத் தேர்ந்த அறிஞர் பலர் அமர்த்தப்பட்டுப் பணிபுரிந்தனர்.

பல்லாண்டுகளையும் பன்னூறாயிரம் ரூபாய்களையும் பலருடைய உழைப்பினையும் விழுங்கிவிட்ட இத்தமிழ்ப் பேரகராதி மொத்தத்தில் பெறும் பயன் தரத் தக்கதொன்றும். இதனைப் பயன்படுத்துவோர்க்கு உதவும்படியாக இதன் தொடக்கத்திலும் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புக்கள் மிகவும் பாராட்டற் பாலவை.

இனி, இவ்வகராதியின் மாதிரிக்காக, 'அஃகுதல்' என்னும் சொல்லுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொருள்; விளக்கங்கள் வருமாறு:—

அஃகு—தல் (1) akku, 5 v. intr. [K. akkudisu.] Prob. அல்கு—, 1. To be shortened, as a vowel; அளவிற் குறுகுதல். (நன்னூல் - 60). 2. To be reduced, to shrink; சுருங்குதல். 'கற்பக் கழிமடம் அஃகும்' (நான் மணிக் கடிகை - 29). 3. To be dejected; மனங்குன்றுதல். 4. To be acute, refined; நுண்ணிதாதல். 'அஃகியகன்ற அறிவு' (திருக்குறள்-175). 5. To pass away; கழிந்து போதல். 'அல்லாயிரமாயிரம் அஃகினவால்' (கம்பராமாயணம் — அயோத்தியா காண்டம்-69). 6. To become closed, compressed, as a flower; குவிதல். 'ஆம்பல்......மீட்டஃகுதலும்' (காஞ்சிப் புராணம்—திருக்கண். 104).

அஃகு (2) akku, N. < அஃகு—. Oozing water ஊறுநீர். (திவாகர நிகண்டு).

மேலே முதல் பத்தியில் அஃகு என்னும் வினைச் சொல்லுக்குரிய ஆறு பொருள்களும், இரண்டாம் பத்தியில் அஃகு என்னும் பெயர்ச் சொல்லுக்குரிய ஒரு பொருளும், பல்வகை அடையாளக் குறிகளுடனும், ஆங்கில விளக்கத்துடனும், இலக்கியச் சான்றுகளுடனும் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். (K. akkudisu) என்றால், அஃகுதல் என்பது கன்னட மொழியில் "அக்குடிசு" என்று வழங்கப்படும் என்று பொருளாம். இவ்வாறே மற்ற குறிப்புக்களையும், அகராதியின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள அடையாள விவரங்களின்படிப் படித்தறிந்துகொள்க.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்றபடி, மேலே தரப்பட்டுள்ள ஒரு மாதிரியிலிருந்தே இவ்வகராதியின் பெரும்பயன் புலனாகுமே!

## தற்காலத் தமிழ்ச் சொல் அகராதி

இது ச. பவானந்தம் பிள்ளையவர்களால் தொகுக்கப் பெற்று 1925-இல் வெளியிடப்பட்டது. ஆசிரியர் தம் காலத்தில் புதிதாய் வழக்கத்துக்கு வந்த பல்வகைக் கலைச்சொற்களைத் தொகுத்துப் பொருளுடன் வெளியிட்டதால் "தற்காலத் தமிழ்ச் சொல் அகராதி' எனப் பெயரிட்டார். இதன் முதல் பதிப்பைச் சென்னை மாக்மில்லன் நிறுவனத்தார் வெளியிட்ட 1925-ஆம் ஆண்டிற்கும் இன்றைய 1965-ஆம் ஆண்டிற்கும் இடையில் இன்னும் எத்தனையோ 'தற்காலத்' தமிழ்ச் சொற்கள் புதியனவாகத் தோன்றியுள்ளனவே!

## சுப்பையர் ஆங்கிலம் - ஆங்கிலம் - தமிழகராதி

The Excelsior Senior School Dictionary English—English—Tamil என்னும் பெயர் பொறிக்கப்பட்டுள்ள இவ்வகராதி, ஆங்கிலத்துக்கு ஆங்கிலத்தாலும் தமிழாலும் பொருள் கூறுவது. ஆசிரியர் K. V. சுப்பையர் M. A. L. T., M. R. A. S. முதல் பதிப்பின் காலம் 1932.

## "ஜூபிலி" தமிழ்ப் பேரகராதி

தமிழுக்குத் தமிழான இவ்வகராதி, நான்கு தொகுதிகளுடன் 1386 பெரிய பக்கங்கள் கொண்ட பேரகராதியாகும். தொகுப்பாசிரியர் நெல்லை எஸ் சங்கரலிங்கமுதலியாரவர்கள். முதல் பதிப்பான காலம்

ஆங்கில நாட்டு ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் வெள்ளி விழாக் கொண்டாட்ட நினைவாக வெளியிடப்பட்டதால் இது 'ஜூபிலி' என்னும் அடைமொழி பெற்றதாம். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் முதலிய பெரும் புலவர்கள் பலர் இதற்குச் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளனர்.

## ஆனந்த விகடன் சித்திரப்போட்டி அகராதி

இஃது, ஆனந்தவிகடன் குறுக்கெழுத்துச் சித்திரப் போட்டியில் ஈடுபட்டோர் பயன்படுத்தும் நோக்கத்துடன் உருவான அகராதியாகும். இதனைப் பொதுவாக மற்றவரும் பயன்படுத்தலாம் என முன்னுரையில் கூறப்பட்டுள்ளது. 2040 பக்கங்கள் உள்ள இவ்வகராதியின் காலம் 1935 ஆம் ஆண்டு.

## இராமநாதன் ஆங்கிலத் தமிழகராதி

ஆங்கிலத்துக்குத் தமிழால் பொருள் கூறும் அகராதி. ஆசிரியர் பி. இராமநாதன் M. A. காலம் 1936.

## மதுரைத் தமிழ்ப் பேரகராதி

புலவர் பலரால் தொகுக்கப்பட்டு நான்கு தொகுதிகளுடன் கூடிய இப் பேரகராதிஇரண்டு பாகங்களாக அச்சிடப்பட்டுள்ளது. முதல் பாகத்தில் 1229 பெரிய பக்கங்களும், இரண்டாவது பாகத்தில் 1058 பெரிய பக்கங்களும் உள்ளன. இதனை வெளியிட்டவர்: மதுரை இ. மா. கோபால கிருஷ்ணக்கோன் அவர்கள். முதற்பதிப்பின் காலம் : 1937.

## தமிழ் — சம்சுகிருத அகராதி

இது, தமிழ்ச் சொல்லுக்கு சம்சுகிருத எழுத்தாலான சம்சுகிருதச் சொல்லால் பொருள் கூறும் அகராதி. இதன் ஆசிரியர் நே. ஈ. வேங்கடேச சர்மா அவர்கள். சென்னை ''பியர்லெஸ்'' அச்சுக்கூடத்தில் ஈசுவர ஆண்டு விநாயகர் சதுர்த்தியின்போது பதிப்பிக்கப்பட்டதாக நூலின் முன்னுரை கூறுகிறது. எப்போது வந்த ஈசுவர ஆண்டெனில், கிடைத்துள்ள

பதிப்பின் தாள் ஓரளவு நன்றாக—புதிய நிலையில் இருப்பதால் அண்மையில் வந்த ஈசுவர ஆண்டாகத் தான் இருக்கவேண்டும். அப்படியெனில் இதன்காலம் கி. பி. 1937 ஆகும்

## சம்சுகிருதம் — தமிழ் அகராதி

இது, சம்சுகிருத எழுத்தாலேயே எழுதப்பட்டுள்ள சம்சுகிருதச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லால் பொருள் கூறும் அகராதி. இதன் ஆசிரியர் 1937-ஆம் ஆண்டில் தமிழ்—சம்சுகிருத அகராதி எழுதி வெளியிட்ட அதே நே. ஈ. வேங்கடேச சர்மா

## வடசொல் தமிழ் அகரவரிசை

இதுஆகாசம், சலம், சந்தோஷம் முதலியவைபோல, வடமொழி எனப்படும் சம்சுகிருதத்திலிருந்து தமிழுக்கு வந்து தமிழ் எழுத்துக்களாலேயே எழுதப்பட்டுள்ள வடசொற்களுக்குத் தமிழ்ச் சொற்களால் பொருள் கூறும் அகராதியாகும். எனவே, மேலே கூறப்பட்டுள்ள சம்சுகிருதத் தமிழ் அகராதிக்கும், இந்த வட சொல் தமிழ் அகரவரிசைக்கும் உள்ள வேறு பாட்டை யுணரவேண்டும்.

இவ்வகராதியின் ஆசிரியர் : தனித்தமிழ் வேந்தராகிய மறைமலையடிகளின் மகளார் தி. நீலாம்பிகையம்மையார். நூலின் பெயராக அகராதி என்று கூறுமல் "அகரவரிசை" என்று கூறியிருப்பதிலிருந்தே அம்மையாரின் தனித்தமிழ்ப் பற்று வெளிப்படுகிறது. 292 பக்கங்கள் கொண்ட இந்நூலில் 5000 வடசொற்கட்குமேல் பொருள் கூறப்பட்டுள்ளன.

## வடசொல் அகரவரிசைச் சுருக்கம்

தி. நீலாம்பிகையம்மையாரால் இயற்றப்பட்டதாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள வடசொல் தமிழ் அகர வரிசை என்னும் அகராதியின் சுருக்கமே இவ்வகராதி யாகும். குறிப்பிட்ட சில வடசொற்கள் மட்டும் இதில் இடம்பெற்றுள்ளன. இதன் இரண்டாம் பதிப்புக்கூட 1938-இல் தமிழ்ப்பாதுகாப்புக் கழகத்தால் வெளியிடப் பட்டுள்ளது.

## சொற்பிறப்பு — ஒப்பியல் தமிழ் அகராதி

இவ்வகராதி, An Etymological And Comparative Lexicon of the Tamil Language" என முதலில் ஆங்கிலத் தில் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் : இலங்கையில் தலைசிறந்த பேரறிஞரான ஞானப்பிர காச அடிகளார் (Rev. S. Gnana Prakasar, O.M.I.) ஆவர். இதன் அச்சுத்தொடக்க ஆண்டு 1938 ஆகும். இவ் வகராதியின் சிறப்புக்கள் சொல்லி முடியா !

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி யின் (Tamil Lexicon) சிறப்புக் கூறுகளுள் பல அமைந் திருப்பதோடு, மேலும் சொற்பிறப்பும் மொழிஒப்பிய லும் விரிந்த அளவில் கூறப்பட்டிருப்பது இவ்வக ராதிக்குத் தனிச்சிறப்பாகும். அதாவது, — தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலச்சொல்லாலும் தமிழ்ச் சொல்லா லும் பொருள் கூறப்பட்டிருக்கும் இவ்வகராதியில், எடுத்துக்கொண்ட ஒரு சொல், எந்த வேரிலிருந்து எப்படிப்பிறந்து உருவாகிறது என்பது காட்டப்பட் டிருப்பதோடு, அத்தமிழ்ச் சொல், மற்ற இந்தியமொழி களிலும் ஐரோப்பிய மொழிகளிலும் ஒத்த நிலையில் வழங்கப்படுகிற அவ்வம் மொழியுருவங்களும்

(Indexes of Words Quoted From Indo-European Languages) கொடுக்கப்பட்டிருப்பது, இவ்வகராதிக்கு மட்டுமன்றித் தமிழ் மொழிக்கும் மாபெருஞ் சிறப்பளிப்பதாயுள்ளது.

ஆம், தமிழுக்குச் சிறப்புதான் ! இவ்வகராதியின் ஆசிரியர் ஞானப்பிரகாச அடிகளார் தமது முன்னுரையில் பின்வருங் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்:—

"தமிழ்ச் சொற்கள் முதல் முதல் மக்களினத்தில் மொழி தோன்றத் தொடங்கிய காலத்தில் எழுந்த சொல்லொலிகளை அடிப்படையாகக் கொண்டவை தமிழ்ச் சொற்களால் உணர்த்தப்படுங் கருத்துக்கள், மக்களினத்தின் பொதுப் பண்பைக் குறிக்கும் அடிப்படையாகும்; எனவே, கூர்ந்து ஆராயின், தமிழ்ச் சொற்களின் வேரிலிருந்தே உலக மொழிகளின் சொற்கள் தோன்றிப் பல்வேறு வடிவங் கொண்டன என்பது புலப்படும்."

இக்கருத்துப்படத் துணிந்து எழுதியுள்ளார் அறிஞர் ஞானப்பிரகாசர். தமிழ்ச் சொற்களிலிருந்துதான் இந்திய மொழிச் சொற்கள் தோன்றின என்பது பரவலான பழங்கருத்து. ஆனால், ஐரோப்பிய மொழிச் சொற்களும் தமிழ்ச் சொற்களிலிருந்தே தோன்றின என்னும் மாபெருங் கருத்து, ஞானப்பிரகாசர் போன்ற ஒரு சிலரால்மட்டும் ஆராய்ந்து சொல்லப்பட்ட புது விருந்தாம்.

இனி, இவ்வகராதியின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக, 'அகழ்தல்' என்னும் சொல்லுக்குக் கூறப்பட்டுள்ள விளக்கம் வருமாறு:—

" அகழ்—தல் akal 4. v. tr. [From akal; 2nd. format. differentiated into l for greater emphasis : 'to widen a hole' cf. al- அகலின் திரிபு; மேல்வ. வியஞ். உறுதியின் பொருட்டு ழகரமாயிற்று. 'ஓட்டையைப் பெரிதாக்கல்': ஆழ்தல் காண்க] 1. To excavate; தோண்டுதல்; 2. To uproot அடியோடு களைதல் (சூதசங்கிதை. சிவ. 13. 31).

K. agal—Tu. agar, aguru, agal cf Lat. Allus 'deep; high,' alvus 'valley' G. alt. Eng. old. The Lat alo. Got. alan & C..."

மேலே கொடுக்கப்பட்டுள்ள அகராதிப் பகுதியின் முதல் பத்தியில், 'அகழ்தல்' என்பதற்குச் சொற்பிறப்பும் ஆங்கிலச் சொல்லாலும் தமிழ்ச் சொல்லாலும் பொருளும் கூறப்பட்டுள்ளன; இரண்டாம் பத்தியில், கன்னடம், துளு ஆகிய இந்திய மொழிகளிலும், இலத்தீன், செர்மனி, ஆங்கிலம், (கிழக்கு செர்மனியில் வழங்கிய) கோதீக் ஆகிய ஐரோப்பிய மொழிகளிலும் 'அகழ்' என்னும் தமிழ்ச் சொல்லோடு ஒத்துள்ள சொல்லுருவங்கள் ஒப்பியல் முறையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இப்பகுதியின் இடையிடையே காணப்படும் சுருக்கக் குறியீடுகளை, அகராதியின் முகப்பில் தரப்பட்டுள்ள அடையாள விளக்கங்களின் துணைகொண்டு புரிந்து கொள்க; ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இப்படியொரு தலைசிறந்த-ஈடு இணையற்ற முயற்சியை எடுத்துக் கொண்ட பேரறிஞராகிய ஞானப்பிரகாச அடிகளார்க்குத் தமிழ் மக்கள் என்ன கைம்மாறு செய்ய முடியும்!

## கலைச் சொல் அகராதி

ஆங்கிலத்தில் உள்ள கலைச் சொற்களுக்குத் தமிழ்ச் சொற்களால் பொருள் கூறும் இவ்வகராதி,

திருநெல்வேலி–சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தால் 1938–இல் பதிப்பிக்கப்பட்டது. இதில், 1. கணிதம் (Mathematics), 2. பூதநூல் (Physics), 3. வேதிநூல் (Chemistry), 4. பயிர் நூல் (Botany), 5. விலங்கு நூல் (Zoology), 6. உடலியலும் நலவழியும் (Physiology and Hygiene), 7. பூகோளம் (Geography), 8. வரலாறு முதலியன (History, etc.), 9. வேளாண்மை (Agriculture) ஆகிய ஒன்பது பிரிவுகளின் கீழ், இவ்வொன்பது கலைகளைப் பற்றிய ஆங்கிலச் சொற்கள் தமிழ்ச் சொல் விளக்கம் பெற்றுள்ளன. தமிழில் கலைச் சொற்கள் இல்லையெனும் குறையைப் போக்கும் முயற்சிகளுள் இஃதும் ஒன்று!

### கலைச் சொற்கள்-பொதுவியல்

பல்வகை ஆங்கிலக் கலைச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்கள் தரப்பட்டுள்ளன. ஆசிரியர்: சாமி வேலாயுதம் பிள்ளை. ஆண்டு: 1940.

### கழகத் தமிழ்க் கையகராதி

தமிழுக்குத் தமிழான இக்கையடக்க அகராதியை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1940–இல் வெளியிட்டது. இதன் ஆசிரியர்கள்: சேலை. சகதேவ முதலியார், காழி, சிவ. கண்ணுசாமி பிள்ளை ஆகிய இருவர்.

### ஆனந்த விகடன் போட்டி ஆசான்

ஆனந்தவிகடன் போட்டியில் விடையாக வந்த சொற்கள் அகர வரிசையில் தொகுக்கப் பெற்ற அகராதியே யிது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரே அதனதன் போட்டி வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டு ஒன்று வருமாறு:—

**அகம்—இது பிடித்தவர்கள் பிறர் சொல்வதை அவ்வள வாக லக்ஷ்யஞ் செய்ய மாட்டார்கள்.**

இம்மாதிரி போட்டி ஆசான்கள் ஆங்கிலத்தில் உண்டு. அதுபோலவே இது ஆக்கப்பட்டுள்ளது. மேலும் போட்டியில் கலந்துகொள்வோர்க்கு ஒரு வழிகாட்டியாக இருக்கும் என்னும் நோக்கத்துடன் இது வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. இதனை 1940-இல், சென்னை பி. என். சிம்மம் அண்டு கோ. வெளியிட்டது.

## இந்தி - தமிழ் அகராதி

இந்திச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லால் பொருள் கூறும் இவ்வகராதியை, தட்சிண பாரத இந்தி பிரசார சபையினர் வெளியிட்டுள்ளனர்.

## நகர நாட்டாண்மைக் கழக ஆட்சிமுறைச் சொல்லகராதி

நகர நாட்டாண்மைக் கழக ஆட்சிமுறை பற்றிய ஆங்கிலக் கலைச் சொற்கட்கு நேரான தமிழ்ச் சொற்கள் தரப்பட்டுள்ள இவ்வகராதி தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தால் 1941-இல் வெளியிடப்பட்டது.

## ரகர-றகர அகராதி

இது, அரம், மரம்-அறம், மறம் என்பன போல ரகர இன எழுத்துக்களும் றகர இன எழுத்துக்களும் வந்துள்ள தமிழ்ச் சொற்கள் அகர வரிசையில் தொகுக்கப்பட்டுப் பொருள் கூறப்பட்டிருக்கும் அகராதியாகும். எந்த ‘ர’ போடுவது – இடையின ‘ர’ போடுவதா-வல்லின ‘ற’ போடுவதா என்ற ஐயம் ஏற்படின்

இவ்வகராதி துணை செய்யும். வேறு பெரிய பொது அகராதியைக் கொண்டும் தெரிந்து கொள்ளலாம்; ஆனால் அதில் பல பக்கங்களைப் புரட்டவேண்டும்; இதிலோ உடனடியாக எடுத்துவிடலாம். இஃது ஒரு வகைப் புது முயற்சியே.

இதன் ஆசிரியர் புதுவை சுந்தர சண்முகனார். இது 1948-இல் எழுதி முடிக்கப்பட்டு, பாவேந்தர் பாரதிதாசனார் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

## இலக்கண அகராதி

இலக்கண நூற்களிலுள்ள இலக்கணக் கலைச் சொற்கள் அகர வரிசைப்படுத்தப்பட்டு, சிறு சிறு கட்டுரைபோல் விரிவாக விளக்கஞ் செய்யப்பட்டுள்ள இவ்வகராதியின் ஆசிரியர் புதுவை சுந்தர சண்முகனார். இது 1948-இல் எழுதப்பட்டது, அவ்வாண்டிலேயே சுந்தர சண்முகனாரால் எழுதப்பட்டு, புதுவைப் பைந் தமிழ்ப் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்ட தமிழ்த் திருநாள், குழந்தைப் பாட்டு, ஆத்திசூடி அமிழ்தம், சிறுவர் செய்யுட் சோலை ஆகிய நூற்களின் இறுதி மேலட்டைப் பக்கத்தில் 'இலக்கண அகராதி'—விரை வில் வெளிவரும்-என்று விளம்பரப்படுத்தப்பட்டும், இதுவரை இதுவெளியாகும் சூழ்நிலை ஏற்படவே யில்லை.

## கார்த்திகேயினி புதுமுறை அகராதி

புதுக்கோட்டை - இராமச்சந்திரபுரம் - கார்த்திகே யினி பிரசுரத்தாரால் 1949-இல் வெளியிடப்பட்ட இப் புதுமுறை அகராதியின் தொகுப்பாசிரியர், முன்னாள் 'தாய்நாடு' ஆசிரியராகிய எஸ். நடராசன் என்பவர்.

இதில், ண-ன; ர-ற; ல-ழ-ள-ஆகிய வேறுபாடுடைய எழுத்துக்களாலான சொற்கள் அகரவரிசையில் பக்கத் தில் பக்கத்தில் நிறுத்தப்பட்டுப் பொருள் கூறப் பட்டிருப்பது ஒரு புதுமுறையன்றோ? எடுத்துக் காட்டுக்கள் வருமாறு :—

அணல் ... ... அனல் ... ... ...

அரம் ... ... அறம் ... ... ...

அகலி ... ... அகழி ... ... அகளி ... ... ...

தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் வாழ் வோர்க்கு ல-ள என்னும் எழுத்துக்களில் பிழையேற் படும்; தென் மாவட்டங்களாகிய பாண்டிய நாட்டில் வாழ்வோருக்கு ல-ழ-ள என்னும்மூன்றும் சிக்கலுக்குரிய வை; ஏனெனில், அவர்கள் வாழைப்பழம், கோழிக்குஞ்சு என்பனபோல 'ழகரத்தை லகரமாக ஒலிப்பவர்கள். அதனால்தான் இப்புதுமுறை யகராதியில் ல-ழ-ள என்னும்மூன்றும் இணைக்கப்பட்டுள்ளன. இதன் நோக் கம் வட மாவட்டத்தார் சிலர்க்குப் புரியாமற் போகலா மாதலின் ஈண்டு விளக்கப்பட்டது.

## லிப்கோ ஆங்கிலம்–ஆங்கிலம்-தமிழகராதி

ஆங்கிலத்துக்கு ஆங்கிலத்தாலும் தமிழாலும் பொருள் கூறும் இவ்வகராதி, 'லிப்கோ' (Lifco) எனப் படும் சென்னை லிட்டில் பிளவர் கம்பெனியால் 1950–இல் வெளியிடப்பட்டது.

## லிப்கோ தமிழ்-தமிழ் அகராதி

தமிழுக்குத் தமிழான இவ்வகராதியும் 'லிப்கோ நிறுவனத்தால் வெளியானது.

## செந்தமிழ் அகராதி

தமிழுக்குத் தமிழான இவ்வகராதியின் ஆசிரியர் ந.சி. கந்தையா பிள்ளை. ஆண்டு 1950.

## திருக்குறள் அகர வரிசை

இது, திருக்குறள் முழுவதிலும் உள்ள பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச் சொல், ஆகிய அனைத்துச் சொற்களும் அகர வரிசைப் படுத்தப்பட்ட அகராதியாகும். குறிப்பிட்ட ஒரு சொல் திருக்குறளில் என்ன பொருளில்-என்னென்ன பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள உதவும் நோக்கத்துடன் இஃது ஆக்கப் பட்டது. இதன் ஆசிரியர் புதுவை சுந்தர சண்முகனார்.

1950–ஆம் ஆண்டு கோடை விடுமுறையில் தொடங்கப்பட்டுத் தொடர்ந்து செய்யப்பட்டு வந்த இவ்வகராதி, சிறப்பான முறையில் 'திருக்குறள் சொல் லடைவு' என்னும் படைப்பு சாமி. வேலாயுதம் பிள்ளை யவர்களால் வெளியிடப்பட்டு விட்டதால், ஆசிரியரால் சோர்ந்து கைவிடப்பட்டது. வெளிவராமல், கத்தை கத்தையாகக் கையெழுத்து வடிவில் உள்ள இவ்வக ராதியின் 'அலங்கோலத்தை' இன்றும் ஆசிரியரிடம் காணலாம்.

## திருக்குறள் அகராதி (கந்தையா)

திருக்குறள் சொற்பொருள் விளக்க அகராதி யாகிய இது, ந.சி. கந்தையா பிள்ளையால் தொகுக்கப் பெற்று வெளிவந்துள்ளது.

## காலக் குறிப்பு அகராதி

காலங்களின் விளக்கக் குறிப்பாகிய இந்த அகராதியின் ஆசிரியரும் ந.சி. கந்தையா பிள்ளையவர்களே.

## சங்கர் ஆங்கிலம்-ஆங்கிலம்-தமிழகராதி

The Shankar Dictionary எனப்படும் இது, ஆங்கிலத்துக்கு ஆங்கிலத்தாலும் தமிழாலும் பொருள் கூறுவது. ஆசிரியர் A.M.S. ராகவன், B.A.,L.T. ஆண்டு 1952.

## கழக ஆங்கிலத் தமிழ்க் கையகராதி

ஆங்கிலத்துக்குத் தமிழான கையடக்க முள்ள இவ்வகராதியின் ஆசிரியர் கா. அப்பாதுரை பிள்ளை M.A., L.T. அவர்கள். இது, சென்னை சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தால் 1952-இல் பதிப்பிக்கப் பட்டது.

## கழகப் பழமொழி அகர வரிசை

சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தால் 1952-இல் வெளியிடப்பட்ட இவ்வகராதியில், 10683 தமிழ்ப் பழமொழிகள் அகரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன. இது நல்ல முயற்சி. பழமொழிகளைப் பற்றி யறிய விரும்புவோர்க்கு இஃது ஒரு பெருங்கண்ணுடியாகும். மாதிரிக்காக, இந்நூலிலுள்ள முதல் பழமொழியும் இறுதிப் பழமொழியும் வருமாறு:-

(1) "அகங்குளிர முகம் மலரும்."

(10683) "வெளவின பேர்க்கு முடிவது சுருக்கு."

## தமிழ்ப் புலவர் அகராதி (கந்தையா)

### (புலவர் அகர வரிசை)

இதில், அகத்தியர்முதல் வையாபுரி முதலியார் ஈருகப் பல தமிழ்ப் புலவர்களைப் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் ந. சி. கந்தையா பிள்ளை. காலம் 1952.

## தமிழ் இலக்கிய அகராதி (கந்தையா)

### (இலக்கிய அகர வரிசை)

இதில், அகத்தியம்முதல் வைராக்கிய தீபம் ஈருகப் பல தமிழ் இலக்கியங்களைப் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் ஆசிரியரும் ந.சி. கந்தையா பிள்ளையே. ஆண்டு 1952.

## திருக்குறள் சொல்லடைவு

இந்த அரிய படைப்பின் ஆசிரியர் சாமி. வேலா யுதம் பிள்ளையவர்கள்; வெளியீடு மொழியரசிப் பதிப் பகம்; காலம் 1952–ஆம் ஆண்டு.

இவ்வெளியீட்டில், திருக்குறள் முழுவதிலும் உள்ள எல்லாச் சொற்களும் அகரவரிசைப் படுத்தப் பட்டு, திருவள்ளுவரால் இன்னின்ன பொருளில் கை யாளப் பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளன. ஒரு சொல்லை எடுத்துக்கொண்டு, அது இத்தனை யாவது-இத்தனையாவது குறள்களில் வந்துள்ளது எனக் குறள்களின் எண்களையும், அவ்வக் குறள்களில் அச்சொல் தரும் பொருள்களையும் ஆசிரியர் வேலாயுதம் பிள்ளை அழகாக அறிவித்துள்ளார். சுருக்கக் குறியீடுகள் பலவும் தந்துள்ளார்.

குறிப்பிட்ட ஒரு சொல் உலகப் பெருநூலாகிய திருக்குறளில் இருக்கிறதா எனக் கண்டறியவும், அப்படியிருப்பின் அது திருவள்ளுவர் காலத்தில் நூல் வழக்கில் இருந்திருக்கிறது எனத் தெரிந்து கொள்ளவும், திருக்குறள் ஆட்சியைக் கொண்டு அச்சொல்லுக்கு இன்ன-அல்லது-இன்னின்ன பொருள் உண்டு என வரையறுக்கவும் இவ்வெளியீடு பெருந்துணை புரியும். எனவே, திருக்குறள் ஆராய்ச்சியாளர்க்கும் மொழியாராய்ச்சியாளர்க்கும் கால ஆராய்ச்சியாளர்க்கும் ஒருசேரப்பயனளிப்பது இந்நூல் என்று துணிந்து கூறலாம். மாதிரிக்காக 'அகம்' என்னும் சொல்லுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது வருமாறு:—

"அகம் (ஒன்.பொ.பெ.)=நெஞ்சம் 277, 298, 708, 787, 830. [அகப்பட்டி=((தன்னிற்)) சுருங்கிய பட்டி] (ப.தொ). 1074. [வையகம், வானகம்] (ஒன்.இட.)=இடம் 101, 547, 1055."

சுருக்கக் குறியீடுகளின் விளக்கங்களை நூலின் முன்னுரையில் கண்டுகொள்க.

## கலைக் களஞ்சியம்

Tamil Encyclopaedia—

அபிதான சிந்தாமணியை ஒரு சார் சிறு தமிழ்க் கலைக் களஞ்சியம் எனலாம். ஆனல், இந்தக் 'கலைக் களஞ்சியம்' என்னும் படைப்பே, உண்மையில் முழுமை பெற்ற முதல் தமிழ்க் கலைக்களஞ்சியம் (Tamil Encyclopaedia) ஆகும். அபிதான சிந்தாமணியில், புராண-இதிகாச-காவிய-இலக்கிய-இலக்கண-நூற்கள் சார்பான சில்துறைக் கலைச் செய்திகளே ஓரளவு விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இந்தக் கலைக் களஞ்சியத்திலோ, அபிதான சிந்தாமணியில் உள்ளன

போன்ற செய்திகளுடன், இக்காலத்திலுள்ள பல் துறைக் கலைச் செய்திகளும் மிகவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. பல்வகைக் கலைகளைப் பற்றிய அறிவையும் பெற்றுக் கொள்ளத் தக்க களஞ்சியமாக இப் படைப்பு இருத்தலின் இது கலைக் களஞ்சியம் என்னும் பெயர் பெற்றது. இதனை ஆங்கிலத்தில் 'என்சைகிளோபெடியா' (Encyclopaedia) என்பர்.

உலகத்தில் இருந்த-இருக்கிற இன்றியமையாத எந்தப் பொருளைப் பற்றியும்-யாரைப் பற்றியும் தகுந்த பட விளக்கங்களுடன் தெரிந்து கொள்ள உதவும் கலைக் களஞ்சியங்கள் ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய ஐரோப்பிய மொழிகளில் விரிவாக உள்ளன. அத்தகு அரும் பெரும் படைப்பு தமிழ்மொழியில் இல்லாத குறையை இந்தக் கலைக் களஞ்சியம் தோன்றிப் போக்கியது. இத் தமிழ்க் கலைக் களஞ்சியத்தில் இடம் பெற்றுள்ள கலைகளின் பெயர்கள் வருமாறு:—

தமிழ், உயிரியல், தாவரவியல், விலங்கியல், புவியியல், காட்டியல், தத்துவம், சமயம், உளவியல், அறவியல், அளவையியல், ஆங்கிலம், நாடகம், இசை, நடனம், மானிடவியல், தொல் பொருளியல், வரலாறு, அரசியல், பொருளியல், பௌதிகம், இரசாயனம், ஓவியம், சிற்பம், கட்டடச் சிற்பம், மொழியியல், கல்வி, பொறியியல், தொழில் நுட்பவியல், போரியல், சுரங்கவியல், சட்டம், பூகோளவியல், மருத்துவம், இரண சிகிச்சை, உளவியல், உடலியல், உடல் நலவியல், கால் நடை மருத்துவம், சமசுகிருதம், மலையாளம், தெலுங்கு, கன்னடம், உருது, கணிதம், வானவியல், புள்ளியியல், விவசாயம் முதலியன.

மேற் கூறப்பட்டுள்ள தலைப்புக்களின் கீழ் ஆயிரக்கணக்கான செய்திகள் அகரவரிசையில் இதில் விளக்கப் பெற்றுள்ளன. விளக்கம் என்றால் ஒரு வரியிலோ அல்லது சில வரிகளிலோ அன்று; மிகவும் நீளமும் அகலமுங் கொண்ட தாளில்—பத்தி பத்தியாக பக்கம் பக்கமாக-கட்டுரை வடிவில் விளக்கம் காணப் படுகிறது. சில தலைப்புக்களின் கீழ்க் கொடுக்கப்பட் டுள்ள செய்திகளைத் தனித்தனியாக அச்சிட்டால் ஒவ் வொன்றும் தனித்தனி நூலாகச் சிறந்து காட்சியளிக் கும். கலைக் களஞ்சியத்தின் இன்னுமொரு சிறப் பாவது:—பெரும்பாலார் பார்க்காத சில பொருள்களும், பார்க்க முடியாத சில பொருள்களும், எழுத்துக்களால் விளக்கிப் புரியவைக்க முடியாத சில பொருள்களும் பொருத்தமான படங்களின் துணைகொண்டு விளக்கப் பட்டுள்ளன. இத்தகு பயனுள்ள கலைக் களஞ்சியம் ஒன்பது தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுத் தனித் தனி யாக ஒன்பது பெரிய வெளியீடுகளாகப் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இனி இது தோன்றிய வரலாறு வரு மாறு:—

சென்னை மாநிலத்தின் முன்னாள் கல்வியமைச்சர் தி.சு. அவிநாசிலிங்கம் செட்டியாரவர்களின் முயற்சி யால் 1947-ஆம் ஆண்டில் 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' என ஒரு நிறுவனம் சென்னையில் தோன்றியது. அன்னா ரது விடா முயற்சியாலும் பலர் ஈந்த பொருளுதவியா லும் 1947-அக்டோபர்-விசயதசமியன்று தமிழ் வளர்ச் சிக் கழகம் கலைக்களஞ்சிய வேலையைச் சென்னைப் பல் கலைக்கழகக் கட்டிடத்தில் தொடங்கியது. ஆசிரியர் குழுவின் தலைவராக (Chief Editor) ம.ப. பெரியசாமித் தூரன் அமர்த்தப்பட்டார். பல் துறைக் கலைகளில்

வல்ல டாக்டர். மு. வரதராசனுர், பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் முதலிய பேரறிஞர்கள் பலர் கட்டுரைகள் எழுதி வழங்கினர். பல ஆண்டுகள் தொடர்ந்து வேலை நடந்தது.

பலரது உழைப்பையும் பொருட்செலவையும் பல்லாண்டுகளையும் விழுங்கிய இக் கலைக் களஞ்சியத்தின் முதல் தொகுதி 1954-இல் வெளியிடப்பட்டது. அடுத்தடுத்து மற்ற தொகுதிகளும் வெளியாயின. இறுதி ஒன்பதாம் தொகுதி 1962-ஆம் ஆண்டு வெளியாகியது.

கலைக் களஞ்சியம், தனித் தனிச் சொற்கட்குத் தனித் தனிச் சொற்களால் பொருள்கூறும் சொல்லகராதி வகையைச் சேர்ந்ததன்று; அன்றுதொட்டு இன்றுவரையான உலகப் பொருள்கள் பலவற்றைப் பற்றி விளக்கும் ஒரு மாபெருஞ் செல்வக்களஞ்சியமாம்.

## சுருக்கத் தமிழ் அகராதி

Concise Tamil Lexicon என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இவ்வகராதி தமிழுக்கு ஆங்கிலத்தாலும் தமிழாலும் பொருள் கூறுவது. இது, சென்னை-மயிலாப்பூர்-மதராஸ் லாஜர்னல் அச்சுக் கூடத்தாரால் 1955-இல் வெளியிடப்பட்டது. இஃதொன்றும் புதிய அகராதியன்று; தமிழ் லெக்சிகன் (Tamil Lexicon) எனப்படும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதியின் சுருக்கமேயிது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் இசைவு பெற்றே இது சுருக்கமாக வெளியிடப்பட்டது.

## கோனுர் தமிழ்க் கையகராதி

தமிழுக்குத் தமிழாய்க் கையடக்கமாகவுள்ள இவ்வகராதியின் ஆசிரியர் ஐயம்பெருமாள் கோனுர். இது

பழநியப்பா பிரதர்சு நிறுவனத்தாரால் 1955-இல் வெளி யிடப்பட்டது.

## மாடர்ன் ஆங்கில-ஆங்கிலத்-தமிழகராதி

Modern Srimagal Pocket Dictionary (English-English-Tamil) எனப்படும் இவ்வகராதி ஆங்கிலத்துக்கு ஆங்கிலத்தாலும் தமிழாலும் பொருள் கூறுவதாகும். இதில் 20,000 சொற்கட்குமேல் பொருள் கூறப்பட்டுள்ளன. வெளியான ஆண்டு 1955.

## தமிழ் இலக்கிய அகராதி (பாலூரார்)

இது, தமிழ் இலக்கியங்களின் சார்பாகவுள்ள பல் வகைப் பெயர்கள் அகரவரிசைப் படுத்தப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளது. இதில், சொல் அகராதி, தொகை யுகராதி, பிரபந்த அகராதி, நூல் அகராதி, புலவர் அகராதி, பிற்சேர்க்கை என்னும் பிரிவுகள் உள்ளன. அத திலும் அதனைச் சார்ந்த பெயர்கள் விளக்கப்பட் டுள்ளன. பிற்சேர்க்கைப் பிரிவில் இக்காலப் பெரியோர் இடம் பெற்றுள்ளனர். இவ்வகராதி, ஒரு சொல் லுக்கு ஒரு சொல்லால் பொருள் கூறுவதன்று; பத்தி பத்தியாகப் பல வாக்கியங்களால் விளக்கந் தருவது.

இதன் ஆசிரியர்: வித்துவான், பாலூர். கண் ணப்ப முதலியாரவர்கள். வெளியீடு: சென்னை சென்ட் ரல் புக் டிப்போ. ஆண்டு 1957.

## தமிழ்ப் புலவர் அகரவரிசை (கழகம்)

இவ்வகராதியில், அகத்தியப்ப முதலியார்முதல் வைத்தியலிங்கப் பிள்ளையீருக 1595 தமிழ்ப் புலவர்கள் அகரவரிசைப் படுத்தப்பட்டு விவரங் கொடுக்கப் பட்டுள்ளார்கள். இது மூன்று பாகங்களாகப் பிரித்து

வெளியிடப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர்: சு. அ. இராமசாமிப் புலவர். வெளியீடு: சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம். காலம்: 1959–60 ஆம் ஆண்டுகள்.

### சிலேடை யகர வரிசை

சிலேடை என்றால் இருபொருள். இவ்வகராதியில், இரு பொருள் தரும் தொடர்கள் பல, அகரவரிசையில் அடுக்கப்பட்டு இரு இரு பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன. இஃதும் ஒரு வகைப் புது முயற்சியே. இதன் ஆசிரியர்: சு. அ. இராமசாமிப் புலவர்; வெளியீடு: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்; ஆண்டு: 1960.

மாதிரிக்காக, இவ்வகராதியிலுள்ள முதல் தொடருக்கும் இறுதித் தொடருக்கும் கூறப்பட்டுள்ள இரு பொருள்கள் வருமாறு:—

முதல் தொடர்:—

**அகங்கார நந்த:** அகங்காரம் நந்த = ஆணவமானது கெட;

அகம் கார் அநந்த = உடல் கருமையாகப் பெற்ற திருமாலே.

இறுதித் தொடர் :—

**வையம் பொருவா :** வையம் பொருவா = பூமி ஒப்பாகாத;

வை அம்பு ஒருவா = கூரிய அம்பு நீங்காத.

இந்த அகராதியைப் பயில்பவர்கள், திரிபும் யமகமுமாக உள்ள கடினமான செய்யுட்களை எளிதில் பிரித்துப் பொருள்காணும் ஆற்றலைப் பெறுவர்.

இப்படியாகப் புதுப்புது முறையில் பயனுள்ள பல்வகை அகராதிகளை வெளியிட்டுவரும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் மிகவும் பாராட்டற்பாலர்.

## தமிழ் ஆட்சிச் சொற்கள்

### (அகராதியும்-விளக்கமும்)

தமிழ் மொழியால் ஆட்சி நடத்துவதற்குத் தமிழில் புதுக் கலைச் சொற்கள் வேண்டுமல்லவா? அதற்கு உதவும் வகையில், அகர வரிசையில் ஆங்கிலச் சொற்கட்கு நேரான தமிழ்ச் சொற்கள் இதில் கொடுக்கப்பட்டுள்ளன. பிற்பகுதியில் போதிய விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. இவ்வகராதியின் ஆசிரியர்: கீ. இராமலிங்கனார்; வெளியீடு: மதுரை விசாலாட்சி பதிப்பகம்; ஆண்டு: 1960.

## A Dravidian Etymological Dictionary

இந்த அகராதி, தமிழ், தெலுங்கு, கன்னடம், முதலிய பத்தொன்பது திராவிட இன மொழிகளில் உள்ள ஒத்த உருவமுடைய சொற்கள் சிலவற்றை ரோமன் (ஆங்கில) எழுத்தால் எழுதி, அவற்றிற்கு ஆங்கிலத்தில் பொருள் கூறப்பட்டிருப்பதாகும். இந்த அகராதியில் திராவிட மொழிகளுக்குள் தமிழே முதன்மை பெற்றிருக்கிறது. முதலில் ஒரு தமிழ்ச் சொல் நிறுத்தப்பட்டுப் பொருள் கூறப்பட்டுள்ளது; அதனை யடுத்து அதே பத்தியில் அந்தத் தமிழ்ச் சொல்லோடு ஏறக்குறைய ஒத்த தோற்ற

முடைய வேறு சில திராவிட மொழிகளின் சொற்கள் நிறுத்தப்பட்டுப் பொருள் கூறப்பட்டுள்ளன. சில சொற்கட்குப் பொருள் கூறுமிடத்து, திராவிட மொழி களிலுள்ள ஒத்த உருவமுடைய சொற்களே யன்றி, திராவிட மொழிகளிலிருந்து இந்தோ-ஆரியன் மொழி களிலும் ஐரோப்பிய மொழிகளிலும் சென்று கலந் துள்ள சில சொற்களும் உடன் கொடுக்கப்பட்டுப் பொருள் கூறப்பட்டுள்ளன.

இந்த அகராதியில் சொல் விளக்கம் செய்யப் பெற்றுள்ள திராவிட மொழிகளின் பெயர்கள் வரு மாறு:—

1. தமிழ் (Tamil)
2. மலையாளம் (Malayalam)
3. கோடம் (Kota)
4. தூதம் (Toda)
5. கன்னடம் (Kannada)
   [படகம்-Badaga]
6. குடகு (Kodagu)
7. துளு (Tulu)
8. தெலுங்கு (Telugu)
9. கொலாமி (Kolami)
10. நாய்க்கி (Naiki)
11. பர்சி (Parji)
12. கடபா (Gadba)
   [ஒல்லாரி-Ollari]
   [சாலுர்-Salur)
13. கோந்த் (Gondi)
14. கோண்டா (Konda)
15. கூ (Kui)
16. கூய் (Kuwi)
   [ஃபிட்செரால்டு—Fitzgerald]
   [ஸ்குல்சா-Schulza]
17. குரூக் (Kurukh)
18. மால்டோ (Malto)
19. பிராகுய் (Brahui)

இந்த அகராதியில் சொல் விளக்கம் செய்யப்பெற்றுள்ள பதினைந்து இந்தோ-ஆரியன் மொழிகளின் பெயர்கள் வருமாறு:—

1. சமசுகிருதம் (Sanskrit)
2. பாலி (Pali)
3. பிராகிருதம் (Prakrit)
4. நேபாளி (Napali)
5. மராத்தி (Marathi)
6. இந்தி (Hindi)
7. அஸ்ஸாமி (Assamese)
8. வங்காளம் (Bengali)
9. குசராத்தி (Gujarati)
10. ஹல்பி (Halbi)
11. கொங்காணி (Konkani)
12. குமாவோன் (Kumaon)
13. ஒரியி (Oriya)
14. சிந்தி (Sindhi)
15. சிங்களம் (Singhalese)

இந்த அகராதியில் இடம் பெற்றுள்ள மற்ற மொழிகள் வருமாறு:—

1. அரபு மொழி (Arabic)
2. பாரசீகம் ((Persian)
3. பலுச்சி (Baluchi)
4. கிரீக் (Greek)
5. இலத்தீன் (Latin)
6. ஆங்கிலம் (English)

தமிழ்ச் சொற்களும், தமிழிலிருந்து பிரிந்த தென்னிந்திய மொழிச் சொற்களும், தமிழோடு தொடர்புடைய மற்ற மற்ற திராவிட மொழிச் சொற்களும், தமிழிலிருந்து சென்று கலந்த வடமொழிச் சொற்களும் வட இந்திய மொழிச் சொற்களும், சிங்களம், நேபாளம், அரபு, பாரசீகம் முதலிய ஆசிய மொழிச் சொற்களும், கிரீக், இலத்தீன், ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழிச் சொற்களும் இன்ன பிறவும் இடம் பெற்றுள்ள இந்த அகராதி உண்மையிலேயே ஓர் அரும் பெரும் படைப்பே யாகுமன்றோ?

இப்படி ஓர் அகராதி படைக்கவேண்டுமெனில் எத்தனை மொழியறிவு வேண்டும்! ஆம்! அத்தனை மொழியறிவும் பெற்ற பேராசிரியர்கள் இருவர் இணைந்து இந்த அகராதியை ஆக்கியுள்ளனர். அவர்களுள் ஒருவர், ஆக்சுபோர்டு பல்கலைக் கழகப் (University of oxford) பேராசிரியர் டி. பர்ரோ (T. Burrow) என்பவர்; மற்றவர், கலிபோர்னியா பல்கலைக் கழகப் (University of California) பேராசிரியர் எம். பி. எமினோ (M. B. Emeneau) என்பவராவர். இவர்தம் அரிய அயரா முயற்சியின் உருவமாகிய இவ்வகராதியால், தமிழ் மொழி அனைத்துலகினும் பரந்துபட்டுள்ள பெருமை புலனாகிற தன்றோ? அயல் நாட்டு வெள்ளையர்களாகிய இப்பேராசிரியப் பெருமக்கள் இருவரும் நம்நாட்டு மொழிகளைப் பற்றி இவ்வளவு அறிந்திருப்பதை எண்ணுங்கால், நம் நாட்டில் படித்தவர்கள் எனப்படுபவர்களுட் பெரும்பாலோர் தமது தாய் மொழியைப் பற்றிகூட ஒன்றும் அறியாதிருப்பது வருத்தப்படத் தக்கது மட்டுமன்றி வெட்கப்படத் தக்கது மாகுமன்றோ?

உயரிய உழைப்பின் உருவமாகிய இவ்வகராதியில் மொத்தம் 4572 சொற்கள் பொருள் விளக்கப்பட்டுள்ளன. மிகமிக நீளமும் அகலமுங் கொண்ட 610 பக்கங்களையுடைய இந்த வெளியீட்டின் விலையோ நூறு ரூபாய் எண்பது காசு (ரூ. 100–80) ஆகும். இந்நூல், இங்கிலாந்து நாட்டில் ஆக்சுபோர்டு நகரில் 1961-ஆம் ஆண்டில் அச்சிடப் பெற்றது.

புகழ்ச்சிக்குரிய இவ்வகராதியின் மாதிரிச் சுவைக்காக, இதன் தொடக்கத்திலும் இடையிலும் கடையிலும் உள்ள மூன்று சொற்களின் பொருள் விளக்கங்களை இங்கே காண்பாம்.

முதலாவது 'அ' என்னும் எழுத்தைப் பற்றிய விளக்க மாதலின் அதனை விடுத்து, இரண்டாவதாகிய 'அஃகு' என்னுஞ் சொல்லின் பொருள் விளக்கங் காண்பாம்:

Ta. *akku* (*akki*—) to be reduced, shrink, be dejected, become closed (as a flower);? *alku* (alki–) to shrink, diminish, lessen; *alkal* deficiency, poverty. ka. *akkudisu* to become small, wame.

மேலே, Ta. என்பது Tamil = தமிழ்; Ka. என்பது Kannada = கன்னடம். மற்றும் மேலுள்ளவற்றுள் சாய்வெழுத்தில் உள்ளவை தமிழ்ச் சொற்களும் கன்னடச் சொல்லுமாகும். மற்றவை ஆங்கிலப் பொருள் விளக்கம். பின் வருவனவற்றிற்கும் இவ்வாறே கொள்க. இனி, அகராதியின் இடையில் 2812–ஆம் சொல்லாக உள்ள 'தெப்பம்' என்னும் சொல்லின் பொருள் விளக்கம் வருமாறு:—

Ta. *teppam*, *teppal* raft, float. ka. *teppa* id. Tu. *teppa* id. Te. *teppa*, *tepa* id., catamaran. cf. Skt. *tarpa-*, *talpa-*, Pkt. *tappa*—. Mar. *tapha*, *tarapha*. cf. Periplus *TPa*II II *aYa*.

மேலே, Ta. என்பது Tamil = தமிழ்; Ka. என்பது Kannada = கன்னடம்; Tu. என்பது Tulu = துளு; Te. என்பது Telugu = தெலுங்கு; Skt. என்பது Sanskrit = சமசுகிருதம்; Pkt. என்பது Prakrit = பிராகிருதம்; Mar. என்பது Marathi = மராத்தி. இறுதியில் உள்ள

TPaII II aYa என்பது கிரீக் மொழிச் சொல்லாகும். இந்தப் பகுதியைக் காணுங்கால், தெப்பம் என்னும் தமிழ்ச் சொல், தென்னிந்தியத் திராவிட மொழிகளில்

ஊடுருவி நிற்பதன்றி, வட இந்திய மொழிகளிலும் ஐரோப்பிய மொழிகளிலுங்கூடச் சென்று கலந்துள் ளமை புலனுகுமே! இனி, அகராதியின் இறுதிச் சொல் லாக—அதாவது 4572–ஆம் சொல்லாக உள்ள 'வையம்' என்னும் சொல்லின் பொருள் விளக்கம் வரு மாறு:—

Ta. *Vaiyam* earth; *vaiy-akam* id., world. Ma. *vayyam*, *vaiyakam* id.

மேலே, Ta. என்பது Tamil=தமிழ்; Ma. என்பது Malayalam=மலையாளம்.

மொத்தத்தில், இந்த அகராதியினல் தமிழ் மொழி யின் பரந்துபட்ட பான்மையும் ஆட்சியும் மாட்சியும் குன்றின்மே லிட்ட விளக்கென விளங்குவதால், இந்த அகராதியை ஆக்கிய பேராசிரியர்கள் இருவர்க்கும் தமிழ் மக்கள் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டவராவர்.

### ஆட்சிச் சொல் லகராதி

glossary of Administrative Terms (English-Tamil) எனப்படும் இவ்வகராதியில் ஆங்கிலத்தில் உள்ள கலைச் சொற்கள் பலவற்றிற்கு நேரான தமிழ்ச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சென்னை அரசினர் அச்சுக்கூடக் கண்காணிப்பாளரால் அச்சிடப்பட்ட இவ்வகராதி வெளியான ஆண்டு, நூலின் எந்த இடத் திலும் கண்களுக்குப் புலப்படவேயில்லை.

### தமிழ் - இந்தி அகராதி

தமிழ்ச் சொல்லுக்கு இந்திச் சொல்லால் பொருள் கூறுவது இந்த அகராதி. வெளியீடு: தட்சிண பாரத இந்தி பிரசார சபை. ஆண்டு: 1962.

### சம்சுகிருதம்–தமிழ் அகராதி

சம்சுகிருத எழுத்தால் எழுதப்பட்ட சம்சுகிருதச் சொற்களுக்குத் தமிழ்ச் சொல்லால் பொருள் கூறும் அகராதியிது. தொகுத்தவர் : பாபநாசம் - சிவன் அவர்கள். ஆண்டு: 1962.

### பல்பொருள் ஆங்கிலத் தமிழ் வரிசை

பல்துறைப் பொருள் பற்றிய ஆங்கிலச் சொற்கட்குத் தமிழ்ச் சொற்களால் பொருள் கூறுவது இது. தொகுப்பாசிரியர்கள்: மு. சதாசிவம், சி. சிவராமலிங்கம் ஆகிய அறிஞர் இருவர். வெளியீடு: சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம். ஆண்டு 1962.

### நாலாயிரத் திவ்யப் பிரபந்த அகராதி

ஆழ்வார்களின் அருளிச் செயல்களின் தொகுப்பாகிய நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திலுள்ள இன்றியமையாச் சொற்கள் அகரவரிசையில் பொருள் கூறப்பட்டிருப்பது இவ்வகராதி. 'அஃகம்' என்பது முதல் 'வையம்' என்பது ஈருகப் பல சொற்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இதன் தொகுப்பாசிரியர்: சீரங்கம் தேவத்தானப் பத்திரிகை ஆசிரியராகிய பார்த்தசாரதி ஐயங்கார். ஆண்டு: 1963.

### திவ்யப் பிரபந்த அகராதி

இந்தப் பெயரில் சிறிய அளவிலும் ஓர் அகராதி உள்ளது.

### ஆங்கிலம்-தமிழ்ச் சொற்களஞ்சியம்

**English - Tamil - Dictionary.**

தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலச் சொல்லாலும் தமிழ்ச்சொல்லாலும் பொருள்கூறும் 'தமிழ் லெக்சிகன்'

என்னும் பேரகராதியைப் படைத்த சென்னைப் பல்கலைக் கழகமே, இந்த ஆங்கிலம்—தமிழ்ச் சொற் களஞ்சியத்தையும் உருவாக்கியது. ஆங்கிலச் சொற் கட்கும் பெருவழக்கிலுள்ள சொற்றொடர்கட்கும் இயன்றவரை தூய தமிழ்ச் சொற்களாலும் தொடர் களாலும் பொருள் கூறுகிறது இவ்வகராதி. ஆங்கிலச் சொற்கட்கு நேரான நல்ல தமிழ்ச் சொற்களைத் தந் திருப்பது இதன் தனிச் சிறப்பாகும்.

இப்படியொரு சிறந்த அகராதி படைக்க வேண்டு மென்று சென்னைப் பல்கலைக் கழக 'சிண்டிகேட்' அவை யானது, 1955 அக்டோபர் 27-ஆம் நாள் கூட்டத்தில் தீர்மானித்தது. இதற்காகச் சூழ்வினைக் (ஆலோசனைக்) குழுவும் ஆசிரியர் குழுவும் ஏற்படுத்தப்பட்டன. ஆசிரியர் குழுவின் தலைவராக திரு. அ. சி. சிதம்பர நாதச் செட்டியார் அமர்த்தப்பட்டார். 1959 மார்ச்சு 16-ஆம் நாள் வேலை தொடங்கப் பெற்றது.

இவ்வகராதி மூன்று பெரும் பாகங்களாகப் பிரிக் கப்பட்டுள்ளது. முதல் பாகம் 1963—இலும், இரண்டாம் பாகம் 1964-இலும் வெளியிடப்பட்டன. மூன்றும் பாகம் 1965-இல் முடிவடைந்தது.

தலைசிறந்த தமிழ்ப்பேரறிஞருள் ஒருவரான டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியாரைத் தலைமைப் பதிப்பாசிரியராகக் கொண்ட பயன் மிக்க இவ்வகரா தியின் மாதிரிக்காக, 'arch' என்னும் ஆங்கிலச் சொல், பெயர்ச் சொல்லாகவும் (n=noun), குறிப்புப் பெயரெச்ச மாகவும் (a-adjective); வினைச் சொல்லாகவும் (v=verb) நின்று தரும் பொருள்கள் முறையே வருமாறு:—

arch, n. மேல் வளைவு, வில் வளைவு, கவான், பாலம் தளம் முதலியவற்றைத் தாங்கும் வளைவுக் கட்டுக் கோப்பு; வில் வளைவைப் போன்ற வடிவமுள்ள பொருள்; வில் வளைவான கூரை; மேலே கவான் அமைந்த நடை வழி; a. முதன்மையான, விளங்கித் தோன்றுகிற; தந்திரமுள்ள; சதுரப் பாடுடைய; வேடிக்கைக்காகக் குறும்பு செய்கிற; v. வில் வளைவு அமை; கவான் ஆக்கு; மேல் வளைவு கட்டு; கரைக்குக் கரை கவான் நீட்டிக் கட்டு; வில் போல் வளை.

## மாணவர்க்கு உதவும் ஆங்கிலம்-தமிழ் அகராதி

ஆங்கிலச் சொல்லுக்கு ஆங்கிலச் சொல்லாலும் தமிழ்ச் சொல்லாலும் பொருள் கூறும் இவ்வகராதி யின் ஆசிரியர்கள் ரெவரெண்டு. அருள் தங்கையா, திரு. கே. எஸ். சாமிநாதன் ஆகியோர் ஆவர். இதில் 5000 சொற்கள் அடங்கியுள்ளன. காலம்: 1964

## அடுக்கு மொழி அகராதி

அடுக்கு மொழிகள் அகர வரிசையில் கொடுக்கப் பட்டுள்ள இவ்வெளியீட்டின் ஆசிரியர் உயர்திரு. சதாசிவம் அவர்கள்.

## கம்பர் தமிழ் அகராதி

கம்பர் தமிழ் அகராதி என்னும் பெயரில் ஒரு தமிழ் அகராதி வெளிவந்துள்ளது.

## தி எலிட் ஆங்கில—ஆங்கிலத் தமிழ் அகராதி

The Elite English—English—Tamil Dictionary என்னும் பெயருடைய இது, ஆங்கிலத்திற்கு ஆங்கி லத்திலும் தமிழிலும் பொருள் கூறும் அகராதியாகும்

## எதிர்ப் பத அகராதி

எதிர்ப்பதங்கள் அகரவரிசையில் கொடுக்கப்பட்டிருக்கும் இவ்வகராதியின் ஆசிரியர் மு. சதாசிவம். காலம் 1965. வெளியீடு : பாரி நிலையம், சென்னை.

## அரசினர் ஆங்கில-தமிழ் அகராதி

தமிழ் நாட்டு அரசினரால் அமைக்கப்பட்டதான தமிழ் வெளியீட்டுக் கழகம், ஆக்சுபோர்டு ஆங்கில அகராதியை அடிப்படையாகக் கொண்டு ஆங்கில—தமிழ் அகராதி ஒன்றை வெளியிடும் திட்டத்தை மேற்கொண்டுள்ளதாம். இந்த அகராதி முற்றுப் பெற்றதும், ஒவ்வொன்றும் 500 பக்கங்களைக் கொண்ட 4 அல்லது 5 தொகுதிகளையுடையதாக இருக்குமாம்.

## தனித் தனி இலக்கிய அகராதிகள்

பொதுவாகப் பொதுமக்கள் சொல்லுக்குப் பொருள் தெரிந்து கொள்ள உதவும் பொது அகராதிகளே யன்றி, மற்றும், இலக்கிய அகராதி, புலவர் அகராதி, பழமொழியகராதி, கலைச்சொல் அகராதி முதலிய சிறப்பு அகராதிகளைப் பற்றியும் மேலே கண்டோம்; மேலும், திருக்குறள் சொல்லடைவு, நாலாயிரத் திவ்யப் பிரபந்த அகராதி எனத் தனித்தனி இலக்கிய அகராதிகளைப் பற்றியும் பார்த்தோம். இந்தத் துறையில் இன்னும் பல்வகை முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

## ஐயர் பதிப்பு

தனித்தனி இலக்கிய அகராதிகளுக்கு முன்னோடியாக, உ. வே. சாமிநாத ஐயரவர்கள் தாம் பதிப்பித்த புறநானூறு, குறுந்தொகை, மணிமேகலை முதலிய

இலக்கியங்களின் இறுதியில், அவ்வந் நூலிலுள்ள அருஞ்சொற்களையும் சிறப்புப் பெயர்களையும் திரட்டி அகரவரிசைப் படுத்திச் செய்யுள் எண்ணுடன் தந்துள் ளார்கள். மற்றும் ஐயரவர்கள், குறுந்தொகையின் தொடக்கத்தில் பாடினோர் வரலாற்றையும், புற நானூற்றின் தொடக்கத்தில் பாடினோர் வரலாறு, பாடப்பட்டோர் வரலாறு, சிறப்புச் செய்திகள் முதலிய வற்றையும் அகர வரிசையில் தந்துள்ளார்கள். இம் முன்னோடி முயற்சி, பின்னவர்க்குப் பெரிய வழிகாட்டி யாகும்.

ஐயரவர்களைப் போலவே, சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தார் போன்றவர்களும் தத்தம் நூற் பதிப்புக்களின் இறுதியில் அருஞ்சொல் அகர வரிசை, சிறப்புப் பெயர் அகர வரிசை முதலானவற்றைச் செய் யுள் எண்ணுடன் தந்து வருகின்றனர்.

### சமாசப் பதிப்பு

சென்னை–சைவ சித்தாந்த மகா சமாசத்தினர் 1940–ஆம் ஆண்டில், எட்டுத் தொகை, பத்துப் பாட்டு எனப்படும் சங்ககால மேற்கணக்கு நூற்கள் பதினெட் டினையும் ‘சங்க இலக்கியம்’ என்னும் தலைப்பில் வெளி யிட்டுள்ளனர். அவர்கள் அப்பதிப்பின் இறுதியில், சிறப்புப் பெயர் அகராதி, புலவர்கள் அகராதி, அரசர்கள் அகராதி முதலியன கொடுத்திருப்பது கூட ஒருபெரிய செயலன்று; அவர்கள் அந்தப் பதி னெட்டுச் சங்க நூற்களிலுமுள்ள மொத்தம் 2381 செய் யுட்களையும் ஒன்றன்பின் ஒன்றாக அமைத்திருப்பதே ஒரு வகை அகராதி முறையை ஒட்டித்தான். அவர்கள் அந்த 2381 செய்யுட்களையும் நூல் வாரியாக அமைக்க வில்லை ; அவற்றைப் பாடிய புலவர் வாரியாகவே

அமைத்துள்ளனர். அதாவது, ஒரு புலவரின் பாடல்களே பல நூற்களிலும் உள்ளனவாதலால்,ஐந்நூறுக்கு மேற்பட்ட புலவர்களின் பெயர்களை அகர வரிசையில் அமைத்து, ஒவ்வொருவர் பெயரின் கீழும் அவரவர் பாடிய பாடல்களைப் பல நூற்களிலிருந்தும் கொண்டு வந்து நிரல் செய்துள்ளனர். குறிப்பிட்ட ஒரு புலவர் எந்தெந்த நூலில் என்னென்ன செய்யுள் பாடியுள்ளார் என்பதை யறிவிக்கும் இப்பதிப்பு, சங்கப்புலவர்களைப் பற்றி ஆராய்வோர்க்கு மிகவும் பயனளிக்க வல்லது. மற்றும், இலக்கியச் சொல் அகராதியும் புலவர் அகராதியும் தயாரிப்போர்க்கும் இந்த சமாசப் பதிப்பு பெருந் துணையன்றோ!

இப்படியாக இலக்கியச் சார்பான அகராதித் துறையில் இன்னுஞ் சிலர் வேலை செய்துள்ளனர். கேரளப் பல்கலைக் கழகம் புறநானூற்று அகராதி தயாரித்துள்ளது. அண்ணுமலைப் பல்கலைக் கழக ஆசிரியர் ஆர். பிச்சைக்கண்ணன் குமரகுருபரர் நூற்கட்கு அகராதி ஆக்கியுள்ளார். சென்னை 'மர்ரே கம்பெனி' பொறுப்பில் எஸ். இராசம் என்பவர் 'பாட்டும் தொகையும்' என ஒன்று படைத்துள்ளார். மற்றும், அண்ணுமலைப் பல்கலைக் கழக ஆசிரியர் ச. தண்டபாணி தேசிகரவர்கள் எட்டுத் தொகை பத்துப்பாட்டு இலக்கியங்கட்கு அருஞ்சொல் அகரவரிசை ஆக்குவதாகத் தெரிகிறது. இஃதன்றியும், புதுச்சேரியில் பாரிஸ் அரசினரால் நடத்தப்படும் பிரெஞ்சு கல்வி கலைக் கழகத்தாரும் (French Institute) பிரெஞ்சு மொழியொடு பிணைத்துச் சங்க இலக்கிய அகராதியொன்று படைத்து வருவதாகத் தெரிகிறது. இவர்களே, பிரெஞ்சு மொழியொடு பிணைந்த தொகையகராதி யொன்றும் தொடங்கிச் செய்து வருவதாகத் தோன்றுகிறது.

இப்படியாகத் தமிழகத்தில் பல்வகை அகராதிகள் தோற்றம் எடுத்தன—எடுத்து வருகின்றன. இந்தி-மராத்தி-தெலுங்கு-தமிழ் ஆகிய நான்கு மொழிகள் பிணைந்த மிகச் சிறிய அகராதி யொன்றும் விற்பனைக் காகத் தெருக்களில் உலாவந்தது. இன்னும் பல அகராதி கள் இந்நூலில் குறிப்பிடப்படாமல் விடுபட்டிருக்கலாம். அவற்றையெல்லாம் வாய்ப்பு நேரும்போது அறிந்து கொள்க.

[விடுபட்ட அகராதிகள்]

## தமிழ் ருஷ்ய அகராதி

இது, தமிழ்ச் சொல்லுக்கு ருஷ்ய மொழிச் சொல்லால் பொருள் கூறும் அகராதியாகும். இதன் ஆசிரியர்கள்: அ. மொ. பியாதிகோர்ஸ்கி, லெ. கே. ரூதின் ஆகியோ ராவர். இதில் 38,000 சொற்கள் இடம் பெற்றுள்ளன. இது 1960-ஆம் ஆண்டு மாஸ்கோவில் அச்சிடப்பெற்றது.

## ருஷ்ய தமிழ் அகராதி

இது, ருஷ்யச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லால் பொருள் கூறுவது. ஆசிரியர்கள்: மி. ஸெ. அந்திரோனவ் பி. எச். டி., அ. ஷ. இப்ரஹீமவ், நீ. நி. யுகானவா ஆகிய மூவர். 24,000 சொற்கள் இடம் பெற்றுள்ள இவ்வகராதி, மாஸ்கோவில் 1965-ஆம் ஆண்டு அச்சிடப்பெற்றது.

# ஐந்தாம் பாகம்

# சொல்லும் மொழியும்

## சொல் பிறந்த கதை

சொற்களின் சேர்க்கையே மொழி (பாஷை). மொழி பேசும்போது பல சொற்களைத் தொடர்ந்து ஒலிக்கிறோம். சொற்களின் தொடர்ச்சியைச் சொற்றொடர் அல்லது வாக்கியம் என்கிறோம். மொழி பேசும்போதும் எழுதும்போதும் பல வாக்கியங்கள் இடம் பெறுகின்றன.

காரண காரிய முறைப்படி (Logical Method) எழுத்துக்களால் ஆனது சொல்-சொற்களால் ஆனது வாக்கியம்—வாக்கியங்களால் ஆனது மொழி-என்றாலும், மொழியில் முதலில் எழுத்துக்களும் அடுத்துச் சொற்களும், பின்னர் வாக்கியங்களும் தோன்றவில்லை ; முதலில் வாக்கியங்களும் பின்பு சொற்களும் பின்னரே எழுத்துக்களும் தோன்றின. உளவியல் (Psychological

Method) முறைப்படி இக்கருத்தே பொருத்தமாகப புலப் படுகிறது. எப்படி ?

முதற்காலத்தில் மக்கள் ஒருவர்க்கொருவர் தம் கருத்தை வாக்கியமாகவே பேசித்தெரிவித்துக் கொண்டனர். இன்றுங்கூட இப்படித்தானே ! தனி எழுத்தோ, தனிச் சொல்லோ ஒரு கருத்தை அறிவிக்க முடியாது. சில வேளைகளில் தனிச் சொல் ஒரு கருத்தை அறிவிப்பதுபோல் தோன்றினும், அந்தத் தனிச் சொல்லில் ஒரு வாக்கியம் கட்டாயம் மறைந்திருக்கும். எடுத்துக்காட்டாக, ஒருவர் 'தண்ணீர்' என்று ஒரு சொல் மட்டும் சொல்வாரேயானல், 'தண்ணீர் கொண்டு வா' என்று சொல்கிருர் என்பது கருத்து. எனவே, 'தண்ணீர்' என்னும் ஒரு சொல்லுக்குள் 'தண்ணீர் கொண்டு வா' என்னும் ஒரு வாக்கியம் மறைந்திருப்பது பேச்சுப் பழக்கத்தால் புலனுகிவிடும். பேசுபவர் சில வேளைகளில் முயற்சிச் சிக்கனத்திற்காக, வாக்கியமாகப் பேசாமல் தனிச் சொல் சொல்கிருர் என்பதுதான் இதிலுள்ள உண்மை.

அவ்வளவு ஏன் ? தொடக்கத்தில் குழந்தைகளுங்கூட வாக்கியமாகத்தானே பேசுகிருர்கள் ! இன்னுங் கேட்டால், குழந்தைகளின் குதலைப் பேச்சிலே சொற்களைத் தனித்தனி வடிவத்தில் அடையாளங் கண்டு பிடிக்க முடியாது ; ஏதோ மொத்தையாக ஒலிகளின் சேர்க்கைதான் காதில் விழும் ; பிறகு நாளடைவிலேயே ஒவ்வொரு சொல்லின் உருவமும் பிரிவினை பிரிவினையாகப் புரியும்.

இது போலவே, மக்களினம் பன்னூருயிரம் ஆண்டுகட்கு முன் குழந்தைப் பருவத்திலிருந்த (Basic Period) தொடக்க காலத்தில், ஏதேதோ ஒலிச்

சேர்க்கைகளின் வாயிலாகவே ஒருவர்க்கொருவர் கருத் தறிவித்திருக்கவேண்டும். பின்னரே நாளடைவில் மொத்தையான ஒலித்திரளிலிருந்து தனித் தனியாகச் சொற்கள் பிரிவினை செய்யப்பட்டிருக்க வேண்டும். இதற்கும் வெகு காலத்திற்குப் பின்னரே, ஒவ்வொரு சொல்லின் ஒலியையும் பல கூறுகளாகப் பிரித்து ஒவ் வோர் ஒலிக் கூற்றிற்கும் ஒவ்வோர் எழுத்து கண்டு பிடித்து மொழிக்கு வரிவடிவம் உண்டாக்கினர் அறிஞர்.

'அணில்' என்னும் சொல்லை எடுத்துக்கொண்டால், அ-ணி-ல் என்னும் மூன்று எழுத்துக்களும் உண்டான பின்புதான் சொல் உண்டாயிற்று என்று எவரும் சொல்லார்; அவ்வாறு சொல்லினும் தவறு; ஏனெனில், இன்னும் எழுத்துருவம் பெறுமல் பேச்சளவில் மட்டும் உள்ள மொழிகள் உலகில் எத்தனையோ உள்ளன. எழுதும் மொழிகட்குள்ளுங்கூட, மராத்தி, இந்தி, முத லிய வட இந்திய மொழிகட்குத் தனி எழுத்தின்மை யால் சம்சுகிருத மொழியின் எழுத்தினுலேயே அவை எழுதப்படுகின்றன. ஆங்கிலம், செர்மனி, பிரெஞ்சு முத லிய ஐரோப்பிய மொழிகட்கும், மலாசியாவில் வழங்கும் மலாய் முதலிய தென் கிழக்கு ஆசிய மொழிகட்கும், ஆப்பிரிக்க மொழிகள் சிலவற்றிற்கும் சொந்தமாகத் தனி எழுத்தின்மையால் அவையெல்லாம் இலத்தீன் மொழியின் (a, b, c, d முதலிய இருபத்தாறு) எழுத்துக் களினுலேயே எழுதப்படுகின்றன.

மேலுள்ள பல எடுத்துக்காட்டுகளிலிருந்து, மொழி யில் சொற்றொடர்களும் (வாக்கியங்களும்) அவற்றின் உறுப்பாகிய சொற்களுமே முந்தியவை; சொற்களின் உறுப்பாகிய எழுத்துக்கள் பிந்தியவையே என்னும்

கருத்து நன்கு தெளிவாகும். இக்கருத்துக்கு இயற்கை நிலையை யொட்டி இன்னுங்கூடச் சான்று பகரலாம் :- அதாவது மக்கள் ஐந்து வயது வரையும் சொற்றொடரையும் சொற்களையும் பேச்சின் வாயிலாகக் கற்றுக் கொண்ட பின்னர்தான் அவற்றின் உறுப்பாகிய எழுத்துக்களைக் கற்றுக் கொள்ளத் தொடங்குகின்றனர். மற்றும், சொந்த எழுத்துடைய தமிழ் போன்ற மொழிகளைப் பேசுவோருள்ளும் படிக்காத மக்கள் பலர், பேச்சின் வாயிலாகச் சொற்றொடர்களையும் சொற்களையும் அறிந்து வைத்திருக்கிறார்களே தவிர, எழுத்துக்களை இன்னும் அறிந்தா ரிலர். எனவே, எழுத்து மிகவும் பிந்தியது என்பது உலகறிந்த உண்மையாகும்.

இங்கே, எழுத்து மிகவும் பிந்தியது என்னும் கருத்து இவ்வளவு விரிவாக ஏன் கூறப்பட்டதென்றால்,—சொல்லைவிட எழுத்து எப்படிப் பிந்தியதோ— அது போலவே, சொற்றொடரைவிடச் சொல் பிந்தியது என்னும் கருத்தை வலியுறுத்துவதற்கேயாம். இதனை இன்னுஞ் சிறிது ஆய்வோம் :—

அ, ணி, ல் என்னும் எழுத்துக்களைத் தனித்தனியாக ஒலிக்கும்போது தனி எழுத்துக்குப் பொருள் மதிப்பில்லை; அவை மூன்றையும் சேர்த்து அணில் என ஒலிக்கும்போதே, அந்த ஒலித்திரள் ஓர் உயிர்ப் பொருளைக் குறித்துப் பொருள் மதிப்பு பெறுகிறது. அணில் என்ற சொல்கூட அணில் எனத் தனியாக ஒலிக்கப்படும்போது அணில் என்ன ஆயிற்று என ஒன்றும் புரியாமையால், போதுமான பொருள் மதிப்பு பெறவில்லை; அச் சொல்லே, 'அணில் மரத்தில் கடிது ஓடுகிறது', 'அணில் கடித்த கனி யிது' என வாக்கியத்தில் வைத்துப் பயன்படுத்தப்படும்பொழுது

தனக்குரிய பொருள் மதிப்பைப் பெறுகிறது. மற்றும், 'அணில் மரத்தில் கடிது ஓடுகிறது' என்னும் வாக்கியத்தில் அணில் என்னும் சொல் பொருள் மதிப்பு பெறுவதோடு, அடுத்துள்ள மரம் என்னும் பெயர்ச் சொல்லும் அதனோடு இணைந்துள்ள அத்து, இல் என்னும் இடைச் சொற்களும், அடுத்துள்ள 'கடிது' என்னும் உரிச்சொல்லும், அடுத்துள்ள ஓடு என்னும் வினைச் சொல்லும் அதனோடிணைந்துள்ள கிறு, அ, து என்னும் இடைச்சொற்களுங்கூடத் தத்தமக்குரிய பொருள் மதிப்பைப் பெறுகின்றன. இவற்றைத் தனித்தனியே சொன்னால் ஏது பொருள் மதிப்பு? இதனால்தான், கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், தனித் தனிச் சொற்களைத் தந்து, சொந்த வாக்கியத்தில் வைத்துப் பயன்படுத்தும்படி மாணவரைக் கோருகின்றனர். வாக்கியமாகச் சொல்லும்போது அவ்வாக்கியத்திலுள்ள தனித் தனிச் சொற்களின் பொருள் தன்னில் தானே தெளிவாக விளங்குவதால், அதற்குத் 'தன் பொருளைத் தானே விளக்கும் வாக்கியம்' எனப் பெயர் சொல்லப்படுகிறது.

இந்தக் காலத்தில் பள்ளிக்கூடங்களில் முதல் வகுப்பில் அ, ஆ, இ, ஈ என முதலில் வெற்று எழுத்துக்களைக் கற்பிப்பதில்லை; 'அ' என்னும் தனி எழுத்தை 'அணில்' என்னும் சொல்லின் வாயிலாகவே கற்பிக்கின்றனர் ஆசிரியர்கள். அணில் என்னும் சொல்லைக் கூட, அணிலைப் பார்த்திருக்கிறாயா? அது எங்கே வசிக்கும்? அது என்ன செய்யும்? அது என்ன உண்ணும்? என்பனபோன்ற வாக்கியங்களின் வாயிலாகவே அறிமுகப்படுத்துகின்றனர். அதாவது, முதலில் அணிலைப் பற்றி வாக்கியமாகப் பேசுவார்கள்; பின்னர், வாக்கியத்திலிருந்து அணில் என்னும் சொல்லைத்

தனித்துப் பிரித்தெடுத்து எழுதுவார்கள்; பின்னர், அணில் என்னும் சொல்லிலிருந்து 'அ' என்னும் எழுத்தைத் தனித்துப் பிரித்தெடுத்து எழுதிக் காட்டுவார்கள்—சொல்லவும் செய்வார்கள். இதுதான் இயற்கைக்கு உகந்த உள நூல் முறையாகும்.

இந்தக் காலத்தில் என்றென்ன? அந்தக் காலத்திலேயேகூட, தமிழ்நாட்டு 'மாண்டிசரி' என்று சிறப்பிக்கத் தக்க ஔவைப் பிராட்டியார், 'அறஞ் செய விரும்பு' என்னும் வாக்கியத்தின் வாயிலாக 'அ' என்னும் எழுத்தையும், 'ஆறுவது சினம்' என்னும் வாக்கியத்தின் வாயிலாக 'ஆ' என்னும் எழுத்தையும், இன்னும் இ, ஈ முதலிய மற்ற எழுத்துக்களையும் 'இயல்வது கரவேல்', 'ஈவது விலக்கேல்' முதலிய மற்ற வாக்கியங்களின் வாயிலாகவும் தமிழ்க் குழந்தைகட்கு அறிமுகப்படுத்தி வைத்திருக்கிருர் அல்லவா? அதனையும் ஈண்டு ஒப்பு நோக்குக.

இதுகாறுங் கூறியவற்றிலிருந்து, சொல்லுக்கு முந்தியது சொற்றொடரே என்னும் கருத்து தெள்ளத் தெளிவாகும். அங்ஙனமெனில், தொடக்க காலத்து மக்கள் ஏதோ வாய்க்கு வந்தபடி உளறிய ஒலித் தொடரிலிருந்தே தனித் தனிச் சொற்கள் பிரிக்கப்பட்டன என்னும் முடிவுக்கு வரவேண்டும்.

இந்தக் கருத்து பலருக்குச் செரிமானம் ஆகாது தான்! ஆராய்ச்சிக் கண்கொண்டு கூர்ந்து நோக்குவோரே இதனைச் செரிக்கச் செய்துகொள்ள முடியும்.

இந்தக் கருத்தை மறுப்போர் பின்வருமாறு கூறக் கூடும் :—"மக்கள் முதலில் ஒவ்வொரு பொருளையும்

ஒவ்வொரு செயலையும் ஒவ்வொரு சொல்லால் குறித்தார்கள்; இப்படியாகப் பொருள்கட்கும் செயல்கட்கும் பெயர் வைத்த பின்னரே, பல சொற்களைச் சேர்த்து வாக்கியமாகப் பேசிக் கருத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். தனித் தனிக் கற்கள் இல்லாமல் கட்டடம் கட்ட முடியாதது போலவே, தனித் தனிச் சொற்கள் இல்லாமல் வாக்கியம் அமைக்க முடியாதல்லவா? எனவே, கட்டடத்திற்கு முந்தியது கல்லே என்பது போல, சொற்றொடருக்கு முந்தியது சொல்லே என்பது புலனாகும்.''—

மேலுள்ளவாறு சிலர் கூறக்கூடும். இதிலும் ஓரளவு உண்மையிருக்கிறதென்றாலும், இவ்வுண்மை தொடக்க நிலைக்கு முற்றிலும் பொருந்தாது; தொடக்க நிலைக்கு அடுத்தடுத்த நிலைகளிலேயே இவ்வுண்மை ஓரளவு பொருந்தும். இக்கருத்தைத் தெளிவு செய்யச் சிறிது விளக்கம் தேவை :—

மாந்தர் தனித் தனிக் கற்களை யடுக்கி வீடு கட்டுவது உண்மைதான்! வீட்டிற்கு முந்தியது கல்லே என்பதும் உண்மைதான்! ஆனால் இந்தக் காலத்தில் உள்ளதுபோல் அந்தக் காலத்தில் சுடுமண் (செங்கல்) கற்களோ, கருஞ்சுதை மண் (சிமட்டி) கற்களோ இருக்கவில்லை. மலைக் குகைகளில் வாழ்ந்து பழகியவர்மரபில் வந்த மக்கள், மொத்தமான மலையிலிருந்தே தனித் தனியாகக் கருங்கல் கட்டிகளை வெட்டியெடுத்துப் பின்னர் அவற்றைச் சேர்த்துக் கல்வீடு கட்டினார்கள். இந்தக் காலத்திலுங்கூட, மலைப் பாங்கிலுள்ள ஊர்களில் மதில்கள் கருங்கல் துண்டுகளால் எழுப்பப்பட்டிருப்பதைக் காணலாம். எனவே, தனித் தனிக் கருங்கல் துண்டுகள் எனப்படுபவை, மொத்தமான ஒரு தொகுப்

பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையே என்பது புலனாகும். ஒரு (மலைத்) தொகுப்பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தனித் தனிக் கருங்கல் துண்டங்களைக் கண்ட மக்கள், பின்னர் அவை போலவே செயற்கைக் கற்களைச் செய்யத் தொடங்கினர். செயற்கைக் கற்களுங் கூட மொத்தத் தொகுப்பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையே! நிலத்திலிருந்து மண்ணைத் தோண்டியெடுத்துப் பிசைந்து தனித் தனியாக அறுத்துச் சூளையில் இடப்பட்டவையே செங்கற்கள். சொல்லின் கதையும் இதுவேதான்!

ஊமையர் கைக் குறிப்புடன் ஏதேதோ ஒலிகளையெழுப்பிக் கருத்தறிவிக்க முயல்வது போலவே, முதற் காலத்து மாந்தரும் கைக் குறிப்புடன் ஏதேதோ கூக்குரலிட்டே கருத்தை அறிவித்துக்கொண்டனர். அவர்கள் எந்தப் பொருளைக் காட்டி என்ன ஒலி எழுப்பினுர்களோ அந்த ஒலி அப்பொருளின் பெயராயிற்று; அந்த ஒலிப் பகுதி பிற்காலத்தில் இலக்கணத்தில் 'பெயர்ச் சொல்' எனப்பட்டது. மற்றும், அவர்கள் எந்தச் செயலைக் (வினையைக்) குறிக்க என்ன ஒலி எழுப்பினுர்களோ அந்த ஒலி அச்செயலின் (வினையின்) பெயராயிற்று; அந்த ஒலிப் பகுதி பிற்கால இலக்கணத்தில் 'வினைச் சொல்' எனப்பட்டது. பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும் இப்படி ஏற்பட்டனவே.

தமிழிலக்கணத்தில் பெயர்ச்சொல், வினைச்சொல்' இடைச்சொல், உரிச்சொல் எனச் சொற்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்நான்கனுள் பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களுமே முந்தியவை; இடைச் சொற்களும் உரிச் சொற்களும் பிந்தியவையே. முந்திய பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள்

என்னும் இருவகைக்குள்ளும் பெயர்ச் சொற்களே முந்தியவை. பிந்திய இடைச்சொற்கள், உரிச்சொற்கள் என்னும் இரண்டனுள் இடைச் சொற்களே முந்தியவை. எனவேதான், முன்பின் தோன்றிய முறையைக்கொண்டு சொற்களைப் பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச்சொல், உரிச்சொல் என்ற வரிசையில் நிறுத்தினர் இலக்கண நூலோர். இச் செய்திகளை,

"சொல்லெனப் படுப பெயரே வினை என்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே."

"இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப."

என்னும் தொல்காப்பிய நூற்பாக்களானும்,

"அதுவே,
இயற்சொற் றிரிசொ லியல்பிற் பெயர், வினை
என இரண்டாகும் இடை, உரி அடுத்து
நான்குமாம் திசைவட சொல்லணு காவழி."

என்னும் நன்னூற் பாவானும் நன்கு தெளியலாம். தொல்காப்பியரும் நன்னூலாரும், 'சொற்கள் பெயர்ச் சொல், வினைச்சொல் என இரு வகைப்படும்' என முன்னர்க் கூறி, 'இடைச் சொல்லும் உரிச் சொல்லும் சேர்ந்தால் நான்கு வகையாகும்' எனப் பின்னர் இடைச் சொல்லையும் உரிச்சொல்லையும் இரண்டாந்தர நிலையில் பிரித்துப் பேசியிருக்கும் நுட்பத்தை உணர்க. இலக்கண் ஆசிரியர்கள் இருவரும் இவ்வாறு கூறியிருப்பதன் பொருத்தத்தை ஒரு சிறிது விளக்குவாம் :—

பெயர்ச் சொற்கள் எனப்படுபவை பெரும்பாலும் கண்ணுக்குத் தெரியும் பொருட்களின் பெயர்களே யாகும். முதற்கால மக்கள் முதலில் பொருட்களின்

பெயர்களைத்தான் சூட்டியிருப்பர்; அவர் தம் பேச்சு பொருட்களைப் பற்றியதாகத்தான் முதலில் இருந்திருக்க முடியும்; பின்னரே அவர்கள் பலவிதமான செயல்களில் (வினைகளில்) கருத்துச் செலுத்தியிருப்பர்; அப்போது பலவித வினைச்சொற்கள் தோன்றியிருக்கும். இப்போதும், முதல் முதலாக மொழி பேசத் தொடங்கும் பச்சிளங் குழந்தைகளின் பேச்சைக் கூர்ந்துநோக்கின், முதலில் அவர்தம் வாயிலிருந்து பொருட்களின் பெயர்கள் வெளிப்படுதலையே காண முடியும்; பின்னரே அவர்கள் வினைச் சொற்களை யறிந்து பேசுகின்றனர். எடுத்துக் காட்டாக,—அம்மா, அப்பா, பாச்சி (பால்), சோச்சி (சோறு), தண்ணி (தண்ணீர்), மம்மு, (தின்பண்டம்) முதலிய பெயர்ச் சொற்களைத்தான் குழந்தைகள் முதலில் கூற அறிவார்களே தவிர, ஆடுதல், ஓடுதல், தாண்டுதல், குதித்தல், பேசுதல், பாடுதல் முதலிய வினைச் சொற்களை முதலில் அறியமாட்டார்கள். எனவே, பெயர்ச்சொல்லுக்குப் பின்னரே வினைச் சொல் என்பது பெறப்படும்.

அடுத்து, இடைச்சொல் எனப்படுவது, தனித்துப் பொருள் தரும் ஒரு வகைச் சொல்லன்று; பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் இணைத்துப் பேசும்போது தானாக ஓடிவரும் ஒரு வகை ஒலியமைப்பே இடைச்சொல் எனப்படுவது. எடுத்துக் காட்டு வருமாறு:—மரம் என்பது ஒரு பெயர்ச் சொல்; குதித்தல் (குதி) என்பது ஒரு வினைச்சொல்; 'மரத்திலிருந்து குதித்தான்' என்னும் தொடரில், மரம் என்னும் பெயர்ச் சொல்லின் பின்னே அத்து, இல், இருந்து என்னும் இடைச் சொற்களும், குதி என்னும் வினைச் சொல்லைத் தொடர்ந்து த், த், ஆன் என்னும் இடைச் சொற்களும் இயற்கையாக வந்து கருத்தைத் தெளி

வாக அறிவிக்கத் துணை புரிந்துள்ளன. இந்த இடைச் சொற்களைத் தனியாகக் கூறும்போது இவற்றிற் குப் பொருள் இல்லையாதலின் பெயர்வினைபோல் இவற் றைச் சிறந்த சொல் வகையாகக் கொள்ளாமல் இரண் டாந்தர வரிசைக்குத் தள்ளிவிட்டனர் இலக்கண நூலோர். பெயருக்கும் வினைக்கும் பின்னால் அமைந் திருப்பதே, இடைச்சொல் பெயருக்கும் வினைக்கும் பிற் பட்டது என்று கூறச் சான்றாகப்போதும்.

அடுத்து நான்காவது உரிச்சொல். கறுப்பு, சிவப்பு, மிகுதி, முழுமை முதலிய பண்புகளைக் குறிக் கும் உரிச்சொற்கள், முதற்கால மாந்தரின் பேச்சு வளம் பெற வளம்பெறவே-நாகரிகம் வளரவளரவே தோன்றி யிருக்க முடியும். குழந்தைகளும் பண்புகளை அறியக் காலம் பிடிக்கிறதன்றோ ? எனவே தான், இறுதியாக— நான்காவதாக உரிச்சொல் நிறுத்தப்பட்டது. மற்றும் 'சிவப்புக் (கோபக்) கண்கள்,' 'சாலப் (மிகுதியாகப்) பேசினான்' என உரிச்சொல் பெயர் வினையைச் சார்ந்தே வருதலின், உரிச்சொல்லைப் பெயர் வினைபோல் சிறப்புச் சொல்லாகக் கொள்ளாமல் இரண்டாந் தரமாகவே கருதினர் இலக்கண நூலோர். எனவே, தொல்காப் பியரும் நன்னூலாரும் சொற்களை யமைத்துள்ள வைப்பு முறையின் பொருத்தம் இப்போது இனிது புலனாகலாம்.

முதற்கால மக்களின் மொத்தமான ஒலித்தொகுப்பி லிருந்து பெயர், வினை முதலிய சொற்கள் பிரிந்து பிறந்த வரலாறு இதுகாறுங் கூறப்பட்டது. இந்தக் கருத்து இன்னும் சிலருக்குச் செரிமானம் ஆகவில்லை யென்றால், அவர்கட்கு மேலுஞ் சில சான்றுகள் தர வேண்டும் :—

(1) சொல் தனித்தனியாகப் புரியாமல் மொத்த ஒலித் தொகுப்பாகக் காதில்விழும் ஓராண்டுப் பச்சிளங் குழந்தையின் அழுகையிலும் மொழி உண்டு. பேச்சே யறியாத குழந்தை, அழுகையின் வாயிலாகவும் மற்றும் பல்வகை ஒலிக் குறிப்புக்களின் வாயிலாகவும் மொழி பேசித் தன் கருத்துக்களையும் தேவைகளையும் அறிவிக் கின்றது. பின்னரே சொல்வாரியாகப் பேச்சு புரிகிறது.

(2) நாம் அறியாத வேற்று மொழி ஒன்றினை அம்மொழியாளர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, நமக்கு அப்பேச்சு, மொத்தையான ஒலித் தொகுப்பாகத் தான் தோன்றுகிறது ; தனித்தனியாகச் சொற்பாகு பாடு ஒன்றும் புரிவதில்லை. ஆங்கிலம் அறியாதவர்கள் ஆங்கிலத் திரைப் படமும் இந்தி தெரியாதவர்கள் இந்தித் திரைப்படமும் பார்க்கும்போது இந்தக் கூத்தைக் காணலாம். ஆனால் மொத்தையான அந்த ஒலித் தொகுப்பில் தனித் தனியாகப் பல சொற்கள் உண்டு என்பது யாவரும் அறிந்த உண்மை.

(3) மக்கள் தாங்கள் மட்டுமே மொழி பேசு வதாக நினைக்கக்கூடாது. பறவை விலங்குகளுங் கூட மொழி பேசுகின்றன. அவற்றின் வாய்களி லிருந்தும் ஒலித் தொகுப்புகள் வெளிவருகின்றன அல்லவா ? அந்த ஒலித் தொகுப்புகளின் பொருள் நமக்குப் புரியவில்லை யென்பதற்காக பறவை விலங்கு கட்கு மொழி பேசத் தெரியாது என்று சொல்லி விடுவதா. வேற்று மொழியாளர்களின் உரையாடலும் பறவை விலங்குகள் ஒலிப்பது போலத்தானே தோன்று கிறது. பறவை விலங்குகட்குப் பொதுவாக மக்களைப் போன்ற வடிவமும் சிறப்பாகக் கைகளும் இன்மையா லேயே, மக்கள் செய்யும் மற்ற செயல்துறைகளைச்

செய்ய முடியாதது போலவே எழுத்துக் கண்டுபிடித்து எழுதவும் அவற்ருல் முடியவில்லை. இனவளர்ச்சி செய்யும் பறவை விலங்குகள் ஒன்றுக்கொன்று ஒலிக் குறிப்பால் கருத்தை யறிவித்துக் கொள்ளாமல் இருக்க முடியுமா? சேரமான் பெருமாள் நாயஞர் என்னும் சேர மன்னர் மரபைச் சேர்ந்த சிவனடியார் பறவை விலங்குகள் கழறுவதையும் (பேசுவதையும்) அறியும் ஆற்றல் பெற்றிருந்ததனுல் 'கழறிற்றறிவார்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றதாக அவர் வரலாறு கூறு கிறது. ஒருசார் விலங்கு முதலிய பிற உயிர்களும் மக்களைப்போல் ஆறு அறிவுகள் உடையவை எனத் தொல்காப்பியர் கூறியிருப்பதும் ஈண்டு ஒப்பு நோக்கற் பாற்று. எனவே, பறவை விலங்குகளும் தொடர்ந்த ஒலித் தொகுப்பால் கருத்துக்களை அறிவித்துக் கொள் வதுண்டு என்ற முடிவுக்கு வரலாம்.

எனவே, குழந்தைகளின் ஒலித் தொகுப்பு, வேற்று மொழியாளரின் ஒலித் தொகுப்பு, பறவை விலங்கு களின் ஒலித் தொகுப்பு ஆகியவற்றில் தனித்தனிச் சொற்கள் நமக்குப் புரியவில்லையாயினும் அந்த ஒலித் தொகுப்புகளுக்குப் பொருள் உண்டு. அந்த ஒலித் தொகுப்புகளில் ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொரு செயலையும் குறிப்பதற்குரிய ஒலிக் கூறுகள் அடங்கி யுள்ளன. ஆனுல் அவை நமக்குத் தெரியவில்லை. இது போலவேதான், முதற்கால மக்களின் ஒலித் தொகுப்பும் ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொரு செயலையும் குறிப் பதற்குரிய ஒலிக் கூறுகளை உள்ளடக்கிக் கொண் டிருந்தது; நாளடைவில் ஒவ்வோர் ஒலிக் கூறும் ஒவ் வொரு சொல்லாகப் பிரிந்து திருத்தம் பெற்றது.

இப்போது இவ்விடத்தில் சிலர் இன்னொரு சிக்கலைக் கிளப்பக்கூடும். அதாவது,—“மொழியிலுள்ள பெயர்களெல்லாம் காரணப் பெயர்களே; ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு காரணங் கருதியே நம் முன்னோர் பெயர் வைத்துள்ளனர்; பறப்பதால் பறவை என்றும், நா(நாக்கு) நீளமாகத் தொங்குவதால் நாய் என்றும், அகழப்பட்டதால்(தோண்டப்பட்டதால்) அகழி என்றும், இப்படியே ஒவ்வொரு காரணங் கருதிப் பெயர்கள் வைக்கப்பட்டன. சில பெயர்கட்குக் காரணம் தெரியவில்லையே யெனின், அவற்றிற்கும் ஏதேதோ காரணங் கருதியே பெயர்கள் வைக்கப் பட்டன; அக்காரணங்கள் நாளடைவில் புலப்படாமல் போனதால் அப்பெயர்களை ‘இடுகுறிப் பெயர்கள்’ என இலக்கணத்தில் கூறுகின்றனர்.”—எனச் சிலர் வரிந்து கட்டிக்கொண்டு பேசுகின்றனர். சிலர் இந்தக் கருத்தை நம்பிக்கொண்டு பின்வருமாறு கூறக் கூடும் :—

**“பெயர்கள் எல்லாம் காரணங் கருதியே ஏற்படுத்தப் பட்டவை யென்றால், முதற்கால மக்கள் முதலில் ஒவ்வொரு பொருளுக்கும் தக்க காரணங் கருதி ஒவ்வொரு சொல்லைப் பெயராக வைத்த பின்னரே, அப்படி வைக்கப்பட்ட சொற்களை இணைத்துச் சொற்றொடராகப் (வாக்கியமாகப்) பேசியிருப்பர்; எனவே, சொற்றொடருக்கு முந்தியது சொல் — அதாவது — தனித்தனிச் சொற்கள் தோன்றிய பிறகே வாக்கியம் தோன்றியது. எனவே, வாக்கியமாகிய மொத்த ஒலித் தொகுப்பிலிருந்தே பின்னர்த் தனித்தனியாகச் சொற்கள் பிரித் தெடுக்கப்பட்டன என்னும் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.”**

மேலுள்ளவாறுஞ் சிலர் கூறலாமன்றோ? இக் கருத்துக்கு மறுப்பு வருமாறு :—

(1) 'எல்லாப் பெயர்களும் காரணப் பெயர்களே' என்று சிலர் கூறுங் கருத்து பொருந்தாது. முதற் காலத்தில் பெயர்கள் இடுகுறியாகவே ஏற்பட்டன. காரணப் பெயர்கள் என்று சொல்லப்படுவனவற்றின் அடிப்படைகளை (மூலங்களை) ஆராயின் அவையும் இடு குறியே என்பது புலனாகும். எடுத்துக் காட்டாக, —

பறப்பதால் பறவை என்ற பெயர் வந்தது என்றால், பறக்கும் செயலுக்குப் பறத்தல் என்னும் பெயர் ஏன் வைக்கப்பட்டது? கொறத்தல் என்று வைத்தால் என்ன? இது போலவே, நா (நாக்கு) வெளியில் தொங் குவதைப் பார்த்து நாய் என அழைத்தார்களென்றால், நாக்குக்கு 'நா' என்னும் பெயர் ஏன் வைக்கப்பட்டது? 'கோ' என அழைத்தால் என்ன? இவை போலவே, அகழ்வதால் (தோண்டுவதால்) அகழி என்னும் பெயர் வைக்கப்பட்டதென்றால், அகழும் செயலுக்கு அகழ்தல் என்னும் பெயர் ஏன் வைக்கப்பட்டது? குகழ்தல் என்று சொன்னால் என்ன?

எனவே, பறவை, நாய், அகழி என்னும் காரணப் பெயர்களின் அடிப்படைகளாகிய பறத்தல், நா, அகழ் தல் என்னும் பெயர்கள் காரணம் இல்லாத இடுகுறிப் பெயர்களே.

(2) ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு மொழியி லும் ஒவ்வொரு பெயர் இருப்பதைக் கூர்ந்து நோக்க வேண்டும். நாய் என்னும் தமிழ்ப் பெயருக்கு நேராக வடமொழியில் 'குக்குரக' என்றும், இந்தியில் 'குத்தா' என்றும், ஆங்கிலத்தில் 'டாக்' (Dog) என்றும், பிரெஞ் சில் 'ஷியான்' (Chien) என்றும், இலத்தீன் மொழியில் 'கனிஸ்' (Canis) என்றும் பெயர்கள் உள்ளமை

காண்க. ஒரே பொருளைக் குறிக்க ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொருவிதமான—அதாவது—வேறுபட்ட ஒலிக்கூறு (சப்தம்) இருப்பதை ஆராயுங்கால், 'மக்களினம் குறிப்பிட்ட ஒரே காரணம் பற்றிப் பொருள்கட்குப் பெயர் வைக்கவில்லை; ஏதோ ஆங்காங்கு வாழ்ந்த மக்கள் உளம் போன போக்கில் எழுப்பிய ஒலிகளே பெயர்களாக நிலைத்துவிட்டன'—என்னும் உண்மை புலனாகலாம்.

(3) குறிப்பிட்ட ஒரு சொல் குறிப்பிட்ட ஒரு பொருளைக் குறிப்பதற்கு உரிய காரணம் இன்னது என்று யாரும் கணக்காகச் சொல்ல முடியாது என்று மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே தொல்காப்பியரே கூறிவிட்டார் :

"மொழிப் பொருள் காரணம் விழிப்பத் தோன்றா."

என்பது தொல்காப்பிய நூற்பா. எனவே, ஒரு சொல்லைக் கொண்டு, அதனால் சுட்டப்படும் பொருளைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள முடியாது என்பதும், பொருள்களைக் குறிக்கும் ஒருவகை அடையாளங்களே சொற்கள் என்பதும் புலனாகும்.

(4) "ஒவ்வொரு பொருளிலிருந்தும் தோன்றிய ஒலியையே அவ்வப் பொருளுக்குப் பெயராக நம் முன்னோர் இட்டனர்; எடுத்துக் காட்டாக,—காக்காவானது 'கா—கா' எனக் கத்துவதால் அவ்வொலிப் பெயரால் அழைக்கப்பட்டது; 'கிலு-கிலு' என ஒலிப்பதால் கிலுகிலுப்பைக்கு அப்பெயர் ஏற்பட்டது. மற்ற பொருள்கட்கும் இக்காரணம் பற்றியே பெயர்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்''—என்பதாக ஒரு கருத்தும் கூறப்படுகிறது. ஏதோ இரண்டொரு பொருளுக்குத் தவிர எல்லாப்

பொருள்கட்கும் இக்கருத்து பொருந்தாது. எல்லாப் பொருள்களும் தாம் அழைக்கப்படுகிற பெயரொலிகள் போல ஒலியெழுப்புவது கிடையாது. 'காக்கா' கொள்கையின்படியே பார்த்தாலும், தமிழில்தான் 'காக்கா' என அழைக்கிறோம்—மற்ற மொழிகளில்...?

எனவே, அடிப்படை யமைப்பின்படி ஏறக்குறைய எல்லாப் பெயர்களும் இடுகுறிப் பெயர்களே என்பது மேலுள்ள ஆராய்ச்சியால் தெளிவாகும்; ஆகவே, முதற்கால மக்கள் எக்காரணமும் கருதாமலேயே இயற்கையாக எழுப்பிய ஒலித் தொகுப்பிலிருந்தே தனித் தனியாகச் சொற்கள் பிரிந்து பிறந்தன என்னும் கருத்து உறுதியாகும்; ஆகவே, சொற்றொடருக்குப் பிந்தியது சொல் என்னும் கொள்கை முற்ற முடிந்த முடிபாகும்.

சொல் பிறந்த கதை இதுதான்!

# சொல் பெருகிய கதை

முதற்காலத்தில் இயற்கையான மலைக் குகைகளை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்த மக்கள், பின்னர் நாளடைவில் மலைகளிலிருந்து தனித் தனியாகக் கற்களை உடைத்துப் பிரித்தெடுத்துச் சுவர் எழுப்பிச் செயற்கையான வீடு கட்டிக்கொண்டு வாழ்ந்தனர். மலைப் பகுதிக்கு நெடுந்தொலைவில் இருந்தவர்கள் மண்ணைப் பிசைந்து சுவர் எழுப்பினர். பின்பு வன்மை யற்ற மண் சுவரின் நிலையாமையை உணர்ந்த மக்கள், மண்ணைப் பிசைந்து தனித்தனிப் பகுதியாக அறுத்துச் சூளையில் இட்டுச் சுட்டுச் செங்கற்களாக்கிச் சுவர் எழுப்பினர். இதனினும் இன்னும் வன்மை விரும்புபவர்கள், கருஞ்சுதை மண்ணால் (சிமட்டியால்) கல்லுண்டாக்கிக் கட்டடம் கட்டுகின்றனர்; மற்றும், 'கான்கிரீட்' (Concrete) எனப்படும் கல்பொதிந்த காரைக் கலவையாலும் கட்டடம் அமைக்கின்றனர்; மேலும், கம்பியிடையிட்ட கல் கலவையாலும் (Reinforced concrete) கட்டடங்களை உறுதிப்படுத்துகின்றனர். உறுதிக்கும் திருத்தத்திற்கும் அழகிற்கும் உறுதுணை யாக இன்னும் எத்தனை எத்தனையோ முறைகள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. இது கல் (கட்டடம்) பெருகிய கதை. சொல் பெருகிய கதையும் இது போன்றதே! கற்பனை செய்து காண்க.

முதற்காலத்தில் மக்கள் இயற்கையாக எழுப்பிய ஒலித் தொகுப்பிலிருந்து சொற்கள் தனித்தனியாகப் பிரிந்து பிறந்தன. பிறந்த சொற்களாகிய குழந்தைகள்

திருத்தமுடன் வளரத் தொடங்கின. வளர்ந்து பெரியவர்களான பின், அவர்களிடமிருந்து பல குழந்தைகள் தோன்றின. இந்த வீட்டுக் குழந்தைகளுடன், ஒண்டு குடியிருக்க வந்தவர்களின் குழந்தைகளும் சேர்ந்து விளையாடத்தொடங்கின. நாளடைவில், வந்த குழந்தைகளும் பிறந்த குழந்தைகளோடு நின்று நிலைத்து விட்டன. வந்தகுழந்தைகள் இடம் பிடித்துக் கொண்டதால், பிறந்த குழந்தைகள் சிலவற்றின் வளர்ச்சி குன்றிப்போனதும் உண்டு. வீட்டுக்காரர்கள், தம் வீட்டுத் தேவைகள் சிலவற்றை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக வெளியிலிருந்து சிலரை வரவழைத்துக் கொண்டதும் உண்டு. இப்படியாக, சொற்களாகிய மக்கள் எண்ணிக்கை தமிழ் வீட்டில் பெருகிவர லாயிற்று.

ஆம்! முதற்கால மக்களது மொழியின் அகலமும் நீளமும் ஆழமும் உயரமும் மிகமிகக் குறைவே. குழந்தைகள் சில சொற்களைக் கொண்டே மொழி பேசுதல்போல, முதற்கால மக்களும் சில சொற்கள் கொண்டே மொழிபேசினர். இஃது இயற்கையே யன்றோ!

நாளடைவில் நாகரிகம் மிகமிக, தேவைகள் பெருகப் பெருக, பிறர் கலப்பு ஏற்பட ஏற்படச் சொற்களும் பின்வருமாறு பெருகின.

(1) ஒவ்வொரு சொல்லிலிருந்தும் பல சொற்கள் கிளைத்தன. 'நட' என்னும் அடிப்படையிலிருந்து நடை, நடக்கை, நடத்தை, நடப்பு, நடவடிக்கை, நடம், நடந்தான், நடந்தது முதலிய சொற்களும், 'உருள்' என்னும் அடிப்படையிலிருந்து உருளை, உருட்சி,

உருட்டு, உருட்டல், உருண்டை, உருளி, உரல்' உருடை, முதலிய சொற்களும், 'குடி' என்னும் அடிப் படையிலிருந்து குடிமை, குடித்தனம், குடிகை, குடில், குடிசை, குடிசல், குடிஞை, குடும்பம், குடும்பு, குடும்பி, குடியானவன் முதலிய சொற்களும் கிளைத்துள்ளமை யறிக. ஒரு தொழிலின் பெயரிலிருந்தும் ஒரு பொருளின் பெயரிலிருந்தும் அத்தொழிலோடும் அப் பொருளோடும் தொடர்புடையனவற்றைக் குறிக்கும் குடும்பச் சொற்கள் தோன்றுவது இயற்கை.

(2) தேவைக் கேற்பப் புதுப்புதுப் பொருள்கள் தோன்றத் தோன்ற, முன்னமேயே உள்ள சொற் களுள் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள் சேர்ந்து சேர்ந்து புதுச் சொற்களாக வடிவெடுத்தன. மண் + வெட்டி = மண்வெட்டி; மரம் + கால் = மரக்கால்; நான்கு + கால் = நாற்காலி; கொடுமை (வளைவு) + காய் + புளி = கொடுக்காய்ப் புளி; திரு + பாதிரி + புலி + ஊர் = திருப்பாதிரிப் புலியூர் முதலிய அந்தக் காலத்துப் பெயர்களையும்—வான் + ஒலி = வானொலி; மின் + சாரம் = மின்சாரம்; வானம் + ஊர்தி + வானவூர்தி; புகை + வண்டி + நிலையம் = புகைவண்டி நிலையம்; திசை + காட்டும் + கருவி = திசை காட்டுங் கருவி முதலிய இந்தக் காலத்துப் பெயர்களையும் நோக்குக.

(3) கடவுட் கொள்கை, கலை, வாணிகம், அறிவியல், அரசாட்சி முதலியன காரணமாக வேற்று நாட்டாரின் — வேற்று மொழியாளரின் தொடர்பு ஏற்பட்டதால், வேற்று மொழிச் சொற்கள் பல, ஏற்கனவே இருந்த சொற்களினூடே வரம்பு கடந்து புகுந்து கலந்து விட்டன: ஜலம், சந்தோஷம்,

சாமி, தத்துவம், முதலிய சம்சுகிருதச் சொற்களும்; அந்தஸ்து, குல்லா, சமக்காளம் முதலிய இந்துத்தானி சொற்களும்; ஆசாமி, வசூல், மாமூல் முதலிய அரேபியச் சொற்களும்; சிபாரிசு, சுமார், மேசை முதலிய பாரசீகச் சொற்களும்; சன்னல், சாவி, அலமாரி முதலிய போர்த்துகீசியச் சொற்களும்; புதுச்சேரி மாநிலப் பகுதியில் வாங்கு (விசிப் பலகை), தளவா (காவல் நிலையத் தலைவர்) முதலிய பிரஞ்சு மொழிச் சொற்களும் தமிழில் இரண்டறக் கலந்துள்ளமை காண்க. தமிழ் மொழியில் பல துறைகளிலும் ஆங்கிலமொழி புகுந்து புரியும் திருவிளையாடல்களைச் சொல்லவே வேண்டியதில்லை.

(4) மொழிக்கு மொழி இயற்கையாகப் புகும் சொற்களேயன்றி, வந்த மொழியாளர் எப்படியாவது தம் மொழிச் சொற்களைப் பரப்பவேண்டும் என்று வரிந்து கட்டிக்கொண்டு வலிந்து புகுத்திய வன்செயலாலும், 'யார் ஆண்டால் என்ன' என்ற போக்கில் சொந்த மொழியாளர் சோம்பியிருந்ததாலும் பிற மொழிச் சொற்களின் எண்ணிக்கை ஏறிவிட்டது.

(5) அரசனை நம்பிக் கணவனைக் கைவிட்ட கதையே போலவும், தாய் தண்ணீரின்றித் தவிக்கக் கும்பகோணத்தில் தம்பி கொடை பல புரிந்த கதையே போலவும், வந்த மொழியாளர் பரப்புவது ஒரு புறம் இருக்கச் சொந்தமொழியாளரே தம்சொந்த மொழியைப் பயன்படுத்துவது இழிவெனப் புறக்கணித்து, வந்த மொழிகளே உயர்ந்தவை என வரவேற்று, வீட்டிலும் நாட்டிலும் அம்மொழிகளையே பயன்படுத்தியும்–பயன் படுத்த இடந்தந்தும் உணர்வற்று வாழ்ந்ததால், சொந்த மொழிச் சொற்கள் பல வழக்கற்றுப் போக,

அவற்றின் இடங்களில் வந்த மொழிச் சொற்களே ஆணிவேர் விட்டு நின்று நிலைத்து விட்டன.

(6) இருபதாம் நூற்றுண்டு அறிவியல் உலகத்தில் கண்டுபிடிக்கப்படும் புதுப் புதுக் கலைப் பொருள்கட் குரிய பெயர்கள், சொந்த மொழியில் பெயர்க்கப் படுவதன்றி, ஒரு சிறிது திரிந்தோ அல்லது அப்படியோ எடுத்தாளப்படுவதாலும் சொற்கள் பெருகுகின்றன.

சொல் பெருகிய கதை இதுதான்!

# நான்கு விதச் சொற்கள்

பெயர்ச் சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச் சொல் என்னும் நால்வகைச் சொற்களேயன்றி, இயற் சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்பன வாக நான்கு விதச் சொற்கள் தொல்காப்பியத்திலேயே பேசப்பட்டுள்ளன. இவற்றுள் இயல் சொல் என்பது, அம்மா, அப்பா, தண்ணீர், காற்று, உடல், உயிர் என்பன போல எல்லோர்க்கும் புரியக் கூடிய இனிய எளிய தூய இயற்கையான பேச்சு வழக்குத் தமிழ்ச் சொல்லாகும்;

> "இயற் சொல் தாமே
> செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
> தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே."

என்பது தொல்காப்பிய நூற்பா.

> "செந்தமி ழாகித் திரியாது யார்க்கும்
> தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல்."

என்பது நன்னூல் நூற்பா.

ஒரு சொல்லைச் சொன்னால், இச்சொல் எந்தப் பொருளைக் குறிக்கிறது? இந்தப் பொருளோ? அந்தப் பொருளோ? என்ற திரிபுக்கு (மயக்கத்திற்கு) இட மின்றி இயற்கையாக எளிதில் பொருள் உணர்த்தும் சொல் இயற்சொல்லாகும். இங்ஙனமின்றி, இச் சொல்லுக்கு இந்தப் பொருளோ—அந்தப் பொருளோ என்றதிரிபுக்கு இடமாகி அரிதில் (சிரமத்தில்) பொருள் உணரத்தக்க சொல் திரி சொல் ஆகும். ஒரு பொருள்

குறித்த பல சொல், பல பொருள் குறித்த ஒரு சொல் என நாம் முன்பு நிகண்டுகளிற்கண்ட இரு பிரிவுகளும் இந்தத் திரி சொல்லின் வகைகளாகும்.

"ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொல் கிளவி"

என்பது தொல்காப்பிய நூற்பா.

"ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
அரிதுணர் பொருளன திரிசொல் லாகும்"

என்பது நன்னூல் நூற்பா.

செந்தமிழ் பேசப்படும் பன்னிரண்டு நாடுகளிலும் (பகுதிகளிலும்) வழங்கும் பொதுச் சொற்களாய் இல்லாமல், அந்தந்த நாட்டில் (பகுதியில்) மட்டும் வழங்கும் வட்டார வழக்குச் சொற்கள் திசைச் சொற்கள் எனப் படும்—இது தொல்காப்பியர் கருத்து.

"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி."

என்பது தொல்காப்பிய நூற்பா. இதிலிருந்து, தொல்காப்பியர் காலத்தில் தமிழ் பேசும் மாநிலம் பன்னிரண்டு நாடுகளாகப் பிரிக்கப்பட்டுப் பன்னிரண்டு அரசுகளாக ஆளப்பட்டமை புலனாகும். வட்டார வழக்குச் சொற்கள் எல்லா இடத்துக்கும் பொதுவாயின்றி ஒவ்வொரு திசையில் (மூலையில்) மட்டும் வழங்குவதால் திசைச்சொற்கள் எனப்பட்டன.

மூவாயிரம் ஆண்டுக்கு முன் தொல்காப்பியர் திசைச் சொல் என்பதற்கு இவ்வாறு விளக்கம் தந்தார்.

அவர் காலத்திற்குப் பின், தமிழ் மாநிலத்திற்கு அப்பாலுள்ள வேற்று நாடுகளில் வழங்கும் வேற்று மொழிகளிலிருந்தும் பல சொற்கள் தமிழ் மொழியில் புகுந்து விட்டன. எனவே, அவற்றையும் திசைச் சொற்களென, எழுநூறு ஆண்டுகளுக்கு முன் எழுந்த நன்னூலில் பவணந்தியார் கூறியுள்ளார். செந்தமிழ் வழங்கும் பன்னிரு உள் நாடுகளில் வழங்கும் வட்டாரச் சொற்களே யன்றி, தமிழ் மாநிலத்திற்கு அப்பாலுள்ள பதினேழு வெளி நாடுகளிலிருந்து வந்த சொற்களும் திசைச் சொற்கள் என்பது நன்னூல் கருத்து.

"செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழொழி நிலத்தினும்
தங்குறிப் பினவே திசைச்சொல் என்ப"

என்பது நன்னூல் நூற்பா.

இறுதியாக வட சொல் வருமாறு:— தமிழ் மாநிலத்தின் வடக்கே வழங்கிய சம்சுகிருத மொழியிலிருந்து தமிழ் மொழியில் வந்து வழங்குஞ் சொல் வட சொல் எனப்படும். இருமொழிகட்கும் பொதுவான எழுத்துக்களால் ஆன வட சொற்கள் அப்படியே தமிழில் வழங்கப்படும். சம்சுகிருதத்திற்கே உரிய சிறப்பெழுத்துக்களாலும், பொது எழுத்து — சிறப்பெழுத்து ஆகிய இருவகை எழுத்துக்களாலும் ஆன வடசொற்கள் தமிழ் ஒலிக் கேற்பச் சிதைந்து திருந்தி வழங்கப்படும்.

"வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா குமமே."

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்."

என்பன தொல்காப்பிய நூற்பா.

"பொதுவெழுத் தானும் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானும் இயைவன வடசொல்."

என்பது நன்னூற் பா.

தொல்காப்பியர் கூறியுள்ள திசைச்சொல்—வட சொற்களை நோக்குங்கால், மிக மிகப் பழங்காலத்தில், பொதுவாக இந்தியாவில்—சிறப்பாகத் தென்னிந்தியா வில் தமிழ்மொழியே தனியாட்சி புரிந்தது என்பதும், பின்னர் சம்சுகிருதம் முதல்முதலாக வட இந்தியாவில் தலையெடுத்து நாளடைவில் தென்னிந்தியாவிலும் பரவத் தொடங்கியது என்பதும், அவ்வாறு பரவத் தொடங்கிய வடமொழி, தொல்காப்பியர் காலத்தில் தமிழிலக்கண நூற்களில் குறிப்பிடப்படும் அளவுக்குத் தமிழகத்தில் செல்வாக்கு பெற்றிருந்தது என்பதும் புலனாகும்.

வடதிசையிலிருந்து வந்ததால் வடசொல் எனப் பெயர் பெற்ற வடமொழிச் சொற்களும் ஒருவகைத் திசைச் சொற்களே யாதலின் திசைச் சொல் என்னும் தலைப்பிலேயே அடக்கிவிட்டிருக்கலாம். அங்ஙனம் செய்யாது, வடசொல் எனத் தனித் தலைப்பிட்டு இலக்கண நூலார் பிரித்திருப்பதை நோக்கின், எந்த அளவுக்குத் தமிழில் வட சொற்கள் புகுந்து விட்டன என்பதை உய்த்துணரலாம்.

தொல்காப்பியரால் பாகுபாடு செய்யப் பெற்ற இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நான்கு விதச் சொற்களுள், இயற் சொல்லும் திரிசொல்லுமே இன்றியமையாதவை. இவற்றுள் இயற் சொற்கள் எளிய சொற்கள் ஆதலின் நிகண்டு நூற்களில் இடம் பெறவில்லை; அருஞ் சொற்களாகிய

திரி சொற்களே நிகண்டு நூற்களை அடைத்துக் கொண்டன. இந்தத் திரிசொற்களின் கூட்டத்தில், வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்த சொற்களும் நிரம்ப உள்ளன. நிகண்டுகளில் இப்படி! அகராதி நூற்களிலோ, இயற்சொல் முதலாக எல்லாவிதச் சொற்களும் ஒன்று குறையாமல் நின்று நிலவுகின்றன.

# ஒரு பொருள் பல் பெயர்கள்

'ஒரு பொருள் பல் பெயர்கள்' என்னும் தலைப்பு, நிகண்டின் முப்பெரும் பிரிவுகளுள் முதலாவதாகிய 'ஒரு பொருள் பல் பெயர்த் தொகுதி' என்பதே யாகும். சேந்தன் திவாகரம் முதலிய நிகண்டுகளில் உள்ள பன்னிரண்டு தொகுதிகளுள் முதல் பத்துத் தொகுதிகளும் இந்த 'ஒரு பொருள் பல் பெயர்த் தொகுதிகளே' யாகும்.

ஒரு பொருளைக் குறிக்க ஒரு பெயர் போதாதா? பல பெயர்கள் ஏன்? எடுத்துக் காட்டாக,—யானை என்னும் ஒரு பொருளைக் குறிக்கத் திவாகர நிகண்டில் முப்பத்தெட்டுப் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அவை வருமாறு :—

[யானையின் பெயர்]

"தும்பி, கடிவை, புகர்முகம், தோல், கரி,
உம்பல், வயமா, பகடு, நால்வாய்,
கரிணி, குஞ்சரம், கயமே, களபம்,
மருண்மா, தந்தி, மாதங்கம், ஒருத்தல்,
களிறு, சிந்துரம், கறையடி, எறும்பி,
வழுவை, வாரணம், வேழம், வல்விலங்கு,
நாகம், மதகயம், அத்தி, இபம், கும்பி,
போதகம், உவாவே, தூங்கல், மாதிரம்,
மறமலி கைம்மா, ஆம்பல், கோட்டுமா,
பிறவும் புழைக்கையோடு, யானைப் பெயரே"

என்பது திவாகர நூற்பா. இது போலவே, சிவனைக் குறிக்கத் திவாகரத்தில் அறுபத்து மூன்று பெயர்கள்

சொல்லப்பட்டுள்ளன. இவ்வாறாக ஒரு பொருளைக் குறிக்கப் பல பெயர்கள் ஏற்பட்டிருப்பதிலுள்ள உண்மை யாது? அப்படி ஏற்பட்டதற்குப் பின் வருபவை பொருட்டுக்களாக (காரணங்களாக) இருக்கலாம்:—

(1) ஒரு மொழியில் ஒரு பொருளுக்குப் பல பெயர்கள் இருப்பது, அம்மொழியின் சொல் வளத்தை—சொற் களஞ்சியத்தை—சொற் செல்வத்தை அறிவிக்கிறது. பணக்காரர் வீட்டில் கல (பாத்திர) வகைகளிலும், உடை வகைகளிலும், அணி (நகை) வகைகளிலும், மற்றும் அனைத்து வகைகளிலும், பற்பல இருக்கும். இது பணக்காரக் குடும்பத்திற்கு அறிகுறி. இது போலவே சொற்கள் பெருகியிருப்பது பணக்கார மொழிக்கு இயல்பு நமது தமிழ் மொழியும் பண்டு தொட்டுள்ள பணக்கார மொழியன்றோ?

சரி, உண்மைதான்! இவ்வளவு சொற் செல்வங்களும் மொழிக்கு எப்படிக் கிடைத்தன.

(2) ஒரு குடும்பத்தின் தலைவனுக்குப் பிள்ளைகள் பலர் உள்ளனர். ஒவ்வொரு பிள்ளையும் ஈட்டிய செல்வத்தைத் தொகுத்துக் கணக்கிட்டுத் தன்செல்வமாகத் தலைவன் கருதுவது இயல்பே. அவ்வாறே, தமிழ் வழங்கும் பல பகுதிகளிலும் வாழும் மக்களின் பேச்சு வழக்காறுகளைத் தொகுத்துக் காணுங்கால், சொற் செல்வம் பெருகித் தோன்றுகிறது. எடுத்துக் காட்டாக, — தமிழ்நாட்டின் வட பகுதியினர் ‘வழி’ யென்று சொல்வதை, தென் பகுதியினர் ‘தடம்’ என்னும் சொல்லால் குறிக்கின்றனர். இதே பொருளில் பாதை, பாட்டை என்னும் சொற்களும் பரவலாகப்

பல விடங்களிலும் வழங்கப்படுகின்றன. இவையே யன்றி, செய்யுள் வழக்கில் நெறி, யாறு, அதர், வரி முதலிய சொற்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றை யெல்லாம் தொகுத்துப் பார்க்குங்கால், ஒரு பொருள் பல் பெயர்களின் எண்ணிக்கை பெருகுவதைக் காண லாம். இவை மட்டுமா?

(3) பொருளில் (அர்த்தத்தில்) சிறுசிறு வேறு பாடுடைய சொற்கள் பல, நாளடைவில் அவ் வேறு பாடுகள் மறைந்தோ—அல்லது—மறைக்கப்பட்டோ ஒரே பொருளில் வழங்கப்படுவதும் உண்டு. எடுத்துக் காட்டாக, அத்தம், கடம், கடறு, தூம்பு, சுரம், கவலை, விடங்கர், பாதை, படுகர், மடு, அளக்கர் ஆகிய சொற்கள் வழி என்னும் பொருள் உடையனவே. ஆனால், இவற்றுள் பொருளில் சிறுசிறு வேறுபாடுகள் உண்டு. அவையாவன:— அத்தம், கடம், கடறு, தூம்பு, சுரம் ஆகிய சொற்கள், கடப்பதற்கு மிகவும் கடினமான (அரு நெறியை) வழியைக் குறிக்கும் பெயர் களாம். கவலை என்னும் சொல், ஒரு பாதையிலிருந்து பல பாதைகள் பிரியும் கவர் நெறியைக் குறிக்கும் பெயராகும். விடங்கர் என்பது சிறு வழியையும், பாதை என்பது பெரு வழியையும் குறிக்கும் பெயர் களாம். படுகர், மடு என்னும் சொற்களோ, ஏறி யிறங்கும் மேடு பள்ளமுடைய—ஏற்றத் தாழ்வுடைய வழியைக் குறிக்கும் பெயர்களாம். அளக்கர் என்பதோ நீண்ட வழியைக் குறிக்கும் பெயராம். இச் சொற்க ளெல்லாம் சிலவிடங்களில் வழி என்னும் பொதுப் பொருளில் பயன்படுத்தப்படுகின்றன.

(4) ஒரு பொருளுக்கே பல பொருட்டுக்கள் பற்றிப் பல பெயர்கள் ஏற்படலாம். எடுத்துக்காட்டாக,—

வழியில் இயங்குவதால் 'இயவை' என்ற பெயரும், நடப்பதால் 'நடவை' என்ற பெயரும், செல்வ தால் 'செலவு' என்ற பெயரும், ஒழுகுவதால் (தொடர்ந்து செல்வதால்) 'ஒழுக்கம்' என்ற பெயரும், வழி செப்பம் செய்யப்பட்ட தாதலால் 'செப்பம்' என்ற பெயரும்—ஆக இப்படிப் பல பெயர்கள் வழி என்னும் ஒரு பொருளைக் குறிக்க உள்ளன. இவை வினையடியாகப் பெற்ற பெயர்களாம்.

(5) ஒரு பொருளே தன் உறுப்புக்கள் தொடர்பாகப் பல பெயர்கள் பெறுவதும் உண்டு. எடுத்துக்காட்டாக,—யானை என்னும் ஒரு பொருளுக்கே, புள்ளி பொருந்திய முகம் இருப்பதால் 'புகர் முகம்' என்னும் பெயரும், கருநிறம் உடைமையால் 'கரி' என்னும் பெயரும், தொங்குகிற வாய் உடைமையால் 'நால் வாய்' என்னும்பெயரும், தந்தம்உடைமையால்'தந்தி' என்னும் பெயரும், உரல் (கறை) போன்ற கால் (அடி) உடைமை யால் 'கறையடி' என்ற பெயரும் துதிக்கையுடைய விலங்காதலால் 'கைம்மா' என்ற பெயரும், துளை (புழை)யுடைய கை உடைமையால் 'புழைக்கை' என்ற பெயரும் உள்ளன.

(6) ஒரு பொருளே தன் செயல்—தன்மை—பண்பினல் பல பெயர்கள் பெறுவதும் உண்டு. எடுத்துக்காட்டாக,—ஞாயிறு (சூரியன்) என்னும் ஒரு பொருளுக்கே, வெப்பமும் வெளிச்சமும் உள்ளதால் வெய்யோன், சுடர், சுடரவன், எல்லை, கதிர், கதிரவன், செங்கதிர், செஞ்சுடர், வெங்கதிர், வெஞ்சுடர், ஆயிரங் கதிரோன், அழலவன், என்றூழ், கனலி முதலிய பெயர்களும், இருளை ஓட்டுவதால் இருள்வலி என்ற

பெயரும், பனியைப் போக்குவதால் பனிப்பகை என்ற பெயரும், பகலில் தெரிவதால் பகலவன் என்ற பெயரும், தினத்தை உண்டாக்குவதால் தினகரன் என்ற பெயரும், கோள்களுள் தலைமையும் உயர்வும் உடைமையால் வேந்தன், சான்றோன் என்ற பெயர்களும், அலரச் செய்வதால் அலரி என்ற பெயரும், இன்னும் இவ்வாறே எண்ணிறந்த பெயர்களும் உள்ளன.

(7) வடமொழி போன்ற வேற்று மொழிகளிலிருந்தும் பல பெயர்கள் வந்து ஒரே பொருளில் வழங்குவதுண்டு. எடுத்துக் காட்டாக, ஞாயிற்றைக் குறிக்க, பதங்கன், சூரியன், உதயன், விரிச்சிகன், மார்த்தாண்டன், கிரணன், பாநு, திவாகரன், இரவி, பாற்கரன், அருணன், தபனன், அருக்கன், ஆதித்தன் முதலிய வடமொழிப் பெயர்கள் தமிழில் வந்து வழங்குவது காண்க. இது போலவே வழியைக் குறிக்க, சரி, தாரை, மார்க்கம், அயனம் முதலிய வடமொழிப் பெயர்கள் தமிழில் நடமாடுவதை யறிக.

(8) மற்றும், பொருட்டு (காரணம்) கண்டுபிடிக்க முடியாத நிலையிலே ஒரு பொருளுக்குப் பல பெயர்கள் இருப்பதும் உண்டு. இந்நிலையில், வட்டை, வயவை, இடவை முதலிய பெயர்கள் வழி யென்னும் பொருளைக் குறிக்கின்றன. இப்படிப் பார்க்குங்கால் வழி என்னும் ஒரே பொருளைக் குறிக்கப் பல பெயர்கள் அமைந்துள்ளமை புலனாகும். இதனை,

[வழியின் பெயர்கள்]

“சரி, நெறி, ஒழுக்கம், தாரை, யாறு,
வதி, அதர், மார்க்கம், இயவை, நடவை,
பதவை, செப்பம், அயனம், இடவை,

வாரி, வட்டை, வரி, வயவை, வருந்து,
செலவு, சிறுபதம், வழிக் கிளவி யாகும்.''

என்னும் திவாகர நூற்பாவால் உணரலாம். இப்பாடலில், வழி என்னும் பொதுப் பொருளைக் குறிக்க இருபத்தொரு பெயர்கள் உள்ளமை ஓர்க. இப்பாடலில் இத்தனை பெயர்கள் இடம் பெற்றிருந்தும், தென் தமிழ் நாட்டினர் வழியைக் குறிக்க வழங்கும் 'தடம்' என்னும் பெயர்மட்டும் இடம் பெருதிருப்பது வியப்பாயிருக்கிறது.

ஒரு பிள்ளை பிறந்தால் முதலில் பெற்ருேர்கள் ஒரு பெயர் இடுகின்றனர். அது இயற்பெயர் எனப்படும். பின்னர் அவர்களே செல்லப் பெயர்கள் வேறு வைப்பார்கள். போதாக்குறைக்குப் பாட்டன்-பாட்டி முதலியோர் அழைக்கும் செல்லப் பெயர்கள் வேறு. பின்னர் பெரியவரானதும், உலகியலில் உயர்வு சிறப்புப் பெயர்களோ அல்லது இழிவு சிறப்புப் பெயர்களோ ஏற்படுவதும் உண்டு. இவ்வாறு எத்தனை பெயர்கள் ஏற்படினும், இறுதியில் ஏதாவது ஒரு பெயர்தான் நின்று நிலைத்து நீடிக்கும்; அஃதே எக்காலத்தும் எவ்விடத்தும் எல்லோராலும் பரவலாக அழைக்கப்படும்; மற்ற பெயர்களோ, எப்போதோ ஒரு நேரத்தில்தான்-எங்கோ ஓரிடத்தில்தான்-எவரெவரோ ஒவ்வொருவரால்தான் அழைக்கப்படும். எல்லா ஒரு பொருள் பல் பெயர்களின் நிலையும் இது போன்றதே!

ஒருபொருள் பல்பெயர்களுக்குள்ளே, சில பெயர்கள் செய்யுள் வழக்கில் மட்டும் வரும்; சில பெயர்கள் பேச்சு வழக்கில் மட்டும் வரும்; ஒரு சில பெயர்கள் இரு வழக்கிலும் வரும். அவற்றுள்ளும் ஒன்றிரண்டே பெருவாரியாக வழங்கப்படும். ஒருவர் எத்துணை வகைக்

கலங்கள் (பாத்திரங்கள்), ஆடை யணிகள் வைத்திருந் தாலும், அவற்றுள் ஒரு சிலவே எப்போதும் பயன் படுத்தப்படுகின்றன; மற்றவை சிறப்பு நாட்களில்-சிறப்பு வேளைகளில் மட்டுமே பயன்படுத்தப்படு கின்றன. பேச்சு வழக்குச் சொற்கள் எப்போதும் பயன்படும் ஆடையணிகள் போன்றவை; செய்யுள் வழக்குச் சொற்களோ, சிறப்பு நாட்களில் பயன் படுத்தப்படும் ஆடையணி கலங்கள் போன்றவையாம்.

சுருங்கச் சொல்லின், செய்யுளிலும் சரி—பேச்சிலும் சரி-ஒரு பொருளுக்குப் பல பெயர்கள் நடுநடுவே வரும்-போகும்; இருப்பினும், ஏதோ ஒன்று அல்லது இரண்டு மட்டுமே இறுதிவரை யிருந்து பேர் செல்லும்.

'ஒரு பொருளுக்கு எண்ணற்ற பெயர்கள் இருக்குமே யாளுல், அப்பொருள் பற்றி மாந்தர்க்கு மிகுந்த ஆர்வம் இருந்தது எனக் கொள்ளலாம்'—என 'பிரீல்' (Breal) என்னும் அறிஞர் கருத்துத் தெரிவித் துள்ளார். இக்கருத்திலும் உண்மை யில்லாமற் போகவில்லை. மக்களினம் வாழ்க்கையில் எவ்வெப் பொருள்களோடு மிகுதியாகத்தொடர்பு கொள்கிறதோ, அவ்வப் பொருள்கட்குப் பெயர்கள் பல ஏற்படுவது இயல்பே! ஆனுல் இக்கருத்திற்கு ஒரு சில பொருள்கள் மட்டும் விதிவிலக்காகவும் இருக்கலாம்.

ஒரு பொருளுக்குப் பல பெயர்கள் தோன்றிய கதை இதுதானே!

# ஒரு சொல் பல் பொருள்

'ஒரு சொல் பல் பொருள்' என்னும் தலைப்பு, நிகண்டின் முப்பெரும் பிரிவுகளுள் இரண்டாவதாகிய 'ஒரு சொல் பல் பொருள் பெயர்த் தொகுதி' என்பதே யாகும். திவாகரம் போன்ற நிகண்டுகளில் உள்ள பதினோராவது தொகுதி இதுதானே!

ஒரு சொல் பல் பொருள் என்றால், ஒருசொல்லுக்கே பல பொருள்கள் (அர்த்தங்கள்) இருப்பது. எடுத்துக் காட்டாக, வடமொழியிலிருந்து வராத 'அரி' என்னும் தனித் தமிழ்ச் சொல்லுக்குப் பதினைந்து பொருட்களும், 'கடி' என்னும் சொல்லுக்குப் பன்னிரண்டு பொருட் களும் திவாகரத்தில் கூறப்பட்டுள்ளன. அவை வருமாறு :—

[அரி என்னும் பெயர்ச் சொற் பொருள்]

"கண், வரி, கடல், பொன், கிண்கிணிப் பெய்பரல்,
பொன்னிறம், குதிரை, தவளை, குரங்கு,
பகை, வாள், சயனம், வலி, வண்டு, வெம்புகை,
எனப் பதினைந்தும் அரியெனப் புகல்ப."

[கடி என்னும் பெயர்ச் சொற் பொருள்]

"கடி யென் கிளவி: காப்பே, கூர்மை,
விரையே, விளக்கம், அச்சம், சிறப்பே;
வரைவே, மிகுதி, புதுமை, தோற்றம்,
மெய்படத் தோன்றும் பொருட்டா கும்மே.
ஐயமும், கரிப்பும், ஆகலும் உரித்தே."

என்பன திவாகர நூற்பாக்கள். திவாகரத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது. இன்னும் விடுபட்ட

பொருள்கள் எத்தனையோ உள்ளன. அவற்றைப் பிற நிகண்டுகளிலும், அகராதிகளிலும் காணலாம்.

இவ்வாறு ஒரு சொல்லுக்கே பல பொருள்கள் எப்படி வந்தன? ஏன் வந்தன? ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் இருப்பதுதானே பொருத்தம்? ஒரேசொல்லால் பல பொருள்களை அழைத்தால், அது, 'கஞ்சத்தனமும் பஞ்சத்தனமும்'நிறைந்த ஏழ்மை நிலையின் அறிகுறியல்லவா? அப்படியென்றால், சொல் வளம் இல்லாத ஏழைமொழி தமிழ்மொழி என்றல்லவா பொருள்படும்?

இந்தப் பெரும் புதிருக்கு இங்கே விடை காண வேண்டும். ஒரு சொல் பல் பொருள் என்றால், பல பொருள்களை ஒரே சொல்லால் அழைக்கிறோம் என்றுதானே பொருள்! அவ்வாறு அழைக்க நேர்ந்ததின் பொருட்டுக்களைச் சிறிது ஆய்வாம் :—

(1) ஒரே சொல்லால் பல பொருள்களை அழைப்பது, மொழியின் சொல்லேழ்மையைக்குறிக்கிறது — எனக் கொள்ளலாகாது; மாறாக, மொழி பேசும் மக்களின் சொற்செட்டை—பேச்சு வழக்கின் சிக்கனத்தைக் குறிப்பதாகவே கருதவேண்டும். எடுத்துக் காட்டாக, உலகம் அறிந்த காந்தி, நேரு, கென்னடி, மாக்மில்லன் முதலியபெயர்களை எடுத்துக்கொள்வோம். இப்பெயர்கள் ஒவ்வொருவரை மட்டும் குறிப்பனவல்ல; அவ்வம் மரபில் தோன்றும் தொடர்புடைய பலரையும் குறிக்கின்றன. அதாவது, காந்தி என்னும் ஒரே பெயர் தந்தை காபா காந்தியையும் மைந்தன் கரம்சந்த் காந்தியையும் குறிப்பதையும், நேரு என்னும் ஒரே பெயர் தந்தை மோதிலால் நேருவையும் மைந்தன் சவகர்லால் நேருவையும் குறிப்பதையும் அறியலாம். இன்னும்

இம்மரபுகளைச் சேர்ந்த பலரையும் இச் சொற்களால் உலகம் அழைக்கின்றதன்றோ? கென்னடி, மாக்மில்லன் முதலிய பெயர்களும் இவ்வாறே பலரை அழைக்கப் பயன்படுகின்றன.

அவ்வளவு ஏன்? நடந்த நிகழ்ச்சியொன்று வருமாறு:—தமிழ் நாட்டில் ஒரு சிற்றூரில் ஒரு குடும்பத்தில் விநாயகம், முத்தையன் எனப் பிள்ளைகள் இருவர் உள்ளனர். தெருவினர் மூத்தவனை விநாயகம்-விநாயகம் என்று அழைத்து வந்தனர். பின்னர், அடுத்துப் பிறந்த முத்தையனைச் சின்ன விநாயகம் என்று அழைத்து வரலாயினர். தம்பிக்கு முத்தையன் என்ற தனிப்பெயர் இருக்கவும், அண்ணன் பெயராகிய விநாயகம் என்ற பெயரால் அவனும் அழைக்கப்படுகிறான். தந்தைக்கு 'காபா' என்ற தனிப்பெயரும், மைந்தனுக்கு 'கரம் சந்த்' என்ற தனிப் பெயரும் இருந்துங்கூட, இருவரும் 'காந்தி' என்னும் ஒரே பெயரால் அழைக்கப்பட்டனர். தந்தைக்கு 'மோதிலால்' என்ற தனிப் பெயரும், மைந்தனுக்கு 'சவகர்லால்' என்ற தனிப் பெயரும் இருந்துங்கூட, இருவரும் 'நேரு' என்னும் ஒரே பெயரால் சுட்டப்பட்டனர். குடும்பத்தில் பிறந்த தொடர்பு என்றென்ன!—சவகர்லால் நேருவிற்கு வாழ்க்கைப்பட்ட தொடர்புடைய கமலாவும் 'கமலா நேரு' என அழைக்கப்பட வில்லையா ?

மேற் குறிப்பிடப்பட் டுள்ளவர்கட்கெல்லாம் தனித்தனிப் பெயர்கள் இல்லை; அக் குடும்பங்களில் பெயர் ஏழ்மை இருக்கிறது—என்று எவரேனும் சொல்ல முடியுமா? ஒரு சொல் பல் பொருள் நிலையும் இது போன்றதே! ஏதேனும் ஒரு விதத் தொடர்பு பற்றிப் பல பொருட்களை ஒரே சொல்லால் மக்கள் அழைப்பது

இயல்பே! காட்டாக, கார், வரை என்னும் இரு சொற்களை எடுத்துக் கொள்வோம் :—

கார் என்னும் ஒரே சொல், கருமை நிறம் என்னும் பொருளோடு, கருமை நிறமுடைய 'மேகம்', மேகத்திலிருந்து வரும் 'மழை', மழையால் கிடைக்கும் 'தண்ணீர்', கரிய மேகம் காணப்படுகிற 'மழைக்காலம்' (கார்காலம்), கார் காலத்தில் விளையும் 'கார் நெல்', அதைக்கொண்டு சமைத்த 'சோறு' முதலிய பொருள்களையும் தருகிறது. இப்பொருள்கள் எல்லாம் ஒன்றோடொன்று ஒவ்வொரு வகையில் தொடர்புடையன வல்லவா? இது போலவே, வரை என்னும் ஒரே சொல், கோடு, கோடுபோல் தெரிகிற கணு, கணுக்களையுடைய மூங்கில், மூங்கில் வளரும் மலை, மலையின் உச்சி, பக்க மலை, மலையில் உள்ள கல் முதலிய பொருள்களைத் தருகிறது. கார், வரை என்னுஞ் சொற்கள் எத்தனை பொருள்கள் தருகின்றனவோ, அத்தனை பொருள்கட்கும் தனித்தனிப் பெயர்கள் வேறு இருப்பது காண்க. எல்லாப்பொருள்கட்கும் தனித்தனிப் பெயர்கள் இருப்பதால் மொழியில் சோல்லேழ்மை யிருப்பதாகக் கருதமுடியாது. எனவே, தொடர்புடைய பல பொருள்களில் ஒரே சொல்லை மக்கள் வழங்குவது, ஒரு வகை மொழிச்செட்டேயாகும் என்பது புலனாகலாம்.

இவ்வாறு மக்கள் மேற்கொண்டுள்ள ஒருவகை மொழிச்செட்டைத்தான் 'ஆகு பெயர்' என இலக்கண நூலார் அழைப்பதாகத் தெரிகிறது. ஒரு பொருளின் பெயர் அப்பொருளைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடையவேறொரு பொருளுக்கு ஆகிவருவது ஆகுபெயர் ஆகும். எடுத்துக்காட்டாக,—புதுச்சேரி என்னும் பெயர் ஓர் ஊரைக் குறிக்கிறது. 'புதுச்சேரி திரண்டு

போருக் கெழுந்தது' என்ற தொடரிலோ, புதுச்சேரி என்னும் பெயர் அந்த ஊரைக் குறிக்காமல், அவ்வூரில் வாழும் மக்களுக்கு ஆகிவருகிறது. இந்தத் தொடரில் புதுச்சேரி என்னும் சொல்லுக்கு 'ஆகு பெயர்' என்று பெயராம். ஒன்றன் பெயர் அதனோடு ஏதாவது ஒரு வகையிலாவது தொடர்புடைய பொருளுக்குத்தான் ஆகிவருமே தவிர, தொடர்பில்லாத பொருளுக்கு ஆகிவராது என்பது ஈண்டு நினைவுகூரத் தக்கது.

புதுச்சேரியில் வாழும் மக்கள் என நீளமாகப் பேசும் முயற்சியைக் குறைத்து, புதுசேரி போருக் கெழுந்தது எனச் செட்டாக—சிக்கனமாக மக்கள் பேசுவது இயல்பு. எனவே, புதுச்சேரி என்னும் ஒரே சொல், ஊரையும், ஊர் மக்களையும் குறிப்பதுணர்க. பெரும்பாலான 'ஒரு சொல் பல் பொருள்கள்' இப்படித் தான் மொழிச் செட்டினால் தோன்றியிருக்கக் கூடும் என்னும் கருத்து இப்போது புலனாகுமே!

மற்றும், மேலே எடுத்துக்காட்டி யிருப்பது 'இட வாகுபெயர்'எனப்படும். அதாவது, புதுச்சேரி என்னும் இடத்தின் பெயர் அவ்விடத்தில் வாழும் மக்களுக்கு ஆகிவருதலின் இடவாகு பெயராம். இது போலவே 'ஒரு சொல் பல் பொருள்' என்ற நிலையில் இன்னும் பல ஆகுபெயர்கள் உள்ளன. 'கார் அறுத்தான்' என்ற தொடரில், கார் என்னும் (கார்) காலத்தின் பெயர், அக்காலத்தில் விளையும் (கார்) நெல்லுக்கு ஆகிவருவது கால வாகுபெயராம். 'நீலம் சூடினாள்' என்னும் தொட ரில், நீலம் என்னும் நிறப் பண்பின் பெயர், அந்நிற முடைய குவளை மலரைக் குறிப்பதுபண்பாகுபெயராம். 'வற்றல் தின்றான்' என்னும் தொடரில், வற்றல் (வற்று தல்) என்னும் தொழிலின் பெயர், வற்றிப் போன உண

வுப் பொருளைக் குறிப்பது தொழிலாகு பெயர். 'காளை வந்தான்' என்ற தொடரில் காளை என்னும் ஆண் மாட்டின் பெயர், துணிவிலும் வன்மையிலும் காளையுடன் ஒப்புமை (உவமை)யுடைய வீரனைக் குறிப்பது உவமையாகு பெயராகும்.

இலக்கண ஆசிரியர்கள் கூறியுள்ள ஒருவகை ஆகுபெயர் அமைப்பின் நுட்பத்தையும் இங்கே குறிப்பிடுதல் நன்று: அதாவது,—கருமை என்னும் பொருளுக்கு உரிய கார் என்னும் சொல், கருநிறம் உடைய மேகத்திற்கு ஆகி வருவது ஒருமடி ஆகு பெயராம்; மேகம் மழை பெய்யும் கார் காலத்திற்கு ஆகிவருவது இருமடி ஆகு பெயராம்; கார் காலத்தில் விளையும் கார் நெல்லுக்கு ஆகிவருவது மும்மடியாகு பெயராம்; இப்போது கார் சாப்பிட்டு வருகிறேம் என்ற விடத்தில், கார் நெல்லைக் கொண்டு ஆக்கிய சோற்றுக்கு ஆகி வருவது நான்மடியாகு பெயராம். இவ்வாறே, கோடு என்னும் பொருளுடைய வரை என்னும் சொல், கணுவைக் குறிப்பது ஒரு மடியாகு பெயர்; கணுக்களுடைய மூங்கிலைக்குறிப்பது இருமடியாகுபெயர்; மூங்கில் வளரும் மலையைக் குறிப்பது மும்மடியாகு பெயர். இவை போல இன்னும் பலமடி யாகுபெயர்கள் பல உள்ளன.

இவ்வாறே எல்லா ஆகு பெயர்களையும் ஆராயின், ஒரு சொல் பல் பொருள்கள் தோன்றியதற்கு, மக்களின் மொழிச் செட்டும் ஒரு பொருட்டாகும் என்னும் கருத்து புலனுகாமற்போகாது.

(2) ஒரு சொல் பல் பொருட்கள் தோன்றியதற்கு இன்னொரு இயற்கைப் பொருட்டும் கூறலாம். அதாவது,—ஒரே சொல்லால் பல பொருள்களை அழைப்பது

மொழியின் தொன்மையைக் குறிக்கிறது—என்பதாகும். நமது தமிழ் மொழியையே எடுத்துக்கொள்ளலாம். தமிழில் இப்போதுள்ள சொல் வளம் மொழி தோன்றிய முதற் காலத்தில் இருந்திருக்க முடியாது. எனவே, முதற் கால மக்கள், இருந்த சில சொற்களைக் கொண்டே, தொடர்புடைய பல பொருள்களையும் அழைத்திருக்கக்கூடும். நாளடைவில் ஒவ்வொரு பொருளுக்குமெனத் தனித் தனிப் பெயர்கள் ஏற்பட்டிருக்கும். அப்படி ஏற்படத் தொடங்கிய பின்னரும், பல பொருள்கட்கும் பொதுவாயிருந்த பொதுப் பெயரும் பேச்சு வழக்கில் நடமாடிக்கொண்டிருந்திருக்கும். பிற்காலத்தில் எல்லாப் பொருள்கட்குமே தனித் தனிப் பெயர்கள் ஏற்பட்டுவிட்டதால், பல பொருள்கட்கும் பொதுவாயிருந்த ஒரு சொல் வகைகள், பேச்சு வழக்கிலிருந்து படிப்படியாகக் குறைந்து செய்யுள் வழக்கோடு நின்று விட்டன. எனவே, ஒரு சொல் பல் பொருள்கள் மொழியின் தொன்மை நிலையை—தொடக்க நிலையை நினைவு படுத்துவதாக ஒரு கருத்துக்கொள்ளவும் இடமுண்டு. இந்தக் கருத்துக்குத் துணையாக, குழந்தைகள் பேசும் மொழியை ஈண்டு ஒப்பிட்டு நோக்குவது நன்று:

பச்சிளங் குழந்தைக்கு மொழிவளம்—சொல் வளம் கிடையாது. அது தொடக்கத்தில் சில சொற்களையே அறிந்திருக்கும். அந்தச் சில சொற்களைக் கொண்டே மொழி பேசும். பல பொருள்களை அழைக்க ஒரு சொல்லையே பயன்படுத்தும். எடுத்துக் காட்டாக,—அம்மாவைத் தெரியும்; அம்மா என்ற சொல்லையும் தெரியும். எனவே, அம்மா போன்ற வயதுத் தோற்றமுடைய பிற பெண்களையும் அம்மா என்றழைக்கும். தன் ஆயாவை (பாட்டியை)த் தெரியும். ஆகவே, கிழவிகளை

யெல்லாம் ஆயா என்றே அழைக்கும். கிழவிகளில் அத்தையும் இருக்கலாம்—பெரிய தாயாரும் இருக்கலாம்—அதைப் பற்றிக் குழந்தைக்குக் கவலையில்லை; அத்தை, பெரியம்மா முதலிய சொற்கள் குழந்தைக்குத் தெரியாதாகையால் எல்லோருமே ஆயாதான். தன் தாத்தாவைத் தெரியுமாதலால், வயதான ஆடவர்கள் மாமா, பெரியப்பா முதலிய முறையினராயிருந்தாலும் குழந்தைக்கு எல்லோருமே தாத்தாதான். அண்ணன் அக்கா முதலிய அனைத்துப் பெயர்களும் அப்படியே. மற்றும், தின்பண்டங்களுள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தனிப் பெயர் இருந்தும், எல்லாவற்றையுமே 'மம்மு' என்னும் ஒரு பெயரால்தான் குழந்தை குறிப்பிடும். 'கொஞ்சம்—கொஞ்சோண்டு' என்ற சொல் வழக்கு குழந்தைக்குத் தெரியும்; எனவே, தன்னிலும் சின்ன குழந்தைகளைக் கண்டால், சின்ன பாப்பா—சின்ன தம்பி என்று சொல்லத் தெரியாமல், 'கொஞ்சோண்டு பாப்பா—கொஞ்சோண்டு தம்பி' என்றே சொல்லும். இந்தக் 'கொஞ்சோண்டு' என்ற சொல் மட்டும் எப்படி தெரிந்ததென்றால்,—'மம்மு ரொம்ப கொடுக்கலே—கொஞ்சோண்டு கொடுக்கற' என்று அம்மாவிடம் அடிக்கடி சண்டை பிடித்துப் பழக்கப் பட்டதாகும். 'எப்படா வந்தே' என்று கேட்டால், நேற்று என்னும் சொல் தெரியாத குழந்தை 'நாளைக்கு வந்தேன்' என்று சொல்லும். நாளை என்னும் சொல்லுக்கு நேற்று என்ற ஒரு பொருளும் குழந்தைகளின் அகராதியில் உண்டு. 'அண்ணன் எங்கே' என்று கேட்டால், 'அவன் தாராந்து (தாரை வார்ந்து) போயிட்டான்' என்று குழந்தைசொல்லும். குழந்தைகள் விளையாட்டுப் பொருள்களைத் தாரைவார்த்து (காணுதடித்து) இருப்பதுண்டு. அப்பொருள்களைப்

போலவே அண்ணனும் ஆய்விட்டான் குழந்தைக்கு. 'அண்ணனைக் காணும்' என்பதற்குப் பதிலாக—'அண்ணன் தாராந்து போயிட்டான்' என்று குழந்தை சொல்கிறது. இப்படியாகக் குழந்தை மொழிக்குள் நுழைந்து ஆய்ந்தால், எண்ணற்ற எடுத்துக் காட்டுக்கள் கிடைக்கும்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன், மக்களினத்தின் வளர்ச்சியாகட்டும்—மொழியின் வளர்ச்சியாகட்டும்—குழந்தை நிலையில்தானே இருந்திருக்க முடியும்! எனவேதான் மொழி தோன்றிய முதற்காலத்தில் சொல்வளம் பெருகாமையால், மக்கள் தொடர்புடைய பல பொருள்களை ஒரே சொல்லால் குறித்து வந்திருப்பர்.

இந்தக் காலத்தில்கூட, புதிதாக ஒரு மொழி கற்றுக் கொள்பவர்கள், தொடக்கத்தில் தாம் அறிந்த சில சொற்களைக் கொண்டே பல கருத்துக்களைத் தப்பாகவோ—தவருகவோ பேசுவதையும் எழுதுவதையும் காணலாம். எனவே, ஒரு சொல் பல் பொருள்கள், மொழியின் தொடக்க கால நிலையைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

இக்கருத்தை வைத்துக்கொண்டு மொழியில் சொல்லேழ்மை இருப்பதாகக் கொள்ளக்கூடாது. எம்மொழியிலும் முதற்காலத்தில் சொல்லேழ்மை இருக்கத்தான் செய்யும். நாளடைவில்தான் மொழிகள் சொல்வளம் பெற்று வளர முடியும். ஒருவன் முப்பது வயதில் பெற்றிருக்கும் வளர்ச்சியை மூன்று வயதில் பெற்றிருந்திருக்க முடியாதன்ரே? ஒரு மொழி தோன்றிப் பன்னெடுங்காலம் ஆன பிறகும் சொற்களஞ்சியம் நிரம்ப

வில்லை யென்றால்தான், அம்மொழியைச் சொல்லேழ்மை யுடையதாகக் குறைத்து மதிப்பிட முடியும். அதிலும், வேறு மொழிகளிலிருந்து தோன்றி வேறு பல மொழி களிலிருந்து சொற்களைக் கடன் வாங்கி வளர்ந்திருக் கிற ஆங்கிலம் முதலிய மொழிகளைப்போ லில்லாது, தானே தலைமொழியாய்த் தோன்றி, தன் துணை கொண்டே தன்னில்தானே வளர்ந்திருக்கின்ற தமிழ் மொழியில் சொல்லேழ்மை என்ற குறைக்குச் சிறிதும் இடமேயில்லை.

மிகப் பழம்பெரு மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்று—என்ற அளவில் மட்டுமல்ல—உலக மொழி களுக்குள்ளே முதல் முதல் தோன்றிய மொழி தமிழ் மொழியே—என்ற அளவில் ஒரு கொள்கை ஒரு சில ஆராய்ச்சியாளரால் ஆணித்தரமாக நிறுவப்பட்டுள் ளது. அங்ஙனமெனில், மக்களினம் குழந்தை நிலையி லிருந்த மிக மிகப் பழங்காலத்தில் தோன்றிய உலக முதல் மொழியாகிய தமிழ் மொழியில் ‘ஒரு சொல் பல் பொருள்கள்’ மலிந்திருப்பதில் வியப்பொன்றுமில்லை.

இதுகாறுங் கூறியவற்றால், ‘ஒரு சொல் பல் பொருள்கள்’ மொழியின் தொன்மை நிலையையும் மொழிச் செட்டையும் குறிப்பதாக நம்பலாம்.

## ஒரு சொல்லா? பல சொல்லா ?

ஒரு சொல் பல் பொருள்கள் பற்றி ‘பல்லார்டு’ (Ballard) என்னும் அறிஞர் பின்வருமாறு ஒரு கருத்து தெரிவித்துள்ளார்: ஒரு சொல்லுக்கு இரு பொருளோ அல்லது பல பொருளோ இருக்க முடியாது; ஒரு சொல் லுக்கு ஒரு பொருள் இருப்பதுதான் இயற்கை; அப்படி ஒரு சொல்லுக்கு மூன்று பொருள்கள் காணப்படின்,

அச்சொல்லை ஒரு சொல்லாகக் கொள்ள முடியாது; மூன்று சொற்களாகத்தான் கொள்ள வேண்டும்—என் பதே அவர் கருத்து. அதாவது, 'பல்லார்டு' அவர் களின் கருத்தின்படி பார்க்குங்கால்,—அரி என்னும் சொல்லுக்குக் கண் என்றும், கடல் என்றும், பொன் என் றும், புகைஎன்றும் பலபொருள்கள் உள்ளன; எனவே, அரிஎன்னும் ஒலியை ஒரு சொல்லாகக் கொள்ளாது பல சொற்களாகவே கொள்ள வேண்டும் அதாவது, கண் என்று பொருள்படும் அரி ஒரு தனி அரி; கடல் என்று பொருள்படுவது இன்னொரு தனி அரி; பொன் என்று பொருள்படுவது வேறொரு தனி அரி; புகை என்று பொருள்படுவது மற்றுமொரு தனி அரி; இன்னும் இப் படியே ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வோர் அரி உள் ளது. எனவே, அரி என்னும் ஒரு சொல்லொலிக்குள் பல அரிகள் புகுந்துகொண் டிருப்பதாகக் கொள்ள வேண்டும். இது 'பல்லார்டு' போன்றவர்களின் கருத்து.

இந்தக் கருத்தில் ஓரளவு உண்மையிருக்கிறதென் ருலும், இதனை முற்றிலும் ஒத்துக்கொள்வதற்கில்லை. எப்படி யென்று காண்பாம்:

ஒரு சொல் பல்பொருள்களை, 'ஓரினம் தழுவி யவை', 'வேறினம் தழுவியவை' என இரு வகையாகப் பிரித்துக்கொள்ளவேண்டும். கார் என்னும் சொல்லால் குறிக்கப்படும் கருநிறம், மேகம், மழை, கார்காலம், கார் நெல், கார் நெல் உணவு ஆகிய பொருள்கள் ஒன்றோடொன்று தொடர்புடையவை யாதலின், இவை ஓரினம் தழுவியவையாகும். இவ்வாறே பிறப் பாலோ, உறுப்பாலோ, இடத்தாலோ, காலத்தாலோ, பண்பாலோ, தொழிலாலோ, ஒப்புமையாலோ, இன்ன

பிறவற்ருலோ தொடர்புடைய பொருள்கள் யாவும் ஓரினம் தழுவியவையே! இவ்வாறின்றி, அரி என்னும் சொல்லால் குறிக்கப்படும் கண், கடல், பொன், புகை, குதிரை, குரங்கு, தவளை, வண்டு முதலிய பொருள்கள் ஒன்ருேடொன்று ஒருவிதத் தொடர்பும் பெருத வேறு வேறு பொருள்களானதால், இவை வேறினம் தழுவி யவை எனப்படும்.

இவ்விரு பிரிவுகளுக்குள் வேறினம் தழுவியவற் றிற்கே 'பல்லார்டு' சொன்ன கருத்து பொருந்தும். ஓரினம் தழுவியவற்றுக்கு அக்கருத்து அவ்வளவாகப் பொருந்தாது. ஓரினம் தழுவிய பொருள்களைக் குறிக் கும் சொல் ஏறக் குறைய ஒரு சொல்லே. அது குறிக் கும் பல பொருள்களும் ஒரே மரத்தின் பல பாகங்கள் போன்றவை. ஆனுல், வேறினம் தழுவிய பொருளைக் குறிக்கும் சொல்லோ, பல சொற்களின் மதிப்புடையது; அது குறிக்கும் பல பொருள்களும் ஆல், அரசு, அத்தி, வாழை, பலா, பனை, தென்னை முதலிய தனித்தனி மரங்கள் பலவற்றைப் போன்றவை. ஆல், அரசு முதலிய எல்லாமே மரம் என்னும் பொதுப் பெயரால் சுட்டப்படு வதைப்போல, கண், கடல், பொன், புகை முதலிய எல் லாப் பொருள்களுமே அரி என்னும் பொதுப் பெயரால் சுட்டப்படுகின்றன. உண்மை இதுதான்!

மேலெழுந்தவாரியாகப் பார்க்குங்கால் வேறினம் தழுவியவையாகத் தெரியும் சில பொருள்களை ஆழ்ந்து நோக்கின், ஒன்றுக்கொன்று ஏதோ ஒரு வகைத் தொடர்பு பெற்றிருப்பது புலனுகலாம். எடுத்துக் காட் டாக,—'அடுதல்' என்னும் சொல் கொல்லுதல், சமைத் தல் ஆகிய இரு பொருள்கள் தருவதும், முதற்கால மக்கள் உயிர்களைக் கொன்று தின்றதனுலும்

சமையலுக்குமுன் கொலைநிகழ்வதாலும் கொலையின்றிப் பெரும்பாலும் உலகில் சமையல் இல்லையாதலாலும் கொல்லுதல் என்னும் பொருளும் சமையல் என்னும் பொருளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்னும் கருத்தும் முன்னோிடத்தில் விரிவாக விளக்கப் பட்டுள்ளன. மேலோடு பார்க்குங்கால், கொல்லுதல் தொழில் வேறு, சமைத்தல் தொழில் வேறு என்றுதான் தோன்றும். ஆழ்ந்து பார்த்தால்தான், கொலையே தான் சமையல்—கொலை வேறில்லை, சமையல் வேறில்லை என்பது புலப்படும். அதாவது, மிகப் பழங் காலத்தில், அஃறிணை உயிர்களே யன்றி, உயர்திணை யாகிய மக்களுங்கூட, உயிர்களைக் கொன்று சமைக் காமல் பச்சையாகவே தின்றார்கள் ஆதலின், அந்தக் காலத்தில், கொன்றுவிட்டால் சமையல் முடிந்துவிட்ட தாகவே பொருள்; உடனே உண்ண வேண்டியது தான். நாளடைவில் மக்கள் பச்சையாகவே உண்ணா மல் சமைக்கவும் தொடங்கினர், அதன் பின்னர்தான், கொல்லுதல் எனும் தொழிலைக் குறிக்கப்பயன்படுத்திய அடுதல் என்னும் சொல்லை, சமைத்தல் என்னும் தொழி லைக் குறிக்கவும் பயன்படுத்தினர். அந்த அடு(தல்) வேர்ச்சொல்லிலிருந்து அடுப்பு, அடுக்களை, அடை, அடிசில் முதலிய சொற்களெல்லாம் உருவெடுத்தன. இவ்வளவு நுட்பங்களையும் உணராமற்போனால், கொல் லுதல், சமைத்தல் என்னும் இரு சொற்களும் வேறினம் தழுவியவை என்றுதானே கூறத் தோன்றும்! உண் மையில் இவையிரண்டும் ஓரினம் தழுவியவையே யன்றோ! இவ்வாறு நுணுகி யாராயின், ஒரு சொல் பல்பொருள்களுள் பெரும்பாலானவை ஓரினம் தழுவி யவையே என்பதும் சிறுபான்மையினவே வேறினம் தழுவியவை என்பதும் புலப்படும்.

ஓரினம் தழுவியவை: தோன்றியதற்குரிய பொருட்டு (காரணம்), மொழியின் தொன்மை நிலையும் மொழிச் செட்டும் ஆகும் என ஆய்ந்து கண்டோம். இனி, வேறினம் தழுவியவை தோன்றியதற்குரிய பொருட்டு ஆராயப்பட வேண்டும்.

அரி என்னும் ஒரு சொல்லுக்குக் கண், கடல், பொன், புகை, குதிரை, தவளை முதலிய பல பொருள்கள் உள்ளன. இத்தனை பொருள்களும் ஒன்றுக் கொன்று ஒரு சிறிதும் தொடர்பில்லாதவை. அப்படி யிருக்க, இவ்வளவு பொருள்கட்கும் அரி என்னும் ஒரு பெயர் எப்படி ஏற்பட்டிருக்க முடியும்? இவ்வினுவிற் குரிய விடை யாது:—இது தற்செயலாய் ஏற்பட்ட அமைப்பே - என்பதேயாகும். அதாவது,—பரந்துபட்ட பழந் தமிழகத்தில் வாழ்ந்த மக்களுள் ஒரு பகுதியினர் தற்செயலாய்க் கண்ணை அரி என்னும் சொல்லால் குறித்திருப்பர்; இன்னொரு பகுதியினர் கடலை அச் சொல்லால் குறித்திருப்பர்; வேறொரு பகுதியினர் பொன்னை அச்சொல்லால் குறித்திருப்பர்; மற்றும் ஒரு பகுதியினர் குதிரையைக் குறித்திருப்பர்; தற்செய லாய் இவர்களெல்லாரும் ஒன்று சேர்ந்தபோதோ - அல்லது - ஒருவரின் எழுத்துப் படைப்பை மற்றொருவர் படித்தபோதோ, அரி என்னும் ஒரு சொல் ஒலி பல பொருள்களைக் குறிக்கத் தங்களால் பயன்படுத்தப்பட் டிருப்பதை அறிந்திருப்பர். பின்னர், அரி என்னும் ஒரு சொல்லுக்கு அத்தனை பொருள்களும் உரியன வாகத் தொகுத்துக் கொண்டிருப்பர். இப்படியாக, வேறினம் தழுவிய ஒரு சொல் பல் பொருள்கள் ஏற்பட் டிருக்கலாமன்றோ?

என்ன பொருட்டினுல் ஒவ்வொரு பகுதியினரும் அந்தந்தப் பொருளை அரி என்னும் சொல்லால் அழைத் தார்கள் என்று எவரும் பொருட்டு கேட்க முடியாது. 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்னும் தொல்காப்பியத்தின்படி, ஒவ்வொரு சொல்லும் ஏதேனும் ஒவ்வொரு பொருளைக் குறிக்கத்தான் செய் யும். ஆனல், அந்தப் பொருளைக் குறிக்க அந்தச் சொல் ஏன் ஏற்பட்டது என யாரும் திட்டவட்டமாகப் பொருட்டு கூற முடியாது. ஆழ்ந்து நோக்கின் எல் லாச் சொற்களுமே இடுகுறிச் சொற்களே; ஒரு சொல் என்பது ஒரு பொருளைக் குறிக்க ஏற்பட்ட ஒரு வகை அடையாளமே—என்னும் கருத்து முன்பே ஓரிடத்தில் ஆராய்ந்து நிறுவப்பட்டுள்ளது. 'மொழிப் பொருள் காரணம் விழிப்பத்தோன்ரு' என்று தொல்காப்பியரே கூறியுள்ளா ரன்ரு? எனவே, தற்செயலாய் ஒரே ஒலியால் (ஒரே சொல்லால்) பல பகுதியினர் பல பொருள்களை அழைத்திருக்கக்கூடும். நாளடைவில் அவையெல்லாம் ஒன்றுதிரட்டப்பட்டு 'ஒரு சொல் பல் பொருள்கள்' என்ற பட்டம் பெற்றுவிட்டன. இக் கருத்தை நம்பச் செய்வதற்கு ஒரு சான்று வருமாறு:—

ஒரு பள்ளிக்கூடத்திலுள்ள ஆரும் வகுப்பில் ஆறு ஆறு முகங்களும், ஏழாம் வகுப்பில் ஏழு ஏழுமலை களும் படிப்பதாக வைத்துக்கொள்வோம். உண்மை யில் ஓர் ஆறுமுகத்துக்காவது ஆறு முகங்கள் இருக்கா; ஒரு முகமே இருக்கும். அதே போல் ஓர் ஏழுமலையினிடமாவது ஏழுமலைகள் இருக்கா-ஏன் - ஒரு மலைகூட இருக்காது. இருப்பினும் இப்பெயர்கள் அந் தந்த மாணுக்கரை அழைப்பதற்காக இடப்பட்ட ஒரு வகை அடையாள ஒலிகளாகும். ஒரே ஆறுமுகம்

என்னும் பெயரால் - அல்லது - ஒரே ஏழுமலை என்னும் பெயரால் பலர் அழைக்கப்படுவதிலுள்ள உண்மை யாது ?

ஆறுமுகங்கள் அனைவரும் பல குடும்பத்திலிருந்து வந்தவர்கள் ; தனித்தனி ஊரினராகவும், தனித்தனி இனத்தினராகவும், தனித்தனி தாய்மொழியினராகவும் இருக்கக்கூடும். இருப்பினும், ஆறு ஆறுமுகங்கட்கும் அவரவர்தம் பெற்றோரால் தற்செயலாகவே ஆறுமுகம் என்னும் ஒரே பெயர் வைக்கப்பட்டுவிட்டது. ஒருவர் வைத்தது இன்னொருவர்க்குத் தெரியவே தெரியாது. இந்நிலையில், எல்லா ஆறுமுகங்களும் ஒரு வகுப்பில் கூடியபோது, பலபேருக்கு ஒரே பெயர் இருப்பது தெரிய வந்தது. இது தற்செயல் நிகழ்ச்சியே. இதேபோல் மொழியிலும் பல பொருள்கட்கு ஒரே பெயர் தற்செய லாய்த் தோன்றியவையே, வேறினம் தழுவிய ஒரு சொல் பல் பொருட்களாம்.

இனி, பல பொருள் தரத்தக்க ஒரு சொல், எந்த இடத்தில் எந்தப் பொருளில் வந்துள்ளதென எப்படிக் கண்டுபிடிப்பது என்பது குறித்து ஆராய வேண்டும் :-

தனி எழுத்துக்கு மதிப்பில்லாதது போலவே தனிச் சொல்லுக்கும் மதிப்பில்லை. எந்தச் சொல்லும் ஒரு வாக் கியத்தில் வைத்து வழங்கப்படும்போதே தன் முழுப் பொருள் மதிப்பையும் பெறுகிறது. ஒரு வாக்கி யத்திலுள்ள ஒரு சொல்லானது, தனக்கு முன்னும் பின்னுமுள்ள சொற் சூழ்நிலைகளின் துணையால் தன் பொருளைத் தானே எளிதில் விளக்கிவிடும். எனவே, ஒரு சொல்லுக்கு இரண்டு அல்லது மூன்று பொருள்கள்

இருப்பினும், அது வந்திருக்கிற வாக்கிய அமைப் பைக் கொண்டு, அதற்கு அந்த இடத்தில் எந்தப் பொருள் உரியது என்பதை எளிதில் புரிந்துகொள்ள முடியும். எடுத்துக்காட்டாக,—'அடி' என்னும் ஒரு சொல்லுக்கு, அடிக்கிற அடி, அளக்கிற அடி என்பன போலப் பல பொருள்கள் இருப்பினும், முதுகில் நான்கு அடி கொடுத்தார்கள் என்ற தொடரில் அடிக்கிற அடி என்ற பொருளும், அந்தக் கம்பம் பன்னிரண்டு அடி உயரம் உள்ளது என்பதில் அளக்கிற அடி என்ற பொருளும், தாய் தன் குழந்தையின் அடிமுதல் முடி வரை முத்தம் தந்தாள் என்பதில் கால் என்ற பொரு ளும், குடத்தின் அடியில் கொஞ்சம் தண்ணீர் இருக் கிறது என்பதில் கீழ்ப்பாகம்—கீழ்மட்டம் என்ற பொருளும் ஐயந்திரிபின்றி மிகத் தெளிவாக விளங்கு கின்றன.

இப்படியாக, பல பொருள் தரத்தக்க அடி என்னும் ஒரு சொல்லானது, அடி கொடுத்தார்கள் என்றவிடத் தில் பிற பொருள்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டு கின்ற 'கொடுத்தார்கள்' என்னும் வினைச் சொல்லின் துணை கொண்டும், பன்னிரண்டு அடி உயரம் என்ற விடத்தில் பிற பொருள்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிற 'உயரம்' என்னும் பெயர்ச் சொல்லின் துணை யாலும், அடிமுதல் முடிவரை என்ற விடத்தில் 'முடி' என்னும் இனச் சொல்லாலும், குடத்தின் அடியில் கொஞ்சம் தண்ணீர் என்றவிடத்தில் 'குடம்–கொஞ்சம்' ஆகிய (சந்தர்ப்பச்) சார்புச் சொற்களாலும் பொருள் விளக்குவதை யறிக. இவ்வாறு எளிதில் தெளிவாகப் பொருள் உணர்த்தும்படியே பேசுபவர்களும் பேச வேண்டும்—எழுதுபவர்களும் எழுத வேண்டும்.

பல பொருள் தரும் ஒரு சொற்களுக்குள், தெளி! வாகப் பொருள் விளங்கும்படி அமைந்துள்ள பல பொருள் ஒரு சொல்லை 'வினை வேறுபடும் பல பொருள் ஒரு சொல்' என்னும் பெயராலும், தெளிவாகப் பொருள் விளங்கும்படி அமையாத பல பொருள் ஒரு சொல்லை 'வினைவேறுபடாப் பல பொருள் ஒரு சொல்' என்னும் பெயராலும் தொல்காப்பியர் அழைத்துள்ளார். வினை வேறுபடும் பல பொருள் ஒரு சொல், இயற்கையாகவே வாக்கியத்தில் அமைந்துள்ள வினைச் சொல், இனச் சொல், சார்புச் சொல் முதலிய வற்றால் எளிதில் பொருள் விளக்கும் என்றும், வினை வேறு படாப் பல பொருள் ஒரு சொல் வினை முதலியவற்றால் எளிதில் பொருள் விளக்காமையால், அப்படி விளக்குவதற்குத் துணையாக ஏதேனும் சொல்லைச் சேர்த்துப் பேசவோ - எழுதவோ செய்ய வேண்டும் என்றும், ஒரு வாக்கியத்திலுள்ள புரியாத சொல்லை, அதே வாக்கியத்திலுள்ள புரியும் சொற்களின் துணை கொண்டு புரிந்துகொள்ள வேண்டும் என்றும் தொல் காப்பியர் மொழிந்துள்ளார். இக்கருத்துக்களை யெல் லாம், தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் கிளவியாக் கம் என்னும் இயலிலுள்ள,

" வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல் என்று
ஆயிரு வகைய பலபொருள் ஒருசொல்."

" அவற்றுள் வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே."

**“ ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்**
**வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல்**
**நினையுங் காலைக் கிளந்தாங் கியலும்.”**

**“ குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி.”**

என்னும் நூற்பாக்களாலும், உரியியலில் உள்ள,

**“ ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்**
**பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்**
**பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்**
**தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்**
**எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்.”**

என்னும் நூற்பாவாலும் அறிந்து கொள்ளலாம்.

ஒரு வாக்கியத்தில் உள்ள குறிப்பிட்ட ஒரு சொல்லின் பொருளைத் தெளிவாக அறிந்து கொள்ளுதற்கு வேண்டிய சூழ்நிலை அவ்வாக்கியத்தில் அமைந்திருக்கவில்லை யென்றால், அது குழப்பமுடைய வாக்கியமாகவே கருதப்படும். இந்நிலை செய்யுள் வழக்கில் இருந்தாலும் இருக்கும்; ஆனால் பேச்சு வழக்கில் பெரும்பாலும் இராது. சில வேளைகளில் பேச்சு வழக்கில் நகைச்சுவைக்காக இரு பொருள் தரும் ஒரு சொல்லைப் பயன்படுத்தி மக்கள் பேசுவதுண்டு. எடுத்துக் காட்டாக,—‘நீர் வேண்டும்’ என்னும் பேச்சில், தண்ணீர் வேண்டும்—நீங்களே வேண்டும் என இரு பொருள் படும்படியான நகைச்சுவை அமைந்திருப்பது காண்க. இதுபோன்ற சூழ்நிலையில் பேசுபவரும் கேட்பவரும் சிறிதும் குழப்பமின்றிப் பேசி நகைச்சுவை விருந்தைச் சுவைப்ப தியற்கை.

இவ்வாறின்றிக் குழப்பமான நிலையில் பல பொருள் ஒரு சொல் ஒன்று செய்யுளில் வருமாயின்,

அச்சொல்லுக்கு உரிய ஒவ்வொரு பொருளையும் செய்யு ளின் சூழ்நிலையோடு பொருத்திப் பார்த்துப் பொருந்தும் பொருளைக் கொள்ள வேண்டும். இவ்வாறு பொருள் காணும் திறன், இலக்கியப் பயிற்சி ஏற ஏற எளிதில் கைவரப்பெறும்.

சூழ்நிலைக்கு ஏற்பப் பல பொருள் ஒரு சொல்லுக்குத் தீர்வு காண்பதே மொழி மரபு.

# கல்வித் துறையில் அகராதிக் கலையின் பங்கு

'சொல்லும் மொழியும்' என்னும் தலைப்புடைய இப் பாகத்தில், சொல் பிறந்த கதையும், சொல் பெருகிய கதையும், சொல்லின் வகையும், ஒரு பொருள் பல்பெயர் களும், ஒரு சொல் பல் பொருள்களும் இதுகாறும் ஆராயப்பட்டன. இனி, கல்வித் துறையில் மொழிப் பாடத்தின் பங்கும், அம்மொழிப் பாடத்தில் சொற் பொருள் விளக்கும் அகராதிக் கலையின் பங்கும் என்ன என்பது குறித்து ஒரு சிறிது ஆய்வாம்:—

உலகில் மக்கள் பல்கால் பயின்று கற்றுக்கொள்ள வேண்டிய கலைகள் பல. அவற்றுள் மொழி, தானும் ஒன்று என்ற அளவினதன்றி, தான் முதன்மையான தும் இன்றியமையாததும் ஆகும். மொழியின் துணை கொண்டே பள்ளிகளில் பல கலைகள் பயிலப்படு கின்றன—பயிற்றப்படுகின்றன. கணிதம், வரலாறு, நிலவியல், அறிவியல், அரசியல், உளவியல், மருத்துவம் போன்ற எந்தக் கலையினையும்—எந்தக் கல்வியினையும் மொழியின்றிப் பயிலவோ பயிற்றவோ முடியாதுதானே!

உலகில் உள்ள எந்தக் கலையினையும் முற்றும் பயின்று முடிக்கவியலாது. இதற்கு மொழிக்கலையும் விலக்கன்று. இன்னும் கேட்டால், மற்ற கலைகளினும் மொழிக்கலை மிக்க ஆழமும் அகலமும் உயரமும் உடையதாகும். எப்படி? எல்லாக் கலைகளையும் ஒரு

மொழி பெற்றிருக்குமாயின், அதாவது, எல்லாக் கலைகளும் ஒரு மொழியில் எழுதப்பட்டிருக்குமாயின், அம்மொழியின் கன அளவு மிகுதி என்பது தெளிவு.

ஒருவர் தமிழோ—பிரஞ்சோ—ஆங்கிலமோ—ஏதோ ஒரு மொழி கற்றிருக்கிறார் என்றால், அம் மொழியில் எழுதப்பட்டுள்ள எல்லாக் கலை நூற்களையும் கற்றிருக்கிறார் என்று பொருள் இல்லை. ஒருவரே அனைத்தையும் கற்கவும் முடியாது. ஆனால், ஒருவர் ஒரு மொழியில் உள்ள இலக்கண இலக்கியச் செய்யுள் உரைநடைகளைப் பரந்த அளவில் பயின்றிருப்பாராயின்—அதாவது தேர்ந்த மொழிப்புலமை பெற்றிருப்பாராயின், அப் புலமையின் துணைகொண்டு, அம்மொழியில் எழுதப் பட்டுள்ள ஏனைய கலைநூற்களையும் ஒருவாறு படித்துப் புரிந்து கொள்ளலாம். ஒரு கலை வல்லார் அக்கலை பற்றித் தெளிவாக விளக்கமாக நூல் எழுதின், அக் கலை நூலினை, மொழி வல்லார் ஆசிரியர் துணையின்றித் தாமாகவே கட்டாயம் புரிந்துகொள்ள முடியும். இதற்குப் பல எடுத்துக்காட்டுகள் தரமுடியும். இதனை மேலும் ஆய்வாம்:—

இந்தக் காலத்தில் தமிழோ பிரஞ்சோ ஆங்கிலமோ படித்துப் பட்டம் பெற்றிருக்கும் சிலரிடம் சென்று, அவர்கள் படித்த மொழியில் எழுதப்பட்டிருக்கும் ஒரு நூலைக் காட்டி அதில் ஏதேனும் ஐயம் கேட்டால், 'நான் இது படிக்கவில்லை, அதுதான் படித்தேன்—அது படிக்கவில்லை, இதுதான் படித்தேன்' என்று ஏதேதோ சொல்லி அவர்கள் தப்பித்துக் கொள்ள முடிகிறது. இத் தகைய பதில், அவரைப்போன்ற படிப்பாளிகட்கு ஆறுதல் அளிக்கலாமே தவிர, எளிய மக்களுக்கு மன நிறைவு அளிக்க முடியாது. 'என்னவோ படித்தவர்

என்று கேட்டால், இது சொல்லத் தெரியவில்லையே அவருக்கு' என்று எளியமக்கள் எளிதில் உதட்டைப் பிதுக்கிவிடுவார்கள்.

எடுத்துக் காட்டாக,—தமிழ் படித்தவர் என்ற பெயருடன் ஒருவர் ஒரு சிற்றூரில் சென்று அகப் பட்டுக் கொண்டால், ஆங்கிருக்கும் சிலர் கேட்கும் கேள்விகட்கெல்லாம் பதில் சொல்லியாக வேண்டும்; அவர்கட்கு எழும் ஐயந்திரிபுகளையெல்லாம் தெளிவிக்க வேண்டும். இலக்கண இலக்கியங்கள் பற்றி மட்டும் கேட்டால் ஓரளவு தப்பித்துக் கொள்ளலாம். ஆனல், கணிதம், மருத்துவம், வானநூல், தத்துவம் முதலிய கலைகள் பற்றித் தமிழ்மொழியில் செய்யுள் நூற்கள் பல உள்ளன. இக் கலை நூற்கள் தொடர்பாகச் சில தொண்டு கிழங்கள் கேள்வி கேட்கத் தொடங்கி விடும். இங்கே மொழியில் முழுப் புலமை பெற்றவர் களே ஓரளவேனும் தாக்குப் பிடிக்க முடியும். அல்லாதவர் பதமாக நழுவிவிட வேண்டியதுதான்!

தமிழ்மொழியில் வல்லவர்கள் என்ருல், அம்மொழி யில் எழுதப்பட்டுள்ள அனைத்துக் கலை நூற்களையும் புரிந்து கொள்ளத்தக்கவர்கள் என்று பொருள் கொள்ளும் நிலை பத்தொன்பதாவது நூற்ருண்டு வரையும் இருந்தது. ஆனல் இப்போது......?

ஒவ்வொரு மொழியிலும் இல்லாத கலைகள் பல புதிதாகப் புகுந்திருக்கும் இந்த இருபதாம் நூற்ருண் டிலே—ஒவ்வொரு மொழியிலும் ஏற்கனவே இருந்த கலைகளும் இன்னும் ஆழ்ந்து அகன்றுபெருகியிருக்கும் இந்த இருபதாம் நூற்ருண்டிலே, ஒருவர் ஒரு மொழியி லுள்ள எல்லாக் கலை நூற்களையும் கற்பதென்பதும்

மாந்தர் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதுதான். அவரிடம் அவ்வாறு எதிர்பார்ப்பதும் அறிவுக்கு ஒவ்வாததுதான். ஆனால்......?

தாம் பயின்றுள்ள மொழியில் எழுதப்பட்டிருக்கும் எல்லாக் கலைகளையும் கற்கவேண்டியதில்லை. கற்றிருக்கும் ஒரு கலையைப் பொறுத்தமட்டிலுங்கூட அக்கலை பற்றிய எல்லா நூற்களையும் கற்க வேண்டியதில்லை. ஆனால், தாம் இதற்கு முன் படித்தறியாத எந்த நூலைத் திடீரெனத் தந்தாலும், ஓரளவேனும் அதனைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு மொழிப்பயிற்சி பெற்று வைக்கலாமே! பெற்று வைக்கவும் முடியுமே!

மொழிப் பயிற்சி அல்லது மொழிக்கலை என்னும் பெயரில் ஒருவர் பரந்துபட்ட இலக்கண இலக்கியச் செய்யுள் உரைநடை நூல்களைப் பயின்றிருக்கிறார் என்றால் என்ன பொருள்? எழுத்தாளர்களின் உள்ளக் கருத்துக்களை அவர்கள் எழுதியிருக்கும் எழுத்துக்களின் வாயிலாக நன்கு புரிந்து கொள்ளும் தேர்ந்த ஆற்றல் கைவரப் பெற்றிருக்கிறார் என்றுதானே பொருள்! இவர், பயிற்சி மாற்றக் (Transfer of Training) கொள்கைப்படி—அதாவது—ஒரு துறையில் பெற்றுள்ள தேர்ந்த பயிற்சி அதனை ஒத்த இன்னொரு துறைக்கும் உதவக்கூடும் என்ற கொள்கைப்படி, மொழித் தேர்ச்சியின் உதவியால் அம்மொழியில் எழுதப்பட்டுள்ள பல்வகைக் கலை நூற்களையும் தாமே படித்துப் புரிந்து கொள்ளலாம். துணைக்குக் கலைச் சொல் அகராதியை வைத்துக் கொள்ளலாம்.

முன்காலத்தில் மொழிப் புலவர்கள் எந்தக் கலை நூலைக் காட்டி எது கேட்டாலும் ஓரளவேனும் ஈடு

கொடுத்தார்கள் என்றால், அதில் ஒரு மறைபொருள் (இரகசியம்) அடங்கியிருக்கிறது. இக் காலத்தார்க்கு எட்டாத உச்சாணிக் கிளைச் செய்தி அது! ஆனால் அன்று அஃது ஊர் அறிந்த 'இரகசியமே'! அது வருமாறு:—

அகராதிக் கலை (Lexicography)யாகிய நிகண்டு நூற்கள் பல தமிழ் மொழியில் உள்ளனவன்றோ! பல்கலைக் களஞ்சியங்களாகிய—பல் கலைப் பொருட் காட்சி நிலையங்களாகிய இந்நிகண்டுகளை நிரம்பக் கற்றிருந்ததனால், அக்காலத்தவர் அன்றிருந்த எந்தக் கலை நூலுக்கும் ஈடு கொடுக்க முடிந்தது. அதனால் அவர்கள் முழு மொழிப் பயிற்சி—முழு மொழிப் புலமை உடையவர்களாக மதிக்கப்பெற்றனர். கல்வித்துறையில் நிகண்டுப் பயிற்சியின் நன்மையும் இன்றியமையாமையும் இப்போது விளங்குமே!

ஆம்! அக்காலத்தில் என்றென்ன—இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்கூட நிகண்டு இல்லாத கல்வி சிறந்தது கிடையாது. தமிழ் நாட்டில் கல்வி என்றால் அதில் நிகண்டிற்கு முதலிடம் இருந்தது பழையமுறைத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் என்றென்ன-றென்ன வெள்ளையர்கள் வந்த பிறகும், அவர்கள் மேற்பார்வையில் நடத்தப்பட்ட பள்ளிகளிலும் நிகண்டுக் கல்வி இருந்தது.

கல்வித்துறையில் மொழிப் பாடத்தைக் 'கருவிப் பாடம்' (Stool Subject) என்று சொல்வது மரபு மொழியின்றி எந்தக்கலையினையும் எழுதவோ கற்கவோ முடியாதல்லவா? அந்த மொழிப் பாடத்துள்ளும் செய்யுள், உரைநடை, இலக்கணம் முதலியவற்றைக்

கற்றுக்கொள்ள நிகண்டுப் பாடம் பெரிய கருவியாகத் திகழ்ந்தது; அதாவது, சொற்பொருள் விளக்கும் நிகண்டு நூற்களைக் கற்றிருந்தால் 'எந்தச் செய்யுள்—உரைநடைப் பகுதியிலுள்ள அருஞ்சொற்களையும் புரிந்துகொள்ள முடியுமன்றோ? எனவே, மற்ற கலைப் பாடங்கட்கு முதன்மையான கருவிப் பாடமாகத் திகழும் மொழிப் பாடத்திற்கும் முதன்மையான கருவிப் பாடம் நிகண்டுப் பாடமாகும், என்பது புலனாகும். சுருங்கச் சொல்லின், நிகண்டுக் கல்வி ஒருவகை 'மொழி அறிவியல்' ஆகும்.

நிகண்டு நூற்களிலுள்ள பன்னிரண்டு தொகுதி களிலும் பல்வகைக் கலைச்சொற்கள் பொருள் விளக்கம் செய்யப்பெற்றிருப்பதை முன்பு கண்டோம். எனவே, நிகண்டு கற்றவர்கள் மற்றவர்களினும் எளிதாகப் பல்வகைக் கலைநூற்களையும் படித்துப் புரிந்துகொள்ள முடியும்; தாமும் பல்வகைக் கலைநூற்கள் எழுதுவதற்கு வேண்டிய கலைச் சொற்களை எளிதில் கையாள முடியும். பிற மொழிகளிலுள்ள கலை நூற்களைத் தமிழில் பெயர்க்கப் போதுமான கலைச்சொற்கள் தமிழ் மொழியில் இல்லை என்று இக்காலத்தில் குறைப்படு வோர் நிகண்டு நூற்களைப் புரட்டுவாராயின் அவற்றி லிருந்து பலதுறைக் கலைச் சொற்களைப் பெறுவது திண்ணம்! முயல்வாராக!

இவ்வளவு நன்மை தரத்தக்க அரும்பெருங் கலைக் கருவூலங்களாகிய நிகண்டு நூற்கள் இக்காலக் கல்வித் துறையால் கைவிடப் பட்டதேன்? இவ்வினாவிற்கு விடை வேண்டும்!

நம் நாட்டில் தமிழ்முறைக் கல்வி படிப்படியாகக் குறைய ஐரோப்பிய முறைக் கல்வி வன்மையாக நிலை யூன்றியது. ஐரோப்பியர்களுடன் வந்த அகராதிகள் நிகண்டுகளின் இடத்தைப் பிடித்துக் கொண்டன. நிகண்டுகளின் துணைகொண்டு அருஞ்சொற்கட்குப் பொருள் கண்டுவந்த நம் மக்கள், அகராதிகளின் துணைகொண்டு பொருள் காணத் தொடங்கிவிட்டனர். ஏன் இப்படி? இங்கே சில உண்மைகளை நாம் மறைக் கவோ—மறுக்கவோ கூடாது. அவையாவன :—

நிகண்டுகள் செய்யுள்நடையில் இருந்ததாலும், முயன்று வருந்தி நெட்டுருச் செய்யவேண்டியிருந்தா லும், அகர வரிசையில் இல்லாமையாலும், அந்நிகண்டு களைப் பயன் படுத்துவதனினும், செய்யுள் நடையில் இல்லாமல் சொற்கள் ஒன்றன்பின் ஒன்ருக அகர வரிசையிலுள்ள அகராதிகளை வருந்தி முயன்று நெட்டுருச் செய்யாமல் வேண்டியபோது எடுத்துப் பயன்படுத்திக் கொள்வது மக்களுக்கு எளிதாயிருந் தது. அதனுல்தான் நிகண்டுகளை அகராதிகள் வென்றுவிட்டன.

மேலும், கல்வித் துறையில் புத்தியக்கங்கள் பல தோன்றத் தொடங்கின. அவற்றுள் ஒன்று உளவியல் முறையில் (Psychological Method) கல்வி கற்பிப்பதாகும். அதாவது,—குழந்தைகளின் உள்ளங்கள் எப்போதும் இன்பச் சுவையினையே விரும்புகின்றன; எளிமையும் விளையாட்டும் அவர்தம் தனியுரிமைகள்; எனவே, குழந்தையுள்ளங்களின் இயல்பைப் புரிந்துகொண்டு அவ்வுள்ளங்கட்கு ஏற்ப எளிய முறையில்—விளையாட்டு முறையில்—இன்பமான முறையில் கல்வி கற்பிக்க

வேண்டும். இதற்குத்தான் உளவியல் முறை என்று பெயராம்.

இக்கொள்கையையொட்டி ஆராய்ந்து பார்க்குங்கால், நிகண்டுகளை நெட்டுருச் செய்யும்படிக் குழந்தைகளை வற்புறுத்தி வருத்துவது ஒருவகை ஒறுப்பு (தண்டனை) ஆகும் என்று கருதப்படுகிறது. ஏனெனில் நிகண்டுகளில் ஒன்றும் கருத்து இல்லை. ஒன்றோடொன்று தொடர்பில்லாத வெற்று வரட்டுச் சொற்களைத் தவிர தொடர்பான செய்தியொன்றும் கூறப்படவில்லை. உளவியல் கல்வி முறையோ, குழந்தைகளை எளிமையிலிருந்தே அருமைக்கு அழைத்துச் செல்லவேண்டும்—தெரிந்ததிலிருந்தே தெரியாததற்கு அழைத்துச் செல்லவேண்டும் எனப்பரிந்துரைக்கிறது. இதன்படி பார்த்தால், தனிச் சொல்லுக்கு மதிப்பில்லை. குழந்தைகள் முன்னமேயே அறிந்துவைத்துள்ள செய்திகள் அடங்கிய சொற்றொடர்களின் (வாக்கியங்களின்) வாயிலாகவே தனிச்சொற்களை அவர்கட்கு அறிமுகப்படுத்தவேண்டும். அதுதான் அவர்தம் உள்ளங்கட்கு ஏற்ற இனிய எளிய முறையாகும். 'இலக்கியங் கண்டதற்கு இலக்கணம்' என்ற முறையில், சொற்றொடர்களிலிருந்தே தனிச்சொல்லை எடுத்து நிறுத்திப் பொருள் விளக்கந் தரவேண்டும். இந்த முறை நிகண்டுக் கல்வியில் பின்பற்றப்படவில்லை. குருட்டுப் பாடமாகவாவது நிகண்டுப் பாடல்களை அடித்துப் பிடித்து நெட்டுரு செய்துகொள்ள வேண்டும். இப்படியான ஒருமுறை சிறு மாணுக்கர்கட்குக் கடினமானதுதானே! இஃதன்றி, இன்னும் ஓர் எதிர்ப்பு நிகண்டுக் கல்விக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது. அஃதாவது :—

வாழ்க்கையில் கற்கவேண்டிய கலேகளோ பற்பல உள்ளன. பல கலேகள் இன்றி, ஏதேனும் ஒரு கலேயைக் கற்கவேண்டுமென்ருலுமே, அஃதொன்றுமே மிகமிக ஆழ்ந்து அகன்று நீண்டுபரந்த ஒரு மாபெருங் கடலாகக் காணப்படுகிறது. இந்நிலேயில் மூளேக்கு எவ்வளவுதான் வேலே கொடுப்பது? வேண்டியபோது அகராதியை எடுத்துப் புரட்டிச் சொல்லுக்குப் பொருள் தெரிந்துகொண்டு போவதைவிட்டு, நிகண்டுப் பாடல் களே வீணே ஏன் நெட்டுருப் பண்ணிக் கொண்டிருக்க வேண்டும்? இதஞல் மூளேக்குத் தேவையற்ற தொல்லே தானே? காலமும் முயற்சியும் ஒருசேர வீணன்ருே? இந்த நேரத்தில்—இந்த முயற்சியில் வேருென்றைக் கற்கலாம் அல்லது வேருெரு வேலே செய்யலாமே! எனவே எப்படி நோக்கினும், நிகண்டுக் கல்வியினும் அகராதிக் கல்வியே எளியது—செட்டானது—பயனுள் ளது ஆகும்!

இதுகாறும், நிகண்டுப் பயனினும் அகராதிப் பயனே சிறந்ததுஎன்பவரது கூற்று பலகோணங்களில் வற்புறுத்தப்பட்டது. இங்கே இக்கொள்கைக்கு எதிர்ப் பாக, அகராதிப் பயனினும் நிகண்டுப் பயனே நூற் றுக்கு நூறு உயர்ந்தது என்று கச்சை கட்டிக் கொண்டு மல்லுக்கு நிற்க முடியாதென்ருலும், நிகண் டுக் கல்வி முறையில் இருந்துவந்த பெரும் பயனே எடுத்துக் கூருமல் விடமுடியாது.

நிகண்டுப் பாடல்களே வலிந்து முயன்று நெட்டுருப் பண்ணுவது உளவியல் முறைக்கு ஏற்றதன்று என்று இக் காலத்தில் கருதப்படினும், அக்காலத்திலோ நிகண்டுப் பாடல்களே என்றென்ன-வேறு பன்னூற்

பாடல்களையும் பரவலாக உருப்போடுவது எளிய பழக்கமாக்கப்பட்டிருந்தது. குறிப்பாக நிகண்டுப் பாடல்கள், "பகவனே யீசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்" —என்பதுபோல இசையோடு முறைபோட்டு மாணுக்கர்களால்பயிலப்பட்டுவந்ததால்அவர்தம்உள்ளங்களில் எளிதில்பதிந்து வேரூன்றி விட்டன. அதனுல், நிகண்டு கற்றவர்கள், சொந்தக் கையிருப்பில் நிரம்பப் பணம் வைத்திருப்பவர்கள் வேண்டிய போதெல்லாம்—வேண்டியபடி யெல்லாம் எடுத்துச் செலவு செய்வதைப்போல, எந்த நூலையும்—எந்தப் பாடலையும் பெரும்பாலும் பிறருதவி தேவையின்றியே எளிதில் படித்துப் பொருள் புரிந்து கொள்ள முடிந்தது. இங்கே ஒரு திருக்குறள் நினைவிற்கு வருகிறது : 'யானையும் யானையும் போரிடுவதை மலையுச்சியில் நிற்பவன் அச்சமோ அயர்வோ இன்றி நன்கு காண முடியுமாறுபோல, தன் கையில் சொந்த உடைமையாக நிரம்பப் பொருள் வைத்திருப்பவன் எந்த வினையையும் தன் விருப்பம்போல் முட்டின்றி முடிக்க முடியும் என்னும் கருத்துடைய,

"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை."

என்னும் திருக்குறள்தான் அது. இந்தக் குறட் கருத்தை நிகண்டுக் கல்விக்கும் பொருத்திக்கொள்ளலாம். பொருள் வைத்திருப்பவருக்கு நேர்—நிகண்டு கற்றவர்; பொருள் உடையவர் எந்த வினையையும் எளிதில் செய்வதற்கு நேர்—நிகண்டு கற்றவர் எந்த நூலையும் எளிதில் புரிந்து கொள்ளுதல். இங்கே, குறளிலுள்ள 'தன் கைத்து' என்னும் தொடரை ஊன்றி நோக்க வேண்டும். பிறர் கைப் பொருள்—ஏன் —தன் கையில் இல்லாமல் வேறிடத்தில் இருக்கும் தன்

பொருளேகூட தான் விரும்பியவாறு வினைசெய்வதற்குத் தக்க நேரத்தில் உதவாமற்போகலாம். அகராதிப் பயனும் இதுபோன்றதுதான். திடீரென ஓரிடத்தில் ஒரு நூலை—ஒரு பாடலைப் படிக்க நேர்ந்தபோது சில சொற்கள் புரியவில்லையென்றால், இனி அகராதி தேடி—சொல்தேடி—பொருள்தேடிப் புரிந்து கொள்ள வேண்டும். செல்லு மிடமெல்லாம் அகராதி மூட்டையைச் சுமந்து திரியமுடியுமா? நிகண்டுப் பயனோ இது போன்ற தன்று. நிகண்டு மூட்டை தலைக்குமேலே அல்ல—தலைக்கு உள்ளே பொருத்திவைக்கப்பட்டுள்ளது. அதனால், வேண்டியதற்கெல்லாம் வேண்டிய போதெல்லாம் பயன்படுத்திக் கொள்ளமுடியும். எனவேதான், நிகண்டு கற்றவர்கள் மொழித் துறையில் (கிங்காங்—தாராசிங் போன்ற) மாமல்லர்களாகத் திகழ்ந்தார்கள். அக்கால நிகண்டுப் பயனுக்கும் இக்கால அகராதிப் பயனுக்கும் உள்ள வேற்றுமை இப்போது எளிதில் புலனாகுமே.

வேறிடத்துப் பொருள் போன்றது அகராதி; தன் கைப் பொருள் போன்றது நிகண்டு. மலர்கள் தனித் தனியே உதிர்ந்து கிடப்பது போன்றது அகராதி; தொடுத்த மலர்மாலை போன்றது நிகண்டு. ஐந்து காசு—பத்துக் காசு பணச் சில்லறை போன்றது அகராதி; பத்து உருபா—நூறு உருபா பணத்தாள் போன்றது நிகண்டு. இப்படியாக, அகராதிக் கல்வி முறையினையும் நிகண்டுக் கல்வி முறையினையும் பல கோணங்களில் ஒற்றுமை வேற்றுமைப் படுத்திப் பார்க்குங்கால், அகராதி முறையின் மாபெரும் பயனை யாரும் மறுக்கமுடியாதென்றாலும், அதேநேரத்தில் நிகண்டு முறையின் பெரும் பயனையும் யாரும் மறைக்க முடியாது.

எனவே, இக்காலக் கல்விக் கூடங்களில் அகராதி யைப் பயன்படுத்தவேண்டும் என்று அறிவுறுத்துவது போலவே, ஓரளவேனும் நிகண்டுப் பகுதிகளையும் அறிமுகஞ் செய்து வைப்பது நல்லது. இன்னும் கேட்டால் இக்காலத்தில் நம் நாட்டைப் பொறுத்தவரையும் அகராதியே சரிவரப் பயன்படுத்தப் படுவதாகத் தெரியவில்லை. ஆனால் அக்காலத்தில் நம் நாட்டில் நிகண்டுகள் நிரம்பப் பயன்படுத்தப்பட்டன. இக்காலத்தில் மாணாக்கர் பெரும்பாலாரிடத்தில் அகராதியே இருப்பதில்லை. அப்படியே அகராதி தரினும், அதில் உரிய சொற்பொருள் தேடிக் கண்டுபிடித்துப் பயன் படுத்தும்முறை பலருக்குத் தெரிவதில்லை. சிலர் அகராதியையே பார்த்ததில்லை. அகராதியைப் பற்றிக் கேள்விப்படாமலுங்கூட ஒருசிலர் இருப்பினும் வியப் படைவதற்கில்லை. இந்த இரங்கத்தக்க எளிய நிலை, இற்றைக்கு ஐம்பது—அறுபது ஆண்டுகட்கு முன்பு வரையுங்கூடத் தமிழகத்தில் இருந்ததில்லை. நமக்கும் முன் தலைமுறையினருக்கு ஏதேனும் ஒரு நிகண்டின் ஒருசில பகுதிகளாயினும் கல்விக் கூடங்களில் கற்றுக் கொடுக்கப்பட்டன. இத்திட்டத்தை இக்காலத்திலும் கல்வித் துறையில் மீண்டும் படிப்படியாகக் கொண்டு வருவது நல்லது. அதற்குரிய வழி வருமாறு:—

இக்காலக் கல்விக்கூடங்களில், மொழிப் பாடம் என்னும் பெயரில், கேட்டல் (Listening), பேசுதல் (Speaking), படித்தல் (Reading), பார்த்து எழுதுதல் (Transcription), அச்சு எழுதுதல் (Copy writing), சொற்றொடராக்கம், சொல்வது எழுதுதல் (Dictation), கடிதம் எழுதுதல் (Letter writing), கட்டுரை (Composition) எழுதுதல், செய்யுள் (Poetry), உரைநடை (Prose),

இலக்கணம் (Grammar), பாட்டு (Song), கதை, நாடகம், மொழி பெயர்ப்பு முதலிய பல்வேறு பிரிவுகள் பல்வேறு வேளைகளில் (Periods) பயிற்றப்படுகின்றன. இவற்றுடன், 'பத்தோடு பதினொன்று—அத்தோடு இது ஒன்று' என்ற முறையில் நிகண்டுப் பாடத்தையும் ஒரு பிரிவாகச் சேர்த்துக் கொள்ளலாமே! அதாவது, சூடாமணி நிகண்டு அல்லது வேறு ஏதாவது ஒரு நிகண்டைத் தேர்ந்தெடுத்து அதைப் பல கூறுகளாகப் பகுத்துக்கொண்டு வகுப்பு வாரியாகப் படிப்படியாகப் பயிற்றிவரலாமே!

இங்கே, காட்டாகத் திருக்குறளை எடுத்துக் கொள்வோம். ஐந்தாம் வகுப்பிற்கு இத்தனை குறள்கள்—இன்னின்ன குறள்கள்; ஆறும் வகுப்பிற்கு இத்தனை குறள்கள்—இன்னின்ன குறள்கள்; இப்படியே இன்னும் அடுத்த வகுப்புகட்கு உரிய குறள்கள் என்று பாடத் திட்டம் வகுத்துப் பயிற்றுவதைப்போல, ஒரு நிகண்டையும் பல கூறுகளாகப் பங்கிட்டுக் கொண்டு மூன்றும் வகுப்பிலிருந்து கற்பித்து வரலாம். மூன்றும் வகுப்பிலிருந்து தொடங்குவது குறித்துக் கருத்து வேற்றுமை தோன்றுமாயின், ஐந்தாம் வகுப்பிலிருந்து கட்டாயம் தொடங்கலாம். நிகண்டின் பன்னிரண்டு தொகுதிகளில் பிற தொகுதிகளை விட்டுவிட்டு, சொற்பொருள் கூறும் பதினோராவது தொகுதியை மட்டுமாயினும் தொடங்கிக் கற்பித்துவரலாம்.

கல்வித்துறை யறிஞர்கள் இத்துறையில் கருத்து செலுத்தியருளுவாராக!

## பிற்சேர்க்கை—1

இதுகாறும் இந்நூலில் பேசப்பட்டுள்ள நிகண்டு நூற்களின் பெயர்கள், அவற்றின் ஆசிரியர் பெயர்கள், அவர்கள் வாழ்ந்த அல்லது நூல் இயற்றிய காலம், நூலின் பொருள்வகை ஆகிய விவரங்கள், பின்வரும் அட்டவணையில் நூற்றாண்டு வாரியாகச் சுருங்கத் தரப்பட்டுள்ளன. இனம் பற்றித் தொல்காப்பியமும் நன்னூலுங்கூடச் சேர்க்கப்பட்டுள்ளன. சில நூல்களைப் பற்றி அறிய முடியாத சில விவரங்கள் வெற்றுக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. நூலின் பொருள் வகை என்ற கட்டத்தில் 1, 2, 3 என எண்கள் இடப்பட்டிருக்கும். இம்மூன்றனுள் 1 என்பது, நிகண்டு நூற்களின் முப்பெரும் பிரிவுகளுள் முதல் பிரிவாகிய 'ஒரு பொருள் பல் பெயர்த் தொகுதி' என்னும் வகையைக் குறிக்கும்; 2 என்பது, இரண்டாம் பிரிவாகிய 'ஒரு சொல் பல் பொருள் பெயர்த் தொகுதி' என்னும் வகையைக் குறிக்கும்; 3 என்பது, மூன்றும் பிரிவாகிய 'பல் பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி' என்னும் வகையைக் குறிக்கும். இவை முன்னர் நன்கு விளக்கப்பட்டுள்ளன. சுருக்கத்திற்காக 1, 2, 3 என எண்கள் இடப்பட்டுள்ளன.

## நிகண்டு நூற்களின் அட்டவணை

| நூற்பெயர் | ஆசிரியர் | காலம் | பொருள் வகை |
|---|---|---|---|
| **சங்க காலத்திற்கு முன்** | | | |
| தொல்காப்பிய உரியியல்-இடையியல்—மரபியல் | தொல்காப்பியர் | கி.மு. 1000 | 1, 2, 3 |
| **சங்க காலம்** | | | |
| நிகண்டு-கலைக்கோட்டுத்தண்டு | நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார் | கி.மு. 300—கி.பி. 300 | — |
| **சங்க காலத்திற்குப் பின்— 15 ஆம் நூற்றாண்டு வரை** | | | |
| ஆதி திவாகரம் | ஆதி திவாகரர் | — | — |
| சேந்தன் திவாகரம் (திவாகர நிகண்டு) | திவாகரர் | கி.பி. 8 ஆம் நூற்றாண்டு | 1, 2, 3 |
| பிங்கல நிகண்டு (பிங்கலந்தை) | பிங்கல முனிவர் | கி.பி. 8ஆம் நூற்றாண்டு | 1, 2 |
| பெயர் தெரியா நிகண்டுகள் (சில பாக்கள் கிடைத்துள்ளன) | — | 8-16ஆம் நூற்றாண்டுகளின் இடைப்பட்ட காலம் | — |
| நன்னூல்- இடையியல், உரியியல் | பவணந்தி முனிவர் | 13 ஆம் நூ. | 1, 2, 3 |

**பதினாறாம் நூற்றாண்டு நிகண்டுகள்**

| | | | |
|---|---|---|---|
| சூடாமணி நிகண்டு | மண்டல புருடர் | 16 ஆம் நூ. | 1, 2, 3 |
| அகராதி நிகண்டு | சிதம்பரரேவண சித்தர் | கி.பி. 1594 | 2 |

**பதினேழாம் நூற்றாண்டு நிகண்டுகள்**

| | | | |
|---|---|---|---|
| உரிச்சொல் நிகண்டு | காங்கேயன் | 17 ஆம் நூ. முற்பகுதி | 1, 2, 3 |
| கயாதர நிகண்டு | கயாதரர் | 17 ஆம் நூ. | 1, 2 |
| பல்பொருள் சூளாமணி நிகண்டு | ஈசுவர பாரதியார் | கி.பி. 1700 | 2, 3 |
| கைலாச நிகண்டு சூடாமணி | (கைலாசம் என்பவரா யிருக்கலாம்?) | 17 ஆம் நூ. பிற்பகுதி | 1, 2 |

**பதினெட்டாம் நூற்றாண்டு நிகண்டுகள்**

| | | | |
|---|---|---|---|
| பாரதி தீபம் | திருவேங்கட பாரதி | 17 ஆம் நூ.பிற் பகுதியும் 18 ஆம் நூ.முற்பகுதியும் | 1,2,3 |
| ஆசிரிய நிகண்டு | ஆண்டிப் புலவர் | 17 ஆம் நூ. பிற் பகுதி அல்லது 18 ஆம் நூ. முற்பகுதி | 1,2 |
| அரும்பொருள் விளக்க நிகண்டு | அருமருந்தைய தேசிகர் | 18 ஆம் நூ. | 2 |
| தொகை நிகண்டு | சுப்பிரமணியக் கவிராயர் | 18 ஆம் நூ. | 3 |

| | | | |
|---|---|---|---|
| பொருள் தொகை நிகண்டு | சுப்பிரமணிய பாரதி (பாரதியார் அல்லர்) | — | 3 |
| பொதிகை நிகண்டு | சாமிநாதக் கவிராயர் | 18 ஆம் நூ. பிற்பகுதி | 1,2 |

**பத்தொன்பதாம் நூற்றாண்டு நிகண்டுகள்**

| | | | |
|---|---|---|---|
| நாம தீப நிகண்டு | சிவ சுப்பிரமணியக் கவிராயர் | 19 ஆம் நூ. முற்பகுதி | 1 |
| வேதகிரியார் சூடாமணி நிகண்டு | வேதகிரி முதலியார் | அச்சு கி.பி. 1842 | 2 |
| கந்த சுவாமியம் | சுப்பிரமணிய தேசிகர் | அச்சு: 1844 | 1,2 |
| தொகைப் பெயர் விளக்கம் | வேதகிரி முதலியார் | அச்சு: 1849 | 3 |
| இலக்கத் திறவுகோல் | — | 19 ஆம் நூ. | 3 |
| நாநார்த்த தீபிகை | முத்துசாமி பிள்ளை | 1850 | 2 |
| சிந்தாமணி நிகண்டு | வைத்தியலிங்கம் பிள்ளை | அச்சு: 1874 | 2 |
| அபிதானத் தனிச் செய்யுள் நிகண்டு | கோபாலசாமி நாயக்கர் | அச்சு: 1878 | 1 |
| விரிவு நிகண்டு | அருணாசல நாவலர் | 19 ஆம் நூ. பிற்பகுதி | 2 |
| ஆரிய நிகண்டு | — | (19 ஆம் நூ. ?) | — |
| பொதிய நிகண்டு | — | — | — |
| ஔவை நிகண்டு | — | — | — |

### மருத்துவ நிகண்டுகள்

| | | |
|---|---|---|
| அகத்தியர் நிகண்டு | அகத்தியர் | — மருத்துவத் துறைபற்றியது |
| போகர் நிகண்டு | போகர் | — மருத்துவத் துறைபற்றியது |

### கணி (வான நூல்) நிகண்டுகள்

| | | |
|---|---|---|
| கால நிகண்டு | தில்லை நாயகர் | — கணித்துறை பற்றியது |
| காரக நிகண்டு | தில்லை நாயகர் | — கணித்துறை பற்றியது |

## பிற்சேர்க்கை—2

### நிகண்டுகளின் அகர வரிசை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அகத்தியர் நிகண்டு | — | 359 |
| 2. | அகராதி நிகண்டு | — | 275 |
| 3. | அபிதானத் தனிச் செய்யுள் நிகண்டு | | 353 |
| 4. | அரும் பொருள் விளக்க நிகண்டு | — | 319 |
| 5. | ஆசிரிய நிகண்டு | — | 315 |
| 6. | ஆதி திவாகரம் | — | 75 |
| 7. | ஆரிய நிகண்டு | — | 356 |
| 8. | இலக்கத் திறவுகோல் | — | 348 |
| 9. | உரிச்சொல் நிகண்டு | — | 285 |
| 10. | ஔவை நிகண்டு | — | 358 |
| 11. | கந்த சுவாமியம் | — | 346 |
| 12. | கயாதர நிகண்டு | — | 296 |
| 13. | கலைக்கோட்டுத் தண்டு | — | 67 |
| 14. | காரக நிகண்டு | — | 367 |
| 15. | கால நிகண்டு | — | 366 |
| 16. | கைலாச நிகண்டு சூடாமணி | — | 310 |
| 17. | சிந்தாமணி நிகண்டு | — | 351 |
| 18. | சூடாமணி நிகண்டு | — | 243 |
| 19. | சேந்தன் திவாகரம் | — | 77 |
| 20. | தொகை நிகண்டு | — | 330 |
| 21. | தொகைப் பெயர் விளக்கம் | — | 347 |
| 22. | தொல்காப்பியம் | — | 47 |
| 23. | நன்னூல் | — | 236 |
| 24. | நாநார்த்த தீபிகை நிகண்டு | — | 349 |

| | | | |
|---|---|---|---|
| 25. | நாம தீப நிகண்டு | — | 339 |
| 26. | பல் பொருள் சூளாமணி நிகண்டு | — | 306 |
| 27. | பாரதி தீப நிகண்டு | — | 313 |
| 28. | பிங்கல நிகண்டு | — | 208 |
| 29. | பெயர் தெரியா நிகண்டுகள் | — | 229 |
| 30. | பொதிகை நிகண்டு | — | 335 |
| 31. | பொதிய நிகண்டு | — | 357 |
| 32. | பொருள் தொகை நிகண்டு | — | 332 |
| 33. | போகர் நிகண்டு | — | 362 |
| 34. | விரிவு நிகண்டு | — | 354 |
| 35. | வேதகிரியார் சூடாமணி நிகண்டு | — | 345 |


## சில அகராதிகளின் அகரவரிசை


| | | | |
|---|---|---|---|
| 1. | அகராதித் தமிழ் | — | 389 |
| 2. | அகராதி மோனைக்கு அகராதி எதுகை | — | 372 |
| 3. | அடுக்கு மொழி அகராதி | — | 442 |
| 4. | அபிதான சிந்தாமணி | — | 407 |
| 5. | ஆங்கிலம்—தமிழ்ச் சொற் களஞ்சியம் | | 440 |
| 6. | ஆட்சிச் சொல் அகராதி | — | 439 |
| 7. | ஆனந்த விகடன் சித்திரப் போட்டி அகராதி | — | 416 |
| 8. | ஆனந்த விகடன் போட்டி ஆசான் | — | 421 |
| 9. | இந்தி தமிழ் அகராதி | — | 422 |
| 10. | இலக்கியச் சொல் அகராதி | — | 409 |
| 11. | இலத்தீன் தமிழ் அகராதி | — | 385 |
| 12. | இலத்தீன் பிரெஞ்சு தமிழ் அகராதி | | 393 |
| 13. | எதிர்ப்பத அகராதி | — | 443 |

14. ஒரு சொல் பல் பொருள் விளக்கம் — 394

15. கலைக் களஞ்சியம் — 428

16. கலைச் சொல் அகராதி — 420

17. கழகப் பழமொழி அகர வரிசை — 426

18. கார்த்திகேயினி புதுமுறை அகராதி 423

19. காலக் குறிப்பு அகராதி — 426

20. கிளாசிகல் தமிழ் ஆங்கில அகராதி 399

21. சதுர் அகராதி — 376

22. சம்சுகிருதம் தமிழ் அகராதி 417, 440

23. சிலேடை அகர வரிசை — 433

24. சிறப்புப் பெயர் அகராதி — 406

25. சொற்பிறப்பு-ஒப்பியல் தமிழ் அகராதி — 418

26. ஜூபிலி தமிழ்ப் பேரகராதி — 415

27. ஸ்பால்டிங் ஆங்கிலம் - தமிழ் அகராதி — 392

28. தமிழ் ஆங்கில அகராதி (பெஸ்கி) — 385

29. தமிழ் ஆட்சிச் சொற்கள் — 434

30. தமிழ் இந்தி அகராதி — 439

31. தமிழ் இலக்கிய அகராதி 427, 432

32. தமிழ் இலத்தீன் அகராதி 384, 399

33. தமிழ் சம்சுகிருத அகராதி — 416

34. தமிழ்ச் சொல் அகராதி — 405

35. தமிழ் பிரெஞ்சு அகராதி 385, 395

36. தமிழ்ப் புலவர் அகராதி 427, 432

37. தமிழ்ப் பேரகராதி — 406

38. தமிழ் போர்ச்சுகீசிய அகராதி — 374

39. தமிழ் லெக்சிகன் — 410

40. தரங்கம்பாடி அகராதி — 401
41. தற்காலத் தமிழ்ச் சொல் அகராதி — 415
42. திராவிடியன் எதிமோலாஜிகல்
டிக்ஷனரி — 434
43. திருக்குறள் அகராதி — 425
44. திருக்குறள் சொல்லடைவு — 427
45. நகர நாட்டாண்மைக் கழக ஆட்சி
முறைச் சொல்லகராதி — 422
46. நாலாயிரத் திவ்யப்பிரபந்த அகராதி 440
47. பத்துச் சொல் அகராதி — 373
48. பதார்த்த பாஸ்கரம் — 399
49. பதினெண் சித்தர் அகராதிகள் — 403
50. பழமொழி அகராதி — 409
51. பாபிரியஸ் தமிழ் ஆங்கில அகராதி — 386
52. பிரெஞ்சு தமிழ் அகராதி — 396
53. பெர்சிவல் ஆங்கிலம் - தமிழ் அகராதி 392
54. பைபிள் அகராதி — 410
55. போப் தமிழ் ஆங்கில அகராதி — 396
56. போர்ச்சுகீசியம் - இலத்தீன் - தமிழ்
அகராதி — 385
57. மதுரைத் தமிழ்ப் பேரகராதி — 416
58. யாழ்ப்பாணத் தமிழ் அகராதி — 391
59. ராட்லர் தமிழ் ஆங்கில அகராதி — 390
60. வட்டார வழக்குத் தமிழ் அகராதி — 386
61. வடசொல் தமிழ் அகர வரிசை — 417
62. வின்சுலோ ஆங்கிலம் – தமிழ்
அகராதி — 391
63. வின்சுலோ தமிழ் ஆங்கில அகராதி — 397

பிற் சேர்க்கை—3.

## இவ் வெளியீட்டிற்குக் கருத்து வழங்கிய கருவூலங்கள்

### இலக்கணம் :

அகத்தியம்
தொல் காப்பியம்
தொல்காப்பியப் பாயிரம் —பனம் பாரனார்
தொல்காப்பியம்— இளம்பூரணம்
தொல்காப்பியம்— நச்சினார்க்கினியம்
இறையனார் களவியலுரை
நன்னூல்
நன்னூல் — மயிலைநாதர் உரை
நன்னூல்—சங்கர நமச்சிவாயர் உரை
சாமிநாதம்
பன்னிரு படலம்
புறப்பொருள் வெண்பா மாலை
யாப்பருங்கலம்
யாப்பருங்கலம் — விருத்தியுரை

### இலக்கியம் :

திருமுருகாற்றுப் படை
முல்லைப் பாட்டு
குறிஞ்சிப் பாட்டு
நற்றிணை
குறுந்தொகை
பதிற்றுப் பத்து
பரிபாடல்
புறநானூறு
திருக்குறள்
நாலடியார்
மணிமேகலை
நற்கீரர் பாடல்
பழம் பாடல்கள் சில
சம்பந்தர் தேவாரம்
பெரிய புராணம்
கந்த புராணம்
பூவைப் புராணம்
கந்தர் அலங்காரம்
செந்தமிழ் மாலையந்தாதி
திவ்யப் பிரபந்த விரிவுரை
தொண்டை மண்டல சதகம்
கொங்கு மண்டல சதகம்
இலக்கியக் களஞ்சியம்
சாதக சிந்தாமணி

பல்வேறு நிகண்டுகளும் அகராதிகளும்
சில நிகண்டுகளின் சிறப்புப் பாயிரங்கள்
சில நிகண்டுகளின் உரைகள்
சில நிகண்டு - அகராதிப் பதிப்புரைகள்
சாமிநாத ஐயர் பதிப்புக்கள்
சங்க இலக்கியம்— சமாசப் பதிப்பு

## உரை நடை :

அபிதான சிந்தாமணி
தமிழ் லெக்சிகன்
கலைக் களஞ்சியம்
வையாபுரிப் பிள்ளையின் கட்டுரைகள்
மொழி வரலாறு— டாக்டர். மு. வ.
சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்—பாவாணர்
உளநூல்
தாவர நூல்

## பிறமொழி நூற்கள் :

நிருத்தம் (வட மொழி)
பாற்கரம் (வட மொழி)
வேமன்ன பத்தியம் (தெலுங்கு)
An Introduction to the Study of Literature—Hudson.
Select Essays from the writings of Viscount Morley.
Thought and Language—P. B. Ballard.
Semantics—M. Breal.

## சுந்தர சண்முகனாரின் நூற்கள்

| | | ரூ-காசு |
|---|---|---|
| 1. | வீடும் விளக்கும் ... | 1-25 |
| 2. | மலர் மணம் ... | 3-00 |
| 3. | வாழும் வழி ... | 1-75 |
| 4. | வள்ளுவர் இல்லம் ... | 3-00 |
| 5. | பணக்காரர் ஆகும் வழி (இந்திய அரசினர் பரிசு பெற்றது) ... | 0-75 |
| 6. | தமிழர் கண்ட கல்வி .... | 3-00 |
| 7. | செந்தமிழாற்றுப் படை ... | 0-50 |
| 8. | இன்ப வாழ்வு ... | 2-50 |
| 9. | போர் முயற்சியில் நமது பங்கு ... | 0-30 |
| 10. | தமிழ் அகராதிக் கலை ... | 8-00 |


கிடைக்குமிடம் :

**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**

61-C, வைசியர் தெரு,

புதுச்சேரி-1.

(PONDICHERRY-1. South India)